
சு. சமுத்திரம்
திருவரசு புத்தக நிலையம்
சாமியாடிகள்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# சாமியாடிகள்

(நாவல்)

சு. சமுத்திரம்

திருவரசு புத்தக நிலையம்

13, தீனதயாளு தெரு, தியாகராய நகர்,
சென்னை - 600 017.

முதற் பதிப்பு : டிசம்பர், 1991.
இரண்டாம் பதிப்பு : (திருவரசு) ஆகஸ்ட், 2000
உரிமை : ஆசிரியருக்கு

**விலை : ரூ. 60-00**

| | | |
|---|---|---|
| Title | : | **SAAMIYAADIGAL** |
| Author | : | **Su. Samuthiram** |
| Subject | : | Novel |
| Language | : | Tamil |
| Edition | : | Second Edition - August, 2000. |
| No. of Pages | : | 312 |
| Published By | : | **THIRUVARASU PUTHAKA NILAYAM**<br>13, Deenadayalu Street,<br>Thiyagaraya Nagar,<br>**CHENNAI** - 600 017. |
| Price | : | Rs. **60-00** |

Laser Typesetting at : **EKALAIVAN PATHIPPAKAM**
Chennai - 600 041. ✆ : **4917594**

**Printed at : Mani Offset**
**112/2, Bells Road, Triplicane, Chennai - 5.**
Phones : 8555 249, 8588 186

# என்னுரை

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு வெளியிடப்பட்ட நாவல் இது. அதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு **'தினகரன்'** நாளிதழில் தொடர்கதையாக வெளியானது. **தினரகன்** ஆசிரியர் திரு கே.பி. கந்தசாமி அவர்களுக்கும், என்னிடம் இந்த தொடருக்கு ஏற்பட்ட தாக்கங்களை அவ்வப்போது தெரிவித்த நண்பர் சின்னராசுக்கும் நன்றிக்கடன் பட்டுள்ளேன்.

இன்னும் நமது மனம் உள்வாங்கிக் கொள்ளாத சென்ற நூற்றாண்டான இருபதாம் நூற்றாண்டில் மருத்துவத்துறையில், உடலை ஊடுறுவி அதன் உறுப்புக்களை கண்ணாடியில் பார்ப்பதுபோல் பார்க்க வைக்கும் **"ஸ்கேனிங்"** என்ற முறையும், உடனடியாகப் படம் பிடித்து, உடனடியாக படம் பிடித்தவரிடமே அவரது உருவத்தையும் பேச்சையும் திரையில் காட்டும் **வீடியோ** முறைமையும், **இன்டர்நெட் இணையமும்** சமூக முறைமையையே தலைகீழாகப் புரட்டி விட்டது என்று சொல்லலாம். இந்த முப்பெரும் கண்டுபிடிப்புகள் சமூகத்தில் மெல்ல மெல்ல மாற்றத்தை ஏற்படுத்தாமல் அடியோடு மனோவேகத்தில் மாற்றங்களை கொண்டு வந்துவிட்டன.

இப்படிப்பட்ட இந்த முப்பெரும் கண்டுபிடிப்புகளில், வீடியோ - சமூகத்தில் நல்லதும் கெட்டதுமான பெருந்தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இது, இன்றையக் கிராமங்களில் எப்படி நிகழ்கிறது என்பதை விளக்கும் படைப்புதான் **'சாமியாடிகள்'** என்ற இந்த புதினம். என்றாலும் இதில் வீடியோ - ஆடியோ தாக்கம் இலைமறைவு காய்மறைவாகக் காட்டப்பட்டு, இதன் விளைவுகளால் ஏற்பட்ட கதையம்சமே இந்தப் புதினத்தில் மேலோங்கி நிற்கிறது. பிரபல விமர்சகரும் பொதுவுடைமைச் சிந்தனையாளருமான **தொ.மு.சி.** அவர்கள், இந்த நாவல் வீடியோ ஆடியோவான விஞ்ஞானத் தாக்கத்தின் நல்ல அம்சங்களை கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை என்று குறிப்பிட்டார். இது ஓரளவு உண்மையே. எடுத்த எடுப்பில்

கிராமங்களைத் திணறடித்த இந்தத் தாக்கத்தை சித்தரிப்பதில் இதன் நல்ல அம்சங்கள் நழுவிப் போயின. என்றாலும், எந்தப் பதிப்பிலும் எழுதியது எழுதியபடி இருக்கவேண்டும் என்பதால் இந்த நாவலை அவர் குறிப்பிட்டதுபோல் மாற்றி அமைக்கவில்லை.

இன்றையக் கிராமங்களில், அம்மன் கொடைகள் என்பவை கிராம தேவதைகளுக்குக் காட்டப்படும் சலுகைகளாக மாறிவிட்டன. இவற்றில் பயபக்தி என்பது கடந்த காலமாகி விட்டது. இந்த திருவிழாக்களில் "டெக்கில்" படம் போடுவதே பிரதானமாகி விட்டது. சாமியாடிகள் குறிப்பிட்ட நேரத்தில் ஏதோ ஒப்புக்கு ஆடி அடங்கவேண்டும். இவர்களை சீரியஸாக எடுத்துக் கொண்ட காலம் மலையேறி விட்டது. இவர்களும் அதை உணர்ந்து, குறிப்பிட்ட நேரத்திற்குள் சாமியாட்டத்தை முடித்து விடுகிறார்கள். கிராம தேவதைகள், கிராம மக்கள் அனைவருக்கும் பொதுமையானது என்பதுபோய் ஒவ்வொரு பங்காளிக் கூட்டமும், தத்தம் கிராம தேவதைகளை தங்களது சுயமரியாதையோடு இணைத்துக் கொள்கிறது. இதனால் பங்காளிக் கூட்டங்களுக்கு இடையே, மோதல்களும் கௌரவப் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. இது, வீடியோ ஆடியோ கலாச்சாரம் தொடுத்த முதல் தாக்குதல்.

இரண்டாவதாக, கிராமிய பேச்சு வழக்கை தொலைக்காட்சித் தமிழ் வழக்கு துரத்திக் கொண்டிருக்கிறது. 'அண்ணாச்சி' என்ற மண்வாசனை வார்த்தை 'அண்ணே'வாகி விட்டது. 'மயினி' என்பது 'அண்ணி' ஆகிவிட்டது. 'வளத்தம்மா', 'அய்யாமை' என்ற பொருள் பொதிந்த உறவாடல் வார்த்தைகள் 'பாட்டி' என்று நேரிலும், 'பெரிசு' என்று மறைமுகமாகவும் பேச்சு வழக்காகி விட்டது. தொலைக்காட்சி திரைப்படங்களும் வீடியோவில் காட்டப்படும் திரைப்படங்களும் அன்றாடப் பொழுதுபோக்காகி விட்டது. ஆக மொத்தத்தில் கிராமத்து இளைஞர்களுக்கு வாழ்க்கைக்கும், வீடியோ திரைப் படங்களுக்கும் இடையே வேற்றுமை காணமுடியாமல் போய்விட்டது.

இதனால் ஏற்படும் குடும்ப, சமூகச் சிக்கல்களை, இந்த நாவல் கதைப் பின்னலாகக் கொண்டு வந்துள்ளது. கிராமங்களில் வீடியோ ஆடியோ கலாச்சாரம் ஊடுறுவிய முதலாவது காலக்கட்டத்திலேயே இது எழுதப்பட்டதால், இந்தப் புதினத்தில் கதை மேலோங்கியும்,

வீடியோ ஆடியோ தாக்கம் கீழோங்கியும் உள்ளன. இந்த வலைப்பின்னலில் குடும்பத்தைத் தவிர வேறு எதையுமே நினைத்துப் பார்க்காத **'கோலவடிவு'** என்ற இளம்பெண்ணை, நாலும் தெரிந்த **'அலங்காரி'** என்பவள் எப்படி தனது பேச்சுத் திறமையால் மயக்கி **துளசிங்கத்திடம்** இணைத்து விடுகிறாள் என்பதுதான் கதை. இதனால் ஏற்படும் குடும்பச் சிக்கல்களும், பங்காளிச் சண்டைகளும் யதார்த்தத்தில் ஒரு இம்மிகூட பிசகாமல் சித்தரிக்கப்பட்டுள்ளது.

இந்த நாவலின் நாயகியான கோலவடிவை, கிராமத்தை விட்டு வெளியேறச் செய்து, சுயநலமிகளிடம் சிக்கி வேறு வழியில்லாமல் விலைமகளாக ஆக்கவேண்டும் என்றுதான் திட்டமிட்டிருந்தேன். ஆனால், மனம் கேட்கவில்லை. 'ஒரு எழுத்தாளன், துவக்கத்தில் பாத்திரங்களைப் படைப்பான். குறிப்பிட்ட ஒரு கட்டத்தில் அந்தப் பாத்திரங்களே, 'இப்படி இப்படி எங்களை படைப்பாயாக...' என்று எழுத்தாளனுக்கு ஆணையிடும் என்று மகத்தான விமர்சகரான காலஞ்சென்ற பொதுவுடைமைத் தத்துவ சிந்தனையாளர் தோழர் **ஆர்.கே. கண்ணன்** அவர்கள் என்னிடம் அடிக்கடி கூறுவார். அப்படி அவர் குறிப்பிட்டது, இந்த நாவலில் என்னை அறியாமலேயே, என் விருப்பத்திற்கு எதிராகவே நிறைவேறி விட்டது உண்மைதான். இந்த நாவலில் கோலவடிவே, 'என் முடிவை இப்படித்தான் விளக்கியாக வேண்டும்' என்று எனக்கு ஆணையிட்டு விட்டாள். அந்த ஆணையை என்னால் மீற முடியவில்லை. இது, ஒரு படைப்பியல் விசித்திரம். படைப்பாளி நினைத்தும் அவன் நினைத்ததுபோல் எழுத முடியாது என்பதற்கு நானே ஒரு உதாரணமாகி விட்டேன்.

கிராமத்தில் நிகழும் வீடியோ ஆடியோ கலாச்சாரத்தையும், சொல்வடைகளின் மாற்றத்தையும் முதன்முதலாக வாசகர் கவனத்திற்கு கொண்டு வந்த முதலாவது நாவல் இது என்று குறிப்பிடலாம். இந்த நாவலை பிரசுரத்திற்கு எடுத்துக்கொண்ட பெரியவர். **திருநாவுக்கரசு** அவர்களுக்கும், அவரது அசல் நகல்களாக விளங்கும் அருமை புதல்வர்கள் **ராமு, சோமு** ஆகியோருக்கும் இந்த நாவலின் வெற்றி உரித்தாகும்.

**சு. சமுத்திரம்**

# கிராமமே சாமியாடுகிறது.....

'பீடம் தெரியாமல் சாமி ஆடுகிறான்' என்பது அன்றைய கிராமத்துப் பழமொழி. அதாவது ஒருத்தர், தனது செயலைப் பற்றியோ அதன் பின் விளைவுகளைப் பற்றியோ புரியாத பேதை என்கிற பொருளில் இந்தப் பழமொழி வந்திருக்கவேண்டும். இது முன்பு பொருந்தியதோ இல்லையோ, இப்போது பொருந்துகிறது.

இந்த நாவலின் தலைப்பிற்கேற்ப நவீன கலாச்சார ஊடுறுவலால் கோவில்களில் மட்டும் இப்போது சாமியாட்டம் நடைபெறவில்லை. கிராமமே சாமி ஆடுகிறது. ஆமை புகுந்த வீடு போலான தொலைக்காட்சி வரவழைப்பு எங்கே கொண்டு போகும் என்பது புரியாமலே எல்லோருமே பீடம் தெரியாமல் சாமி ஆடிக்கொண்டு இருக்கிறார்கள். வேப்பிலை அடிக்கத்தான் ஆளில்லை.

இந்த நாவலில், சாதிச் சண்டைகள் சித்தரிக்கப்படவில்லை. ஆனாலும், இதில் வரும் பங்காளிக் கூட்டங்களின் மோதல்களும் இவற்றைப் போன்றதே. ஆக, கலவரத்திற்கு சாதி மட்டுமே காரணமாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை என்பதை, இந்த நாவல் சொல்லாமல் சொல்கிறது.

நல்ல நூல்களை மட்டுமே வெளியிடும் பதிப்பகங்களில் ஒன்றான **திருவரசு புத்தக நிலையம்,** இந்த நாவலை புதுப்பித்து வெளியிடுவது இந்தப் படைப்பிற்கும் எனக்கும் கிடைத்த ஒரு இலக்கியக் கௌரவம்.

**சு. சமுத்திரம்**

# சாமியாடிகள்

## 1

அந்த ஆலமரத்தின் அடியில், அத்தனை பெண்களும் கையும் பீடி இலையுமாய், வாயும் பேச்சுமாய், தட்டும் மடியுமாய், தலையில் வைத்த பூக்கள், அவர்களின் தளிர்மேனி செடியில் பூத்து நிற்பதுபோல் பொலிவு காட்ட, முன்னாலும் பின்னாலும் லேசாய் ஆடியாடி, முழு வீச்சில் இயங்கிக் கொண்டிருந்தனர்.

சட்டாம்பட்டியின் 'கிழக்கு ஊரின்' மேற்கு பக்கமாய் உள்ள காளி கோயிலுக்கு முன்னால், அம்மனே நிரந்தரி என்று சொல்வதை நிரந்தரப்படுத்துவது போல் குடை பிடித்து தோற்றம் காட்டும் அந்த ஆல், மேலே சிறகாட்டும் பறவைகளும், கீழே உடம்பாட்டும் பெண்களுமாய் கலகலத்தது. அந்த ஆலமரமே ஒரு ஆளாகி, டி.வி. மகாபாரதத்தில் வந்ததே "காலம்", அதுபோல், ஊருக்கு எதையோ உபதேசித்துக் கொண்டிருப்பதுபோல் தோன்றியது. விழுதுகளே சடை முடியாக, உச்சி இலை தழைகளே தலை முடியாக, ஆலம்பழங்களே உத்திராட்சக் கொட்டைகளாக, அந்த ஆல ரிஷி எல்லோரையும் ஆட்டுவித்துக் கொண்டிருப்பது போன்ற பிரமையைக் கொடுத்தது. இந்த மரம் அங்கே இருப்பவர்கள் பிறப்பதற்கு முன்பே பிறந்த மரம்.

ஒருவேளை அவர்கள் இறந்த பிறகும் இருக்கும் மரம். இப்படிப்பட்ட இந்த மரத்திற்குக் கீழே _

அந்த ஆலின் அடிவாரத்தை மாலையிட்டு மரியாதை செலுத்துவதுபோல, பதினெட்டு இருபது பெண் பூக்கள் மாலை வடிவத்தில் அமர்ந்து பீடி இலைகளைக் கத்தரித்தும், சதுரஞ்சதுரமாகச் சித்தரித்தும், வெட்டியும், சுருட்டியும், கட்டியும் கைகளை இயக்கத்தில் விட்டார்கள். செண்பகப் பூப்போன்ற தங்கநிற முத்தம்மா, குண்டுமல்லி போன்ற தடிச்சி வாடாப்பூ, தங்கரளி போல்-பாவாடை குடைபோல் சுழலும் சந்திரா, கூர்மையான பற்களைக் கொண்ட ரோசாப்பூ மாதிரியான ராசகிளி ஆகிய பெண்மாலைக்கு இடையிடையே இட்டு நிரப்பப்பட்ட இலைபோல தங்கம்மா, அலங்காரி ஆகிய நடுத்தர வயதுப் பெண்கள்.... வானவில்லே பெண் வில்லாய்ப் பிறப்பெடுத்தது போன்ற அந்தப் பகற்பொழுதில் _

பீடி இலைகளைச் சதுரஞ்சதுரமாக வெட்டிக் கொண்டிருந்த சந்திரா, எதிரே பீடி இலைகளைத் தூக்கி நிரப்பி அவசர அவசரமாகச் சுருட்டும் தாயம்மாவைப் பார்த்து அதட்டலான அன்போடு கேட்டாள்.

“என்னத்தே... ஒரு நாளும் இல்லாத திருநாளா இப்படிச் சுத்துற. கை உடம்ப விட்டு கழண்டுடப் போவுது..”

“ஒனக்கென்ன பேசமாட்டே.... ஒனக்கு பீடி சுத்தறது பொழுது போக்கு.. எனக்கோ ஒரு நாள் பொழுதப் போக்குறது... அவனவன் கம்பெனிக் கடைகள்ல தீபாவளி போனஸ், பொங்கல் பரிசுன்னு வாங்குறானுவ.... நாம என்னடான்னா பீடி மொதலாளிக்கு போடு வண்டலுன்னு நாமே போனசு கொடுக்கோம்..... இதைக் கேக்க நாதியில்லே...”

தாயம்மா அத்தைக்குப், ‘பாவாடைத் தாவணி’ சந்திரா பதில் சொல்ல யோசித்தபோது, பிள்ளைக்குட்டி பெற்றாலும், அந்த வார்த்தைகளின் இரண்டாவது வார்த்தைக்கு உரியவள் போல் தோன்றிய அலங்காரி, அலட்டிக்காமலே குறுக்கிட்டாள்.

"வேற எதையாவது பேசுங்க. தெனமும் பொழப்பப் பத்தியே பேசிப் பேசி அலுத்துப் போச்சு..... இப்போ புதுசா வந்திருக்கிற சினிமாவுல எது நல்லா இருக்காம்?"

"நம்ம கோணச்சத்திரத்துக்கு வார படமெல்லாம் டப்பாப் படம்தானே..."

"ஆமாமா... அந்தக் 'கொள்ளயில போவான்' தியேட்டர்ல எந்தப் படம் வந்தாலும் அது நட்டுக் கழண்ட படமாகத்தான் இருக்கும்...."

"நான் தென்காசியிலயும் திருநெல்வேலியிலயும் ஓடுற சினிமாவச் சொன்னேன்..."

"நீதான் பாத்துட்டு வந்து சொல்லேன்... அங்க போறது ஒனக்கு ஒண்ணும் புதிசில்லியே மயினி...."

அலங்காரி, வெள்ளை வெளேர் முத்தம்மா தன்னைக் கிண்டல் செய்வதாக நினைத்து, திட்டப் போனாள். இதற்குள் ஒரு எட்டு வயதுப் பயல் எங்கிருந்தோ வந்தவன் போல் வந்தான். ஒரு ஆல விழுதை எட்டிக் குதித்துப் பிடித்தபடி அங்கும் இங்குமாக ஆடினான். தாயம்மாவின் தலைக்கு மேலே போகும்போது, கால்களைச் சுருட்டிக் கொண்டான். தாயம்மா பயத்தில் தலையை நிமிர்த்திய போது, அவன் காலில் அவள் தலைமுடி சிக்கி, அவளைத் தரையோடு தரையாக இழுத்துப் போட்டது. உடனே அந்தப் பயல், விழுதை விட்டுவிட்டு, விழுந்தடித்து ஓடிய வேகத்தில், தாயம்மாவின் பீடித்தட்டு குப்புற விழுந்தது. இலைகள் பட்டம் பறப்பதுபோல் ஆகாயத்தில் பறந்தன. பீடித் துகள்கள் மண் தூள்களுடன் கலந்து மாயமாயின. தாயம்மா ஒப்பாரியிட்டாள்.

"ஐயோ.... என் அறுபது வண்டலு இலயும் போச்சே.... பீடிக்கடைக்காரனுக்கு என்ன சொல்லுவேன்... ஏது சொல்லுவேன்... காஞ்சான் மகன் பண்ணுன வேலையைப் பாருங்க... ஏலே நாய்க்கு பெறந்த நாயே... இப்போ ஓடிட்டாலும், அப்புறம் வரத்தானே போறே...."

அந்தப் பயலைப் பிடிப்பதற்காக, நான்கு பெண்கள் எழுந்து, அவர்களில் மூவர் சேலைகளை இறுக்கிக் கட்ட, மூவரில் ஒருத்தி,

கோழி, பருந்தை நோக்கி பாய்ந்து பிடிப்பதுபோல் சிறிது ஓடிவிட்டு, பிறகு மூச்சு முட்டி நின்றாள். தாயம்மாவுக்கு வேண்டாதவர்கள் உட்பட எல்லோருமே, அவளை பரிதாபமாய்ப் பார்த்தார்கள்.

தாயம்மா கத்தக்கூட திராணி இல்லாமல் தலையில் கை வைத்து, குத்துக்காலிட்டு உட்கார்ந்திருந்தபோது, அவளுக்கு உறவுப் பெண்ணான சந்திரா ஆறுதல் சொன்னாள்.

"ஏன் சித்தி அழுவுறே... நாங்க ஆளுக்குக் கொஞ்சம் இலயும் பேருக்குக் கொஞ்சம் தூளும் தாறோம்.... ஏமுளா பாக்கிய... சித்திக்குக் கொடுங்கழா...."

எல்லாப் பெண்களும் கை நிறைய இலை எடுத்து விரல் நிறையத் தூளெடுத்து தாயம்மாவின் தட்டில் போடப் போனபோது, அலங்காரி இக்கன்னா போட்டுப் பேசினாள்.

"அவளுக்கு தைரியம் இருந்தா காஞ்சான் மச்சான் கிட்டப்போயி அவரு பய பண்ணுன கோலத்தச் சொல்லி நஷ்டஈடு கேட்கட்டும்..... அந்த நொறுங்குவான் பண்ணுன காரியத்துக்கு நாம ஏன் அபராதம் கட்டுறது மாதிரி இல கொடுக்கணும்..."

"சரி... நீங்க போடாட்டா இருங்க... நாங்க போடுறோம்... மேயுற மாட்டை நக்குற மாடு கெடுக்குமாம்..."

"இந்த பாரு சந்திரா.... மாடு கீடுன்னு பேசுனே மரியாதை கேட்டுப் போவும்...."

"மாடு நல்ல சீவன்... கண்டவன் பின்னால எல்லாம் போவாது..."

"அப்போ நான் கண்டவன் பின்னால போறவ..."

"அப்படித்தான் வேணுமுன்னா வச்சுக்கங்க.."

"ஏழா, சந்திரா, வரம்பு மீறிப் பேசாத...."

"பின்ன என்ன வாடாப்பூ அத்தை...? தாயம்மா சித்தி நம்மள்ல ஒருத்தி.... அந்த தூம மவனால.... அவ்வளவு இலயையும், தூளயும் பறிகொடுத்துட்டு அந்தரத்திலே நிக்கா... ஆளுக்கு கொஞ்சம் இல கொடுத்தா தேய்ஞ்சா போயிடுவோம்... சீ. அறுத்த கைக்கு சுண்ணாம்பு வக்காத ஆளுங்க...."

"வேணுமுன்னா ஒன் கைய அறுத்துக் காட்டு... நான் சுண்ணாம்பு வக்கேன்..."

பாவாடை தாவணி சந்திராவுக்கும், பழுத்த இலை போல் புடவை கட்டிய அலங்காரிக்கும், இடையே தூள் கிளப்ப நடந்த வாய்ச் சண்டையை எல்லாப் பெண்களும் ரசித்துக் கொண்டே இருந்தார்கள். சற்றுத் தொலைவாய் உட்கார்ந்திருந்த தாயம்மாவின் அருகே கிடந்த தட்டில், இலையையும், தூளையும் எடுத்துப் போடப் போனார்கள். ஆனால் தாயம்மா திட்டவட்டமாகச் சொன்னபடியே எழுந்தாள்.

"எனக்கு எவளும் பிச்சை போட வேண்டாம். இந்தப் பேச்சை வாங்கிக்கிட்டு அந்த இலய வாங்குறது ஒவ்வோருத்திய மாதிரி அடுத்தவனுக்கு முந்தானை விரிக்கதுக்கு சமம்..."

சோர்ந்துபோய் நடந்த தாயம்மாவை, எல்லாப் பெண்களும் தாளமுடியாமல் பார்த்துவிட்டு, பிறகு தத்தம் தட்டருகே வந்து உட்கார்ந்தார்கள். தாயம்மா போவதை சட்டை செய்யாததுபோல் குறுஞ் சிரிப்புடன் அலங்காரி பீடி இலை ஒன்றைக் கசக்கிப் போட்டபடியே தனக்குத் தானே பேசிக்கொள்வது போல் பேசினாள். "தனக்குப் போவத்தான் தானம்.... பிச்சை போடறதுக்கு நாம ஒண்ணும் பெரிய இடம் இல்ல...."

சந்திராவுக்குக் கோபம் வெப்பமாகியது.

"இந்தா பாரு... எங்க சித்தி... ஒங்கிட்ட என்ன பிச்சையா கேட்டா? பேச்சை விடேன்... கடைசியில ஒன் புத்தியக் காட்டிட்டே பாத்தியா?"

"எம் புத்திய என்னத்தடி கண்டே? நான் அந்த மனுஷன்கூட இந்த ஊருக்கு ஓடி வந்ததுலே என்ன தப்பு? ஊர் ஒலகத்துல செய்யாததையா செய்துப்புட்டேன்?"

"நான் அதை நினைச்சு சொல்லலே. ஆனாலும் இப்போ சொல்லுறேன்.... ஓடிப்போறது தப்புன்னாலும், அது பெரிய தப்பில்ல... ஓடி வந்தவன் முதுகுக்குப் பின்னாலயே பிறத்தியாரோட ஒய்யாரஞ் செய்யுறதுதான் தப்பு...."

"அப்போ நான் கண்டவனை எல்லாம் வீட்டுக்குள்ள விட்டு கதவை அடைக்கேன்னு சொல்றீயா?"

"குத்தமுள்ள மனசு குறுகுறுக்குமாம்..."

"அப்போ ஒங்க வம்சம் ரொம்ப யோக்கியமுன்னு நெனப்போ?"

"நீ சொன்னாலும் சொல்லாட்டாலும் எங்க கரும்பட்டையான் குடும்பம் கவுரிமானுக மாதிரிதான்... எங்க குடும்பத்துல எவளாவது ஒருத்தி எவன் கூடயாவது ஓடிப்போயிருக்காளான்னு ஒரு விரல மடக்கு பார்க்கலாம்....."

"எந்த சோளத்தட்டைக்குள்ள என்ன நடக்குதோ? எந்தக் கரும்புத் தோட்டத்துக்குள்ள என்ன குறும்பு நடக்குதோ...?"

"ஒவ்வொரு சோளத் தட்டையா விலக்கிப் பாரு.... ஒவ்வொரு கரும்பா பிரிச்சுப் பாரு.... எங்க கரும்பட்டையான் குடும்பத்துப் பெண்ணுல ஒருத்தியக் கூட கையுங் களவுமா பிடிக்க முடியாது. ஒவ்வொருத்தியள போல பட்டப்பகலுல பப்ளிக்கா ஒருத்தனோட சைக்கிள்ல உட்காந்து வரல... அப்புறம் சைக்கிள்காரன ஒப்புக்கு வச்சுட்டு இன்னொருத்தன் பைக்ல ஏறல...."

அலங்காரி நிலைகுலைந்தவள்போல், ஆல விழுதைப் பிடித்துக் கொண்டாள். அங்கிருந்த பெண்களும் சந்திராவை அதட்டவில்லை. என்றாலும், இந்த அலங்காரி வாழ்க்கைப்பட்ட செம்பட்டையான் குடும்பத்துப் பெண்களுக்கு அலங்காரியின் 'சங்கதி' தெரிந்தும், லேசாய் கோபம் வந்தது. அதேசமயம் அவளுக்கு வக்காலத்து வாங்குவது தாங்களும் அவளைப்போல் ஆகத்தயார் என்று அறிவிப்பதுபோல் ஆகிவிடும் என்று சும்மா இருந்தார்கள். ஒருவேளை இதற்குமேல் சந்திரா பேசியிருந்தால், ஏதாவது சொல்லி இருப்பார்கள். சந்திரா வாயைப் பூட்டிக்கொண்டாள். அந்தப் பெண்களுக்கு இடையே இப்போது மௌனம் கொடுங்கோல் புரிந்தது.

அலங்காரிக்கு வழக்கம்போல் தொண்டை கனத்தது. அதற்குள் முள் போன்ற ஏதோ ஒன்று, மேலும் கீழுமாய் முகமெங்கும் பாய்ந்து,

இறுதியில் முன் நெற்றியைக் குத்தியது. முகமெங்கும் இருட்டு மொய்த்தது. சாதாரண ஒரு சிரிப்பைக்கூட தற்செயலாய் பார்ப்பதையே, கண்டனக் கணையாகக் காண்பவள்.... சண்டை சச்சரவு வரும்போது, சிலபெண்கள் 'ஒன்பவுசு... தெரியாதா' என்று இறுதி ஆயுதத்தைப் பயன்படுத்திப் பேசுகிறபோது, வாயை நிராயுதபாணியாக்கி கேட்டு, தலையில் மாறி மாறி அடித்துக் கொண்டு வீட்டிற்குள் ஓடி, புருஷனைத் திட்டுபவள்.... இப்போது, ஓடி ஒளிய இடமில்லாமல் தவித்தாள். அந்தத் தவிப்பில் தனக்குத்தானே பேசிக் கொண்டாள்.... அது ஒரு சபதமாகும் என்று நினைக்காமல்தான், தனக்குத்தானே சூளுரைத்தாள். அலங்காரி தனக்குத்தானே தனக்குள்ளேயே பேசிக் கொண்டாள்.

"நான் மட்டும் ஓடிவந்ததாலேதானே இந்த ஏச்சுப் பேச்சு? நான் ஓடி வந்த பெறகு பிறந்த இந்தச் சந்திரா பய மவள் எப்படிப் பேசுறாள்? இவங்க குடும்பத்திலயும் ஒருத்திய நான் ஓட வச்சா இப்படிப் பேசுவாளா...? வச்சா என்ன வச்சா? ஓட வச்சே காட்டணும்..... கரும் பட்டையான் குடும்பத்த கரும்புள்ளி செம்புள்ளி குத்துறது மாதிரி செய்து காட்டணும்...."

அலங்காரி அங்குமிங்குமாய் திரும்பினாள். மேற்குப் பக்கத்திலிருந்து செம்பட்டையான் குடும்பத்தைச் சேர்ந்த துளசிங்கம் கையில் ஒரு கம்போடு வந்தான். கிழக்குப் பக்கத்திலிருந்து கரும்பட்டையான் குடும்பத்தைச் சேர்ந்த கோலவடிவு கையில் ஒரு கூடையோடு வந்தாள்.

# 2

இருபுறமும் இருந்து வந்த துளசிங்கமும், கோலவடிவும் கிட்டத்தட்ட ஒரே சமயத்தில் எதிரெதிராய் வந்து நின்றார்கள். துளசிங்கம், அவளை லேசாகப் பார்த்து விட்டுக் கையில் இருந்த கம்பைத் தலைக்கு மேலே தூக்கி, சிவப்பு வைரங்களாய் மின்னிய ஆலம்பழங்களை அடித்தடித்து விழத்தட்டினான். அப்படி அடித்ததில் ஓரிரு பழங்கள் கோலவடிவின் முன் நெற்றியில் மரகதக் கற்கள் போல் பதிந்தன. அவள், அவற்றை எடுத்து தூர வீசியபடியே, அவனை முகஞ்சுழித்துப் பார்த்தாள். துளசிங்கம், சித்திக்காரி அலங்காரியிடம் எதையோ பேசப் போனான். கோலவடிவு தன் சித்தப்பா மகள் சந்திராவிடம் எதையோ கேட்கப் போவதுபோல் மேலுதட்டை கீழுதட்டால் ஈரப்படுத்த அவற்றை பிரிக்கப் போனாள்.

அலங்காரி இலைகளை மூடியிருந்த ஈரக் கோணித்துண்டை எடுத்து உதறுவதுபோல் உதறி, அந்த இருவரையும் ஓரங்கட்டிப் பார்த்தாள். அவள் எதையும், எவரையும் சாய்க்கப் போவதுபோல் சாய்த்துப் பார்ப்பவள்.. காக்கா பார்க்குமே அப்படிப்பட்ட பார்வைக்காரி. இதனால், ஊரில் இவள் இருக்கும்போது, சித்தி என்றும், அக்கா என்றும் உண்மையான அன்போடு அழைப்பவர்கள்கூட, அவள் இல்லாதபோது, ‘காக்காக் கண்ணி’ என்பார்கள். ஆலமரத்தில் உட்கார்ந்திருக்கும் எந்த காக்காயாவது எச்சம் போடும்போது, இந்த அலங்காரி, “பய காக்காவ பாருங்க” என்பாள். எல்லோரும், காக்காவை ஒப்புக்குப் பார்த்துவிட்டு, அவளைப் பார்த்து நமுட்டுச் சிரிப்பாய் சிரிப்பார்கள். அலங்காரிக்கு கண்தான் காக்காக் கண்ணே தவிர, உடம்பு என்னமோ, கருடன் மாதிரி பறக்க முடியும் என்பது போன்ற லேசாய்த் தட்டையான உடம்பு... தடிப்போ ஒல்லியோ இல்லாத பிடிபடாத அழகைச் சுமக்கும் பிடிப்பான உடம்பு.... நாற்பது வயதிலும் நளினம் குறையாத தோரணை.... அதேசமயம், மனதுக்குள் ஏதோ ஒன்று குடைவது போன்ற முகப் புழுக்கம்.

வாடாப்பூ எதேச்சையாகச் சொல்வதுபோல் சொன்னாள்...

"ஏன் ரெண்டு பேரும் சொல்லிவச்சது மாதிரி நிக்கிய... ஒக்காருங்களேன். நாங்க படுற பாட்டைத்தான் கொஞ்சம் பாருங்களேன்.... ஏழா சந்திரா, அந்தப் பாயைத் தா... துளசிங்கம் உட்காரட்டும்... கோலவடிவு நீயும் உட்காரேன்..."

அலங்காரியை வரம்பிற்கு மீறித் திட்டிவிட்டோமோ என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டதால் தப்புத் தப்பாய் பீடி சுற்றிய சந்திரா, அவளுக்கு சலுகை காட்டுவது போல், அந்த இரண்டு சதுரடிப்பாயைத் துளசிங்கம் நின்ற பக்கமாக வீசினாள். அவன், உடனே அதை எடுத்து ஆலமரக் கிளைபோல் நீண்ட வேரில் மடித்துப் போட்டு உட்கார்ந்தான்.... கோலவடிவு அப்படியே நின்றாள்.

அலங்காரி புதிய வரவுகளான இருவரையும் நோட்டமிட்டுப் பார்த்தாள். இரும்பைச் சிலையாக்கி, அதில் எண்ணெய் தேய்த்துவிட்டது போன்ற துளசிங்கத்தை, துள்ளிவிழப் போகும் ஆமணக்குச் செடி ஒய்யாரத்தில் தோன்றிய கோலவடிவுடன் ஒப்பிட்டுக் கொண்டாள். அவனின் முடிகுறைந்த வட்டக்கிராப்பையும், அவளின் கோதி முடிந்த மல்லிகைப்பூ கொண்டையையும், மனதுக்குள் ஒன்று சேர்த்து வைத்துப் பார்த்தாள். ஒரு அழுத்தத்தை, ஒரு மென்மையுடன் இணைத்துப் பார்த்ததில் அவளுக்குக் கணவனால் கிடைக்காத சுகம் கிடைத்தது. இப்போது, தன் மனதில் தோன்றிய சபதத்தைக்கூட மறந்து, அந்த இருவரையும் இயல்பாக இணைத்துப் பார்த்து ஆனந்தப்பட்டாள். சந்திரா, அலங்காரியை தாஜா செய்வதுபோல் கேட்டாள்.

"அத்த, ஒங்க மச்சான் மகன் ஊமையா?"

அலங்காரிக்கு இப்போது மனம் லேசாய் சுகப்பட்டது. அவளும் இயல்பாகவே திருப்பிக் கேட்டாள்

"ஆமாண்டி என் மருமவளே.... அதே கேள்விய அத்த திருப்பிக் கேக்கேன். ஒன் பெரியப்பா மகள் கோலவடிவுக்கு வாய் பேச வராதோ...."

கோலவடிவும், துளசிங்கமும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். துளசிங்கம், லேசாய் வளைந்த தன் மூக்கு நுனியை ஆள் காட்டி விரலால் அடித்தபடியே, கோலவடிவையும், சந்திராவையும் பொதுப்படையாய்ப் பார்த்தபடியே பேசினான்.

"நான் பேச ஆரம்பிச்சால்.... ஒங்க காது தாங்காது..... கம்மலு அறுந்து என் கையில விழும். அப்படிச் சிரிப்பிங்க..."

"ஒமக்கு மங்கலமா பேச வராதோ... ஆயிரந்தான் இருந்தாலும் நீங்க அதிக நாளாய் டவுனுல இருந்த வருல்லா... கிராமத்து நாகரிகம் வராதுதான்."

"என் மவன அப்பிடிப் பேசாத.... சந்திரா... நம்ம ஊர்ல... மூட்டை தூக்கி வண்டியடிச்சு.... கடைசியல வக்குல்லாம மெட்ராசுக்கு போன பய மவனுவல்லாம் அங்க எச்சிப் பாத்திரத்தை கழுவுனாலும், ஊருக்கு வந்து கண்ணுல கறுப்புக் கண்ணாடியை போட்டுக்கிட்டு வாயில சிகரெட்ட ஊதிக்கிட்டு ஒரு நாளுலயே நேரம் போவமாட்டக்குன்ன துள்ளறதப் பார்க்கும்போது..... எங்க துளசிங்கம் ஊருக்கு வந்த ரெண்டு வருஷத்துல ஒரு நாள் ஒரு பொழுதுகூட ஊர விட்டுப் போகணுமுன்னு நினைக்கல.... பிள்ள... ஏண்டா துளசிங்கம்..... ஒன்னத் தாய்யா... ஒன் உரக்கடை எப்படிடா இருக்கு...?"

துளசிங்கம் கையில் இருந்த கம்பைத் தன் மார்போடு மார்பாய்ச் சாத்திவிட்டுச் சிறிது எரிச்சலோடு பதிலளித்தான்.

"என்ன சித்தி நேத்துத்தான் உரக்கடையைப் பத்தி ராமாயணம் மாதிரி கேட்டே... நானும் மகாபாரதம் மாதிரி பதில் சொன்னேன்...... இப்பவும் கேட்டா எப்படி..."

"ஒரு நாளைக்குள்ள உரக்கடை உசந்திருக்கலாமில்லியா... ஏதோ தெரியாமக் கேட்டுட்டேன். தப்புத் தாம்பா.... நான்னா... எல்லோருக்கும் இளக்காரந்தான்...."

"இப்படித்தான் எங்க சித்திக்கு மூக்குக்கு மேல கோபம் வந்துடும்.... சித்தி இன்னொரு நல்ல செய்தி.... சிமெண்டுக்கும் ஏஜென்சி கிடச்சுட்டு.... உரக்கடை பக்கத்துலயே தனிக்கடை போடப் போறேன்... இதைச் சொல்லத்தான்... இப்போ வந்தேன்..."

"பாத்தியா... அப்போ... சித்தி கேட்டதுல தப்பில்லியே...?"

துளசிங்கம் அலங்காரிச் சித்தியின் முதுகைச் செல்லமாகத் தட்டிக்கொடுத்தபோது வெள்ளை வெளேர் முத்தம்மா ஆச்சரியமாகக் கேட்டாள்...

"துளசி மச்சான்..."

"ஏழா... ஒனக்கு அவன் அண்ணாச்சி முறை வேணும்... ஒங்க தாத்தாவோட அம்மாவும், அவன் தாத்தாவோட அம்மாவும் சின்னம்மா பெரியம்மா மக்கள்... ஆசைக்காக உறவை மாத்தப்படாது...."

"ஏதோ ஒரு முறை.... துளசி.... ஒம்மத்தான்... மொத்தம்... நீரு எவ்வளவு இடம் சுத்தியிருப்பியரு...."

"ஏண்டா பராக்கு பாக்கது மாதிரி பாக்கே... எல்லாப் பொட்டப் பிள்ளியளும் ஆவலோட முகத்த நிமித்துறாளுவ பாரு... ஒன் பவுசத்தான் சொல்லிக் காட்டேன்...."

துளசிங்கம், ஒரு குட்டிப் பிரசங்கம் செய்யப் போகிறவன்போல், மார்பில் சாத்திய கம்பை நிமிர்த்தி மைக் மாதிரி பிடித்துக் கொண்டான். பிறகு எல்லோரையும் பொதுப்படையாகவும், கோலவடிவைக் குறிப்பாயும் பார்த்தபடி பேசப் போனான்.

"பத்து வயசில... எங்கப்பா என்னை..."

"ஆமாம்... மச்சான் தப்பா நினைக்கப்படாது... ஒங்கப்பாவை ஏன் எல்லோரும் எலி டாக்டர்னு சொல்லுதாவ...."

அலங்காரி, பொய்க் கோபத்துடன் அதட்டினாள்.

"ஏய் முத்தம்மா... வாயைக் கிழிச்சுப்புடுவன் கிழிச்சி... என் மச்சானை என் முன்னால வச்சே... எலி டாக்டருன்னு சொல்லுற அளவுக்கு தைரியம் வந்துட்டோ... ஏதோ சின்ன வயசுல... என் மச்சானை... அப்படி ஒருத்தன் மசக்கிப் புட்டான்... அப்போ மச்சானுக்கு ஏழு வயசாம்... ஒரு ஜோஸ்யக்காரன் அவருகிட்ட காலணா வாங்கிக்கிட்டு... நீ பிற்காலத்துல டாக்டரா வருவடான்னு சொல்லிட்டுப் போயிட்டானாம். இந்த கூறு கெட்ட மனுஷனும் அதை

நம்பி, ஒரு செத்த எலியை தூக்கி வச்சுக்கிட்டு.... 'நான் டாக்டரு.. இந்த எலியை ஊசி போட்டு பிழைக்க வைக்கேன் பார்'னு சொல்லி அந்த எலியை கோணி ஊசியை வச்சி.... குத்தோ குத்துன்னு குத்துனாராம்.... இந்த சட்டாம்பட்டிக்காரங்களுக்குச் சொல்லிக் கொடுக்கணுமா... வக்கணை வச்சுட்டானுவ.... எலி டாக்டர்னு..."

அலங்காரி நாடக பாணியில் பேசுவதை வாயாடாமல் கேட்ட பெண்கள் கலகலப்பாய்ச் சிரித்தார்கள். கோல வடிவு, துளசிங்கத்தைப் பார்த்தபடி குறுஞ்சிரிப்பாய்ச் சிரித்தாள். உடனே அவன், தான் சிப்பி வயிற்றில் பிறந்த முத்து என்பதை நிரூபிப்பது போல் பேசினான்.

"எங்கப்பன் கதையை விட்டுவிட்டு, என் கதையைக் கேளுங்க்.... பதினைந்து வயசுல சிகரெட்டு பிடிச்சேன்னு எங்கப்பா என்னை அடிச்சிட்டாரு.. நான் வீட்ல இருந்த நூறு ரூபாயை எடுத்துக்கிட்டு டில்லி போனேன்... கரோல்பாக்குல காய்கறிக்கடை போட்டேன்... தேறல.. கல்கத்தா போனேன்.... ஹோட்டல்ல சர்வரா இருந்தேன்... முடியல... அப்புறம் பம்பாய்க்கு வந்து தாராவில நம்ம தமிழ் ஆள்கள் பகுதியில் இருந்தேன். ஆட்டோ ரிக்ஷா ஒட்டிக்கிட்டே, இந்திப் படங்கள்ல ஸ்டண்ட் வேடங்கள்ல நடிச்சேன்..."

"ஒமக்கு ரஜினிகாந்த், கார்த்திக் மாதிரி சண்டை போடத் தெரியுமா?"

"அவங்களுக்கு என்னை மாதிரி சண்டை போடத் தெரியுமான்னு கேளு.... அமிதாப்பச்சனுக்கே ஸ்டண்ட் ரோலுக்கு நான்தான் டுப்.... சிலம்பு, கத்தி, குஸ்தி.... எல்லாம் அத்துபடி, இந்த ஊர்ல எவன வேணுமுன்னாலும் வரச்சொல்லு..."

எல்லாப்பெண்களும் அவனை அதிசயித்துப் பார்த்தார்கள். கோலவடிவு, முன்பு அவன் ஸ்போர்ட் பேண்ட்டையும், டி சர்ட்டையும் பார்த்து, அவனை வான்கோழியாக நினைத்து மனதுக்குள் வைதவள்; இப்போது அவன் உடையையும், உடைக்குள்ளே இருந்த உடம்பையும் ரசித்துப் பார்த்துவிட்டு, தன்னைத்தானே திட்டிக்கொள்வதுபோல் மெல்ல முனங்கினாள். அலங்காரி அவனை ஏறிட்டுப் பார்க்காமலே கேட்டாள்.

"திருஷ்டி பட்டுடப் போவுதுடா..... இதுக்கு மேல எதுவும் சொல்லாத...."

"எத்தே.... உங்க மவன நாங்க தின்னுட மாட்டோம்.... அப்போ மச்சான் ஒமக்கு எல்லா சினிமா நடிகரும் பழக்கம் இருக்குமுல்ல..."

"பழக்கம் இருக்குமா... எல்லாரும் என்னைப் பார்த்து மாஸ்டர் மாஸ்டர்னுதான் கூப்பிடுவாங்க."

'ஒம்ம உடம்புக்கு நீரும் சினிமாவுல நடிச்சிருக்கணும்..... இந்த ஊருக்கு வந்திருக்கப்படாது.."

"கரெக்டா சொன்னே.... ஆனால் நான் எங்கப்பா மாதிரி எலி டாக்டரா இருக்க விரும்பல... புலி டாக்டரா இருக்க விரும்பறேன்.... ஸ்டண்ட் தொழிலுல நடிச்சு நடிச்சு அலுத்துப் போச்சு.... இனிமேல் நடிச்சால் ஹீரோ.... இல்லன்னா வில்லன்.... சின்னச் சின்ன வேடத்துல நடிக்கப் பிடிக்கல..... அதான் ஊருக்கு வந்துட்டேன்... இப்போ மூணு லட்சம் சம்பாதிச்சாச்சு... ஒரு காலத்துல சினிமா எடுக்கத்தான் போறேன்..."

"அப்போ பேசாம நம்ம ஊர்லயே ஒருத்திய கதாநாயகியாய் போடணும்."

"நீயே சொல்லு... யாரைப் போடலாம்..."

"இந்தக் கேள்வியே கேக்கப்படாதுடா... நம்ம கோலவடிவை பக்கத்துல வச்சுக்கிட்டே கதாநாயகிக்கு ஆள் தேடுறது... கோலத்தோட அழக அவமானப்படுத்துறது மாதிரி.... பாருடா... அவள் எப்படி வெட்கப்படுறாள்னு.... பாரு. அதுலே எவ்வளவு அழகு இருக்குன்னு பாரு.... இவள்தாண்டா ஒனக்கு கதாநாயகி..."

துளசிங்கத்தோடு சேர்ந்து எல்லோரும் கோலவடிவைப் புதிய கோணத்தில் பார்த்தார்கள். ஆனால் எல்லோரும் எதிர்பார்த்தது போல், அவள் சந்தோஷப்படவில்லை. துளசிங்கத்தைக் கோபமாய்ப் பார்த்த படியே, அலங்காரியிடம் சினந்து பேசினாள்.

“அலங்காரி அத்தே.... ஒங்க மனசுல என்னதான் நெனச்சுக் கிட்டே....? என்னைப்பத்தி... எவ்வளவு தப்புக் கணக்கு போட்டுட்டே... எங்கப்பாகிட்ட சொல்லுறேன் பாரு....”

எதற்கும் ஆடாத அலங்காரி, கொஞ்சம் ஆடித்தான் போனாள். அந்த மாற்றத்தைக் காட்டுவதுபோல், ஆலமரத்தின் கைபோலான ஒரு விழுதின் விரலைப் பிடித்தபடியே, கோலவடிவைப் புரியாதவள் போல் பார்த்தாள். அவளுக்குக் கொஞ்சம் பயமெடுத்தது. இந்தக் கோலவடிவின் தந்தை பழனிச்சாமி, கரும்பட்டையான் குடும்பத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படாத-தேர்ந்தெடுக்க அவசியமில்லாத - தலைவர். வம்புச் சண்டைக்கும் போகவும் மாட்டார். வந்த சண்டையை விடவும் மாட்டார். அதோடு, இவள் வீட்டு வாசல் கதவைத் தட்டாத ஒரே ஒரு பெரிய மனிதர் அவர்தான். அலங்காரி ஒரு தடவை லிமிட்டை அதிகமாகத் தாண்டுகிறாள் என்று நினைத்து, அவள் வாழ்க்கைப்பட்ட செம்பட்டையான் குடும்பத்து சொக்காரர்கள், அவளை அடிக்கப்போன போது, ‘கண்ணால் காணாமல், காதால் கேளாமல், தீர விசாரிக்காமல் ஒரு பெண் மேல பழி போடப்படாதுடா... எம்மாளு நீயும் பழி வாராது மாதிரி நடக்கப்படாது’ என்று அவளுக்குப் பாதுகாப்புக் கொடுத்தவர்.... அவர் சொன்ன சொல்லுக்கு மதிப்பு கொடுத்தோ, அல்லது அடிக்க வந்த சொக்காரர்களில் பலர் அவளது ராத்திரியாட்ட சொக்கட்டான்கள் என்பதாலோ, அவளை அடிக்காமலே போய்விட்டார்கள்.

என்றாலும் இந்த பங்காளிப் பயல்கள் எதிர்காலத்தில் அவளை அடிக்க, பிடிக்க வரமாட்டார்கள் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது... அப்போதெல்லாம் இந்தப் பழனிச்சாமிதான் அவளுக்குப் பாதுகாப்பாக இருப்பார். காரணம் பழனிச்சாமியின் கண் இவள் நடத்தையை ஒருவேளை பார்த்து விட்டாலும், அவர் காதில் எதையாவது சொல்லி மழுப்பிவிடலாம். காதால் கேட்டாலும், அவர் கண்ணை, தன் கண்ணீரால் மறைத்துவிடலாம். தீர விசாரணை என்பது, இந்தச் சட்டாம்பட்டியில் நடக்காத காரியம். விவகாரம் என்று வந்துவிட்டால், சின்னய்யா மகன் என்ன நியாயத்தைச் சொல்வானோ, அதற்கு எதிர் அநியாயத்தை பேசுபவன் பெரியய்யா மகன்.

இவன்களுக்கு எது நியாயம் என்பது முக்கியமில்லை. எவன் நியாயம் பேசுகிறான் என்பதே முக்கியம். ஆகையால், அலங்காரி, கோலவடிவைப் பார்த்து, நமுட்டுச் சிரிப்பாய்ச் சிரித்துவிட்டு, "என் அண்ணாச்சி.... மவளே... உட்காரே முழா...." என்றாள்.

அங்கிருந்த பீடிப் பெண்கள் பலருக்கு, அலங்காரி மீது கோபம் கோபமாய் வந்தது. ஒவ்வொருத்தியும் தன்னையே கதாநாயகியாக நினைத்துக் கொண்டிருப்பவள். அந்த நினைப்பிலேயே, நடக்கும்போது ஒரு குலுக்கலோடும், இருக்கும்போது ஒரு சிணுங்கலோடும், எழும்போது ஒரு முகவெட்டோடும், பேசும்போதுகூட ஒரு சினிமாப் பாட்டைப் பின்னணியாக முனங்கிக் கொண்டே பேசுகிறவர்கள் இவள்கள். அப்படிப்பட்ட நாயகிக் குணங்களில் ஒன்றுகூட இல்லாத கோலவடிவை, அலங்காரி கதாநாயகியாகத் தேர்ந்தெடுத்தது அவள்களுக்கு அதிகப்படியாகத் தெரிந்தது. இந்தக் கோபத்தை முத்தம்மா, வக்கிரமாய்க் காட்டினாள். மனதுக்குள், ஒரு ஐ.நா. சபையையே குடியிருக்க வைத்திருப்பவள்.

"ஏய் சித்தி.... பேச்சுக்கும் ஒரு வரைமுறை வேண்டாம்... என்ன பேச்சு பேசிட்டே... செத்த பேச்சு... அதுவும் ஒரு முழுத்த பொம்புள பிள்ளயப் பார்த்தா இப்டி சொல்லுறது... இப்போ அவளச் சொன்னே... நாளைக்கு எங்களச் சொல்லமாட்டேன்னு என்ன நிச்சயம்...."

"இடையர் பொறுத்தாலும் இடக்குடி நாய் பொறுக்காதாம்... கோலவடிவே நான் சொன்னதுக்கு லேசா கோபப்பட்டுட்டு இப்போ சும்மா இருக்காள்.. ஒங்களுக்கு என்னடி.... வந்துட்டு"

அமைதியாய் உட்கார்ந்திருந்த கோலவடிவுக்கு மீண்டும் கோபம் வந்தது. 'லேசா கோபப்பட்டேன்..... என்கிறாளே.... லேசா இல்ல.... இல்ல... நான் நெசமாகவே கோபப்பட்டனாக்கும்... அலங்காரிக்கு அது தெரியாமப் போச்சின்னா தெரியப்படுத்தணும்.....'

"ஏய் அலங்காரி.... அத்தே.... என்ன சொன்ன....? நான் லேசர் கோபப்பட்டேனா..? அப்படியே இருக்கட்டும்... எங்கப்பா முழுசா கோபப்படுவாரு... அப்போ தெரியும் ஒனக்கு... என்னை என்ன சினிமாக்காரின்னு நெனச்சியா....? என்னப் பாக்கத்துக்கு ஒனக்கு என்ன தளுக்கி.... மினுக்கியா தெரியுதா...?"

அலங்காரி சரணடைகிறவள் போல், மடியில் கிடந்த பீடித்தட்டைக் கீழே தள்ளிப் போட்டுவிட்டு, தன்னிலை விளக்கமாகவும், அவளைச் சமாதானப்படுத்துவது போலவும் பேசினாள்.

"ஒன் மேல இருக்கிற பாசத்துல பேசிட்டேன்... மருமகள் என்கிற உரிமையில பேசிட்டேன்..... வேற தப்பான எண்ணத்துல பேசல... துளசிங்கம் சினிமாப்படம் எடுக்கவும் வேண்டாம்..... அப்படியே எடுத்தாலும் நீ அவன்கூட நடிக்கவும் வேண்டாம்.... ஆளை விடும்மா..."

இன்னொருத்தி இடைமறித்தாள்.

"எம்மாடி.... சினிமா வந்த பிறவுதான் தகராறு வரும்... துளசிங்கம் மச்சான், படம் எடுக்கதுக்கு முன்னாலேயே தகராறு வருது பாருங்க...."

அந்தப் பெண்களில் எவளும் இடைமறித்துப் பேசிய தமாஷை ரசித்துச் சிரிக்கவில்லை. தன்னைத்தான் கதாநாயகி என்று துளசிங்கமோ அல்லது அவன் சித்திக்காரியோ தேர்ந்தெடுக்கும் வரை சிரிப்பதில்லை என்று உறுதி பூண்டவர்கள் போல் வாய்களைப் பற்கதவுகளால் அடைத்தார்கள். இவர்களில் தனி ரகம் பாவாடை சந்திரா. இந்த ஒரு விவகாரத்திற்கு கோபப்பட வேண்டுமா அல்லது சிரிக்க வேண்டுமா என்று அவள் குழம்பும்போது, அவளுக்கு வேண்டியவர்கள், அந்த விவகாரத்தில் எப்படி நடந்து கொள்வார்களோ அப்படி நடந்து கொள்வாள். பெரியப்பா மகள் கோலவடிவு கதாநாயகி தேர்வில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டபோது அதை ஏற்று, ரசித்துச் சிரித்தவள், இப்போது கோலவடிவே கோபப்பட்டதால், அந்தத் தேர்வு மோசம் என்றும், ஆகையால் தானும் கோபப்பட்டுச் சொக்கார பலத்தைக் காட்ட வேண்டும் என்று கத்தினாள்.

"ஆனாலும் ஒங்களுக்கு இவ்வளவு அடாவடி ஆகப்படாது அலங்காரி அத்தே... எங்க அக்காவைப் பார்க்கக் குலுக்கி மினுக்குகிற சினிமாக்காரி மாதிரியா தெரியுது... வாலிபப் பயலுவ கூட டுயட் பாடுற மாதிரியா தெரியுது... இன்னும் கொஞ்சம் இடம் கொடுத்தால்... எங்கக்காவைப் பத்தி என்னவோ சொல்லுவே போலுக்கு.... எங்கக்கா ஒன்னை மாதிரி சிலுக்குறாளா.... இல்ல மினுக்குறாளா..."

கோலவடிவுக்கும் சித்தப்பா மகள் சந்திரா பேசுவது அதிகப்படியாகத் தெரிந்தது. ஆனால், அந்தச் சமயத்தில் அவளைக் கட்டுப்படுத்துவது, தான் கதாநாயகியாக நடிப்பதில்லை என்ற முடிவை, கல்யாணமான நடிகைகள் மறுபரிசீலனை செய்கிறார்களே, அப்படி மறுபரிசீலனையாய் கருதப்படும் என்று பயந்துபோய் சும்மா இருந்தாள். ஆனால் அலங்காரியால் அப்படிச் சும்மா இருக்க முடிய வில்லை. லேசாய்க் கோபமும் வந்தது. அதைப் பேச்சாக மாற்றினாள்.

"ரொம்பத்தான் துள்ளாத சந்திரா... போன வருஷம் பள்ளிக்கூடத்து நாடகத்துல கதாநாயகன் மார்புல கண்ணை மூடிக்கிட்டு சாய்ஞ்சு கிடந்தே... சிங்காரன் விசிலடிச்சப்போகூட டயலாக்க மறந்து அப்பிடியே கிடந்த..."

"அது பொம்புள போட்ட ஆம்புள வேடம்... அதுல என்ன தப்பு?"

"நீ பொம்புள கிட்டயே அப்படினன்னா...."

"என்னழா... வாய் ரொம்ப நீளுது? ஒன் புத்திய மாதிரி எல்லோரையும் நெனச்சிட்ட பாரு... இப்பவே எங்க பெரியப்பாகிட்ட சொல்லி ஒன் நாக்க வெட்டிப் போடச் சொல்லுதேன் பாரு..... கோலக்கா எழுந்திரு...."

"சரியம்மா... தெரியாமச் சொல்லிப்புட்டேன்.. இந்தப் பேச்சு விட்டுட்டு அடுத்த பேச்சு பேசலாம்."

அந்தப் பெண்களுக்குள் நடந்த ஏடாகோடமான பேச்சை ரசித்துக் கேட்பது போலவும், அதைப் பொருட்படுத்தாதது போலவும், கையில் இருந்த கம்பால் ஆலவேரில் சாரிசாரியாச் சென்ற எறும்புகளை இடித்து இடித்துக் கொன்று குவித்துக் கொண்டிருந்த துளசிங்கத்திற்கு ஆவேசம் வந்தது..... கோலவடிவு மேல் மெலிதாகவும், சந்திராமேல் பலமாகவும் வந்தது. சித்திக்குச் சொல்வது மாதிரிச் சொன்னான்.

"நம்ம கண்ணு முன்னாலயே அம்மணமாத் திரிஞ்ச சின்னப் பொண்ணு இந்தச் சந்திரா.... ஏதோ பீர்க்கங்கா மாதிரி வளர்ந்துட்டாள்

பெரியவள் என்கிற நெனப்புல குதிக்காள்... போயும் போயும்... அவள் கிட்ட போயி... மன்னிப்புக் கேட்ட பாரு... அவளுக்கு உடம்பு வளர்ந்த அளவுக்கு அறிவு வளராமப் போச்சு... இல்லன்னா இந்த சின்ன விஷயத்துக்கு இப்படி ஆடமாட்டாள்...."

"இந்தா பாரும்... ஒமக்கும் எனக்கும் பேச்சில்லே... போயும் போயுமுன்னு பேசுதியரே.... நான் என்ன தெருவுலயா கிடக்கேன்... ஆடுறேன்னு வேற சொல்லுதியரு... என்னைப் பார்த்தா ஆட்டக்காரி மாதிரியா இருக்குது... ஒம்ம அக்காவப் போய் ஆடச் சொல்லும்.. ஒம்ம தங்கச்சியப் போயி ஆடச் சொல்லும்... இல்லன்னா இந்த மூளி அலங்காரி மூதேவி சண்டாளியப் போய் ஆடச்சொல்லும்..... நான் எதுக்கு ஆடணும்...."

"நீ ஆடாண்டாம்... ஆடுனாலும் அசிங்கமாத்தான் இருக்கும்."

"இதோ பாரு... துளசிங்கம்... இதுக்கு மேல பேசினே... எனக்குக் கெட்ட கோபம் வரும்."

"நீ சின்னப் பொண்ணாச்சேன்னு பாக்கேன். இல்லன்னா என்னை, நீ நான்னு பேசுறதுக்கு நடக்குற சங்கதியே வேற.... என்ன நடந்து போச்சுன்னு இப்டி குதிக்கே."

"எங்கக்காவ எப்படி சினிமாக் கதாநாயகின்னு சொல்லலாம்...? சும்மா கண்டபடி பேசுறதுக்கு திறந்து கெடக்கோ..."

"சரி, எங்க சித்தி சொன்னதையே நான் திருப்பிச் சொல்லுறேன்.... இதோ இருக்காளே.... இந்தக் கோலவடிவு, சினிமாவுல வார கதாநாயகி மாதிரியா இருக்காள்...? தமிழுக்குத் தமிழ் கதாநாயகி மாதிரியும், இந்திக்கு இந்தி கதாநாயகி மாதிரியும் இருக்காள்.... சரி... சொல்லிட்டேன்... இப்போ என்ன செய்யணுமோ அதைச் செய்துக்கோ...."

"ஏய் கோலவடிவு... எக்கா... ஒன்னத்தான்... எழுந்திரு... இப்பவே நம்ம குடும்பத்துக்காரங்ககிட்ட சொல்லுவோம்... எழுந்திரு... ஏன் குத்துக்கல்லு மாதிரி இருக்கே...."

"நீயே நான் சொன்னதைப் போய் சொல்லுறியா... இல்ல... நானே ஒன் குடும்பத்துக்காரன்கிட்ட வந்து சொல்லணுமா... இன்னொரு

தடவை வேணுமுன்னா சொல்லுறேன்... நல்லா கேட்டுக்க.... இந்த கோலவடிவு..."

"எக்கா... எக்கா எழுந்திரு... இவன ரெண்டுல ஒண்ணு பாத்துடணும்... நீ இப்போ எழுந்திருக்காட்டால், இந்த துளசிங்கம் சொன்னதல்லாம் ஒனக்குச் சரின்னு அர்த்தம்...."

கோலவடிவு பயந்து போயும், பதறிப் போயும் எழுந்தாள்.. அத்தனைப் பெண்களும் பரபரப்பானார்கள். சிலர் எழுந்து விட்டார்கள். ஏதோ சொல்லப் போனார்கள். அதற்குள் கோலவடிவின் கையை இழுத்துக்கொண்டு போகப் போன சந்திரா சட்டென்று நின்றாள். கிழக்குத் திசையையே பார்த்தபடி நின்றாள். அவள் பார்த்த திசையை அனைவரும் பார்த்தார்கள். பயந்து பார்த்தார்கள். படபடப்பாய் பார்த்தார்கள். அங்கிருந்து —

திருமலை வந்து கொண்டிருந்தான். தோளிலே மண்வெட்டி கிடந்தது. அதன் இரும்பு வாய் அவன் தோளைப் பற்றிக் கிடக்க, கம்புக் கணை அவன் கையோடு கையாய்த் தொங்கியது. இடது கையில் ஒரு வெட்டரிவாள்..... அவனுக்கு இருபத்து மூன்று வயதிருக்கலாம்.... செம்மண் நிறம்.... சுட்ட செங்கல் லாவகம் வெட்டரிவாளுக்கும் அவன் கைக்கும் வித்தியாசம் தெரியவில்லை. மண்வெட்டி கணைக்கும் அவன் கைக்கும் வேறுபாடு தோன்றவில்லை. எல்லாப் பெண்களும் நடுங்கினார்கள். முத்தம்மா சந்திராவைக் கெஞ்சினாள்.

"ஏய் சந்திரா... நீ நல்லா இருப்ப... கோலவடிவு அண்ணாச்சி கிட்ட சொல்லாத. விளையாட்டு விளையாட்டாவே இருக்கட்டும். வினையாயிடப்படாது.... இல்லன்னா குத்துப்பழி வெட்டுப்பழி வரும்...கோலவடிவு... நீயாவது இந்த குறுமுட்ட பொண்ணுகிட்ட சொல்லு..."

கோலவடிவும் சந்திராவைச் சமாதானம் செய்யப்போனாள். ஆனால் அதற்குள் சந்திரா முந்திக் கொண்டாள். கைகளை ஆட்டி ஆட்டி காட்டுக் கத்தலாய் கத்தினாள்.

"எண்ணே.... எண்ணே... சீக்கிரமா வா... இந்த துளசிங்கம் எங்கள அவமானமாய் பேசுறான்... சீக்கிரமா வாண்ணா..."

திருமலை வேகவேகமாய் ஓடி வந்தான்... துளசிங்கமும் அவனைச் சந்திக்க தயாராய் இருப்பதுபோல், கைகளை மார்பில் மடித்துப் போட்டு, வீறாப்பாய் நின்றான். பெண்களோ, 'எய்யோ..... எய்யோ' என்று புலம்பினார்கள்... அந்தப் புலம்பல் திருமலைக்கும் அந்த இடத்திற்கும் இடைவெளி குறையக் குறைய வலுத்தது... அந்தச் சத்தத்தைக் கேட்டுப் பயந்துபோய், ஆலமரத்தில் இருந்த எல்லாப் பறவைகளும் அஞ்சிப் பறந்தன..... அவை எழுந்த வேகத்தில் அந்த ஆலமரத்தின் உச்சிக் கொம்புகள் ஆட்டம் கண்டதுபோல் ஆடின... திருமலையும் நெருங்கிவிட்டான். துளசிங்கமும் தயாராகிவிட்டான்.

வேகமாக நடந்து வந்த திருமலை அந்தப் பெண்களின் கூச்சலாலும், சந்திராவின் கைவீச்சு பலமாக ஓங்கியதாலும், ஓட்டமாக வந்தான். மூச்சிழுப்பைக் கட்டுப்படுத்துவது போலவும், அதை வெளிக்காட்டாதது போலவும், ஆல விழுதைப் பிடித்தபடி, பிறகு அதன் நுனியைக் கையில் சுருட்டி வைத்தபடி, எல்லாப் பெண்களையும் ஒட்டுமொத்தமாகப் பார்த்தான். எதிரே கையைக் கட்டிக் கொண்டு ஆகாயத்தைப் பார்த்தபடி, அலட்சியமாய் நிற்பதாய்க் காட்டிக் கொண்ட துளசிங்கத்திடம் குசலம் விசாரிக்கப் போனான்.

அப்போது-

சந்திரா, பெரியப்பா மகனைப் பார்த்து, நடந்ததைச் சொல்லப் போனாள். கோலவடிவு அங்கே நிற்கப் பிடிக்காததுபோல், சற்றுத் தனியாய்ப் போய்நின்று கொண்டாள். அவசர அவசரமாகச் சொல்லப்போன சந்திராவின் கையை ஒருத்தி பிடித்தபடியே, "ஏதோ கோபம்.. பாவம்... பழி... ஒரு கொலயோ, ரெண்டு கொலயோ விழுறதுக்கு பொறுப்பாளி ஆலாத" என்றாள். உடனே சந்திராவுக்கு ஒரு சந்தேகம்... தான் சொல்லப் போவதோ, அல்லது கிரகித்துக் கொண்டதோ தப்பாக இருக்கலாம் என்ற நினைப்பு.... ஆகையால் அவள் சொல்லலாமா வேண்டாமா என்று யோசிப்பதுபோல் உதட்டைக் கடித்தபோது சஸ்பென்ஸ் தாங்கமுடியாத திருமலை அவளை அதட்டினான்.

"என்ன நடந்ததுன்னு சொல்லுழா... ஏழுழா... பயப்படுறே... நான் இருக்கும்போது, நீ எதற்குப் பயப்படணும்... சும்மாச் சொல்லு..."

சந்திரா இப்போது தனக்குப் பயமில்லை என்பதை நிரூபிப் பதற்காகவே சொல்லப் போனாள். இதற்குள் அலங்காரி, முந்திக் கொண்டு பேசினாள்.

"மம்பெட்டிய கீழே போட்டுட்டு உட்காறேன் மணி... வயலுக்கு காலயிலயே போயிட்டியோ..."

"ஏழுழா சந்திரா... சொல்லேழுழா..."

"நானே சொல்லுதேன் ராசா.... எங்க மச்சான் மவன் துளசிங்கம், அவனைத்தான் ஒனக்குத் தெரியுமே.... சினிமா கிறுக்கன்னு.... ஏதோ ஒரு சினிமாப்படம் எடுக்கப் போறதைச் சொன்னான். உடனே நான்.... இந்த அத்ததான். நம்ம கோலவடிவு கதாநாயகியாய் நடிக்கணுமுன்னு சொன்னேன். ஒன் தங்கச்சி எனக்கு மருமவள் முறையாச்சே என்கிற உரிமையில சொல்லிப் புட்டேன்.... அப்படிச் சொன்னது அத்தைக்கு இப்போகூட தப்பாத் தெரியல... தப்புன்னா தப்புன்னு சொல்லு... இனிமேல் சொல்ல மாட்டேன்.... நேத்து ஒங்க வீட்டுக்கு நாலைஞ்சு வெள்ளச் சட்டைக் காரங்க வந்திருக்காங்களே.... யாரு ராசா அவங்க... பழனிச்சாமி அண்ணாச்சிய விலக்குத் தீர்த்து விவகாரம் பேச கூப்புட்டாங்களா... ஒங்கப்பா வழக்காளியா இருக்கதுல இந்த ஊரே பெருமப்படுது ராசா... உட்காறேன்..."

சந்திராவால் பொறுக்க முடியவில்லை. முட்டாளாகிக் கொண்டிருக்கிறோம் என்ற எண்ணம் வந்தது. சுய மரியாதைக்கு வில்லங்கம் ஏற்பட்டிருப்பது போன்ற அவமானம். அண்ணனிடம் கோபங் கோபமாய்ப் பேசத் துவங்கி, பிறகு அந்தப் பேச்சை அழுதழுது முடித்தாள்.

"நம்பாத அண்ணா... நம்பாத... அலங்காரி அத்த மழுப்புறாள்... சரி அவதான் புத்தியக் காட்டிட்டான்னா இந்த, துளசிங்கம் என்ன சொன்னான் தெரியுமா? நம்ம கோலவடிவு தமிழுக்கு தமிழ் கதாநாயகியாயும், இந்திக்கு இந்திக் கதாநாயகியாயும் இருக்காளாம்.... நான் தட்டிக் கேட்ட பிறகும் திமுறுல சொல்றான் அண்ணா..."

திருமலை வெட்டரிவாள் கையோடும், மண்வெட்டித் தோளோடும் துளசிங்கம் நின்ற இடத்தை நோக்கி நடந்தான். அவனோ, இவன் ஒரு தூசி என்பது போல், அலட்டிக்காமல் நின்றான். இப்போது இருந்த பெண்கள் கூட எழுந்து விட்டார்கள். சிலர் இருவருக்கும் இடையே போய் நிற்கப் போனார்கள். பிறகு, திருமலை கவிழ்த்திப் பிடித்த வெட்டரிவாளை நிமிர்த்திப் பிடிப்பதைப் பார்த்துவிட்டு, நடுங்கிப்போய் நின்றார்கள். ஒருத்தி ஊரில் போய்ச் சொல்லலாம் என்பதுபோல் இன்னொருத்தியைப் பிடித்திழுத்தாள்.

துளசிங்கத்தை நெருங்கிய திருமலை, போர்ப்பரணி பாடினான்.

"ஒன் மனசுல.... என்னடா நெனப்பு....?"

"அனாவசியமாய் பேசாதடா... ஒன்னால ஆனதைப் பாருடா..."

"என் தங்கச்சிய அவமானமாப் பேசுனதுமில்லாம திமுறா ஒனக்கு...."

"பாசத்துக்கு அடிமையாகிறவன் பைத்தியக்காரன்..... ஒனக்குப் பதில் சொல்லி என்னை அவமானப்படுத்த நான் விரும்பல... ஒன்னால ஆனதைப் பாரு... முதல் அடி ஒன் அடியாவே இருக்கட்டும்.."

திருமலைக்கு அவன் மூளை ஆணையிடாமல், கையில் இருந்த அரிவாள் ஆணையிடத் துவங்கியது. அவன் வலது கையால் அரிவாளைத் தூக்கிப் பிடித்து, இடது கையில் துளசிங்கத்தின் தோளைத் தொடப்போனான். துளசிங்கம் சற்றே விலகி, சினிமாப் பாணியில் சட்டையைக் கழட்டி, அதை திருமலையில் முகத்தில் வீசி, அரிவாளை மறைத்து, அவனை திசையறியாமல், திக்கு முக்காடாய் செய்யப்போனான். இதற்குள், அலங்காரி, திருமலைக்கு முன்னால் வந்து அவனைக் கையெடுத்துக் கும்பிட்டாள். மற்றப் பெண்களும், அந்தச் சமயத்தில், இருவருக்கும் இடையே உள்ள சின்ன இடைவெளியை இட்டு நிரப்பினார்கள். கோலவடிவு, அழப்போனாள். அங்கே ஓடிப்போய் அண்ணனைத் தடுக்கப் போனாள். ஆனால் 'பயமில்லாத' சந்திரா, வடிவை புல்லுக்கட்டைப் பிடிப்பதுபோல் தூக்கிப் பிடித்தாள். அலங்காரி, கும்பிட்ட கையை நிமிர்த்தாமலே, திருமலையிடம் கெஞ்சினாள்.

"சாமி சத்தியமாய் சொல்லுதேன்... ராசா... இந்த துளசிங்கம் பயல்... அத்தை மகளாச்சேன்னு சொம்மா விளையாட்டுக்குத்தான் சொன்னான்..... இந்தச் சந்திராவால இப்டி வினையாகுமுன்னு நெனச்சா... அவன் சொல்லியிருக்கவே மாட்டான்... அத்தப் பெண்ண கிண்டலா பேசுறது... மாமா மவனுவ எல்லாரும் செய்யுறதுதான... மணி... இதுக்குப் போயி..."

"இந்தப் பயலோட அப்பா... எனக்கு மாமா மொறதான் வேணும்... இதனால் இவன் தங்கச்சி புஷ்பமும், எனக்கு மாமா பொண்ணுதான்..... அதுக்குன்னு அவளப் போயி... நான் தூக்கிட்டு வரட்டுமா... இல்ல வயலு வரப்புக்கு போவும்போது, நானே அவளோட இடையில கையப் போட்டு டான்ஸ் ஆடலாமா... எதுக்கும் ஒரு வரைமுறை இருக்குல்லா..."

"துளசிங்கத்துக்காவ நான் மன்னாப்பு கேட்டுக்கிறேன்... ராசா... கொஞ்சம் பின்னால போப்பா..."

அலங்காரி திருமலையைச் செல்லமாகப் பின்னுக்குத் தள்ளினபோது, துளசிங்கம் சிறிது முன்னுக்கு வந்து சூளுரைத்தான்.

"நீ ஏன் சித்தி மன்னிப்புக் கேக்கே... இந்தாப்பா.. திருமலை... ஒன்னால என்ன செய்ய முடியுமோ... அதச் செய்... நாம ரெண்டு பேரும் பள்ளிக்கூடத்துல ஒண்ணாப் படிச்சோமேன்னு சும்மா இருக்கேன்... இல்லாட்டா இந்நேரம்..."

"ஓகோ.... அய்யா... என்னை புண்ணியத்துக்குத்தான் விட்டு வச்சிருக்கியோ... அதையும் பாத்துடலாம்..."

அலங்காரியால் ஓரளவு சமாதானப்பட்டுத் தணிந்த திருமலை, இப்போது அனல் கட்டையில் பிடித்த தீபோல் பீறிட்டு, அவளை ஒரு பக்கமாகத் தள்ளி விட்டுவிட்டு துளசிங்கத்தை நெருங்கினாள். அரிவாள் கையில் இருந்தாலும், அதனால் அவனை வெட்டத் தயங்கினான் திருமலை. துளசிங்கம் தொலைவில் சென்று, ஒரு பெரிய கருங்கல்லைத் தூக்கி வைத்துக் கொண்டு நின்றான். இவன் அவன் கழுத்துக்கும், அவன் இவன் தலைக்கும் ஒருவரை ஒருவர் நெருங்காமலே குறி வைத்தார்கள். எல்லாப் பெண்களும், "எம்மோ...

எம்மோ" என்று கூக்குரலிட்டு அந்த இருவரையுமே சுற்றிச் சுற்றி வந்தார்கள். காகங்கள் கத்தின. குருவிகள் கீச்கீச் என்றன... சந்திராவுக்கும், பயமெடுத்துக் கைகால் உதறியது. அந்தச் சமயத்தில், சந்திராவின் பிடியில் இருந்த கோலவடிவு அவளை உதறிவிட்டு ஓடி வந்தாள். பெண்கள் வட்டத்தில் இரண்டு பெண்களை இரண்டு கைகளாலும் தள்ளிவிட்டபடியே, அண்ணனுக்கு அரணாக நிற்பதுபோல், அவன் பக்கமாகத் திரும்பினாள். அப்படியும், அவன் தலை மறையாமல் இருப்பதைப் பார்த்துவிட்டு, குதிகாலில் நின்றபடி, அண்ணனின் தலையில் தனது கையைப் பரப்பி மறைத்தாள். துளசிங்கத்தை அலங்காரி பிடித்துக் கொண்டாள்... அவன் கையையும், அது பிடித்த கல்லையும் கீழே இழுத்தாள்.

முத்தம்மா, ரெண்டு குடும்பங்களையும் சேராதவள். ஆகையால், தான் பேசுவதே நியாயம் என்று நம்பி, அடித் தொண்டையில் குரலிட்டாள்.

"திருமலை அண்ணாச்சி... நீ நடந்ததை தீர விசாரிக்காம அடிக்கப் போறதும் தப்பு. துளசிங்கம்.... அண்ணாச்சி... நீ நடந்ததைச் சொல்லாததும் தப்பு... எல்லாத்தையும் விட பெரிய தப்பு... இந்தப் பக்கம் ஆம்புளையள இருக்க விடுறது..."

அலங்காரியும் அரசியல்வாதியானாள்.

"ரெண்டு பேருமே மாமா மச்சான்... ஒண்ணுக்குள்ள ஒண்ணு... கண்ணுக்குள்ள கண்ணு... ஒரு கண்ணு இன்னொரு கண்ணை முறைச்சா எப்டி... ஒரு கையி இன்னொரு கைய அடிச்சா எப்டி... ஒரு காலு.... இன்னொரு கால உதச்சா எப்டி..."

அலங்காரி இப்படியே பேசிக் கொண்டே போயிருப்பாள்... ஆனால், சந்திராவால் பொறுக்க முடியவில்லை... கோலவடிவக்காவை, அலங்காரி அப்படி விமர்சனம் செய்ததையும், துளசிங்கம் அப்படி அந்த விமர்சனத்திற்கு அழுத்தம் செய்ததையும், திருமலை தப்பு என்று ஏற்றுக் கொண்டு சண்டைக்குப் போனதால், தான் தப்பாகச் சொல்லவில்லை என்று சந்திரா நினைத்தாள். அதோடு திருமலை

அண்ணன், துளசிங்கத்தை அடிக்காமல் போய் விடுவானோ என்ற சந்தேகம்... அவன் துளசிங்கத்தைச் ஜெயித்தால்தான், தான் அலங்காரியைத் தோற்கடித்ததற்குச் சமம் என்று நினைத்தாள். இத்துடன் அவள் உடம்பில் ஓடிய இயல்பான கரும்பட்டையான் ரத்தம் கொதித்தது. கொஞ்ச நஞ்ச அமைதியை குரோதச் சூறாவளியாய் மாற்றப் போனாள்.

"எண்ணா... நான்தான் பெரிய வீராதிவீரன்னு இவனுக்கு நெனப்பு.... இந்த ஊரில எவனை வேணுமுன்னாலும் என்கிட்டே வரச் சொல்லுன்னு சவடால் அடிக்கான்..."

திருமலை துளசிங்கத்தை மீண்டும் பகையாக்கிப் பார்த்தான். அவள் அப்படிச் சொன்னது, இவனையே சவாலுக்குக் கூப்பிடுவது போல் தோன்றியது.... அரிவாளை எடுத்துக் கீழே எறிந்தான்... மண்வெட்டியைத் தூக்கிக் கீழே போட்டான்... வெற்றுடம்புடன் துளசிங்கத்தை முறைத்தபடியே சவாலிட்டான்.

"சினிமாவுல ஒருத்தன வீரனாக காட்டுறதுக்காவ... இருபது பேரை தெம்மாடியாய் காட்டிக் காட்டி, சினிமாக்காரனுவ நம்மை நாட்டையே கெடுத்துப்புட்டானுவ... இந்த இடம் சினிமா எடுக்கிற இடம் இல்ல... எங்க கரும்பட்டையான் வம்சத்து மூதாதையர் இளவட்டக் கல்லு தூக்குன இடம்... சிலம்பாடுன பூமி... வாறியா... ஒத்தைக்கு ஒத்தையா போட்டுப் பார்க்கலாம்..."

"சரி.... போட்டுப் பாத்துடலாம்... சினிமாவுல சண்டை கத்துக் கிட்டதால சொல்லல... எங்க செம்பட்டையான் குடும்பத்து ரத்தம் இந்த உடம்புல ஓடுறதால... சொல்லுறேன்... எப்போ வச்சுக்கலாம்... எந்தக் கிழமையில வச்சுக்கலாம்..."

"எப்போ என்ன எப்போ... இப்போ வச்சுக்கலாம்... நாளும் கிழமையும் பேடிப் பயலுக்குத்தான்..."

"யாருடா பேடி...."

"வேறயாரு... நீதான்..."

இருவரும் மீண்டும் மோதப் போனார்கள். இதற்கிடையே ஒரு இளம்பெண் ஓடோடி வந்தாள். அருகே இருந்த பருத்திக் காட்டில் இருந்து பாய்ந்து வந்தாள். திருமலையின் முன்னால் போய் நின்று, “ஒரு அடி நகர்ந்திரு... அப்புறம் தெரியும் சேதி” என்று எச்சரித்தாள்.

எல்லோரும், ‘வாராதது போல்’ வந்த அந்தப் பெண்ணையே பார்த்தார்கள். மாம்பழச் சிவப்பு. தக்காளி நிறப் புடவை. நாகப்பழக் கண்கள். அழுத்தம் திருத்தமான பார்வை. அனாவசியமான தோரணை. துள்ளும் கன்றுக்குட்டி மாதிரியான லாவகம். தன்னை மீறி எதுவும் நடந்துவிட முடியாது என்பது போன்ற குறுஞ்சிரிப்பு... அவள் தலையை ஆட்டி ஆட்டிப் பேசும்போது, கண்கள் ஊஞ்சலாட, கம்மல்கள் வெளிச்சம்போட, இன்னதென்று சொல்ல முடியாத அதே சமயம் எல்லோராலும் இனங்காணக்கூடிய கவர்ச்சிக்காரி; பீடித் தட்டை குழந்தையைச் சுமப்பதுபோல் இடுப்பில் வைத்து பிடித்தபடி ஒயிலாக நின்றாள்.

அவளையே பார்த்த பெண்கள், அந்த நேரத்திற்குள் அந்தத் தடியன்கள் இருவரும் ஏதாவது செய்துவிடப்படாதே என்பதுபோல், அவர்களையும் பார்த்தார்கள். அவன்களோ, இவள்கள் தங்களைப் பார்த்தால்தான் சண்டை வரும் என்பதுபோல், முன் வைத்த கால்களை பின் வாங்காமல், அதே சமயம் உடம்புகளைப் பின்னிழுத்த படி நின்றார்கள். திருமலை, பத்திரகாளி வந்ததும் கோபம் தணிந்த வீரபத்திர சாமி போல, துளசிங்கத்தை முறைத்த கண்களை, அவள் மேல் போட்டபடியே பேசினான்.

“நீ இதுல தலையிடாதே ரஞ்சிதம்... இந்தப் பய என் தங்கச்சி கோலவடிவ அவமானமாய் பேசியிருக்கான்..”

“அப்டி என்ன பேசிட்டார்....”

“என் தங்கச்சி சினிமாவுல கதாநாயகியாய் நடிக்கலாமாம். தமிழுக்கு தமிழ் கதாநாயகியாம். இங்கிலீசுக்கு இங்கிலீசு கதாநாயகியாம்....”

“எண்ணே... இங்லீஸ்னு சொல்லல... இந்தின்னு சொன்னான்....”

“ஒரு வயசுப் பொண்ணுகிட்ட பேசற பேச்சா இது... இவன நான் விடப் போறதில்ல... நீ பேசாம அந்தப் பக்கமா போ...”

“பொட்டப்பிள்ளியள கிண்டல் பண்ணுறவன விடப்படாதுன்னா, ஒம்மையும் விடப்படாது.”

“நீ என்னே சொல்லுறே...”

“நீரே..... நெனச்சிப் பாரும்.”

“டேய் துளசிங்கம்... இந்த ரஞ்சிதம் அடுத்த சாதிப் பொண்ணா இருந்தாலும் நியாயம் பேசுறவள். அவள் முகத்துக்காவத்தான் நான் ஒன்னை விட்டு வைக்கேன்...”

“இதே வார்த்தைய நானும் சொன்னதா நெனச்சுக்க...”

“ஆனால் இனும ஒரு தடவ என் தங்கச்சியப் பத்தி அப்டிப் பேசினே... ஒன்னை விடப்போறதில்ல...”

“எவண்டா இவன் கிறுக்கன்... ஊருல எனக்கு என்ன வேற வேல வெட்டி இல்லியா...”

“சரி இதோட பேச்சை விடுங்க... மகனே துளசிங்கம் பழையபடி உட்காரு.... மருமவனே திருமல... நீயும் உட்காரு... எப்பாடா எனக்கு இப்பதான் போன உயிரு திரும்ப வந்தது... ஏய் பொண்ணு ரஞ்சிதம், அது என்ன பிள்ள, ‘நீரே நெனச்சிப் பாரும்’.”

“யார்கிட்ட சொன்னாலும் ஒங்ககிட்ட சொல்லுவேனா...”

“சரி... லேசா விடுகதை மாதிரிச் சொல்லு...”

“எம்மாடி நான் ஊரச் சொன்னால் பேரக் கண்டுபிடிப்பீக... பேரச் சொன்னால் ஊரைக் கண்டு பிடிப்பீக... பொல்லாத ஆளாச்சே நீங்க...”

“சும்மா பவுசு பண்ணாம சொல்லும்மா...”

“என்னைக்குமே கைய மூடி வச்சாத்தான் மரியாதி.... திறந்து காட்டினா வெறுங்கையுன்னு ஆயிடும்...”

"எப்பா நீ கஷாயம் தட்டுற உரலையே கஷாயம் போட்டு குடிக்கிறவளாச்சே."

"குடிக்கிறதுன்னதும் ஞாபகம் வந்துட்டு... ஏய்யா துளசி... திருமலை... பெரிய வீராதிவீரங்க மாதிரி துள்ளுறிய.... பட்டப்பகலுலே பட்டச்சாராயம் காய்ச்சி ஊரைக் கெடுக்கிறான் அந்த பெருமாள் சாமி.... அவனைத் தட்டிக் கேட்கப்படாதா..."

"எங்க சாதி ஆம்புளைய அவன் இவன்னு பேசப்படாது...."

"ஒங்க சாதியா இருந்தாலும், எங்க சாதியா இருந்தாலும்... எவன் காய்ச்சினாலும் குடி... குடியக் கெடுக்குமுல்லா.. ஒங்க சாதி.... எங்க சாதின்னு மனுஷங்களில இருக்கு... ஆனால் மனுஷனாய் இல்லாத இந்த பெருமாள்சாமி காய்ச்சுற கருவேலம்பட்டையில சாதி இல்ல... யார் எக்கேடு கெட்டாலும் தான் மட்டும் சம்பாதிக்கணும்... என்கிற சாதிதான் இருக்குது..."

எல்லாப் பெண்களும் ரஞ்சிதத்தை வியந்து பார்த்தார்கள். ஆணவம் இல்லாத தன்னம்பிக்கை.... பிச்சைக்காரத்தனம் இல்லாத அடக்கம்... வாயாடி என்றோ ஊமை என்றோ சொல்ல முடியாத அளவிற்கு வரம்புகட்டி நிற்பவள்... அத்தனை பெண்களும் இயல்பு நிலைக்கு வந்தார்கள். கோலவடிவுக்கு ரொம்ப ரொம்ப சந்தோஷம்.... ஆனால் சந்திரா அலங்காரியிடம் தோற்றுப் போனதாக நினைத்தாள். இந்த ரஞ்சிதத்தை ஜெயித்து, அந்தத் தோல்வியைச் சரிகட்டப் போவதுபோல் கேட்டாள்.

"எம்மாளு... ரஞ்சிதம்.... எங்கண்ணாச்சிய தட்டிக் கேட்டது மாதிரி துளசிங்கம் மச்சானை ஏன் தட்டிக் கேக்கலே... எங்கண்ணாச்சின்னா இளக்காரமா..."

"நீயே அவரத் தடுத்திருக்கணும்... நீ செய்ய வேண்டியதத்தான் நான் செய்தேன்."

"இவளா... இவள்... சும்மா கிடக்கிற சங்க ஊதிக்கெடுப்பா... நம்ம ரஞ்சிதம் மட்டும் வராட்டா... குத்துப்பழி வெட்டுப்பழி வந்திருக்கும்.... ஒனக்கென்ன... டவுன்ல ஆஸ்பத்திரியில அண்ணன் கிடந்தா.... அவரப் பார்க்கிற சாக்குல டவுனுக்குப் போகலாமுன்னு நெனச்சிருப்பே....

ஆனாலும் இந்த வயசுல இந்தப் புத்தி ஆவாதும்மா... மருமவனே திருமல... அத்தை சுத்தன பீடியக் குடிச்சுப் பாரேன்.."

அலங்காரி 'பேலன்ஸ்' செய்து பேசியதால்.... திருமலை சும்மாவே நின்றான். துளசிங்கம் அங்கிருந்து, தான் முதலில் போனால் அது தோல்வியாகும் என்று அவனே ஒரு அனுமானம் போட்டுக் கொண்டவன் போல், அங்கேயே நின்றான். அண்ணாச்சி, அலங்காரியைத் தட்டிக் கேட்காததில் ஆத்திரப்பட்ட சந்திரா, எழுந்தாள். "இனுமே நீங்களும் வேண்டாம்... ஒங்க வாடையும் வேண்டாம்" என்று சொன்னபடியே பீடித்தட்டைத் தூக்கிக் கொண்டு நடந்தாள். பிறகு, திரும்பி வந்து, கோலவடிவின் கையைப் பிடித்துத் தூக்கினாள். அவள் அங்கிருந்து போக விரும்பாதவள் போல், சந்திராவின் கையைப் பிடித்துக் கீழே உட்காரும்படி இழுத்தாள். உடனே சந்திரா, "ஒனக்காவ நான் சண்டை போட்டு எனக்குத்தான் கெட்டப்பேரு... உனக்கும் கதாநாயகியா நடிக்க ஆச" என்று சொன்ன படியே ஓடினாள். சிறிது நேரம் அங்கிருந்த கோலவடிவு, அப்படி ஒரு ஆசை தனக்கில்லை என்பதைக் காட்டும் வகையில், "ஏய் சந்திரா... சந்திரா... நில்லுழா" என்று கத்தியபடியே ஓடினாள்.

காகங்கள் மீண்டும் அந்த ஆலில் அமர்ந்தன. சிட்டுக் குருவிகள் பண்ணையாட்கள் போல், காகங்களிடம் இருந்து சிறிது மரியாதையான இடைவெளியில் உட்கார்ந்தன. ஒரு அணில், சிட்டுக் குருவியை இடம் கேட்டுத் துரத்தியது. ஒரு காகம், அந்த அணிலை இரை கேட்டுத் துரத்தியது. ஆனாலும் எந்தப் பறவைக் கொலையும் விழவில்லை. பெண்கள் மத்தியில் மீண்டும் முனகல் பாட்டுக்கள்... துளசிங்கமும், திருமலையும் அந்த பெண்கள் கூட்டத்தின் துவாரக பாலகர்கள் போல் நின்றார்கள். ரஞ்சிதம், முத்தம்மாவின் பக்கத்தில் உட்கார்ந்து அவளுக்குப் பீடி சுற்றிப் போட்டாள்.

இந்தச் சமயத்தில், பீடி இலையையும் தூளையும் இழந்த தாயம்மாவும், காஞ்சானும் அங்கே ஓடி வந்தார்கள். இந்தக் காஞ்சானுக்கு ஐம்பது வயதுக்கு மேல் இருக்கும். அவர் உடம்பில் சட்டை மாட்டி எவரும் பார்த்ததில்லை. ஒரு துண்டு மட்டும் தோளில் கிடக்கும். அதுவும் கைக்குட்டை மாதிரியான துண்டு. இப்படிச் சட்டை

இல்லாமல் வெயில்பட்டு, அவர் கறுத்த உடம்பு, சூரிய ஒளியைப் பிரதிபலிக்காமல் உள்வாங்கிக் கொண்டதால், அவர் உடம்பு காய்ந்த கருவ மரம் போல் காட்சி காட்டும். அவருக்குக் கையளவுகூட வயிறு கிடையாது... முன்பக்கமும், பின்பக்கமும் ஒரே பக்கம் என்பது போன்ற 'ஒட்டியான' வயிறு. போதாக் குறைக்கு உடம்பு லேசாய்க் கூன் போட்டு உள்வாங்கி இருக்கும். இதனால் இவரை, ஊரில் காஞ்சான் என்பார்கள். ஆனாலும் இந்த மனிதர் வக்கணையில்தான், காஞ்சான். வசதியில் ஏகப்பட்டவர்.

தாயம்மா, காஞ்சானுக்கு எதிப்புறமாய் நின்றபடியே முறையிட்டாள்.

"பாருங்க... இவர் மகன்தான் என் பீடித்தட்ட தட்டி விட்டுட்டுப் போனான்.... இலைக்கும் தூளுக்கும் காசு கேட்டா... என்னென்னவோ பேசுறார்."

"எனக்கு கறிவேப்புல மாதிரி இருக்க ஒரே ஒரு பயலயும் ஆல மரத்துல இருந்து கீழே தள்ளிப் போட்டதுமில்லாம காசு கேட்குறியோ... காசு... இப்ப என் பையனுக்கு வருமப்பிடி மாதிரி வந்துட்டு... வைத்தியர் கிட்ட காட்டணும்... தாயம்மாகிட்ட காசு வாங்கித் தாறியளா... இல்ல நானே வசூலிச்சுக்கட்டுமா..."

தாயம்மா புலம்பினாள்.

"பாருங்க இந்த மனுஷன் பேசுற அநியாயத்த... நான் சட்டம் பேசறேன்னு ஏற்கனவே பீடி ஏஜெண்ட் துரைச்சாமி எனக்கு நாள் பார்த்துக்கிட்டு இருக்கான். இப்போ கொடுத்த இலைக்கும் தூளுக்கும் பீடி போடாட்டா. அப்புறம் பீடிய சுத்த முடியாமப் பண்ணிடுவான்...."

"இப்போ என் பயல் கால் பிசகியோ.... கை பிசகியோ.... கட்டுலுல கிடக்கான். அதுக்கு அவளை பதில் சொல்லச் சொல்லுங்க.... அஞ்சு பத்து ரூபாயாவது வேணும்...."

அலங்காரி விலக்குத் தீர்த்தாள்.

"மச்சான் அப்படிச் சொல்லப்படாது. அவளுக்கு ஏதாவது கொடுக்கணும்...."

"அப்போ என் பையன் ஒத்தக் கையி பிசகி கிடக்கானே..."

"பிசகுன கைய ஒடிச்சிடும்... சரியாப் போயிடும்..."

"ஆளப் பாரும்.... ஆமா.... மாமா.... ஒம்மா கல்யாணத்துலயாவது சட்டை போட்டுட்டுப் போனீரா...."

துளசிங்கம் முதலாவதாகவும், திருமலை இரண்டாவதாகவும் காஞ்சானைக் கிண்டல் செய்ததைக் கேட்ட ரஞ்சிதம் கருத்துத் தெரிவித்தாள்.

"இனிமேல் நீங்க ரெண்டுபேரும் இப்டித்தான் பொதுக் காரியத்துல ஒண்ணா நிக்கணும்.... தாயம்மாவுக்கு அவருகிட்ட ஏதாவது வாங்கிக் கொடுங்க.... இனிமேலாவது சண்டையை விடுங்க... சரி அவரு கிட்ட வசூலிச்சு..."

காஞ்சான் வசூல் பேச்சை மாற்ற நினைத்துப் பேசினார்.

"ஏன்.... இவனுகளுக்குள்ள என்ன ஆச்சு...."

ரஞ்சிதம் எவ்வளவோ, கண்ணடித்துப் பார்த்தும், வாடாப்பூ கேட்கவில்லை. காஞ்சானிடம், நடந்ததை அப்படியே ஒப்பித்தாள். தாயம்மாவுக்கு நஷ்டஈடு கொடுக்கும்படி சொன்ன அலங்காரி மீது கோபப்பட காஞ்சான், சும்மாக் கிடந்த சங்கை, ஊதிக் கெடுத்தார். பேச்சை திசை திருப்பியதுமாச்சு... அலங்காரிக்கு பதிலடி கொடுத்தது போலவும் ஆச்சு...

"எம்மா... அலங்காரி... எங்க செம்பட்டையான் குடும்பமும்... இவங்க கரும்பட்டையான் குடும்பமும் தாயா பிள்ளியா இருக்கது..... ஒனக்குப் பிடிக்கலியா ஒன் சோலிக் கழுதய பாத்துட்டு இருக்க வேண்டியதுதான.... ரெண்டு குடும்பத்தையும் உண்டு இல்லன்னு ஆக்கிடாத தாயி... சரி... நான் வாறேன்.... என் மவனுக்கு ஒத்தக் கையி...."

அலங்காரியின் முகம் சுண்டியது.... மனதுக்குள் படிந்த நிழல் கண்ணுக்குள் இருளானது. கையில் இருந்த பீடி இலையை, கோபங் கோபமாய் கிழித்துப் போட்டாள்.

# 3

அந்த வீடு வெளியே பார்ப்பதற்கு 'அப்பாவி' மாதிரி தெரிந்தாலும் உள்ளே அசகாயசூரத்தனமாய் இருக்கும். இரண்டு பக்கமும் வியாபித்த வெளித் திண்ணைகளைத் தாண்டி வாசலைத் தாண்டிப் போனால் பெரிய முற்றம். ஒரு பக்கம் சைக்கிள்களும் மோட்டார் பைக்கும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இன்னொரு பக்கம் ஒடுங்கிய ஒரு பாதை வழியாகச் சென்று ஒரு கதவை இழுத்தாலோ திறந்தாலோ இன்னொரு மிகப்பெரிய ஓட்டுக் கொட்டகை. அதில் பத்து பதினைந்து பால் மாடுகள்.... அவற்றில் நான்கு ஜெர்சிகள். கொட்டகைக்கு அருகே சாண எரிவாயு கிடங்கு... அவற்றைப் பயன்படுத்தி மின்னும் மங்கலான மின்விளக்குகள்.

பழனிச்சாமி, வீட்டின் விசாலமான வராண்டாவில் ஒரு தேக்குக் கட்டிலில் எந்தப் புராண நூலையோ படித்துக் கொண்டிருந்தார். அவர் மனைவி பாக்கியம், அவருக்கு எதிரே தரையில் உட்காந்து, எதையோ புடைத்துக் கொண்டிருந்தாள். வெளியே இருந்து சந்திராவும், கோலவடிவும் வந்து உள்ளறைக்குள் போனார்கள். சிறிது நேரத்தில் இருவரும் வெளியே வந்து முற்றத்தில் ஒரு பாயைப் போட்டு அமர்ந்தார்கள்... சந்திரா, சுவரில் சாய்ந்தபடியே பீடி சுற்றும் கலையைக் கோலவடிவிற்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாள். பழுப்பு இலய... எடுக்கப்படாது... வெட்டும்போது கத்தரிய ஆட்டப்படாது... சுருட்டும்போது... அடி பெரிசாயும்... நுனி சிறிதாயும் இருக்கணும்- அப்டில்ல... இப்டி...

மத்தியான வேளை.

வைரப்பட்ட உடம்பில் 'தங்கப்பட்ட' கழுத்தைச் சாய்த்து வைத்த பழனிச்சாமி, கட்டிலின் பக்கம் போனார். அறுபது வயதுக்காரர். அடாவடியில்லாத பார்வை. வயிறும் மார்பும் ஒரே மாதிரி இருந்தன. பற்கள் தடித்திருந்தாலும், வெள்ளை வெள்ளையாக மின்னின. அணில்

வால் மாதிரியான லேசாய் வெள்ளைப்பட்ட கறுப்பு மீசை... மாநிற மேனி... உருண்டு திரண்ட கண்கள். மொத்தத்தில், அவரைப் பார்த்தால், ஒரு பயபக்தி ஏற்படும்.

திடீரென்று நான்கைந்து பேர் திபுதிபு என்று வந்தார்கள். ஒருவர் மட்டும் கட்டிலில் உட்கார்ந்தார். இன்னொருவர் அதில் உட்காரப் போனார், பிறகு என்ன நினைத்தாரோ, அந்தக் கட்டிலுக்கு எதிரே கிடந்த நாற்காலியில் உட்கார்ந்தார். எதிர் நாற்காலியில் உட்கார்ந்திருந்த 'குள்ளக் கத்தரிக்காய்' ராமசாமி பீடிகையோடு பேசினார்.

"இந்தச் சின்னப்பய மக்கள் சின்னத்தனமாய் போயிட்டாங்க... வரவர மட்டு மரியாதி இல்லாமப் போச்சு..."

"மட்டு மரியாதி இல்லாட்டா போட்டும்... பெரியவிய சொல்லுறதக் கேட்கணுமுல்லா."

"மட்டு மரியாதி இருந்தா தானே... பெரியவய சொல்லுக்கு மதிப்பு கொடுக்கணும் என்கிற நெனப்பு வரும்..."

பழனிச்சாமி, அவர்களிடம் வாய்விட்டுக் கேட்காமல் கண் விட்டுப் பார்த்தார். 'குள்ளக் கத்திரிக்காய்' ராமசாமி, காளை மாடு வாலை ஆட்டுவது மாதிரி தலையை ஆட்டிக் கொண்டே சொன்னார்.

"நம்ம காளியம்மன் கோவிலயும், பேச்சியம்மன் கோயிலாக்கணுமுன்னு பாக்காங்க... பக்கிப் பயலுவ..."

கட்டிலில் இருந்த பழனிச்சாமியின் சின்னம்மா மகன் அருணாசலம், ராமசாமியை விரட்டினார்.

"வெத்திலயத் துப்பிட்டு.... விளக்கமாச் சொல்லேமில... மாடு புல்லை சுவைக்கது மாதிரி வெத்திலய இப்டியா திங்கது... ஆதியோட அந்தமாச் சொல்லு..."

"சொல்லுதேன். பழனிச்சாமி அண்ணாச்சி... கோபப்படாமக் கேக்கணும்.... நம்ம குடும்பத்துச் சின்னப்பய மொவனுவ, இந்த ஆடில

காளியாத்தாவுக்கு அம்மன் கொடை கொடுக்கயில... டெக்குல சினிமா.... நான் சொல்லல... சின்னப்பய மவனுவதான் டெக்குல சினிமாப் படம் போடணுமுன்னு சொல்லுதாங்க... 'நாம பரம்பரை பரம்பரையாய் அம்மனை பயபக்தியோட கும்புடுறவங்கடா... வீடியோ சினிமா வேண்டவே வேண்டா'ன்னு சொன்னேன். கேக்க மாட்டேன்னு ஒத்தக் காலுலயே நிக்காங்க... காலம் கலிகாலமாப் போச்சு."

பழனிச்சாமி, நிமிர்ந்து உட்கார்ந்தார். கட்டிலில் இருந்து எழுந்து முற்றத்திற்குப் போய் ஒரு ஓரமாய் காறித் துப்பிட்டுக் கட்டிலுக்கு வந்தார். நிதானமாகக் கேட்டார்.

"அப்புறம் என்ன கேட்டாங்க.. ரிக்கார்ட் டான்ஸ்.... கேட்டிருப்பாங்களே... வில்லுலயும், பொம்புள வில்லு வேணுமுன்னு சொல்லியிருப்பாங்களே... எவளாவது சினிமா நடிகை கோவில் கொடியை ஏத்தி வைக்கணுமுன்னும் சொல்லியிருப்பாங்களே...."

"அண்ணாச்சி நேரில கேட்டது மாதிரியே சொல்றியளே... அப்படியும் கேட்டாங்கதான்."

பழனிச்சாமி மனைவி பாக்கியம், முறத்தைக் கீழே வைத்துவிட்டு, ராமசாமியைப் பார்த்து சிரித்தபடியே கேட்டாள்.

"ஏய் கொழுந்தா... ஒங்க அண்ணாச்சி குணம் தெரிஞ்சும் நீ பாட்டுக்கு பேசிக்கிட்டே போற பாரு... அவிய இழுத்து இழுத்து கேட்கிறதுல இருந்தே ஒன்னை எடக்கு மடக்கில சிக்க வைக்கது தெரியல..."

"நீ செத்தே சும்மா இரு பாக்கியம்... டேய் ராமசாமி... எந்த செறுக்கி மகன்ல... இப்படிக் கேட்டது...? போகிற போக்கைப் பார்த்தால் அம்மனையே வீடியோ படத்துல நடிக்கச் சொல்லுவாங்க போலுக்கு... நீ அவனுவளுக்கு என்ன பதில் சொன்ன..."

"ஒங்களக் கேட்டுச் சொல்றேன்னு சொன்னேன்.."

"எல்லாமே என்னக் கேட்டுத்தான் செய்யுறியோ... இவளும் நம்ம பொம்பளப் பிள்ளியளும் இல்லாட்டா ஒன்ன நல்லாக் கேட்பேன்..."

"சும்மாக் கிடங்க... ஒங்கள மீறி போவாங்களா... எப்பா மாருங்களா... அவிச்ச மொச்சக் கொட்டை வேணுமா... தாளிச்ச ஏழலைக் கிழங்கு வேணுமா..."

"ரெண்டையும் கொண்டு வாங்களேன்.... மயினி..."

பாக்கியம் வீட்டுக்குள் போய்விட்டாள். கட்டிலில் உட்கார்ந்திருந்த அருணாசலம் கேட்டார்.

"நீங்க என்ன அண்ணாச்சி சொல்லுறிய...."

"ஒன்னை தோல்வாயன்னு ஊர்ல சொல்லுறது சரியா.... இருக்குடா.... இதுல சொல்றதுக்கு என்ன இருக்கு. ஒங்களுக்கே தெரியவேண்டாம்.. அடிமுடி தெரியாத அம்மன் நம்ம அம்மன்... இந்த சட்டாம்பட்டி தோன்றதுக்கு முன்னாலயே இருக்கிற அம்மன் நம்ம அம்மன்... கண்கண்ட தெய்வம்... கூப்பிட்ட குரலுக்கு பூவப் போட்டோ கெளளி மூலமோ குரல் கொடுக்கற தாய். அந்தத் தாய அவமானப் படுத்தறது மாதிரி வீடியோ படமுன்னும், ரிக்கார்ட் டான்சும் போடணுமுன்னா என்னடா அர்த்தம்... இதைவிட அம்மன் கோவில இழுத்து மூடலாம்..."

"செம்பட்டையாம் குடும்பத்து பயலுவ... வீடியோ படம் போடப் போறாங்களாம்... டான்ஸ்காரியக் கூட்டி வரப் போறாங்களாம்.... நாம மட்டும் சும்மா இருக்காலாமான்னு நம்ம குடும்பத்துச் சின்னப்பய மவனுவ...."

"செம்பட்டையானுவளும், நாம் கரும்பட்டையானும் ஒண்ணாடா... அவன் வீடியோ டான்ஸ் வச்சா... நாம் வைக்கணுமுன்னு கட்டாயமா... போட்டி நல்லதாகவும் இருக்கணும்... நல்லதுலயும் இருக்கணும்... கெட்டதுல வந்தால் கெட்டதுலதான் முடியும்..."

"நம்ம குடும்பத்து சின்னப்பய மவனுவ...."

"எந்தச் செறுக்கி மவனாவது பேசணுமுன்னா எங்ககிட்ட வந்து பேசச் சொல்லு... ஒங்க ஆசையை அவங்க மூலம் சொல்லப்படாது...."

"அய்யோ அண்ணாச்சி... நாங்களும் ஒங்கள மாதிரி பழைய காலத்து ஆட்கள்ாச்சே, நெனச்சிகூட பார்ப்போமா.... சின்னப்பய மவனுவதான்..."

இதற்குள் பாக்கியம், கிண்ணம், தாலா, தட்டு ஆகியவற்றில் மொச்சைக் கொட்டையையும் ஏழலைக் கிழங்குத் துண்டுகளையும் கொண்டு வந்து, ஆளுக்கு ஒன்றாகக் கொடுத்தபடியே, அபிப்ராயம் சொன்னாள்.

"எந்தப் பய என்ன சொன்னான்னு திட்டவட்டமாச் சொல்லு... ஒங்க அண்ணாச்சி திட்டம் பண்ணிக்குவாரு...."

"வேற யாரு.... இந்தச் சின்னப்பய மவனுக்குத் தலைவரே.. நம்ம திருமலைதான்."

மோட்டார் பைக்கைத் துடைத்துக் கொண்டிருந்த திருமலை, வேஸ்ட் துணியைப் பார்க்கிற சாக்கில் தந்தையைப் பார்த்தான்... அவர் மனைவியிடம் பதில் சொன்னார்.

"இந்தா பாக்கியம்.... அவன்கிட்டே கோவில் பேரேட்ட கொடுத்துடு. டான்ஸோ, சினிமாவோ எது வேணுமுன்னாலும் போட்டுக்கட்டும்.... தலை இருக்கிற இடத்துக்கு அவனுக்கு கழுத்து வந்துட்டு.... அதனால இனிமே என் தல, கழுத்து இருக்கிற இடத்துக்குப் போய் குனியணும்... எடுத்தா பிள்ள... கோவில் கணக்கு வழக்கு பேரேட்ட...."

திருமலை, மோட்டார் பைக் சக்கரத்திற்குள் முகத்தை மறைத்துக் கொண்டே முனங்கிப் பேசினான்.

"நான் ஒண்ணும் அப்டிப் பேசல... சின்னய்யாகிட்ட அப்டி ஒரு அபிப்ராயம் இருக்குதுன்னுதான் சொன்னேன்... அதுவே என் அபிப்பிராயமுன்னு சொன்னனா... ஏய்யா ஒம்ம ஆசைக்கி என்ன மாட்ட வைக்கியரு..."

இதற்குள் சந்திராவின் தந்தை அருணாசலமும், அம்மா பேச்சியும் அங்கே வந்து, 'முற்றத்தில்' நின்றார்கள். பிறகு, சந்திரா, கோலவடிவு உட்கார்ந்திருந்த பாயில், அப்பாக்காரர் உட்கார்ந்து இருந்தார்.

அம்மாக்காரி உள்ளே போனாள். மகன் திருமலை, இன்னும் தன்னை மீறிப் போகவில்லை என்பதை மனசுக்குள் ரசித்துக் கொண்ட பழனிச்சாமி, இன்னொன்றைக் கேட்டார்.

"ஆலமரத்துப் பக்கம் ஒனக்கும் துளசிங்கத்துக்கும் ஏதோ தகராறுன்னு காஞ்சான் சொன்னாரு... என்ன விஷயம்..."

"சொல்லும்படியா ஒண்ணுமில்ல... சும்மா விளையாட்டுக்கு பேசிக்கிட்டு இருந்தோம்."

ஒரு பீடியை உருட்டி, தூளைத் திணித்து, குச்சியால், அடைத்து விட்டு, அதை நூலில் எப்படிக் கட்ட வேண்டும் என்று கோலவடிவுக்கு மீண்டும் சொல்லிக் கொடுக்கப்போன சந்திரா, அந்த பீடியைக் கீழே போட்டாள்.... பீடித்தட்டை காலால் உதைத்துக் கீழே தள்ளியபடியே, வராண்டாவிற்கு எதிரே நின்றபடி இதமாகவோ, மிதமாகவோ பேசாமல் இரண்டிற்கும் இடைப்பட்ட குரலில் சொன்னாள்.

"அண்ணா... பொய் சொல்லுதான்... பெரியப்பா... கரும்பட்டையான் குடும்பத்து அலங்காரி, நம்ம கோலவடிவு துளசிங்கம் பயலோட கதாநாயகியாய் நடிக்கணுமுன்னு இளப்பமாய் சொல்லுதா... துளசிங்கம் என்னடான்னா கோலவடிவு தமிழ்க்கு தமிழ் கதாநாயகியாவும், இந்திக்கு இந்திக்காரியாகவும் இருக்கான்னு வீம்புக்குச் சொல்லு தான்... இவன்கிட்ட நான் எல்லாத்தையும் சொன்னால், திருமலை அண்ணன் துள்ளுறது மாதிரி துள்ளிட்டு எவளோ.... ஒரு மூதேவி பேச்சக்கேட்டு, இடிச்ச புளி மாதிரி நிக்கான்..."

பழனிச்சாமியின் தம்பியும், சந்திராவின் தந்தையுமான அருணாசலத்திற்குக் கரும்பட்டையான் குடும்ப ரத்தம் கொதித்தது. அண்ணன் மகனைச் சாடினார்.

"நீயல்லாம் எதுக்குல இந்த உடம்ப வச்சுக்கிட்டு இருக்கணும்...? நம்ம பொண்ண செறுக்கி மவன் சினிமாக்காரியா நெனச்சி பேசியிருக்கான். நீ பாட்டுக்கு வந்துட்ட பாரு.... நீ கரும்பட்டையான்னு

சொல்லிக்கதுக்கு வெட்கப்படணும்... ஒன்னை என் அண்ணாச்சி மகன்னு சொல்றதுக்கு நான் வெட்கப்படணும்..”

அங்கே இருந்தால், இன்னும் ஏதாவத பேச வேண்டியதுவரும் என்றும், அதைத் தவிர்க்க நினைத்தவர் போலவும், அருணாசலம், வீட்டுக்கு வெளியே வந்தார். அந்தச் சமயம் பார்த்து, அந்த வீட்டுக்கு அருகே ஓடிய வண்டிப்பாதை வழியாய் போன அலங்காரியைப் பார்த்து விட்டார். அவளை இதமாக வரவழைத்து, பலமாக திட்டித் தீர்ப்பது என்று தீர்மானித்தார்.

“ஏழா... அலங்காரி... கொஞ்சம்.... இங்க வா...”

அலங்காரி மாராப்புச் சேலையை இழுத்து மூடி, இடுப்பில் இருந்து முழங்கால் வரை புடவையைத் தட்டி விட்டபடி சாதாரணமாக வந்தாள். வாசல் படிக்கட்டில் நின்ற அருணாச்சலம், அவள் நெருங்க நெருங்க, தனது பற்களை நெருக்கிக் கடித்தார். ஆசாமிக்கு நாற்பது வயதிருக்கும். அவர் உடம்பில், ரத்தத்திற்கு பதிலாக சாராயமே ஓடவேண்டும். நரிக்குறவர் மாதிரி உறுதியான தோற்றம்... குத்திட்ட மீசை... மதுரையில் ஏதோ ஒரு ஆஸ்பத்திரியில் போட்டு, எப்படியோ சாராயப் பழக்கத்தை அவரிடமிருந்து பிரித்து மூன்று மாசமாகிறது. ஆனால் நேற்றில் இருந்தே லேசான குடி ஆசை... இன்றைக்கோ அதுவே பலமாகிவிட்டது. அந்த ஆசையை நிறைவேற்றினால் எல்லோரும் நாயே பேயே என்று பேசுவார்கள் என்பது தெரிந்து வெறும் பல்லைக் கடித்துக் கொண்டிருந்தார். இப்போதோ அலங்காரி கிடைத்து விட்டாள்.

அருணாசலத்தின் குணாதிசயங்களைத் தெரிந்து வைத்திருந்த அவர் மனைவி பேச்சியம்மா, ஆசாமியை நோட்டம் போடுவதற்காக விடுவிடுவென்று வாசல் படிக்கு வந்து, அவரது தார்ப்பாய்ச்சிய வேட்டியைப் பிடித்து உள்ளே இழுத்தாள்... வெளியே அவர் அலங்காரியை ஏடாகோடமாகப் பேசிவிடக்கூடாது என்பதைவிட, இந்த அலங்காரியைத் தானே விரட்ட வேண்டும் என்ற எண்ணம். இவளும், அலங்காரியும் ஒரே தாய்க் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்.., பழைய பகை ஒன்று கணக்கு முடிக்கப்படாமல் இருந்தது.

அருணாசலம் மனைவியின் வலுவால் இழுக்கப்படாமல், வேட்டி அவிழ்ந்துவிடும் என்ற அச்சத்தால் அப்படியே நின்றார்... அதைப் பார்த்த அலங்காரியும், குறுஞ்சிரிப்போடு வந்தாள். அருணாசலம், அவளிடம் நெருங்கி வந்தார். “என்னழா... செறுக்கி பலவட்ற” என்ற வசவு மொழிகளைச் சுமந்து நின்ற அவரது வாயை, அலங்காரி பார்த்த பார்வையும், சிரித்த சிரிப்பும், அடைத்துவிட்டன.... ஏதோ ஒரு கிறக்க சுகத்தில், என்ன பேசுவது என்று தெரியாமல் அவர் விழித்தபோது, அவரது அருமை மனைவி பேச்சியம்மா, முன்னேறினாள். வெடவெடத்த உடம்புக்காரி.... தலைமுடி நான்கு பக்கமும் மொக்கையாக நிற்பதால் அவளை ‘பம்பை’ என்பார்கள். எவ்வளவு படி எண்ணெய் தேய்த்து, எவ்வளவு பெரிய சீப்பால் வாரினாலும், அவள் தலையில் முன்பக்க, பின்பக்க தலைமுடியை ஒன்றும் செய்துவிட முடியாது. அசல் கரடி முடி...

‘பம்பை’, அலங்காரி முன் வந்து அரட்டினாள்.

“ஆமாடி கேட்க ஆளில்லன்னு ஒனக்கு எண்ணமா...”

“என்ன தங்கச்சி சொல்லுதே...”

“தங்கச்சி பொல்லாத தங்கச்சி... எங்கப்பன் என்ன ஒங்கம்மாவை வச்சுட்டு இருந்தானா...”

“எங்கப்பன் ஒங்கம்மாவை வச்சுட்டு இருந்தாலும்.... நீ எனக்கு தங்கச்சிதான்... ஆனால் நான் அப்படி நாகரீகக் குறைவா பேச மாட்டேன்.”

“நாகரிகம்.... தூ நாயே... ஒனக்கா நாகரிகம்... பட்டப்பகலுலயே அடுத்தவனுக்கு முந்தாணி விரிக்கிற எச்சிக்கல இரப்பாளி... வந்தட்டி..... மஞ்சக் கடஞ்சா...”’

“இந்தா பாரு தங்கச்சி... மரியாதி குடுத்து மரியாதி வாங்கு.”

“மரியாதைய வாங்கவும் ஒரு தகுதி வேண்டாம்...? ஒனக்கு எதுக்குழா மரியாதி... எதுக்குழா என் மச்சான் மகள் கோலவடிவை சினிமாக்காரின்னு சொல்லுரே... சினிமாவுல நடிக்க ஆச இருந்தால் நீ நடி... ஊர்ல கண்ட கண்டவங்ககூட எல்லாம் நடிக்கிற

ஒனக்குத்தான் நடிப்பு நல்லா வருமே... எங்க குலமான் கண்ணு கோலத்தை எப்படிமா சொல்லலாம்... ஒன்னை மாதிரி கண்டவன் கிட்டயெல்லாம் பல்லு இளிக்கிறவள்தான் சினிமாவுல நடிக்கணும்... என் ராசாத்தி கோலவடிவு ஏன் நடிக்கணும்..."

"அற்ப விஷயத்த பெரிசாக்குறே..."

"யாருழா அற்பம்.... இன்னொரு தடவ சொல்லு...."

"ஒனக்கு காது கேக்காட்டா நான் என்ன பண்ணுறது..."

"எனக்கு அப்படியே காது கேக்காட்டாலும், ஊர்ல நீ ஆடுற ஆட்டமும் போடுற போடும் நல்லாவே கேக்குது...."

"எதையும் ருசிப்படுத்தாம பேசாத. தங்கச்சி... ஒனக்கும் ஒரு பொண்ணு இருக்காள்."

"என் பொண்ணுக்கு சாபமாழா போடுற சண்டாளி... கடைசில ஒன் புத்தியக் காட்டிட்ட பாத்தியா..."

"என் புத்திய அப்டி என்னத்த கண்டுட்ட பெரிசா..."

"நம்ம ஊர்ல கல்யாணம் ஆகுமுன்னே ஆட்டம் போட்டு ஒரு கள்ளப்பிள்ள கழிச்ச. கழுத்துல மஞ்சக் கயிறு விழுந்த பிறகாவது சும்மா இருக்கலாம். இருந்தியா... கல்யாணம் ஆன ஆறாவது மாசத்துலேயே காஞ்சான் அண்ணாச்சிய காலி பண்ணுனே... வெளியூரிலே இருந்து வந்த மிளவத்தல் வியாபாரிய மடக்கிப் போட்டு காசு பறிச்சே.... எங்கேயோ இருந்து வந்த டெய்லரை... மொட்டையடிச்சே... ஒயர்மேன ஒட்டாண்டியாக்குன.... செம்பட்டையான் குடும்ப மானம் பொறுக்காம குதியோ குதின்னு குதிச்ச எலி டாக்டரையும் மடக்கிப் போட்டே... நல்ல வேளையா ஒன் பொண்ணு டவுன்ல வேல கிடச்சதும் ஒன்கிட்ட வராம தப்பிச்சுட்டா... இல்லாட்டா அவளையும் எவன்கிட்டயாவது...."

அலங்காரி குன்றிப் போனாள். இப்படிப்பட்ட அர்த்தத்தில்தான், இந்தச் சந்திராவும் பேசினாள். ஆனால், இந்த பேச்சியம்மாவைப் போல் எவளும் இப்படி லிஸ்டைப் படித்ததில்லை. அந்த லிஸ்டைவிட,

அவள் லிஸ்ட் பெரிதுதான்... என்றாலும் அங்கே அம்மணமாக இருப்பது போல் உணர்ந்தாள். இந்தப் பேச்சியம்மா, கோலவடிவை, தான் கதாநாயகியாக்க மேற்கொண்ட முயற்சிக்காகப் பேசவில்லை என்பதும் அவளுக்குத் தெரியும். இருவரும் திருமணமாகாமல் கட்டாம்பட்டியில் குமரிகளாய்ச் சுத்தியபோது, பேச்சியம்மா, மாமா மகன் முறை வேண்டிய ஒரு வாத்தியாரைக் காதலித்து, தொட்டதுண்டு. கெட்டதுண்டு. அலங்காரிக்கும், வயசுக் கோளாறா.... அதே அந்த வாத்தியாரை இந்த அலங்காரி பயன்படுத்தினாளா.... அல்லது அந்த வாத்தியார் பயன்படுத்தினாரா என்பதைச் சொல்ல முடியாது. எப்படியோ ஒருவரை ஒருவர் பயன்படுத்திக் கொண்டதில், பேச்சியம்மா காதல் அறுபட்டு, கடைசியில் காதறுந்த ஊசி போல் ஊசிப் போனது, கடைசியில் பேச்சியின் கழுத்தில் அருணாசலம் கயிறு போட்டார். இந்தப் பழைய பகையைக் கோலவடிவு நிகழ்ச்சி மூலம் பேச்சியம்மா புதுப்பிக்கிறாள் என்பது அலங்காரிக்குத் தெரியும்.... ஆனால் வெளியில் சொல்ல முடியாது... அதுவும் இந்த வீட்டில் வைத்து சொல்லமுடியாது... கொலையே விழும்... அப்புறம் வேண்டுமானால் துளசிங்கத்தை வைத்து, 'அந்த' விவகாரத்தைச் சொல்ல வைக்கலாம்... ஆனால் இப்போ...

ஓடுற நாயைக் கண்டால் விரட்டுற நாய்க்குத் தொக்கு என்பதுபோல், அலங்காரியின் மௌனம் பேச்சியம்மாவை இன்னும் அதிகமாகப் பேச வைத்தது.

"பதில் சொல்லேமிழா.... பத்தினி... கண்டவன் பின்னாலல்லாம் சுத்துற நாயி நீ... இப்படி இருக்கயில எங்க மச்சான் மவளை சினிமாக்காரின்னு சொல்லுறதுக்கு எத்தனாவது சட்டத்துலழா இடமிருக்கு...? சொல்லுழா... கைகேயி... சொல்லுழ கூனி... சொல்லுழா சூர்ப்பனகை..."

குன்றிப்போய் நின்ற அலங்காரி திடீரென்று தன் தலையிலே பட்டுப்பட்டென்று அடித்துக் கொண்டாள்.... வாயிலும் வயிற்றிலும் மாறிமாறி அடித்து, நிசமாவே புலம்பினாள்.

"கடவுளே.... கடவுளே... இவ்வளவு பேச்சையும் கேட்கணுமுன்னு ஆண்டவன் விதிச்சுட்டானே... இனிமேல் நான் இருந்ததுலயும் சேத்தி இல்ல... செத்ததுலயும் சேத்தி இல்ல. அய்யோ... அம்மோ... என்னமா கேக்குறாள். அடைக்கலமுன்னு வந்தவளை இப்டிப் பேசிட்டாளே... இவ்வளத்தையும் கேட்டுட்டு நான் உயிரோட இருக்கணுமா..."

அழுகைச் சத்தம் கேட்டு, கோலவடிவும், சந்திராவும் ஓடி வந்தார்கள். அப்படியும் பேச்சி, வசவை விடவில்லை.

கோலவடிவு, அலங்காரியையே பரிதாபமாகப் பார்த்தாள்.... அவளிடம் பேசப் போன சந்திராவை ஒரு இடி இடித்து தள்ளிவிட்டு, அழுகிறவளை, அழப் போகிறவள்போல் பார்த்தாள். நடந்ததைப் புரிந்து கொண்ட சந்திராவிற்கே பாவமாக இருந்தது. அம்மாவைத் திட்டப் போனாள். இதற்குள் வராண்டாவில் பேசிக் கொண்டிருந்த பழனிச்சாமியும், மற்றவர்களும், அவள் அழுகைச் சத்தம் கேட்டு வீட்டுக்கு வெளியே தாவினார்கள். இரண்டே இரண்டு நிமிடத்தில் நடந்து முடிந்த இந்த வசவு அவர்கள் காதுகளை மெய்யாகவே எட்டவில்லை. பழனிச்சாமி பதறியடித்துக் கேட்டார்.

"என்ன அலங்காரி... திடுதிப்புன்னு இப்டி அழுவுறே...?"

கோலவடிவால் பொறுக்க முடியவில்லை.

"எப்பா.... அலங்காரி அத்தையை நம்ம சித்தி அசிங்கம் அசிங்கமாப் பேசிட்டா... அதுவும் அளவுக்கு மேல, அவன்கூட இவன் கூடன்னு பேருகளச் சொல்லிச் சொல்லி..."

"ஏழா கோலவடிவு... நல்லதுக்குக் காலமில்ல... என்கிறது சரியாத்தான் இருக்குது... நான் மச்சான் மகளை சினிமாக்காரின்னு பேசிட்டாளேன்னு வயித் தெரிச்சலை பேசுனால்.... நீ அவளுக்காக வக்காலத்து வாங்குறே... ஏழா... சந்திரா.. எழுந்திரு.... பாவி மனுசா.... இன்னுமா ஒமக்கு இந்த ஊட்ல வேலை...

பேச்சியம்மா கணக்குத் தீர்ந்த திருப்தியுடனும், அதேசமயம், சொந்தக்காரியான கோலவடிவிடம், புதிய கணக்கைத் திறந்த அதிருப்தியுடனும், சந்திரா சகிதமாய்ப் போய்விட்டாள். அந்தப் 'பாவி

மனுஷன்' அருணாசலமும், நரசிம்ம அவதாரம்போல் வாசலுக்கு உள்ளேயும், வெளியேயுமாய் இல்லாமல், வாசற்படியில் நின்று, பிறகு நிலைகுலைந்து நடந்தார். பேச்சியம்மாவின் நட்பு, அவளது பகையைவிட மோசமானது என்பது தெரிந்ததுபோல, அவள் குடும்பத்தோடு போனதை யாரும் கண்டுக்கவில்லை.

பழனிச்சாமி, அலங்காரியின் பக்கமாக வந்து நின்று, ஆறுதலாகவும், சூசகமாகவும் பேசினார்.

"அவள் அறிவில்லாதவள். அவள் பேச்ச பெரிசா எடுத்தா நாமதான் சிறிசாப் போயிடுவோம்..... ஆனால அண்ணாச்சி சொல்ற அர்த்தத்த புரிஞ்சுக்க... நாமல்லாம் வாழ்ந்து முடிஞ்சவங்க... நம்ம பிள்ளியளுக்கு நம்ம சொத்தவிட நம்ம பேருதான் பக்கபலமாக இருக்கும்.... ஒனக்கும் வயசாயிட்டு.... அஞ்சுல வளையாதது ஐம்பதுல வளையணும்... கோலவடிவை நீ அப்டி கேட்டிருக்கப்படாது. எம் பொண்ணுன்னு நான் பூசி மழுப்பி பேசல... இன்னொருத்தன்கூட வாழப் போறவளுக்கு சினிமாவுல நடிக்கணுமுன்னு.... ஒரு எண்ணம் வரப்படாது.... பாரு... ஆனால் அதுக்காக பேச்சியம்மா ஒன்னை அப்படி பேசக்கூடாதுதான்... பாக்கியம், தங்கச்சிக்கு மோர் கொடு... ஏழா கோலவடிவு... ஆலமரம் பக்கம் போனே... திருமலைய, அங்கேயே ஒன்னை வெட்டிப் புதைக்கச் சொல்லியிருக்கேன்..."

பாக்கியம் மோர் கொடுக்கும் எண்ணம் இன்றிப் பேசாது இருந்தாள். அதை அலங்காரி வேறுவிதமாக எடுத்துக் கொண்டாள்.... "பழனிச்சாமி குடும்பத்தின் சம்மதத்தின் பேரில்தான், பேச்சியம்மா பேசியிருக்கிறாள்.... அவள் பேசுவது... இவங்க பேசுவது மாதிரித்தான்... இருக்கட்டும், இருக்கட்டும்..."

ஆயிரந்தான் சொன்னாலும், அலங்காரி, பழிவாங்கும் உணர்வை விட, அவமானப்பட்ட உணர்வுடன் குலுங்கிக் குலுங்கி அழுதபடி போனாள்.

அலங்காரி போவதையே பார்த்துக் கொண்டிருந்த கோல வடிவிற்கும் கண்ணீர் கொப்பளித்தது. அவள் சிந்திய கண்ணீரே ஆவியாகி, இவள் கண்களில் மேகமாகி, பெருமூச்சுக் காற்றால்

தொடப்பட்டு, நீராகி விழுவது போலிருந்தது. அவள்பட்ட அவமானத்தை நினைத்து நினைத்து மருகுகிறாள்... பாவம்... அலங்காரி... அவள் மனசு எப்படித் துடிக்குதோ... எப்படித் தவிக்குதோ... பேச்சியம்மா சித்தி சொன்னதை யார் கிட்டயும் சொல்லி ஆறுதல் தேட முடியாது..

கோலவடிவு சுற்றும் முற்றும் பார்த்தாள். திருமலை சாப்பிட உட்கார்ந்தான். அப்பா சொந்தக்காரர்களோடு பேசிக் கொண்டிருக்கிறார். 'ஒரு எட்டு நடந்து, அலங்காரி அத்தைக்கு ஆறுதல் சொன்னால் என்ன... அதனால் அவள் மனசு திருப்திப்படுதோ.... இல்லியோ... என் மனசு திருப்திப்படும்... படுதோ.... படலியோ... அலங்காரி அத்தை கண்ணைத் துடைச்சு அதுவழியா நெஞ்சைத் துடைக்கணும்....'

கோலவடிவு மெல்ல எழுந்து, வீட்டுக்கு வெளியே வந்து, வேகமாய் நடந்தாள். அலங்காரியைச் சீக்கிரம் பார்க்க வேண்டும்.... என்பதற்காகக் குறுக்கு வழியான ஒரு ஒற்றையடிப்பாதை வழியாக நடந்தாள்.

அலங்காரியின் அழுகையை நிறுத்தினால்தான், தனது அழுகை நிற்கும் போல் தோன்றியது... திக்கற்று ஒருத்தி புலம்பும்போது, நான்கு திக்குகளுமே திசையறியாது புலம்புவதுபோல் தோற்றம் காட்டுகிறது.... மானுடம், நரைபட்டு போனது போல் காட்டுகிறது.

கோலவடிவுக்கு, இந்த மாதிரியான சிந்தனை, அவள் புத்தித் தகுதிக்கு ஏற்ப, இதே தாக்கத்தில் வேறுவிதமாய் உட்புகுந்தது...

"இல்லாதவன் பெண்டாட்டி... எல்லாருக்கும் அண்ணிதான்... அழுகிறவள் அலங்காரி அத்தை அல்ல... புருஷன் பலம் இல்லாத... சொத்துபத்து இல்லாத அத்த... பொம்புளயோட அழுகை.... இவங்க அழுகை நிக்காட்டால் ஊரு சிரிக்க முடியாது... உறவுக்கு அர்த்தம் கிடையாது... பாவம் அத்தே....."

கோலவடிவு, ஞானவடிவாய் நடந்தாள்.

# 4

ஆண்டுக்கு ஒரு தடவையோ அல்லது இரு தடவையோ காற்று தவிர எதுவும் உட்புகாத காட்டுப் பகுதிக்குச் சென்று, மனித சஞ்சாரங்களை மறந்து, ஒருத்தர் தனது கடந்த கால நிகழ்ச்சிகளை ஒன்று விடாமல் மனதுக்குக் கொண்டுவந்து, அந்த அனுபவத்தின் அடிப்படையில் தன்னைத்தானே மறுபரிசீலனை செய்து கொள்ள வேண்டும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அனுபவம் முக்கியமல்ல... அனுபவத்தில் இருந்து பாடங்கள் கற்றுக் கொள்வதே முக்கியம் என்பார்கள்.

இந்த மாதிரியான பொன்மொழிகளோ அல்லது அனுபவப் பரிசீலனையோ செய்தாக வேண்டும் என்பதோ அலங்காரிக்குத் தெரியாது... ஆனாலும், அந்தப் பருத்திக் காட்டிற்குள் இப்போது அதைத்தான் செய்து கொண்டிருந்தாள்..... ஆகாயத்தை மறைக்கும் அடர்த்தியான புளியந்தோப்பிற்கு கிழக்கே உள்ள பருத்திக் காட்டில் அவள் முன் கையைத் தொடையில் ஊன்றி, மோவாயை உள்ளங்கையில் போட்டுத் தனது வாழ்க்கை நிகழ்ச்சிகளை அசை போட்டுக் கொண்டிருந்தாள். விடலைப் பெண்கள் போல் வெடித்து நின்ற பருத்திச் செடிகள்... வாழ்வுக்கு முடிவுரை கூறும் நிலையில் இருப்போரின் கணக்கை காட்டுவதுபோல், பருத்திச் செடி இலைகளிலும், வாய்க்காலோரம் இருந்த ஆமணக்குச் செடிகளிலும் சிதறுண்டு கிடந்த பருத்தி இலைகள்... சவலைக் குழந்தைகளைப் போல குறும்பல்களைக் கழித்துக் கொண்டிருந்த சரல் கேட்டு செவ்விளனித் தென்னைகள்.... அவள் உடம்பை வருடிக் கொடுத்த அகத்திக்கீரைச் செடிகள்.... அவளுக்கு இதமான மெத்தை விரிப்பு இருக்கையைக் கொடுத்த பசும்புல் பரப்பு....

அலங்காரி அனைத்தையும் மறந்து தனக்குள்ளே தன்னைத் தேடிக் கொண்டிருந்தாள். அப்படித் தேடித்தேடித் தான் தேட வேண்டியது அவசியமா என்ற கேள்வியும் கூடவே பிறந்தது. உடன்

பிறந்து கொல்லும் நோய் மாதிரி, அவள் அம்மா, ஒரு பணக்காரக் கிழவனுக்கு வாழ்க்கைப்பட்டாள். முப்பது வயது வித்தியாசம்... மனைவியை அடிதடி மூலம் மட்டுமே ஆண்மையை நிரூபிக்க நினைத்தவர் கிழட்டு அப்பா. ஆண்மைக் குறைவாலும், வயது முதிர்ச்சியாலும் இளம் மனைவியைச் சந்தேகப்பட்டவர்.... கெட்ட பேர் வாங்குறதே வாங்குறோம்... கெட்டுப்போயே வாங்குவோம் என்று திடப்பட்ட தாய்க்காரி, அவளுக்கும் அவளது ஆசை நாயகர்களுக்கும், பெற்ற மகளான தானே காவல் காக்க வேண்டிய கொடுமை....

இத்தகைய சம்போவ சம்பவங்களைக் காணும்போதும், அம்மா தன்மீது பாயும் போதும், ஏதாவது ஒரு இடத்தில் ஒளிந்து பீடி குடித்த அனுபவங்கள்... அப்பன்காரனே ஒரு நாள் அவளைக் கையும் களவுமாய்ப் பிடித்து, தெருவுக்கு இழுத்து வந்து, அவளை உதை உதை என்று உதைத்து, அவள் துண்டுப் பீடியை ஊராருக்குக் காட்டி, அவள் மனசைத் துண்டு போட்ட சிறுமை... பீடியை விட்டவளுக்கு, அம்மாவின் விளையாட்டு நிகழ்ச்சிகளின் போதும், அப்பாவின் கொடுமையான செயல்களின்போதும், யாரோ தன் தலையை வருடிக் கொடுப்பது போன்ற கற்பனை.... எவனோ ஒருத்தன் தன்னை மடியில் போட்டு, உச்சிமோந்து, தட்டிக் கொடுத்து, ஆதரவு கொடுப்பது போன்ற அறியாப் பருவத்தின் புரியாத சிந்தனைகள்..

கோபம் வரும்போதோ... வருத்தம் வரும்போதோ பீடி பிடிப்பதுபோல், மதுபானம் அருந்துவதுபோல், இவளுக்கு அத்தகைய சந்தர்ப்பங்களில் பாலுணர்வுக் கற்பனையே ஒரு 'போதை' ஆகிவிட்டது. அம்மா, கன்னத்தைக் கிள்ளிய வலியிலும், உறவுப் பிணியில் துடிக்கும்போதும், எவனோ ஒருத்தன்-ஒரு ராஜபுத்திரன் அவள் கன்னத்தை வருடிக் கொடுப்பது போன்ற எண்ணம். இப்படி மூச்சு விடுவது எப்படி இயல்போ, அப்படி எவனோ ஒருத்தன் அவளுக்குச் செய்கிற கற்பனைக் காதல் சிகிச்சை இயல்பாகிவிட்டது. புகை பிடிப்பவனுக்கு இன்ன சிகரெட் என்று இருக்கலாம்..... இவளுக்கோ இன்னவன் என்று இல்லை. ஒரு கொடுமையான அனுபவத்திற்கு முன்னால் எந்த வாலிபனைப் பார்த்திருப்பாளோ அவனே, அவளது சேவகன்.... அவனே அவளது ராஜபுத்திரன்.. இப்படிப்பட்ட விபரீதக் கற்பனையால், பலரிடம் சிக்கிய பிறகு, எவனையும் சிக்க வைக்க

வேண்டும் என்ற எண்ணம் கொண்டவள். இப்போதுகூட அவள், தன் உடல்வாகில் ஏதோ கோளாறு என்று எண்ணி, கண்டவனை எல்லாம் போட்டுக் கதவைச் சாத்துவதாக நினைக்கிறாள்... அவள் பிரச்சினை உடலைப் பற்றியது அல்ல... மனதைப் பற்றியது என்று யார் புரியாதவள்... காலில் உள்ள புண்ணுக்குத் தொடையில் நெறிக்கட்டுவது போல், காயங்கள் பாலுணர்வு நெறியாகப்படுத்துறது என்பதை யார் சொல்வது?

அலங்காரி, அங்குமிங்குமாய்ப் பார்த்தாள். இப்போது அவளுக்குத் தேவை ஒரு ஆண்... அது, அவன் கணவனாக இருந்தாலும் கவலை இல்லை. எழுந்து நின்ற அலங்காரி, மேற்கே உள்ள புளியந்தோப்பை ஊடுருவிப் பார்த்தாள். கிழக்கே உள்ள கரும்புத் தோட்டத்தை ஏறிட்டுப் பார்த்தாள். வடக்கே பனங்காடு... தெற்கே பஸ் ரோடு, அவளுக்குத் தெரிந்த - அவளைத் தொட்ட காஞ்சானைக் காணோம்... எலி டாக்டரைக் காணோம்... மிளகுவத்தல் வியாபாரியைக் காணோம்... பீடி ஏஜெண்ட் பால் பாண்டியைக் காணோம்.. எவன் மடியும் எட்டவில்லை... எவன் கையும் தலையைக் கோதிவிட இல்லை...

அலங்காரிக்குப் பாலுணர்வுப் பாசாங்கு ஏக்கம், பழிவாங்கும் எண்ணமாக மாற்றமெடுத்தது. ஊருக்கெல்லாம் நியாயம் பேசும் பழனிச்சாமி, அவர் தம்பி மனைவி பேச்சியம்மாவை ஏவி விட்டுவிட்டு, ஒன்றும் தெரியாதவன் போல் நடித்தான். அவன் பொண்டாட்டி பாக்கியம், கொழுந்தன் பொண்டாட்டி திட்டுறது சரி என்பதுபோல் மோர் கொடுக்காமல் அலட்சியப்படுத்தினாள்.... திருமலைப் பயலோ, ஒரு வார்த்தை தட்டிக் கேட்கவில்லை. கரும் பட்டையான் பயல்களில் ஒருத்தன்கூட, அப்போதைக்காவது அனாதரவாய் நின்ற தன்மேல் கருணை காட்டவில்லை. சொக்காரப் பயல்களான செம்பட்டையான்களோ கேட்கப் போவதில்லை... இதே கேள்வியைப் பேச்சியம்மா, காஞ்சான் பொண்டாட்டியை கேட்டிருந்தாலோ, தன்னுடைய இன்னொரு மச்சானின் மகளான தாயம்மாவைக் கேட்டிருந்தாலோ, இந்நேரம் கொலை கொலையாய் விழுந்திருக்கும்.... என்னைக் கேட்டால் யாரும் கேட்க மாட்டாங்க... நானேதான்.... கேட்கணும்... ஒத்தைக்கு ஒத்தையாய்... அதுவும் ஒரு பொம்புளை எப்படிக் கேட்க

முடியும்... பழனிச்சாமிக்கு சோடியாக முடியுமா... பேச்சியம்மாவுக்கு நான் எதிரியாகிற தகுதி... எனக்கு இருக்குதா... ஒரே ஒருத்தர் கிட்டதான் முறையிட முடியும்... ஆறுதல் சொல்ல அவரால் மட்டுமே முடியும்... மலையாள மந்திரவாதி மகளைக் கற்பழித்து, அப்புறம் காவு வாங்கி இசக்கியாக்கினாரே, சுடலை மாடசாமி.. அவர் தன்னையும் கற்பழிக்கட்டும்... காவாக்கட்டும்... ஆனால் கரும்பட்டையான் குடும்பத்த பழிவாங்க வேண்டும்... ஒருத்தியையாவது என்னைப் போல் ஆக்க வேண்டும்.... அவர் ஆக்கிக் காட்டவேண்டும்...

அலங்காரி சம்மணம் போட்டு உட்கார்ந்தாள். முதுகை நிமிர்த்தி நேராக உட்கார்ந்தாள்.... கண்களை மூடியபடி, வில்லுப் பாட்டாளி பாடிய பாடலை, மனதுக்குள் பாடினாள்.

***"தூக்கி வைக்கும் கால்களுக்கு...... சுடலைக்கு***
***துத்திப்பூவு சல்லடமாம்,***

***எடுத்து வைக்கும் கால்களுக்கு...... சுடலைக்கு***
***எருக்கலம்பூ சல்லடமாம்....***

***சல்லடமும் குல்லாயுமாய்..... சுடலையே***
***சங்கடத்தை போக்க வாரும்..."***

ஒப்பாரிபோல், பாடி முடித்த அலங்காரி சத்தம் போட்டே வரம் கேட்டாள்.

"சுடலைமாடா... சுடலைமாடா... திக்கில்லாத எனக்கு நீதான் தெய்வமடா... கரும்பட்டையான் குடும்பத்த நான் பழிவாங்கி ஆகணும்... உன்மூலம் நானோ, என் மூலம் நீயோ ஒருத்திய காவு வாங்கி... இசக்கியாக்கணும்.. அப்படி நீ ஆக்குனால்... சந்தையில விற்கதுக்காவ வளக்குற என் கிடாவை ஒனக்கு வெட்டுறேன்.. ஒரு பானை பொங்கல் படைக்கேன்... எள்ளு புண்ணாக்கு.... ஏராளம் வைக்கேன்... நீயே கதி... நீயே அடைக்கலம்..."

அலங்காரி சுடலை மாடனைத் தியானித்தபடி, கைகால்களை ஆட்டாமல், அசைக்காமல் அப்படியே இருந்தாள்... வெட்டரிவாள், குறுக்குத்தடி, குல்லாய் ஆகியவற்றுடன் கூடிய சுடலைமாட சாமியைக் கும்பிட்டபடியே, கரும்பட்டையான் குடும்பத்தைத் திட்டினாள். அப்போது-

அவள் தோளை யாரோ தொடுவது போலிருந்தது... காஞ்சானோ, எலி டாக்டரோ என்று கண் விழித்தாள். கோலவடிவு.....! அவள் தோளைத் தொட்டபடி குனிந்து நின்றாள்... பிறகு, அந்த தோளையே பற்றுக்கோலாகப் பிடித்து கீழே உட்கார்ந்து விம்மினாள். அலங்காரியைக் கட்டிப் பிடித்து அழுதாள்.

"ஒங்கள பேச்சியம்மா சித்தி..... அப்படிப் பேசுனதுல... எனக்கு சம்மதமில்ல... அத்தே..... எல்லாம் என்னால வந்ததுன்னு நினைக்கும் போது, மனசு கேட்க மாட்டேன்குது.... அத்தே... ஒங்கள எல்லாருமா... நாயப் பேசுனது மாதிரி பேசிட்டாவுளே... அத்தே.... என்னை மன்னிச்சிட்டேன்னு ஒரு வார்த்தை சொல்லுங்க அத்தே..."

அலங்காரி கோலவடிவை ஒரு கணம் பார்த்துவிட்டு, மறுகணம் ஆகாயத்தை நோக்கி, கையெடுத்துக் கும்பிட்டாள்.

"என்னை எதுக்கு அத்தை கும்பிடுதிய.... எங்க சித்தியும் சந்திராவும் ஒங்கள பேசியிருக்கப் பேச்சுக்கு... நான்தான் அத்தே... ஒங்க காலுல விழுந்து புரளணும்... லேசா சிரிங்க அத்தை... நீங்க சிரிக்கணும்.. சிரிச்சே ஆகணும்... என்னை அப்பிடி கும்பிடாதிங்க... அத்தே... ஒங்கள இப்போ பார்த்தபிறவுதான்.... அதுவும் அந்தச் சிரிப்போடு பார்த்த பிறவுதான் மனசு லேசாகுது அத்த..."

அலங்காரி கோலவடிவை மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டாள். அவள் வளர்க்கும் பலிகிடாவை அணைப்பாளே அப்படி! பிறகு அவள் மனத்தைத் தட்டிக் கொடுத்துப் பேசினாள்.

"ஒன்னை இப்போ பார்க்கும்போது அத்தைக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்குது தெரியுமா..... நீ ஒருத்தி இந்த சணத்துல சொன்ன ஆறுதல்.... ஒரு கோடி பேரு சொன்னதுக்குச் சமம்... நீ

இப்பிடி... ஆறுதல் சொல்லுறதுக்காகவே இந்த அத்தய எல்லாரும் திட்டணும் போல தோணுது..."

"வேண்டாம் அத்த.... நீங்க தூக்குப் போட்டுச் சாவியளோ இல்ல... கிணத்துல விழுந்து உயிர மாப்பியளோன்னு பயந்து வந்தேன்."

"இந்தக் கிணத்துல விழணுமுன்னுதான் வந்தேன்... நீ மட்டும் வராவிட்டால் விழுந்திருப்பேன்.."

"அப்படில்லாம் செய்திடாதிய.... அத்த, பாவம்..... துளசிங்கம் மச்சான் சாதாரணமா பேசுனதுக்கு எங்கண்ணாச்சி நல்லா திட்டிட்டான். அவரு கிட்டயும் என்னைத் தப்பா நினைக்கப்படாதுன்னு சொல்லிடுங்க... அத்தே... அப்போ நான் போறேன் அத்தே..."

"ஏன் இப்டிப் பயப்படுறே... அத்தக்கிட்ட நிற்கிறதுக்குப் பயமா..."

"ஆயிரந்தான் இருந்தாலும் இப்போதைக்கு நீங்க எங்க குடும்பத்துக்கு சண்டைக்காரி.... ஒங்ககிட்ட பேச வந்தது தெரிஞ்சா எங்கண்ணாச்சி என்னை வெட்டிப் போட்டுடுவான்.... அதுக்காவ எங்கப்பா அண்ணாச்சிய அடிக்கப் போவாரு-அவரு, வெட்டுறதுக்கு அண்ணாச்சி என் உடம்புல இடம் வைக்கிலியேன்னு..."

"'பரவாயில்லியே.... நல்ல பேசுறியே...."

"சரி.... நான் வாறேன் அத்த...."

கோலவடிவு எழுந்தாள்..... அவளை வழியனுப்புவதற்காக அலங்காரியும், எழுந்தாள்.... அப்படி எழும்போது துளசிங்கம் வடக்குப் பக்கமாக உள்ள பனங்காட்டில் இருந்து வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

அலங்காரி மனத்தில் ஒரு பழியுணர்வு.... ஆனாலும் மனசு கேட்கவில்லை. பேச்சியம்மா திட்டும்போது, எதிர்ப்பது மாதிரி பேசியவள், ஒரு பாவமும் அறியாத அப்பாவி... இப்போ நான் கலங்குறதைப் பாத்துட்டு கலங்குறவள்.... 'இந்த பச்ச மழலையப் போய்... ஏன் கூடாது.... படுகளத்துல ஒப்பாரி கூடாது..... அதோட..... இவளை.... நான் ஒண்ணு கிடக்க ஒண்ணு பண்ணல.... துளசிங்கம் கூட சேர்த்து

வச்சி... பேச்சி தலய மொட்டையடிக்கப் போறேன்..... பழனிச்சாமிய.... படுத்த படுக்கையாக்கப் போறேன்.... எவளும்... சந்தர்ப்பம் கிடைச்சால் ஓடிப் போறவள்தான்னு நிரூபிக்கப் போறேன்..... இதனால... இந்த கோலத்தோட வாழ்க்க பாதிக்காது.... துளசிங்கம் என்ன மட்டமா.... கரும்பட்டையான் வகையறான்னா கற்புக்கரசின்னு பய மவளுவ..... மார் தட்டுறவளே.... அப்படி தட்டுற கையத்தான் தடுக்கப் போறேன்..... அதோட... இது சுடலைமாடன்.... உத்தரவு....'

அலங்காரி பழியைச் சுடலைமீது போட்டுவிட்டு, கோலவடிவை, தனது ஆட்டைப் பார்ப்பதுபோல் பார்த்தாள். பிறகு "ஒரு விஷயம்... ஒரு அஞ்சு நிமிஷம் பேசணும் உட்காரு" என்றாள். கோலவடிவு உட்கார்ந்தபோது, அலங்காரி, தலையைச் சொறிகிற சாக்கில், துளசிங்கத்தை அருகே வரும்படி சைகை செய்தாள்... அவனும் அந்தக் கையாட்டத்தைக் கண்டவன்போல் நடையை ஓட்டமாக்கி வந்தான்.

பச்சைநிற வெட்டுக்கிளி ஒன்று தத்தித் தத்திக் குதித்து, அலங்காரியின் பாதத்திற்குள் சிக்கியது. வேலிக்காத்தான் பூ ஒன்றை, ஒரு ஓணான் கடித்துக் கீழே போட்டது.... காகம் ஒன்று தங்கரளிச் செடியில் ஏறிய அணிலின் குஞ்சைக் கொத்திவிட்டுப் போய்விட்டது.... வேதனை தாளாத அந்த அணில் மூக்கில் ரத்தம் சொட்ட அங்குமிங்குமாய்த் துடித்தது.

அலங்காரி கோலவடிவை ஒட்டினாற்போல் உட்கார்ந்திருந்தாள்.. ஐந்தாறு சின்னச் சின்னக் கற்களாகப் பொறுக்கி எடுத்து, அவற்றை வலது புறங்கையில் வைத்து, அப்படியே கையை மாற்றிக் கற்களை உள்ளங்கைக்குக் கொண்டு வந்தாள். அவள் ஏதோ பெரிய விஷயத்தைச் சொல்லப் போவதாக நினைத்த கோலவடிவு அவசர அவசரமாய்க் கேட்டாள்.

"ஏத்த, ஏதோ சொல்லணுமுன்னு சொன்னியே...."

"அத மறந்துட்டேன் பாரு..... ஏம்மா கோலம்... ஏன் படிப்ப பத்தாவதோட முடிச்சுட்டே.....? நீதான் பள்ளிக்கூடத்துலயே பஸ்ட்ல வந்தியாம்."

"அந்த அநியாயத்த ஏன் அத்த கேட்கிறிய... பத்தாவது வகுப்புல எல்லா பாடத்துலயும் நான்தான் பஸ்ட்..... பிளஸ்டூவுல சேரப் போனேன்... கோணச் சத்திரத்துல பள்ளிக்கூடம் இருக்கதால அப்பாவும் சரின்னுட்டாரு... ஆனால் எங்கம்மா வயசுப் பொண்ணுக்கு படிப்பு வேண்டான்னுட்டாள். பேச்சியம்மா சித்தியும் ஒத்துப் பாடிட்டாள்...."

"அவளுக்கு அவள் மகள் சந்திரா படிக்காமப் போனதால நீயும் படிக்கக்கூடாதுன்னு நல்லெண்ணம் வந்திருக்கு...."

"என்ன எழவோ... அப்போ என்கூட படிச்சவங்க-இப்போ காலேஜ்ல பி.ஏ., பி.எஸ்.ஸி. படிக்கிறாவ.... அவளுவளப் பார்க்கும் போதுல்லாம் எனக்கு வெட்கம் பிடுங்கித் தின்னுது.... அம்மாவ திட்டித் தீர்த்துடணும் போல வருது."

"அம்மாவோ..... அப்பாவோ..... ஒருத்தி தன்னோட வாழ்க்கையை தான்தான் அமைச்சுக்கிடணும்..."

"நான் வர்றேன் அத்த... வீட்ல தேடுனாலும் தேடுவாங்க...."

"குறையும் கேட்டுட்டுப் போம்மா... அத்த சொல்றேன்னு தப்பா நினைக்காத... நீ வயல் வரப்புக்கு போகாத பொண்ணு.... ஒனக்கு ஒங்க வயலு முழுதும் எங்க இருக்குதுன்னு தெரியாதுதான்... அப்படிப் பட்ட நீ விவசாயிக்கு வாழ்க்கப்பட்டியானால்..... அவன் எவ்வளவுதான் பணக்காரனாய் இருந்தாலும் வயல் வேலைக்குப் போயாகணும்... அதே புருஷன் கடை கண்ணி வச்சிருக்கவனாயும் நாடுநகர் சுத்தப் பார்த்தவனாயும் இருந்தால் முற்றத்து வெயிலுகூட முதுகுல படாம வாழலாம்."

"எங்கப்பாவுக்கு இதுல்லாம் தெரியாமலா இருக்கும்....? நான் வாறேன் அத்த...."

"செத்தே இரும்மா... எதுல குறை வச்சாலும் புத்தியில மட்டும் குற்றம் குறை வைக்கப்படாது..... ஒங்கப்பா ஒன்னை நல்ல இடத்துல வைக்க ஆசைப்படுவார்தான்... ஆனால் நல்ல இடம் என்கிறத தீர்மானிக்கிறதுலதான் கோளாறு வாரதுண்டு.... மொத்தத்துல... இந்த

அத்த விரும்புறது ஒனக்கு புருஷனா வாரவன் வேட்டி சட்டையே போடப்படாது...."

"என்னத்த நீங்க...."

"பேண்ட் சட்டை போட்டவனாய் இருக்கணுமுன்னு சொல்ல வந்தேன்... சிரிப்பப் பாரு... நீ சிரிக்கும்போது தாமரைப்பூ விரிஞ்சது மாதிரி இருக்குது. சரி புறப்படு... ஒனக்கும் நேரமாயிட்டு.... என்ன காலடிச் சத்தம்? யார் வாரது....."

"துளசிங்கம் மச்சான் வாரார்.... அவர் கிட்ட எங்கண்ணா தப்பா நடந்ததுக்கு நான் ரொம்ப ரொம்ப வருத்தப்படுறதாய் சொல்லுங்க அத்தே...."

"இதோ அவனே வந்துட்டான்... நீ சொல்லு... என்ன துளசிங்கம் கோலத்த அப்படிக் பாக்கே..."

"இந்தப் பொண்ணு இங்க எதுக்காக வந்தாள். இழுத்த சண்டை போதாதுன்னா..."

"நான் வாறேன் அத்த..."

"ஒரு நிமிஷம்மா.... ஏண்டா துளசிங்கம்... ஒனக்கு ஏன் தராதரம் தெரிய மாட்டேக்கு....? பாவம் கோலவடிவு... ஆலமரத்துச் சண்டைக்காவ ரொம்ப வருத்தப்படுறாள்... ஒன்னை அவங்க அண்ணாச்சி அப்படித் திட்டுனதுக்கு துடியாய் துடிக்காள்... நீ என்னடான்னா அவள் மனசு புரியாம எரியற நெருப்புல எண்ணெய்ய ஊத்துற..."

"ஆனால் அந்த நெருப்ப வச்சது கோலவடிவுதானே...""

"சரி அப்படியே வச்சுக்க.... இப்போ பத்தவச்சங்களே நெருப்ப அணைக்கும்போது... நீ எண்ணெய ஊத்துனால் எப்டி... பாவம் கோலம்... ஒன் மனசு உடஞ்சு போனதுக்காவ ஆளே உடஞ்சுட்டாள்...."

"நீ இட்டுக்கட்டிப் பேசுனாலும் பேசுவே.... சித்தி... கோலவடிவே சொன்னாத்தான் நான் நம்புவேன்...."

"சரிப்பா, நீ என்னை நம்பாண்டாம்... ஒன் மாமா மகளே சொல்லுவாள்... கோலவடிவு ஒன்னத்தான்... நான் சொன்னது

நிசமுன்னு ஒரு வார்த்த சொல்லிட்டு அப்டியே ஓடு... ஒனக்கும் நேரமாகுது பாரு..."

"ரொம்பவும் பிகு பண்ணாத.... கோலம்... சித்தி சொல்லுறது நிசமான்னு சொல்லு... அடடே ஏன் இப்டி வெட்கப்படுற... சரி என்னை நேருக்கு நேராய் பாரு... நானே ஒன் முகத்துல இருந்து தெரிஞ்சுக்கிறேன்...."

கோலவடிவு, கண்களைக் கீழே போட்டு மேலே நிமிர்த்தினாள்.... துளசிங்கம் அரைவட்டமாகத் தோன்றினான்... உடனே துளசிங்கம், "சொல்லு... சொல்லு..." என்றான். அப்படியும் அவள் திரும்பவில்லை.... உடனே சலிப்போடு, "சரி... நீ சொல்லவும் வேண்டாம்... நான் கேக்கவும் வேண்டாம்... நான் வாறேன் சித்தி... இப்போ உரமூட்டை வார நேரம்" என்றான்.

கோலவடிவு அவன் போய்விடக்கூடாதே என்பது போல், தலையை நிமித்தினாள். அவனை நேருக்கு நேராய் பார்த்துவிட்டு முகத்தை இரு கைகளினாலும் மூடி, மறைத்துக் கொண்டாள். பிறகு விரல்களை அகலமாக்கி அவற்றின் இடைவெளிக்கு இடையே அவனைப் பார்த்தாள். இலைதழை மாதிரியான சட்டை.... ராணுவ வீரர்கள் போடுவது மாதிரி..... இரண்டு பைகள்... தோள்பட்டையில் இருந்து மார்வு வரைக்கும் பச்சை நிறப் பட்டை... தங்க நிறத்திலான பித்தான்கள்.... இறுக்கமான பேண்ட்... சிமெண்ட் கலர் பளபளக்கும் பெல்ட்... கண்ணைக் கூச வைக்கும் கடிகாரம்...

அலங்காரி உற்சாகப்படுத்தினாள்.

"ஒன் மச்சான் கிட்டே சொல்லேன்... கோலம், இல்லாட்டி என்னை பொய் சொல்லியா நெனச்சுடப் போறான்."

கோலவடிவு அத்தையைப் பார்ப்பதுபோல், அவளது மச்சான் மகனைப் பார்த்தாள். பிறகு குழந்தைகள் எழுத்துக்கூட்டி ஒப்பிப்பது போல் ஒப்பித்தாள்.

"அ....த்.....தை.... நி......ச......ம்....."

"அத்தை நிசம்தான். ஆனால் அவங்க பேசுவது...."

"நி.....ச......ம்....."

"இப்பத்தான் தமிழே கத்துக்கிறியா...?"

"போடா. போடா.... பொக்கி... அவள ரொம்பத்தான் கேலி செய்யுறே...."

"ஆனால் நான் நிசமாவே சொல்லுதேன் சித்தி. திருமலை என்ன நெருங்கும்போது அவனை ஒரே போடாய் போட்டிருப்பேன்.... ஆனால் தற்செயலாய் இவள் முகத்தைப் பார்த்தேன்.... சரி.... நாம செத்தாலும்.... பரவாயில்ல... இவள் அண்ணா, சாவப்படாதுன்னு அப்படியே நின்னேன்... இல்லாட்டா பந்தாடியிருப்பேன்..."

கோலவடிவு அவனை நன்றியுடன் பார்த்தாள். ஆனாலும் சவடாலாக இப்போது தைரியப்பட்டும் பேசினாள்.

"பந்தாடுறதுக்கு எங்கண்ணா கையில என்ன வளையலா போட்டிருக்காரு....?"

"பாத்தியா சித்தி... அவளுக்கு வார கோபத்த..."

"கரும்பட்டியான் குடும்ப ரத்தமாச்சே... சும்மாவா..."

"நீ சொல்றதும் சரிதான் சித்தி... திருமலை அரிவாளோடும், நான் கல்லோடயும் நிற்கும்போது இவள் அண்ணா தலையைத்தான் மறச்சாள்... என்னைப் பத்திக் கவலப்படல..."

கோலவடிவு மென்று விழுங்கிப் பேசினாள்...

"அண்ணா தலய மறச்சி... அரிவாளையும் மறச்சுட்டா... அதுல ஒங்க மச்சான் மவனுக்கும் லாபந்தான அத்த..."

"சரியாச் சொன்னே..."

"ஆனால் ஒன்னுடா.... துளசிங்கம், நம்ம கோலவடிவு ஆயிரத்துல... ஒருத்திடா. அவளவள் வாயில கெட்ட வார்த்தைகளை சுமந்துகிட்டுத் திரியும்போது இவள் வாயில தப்பித் தவறிக்கூட ஒரு வார்த்த வராதுடா..."

"பழகிப் பாத்தாத்தான் தெரியும்..."

"போடா போக்கிரி... கோலவடிவு கோலவடிவுதான்... கொஞ்ச நேரத்துக்கு முன்னால இவள் வீட்லயே இவள் கண்ணு முன்னாலேயே

இவளோட சித்தப்பா பொண்டாட்டி பேச்சியம்மா என்னை அவன் கிட்டே போனே... இவன்கிட்டே போனேன்னு கண்டபடி திட்டிட்டா....”

“ஒனக்கு மூள இருக்குதா சித்தி..... ஒரு வார்த்த எனக்கு சொல்லி அனுப்ப வேண்டியதுதான? அவள் கொண்டைய தலையில் இருந்து எடுத்திருக்க மாட்டேன்...”

“நீயுல்லாம் இப்படி முரடனாய் இருந்து எப்படித்தான் குப்ப கொட்டப் போறியோ.... மனுஷனுக்கு பொறுமை வேணுண்டா... எப்பவுமே... சொல்லுறதப் ஒருத்தர் பதட்டப்படாமல் முழுசா கேட்டுட்டு அப்புறமாத்தான் பதில் சொல்லணும். பாதி கேட்ட உடனே பதில் சொல்லுறது அரை கிணறு தாண்டுறது மாதிரி... பேச்சியம்மா பேசுன ஏச்சுல நான் ஆத்துல விழலாமா... குளத்துல விழலாமான்னு அழுதுகிட்டே வந்து. இங்கே உட்கார்ந்தேன்... என் ராசாத்தி எனக்கு ஆறுதல் சொல்றதுக்காவ இங்கே ஓடி வந்தாள்.. எவள்டா இப்டி வருவாள்... பாலைப் பாக்கதா..... பால் காய்ச்ச பானையப் பாக்கதா.... என் ராசாத்தி.... ஒனக்காவ... நானும், இவனும் எவ்வளவு அவமானத்த வேணுமுன்னாலும் தாங்கிப்போம்...”

அலங்காரி கோலவடிவைக் கட்டிப்பிடித்து நான்கைந்து தடவை முத்தமிட்டாள். பிறகு “ஏண்டா நான் அவளை கொஞ்சுறத நீ பார்க்கே.. அவளை நான் முத்தமிட்டா ஒனக்கென்னடா” என்றாள் குறும்பாக.....

“நான் வாறேன் அத்த... வாறேன்...”

“மச்சான்னு சொல்லு.... இல்லாட்டா துளசிங்கமுன்னு சொல்லு....”

“துளசிங்கம் மச்சான்னு சொல்லுவாள்...”

கோலவடிவு எதும் பேசாமல் நின்ற இடத்துலயே நின்றாள். அலங்காரி கோலத்தின் தலையை வருடிவிட்டபடியே சொன்னாள்.

“அத்தையும் ஒன் கூடவே வாறேன்... ஒரு நிமிஷம் நில்லு... இதோ வந்துட்டேன்.”

அலங்காரி எங்கேயோ ஒதுங்கப் போவதுபோல் போனாள். கோலவடிவும் துளசிங்கமும் தனித்து நின்றார்கள்.

# 5

அலங்காரியின் வீடு நிசமாகவே சின்ன வீடுதான்... அதேசமயம் செட்டான வீடு... கிழக்குப் பக்கம் ஊராட்சி ஒன்றிய காண்டிராக்டர் ஒருவரின் இரண்டு மாடிக் கட்டிடச் சுவரே இவள் வீட்டுக்கு அரண் மாதிரி... தெற்குப் பக்கத்தில் பாதியளவு சமையல்கட்டும், மீதியில் மாட்டுத் தொழுவமும்.. மேற்குப் பக்கம் இவளே ஒரு காம்பவுண்ட் சுவரை ஆளுயுரத்திற்குக் கட்டிவிட்டாள்.. எலி வளை மாதிரி வெளியே தெரிந்தாலும், உள்ளே போகப் போக உறுதியாக இருக்கும் விசாலமான வீடு. அந்த வீட்டுக்குள் எலி வளைவுக்குள் வருவது மாதிரிதான் ஒடுசலான வாசல் வழியாய் வரவேண்டும்... இதர வீடுகளைப் போல் இல்லாமல், அந்தத் தெருக் கதவும் சாத்தப்பட்டே இருக்கும்.

அலங்காரி குளிப்பாட்டிய தலைமுடியைக் கோதிவிட்டபடியே, துளசிங்கத்தைப் பார்த்துக் கண்சிமிட்டியபடியே கேட்டாள்...

"கோலவடிவ என்னடா பண்ணுனே.... அப்டி தலைதெறிக்க ஓடுறாள்..."

"சனியனுக்கு ரம்பன்னு நெனப்பு.... பேச வாயெடுக்கதுக்கு முன்னாலயே ஓடிட்டாள்.. நான் பாம்பாயிலயும், மெட்ராஸ்லயும் பாக்காத பொண்ணுவளா.... தொட்டா... தொட்டவன் கை கறுப்பா இருந்தாலும் சிவக்கும்.... அப்டி சிவப்பு பொணணுங்கள ஆயிரக் கணக்குல பாத்தாச்சு..."

"ஒரு தாயி கிட்ட பேசுற பேச்சாடா இது.... நான் ஒன் அப்பா கூடப் பிறந்த சித்தப்பாவோட பொண்டாட்டிடா... பெத்த தாய்க்குச் சமமானவடா..."

துளசிங்கம் அந்த 'தார்சாவில்' நாற்காலியில் உட்கார்ந்து, பனை மரத்து தூணைப் பிடித்தபடியே, உள்ளே பனை நார்க்கட்டிலில் குறட்டை விட்டுக் கொண்டிருந்த சித்தப்பா சீமைச்சாமியையே

பார்த்தான். நோஞ்சான் உடம்பு.... குச்சிக் கால்.. குச்சிக் கை... அலங்காரிச் சித்தியின் ஒரு காலளவுக்கு அவர் உடம்பு, அவரையே பார்த்த துளசிங்கம் சித்தியைக் கூர்மையாகப் பார்த்தான். அவள் மீது கோபமும் வந்தது... கூடவே பரிதாபமும் வந்தது.... கூர்மைப் பார்வையை விலக்கி, லேசாய் சிரித்தான்.... அவளும் அந்தச் சிரிப்பைப் புரிந்து கொண்டவள் போல், அவன் கண்களைத் தவிர்த்து முகத்தை வேறு புறமாகத் திருப்பிக் கொண்டாள். தாய்க்காரி, எந்த மகனுக்கும் எவளையும் பிடித்துக் கொடுக்க மாட்டாள்... கண்டிப்பாளே தவிர, காதல் பாதை வகுக்கமாட்டாள்... அதற்கு அலங்காரி சித்தி மாதிரி பல அனுபவங்களும், அலங்கோலங்களும் தேவை...

அலங்காரி முழுசும் நனைந்த தைரியசாலியானாலும், அந்தச் சமயத்தில் துளசிங்கத்தை ஏறிட்டுப் பார்க்கவே அவளுக்குக் கூச்சமாக இருந்தது. முகத்தை அவன் பக்கமாய் திருப்பாமலே விளக்கமளித்தாள்.

"நம்ம தோட்டத்துப் பக்கமா சட்டம் பேசுற ரஞ்சிதம் வந்துகிட்டு இருக்காள்... அதப் பார்த்துட்டுத்தான் கோலவடிவு ஓடியிருப்பாள்... அவள விட்டுப் பிடிச்சா சரியாகிவிடும்..."

"அவளை விட்டும் பிடிக்காண்டாம்... விடாமலும் பிடிக்காண்டாம்... சரி நான் வரட்டுமா..."

"வந்ததும் வராததுமா புறப்படுறே.... கோலவடிவைப் பத்தி சித்திக்கிட்ட கேட்க வந்தியோன்னு நினைச்சேன்..."

"நீ வேற.... இந்தச் சித்தி முகத்த ஒரு நாளைக்கு பாக்காட்டால் எனக்கு என்னமோ மாதிரி இருக்கும். இன்னைக்கு சிமெண்டுக்கு தனிக்கடை போடுறேன்... ஒன் தரிசனம் இல்லாம போட்டா நல்லா இருக்குமா..."

"நீயாவது இந்த சித்திக்கிட்ட பெத்த பிள்ளை மாதிரி நடக்கியப்பா.... அதுவும் பெத்த மவளே போன பிறவு...."

"நான் எப்பவும் ஒன்கிட்ட நல்லாத்தான் இருப்பேன் சித்தி. பம்பாயிலயும் சென்னையிலயும் பல எக்ஸ்டிரா பெண்களைப்

பார்த்தவன் நான். நான் ஒண்ணும் 'அதை' பெரிசா எடுத்துக்கிறது இல்ல... இப்டி எப்படியோ இருந்த பல பெண்ணுங்க... இப்போ தங்கள மாத்திக்கிட்டு பேரும் புகழுமா இருக்காளுவ. அதனால நாமும் நம்மள மாத்திக்கிடணும்..."

அலங்காரி வாயடைத்து நின்றபோது, கதவு தட்டப்பட்டது. துளசிங்கம் கதவைத் திறப்பதற்காக நடக்கப்போனான். அவள் அவன் கையைப் பிடித்துத் தடுத்த படியே உள்ளே முகம் நோக்கி கத்தினாள்....

"ஒம்மத்தான் யோவ்... தூங்குமூஞ்சி.... பண்டாரம்... என் பிள்ள நிக்கான்... இல்லன்னா நல்லா கேட்பேன்... எந்திரும்... யாரோ வாசல் கதவ தட்டுறது காதுல விழல.... துப்புக்கெட்ட மனுஷன்..... எழுந்துருமே...."

அந்தத் 'தட்டுக்கெட்ட' மனுஷன் எழுந்திருக்கவில்லை. உடனே அலங்காரி ஒரு டம்ளரில் இருந்த தண்ணீரை எடுத்துக் கொண்டு உள்ளே போனாள்..... சீமைச்சாமி முகத்தில் விழுந்த நீர் மூக்குக்குள் போக, அலறியடித்து எழுந்தார். அலங்காரி, அவர் முதுகைப் பிடித்து, வெளிக்கதவின் திசை நோக்கித் தள்ளினாள்... அவரும், அவிழ்ந்த வேட்டியைக் கட்டிக் கொண்டிருந்தால், அவள் ஆணையை நிறை வேற்ற நேரமாகும் என்று நினைத்தவர்போல் வேட்டியைக் கையால் தூக்கிப் பிடித்துக் கொண்டே ஓடினார்... கதவைத் திறக்கும்போது மட்டும் வேட்டிச் சுருக்கத்தை இடது கையில் பிடித்துக் கொண்டார்.

உள்ளே வந்த எலி டாக்டர், மகன் துளசிங்கத்தை எதிர்பார்க்க வில்லை. தலைக்கும், கழுத்துக்கும் வித்தியாசம் காணமுடியாத தோற்றம்.... வேட்டிக் கரையை, இரண்டு கால்களுக்கும் மத்தியில் நெருங்கோடாய் வைத்துக் கொள்வதில் சமர்த்தர். தன்னைத் தானே வாரிக் கொள்ளும் தலைமுடி...

வெளிக்கதவில் இருந்து நூறடி தூரம் நடந்து தார்சாவுக்கு வந்த எலி டாக்டர், சாக்குப் போக்காய் பேசினார்.

"ஒன்ன எங்கெல்லாம் தேடுறதுடா... உரக்கடைய வேலக்காரப் பயலுவ கிட்ட விட்டுட்டு வந்தா... கடைதான் உருப்படுமா... நீதான் உருப்படுவியா."

“ஒம்ம சோலிக் கழுதயப் பார்த்துட்டு சும்மா கிடயும்... கடையை எப்டிப் பாக்கணுமுன்னு எனக்குத் தெரியும்... பெரிசா கடை கொடுத்துட்டவர் மாதிரி பேசுறாரு... புத்தி கெட்ட மனுஷங்க... மகன் புதுசா ஒரு கடை திறக்கானேன்னு ஒரு நெனப்பு கிடையாது. கடைப் பக்கம் போவோமுன்னு ஒரு எண்ணம் வர்ல... அப்பாவாம் அப்பா.. பெரிய அப்பா...”

துளசிங்கம் வேகமாக வெளியேறினான்..... எதிரே வந்த கோழியைக் காலால் எத்தியபடியே போனான்... அலங்காரிக்கு மனம் கோணியது. முகம் கோணியது.... அந்தச் சமயம் பார்த்து, வந்த கணவனிடம் கோபத்தைக் காட்டினாள்.

“புத்தி கெட்ட மனுஷா... கதவ ஏன் தாழி மாதிரி திறந்து வச்சுட்டு வாறீரு... நல்லா பூட்டும்...”

சீமைச்சாமி இன்னும் வேட்டியைக் கட்டாமலே கதவைத் தாழிட்டுவிட்டு, மனைவி இருந்த பக்கம் ஓடிவந்து, ஈரம்பட்ட முகத்தை, இரண்டு தோள்களிலும் வைத்துத் தேய்த்தபடியே எலி டாக்டர் முகத்துக்கு எதிராக நின்று வேஷ்டியைக் கட்டப் போனார்... டாக்டர் கத்தினார்...

“ஒனக்கு மூளை இருக்காடா... முட்டப்பயலே... ஒதுக்குப்புறமா போயி வேட்டிய கட்டேமுல... புத்திகெட்ட பயல...”

“இது புத்தி சரியா இருந்தா நான் ஏன் சீரழியுறேன்..”

“என்ன அலங்காரி... ஒன் பேச்சு ஒரு மாதிரி இருக்குது...”

“என் பேச்சு எப்பவுமே ஒரு மாதிரிதான். யாரு கதவத் தட்டுறது... யோவ் தட்டுக் கெட்ட மனுஷா... கதவத் திறந்துட்டு பூட்டும்... அப்டியே தோட்டத்துக்குப் போயி ஆட்டுக்கு புல்லு வெட்டிட்டு வாரும்...”

“கதவப் பூட்டிட்டு எப்டி வெளில போறது...”

“என் தலையெழுத்து... எழுதாக்குறைக்கு அழுதா முடியாது... சரி வாரவரு கதவப் பாத்துக்குவாரு.... நீரு போயித் தொலையும்...”

சீமைச்சாமி திறந்துவிட்ட கதவு வழியாக உள்ளே எட்டிப் பார்த்தார். காஞ்சான்... எலி டாக்டரைப் பார்த்துத் திடுக்கிட வில்லையானாலும், சங்கடப்பட்டார். எல்லாருக்குமே 'ரகசியமாய்' தெரிந்த விஷயங்களை பகிரங்கமாச் சொல்ல முடியுமா என்ன.... காஞ்சான் தார்சாவுக்கு வந்து, பெஞ்சில் எலி டாக்டர் பக்கத்தில் உட்கார்ந்தார். இருவரும் ஒருவரை ஒருவர் வெளியேற்றுவதில் ஈடுபட்டார்கள்.

"சிமெண்ட் கடை போடப்போறேன்.... அப்பாவக் காணுமேன்னு ஒன் மவன் துளசிங்கம் ஊரு பூராவும் ஒன்னைத் தேடிக்கிட்டு இருக்கான். நீ இங்க வந்து ஜம்முன்னு இருக்கே..."

"இன்னக்கி வயலுல நடுவைன்னு சொன்னே... வேலையாட்கள மேல் பாக்கதுக்காவ போகாண்டாமா... நீ போகாட்டால் திருட்டுப் பய பிள்ளிய சரியா நடாது... நாத்து தண்ணிலயே முங்கிப் போகும்..."

"இந்த வயசுக்கு மேல நம்மால வேல பாக்க முடியாது... பயலுவ எதுக்கு இருக்கான்... கவனிச்சுக்கு வாங்க..."

"ஒன்னை கவனிச்சுட்டுத்தான் இருக்காங்க....."

"தன்னை மெச்சிக்கிட்டாம் தவிட்டுக் கொழுக்கட்டை... ஈயத்தைப் பார்த்து இழிச்சுதாம் பித்தள..."

அவர்கள் பேசுவதை ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்த அலங்காரி, அவர்களில் அப்போதைக்கு எவரைத் தேர்ந்தெடுப்பது என்பதில் பிரச்சினை இல்லை.... துளசிங்கம் சொல்ல வேண்டியதச் சூட்சகமாகச் சொல்லிவிட்டான்.... எவரைப் பகைத்தாலும் அவனைப் பகைக்கப்படாது... இந்த மனுஷனை அவன் கண்ணுமுன்னால் கடைசில காட்டினால்தான் சித்தி திருந்திட்டாள்னு நினைக் காட்டாலும், திருந்தி வாரான்னு நினைப்பான்...

அலங்காரி சாமர்த்தியமாகப் பேசினாள்...

"மச்சான் நம்ம பையன் சிமெண்ட் கடை போடுறாமுல்லா... நீரு பெத்தப்பன்... கற்பூரம் ஏத்தும்போது நிக்காண்டாமா..."

"நீயும் சொந்தச் சித்திதானே... நீயும் வா..."

"நான் வரத்தயார்... ஆனால் ஒம்ம பொண்டாட்டி... சரியான தாடகையாச்சே... நான் அங்க வந்தால் ஆடமாட்டாள்? ஒமக்கும் அவளத் தட்டிக் கேட்க துப்பு கிடையாது...."

எலி டாக்டர் புரிந்து கொண்டார். புறப்பட்டார். இன்னும் அங்கே இருந்தால் பெண்டாட்டியைப் பற்றி என்னவெல்லாமோ பேசுவாள். 'கடைசில இந்தக் காஞ்சான் பயலவிட நான் கழிவாய் போயிட்டேனே..'

தெருக்கதவை நோக்கி நடந்த எலி டாக்டர், காலடிச் சத்தம் கேட்டுத் திரும்பினார். காஞ்சானை சந்தோஷமாகக் கேட்டார்.

"நீயும் என் மகன் உரக் கடைக்கு வாரதுல சந்தோஷம்..."

"நான் அதுக்கு வர்ல... ஒன்னை அனுப்பிட்டு கதவைப் பூட்டுறதுக்கு வந்தேன்..."

எலி டாக்டரை அனுப்பிவிட்டு கதவையும் தாழிட்டு விட்டு, மீண்டும் அலங்காரியிடம் வந்த காஞ்சான் பல்லை இளித்தார்.... அலங்காரி, அவரை, ஏற இறங்கப் பார்த்தாள்... 'ஏய் காஞ்சான்! அந்த ஆலமரத்தடி விஷயத்துல என்னை என்னமாப் பேசுனே.... மறந்துட்டேன்னா நெனச்சே... தாய் பிள்ளையா இருக்க ஒங்களா நானா கெடுக்கேன்? இரு... இரு...'

வாழ்க்கையில் மேலும் முன்னேறுவதற்கு ஏற்கனவே முன்னேறிய அனுபவத்தில் ஒவ்வொருவருக்கும் தனக்கு என்று ஒரு வழியமைத்துக் கொள்வார்களே, அதுபோல், அலங்காரியோ தனக்கென்று இருவேறு தனிப்பார்வைகளை வகுத்திருந்தாள்.... தலையை லேசாய்ச் சாய்த்து உதடுகளை முத்தமிடப் போவதுபோல் குவித்து, தலை முடியைத் தோள் வழியாக மார்பிலே போட்டுக் கொண்டு கண்களை அகலமாக்கி, இப்போதுதான் புதுசாய்ப் பார்ப்பது போலவும் பார்ப்பாள்... அப்படிப் பார்த்தால் அது படுக்கையறைப் பார்வை என்று பொருள்.... இல்லையானால்... கழுத்தை முன்னால் நீட்டி கண்களை இடுக்கி, இடுப்பு மேல் கைபோட்டு பார்ப்பாள். இது இளக்காரப் பார்வை...

அலங்காரி இப்போது இரண்டாவது ரகப் பார்வையில் நின்றபடி, காஞ்சானுக்கு ஆணையிட்டாள்.

"மொதல்ல.... தெருக்கதவ நல்லா திறந்து வச்சுட்டு வாரும்."

"ஏன் பிள்ள... புதுப் பேச்சு..."

"நான் புலி போல நம்பற மனுஷன்... எலிபோல ஆகும்போது.... நானும் மாறித்தான் ஆகணும்... சரி. சரி.. கதவத் திறவும்.... ஒம்ம என் புருஷனோட பெரியப்பா மவன்னுதான் இப்போ பேசுறேன்..... 'அது'ன்னு நினைச்சுப் பேசல. நீரு கதவைத் திறக்கியரா நான் திறக்கட்டுமா.... கையை விடும்."

"ஒனக்காவ ஆசையோட திருநெல்வேலி அல்வா வாங்கிட்டு வந்திருக்கேன். மெட்ராஸ் போயிருக்கிற இசக்கிப் பயகிட்ட காஞ்சிபுரம் பட்டுப் புடவ வாங்கிட்டு வரச் சொல்லியிருக்கேன்..."

"என்னை என்ன தாசின்னு நினைச்சிரா... அப்படி நெனச்சா இப்பவே இடத்தைக் காலி பண்ணும்... எங்க அக்கா அதான் ஒம்ம பெண்டாட்டி எப்போ ஒரு காலத்தில் 'காஞ்சானுக்கு' என்னைக் கட்டி வச்சிட்டாங்கன்னு பட்டி தொட்டி பதினாறுக்கும் கேட்கும் படியா தமுக்கடிச்சாள்னு கேள்விப்பட்டனோ, அந்த பரிதாபத்துலதான் ஒம்ம மேல ஆச வச்சது.... காசு பணத்த நினைச்சில்ல..."

"நான் அப்படிச் சொன்னனா... அந்தச் செறுக்கி எனக்கு கொடுத்த சூட்டுக்கு நீதான் மருந்துன்னு எனக்குத் தெரியாதா..."

"எங்கக்கா சொன்னது சரிதான்னு நினைக்கேன்... நீருதான் ஒம்ம புத்தியக் காட்டிட்டியரே.... பேசாம போவும்... எங்க தாயா பிள்ளையா பழகுதியரோ... அங்க போவும்... ஒம்ம ஒட்டும் வேண்டாம்... உறவும் வேண்டாம். சரி...சரி..... கதவத் திறக்கணும்... கைய விடும்... வண்ணார் செய்தது தண்ணியோடயாம்.... இந்த அலங்காரி அன்பும் அப்படித்தான்...."

"சரி.... இப்போ உள்ளே வா.... அப்புறம் விவரமாய் பேசலாம்..."

"மொதல்ல எல்லாத்தையும் விவரமா பேசியாகணும்..."

"விவரமாத்தான் சொல்லித் தொலையேன்..."

"பச்சப் பிள்ள புரியாது... அந்த ஆலமரத்தடியில என்ன சொன்னீரு...? அதயும் அந்த திருமலைப் பயல் முன்னால... செம்பட்டையான் குடும்பமும், கரும்பட்டையான் குடும்பமும் தாயாப் பிள்ளியா பழகுற குடும்பங்க... ரெண்டு குடும்பத்தையும் உண்டு இல்லன்னு ஆக்கிடாதன்னு.... இந்த வாய்தானே சொல்லிச்சு..... இப்போ ஏன்..... அது இப்டி இளிக்குது...."

"பயித்தியாரப் பய மகளா இருக்கியே... நான் எதுக்குச் சொன்னேன்னு யோசித்துப் பாத்தியா.... ஒனக்கும், எனக்கும் இஸ்க்கு, தொஸ்க்கு இருக்குமுன்னு ஊரில ஒரு சந்தேகம்... அப்டில்லாம் கிடையாது என்கிறத சொல்லாமச் சொல்லுறது மாதிரிதான் நான் அப்டிச் பேசுனேன்... வேற அர்த்தத்தில இல்ல."

"ஒமக்கென்ன.. கொஞ்சுறதுக்கு ஒரு இடம்..... குலைக்கிறதுக்கு ஒரு இடம்.... கடைசியில எனக்குத்தான் யாருமில்ல..."

"ஒன்மேல ஒரு தூசிபட பொறுப்பேனா...."

"நிசந்தான்.... தூசிபட சம்மதிக்க மாட்டியரு.... ஏன்னா... அந்தச் சாக்குல தூசியத் தட்டுறது மாதிரி என்னத் தட்டலாம் பாரும்.... கடைசில ஒம்மால நான்தான் அவமானப்பட்டேன்..."

"விஷயம் சொல்லு... கண்ணு.... என் ராசாத்தி இல்ல..."

"பேச்சுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்ல.... ஒமக்கென்ன, அந்த ஆலமரத்தடில அப்டிப் பேசிப்பிட்டீரு. என்னை நீரே அப்பிடிப் பேசிட்டாதாலே யாரு வேணுமுன்னாலும் எப்படி வேணுமுன்னாலும் ஏசலாமுன்னு ஆயிப் போச்சு.... நான் பழனிச்சாமி அண்ணாச்சி.... சீ... எவன் அண்ணாச்சி.... பழனிச்சாமி வீட்டு வழியா சிவனேன்னு போய்க்கிட்டு இருக்கேன்.... பேச்சியம்மா புருஷன், வீட்டுக்குள்ள கூப்பிட்டு வச்சு ஏதோ கேட்கப் போனான்.... அதுக்குள்ள அவன் பெண்டாட்டி பேச்சி என்னை அவன்கூட போனவள், இவன்கூட போனவள், அவளே.... இவளேன்னு கண்டபடி திட்டிட்டா...."

"செறுக்கிய கொண்டச் சிரைக்கணும்... இவள் மட்டும் கல்யாணம் ஆவுறதுக்கு முன்னால யோக்கியமா? நீ அவள் நாக்கைப் பிடுங்குறது மாதிரி கேட்டிருக்கணும்."

"நான் அப்டிக் கேட்டிருந்தால் அங்கேயே என்னை ஒரே நொறுக்காய் நொறுக்கியிருப்பாங்க... நீரும் அங்க வந்து நான்தான் ரெண்டு குடும்பத்தையும் துண்டு போடுறதாச் சொல்லியிருப்பியரு.... ஒம்மால நான் பட்ட அவமானம் போதுமுய்யா..."

"என் ரத்தம் எப்டிக் கொதிக்குது தெரியுமா... பழனிச்சாமி மச்சான் தட்டிக் கேட்கலியா...."

"சரியான ஆள். கிள்ளி மனுஷன்..... பேச்சியம்மாவையும் கிள்ளி விட்டு, என்னையும் தாலாட்டுற மாதிரிப் பேசுறாரு.... கடைசில ஒம்மப் பார்த்து அறைக்குள்ளதான் ஆசையோட வெட்கப்பட்டேன்னா..... இப்போ அம்பலத்துலயும் வெட்கப்பட வேண்டியதாப் போச்சு.... என்ன பேச்சை பேசிட்டா..."

"இருக்கட்டும்... இருக்கட்டும்... அவள ஒன் காலுல விழ வைக்கேன்...."

"அந்தக் குடும்பமே என் காலுல விழத்தான் போவுது.... ஆனால் ஒம்மால இல்ல... நம்ம குலதெய்வம் சுடலமாட சாமியால..."

"என்ன பிள்ள உளறுற...."

"அது கிடக்கட்டும்... நம்ம சுடலைக்கு எப்போ கொடை கொடுக்கோம்..."

"தெரியாதது மாதிரி கேட்கிறீயே... ஆடிக் கடைசி வெள்ளியில..."

"அத மொதல் வெள்ளியில கொடுத்தா என்ன..."

"அது முடியாதே.... கரும்பட்டையான் குலதெய்வம் காளியம்மனுக்கு முதல் வெள்ளியில வழக்கமாக கொடுக்காங்க....."

"அவங்க வழக்கம் கிடக்கட்டும்..... அந்த வழக்கத்த ஒடச்சி.... நம்ம மாடனுக்கு ஏன் முதல் வெள்ளியில கொடுக்கப்படாது. ஏதும் சட்டமா.... தர்மமா..."

"கொடுக்கக்கூடாதுன்னு இல்ல.... பரம்பர பரம்பரையாய் வருகிற வழக்கம்..."

"அப்போ.... குடுமி வச்சாங்க..... இப்போ இருக்கா..... அப்போ நாட்டாண்மைன்னு தனி அந்தஸ்து தனிப்பங்கு இருந்துது.... இப்போ இருக்கா... பரம்பரை பரம்பரையாய் ஒரு அடிமைப் பழக்கத்த மாத்தப் படாதுன்னு சட்டமா..."

"தாயா பிள்ளையா பழகிட்டோம்..."

"நாமதான் தாயா பழகுறோம்... அவங்க ஒண்ணும் பிள்ளையா பழகல.... அப்படி நினைச்சா என்னை இப்டி பேசியிருப்பாளா...."

"ஒன் கோபமும் நியாயமும் புரியுது..... அதோட காளியம்மான் தாய்.. சுடலை அவளோட பிள்ளை.... அம்மாவுக்கு விசேஷம் முதல்ல... நடக்கதுதானே முறை..."

"பிள்ளை தலையெடுத்தால் தாய் ஒதுங்கிக்கணும்... இதுவரைக்கும் பையத்தியாரங்களாய் இருந்த செம்பட்டையான் கூட்டம் ஒதுங்கணும்..."

"சரி அவங்ககிட்டே பேசிப் பார்ப்போம்.... இப்போ உள்ளே வா..."

அலங்காரி, இப்போது முதலாவது பார்வையை வீசினாள். தலை முடியை பின்னால் தோள்வழியாய் போட்டு, கண்களை அகலப்படுத்தி, வாயைக் குவித்து, காஞ்சான் தோளிலே செல்லமாக கைபோட்டு, அவர் காதைப் பிடித்துத் திருகியபடியே உபதேசித்தாள்.

"இந்த ஊர்ல அவங்க குடும்பந்தே உசத்தின்னு அந்த கரும் பட்டையான் பயலுவளுக்கு ஒரு நெனப்பு..... வரப்போற ப்ஞ்சாயத்து தேர்தல்லகூட பழனிச்சாமி தான் தலைவருன்னு இப்பவே பேசுறாங்க.... நாம் நம்ம துளசிங்கத்தையும் யோசிச்சுப் பாருங்கன்னு சொல்றதுக்குக்கூட வக்கில்லாம இருக்கோம்... ஊர்ல குளத்து மீன் பங்காகட்டும், வழக்கு வம்பு விவகாரமாகட்டும், கரும்பட்டையான் குடும்பம்தான் முன்னால நிக்குது..... அதுவும் நெஞ்ச நிமிர்த்தி நிகருல்லன்னு நெனப்புல... இதுக்குல்லாம் காரணம் அவங்க குலதெய்வத்துக்கு முதல்ல அம்மன் கொடை கொடுக்கிறதாலதான் நாமே நம்ம தெய்வத்தை பின்னால நினைக்கதாலதான் இப்டிக்

கிடக்கோம்... இந்த வழக்கத்தை மாத்துனாத்தான் அவங்க திமிறு அடங்கும்... 'காஞ்சான் பயல நீ வச்சுக்கிட்டு இருக்கது எனக்குத் தெரியாதாடி'ன்னு பேச்சி என்னப் பார்த்து ஒரு பேச்சுப் பேசிட்டாள்.... நீரு பயலாம்.. அதுவும் காஞ்சான் பயலாம்... சுப்பிரமணியன்னு நெசப் பேரச் சொல்லுறது? பயலாம்.... காஞ்சான் பயலாம்..."

"நீ சொல்றதுலயும் ஒரு நியாயம் இருக்குது... அந்தப் பயலுவளும் நம்மள தெம்மாடின்னுதான் நெனக்காங்க.... இல்லாட்டா இந்தக் குடும்பத்துக்கே பெரிய மனுஷனான என்னை அப்படி பேசியிருக்கமாட்டாள்... சரி..... இப்போ என்ன செய்யணுமுன்னு சொல்லுதே..."

"விடிய விடிய ராமாயணம் கேட்டுட்டு சீதைக்கு ராமன் சித்தப்பான்னு என் புருஷன் கேணையன் கேள்வி கேட்டது மாதிரி இருக்கு..... இந்த ஆடி மாத முதல் வெள்ளில நம்ம மாடனுக்கு கொடை கொடுக்கணும்.. என்ன சொல்லுதீரு...."

"பரம்பர பழக்கத்தை மாத்தப்படாதுன்னு கரும்பட்டையான் பயலுவ தகராறுக்கு வந்தால்..."

"இதோ என் கையில பத்து வளையல் கிடக்குது.... நம்ம குடும்பத்து பொம்பிளய கிட்ட போனால் நூறு வளையல் சேரும்... செம்பட்டையான் ஒவ்வொருத்தனும் இதைப் போட்டுக்கங்க.... வேட்டியைத் தூக்கி முந்தானையாப் போட்டுக்கங்க...."

"சரிப்பா... அவங்க அம்மனுக்கு முதல் வெள்ளில கொடை கொடுத்தாலும் நம்ம மாடனுக்கும் முதல் வெள்ளிய கொடை... நீ உள்ளே வா...."

"சவடால் பேச்சில இருக்கப்படாது... இது நீரு மட்டும் செய்யுற காரியமில்ல... ஆடி பிறக்க இன்னும் பதினைந்து நாள்தான் இருக்குது... இப்பவே போய் நம்ம குடும்பத்து ஆட்கள முடிச்சுட்டு வாரும்.... அப்படி முடிச்சிட்டியரு.... எலி டாக்டர, கிட்டவே சேக்கமாட்டேன்... இல்லாட்டா வேற மாதிரி... சரி புறப்படும்... இந்தக் கிணத்துத் தண்ணி இங்கதான் இருக்கும்."

அலங்காரி காஞ்சானின் கையைப் பிடித்து இழுத்து, கதவருகே கொண்டு வந்து, கதவைத் திறந்தாள். தெருவுக்கு வந்த காஞ்சான் ஏமாற்றத்தை ஆவேசமாக மாற்றிக் கொண்டு நடை போட்டார்....

## 6

'குளத்தடி' வயல், வசதியுள்ள குடும்பத்தின் மூத்த குழந்தை மாதிரி; குளத்தின் பெரிய வாய்க்காலில் உருண்டோடும் நீரைக் கிளை வாய்க்கால் மூலம் உள்வாங்கி செழித்துக் கொழித்த நிலம் அந்த குளத்தின் முக்கிய கால்வாயின் தண்ணீர் முதலில் இந்த வயலில் பாய்ந்தாக வேண்டிய இடத்தில் உள்ள இடம். தங்க விதைகளை விதைத்ததுபோல் நெற்பயிர்கள் கதிர் சூல்களோடு பொன்மயமாய் மின்னி, தள்ளாடித் தள்ளாடி ஆடின. அந்த கர்ப்பிணிப் பெண்களுக்குத் தென்னை மரங்கள் காவல் காத்தன. ஆமணக்குச் செடிகள் சாமரம் வீசின.

வயல் ஓரமாய் உள்ள கிணற்றில் பம்ப் செட்டில் இருந்து தண்ணீர் பாளம் பாளமாய்ப் பாய்ந்தது, ஒளி வெள்ளம் போன்ற முழுவீச்சு குட்டி அருவி ஒன்று கொட்டிக் கொட்டிக் கமலைக் கிடங்கைக் கடலாக்கிக் கொண்டிருந்தது. சேலை, பாவாடைகளைத் துவைத்து முடித்துச் சரல் மேட்டில் உலர்த்திவிட்டு, முகமெங்கும் மஞ்சளும், உடலெங்கும் சோப்புமாய் நின்ற கோலவடிவு, பின்னலை அவிழ்த்துப் பின்புறமாய்க் கையைக் கொண்டு போய்த் தலைமுடியை தட்டிவிட்டு, தகரக்குழாய் வழியாகப் பாய்ந்த தண்ணீருக்குள் தலையைக் கொடுத்தாள். அப்படியே மல்லாந்து கிணத்துச் சுவரில் சாய்ந்தபடி கால்களை நீட்டி, கைகளைப் பரப்பி மேலே இருந்து கொட்டிய நீரைச் சிணுங்கிச் சிணுங்கி அதைக் கடிப்பது போல் கடித்து, வாய்க்குள் வந்த நீரைச் செல்லஞ் செல்லமாய்க் கொப்பளித்து, கடலலை போல், வேக வேகமாய்ப் பாய்ந்த நீர், தன் மேனியில் பட்டு, பூப்பூவாய்ச் சிதறுவதை ரசித்தபடியே குளித்துக் கொண்டிருந்தபோது —

கோலவடிவு, ஆள் அரவம் கேட்டு, திடுக்கிட்டுத் திரும்பினாள். அந்த அச்சத்தைக் காட்டுவதுபோல் ஊசியாய் ஒன்றான உதடுகள், சிவப்புச் சிப்பியாய் மலர்ந்தன. அலங்காரி, தோளில் புடவைகளை முதுகுப் பக்கமும், மார்புப் பக்கமும் தொங்கப்போட்டு வலது கையில் கலர் கலராக ஜாக்கெட்டுக்களையும், வெள்ளைப் பாவாடைகளையும், ஈரஞ் சொட்டச் சொட்ட இடுப்போடு சேர்த்து அணைத்தபடி, கோலவடிவின் மேல் ஒரு ஈரப் பார்வையை வீசியபடி கேட்டாள்.

“ஒன்ன மாதிரி பெரிய இடத்துப் பொண்ணுவ இப்டிப் பட்டப் பகலுல பப்ளிக்கா குளிச்சா நல்லதாம்மா...”

“போங்கத்த... பொல்லாத பெரிய இடம்... பெரிய இடமுன்னு நம்மள நாமே சின்ன இடத்துல பூட்டிக்கது தப்பு....”

“அப்போ அத்தைய மாதிரி குளத்துல வந்து குளிக்கது....”

“குற்றாலத்து பெரிய அருவில குளிச்சாச்சு... ஐந்தருவில ஆடியாச்சு.... நம்ம குளத்துல நீச்சல் அடிச்சாச்சு.... ஆனால் எங்க பம்பு செட்டு தண்ணில தலையைக் கொடுக்கிற சுகம் வேற எதுலயும் வர்ல அத்தே... நீங்களும் ஒரு தடவ இதுல குளிச்சுப் பார்த்தா தெரியும்.”

“எல்லா வயலுலயும் குளத்துத் தண்ணி பாயுது... அதனால பம்ப் செட்டுக்கு வேலயில்ல.... ஒங்க கிணத்துல அதுவும் குளத்தடிக் கிணத்துல இப்டி பம்ப்செட்ட போட்டு தண்ணிய கொட்ட வச்சால் பார்க்கவங்க என்ன நெனப்பாங்க....”

“அது அவங்க கண்ணோட கோளாறு...”

“ஒங்க அண்ணாச்சி திருமலை பார்த்தாமுன்னால்.....”

“எங்கண்ணாச்சி கோபம் வச்சிருக்கிற மனசுல குணத்தையும் வச்சிருக்கவன்... அவன்தான் அப்பாவுக்குத் தெரியாம பம்ப் செட் சாவியைக் கொடுத்தான்....”

“ஒன்பாடு லக்கிதான்...”

கோலவடிவு குளித்து முடித்துவிட்டு, கீழே தொங்கிய முந்தானைச் சேலையைக் கசக்கிப் பிழிந்துவிட்டு, அதை வைத்தே தலையைத் தேய்த்துவிட்டு பம்ப் செட்டு அறைக்குள் போனாள். கால்மணி நேரம் கழித்து, மாம்பழ டிசைன் போட்ட புடவையோடும், மஞ்சள் கலர் ஜாக்கெட்டோடும் வெளி வந்தாள்.

"ஒங்கள ரொம்ப நேரம் காக்க வச்சுட்டேனா அத்த..."

"அப்படில்லாம் இல்ல.... இந்த அழகுக் கோலத்த கண்ணுல பார்க்கதுக்கு எவ்வளவு நேரமுன்னாலும் கால நிறுத்தி வைக்கலாம்."

"நல்லாத்தான் பேசுறிய..."

"ஆமா.... ஒன் சேலையில ஈரம் தெரியல...."

"எப்டித் தெரியும்... வண்ணான் வெளுத்த புடவை... எனக்கு ஈரப் புடவையோட ஊரு வழியா நடக்கதுக்கு ஒரு மாதிரி இருக்கும்... துணி அப்படியே உடம்பு முழுசும் ஒட்டி சீ... அதனாலதான் குளிக்க வரும்போதெல்லாம் கூடவே ஒரு சேலயக் கொண்டு வந்துடுறது..."

கோலவடிவு, குளிக்கும்போது உடுத்த சேலையை, ரெண்டு 'தப்புத் தப்பிவிட்டு' அதை சரல் மேட்டில், 'காயப்' போட்டுவிட்டு, அதே மேட்டில் காய்ந்து கொண்டிருந்த துணிமணிகளை ஒவ்வொன்றாய் எடுத்து, அடுக்கிக் கொண்டிருந்தபோது, அலங்காரி அத்தை அங்கேயே, பூடகமாய்க் கேட்டாள்.

"மேலத் தெருவுல காத்துக் கருப்பன் குடும்பத்தச் சேர்ந்த அக்கினி ராசாவப்பத்தி நீ என்ன நெனக்கே..."

"ராமையா மாமா மகன்தானே...... நல்லவனாச்சே... தானுண்டு.... தன் வயலுண்டுன்னு இருக்கிறவன்... வம்பு தும்பு கிடையாதவன்னு அப்பா சொல்லுவார்... எந்தக் கெட்ட பழக்கமும் கிடையாதாம்...."

"ஒங்கப்பா சொன்னால் அதுல ஒரு அர்த்தம் இருக்கும்.... பரவாயில்ல.... ஒனக்குக் பிடிச்சவனே புருஷனா அமையுறதுல எனக்கு சந்தோஷம்..."

"'என்ன அத்த சொல்லுதிய...."

"ஒன்னை அக்கினி ராசாவுக்கு கட்டி வைக்கறதா..... ஒரு பேச்சு... அடிபடுது.... அவங்களே ஒன்னைத் தரச் சொல்லி கேட்டாங்களாம்..."

"அய்யய்யோ.... எங்கப்பா சம்மதிக்க மாட்டாரு.... அவரு சம்மதிச்சாலும், நான் சம்மதிக்க மாட்டேன்..."

"என்ன கோலம்... அலங்கோலமாய் பேசுற.... நீதான் அவனை நல்லவன்னு சொன்னே... கெட்ட பழக்கம் இல்லாதவன்னு சொன்னே..."

"நல்லவங்களா இருக்கிறவங்களை எல்லாம் ஒருத்தி விரும்பணுமுன்னு இல்ல. கெட்ட பழக்கம் இல்லாமல் இருக்கதுல சந்தோஷந்தான்... ஆனால் அதுவே நல்ல பழக்கமா ஆயிடாது..."

"அப்போ நல்ல பழக்கமுன்னா எதுதான்..."

"நாலுபேர் கிட்ட கலகலப்பா பேசணும்... அதுவோ வெத்துப் பேச்சாவப்படாது... சிரிக்கச் சிரிக்கப் பேசணும்.... அதேசமயம் சிரிப்பாய் சிரிக்கும்படியாய் உளறப்படாது.... கிண்டலா பேசணும்... அதுவே இளக்காரமா ஆயிடப்படாது.... நாலு நர்டு சுத்தியிருக்கணும்... அதேசமயம் நம்ம ஊர மறக்கவும் படாது.... வம்புச் சண்டைக்குப் போகாத சாதுவா இருக்கணும்.... அதேசமயம் வந்த சண்டைக்கும் பயந்து போகாத வீரம் இருக்கணும்... மினுக்கி மினுக்கி உடுக்கவும் படாது... அதேசமயம் உடம்புல ஒண்ணுமே இல்லாதது மாதிரி இந்த அக்னி ராசா போல வேட்டிய தார்ப்பாச்சு காய்ப்பு பிடிச்ச முட்டுக் காலுகள காட்டப்படாது... நல்லவனா இருக்கணும்... ஆனால் அப்பாவியாய் இருக்கப்படாது."

"எம்மாடி, என்னமா பேசுறே.... நான் ஒன்ன ஊமைன்னு நெனச்சேன்... ஒன் நெஞ்சில இத்தனை சங்கதியளும் இருக்கு துன்னு யாருக்கும் தெரியாது.... நீ சொல்ற தகுதியெல்லாம் எங்க மச்சான் மகன் துளசிங்கத்துட்டதான் இருக்குது...."

"நான் யாரையும் குறிப்பாச் சொல்லல.... ஒருத்தரைப் பார்க்கும் போது அப்படிப் பார்த்தவங்க மனசுல பயத்தையும் தரப்படாது..... பாவமா இருக்கேன்னு பாக்கவங்க நினைக்கறது மாதிரியும் இருக்கப்படாது.... அக்னி ராசாவப் பார்க்கும்போது பாவமாத்தான் தெரியும்..."

"எங்க துளசிங்கத்தைப் பாக்க பயம் வருமோ..."

"சீ... அப்டில்லாம் இல்ல... எத்த.... இந்த கல்யாணப் பேச்சப் பற்றி கொஞ்சம் விவரமாச் சொல்லுங்க.... எனக்குப் பயமா இருக்கு... நல்லவன் என்கிற ஒரே காரணத்துக்காவ அப்பா அவனை என் தலையில கட்டப்படாது..."

"ஒன் நிலம எனக்குப் புரியுதும்மா.... பொண்டாட்டிகிட்ட ஒருத்தர் ரொம்ப ரொம்ப நல்லவனா இருக்கப்படாது... போக்கிரியா இருக்கணும்... போக்கிரின்னு அத்தை எந்த அர்த்தத்துல சொல்லுதேன்னு புரியுதா.... அடடே..... வெட்கத்தப் பாரு.... நீ புத்திசாலி.... நான்தான் முட்டாள்..... ஏமாந்துட்டேன் ஒரேயடியாய்...."

"யார்கிட்டே..."

"வேறு யார் கிட்டே... என் புருஷன் கிட்டதான்... வெட்டாம்பட்டில விளையாட்டுத்தனமா திரிஞ்சு கடைசில.... வினையாயிட்டேன்... கட்டிக்க வந்த வெளியூர் பயலுகள உள்ளூர் பயலுவ கலச்சி விட்டுட்டாங்க.... கடைசில எங்கம்மா, 'இவள் கல்யாணமாவாமலே கிழவியாய் ஆயிடுவா போலிருக்கே.... குருடோ, செவிடோ... நொண்டியோ, முடமோ எவனயாவது ஒருத்தன இழுத்துட்டு ஓடிப்போனாக்கூட சந்தோஷப்படுவே'ன்னு என் காதுபடவே இன்னொரு கிழவிகிட்டச் சொன்னாள்..... அந்தச் சமயம் பார்த்து இந்த ஆணுல அழகு மன்னன் அர்ச்சுன ராசதுரை..... அதான் என் வீட்டுப் பேக்கன் கத்தரிக்காய் விற்க வந்தாரு... ஒனக்கு அக்னி ராசா எப்டித் தெரியுதோ அப்டித்தான் இந்த சீமையிலேயே இல்லாத சாமி.... எனக்கு பாவமாகத் தெரிஞ்சது... சும்மா சொல்லப்படாது.... என்னை சைக்கிள்ல தூக்கிட்டு வந்த அளவுக்கு நல்ல மனுஷன்தான்.... ஆனால் கட்டிக் காக்கத் தெரியாத தெம்மாடி... சரியான டப்பா... பாவம் பாத்து பாவப்பட்டேன்... பாவியாவே ஆயிட்டேன்.... எனக்கு வந்த நிலம ஒனக்கு வரப்படாது..."

கோலவடிவிற்கு உடம்பெல்லாம் நடுங்கியது... கையில் மடித்து வைத்த துணிகள் கீழே விழுந்து மண்ணை அப்பின. அலங்காரி,

அவற்றை வாங்கி மீண்டும் தண்ணீரில் நனைத்துப் பிழிந்தாள். அவற்றைத் தோளில் போட்டபடியே, ஒவ்வொன்றாய் எடுத்து உதறினாள். அப்போது குளத்துக் கரையைப் பார்த்து விட்டாள்.

"எப்பாவு.... துளசிங்கம்.... இங்க வாடா...."

"நீ வாட..... உடனே வா..."

"எப்பவுமே அவசரம்.... இங்க வாடா..."

கோலவடிவுக்கு அத்தையின் குரல் வலுத்தும், துளசிங்கம் குரல் சிறுத்தும் கேட்டன... வேறொரு சமயமாக இருந்தால், "ஆம்புள இங்கே எதுக்கு" என்றிருப்பாள். இப்போது ஒருவேளை அக்னி ராசாவுக்குக் கழுத்தை நீட்ட வேண்டியதிருக்குமோ என்று கழுத்தோடு சேர்த்துத் தலை சுழல நின்ற கோலவடிவு, அப்படியும் பேசவில்லை, இப்படியும் பேசவில்லை...

துளசிங்கம் உருண்டோடி வருவதுபோல் ஓடோடி வந்தான்.... அவளருகே வந்து மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க நின்றபடியே, ஒரு வரியின் கால்புள்ளி, அரைப்புள்ளி மாதிரி மூச்சு வாங்கிப் பேசப் போனான்... வழக்கம் போல் அலங்காரி, முந்திப் பேசினாள்.

"ஒன்ன நான்தான் கடிச்சு தின்னுவனா.... இல்ல... இந்தக் கோலவடிவுதான் கடிச்சுத் தின்னுடுவாளா.... ஏண்டா இப்டி வரமாட்டேன்னே...."

"தலைக்கு மேல ஆயிரம் வேலை இருக்குது.... இப்பவே மெட்ராஸ் போறேன்.... சிமெண்ட் கம்பெனி ஏஜெண்ட்களோட கூட்டம் நடக்குது... ஒன்கிட்ட சொல்லாமப் போக முடியுமா.... அதுக்கு வரதுக்கு பத்து நாளு ஆகும். ஒன் வீட்டுக்குப் போனேன்... நீ குளிக்கிற மதகுக்கு வந்தேன்... சித்தியப் பார்க்காமல் போகப் போறேமேன்னு கவலையோட கரையில நடந்தால் ஒன் குரல் கேட்குது.... இதோ சிமெண்ட் கடையில சாமி கும்பிட்ட குங்குமம்... சீக்கிரமா.... வாங்கு.... நேரமில்ல..."

"ரெயிலுக்குத்தான் இன்னும் நேரமிருக்கே..... ஏன் இப்டி பட்டையில போட்ட நண்டு மாதிரி துடிக்கே....?"

"ரெயிலுக்கு நேரம் இருந்தாலும் திருமலை இங்க வாரதுக்கு அதிக நேரம் இல்ல. 'என் வயலுக்குள்ள ஒனக்கென்னடா வேலை.... என் தங்கச்சி நிற்கான்னு தானே போனே'ன்னு வம்புக்கு வருவான்..."

"ஒன்னை மாதிரி அவனும் முன்கோபி... ஒன்னை மாதிரி அவனும் நல்லவன்... சரி... சரி... குங்குமத்த தா..."

"நான் மட்டும் வச்சிக்கிட்டா எப்படி...? அவளுக்கும் கொடு... நீயே அவள் நெற்றில வைடா...."

"ஒனக்கு வேற வேல இல்ல.... வேற வினயே வேண்டாம்..."

"நாலு நாடு சுத்தியும் கடைசில ஒன் சட்டாம்பட்டி புத்தி ஒன்னவிட்டுப் போக மாட்டேங்கே... கொளுந்தியா நெற்றியில குங்குமம் வச்சால் என்ன தப்பு... ஒன்னைவிட வயசுல சின்னவள்... அவள் எங்கே இருந்தாலும் நல்லா இருக்கணும்... அவளை வாழ்த்துற மாதிரிதான் உன்னை வைக்கச் சொல்லுதேன்..."

துளசிங்கம் கோலவடிவைப் ஏறிட்டுப் பார்த்தான்.... அவளோ, தரையில் பெருவிரலை வைத்துக் கிறுக்கிக் கொண்டிருந்தாள்.

எப்படிப்பட்ட பாட்டாக இருந்தாலும், அது சினிமாப் பாட்டாக வந்துவிட்டால் போதும் என்று நினைக்கும் கவிஞனைப் போல, பிரசுரமாவதாய் இருந்தால் எவ்வளவு மோசமாகவும் எழுதத் தயாராகும் எழுத்தாளியைப் போல, அலங்காரி தான் நடத்த நினைத்த நிகழ்ச்சி நடந்து கொண்டிருப்பதில் ஏற்பட்ட மகிழ்ச்சியைக் காட்டும் வகையில் தன்னைத்தானே பிரமிப்பாய் பார்த்தபடி, பெருமிதமாய் நின்றாள்... இப்போது அவளுக்குக் கோல வடிவு, துளசிங்கம், பேச்சியம்மா, முதலிய ஆட்களைப் பற்றிய எண்ணமே இல்லை.... ஒரு மொழியின் எழுத்துக்களைப் படித்துவிட்டு, அவற்றை மனதுக்குள் சேகரித்து விட்டு மறந்து விடுவோமே, அப்படி ஆண்டவன் எழுதும் தலையெழுத்துப் போல், தானும் தன்னாலேயே அழிக்க முடியாத ஒரு எழுத்தைத் தலையெழுத்துக்கு மேல், தலையாய எழுத்தால் எழுத முடியும் என்ற பெருமிதத்தில் கோலவடிவை உற்றுப் பார்த்தாள்..... அன்று ஆலமரத்தடியில் அவள் எதிர்த்துப் பேசியதுபோல், ஒருவேளை

இன்றும் எதிர்த்துப் பேசலாம் என்று ஓரளவு பயந்தவளுக்கு, கோலவடிவின் மௌனம் மனதைக் கொடி கட்டிப் பறக்கச் செய்தது... கோலவடிவின் முதுகைப் பிடித்து, துளசிங்கம் பக்கமாகத் தள்ளி விட்டபடியே பேசினாள்.

"இதுல யோசிக்கதுக்கு என்ன இருக்கு கோலம்...? குளிச்சிட்டு லட்சுமி மாதிரி தெரியுற ஒன் முகத்துல குங்குமம் வச்சால், நீ மகாலட்சுமி மாதிரி தெரிவே... துளசிங்கம் காத்திருக்கான் பாரு... ஆயிரத்தெட்டு வேலைய விட்டுட்டு ஒனக்காவ நிக்கான் பாரு... நீ நிமுத்துனாதான அவன் குங்குமம் வைக்க முடியும்... காலங்காத்தால எதை வேணுமுன்னாலும் வேண்டாமுன்னு சொல்லலாம். குங்குமத்த அப்டித் தட்டலாமா..... சும்மாத்தான் வைக்கப்போறான்.... தலய நிமுத்து கோலம்...."

கோலவடிவு கோடு போட்டுக் கொண்டிருந்த பெருவிரல் சுழற்சியை நிறுத்தாமல், மனதுக்குள் சுழன்று கொண்டிருந்தாள்... குங்குமம் வைக்கிறது நல்லதுதான். ஆனால் இவர்... இவரு எப்டி வைக்கலாம்... எப்டி என்னைத் தொடவிடலாம்... விடப்படாது... கூடவே கூடாது. பாவம் தப்பா நெனப்பாரோ... தப்பா நெனப்பாரேன்னு தப்பு செய்ய முடியுமா...? வேணுமுன்னா அவரு கைபடாமல் வைக்க முடியுமுன்னா வைக்கட்டும்.... அதெப்டி முடியும்... இதை அத்தை சொல்லுறதுல ஒரு அர்த்தம் இருக்கே.... சீ நேருக்கு நேரா... அவரு ஒன்னும் வைக்கப்படாதுன்னு எப்டிச் சொல்றதாம்... தயவு தாட்சண்யமுன்னு ஒன்று இருக்குதுல்லா.... அவரு குங்குமம் வைக்கிறதால வேற அர்த்தம் எப்டி வரும்... வரவே வராது... வரவிடவும் படாது.... அதுக்காக ஒரு ஆம்புள அதுவும் வாலிபன் ஒரு பொம்புளைக்கு அதுவும் சின்னஞ்சிறுசுக்கு.... சீ..."

துளசிங்கத்திற்குக் கொஞ்சம் எரிச்சல் வந்தது... சற்று அவசரம் வந்தது... அந்த இரண்டும் கலக்கப் பேசினான்.

"எனக்கு நேரமாவுது சித்தி... நீயே அவளுக்கு வச்சிவிடு... நான் வாறேன் சித்தி..."

கோலவடிவு அவனை அவசர அவசரமாக ஏறிட்டுப் பார்த்தாள்... பார்த்த விழிகளை முகத்தைத் தாவிப் பார்த்தபடியே நின்றன.... அலங்காரி அந்தச் சூழ்நிலையைச் சொல்லிக் காட்டினாள்.

"ஒனக்கு மூளையே கிடையாதுடா.... ஒரு பொண்ணோட கண்ணசைவில இருந்தே அவளோட மனசைப் புரிஞ்சுக்கத் தெரியல... அதுவும் சரிதான். முன்னப்பின்ன எந்த பெண்ணோடவும் பழகியிருந்தால் தானே ஒனக்குத் தெரியும்... நீதான் ஏகப் பொண்ணு விரதனாச்சே... சரிப்பா... நம்ம கோலவடிவு என்கிற நெனப்புல... அவள் நல்லா இருக்கணும் என்கிற எண்ணத்துல வைடா... குங்குமத்த வைடா கூறுகெட்ட குப்பா...."

இடது உள்ளங்கையில் ஆலிலைமேல் இருந்த குங்குமத்தை, ஆள்காட்டி விரலையும் பெருவிரலையும் இணைத்து எடுத்து, அவன் கரம் கோலவடிவின் நெற்றியில் போகப் போனபோது அவள் சிரித்துக் கொண்டே குனிந்தாள். சிணுங்கிக் கொண்டே பின்வாங்கினாள். அலங்காரி அவள் முதுகைப் பிடித்து நகர்த்தி, மோவாயைச் சற்று தூக்கி விட்டுவிட்டுக் கையை எடுத்தாள்... அந்த முகம் உயராமலும், தாழாமலும் இருந்ததில் அவன் சந்தோஷப்பட்டபோது _

துளசிங்கம் வலது கையில் நான்கு விரல்களைக் கோலவடிவின் தலையில் பரப்பிக் கொண்டு பெருவிரலால், அவள் நெற்றியை அழுத்தினான்..... அந்தக் குங்குமப் பதிவை வட்டமாய்ப் பிரசுரிப்பது போல், பெருவிரலை அவள் நெற்றிப் பொட்டில் லேசாக சுழலவிட்டு, கரத்தை எடுத்தான். உடனே அலங்காரி குலவையிட்டாள். எங்கேயோ பார்த்த காகம் எழுந்து பறந்தோடும்படி வாய்க்குள் நாக்கை மணியடிப்பதுபோல் சுற்றிவிட்டு, "இனிமே கோலவடிவுக்கு நல்ல காலம்தான்" என்று சொல்லி லேசாய் நிறுத்திவிட்டு, "கோலம் இனிமேல் யார்கிட்ட வாழ்க்கைப்பட்டாலும் அது நல்லாவே அமையும்" என்றாள் எச்சரிக்கையாக.

கோலவடிவு, அங்குமிங்குமாய்ப் பார்த்தாள்.... கரையில் யாரையும் காணோம்... கண்ணுக்கு எட்டிய தூரத்தில் காணோம்... அவரு என்ன

தொட்டத... ஏய் அவரு எங்கே தொட்டாரு... குங்குமம் வச்சாரு... பூசாரி வைக்கது மாதிரி... அவ்வளவுதான்... சரி போவட்டும்... நல்ல வேள.... யாரும் பாக்கல... குங்குமம் வச்சதும் நல்லவேள.... யாரும் பாக்காததும் நல்லவேள...

கோலவடிவு ஆடாது அசையாது சிரித்து நின்றாள்.... மீண்டும் பெருவிரலால் தரை கிழித்து கவிழ்ந்த தலையில் நிமிர முயன்ற கண்களை அரைவட்டம் போடவைத்து, குங்குமம் வைத்தவனை சூட்சமச் சிரிப்போடு பார்த்தாள். அலங்காரி விளக்கினாள்.

"ஏய் மவனே.... துளசிங்கம்.... என் மருமகள்.... என் ராசாத்திக்கு இந்த குங்குமம் எவ்வளவு அழகா இருக்குன்னு பாருடா... ஒரேடியாய் சிமிண்டு உரமுன்னு அலையாதடா.... அழக ரசிக்கவும் பழகிக்கடா.... என் ராசாத்திக்கு குங்குமம் நெருப்பு நிலா மாதிரி இருக்கதப் பாரு... குங்குமத்துக்கு மத்தில வெத்து இடம் இருந்தா அது விளங்காதுன்னு அர்த்தம்... நம்ம கோலத்துக்கு முழுசா இருக்கு..... அதிர்ஷ்டக்காரி.... பாருடா... எப்டி இருக்குன்னு...."

"நீயே பார்த்துக்கிட்டு இரு.... எனக்கு ரயிலுக்கு நேரமாயிட்டு..... நான் வாறேன்..."

கோலவடிவு தலையை நிமிர்த்தியபோது, துளசிங்கம் கிணற்றைத் தாண்டி போய் வாய்க்கால் பக்கம் போய்விட்டான். அவளுக்குக் கோபம்... போறேன்னு என்கிட்ட சொல்லலியே... சித்தி போறேன்னு சொல்லாம போறேன்னு பொதுப்படையாச் சொன்னதுல இருந்து அவரு எனக்கும் சேர்த்துத்தான் சொல்லியிருக்கார்னு அர்த்தம்... அய்யய்யோ நான் என்னெல்லாமோ நினைக்கேனே. ஏதோ முகத்த நிமுத்துனேன்.... ஏதோ குங்குமம் வச்சார். அதோட சரி... அதுக்கு மேல... அர்த்தப் படுத்துதல்..... அது... தப்பு... தப்பு.....

அலங்காரிக்கு கொஞ்சம் பயம் வந்தது... கோலவடிவை, ஒரு பக்கமாய் சாய்த்து பிடித்து அணைத்தபடியே கெஞ்சுவதுபோல் கேட்டாள்.

"வீட்ல குங்குமம் வச்சத சொல்லுவியோ... எப்பா... என் ராசாத்தி எப்படி இருக்காள்...? இப்ப தான் பிறந்த குழந்தை மாதிரி... இந்த

ஊரு நாகரீகம் இல்லாதது பாரு... நல்லுக்கும் கெட்டதுக்கும் வித்தியாசம் பாராதது பாரு... அதனால்தான் சொன்னே.... சொல்லமாட்டல்லா..”

அலங்காரி, அவள்-முகத்தை நிமிர்த்தப் போனபோது, கோலவடிவு அவள் பிடியில் இருந்து திமிறி, விலகி, நின்று கொண்டாள்... குங்குமம் அழிஞ்சுடப்படாதே... கலையுறது சகசந்தான்; ஆனால் காலங்காத்தாலயே கலையப்படாதே...

பம்ப் செட்டில் தண்ணீர் பீறிட்டுப் பாய்ந்தது... ஸ்விட்சை ஆப் செய்யப் போன கோலவடிவு, சரல் மேட்டில் கிடந்த மூங்கில் கழியை எடுத்து, தூர நின்றபடியே ஸ்விட்சை நிறுத்தினாள்.... இல்லையானால், தண்ணீருக்குப் பக்கத்துல போயி, அது நெத்தில தெறிச்சு குங்குமம் கரைஞ்சு.... சீ .... கரையத்தான் செய்யும்... ஆனால் மத்தில கரைஞ்சு வட்டக்கோடு போட்டது மாதிரி இருக்க அபசகுனமுன்னு அத்த சொல்றாளே... அதுக்காகத்தான் வேற எதுக்காகவும் இல்ல... ஆமா..... இல்ல... இல்ல.... இல்லவே இல்லை...

அலங்காரி, இந்தச் சமயம் பார்த்து, தனது தோளில் கிடந்த புடவையை எடுத்து, உதறினாள்... அதிலிருந்த தண்ணீர் கோலவடிவின் முகத்தல் தெறித்தது..... கோலம் ஆடிப்போய்விட்டாள். குங்குமம் கரைந்திருக்குமோ, அத்தைகிட்ட கேட்போமா வேண்டாம்... முகத்த நிமுத்துவோம்.. அழிஞ்சிருந்தா அத்தயே சொல்லுவாளே... குங்குமம் வைக்கும்போது நாலு விரலால தலையை எப்டி தட்டுனாரு... தட்டலடி தட்டல... ஒனக்கு தட்டுனது மாதிரி தெரிஞ்சுது... அவரு ஒண்ணும் தட்டல...

கோலவடிவு அலங்காரிக்கு முன்னால் போய் நின்றாள்... முகத்தை நிமிர்த்திக் காட்டினாள். அவளோ தன்பணி அப்போதைக்கு முடிந்து விட்ட திருப்தியில், உதறிய சேலையை வளைத்து இடது கையில் குறுக்காய்ப் போட்டபடி இப்போது பாவாடையை உதறினாள்.... அத்தையிடமிருந்து துள்ளிக் குதித்த கோலவடிவு கையோடு கண்ணாடி கொண்டு வராததுக்காக வருந்தினாள். பிறகு ஒரு யுக்தி வந்த மகிழ்ச்சியில் கமலைக் கிடக்கில் குனிந்து பார்த்தாள்.. அதில்

தங்கி நின்ற நீரில், அவள் முகம் தெரிந்தது.... குங்குமத்தோடு... இடையிடையே வட்ட வட்ட சின்னச் சின்ன கண்ணாடி பதிச்ச புடவ அதை வாங்கணும்... கோணச்சத்திரத்துல கிடைக்காதே... மெட்ராஸ்ல துளசிங்கம் மச்சானை வாங்கி... அடியே கோலம்.... ஒனக்கு கொழுப்பு ஜாஸ்திடி...

"நாம போவோமா ராசாத்தி.... ஒன் மச்சான் வச்ச குங்குமம் ஒனக்கு எப்டி ஜொலிக்குது தெரியுமா..... யாரு கிட்டயும் விளையாட்டுப் போல சொல்லிடமாட்டியே... அடி என் மல்லிகப்பூவே... ஒன்னப்பத்தி எனக்குத் தெரியாதா... ஆனாலும் சும்மா கேட்டேன்..."

கோலவடிவும், அலங்காரியும் இணைந்து நடந்தார்கள்... வாய்க்கால் வரப்பிற்கு வந்தபோது, ஒருவர் பின் ஒருவராக நடந்தார்கள்... கோலம் கண்ணில் படர்ந்த முடியை ஒதுக்கினாள்... பிறகு பயந்தவள் போல், ஒதுக்கிய கரத்தை உற்றுப் பார்த்தாள்.. அங்குமிங்குமாய் ஆட்டிப் பார்த்தாள் கையில் குங்குமம் தெரியல... முடியை ஒதுக்குற வேகத்துல நல்ல வேள கையி குங்குமத்துக் கிட்ட போகல... ஒருவேளை மேல் பக்கமா உச்சந்தலைக்குப் போய் இருக்குமோ... இருக்காது... இருக்காது... எப்படிப்பட்ட குங்குமம் இது... அய்யய்யோ... அவரு வச்சார்னு சொல்லல... கலப்புல்லாத குங்குமமுன்னு சொல்ல வந்தேன்... அவ்வளவுதான்.... அவ்வளவேதான்...

இருவரும் கரையில் ஏறினார்கள். காற்றில், கோலவடிவின் தலைமுடி, சரியாக நெற்றியில், அந்தக் குங்குமப் பொட்டின் மேல் விழுந்தது... முடியைத் தொட்டால் குங்குமம் போயிடும்... தொடாட்டா ஒருவேள முடியே கலச்சிடப்படாதே... அத்தை கிட்டே சொல்லி அந்த முடிய பதமா எடுக்கச் சொல்லுவோமா... சீ... தப்பு... தப்பில்ல.... சரிதான்... ஆனால் அத்தை தப்பா நினைக்கப்படாது. குங்குமத்துக்கே இப்படி குதிக்காளேன்னு நெனச்சிடப்படாது....

கோலவடிவு, குங்குமமாய்ச் சிரித்தபடி, அலங்காரிக்கு இணையாக நடந்தவள், சற்றே பின்னடைந்தாள்; தலையை அங்குமிங்குமாய் ஆட்டி, நெற்றியில் பட்ட முடியை தலைக்குக் கொண்டு போக சர்க்கஸ்

செய்து பார்த்தாள். இதனால், மேலும் ஒரு கற்றைத் தலைமுடி நெற்றியில் வந்து விழுந்ததுதான் மிச்சம்... இணையாக நடந்து கோலவடிவு, எங்கே என்பது போல அலங்காரி திரும்பிப் பார்த்தாள்... அவளையும் பார்த்தாள்... அவளுக்குப் பின்னால் அக்னி ராசாவின் தந்தை ராமையாவையும் பார்த்தாள். பின்னர் நின்ற இடத்தில் நின்றபடியே பேசினாள்.

"கோலம்.... அதோ ஒன்னக் கட்டிக்கப் போறதா பேச்சு அடிபடுற அக்கினி ராசாவோட அப்பா ராமையா... வாராரு... நான் நைஸாப் பேசி.... ஊசாட்டம் பாக்கேன்... நீ வீட்டுக்குப் போ..."

"அத்த கல்யாணம் நடக்கப்படாது...."

"அத்தை எதுக்கு இருக்கேன்... நீ தைரியமாய் வீட்டுக்குப் போ...."

கோலவடிவு முன்னேறினாள்.... காலில் முள்பட்டிருப்பது போல், ஒரு காலைத் தூக்க முடியாமல் தூக்கி அதை இடுப்போடு சேர்த்து இணைத்தபடியே நின்ற அலங்காரி, ராமையா வந்ததும் காலைக் கிழே போட்டாள்... கூனையைத் தலையில் சுமந்து, அகத்திக் கீரையைக் கையில் பிடித்தபடியே வந்த ராமையாவிடம் பேச்சுக் கொடுத்தாள்... இந்த ராமையா மச்சான் யாருடனும் பேச மாட்டார்... பெண்ணென்றால் காத தூரம் ஓடுவார்... ஆனால் அவருக்கும் இந்த அலங்காரியிடம் ஒரு சின்னச் சபலம்...

"வயலுக்கு போயிட்டா வாரீரு மச்சான்..."

"பாத்தா எப்டிப் பிள்ள தெரியுது..."

"மைனர் மாதிரி தெரியுது... போவட்டும்... என் மகன் அக்கினி ராசாவுக்கு எப்போ கல்யாணத்த வைக்கப் போறீரு..."

"இந்த ஆவணில முடிச்சுடணும்... ஏதாவது துப்பு இருந்தா சொல்லு..."

"இடுப்புல புள்ளய வச்சுட்டு எங்கெல்லாமோ தேடுனாளாம்... பழனிச்சாமி அண்ணாச்சி மகள் கோலவடிவு எதுக்கு இருக்காள்...?"

"ஆமாம். அதுவும் நல்ல யோசனைதான்... ஆனால் அவள் பத்து படிச்சியிருக்காள்.. இந்தப் பயமவனுக்கு கையெழுத்துப் போடவே வராது..."

"வாராண்டாம்... எதுக்கு வரணும்... இந்தக் காலத்துல பொம்புள எண்ணிக்க கூடிப்போச்சு... அதனால காலேஜ் படிச்ச பொண்ணு கூட கார் டிரைவர கட்டுறாள்... சாண் பிள்ள ஆனாலும்... ஆண்பிள்ள ஆண்பிள்ளதான்... ஒங்க குடும்பம் பெரிய குடும்பம்... கோலவடிவுதான் அதக் கட்டிக் காப்பாத்த முடியும்..."

"இந்த நெனப்பு எனக்கு வராமப் போயிட்டு பாரு... இனிமேல் என் மகன் அக்னிராசாதான் மாப்பிள்ள... கோலவடிவுதான் பொண்ணு..."

அலங்காரி அதை ஆமோதிப்பவள்போல் இப்போதும் குலவையிட்டாள் - செத்த வீட்டில் சங்கு ஊதுவது மாதிரி....

# 7

அதே ஆலமர அடிவாரம்.

சூரியன் வெளியே உள்ளவர்களைச் சுடப்போவது போல் பார்த்தாலும், அந்த மரத்தடிப் பெண்களை, கிளைகளுக்குள்ளும், இலை தழைகளுக்குள்ளும் மறைந்திருந்து சுகமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.... எல்லாப் பெண்களும், மத்தியில் ஒரு ரேடியோ டிரான்ஸிஸ்டரை வைத்து 'மச்சானைப் பாத்தீங்களா'வை ரசித்துக் கேட்டுக் கொண்டிந்தார்கள்... அந்தப் பாடலுக்கு ஏற்ப, பட்டும் படாமலும், இருந்த இடத்தில் இருந்தபடியே ஆடினார்கள்.... அந்த பாட்டோடு பாட்டாய்ப் பாடி, தங்கள் குரலைவிடப் பாடியவள் குரல்

அப்படி ஒன்றும் பெரிசா இல்லை என்பதுபோல் நினைத்துக் கொண்டு சில பெண்கள் அந்தப் பாட்டின் ஒரு வரிக்கு அடுத்த வரியைப் பாடினார்கள்.

"ஏழுழா.... ரோசாப்பூ... சினிமாப் பாட்ட கேக்கவிடேமிழா.... நீ பாடுறதவிட கழுத கனச்சால் நல்லா இருக்கும்..."

"நீ குட்டிச்சுவர் பக்கத்துல நிக்கிறவ.... ஒனக்கு அப்படித்தான் தெரியும்.... அதோட ஒன் குரல விட என் குரலு மோசமில்ல...."

வாடாப்பூவும், ரோசாப்பூவும் சங்கீதத்தைச் சண்டையாக்கப் போனபோது, அலங்காரி இன்னொரு பெண்ணோடு வந்து பேசிக் கொண்டே உட்கார்ந்தாள்.

"நம்ம ரோசாப்பூ குரலுக்கு ஏதுழா ஈடு... எங்க துளசிங்கத்துக் கிட்ட சொல்லி அவள சினிமாவுல பின்னணிப் பாடகியாய் போடலாமுன்னு யோசித்துக்கிட்டு இருக்கேன்."

"இவ பாடுனான்னா ரேடியோ பெட்டியே வெடிச்சிப் போவும்...."

"இப்படித்தான் சுசீலாவயும் சொன்னாவுளாம்... சானகியவும் நெனச்சாவளாம் வேணுமுன்னால் பாரேன்... துளசிங்கம் வரட்டும்..."

"இது என்ன புதுசா லீலாவதிய கூட்டிட்டு வந்திருக்கே...."

"ஏன் வரப்படாதா.... மேலத்தெருக்காரிவ வரும்போது, கீழத் தெருக்காரி வரப்படாதா...."

"ஒரே ஊரையும் ஏன் சித்தி துண்டு போடுற? ஒரு நாளும் வராதவளாச்சேன்னு கேட்டோம்..."

"நேத்து இங்க முழுசா வரலியா... இன்னைக்கு வேற கடையில பீடி போடணுமா.... என் கொழுந்தன் மவளுக்கு சுத்தத் தெரியும்... சொல்லிக் கொடுத்திருக்கேன்... அதனால கும்புட்டுக் கூத்தாடி கட்டியாந்திருக்கேன்..."

"பீடி நல்லா இல்லாட்டா... ஏசெண்டு பீடிகள கழிச்சிடப் போறான்.... அப்புறம் நஷ்டம் ஒனக்குத் தான்..."

“என்ன அம்மாளு அப்படிப் பேசுறே.... பீடி ஏசெண்டு பால்பாண்டிக்கு இவிய பீடியக் கழிக்கிற தைரியம் வருமா....”

இப்படிச் சொன்ன ராசகிளி ஏன் சொன்னோம் என்பது மாதிரி நாக்கைக் கடித்தபோது, இந்தப் பெண்கள் அவளைச் சூதோடு பார்த்துவிட்டு, வாயற்றவர்கள் போல் பேச்சுக்குத் திடீர் பிரேக் போட்டதால், அப்படிப் போடப்படும் வாகனச் சக்கரம் மாதிரி இவர்கள் நாக்குகளும் குளறியபடியே உளறின..... இதைப் புரிந்து கொண்ட அலங்காரி, சந்திராவைப் பார்த்துப் பேச்சை மாற்றினாள்.

“சந்திரா..... என் மருமவளே... ஒன்ன பழையபடியும் இங்க பாக்கதுக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா...”

சந்திரா, அலங்காரி அத்தையை வைத்தகண் வைத்தபடி பார்த்தாள். அம்மா எப்படித் திட்டினாலும் இந்த அத்தை மனசில வச்சுக்கலியே.... என்கிட்ட கொஞ்சங்கூட கோபத்தக் காட்டலியே.... இந்த, கோலவடிவுக்காவ, அம்மா அத்தைய அப்டிப் பேசியிருக்கப் படாது.... கடைசில எந்தக் கோலவடிவுக்காவ பேசுனேனோ.... அந்தக் கோலவடிவே கால வாரிட்டாளே....

“மருமவளே சந்திரா... அத்தைக்கு பதில் சொல்ல முடியாத அளவுக்கு கோவமா...”

“இல்லத்தே... இல்ல... எனக்குப் புத்தி வந்துட்டு. எந்த நாயி சந்தைக்குப்போனா நமக்கென்ன... நீங்க.... எதையும் மனசுல எடுத்துக்காதிய அத்தே....”

“அப்டி எடுத்திருந்தா ஒன்கிட்ட பேசுவனா...”

அலங்காரி கொழுந்தன் மகள் லீலாவதியின் விலாவில் இடித்தாள். “சொல்லிக் கொடுத்ததை சரியாய் செய்யேமிழா..... எருமைமாடு” என்றாள் ரகசியமாக. வானொலிச் சினிமாப் பாட்டில் மெய்மறந்து போன லீலாவதி, சித்தி இடித்த இடி தாங்க முடியாமல் விழித்தாள். எல்லாப் பெண்களும் பீடி சுற்றுவது பற்றி, அவள் சொல்லிக் கொடுத்ததாக நினைத்தபோது அவள் புரிந்து

கொண்டாள்..... நேத்து ராத்திரி... சித்திக் சொல்லிக் கொடுத்ததை அப்படியே ஒப்பித்தாக வேண்டும்.... இல்லாட்டா நம்ம விவகாரத்த சித்தி அவுத்து விட்டுடுவாள்.

என்றாலும் எதிர்கால அலங்காரியாய் ஆவதற்குரிய அத்தனை தகுதிகளும் தன்னிடம் இருப்பதுபோல், லீலாவதி சாமர்த்தியமாகப் பேசினாள்....

"அப்படிச் சுத்து.... இப்படிச் சுத்துன்னு சொல்லேன் சித்தி... இதுக்குப் போயி ஏன் எருமைமாடுன்னு ஒரு வாயில்லா சீவன வையுறே.... இதோ பார்... நல்லாத்தானே சுத்தியிருக்கேன். நல்லா இருக்கதை தலையாட்டித் தான் சொல்லுவே... வாயால சொல்ல மாட்டே ஆமா ஒங்களுக்குத் தெரியாதா.... நம்ம ராமையா பெரியய்யா மவனுக்கும் பழனிச்சாமி மாமா மகள் கோலவடிவுக்கும் கல்யாணம் நடக்கப் போவுதாமே.... ரெண்டு வீட்லயும் தீர்மானம் செய்தாச்சாம்... இனிமே... கை நனைக்க வேண்டியதுதான் மிச்சமாம்; சித்தி இந்தப் பீடியாவது நல்லா இருக்குதா.... சித்தி."

"நான் சொல்லிக் கொடுத்ததாச்சே.... நல்லா இல்லாம இருக்குமா..."

"என்ன சொன்ன.... கோலவடிவுக்கும் அக்னி ராசாவுக்குமா.... இருக்காது..."

"ஏன் இருக்காது.... கோலவடிவுக்கு அறுபது பவுன் நகை செய்திருக்கு.... முப்பதாயிரம் சருள் கொடுப்பாங்க... அக்னி ராசாவுக்கு அவரு பங்குக்கே மூணுகோட்டை விதப்பாடு இருக்குது... ராமையா... காத்துக்கருப்பன் குடும்பத்துல பெரிய ஆளு... பழனிச்சாமி மாமா கரும்பட்டையான் கூட்டத்துல முதல் தல... ஏன் கூடாது..."

"எப்படி இருந்தா எனக்கென்ன.... இருக்காட்டா எனக்கென்ன.... கொடுப்பார் இஷ்டம்... கொள்ளுவார் இஷ்டம்.... ஆனாலும்..."

எல்லாப் பெண்களும், ஆச்சரியப்பட்டபோது, சந்திரா கத்திரித்த இலையைக் கீழே போடாமலே யோசித்தாள்... கோலவடிவு மேல் அவளுக்கு ஆயிரந்தான் கோபம் இருந்தாலும் அவளை அந்தப்

'பெத்தட்டி' அக்னி ராசாவோடு சேர்த்துப் பார்க்க முடியவில்லை.... அதை விட அக்காவை வெட்டிப் போட்டுடலாம்... அதோடு அக்கினி ராசாவுக்குக் கோலவடிவு போயிட்டால், அந்த அக்கினிய விட மோசமான அவன் தம்பி 'பல்லனுக்கு' என்னைக்கூட கட்டி குடுக்கலாமே... இந்தப் பேச்சு இருக்கோ இல்லியோ.... இருக்கப் படாது. பெரியப்பா சம்மதிக்கவே மாட்டார்... ஒரு வேள ராமய்யா மாமாவுக்கு அப்டி ஒரு ஆச இருக்கும்... இந்த அக்கினி ராசாவுக்குத்தான் ஆச கீசன்னு எதுவுமே கிடையாதே....

சந்திரா, பதிலளிப்பது மாதிரியல்ல, பதிலடிப்பது போல் பேசினாள்.

"ஆலம்பழத்த அண்டங்காக்கா கொத்தவிட மாட்டோம்... படியாத முட்டாளுக்கு படிச்சவள குடுப்பமாக்கும்... போயும் போயும் அக்கினி ராசா... கோலவடிவுக்கா?.. எங்க அக்கா மலைன்னா.... அவரு மடு.... வெத்துப் பேச்சு பேசாதிய.... எங்கக்கா கால்தூசிக்கு அக்கினி ராசா பெறமாட்டார்..."

அந்தப் பெண் கும்பலில் மேலத் தெருவைச் சேர்ந்த அக்கினி ராசாவின் சொக்காரப் பெண்கள் இருந்தார்கள். அந்த ராசாவைப் பற்றி அவள் சொன்னது சரிதான் என்று அவர்களுக்கு தெரியும்... ஆனால், அவர்கள், அங்கே விட்டுக் கொடுக்கத் தயாராய் இல்லை.

"எங்க அக்கினி ராசா கால்தூசிக்கு ஒங்க கோலவடிவு பெற மாட்டாள்... சும்மா ஒனக்குத்தான் பேசத் தெரியுமுன்னு பேசாதே.... எனக்கும் பேசத் தெரியும்.....ஒங்க பெரியப்பா மகன் திருமலை என் கால்தூசிக்கு பெறமாட்டான்....."

"சரி... சரி... யாரையும் யாரும் கழிச்சுப் பேசப்படாது. ஒவ்வொருத் தரும் அவரோடு அப்பன் அம்மாவுக்க பிறந்தது மாதிரி இருப்பாவ..."

மேல ஊரும் கீழ ஊரும் மோதிக் கொண்டு கிளிகள் போல கத்தியபோது அலங்காரி மகிழ்ந்து போனாள்... ஆக, அக்கினிராசா, கோலவடிவு கல்யாணப் பேச்சு சம்பந்தப்பட்ட குடும்பங்களில் அடிபடுதோ இல்லையோ சந்திக்கு வந்துவிட்டது.... இந்தப் பெண்களே இந்தச் சேதியைத் தெருத்தெருவாய், வீடு வீடாய், ஆள் ஆளாய்ப்

பரப்பி விடுவார்கள். இந்த முட்டாப்பய மவள் லீலாவதி இதுக்குமேல எதுக்கு இருக்காள்.... அதுவும் கழிவு பீடியாய் சுத்துக்கிட்டு.....

சந்திராவால் தாள முடியவில்லை. மீண்டும் எகிறினாள்.

"எங்கண்ணாச்சிய சொன்ன ஒன் வாய...."

"நிறுத்துங்கழா.... நிறுத்துங்க..... இனிமேல் எது பேசினாலும் வெறும் பேச்சுத்தான்.. பேசணும்.. நம்ம துளசிங்கம் தம்பி வந்தாலாவது அவன் வாயைக் கிளறி..... கமலகாசன்.... சரிகாவ பண்ணிக்கிட்டது... கார்த்திக் ஸ்ரீபிரியாவை கைவிட்டது... இந்த மாதிரி முக்கியமான விஷயங்களைப் பேசலாம்... இத விட்டுட்டு வெட்டிப் பேச்சா பேசி அடிதடி வரும்போலுக்கு..."

அந்தப் பெண்கள் மத்தியில் இருந்தாலும், எங்கேயோ இருப்பதுபோல் இருந்த ரஞ்சிதம், பீடி சுத்துவதை நிறுத்திவிட்டு, உரக்கப் பேசினாள்.

"சினிமாக்காரங்களப் பத்தியும், சினிமாக்களப் பத்தியும் பேசிப் பேசியே நம்ம வாழ்க்க சினிமாவாப் போச்சு.... சினிமாவே வாழ்க்கையாச்சு..... நம்மை மாதிரி ஏமாளிவ இருக்கதாலதான் அவங்களோட அற்ப விஷயங்களை பெரிசா எழுதி நம்மளயும் பேச வைக்கானுவ..... அவனுகளுக்காவது காசு கிடைக்குது.... நமக்குத் தான் சினிமாக்காரங்களை பேசிப் பேசி உள்ளூர் பிரச்சினை மறந்து போச்சு.... சதா சினிமாக்காரனயும், சினிமாக் காரியயும் நெனச்சு நெனச்சு நம்ம ஊரில நடக்கிற அக்கிரமம் அநியாயத்தை பேசக்கூட மாட்டக்கோம்...."

"அப்படி என்ன பெரிசா அக்கிரமம் நடக்கு...."

"இதைக்கூட சொல்லிக் காட்ட வேண்டியதிருக்கு.... முந்தா நாள் ஐயங்கண்ணு பெரியவர.... அவரு மகனும் மருமவளும் செருப்ப வச்சே அடிச்சாங்க..... தட்டிக் கேட்டமா....? மலையப்புரத்தா பாட்டிய அவென் மகன் பட்டினி போடுறான்... கேட்டோமோ.. மாட்டோம்.... நமக்கு சினிமா நடிகை காதல் தோல்வி முக்கியம். பாவம்... இந்த ஐயங்கண்ணு தாத்தா செருப்பால அடிபட்டா என்ன.... பெருக்கு மாறால அடிபட்டா என்ன

சினிமாவுல ஒரு சம்பவத்தக் காட்டினாத்தான் நமக்கு அழுக வரும்....அப்பவும் கோபம் வராது.... தூ....."

எல்லாப் பெண்களும் ரஞ்சிதத்தைச் சங்கடமாய்ப் பார்த்தபோது, தாயம்மா, ரஞ்சிதம் பேசியதை வழி மொழிந்தாள்.

"ரஞ்சிதம்.... அடுத்த சாதியா இருந்தாலும் அவள் சொல்லுறது நூத்துல ஒரு வார்த்த.... நாம் எதுக்காவ போடு வண்டல கொடுக்கணும்... ஏசெண்டு எதுக்காவ பழுத்த இலய கொடுக்கணும்... நல்ல பீடிய கழிக்கணும்.... கூலிய எதுக்காவ குறைக்கணும்..."

"இந்த பாரு.... சும்மா கே.பி. சுந்தரம்பா மாதிரி பாடிக்கிட்டே இருக்காத... கேட்கணுமுன்னா ஏசெண்டு கிட்ட கேளு.... நாங்களும் ஒனக்கு சப்போர்ட்டு செய்யுறோம்.... அவன் பண்றதும் அக்கிரமந்தான்..."

ரஞ்சிதம் ஆனந்தப்பட்டாள்.... மகிழ்ச்சி தாள முடியாமல், பீடித்தட்டில் மேளம் அடித்தாள். பிறகு அழுத்தம் திருத்தமாகக் கேட்டாள்.

"ஒங்களுக்கு அந்த பால்பாண்டி ஏதாவது ஒரு வகையில உறவு..... அதனால யோசனை வரும்.... அதனால், நானே மொதல்ல கேக்கேன்... அப்புறம் நீங்க பேசுங்க... அலங்காரியம்மமா எதுக்கு எழுந்து நிற்கீக...."

"எங்க வீட்டுக்காரர் வயலுல இருந்து வந்திருப்பாரு... பச்சக் குழந்தை மாதிரி பசில துடிப்பாரு.... அவரு துடிச்சால் என்னாலதான் பொறுக்க முடியுமா... போயி சோறு போட்டுட்டு வாறேன்... ஏய் லீலாவதி சோலி முடிஞ்சுட்டு.... எழுந்திரு...."

அலங்காரியும், லீலாவதியும், போய்க் கொண்டிருந்தபோது தாயம்மா வர்ணனை கொடுத்தாள்.

"ஆடு நனையுதேன்னு ஒநாய் கவலைப்பட்டுதாம்... புருஷனுக்குல்லா சோறு போடப் போறாளாம்... நல்லா போட்டாளே... கள்ளப் புருஷன் கிட்ட...."

"எந்தக் கள்ளப் புருஷன்.... எத்தனையோ...."

"பீடி ஏசெண்டு கிட்ட இங்க நடந்ததை ஓடிப்போயி சொல்லப் போறாள்."

"சரி... ஏசெண்டு நாம சொல்லுறத அவள் மூலம் தெரிஞ்சுக் கிட்டா நமக்கும் பேச்சு மிச்சம்தானே... ஆனாலும் எங்க குடும்பத்துக்கு வந்த அலங்காரி பெரியம்மய இனிமே அப்டிப் பேசப்படாது...."

சிறிது நேரத்திற்குப் பிறகு, அந்தப் பெண்கள் அணிவகுக்காத குறையாக, பீடிக் கடைக்குப் போனார்கள். மேல, கீழ ஊருகளுக்கு மத்தியில் இருக்கும் கடை... அரங்கு அரங்கான அறைகள்.... வராண்டாவைத் தாண்டிய முதல் அறையில், இன்னொரு மார்க் பீடியை பிடித்தும், குடித்தும் அமர்க்களமாய் இருந்த ஏஜெண்ட் அதட்டினான்....

"என்ன இப்படி.... வரிசையா வந்து நிற்கிய..... ஏதோ சொல்லப் போறிய போலுக்கு... என்ன விஷயம் ரஞ்சிதம்..."

"நீங்களே கேட்டதால எனக்கு சந்தோஷம்... இனிமேல் போடு வண்டலு கேட்கப்படாது... கலியையும் கட்டணும்... பீடிய கழிக்கதோ... பழுப்பு இலய கொடுக்கதோ கூடாது..."

"ஒன் சாதி புத்திய காட்டிட்ட பாத்தியா..."

"நீங்கதான் காட்டுதீங்க...."

"என்னடி சொன்ன முடிச்சிமாறி... ஒங்களத்தான்... பிள்ளியளா.... நான் நம்மோட சாதிப்புத்திய காட்டுறதா இந்த கண்டார முண்ட சொல்லுதாள்... நீங்க சாதி பொண்ணுவளா.... இல்ல சாதி கெட்ட பொண்ணுவளான்னு தெரியணும்... சாதிக்காரியாய் இருந்தால் கடைக்குள்ள வாங்க... பலசாதின்னா அவளோடயே நில்லுங்க...."

ரஞ்சிதம், பயமின்றி சொன்னவனை நேருக்கு நேராய்ப் பார்த்தாள்.... பிறகு அந்தப் பெண்களையே பார்த்தாள் - அவர்கள் எடுக்கும் முடிவில்தான் தனது எதிர்காலமே அடங்கி இருப்பது போல...

# 8

சட்டாம்பட்டியின் முகப்பில் உள்ள முருகன் கோவில், ஊருக்கு வருகிறவர்களும், போகிறவர்களும் இந்தக் கோவிலைப் பார்க்காமல் போக முடியாது..... அவ்வளவு கம்பீரமான கோவில்.... கோபுரக் கோவிலாக இல்லையென்றாலும், அழகு, கம்பீரம், வீரம், நளினம் கொண்ட கலவையில் தோய்ந்தெடுத்தது போன்ற முருகன்சிலை. கையில் தண்டத்தோடு தனித்திருக்கும் முருகன்... தனிச்சிலை. அருணகிரிநாதரின் பாடல்பெற்ற தலமாகக் கூறப்படுவதுண்டு.. இந்தக் கோவிலுக்கு எல்லோரும் வருவார்கள் என்றாலும், இதன் பராமரிப்பு சட்டாம்பட்டி சைவப் பிள்ளைகளின் பொறுப்பில்தான் உள்ளது, சில மாதங்களாக. கோவிலை ஊரே எடுத்துக் கொள்ள வேண்டும் - என்று பேச்சு... அப்போதானே கோயில் நிலத்த ஊர்ப் பெரிய மனிதர்களும் அமுக்கலாம்... பெரிய மனிதர்கள் சூட்சகமாகச் சொன்னதை, சின்ன மனிதர்கள் இப்போது ஊரெங்கும் பிரச்சாரம் செய்து வந்தார்கள்.

ரஞ்சிதம் கோவிலுக்குள் மயில் சிலைக்கு அப்பால் உள்ள கல் தூணில் சாய்ந்தபடியே அந்த ஆண்டிச் சிலையையே பார்த்துக் கொண்டிருந்தாள்... அவள் அருகே ஒரு தட்டு.... அதே பீடித்தட்டு... ஆனால் இப்போது பீடிகளோ, இலைகளோ இல்லை.... முல்லைப்பூ மாலை. சுருள் சுருளாய்ப் பாம்புபோல் மடித்து வைக்கப்பட்டிருந்தது... கதம்பம் கண்ணுக்கினிய தோற்றத்துடன் முல்லையைத் தொட்டுக் கொண்டிருந்தது... சிவப்பு, வெள்ளை ரோஜாக்கள் தனித்தனியாகத் தட்டிலேயே அடுக்கி வைக்கப்பட்டிருந்தன... தட்டின் எஞ்சிய பகுதியில், மருவு மருக்கொழுந்து, எலுமிச்சம் பழங்கள்... இன்னொரு சின்னத் தட்டில் ஜரிகைக் காகிதக் கற்பூரத் துண்டுகள்... ஊதுபத்திகள்... இப்போதைக்கு அந்தப் பூ விற்பனைக்கு அவள் ஒருத்திதான் ஏகபோக முதலாளி... தொழிலாளிகளாய்ப் போராட்டம் துவங்கி, ‘முதலாளியாய்’ முடிந்து போனவள்... திருமலை அவளைப் பார்த்து திடுக்கிட்டுக் கேட்டான்.

"என்ன ரஞ்சிதம் இப்டி பண்ணிட்டே...? பரவாயில்ல... பீடியைவிட பூவைத் தொடுறது நல்லதுதான்... ஆனாலும் இப்படித் தனி ஆளாய் போனபிறகும்.... எப்பவும் குளிச்சது மாதிரியே... ஒன்னால எப்படித்தான் இருக்க முடியுமோ... ஒன்னை மாதிரி 'சுத்தம்' எவளாலயும் முடியாது ரஞ்சிதம்."

"நான் சுத்தமாய் இருக்கதுதான் ஒங்களுக்குப் பெரிசா தெரியுது... பீடி ஏசெண்ட் பால்பாண்டி அசுத்தமாய் பேசினது, ஒரு விஷயமாகப் படல... என்ன..."

"நானும் கேள்விப்பட்டேன் ரஞ்சி..."

"ரஞ்சிதம்..."

"கேள்விப்பட்டேன் ரஞ்சிதம்... அந்தப் பய ஒன்னை ரொம்ப அவமானமாப் பேசிட்டானாமே. அலங்காரிய வச்சிக்கிட்டு இருக்கவன்... அந்தப் பன்னாடைப் பயல்கிட்டே கெட்ட வார்த்தைய தவிர வேற எதையும் எதிர்பார்க்க முடியாது. சரி... விட்டுத் தள்ளு... கழுதய..."

"கழுதய விட்டுத் தள்ளிடலாம்.... ஆனால் ஒரு வயசுக்கு வந்த பெண்ண... அதுவும் ஊருல மைனாரிட்டி சாதில இருக்கிற என்னை வாடி போடின்னும் தாசின்னும் பேசுவதை எப்டி விட முடியும்..."

"அவன் கிடக்கான்..."

"ஒங்க தங்கை கோலவடிவ சும்மா கதாநாயகின்னு சொன்ன துக்கே என்ன குதி குதிச்சீங்க... ஆனால் என்னை அவன் அவமானமாய் பேசுவதை சாதாரணமாய் எடுத்துக்கிட்டிங்க... என்ன பிரண்டு நீங்க...?"

"சரிம்மா... தப்புதான். என்ன நடந்ததுன்னு சொல்லு...?"

"சொல்லுதேன்... ஒங்க கிட்டே சொல்லி... எதுவும் ஆகப் போறதுல்லே... யார்கிட்டயாவது ஒருத்தர் கிட்டே சொல்லாட்டா என் தலையே வெடிச்சுடும் போலிருக்கு. அதனால சொல்லுதேன். அப்ப ஒங்களுக்கும் துளசிங்கத்துக்கும் ஏற்பட்ட சண்டையில நீங்க என்னை ரயில்வே கேட்டுல வச்சு சினிமாவுக்குக் கூப்புட்டதை காரணமா வச்சு...

அதை சொல்லப் போறதாய் மிரட்டி, என்னையறியாமலே எப்டி விவகாரத்தை தீர்த்து வச்சேனோ அப்படி நீங்களும் ஒங்கள அறியாமல்..."

"சட்டு புட்டுன்னு சொல்லேன்..."

"பார்த்தீங்களா நான் பேசுறதை நீங்க காது கொடுத்து கேட்கிறதையே எனக்கு உபகாரம் செய்ததாய் நினைக்கீங்க..."

"தப்புத்தாம்மா... தப்புத்தான். தோப்புக்கரணம் வேணுமுன்னாலும் போடுறேன்..."

"நான் பீடி ஏசெண்டுகிட்ட எங்களோட குறையச் சொன்னேன். உடனே அவரு நான்... என் சாதிப் புத்தியக் காட்டிட்டதா சொன்னாரு... நான் அவரு... அவரோட வர்க்க புத்திய..."

"அப்படின்னா..."

"அது ஒங்களுக்கும் புரியாது... ஆனாலும் சொல்லுதேன்... அவரு தன்னை முதலாளியா அனுமானிச்சு... அதுக்குரிய முதலாளியத்துவ புத்தியக் காட்டுறார்னு சொல்லுறதுக்காவ சாதிப் புத்தின்னு... அவரு சொன்னதும் 'நீங்கதான் காட்டுறீங்கன்னு" சொன்னேன்... அந்த ஆசாமி... ரொம்பக் கெட்டிக்காரன்... உடனே அவன் ஒங்க சாதி முழுசயுமே குற்றம் சொல்லுறதாய் விஷயத்தை திரிச்சி விஷமாக்கிட்டான்... சக தோழிகளுக்கு சாதிவெறிய வேற ஊட்டிட்டாரு... அவள்களும், 'ரஞ்சிதம் நீ எது வேணுமுன்னாலும் பேசியிருக்கலாம்... ஆனால் எங்க சாதிய மட்டமாப் பேசியிருக்கப்படாதுன்'னு என்னையே திட்டிட்டு.... என்னை தனியா நிற்க வச்சுட்டு உள்ளே போயிட்டாளுவ.. பீடி ஏசெண்டு இன்னுந் திட்டினான்.... செருக்கியாம் தேவடியாளாம்... ஊருல நான் இருக்க முடியாதுன்னு சொன்னான். என்னால தட்டத்தான் மாத்த முடிஞ்சுதே தவிர அநியாயத்த மாத்த முடியல..."

"இதை கேட்டதுக்கே என் ரத்தம் இப்படிக் கொதிக்குது... ஆனால் நீ எப்படி இப்டி சிரிச்சுக்கிட்டே பேச முடியுது..."

"அப்படிக் கேளுங்க... இதைவிட மோசமான அர்த்தத்துல பேசப்பபட்ட நாகரிகமான வார்த்தைகள கேட்டுப் பழக்கமுன்னு அர்த்தம்... ஒங்களுக்கே தெரியும் நாங்க சைவப் பிள்ள மாருங்க..."

"அதனாலதான் என் தமிழ் ஒங்க தமிழைவிட வித்தியாசமா இருக்குதுல்லா....?"

"தமிழ் ஒன்னுதான்.... கொச்சையா பேசுறோம்... அந்தக் கொச்சையுல ஒங்கது முழுப் பச்சை... எங்கது பாதிப்பச்சை... அதை விடுங்க... எங்காட்கள் டவுனுக்குப் போயிட்டாங்க... பிளஸ்டு படிச்ச என்னை, மெட்ராஸ்ல வேலை பார்க்கிற அண்ணன் கூப்பிட்டான்... காலேஜ்ல படிக்க வைக்கப் போறார்னு போனேன்... சமையல்காரியாய் வேலை கொடுத்தார்... அண்ணி சாடை மாடையாய் திட்டி... நேரடியாதிட்டி... எதிர்வீட்டு கிறுக்கன் ஒருத்தனோட காரணமில்லாம சம்பந்தப்படுத்தி, கடைசில நானே இங்கே வரும்படியாய் செய்துட்டாள்... அண்ணா ஒப்புக்கு பணம் அனுப்புறார்... உப்புக்காவது உதவுது..."

"நீயே மெட்ராஸ்ல வேலை தேடி இருக்கலாமே...."

"பார்வேட் கம்யூனிட்டின்னு பிறந்துட்ட கிராமத்துப் பெண்ணு எனக்கு சலுகை கிடையாதே... பொதுவா மேல் சாதியில் இருக்கிற பிராமணர்கள் வேலை கிடைக்காமல் திண்டாடுறதாய் கதை வருது.... நாவல் வருது.... டி.வி.யில் நாடகம் வருது... அவங்கள மாதிரியே நாங்களும் ஒரு காலத்துல ஆச்சாரமாய் இருந்தவங்க... இப்போ மேல்சாதி முத்திரையோட மோசமா கஷ்டப்படுறோம்... பிராமணர் களுக்காவது நாடு முழுதும் சொல்லிக்க அவங்க சாதி எல்லா மொழிலயும் மாகாணத்துலயும் இருக்குது... எங்க சாதி அப்படி இல்ல.. இந்த பிரச்சினையை எடுத்துச் சொல்லவும் நாதியில்ல..."

"கடைசில ஒனக்கும் சாதிப் பத்து இருக்கத்தான். செய்யுது..."

"எதால பாதிக்கப்படுறோமோ.. அதுமேல ஒரு சிந்தன வரது இயற்கை... சாதியால பாதிக்கப்படும் போது நான் சாதிக்காரியாய் ஆயிடுறேன்... பீடித் தொழிலாளிப் பெண்ணாய் பாதிக்கப்படும்போது...

ஒரு தொழிலாளி பெண்ணாய் இல்ல... ஒரு தொழிலாளியாய் மாறிடுறேன்... சாதிக்கட்டை விட்டு... சாதியற்ற மனித சாதி கட்டுக்குள்ளே போகிறதுக்கு முயற்சி செய்யுறேன்... இதனால்தான் பீடி ஏசெண்ட திட்டுனதுக்கு சம்மதிச்ச தோழிகள் மேல கோபம் வரலை... குட்டாம்பட்டில 'கண்ணாடிக்காரர்', பீடி சுத்தும் பெண்களுக்கு சங்கம் வச்சுருக்கது மாதிரி நானும் வைக்கத்தான் போறேன்..."

"அய்யய்யோ சங்கமா..."

"ஏன் ஊர்ல... உருப்படாத பயல்க எல்லாம் உதவாக்கரை சினிமாப் பயல்களுக்கு சங்கம் வைக்கும்போது... நான் ஏன் வைக்கப்படாது..."

"அப்படின்னா நீ பழையபடியும் அங்கே போய் பீடி சுத்தணும்..."

"நான் தயார்... ஆனால் இப்போதைக்கு சாதி மயக்கத்துல இருக்கும் தோழிகள் அந்த மயக்கம் கலைஞ்சதும்... அவங்க என்னை கூப்பிட வேண்டியதில்ல... நானே போய்ச் சேருவேன்..."

"ஒன் கஷ்டத்தை கேட்கிறதுக்கு மனசுக்கு கஷ்டமாய் இருக்கு... நான் உயிரோட இருக்கது வரைக்கும் நீ சிரமப்படக்கூடாது... இந்தா நூறு ரூபாய்... ஒன்மேல தான் சதா எனக்கு நெனப்பு ரஞ்சிதம்... நீ இல்லாமல் என்னால வாழ முடியாது ரஞ்சி... அட கடவுளே... எப்ப பார்த்தாலும் ஒன் முகந்தான் கண்ணு முன்னால நிக்குது... இந்த ரூபாய் என் அன்பு காணிக்கை... நான் இருக்கிற வரைக்கும் நீ கவலைப்படக்கூடாது... கஷ்டப்படக்கூடாது..."

"அதாவது நீங்க என்னை 'வைப்பாட்டியாய்' வச்சுக்குவீங்க.... காலமெல்லாம்.."

"என்ன ரஞ்சிதம்... நான் ஒன்னை அப்படி நினைச்சுப் பார்க்கவே முடியாது... ஏதோ ஒரு அன்பு... காதலுன்னு வச்சுக்கயேன்... நீ என் ஆயுசுவரைக்கும் துணையாய் இருக்கணுமுன்னு ஏதோ ஒரு ஆசை..."

"மொதல்ல... ஏதோ என்கிற வார்த்தைய எடுங்க... நான் ஆயுள் வரைக்கும் ஒங்களுக்கு துணையாய் இருக்கத் தயார்... நீங்க ரயில்வே கேட்ல கேட்டதை அதனாலதான் பெரிசா எடுத்துக்கலே... ஒங்களை நானும் விரும்புறேன்... நேசிக்கிறேன்..."

"நான் கொடுத்து வச்சவன்..."

"முதல்ல என் தோளில இருக்கிற கைய எடுங்க.... அதுக்கு முன்னால நான் சொல்றதைச் செய்யுங்க... இதோ இருக்கு மஞ்சள்துண்டு.... இதோ இருக்கு மந்திரிக்கிறதுக்காக நான் விற்கிற கயிறு.... இந்த கயித்துல... மஞ்சள் துண்டைக் கட்டி, இந்த முருகன் சாட்சியாய் என் கழுத்துல கட்டுங்க.... உடனே என்னை ஒங்க வீட்டுக்கு கூட்டிப் போங்க.... ஒங்க அப்பாகிட்ட ஒங்களால பேச முடியாட்டாலும் நானே பேசிக்கிறேன்..."

"அதெப்படி... திடுதிப்புன்னு யோசிக்காமல்...?"

"என்னை எப்படி யோசித்து விரும்பலியோ... அப்படி யோசிக்காம தாலியக் கட்டுங்க... காதலிக்கதுக்கு யோசிக்கப்படாது... கல்யாணத்துக்கு மட்டும் யோசிக்கணுமா... ஒங்கள மாதிரிதான் நம்ம நாட்ல... பல காதலர்கள் காதலிகள்... காதல் என்பது வாழ்க்கைக்காக போடப்பட்ட வழி... இந்த பிரதான வழியில் குறுக்கு வழிகள்.... தற்கொலை வழிகள்... கொலை வழிகள்னு பல கிளை வழிகள் இருக்கு..... இவற்றை விட்டுட்டு பிரதான வழியில் போனால் தான் வாழ்க்கையைச் சுவைக்க முடியும்... இல்லன்னா சுமக்கணும்... எல்லாப் பெண்களும்... தங்களோட காதல் வெளிப்பாட்டைக் காட்டுறதுக்கு முன்னால.... இப்போ நான் ஒங்ககிட்ட கேட்கிற கேள்வியை கேட்டிருந்தால் ஒன்னு காதலே வந்திருக்காது... இல்லன்னா தோல்வி என்பதே வந்திருக்காது.... இந்த பிரதான வழியில் தெரிகிற வாழ்க்கை வீட்டைப் பார்த்தால், கிளை வழிகளில் இருக்கிற கிணறோ, குளமோ, குட்டையோ, கத்தியோ கம்போ தெரியாது.... தெரிய வேண்டிய அவசியமும் இல்லை.... நான் இல்லாமல் ஒங்களால் வாழ முடியாதுன்னா... இதோ என் கழுத்து.... நான் கழுத்துக்கு முதலிடம் கொடுக்கிறவள்... கன்னத்துக்கு இரண்டாவது இடம்.... என்ன சம்மதமா.... எனக்குச் சம்மதம்.."

திருமலை தடுமாறிப் போனான்... அந்த ஆடிக்காற்றிலும் அவன் உடம்பு வியர்த்தது... அவனால் நேருக்கு நேராய்ப் பார்க்க முடியவில்லை... எதையுமே விஞ்ஞான பூர்வமாய் சிந்திக்கும்போது

அது தன்னையே தனக்கு அடையாளம் காட்டிவிடுகிறது... அந்த அடையாளம் சில சமயம் பிடிப்பதில்லை... பிடிபடுவதும் இல்லை.

திருமலை ஏதோ தப்பு செய்துவிட்டவன் போல், ரஞ்சிதத்திடம் சொல்லாமல் கொள்ளாமல் வெளியேறினான்... தோளில் கிடந்த துண்டை எடுத்து முகத்தையும், பிடறியையும் துடைத்தபடி நடந்தான்... காலில்பட்ட ஒரு டப்பாவை தூக்கியெறிந்தான்... கண்ணில் பட்ட ஒரு நாயை கல்லால் அடித்தான்... எதிரே குசலம் விசாரிக்க வந்தவர்களைக் குற்றவாளிகள் போல் பார்த்தபடி நடந்தான்.... இந்தத் துளசிங்கம் எப்டி குதிக்கான்... அவனை மாதிரி நாமும் குதிக்கணுமுன்னால்.... ஒரு கடை போடணுமுன்னும்... அதுக்காக முருகன், அப்பா மனசுக்குள்ளே போகணுமுன்னும் முருகன் கிட்டே போனால்... அந்த சண்டாளப் பயல் அவனை மாதிரியே என்னை ஆக்கிட்டான்."

திருமலை, குரோதங் குரோதமாய் பார்த்து, கோபங் கோபமாய் நடந்து, துளசிங்கம் கடை முன்னால் வந்து நின்றான், ஆங்காரமாக, ஆவேசமாக.... அங்கே நின்ற ஒரு சிறுவன் காதில் எதையோ சொன்னான்... அந்தச் சிறுவன் அந்தக் கடைக்குப் போய், மீண்டும் திரும்பி வந்து திருமலையிடம் ஒப்பித்தான்.

"ஒமக்கு சிமெண்டு கொடுக்க மாட்டாராம்... துளசிங்கம் அண்ணாச்சியே.... சொல்லிட்டார். கடைன்னா எல்லாருக்கும் பொதுதான....? ஒமக்கு மட்டும் எப்டி இல்லன்னு சொல்லலாம் மச்சான்....?"

திருமலை அந்தச் சிறுவனைப் பிடித்து தள்ளியபடியே தலையாட்டினான். பிறகு, துளசிங்கம் கடையை நோக்கி, அழுத்தம் திருத்தமாக நடந்தான்.

# 9

அந்த முக்கிய வீதி மட்டும் இல்லையானால், சட்டாம்பட்டி, சாதாரணமானப் பட்டியாகி இருக்கும்... ஆனால் அந்த ஊரின் மேல்பக்கம், கிட்டத்தட்ட ஊரின் வேலி போல இருந்த, அந்தச் தார்ச்சாலையில், திருவள்ளுவர் பஸ்களும், கட்டபொம்மன் பஸ்களும் ஓடிக் கொண்டிருந்தன. இந்தப் பட்டியில், இந்தச் சாலையில் நின்று படிக்கட்டுகள் வழியாக பஸ்ஸுக்குள் ஏறிவிட்டால் ஒருத்தர் மதுரையில் இறங்கலாம், இன்னொருத்தர் நாகர்கோயிலில் ஒரு தூக்கம் தூங்கிட்டு எழலாம். இந்தச் சாலையில்தான் துளசிங்கத்தின் உரக்கடையும் சிமெண்ட் கடையும் பக்கத்தில் பக்கமாய் உள்ளன. எதிர்ப்பக்கம் பஸ் ஸ்டாண்ட்.... நான்கைந்து பெட்டிக் கடைகள் ஒரு சில தேநீர் கடைகள் வரிசையாய் இருந்தன.... இவன் கடைகளுக்கு அந்தப் பக்கமும், இந்தப் பக்கமும் வாடகை சைக்கிள் கடைகள். ஒரு வாசகசாலை... உருப்படாத ஒரு நடிகனுக்கு உள்ளூர் உதவாக்கரைப் பயல்கள் வைத்திருக்கும் ரசிகர் மன்றம்... சில அரசியல் கட்சிகளின் கிழிந்துபோன கொடிகள்.

துளசிங்கம், வேலையாட்கள் சிமெண்ட் மூட்டைகளை ஒன்றுக்கு மேல் ஒன்றாக அடுக்குவதை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தான்... அவன் எதிர்பார்த்த அளவிற்கு சிமெண்ட் மூட்டைகள் விற்காததால், வேலையாட்களைத் திட்டிக் கொண்டிருந்தான்.... திடீரென்று திருமலை கடைக்கு முன்னால் வந்து நிற்பதை, அவன் பார்க்கவில்லை. இருவருக்கும் இடையே உள்ள பழைய தகராறையும், அப்போது தூதுப்பயலுக்கு இருவரும் சொல்லி அனுப்பிய செய்தியையும், எதிர் செய்தியையும் தெரிந்து வைத்திருந்த வேலையாட்கள், மூட்டைகளை அடுக்காமல் திருமலையை அடுக்கடுக்காய் பார்த்தபோது, வேலை தடைப்பட்டதைப் பார்த்து துளசிங்கம் அவர்கள் பார்வை நிலைத்த இடத்தில் பார்த்தபோது _

திருமலை வேட்டியைத் தார்ப் பாய்த்துக் கொண்டு சிம்ம கர்ஜனை போட்டான்.

"எனக்கு எப்டிடா நீ சிமெண்ட் இல்லன்னு சொல்லலாம்...?"

"நீ எப்டிடா கேட்கிற விதமா கேட்காமல் இருக்கலாம்...?"

"நான் எப்படிக் கேட்டா ஒனக்கென்னடா...? ஒனக்குத் தேவை.... பணம்தானடா...?"

"அதுக்கு ஒன் காலுல சிமெண்ட் மூட்டையை போட்டுட்டு கும்பிட முடியுமா? ஒனக்கு சிமெண்ட் வேணுமுன்னா என் கடையில வந்து தான் கேட்கணும்... தெருவுல வந்து கொடுக்க நான் ஒன் வேலைக்காரன் இல்ல..."

"நீ இந்த ஊருக்கு நல்ல முறையில எல்லாருக்கும் சிமெண்ட் கொடுக்கறதுக்காக ஒனக்கு ஏஜென்சி கொடுத்திருக்காங்க... நீ எடுக்காட்டா நான் எடுத்திருப்பேன்... அதனால நீ எனக்கு இப்பவே இந்த இடத்துலயே... சிமெண்ட் மூட்டய தந்தாகணும்... இல்லன்னா, நான் உன்னை விடப்போறதாய் இல்ல...."

"நீ இவ்வளவு சொன்ன மட்டும் நான் ஒனக்கு சிமெண்ட் தரப்போறதாய் இல்ல... எப்போ தந்தாலும் தருவேன்... ஆனால் இப்போ தலையே போனாலும் தரவே மாட்டேன்...."

"தராட்டா எடுப்பேன்..."

"எடுக்கிற கைய ஒடிப்பேன்..."

"பாத்துப்புடலாண்டா..."

"பாத்துக்கிட்டே இருடா...."

வேலையாட்கள் செம்பட்டையான் கரும்பட்டையான் ஆகிய இரண்டு குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். ஆகையால், தத்தம் சேவல்களுக்கு ஆதரவாய் உடம்பை நிமிர்த்தியபோது _

திருமலை, இரும்புக் கால்களை எட்டாக்கிக் கடைக்குள் நுழையப் போனான். துளசிங்கம் தனது குஸ்திக் கைகளால் அவனை மல்லாக்கத் தள்ளியபோது, கீழே விழப்போன திருமலையை, கரும்பட்டையான் வேலையாள் தாங்கிக் கொண்டான். அந்த

ஆத்திரத்தில் திருமலை, துளசிங்கம் வயிற்றில் காலால் உதைத்தான்... அந்த வலியை 'எம்மா' என்று சொல்லித் தாங்கிக் கொண்ட துளசிங்கம், திருமலை மேல் பாய்ந்தான்... இருவரும் நின்று கொண்டே அடித்தார்கள்.... விழுந்து கொண்டே உதைத்தார்கள்... எழுந்து கொண்டே ஒருவர் முகத்தில் ஒருவர் குத்திக் கொண்டார்கள்... பிறகு கட்டிப் பிடித்து உருண்டார்கள்... சிமெண்ட் மூட்டைக்குள் சிக்கியபடியே சுழன்று, வாசல் வழியாகப் புரண்டு, சாலையோரமாக பந்து போல் உருண்டு, நாய் போல குலைத்து, நரிபோல ஊளையிட்டு, நண்டு போல சுருண்டு, நடு ரோட்டிற்கு வந்தார்கள்... நல்ல வேளையாக அப்போது பஸ்கள் வரவில்லை... வேலையாட்களுக்கோ வாலி-சுக்ரீவன் போரைப் பார்த்துக் கொண்டு நின்ற ராமனின் நிலை..... இருவரும் உருண்டு சுருண்டதில், எவன் துளசிங்கம், எவன் திருமலை என்று தெரியவில்லை... திருமலை துளசிங்கத்தை கீழே போட்டு மேலே வரும்போது, செம்பட்டையான் ஆட்கள் அவன் கழுத்தைப் பிடிக்க குனியும் போதே, திருமலை கீழேயும், துளசிங்கம் மேலேயும் வந்துவிடுவான். துளசிங்கம் மேலே தோன்றும்போது, அவனை அந்தரத்தில் தூக்கிப் போட நினைத்த கரும்பட்டையான்கள் அதற்குள் திருமலை மேலே வந்ததைப் பார்த்து, குனிந்த உடம்பை நிமிர்த்தினார்கள்.

அந்தச் சாலைவாசிகள், அனைவருமே கூடிவிட்டார்கள்... சிறிது நேரம் வேடிக்கை பார்த்துவிட்டு, யார் தோற்கிறான் என்பதை கண்டு பிடிக்க அதிக நேரம் ஆகும் என்பதாலும் எவன் படுக்கிறான் என்று தெரிவதற்குள், தத்தம் கடை வியாபாரம் படுத்துவிடும் என்பதாலும், இருவரையும் பிரித்து விட்டார்கள்... பிரிந்தவர்கள் சிறிது பின்வாங்கி நின்றபோது பிரிபட்டவர்கள் மீண்டும் பிணையப் போனார்கள்... ஒருவருக்கு அலுத்து விட்டது... காண்டிராக்டர் தாமோதரன் பிரித்த ஆட்களை விலக்கித் தள்ளிவிட்டு, இருவரின் கைகளையும் பிடித்து நேருக்கு நேராய் நிறுத்திவிட்டு, கத்தினார்.

"நாங்க யாரும் ஒங்கள பிடிக்க மாட்டோம்... உம் பாயுங்க.... எவனாவது ஒருவன் கீழே விழுறது வரைக்கும் சும்மாவே இருக்கோம்... டேய் ஆஸ்பத்திரிக்கு ஒரு வண்டிய ரெடி பண்ணி வையுங்கடா...."

தாமோதரன், வேறு யாரையோ சொல்வது மாதிரியும், அதுக்கும் தங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்பது போலவும் துளசிங்கமும், திருமலையும் மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்க நிற்கிறார்கள்... மற்போரைச் சொற்போராக்குகிறார்கள்.... திருமலையின் காதில் ரத்தம் ஒழுகியது, துளசிங்கம் கடித்த கடி. ரத்தச் சொட்டுக்களோடு பேசினான்.

"செறுக்கி மவன்.... சிமெண்ட் கேட்டா தர மாட்டாங்கான்... எனக்கு இப்போ ரெண்டு மூட்ட சிமெண்ட் வேணும்.... வாங்காமப் போக மாட்டேன்.... செறுக்கி மவன் சரியான நாயி... எப்டி கடிச்சிருக்கான் பாருங்க...."

திருமலை கொடுத்த அடியில், கை வளைத்து நின்ற துளசிங்கம், வளையாத வலது கையை ஆட்டியபடியே பதிலளித்தான்.

"நான் நாயின்னா இவன் வெட்டியான்... என் கைய எப்டி வளச்சிருக்கான் பாருங்க... சிமெண்ட் அவனுக்கு இனிமேல் எப்பவும் கிடையாது... வேணுமுன்னால் புகார் பண்ணிக்கட்டும்..."

இதற்குள் ஊரே கூடிவிட்டது... பாக்கியம், திருமலை காதில் பெருக்கெடுத்த ரத்தத்தை முந்தானை சேலையால் துடைத்தபடியே ஒப்பாரியிட்டாள்... கோலவடிவு, அம்மாவுக்கும் தாயம்மாவுக்கும் பின்னால் நின்று கைகளைப் பிசைந்தாள்... ரஞ்சிதம் நெற்றிச் சுருக்கங் களோடு நின்றாள்... சந்திரா, துளசிங்கத்தை நாயே, பேயே என்று திட்ட, துளசிங்கத்தின் அம்மா அன்னம்மா எதிர்திட்டு போட்டாள்... அலங்காரி, துளசிங்கத்தின் கையைத் தடவிவிட்டபடியே, "என் ராசா ராசா" என்று கத்தினாள்... இதற்குள் கரும்பட்டையான்களும், செம்பட்டையான்களும் அணிவகுத்தும் ஆர்ப்பரித்தும் பேசினார்கள்.

"சிமெண்ட் வாங்க விடமாட்டோம்..."

"தராத சிமெண்ட் எடுக்காம விடமாட்டோம்..."

"செம்பட்டையான் கடைக்குள்ள வந்து சிமெண்ட் எடுக்கணு முன்னால் அந்தக் கடையே கரும்பட்டையான்களுக்கு சமாதியாயிடும்...."

"கரும்பட்டையான் வம்சத்துக்கு முன் வச்ச காலை பின் வச்சு பழக்கமில்ல.... அந்தப் பழக்கத்தை மாத்திக்கவும் தயாராய் இல்ல..."

"சரி வந்து பாருங்க..."

இந்த சண்டைக்கு மூன்றாவது கனபரிமாணமாக, 'காத்துக் கருப்பன்' குடும்பத்து அதே அந்த ராமையா கோபாவேசமாகப் பேசினார்... சூதுவாதில்லாத மனிதர்தான்.... கோலவடிவை, அக்னி ராசாவுக்கு திருமணம் செய்யும் உறுதியோடு அவர் பேசவில்லைதான்... ஆனாலும் பழனிச்சாமி மச்சான் மேல் புதிதாக வந்த பாசம் அவரை இப்படிப் பேச வைத்தது.

"ஏய் துளசிங்கம்..! நீ பேசுறது அக்கிரமண்டா... ஒன் கடை உரத்த வயலுல போட்டு இப்போ பயிரெல்லாம் சாவியா போயிட்டு...."

"சிமெண்டுக்கும், உரத்துக்கும் என்ன சம்பந்தம்..."

"எங்க அண்ணாச்சிய பேச விடுடா... பேமானிப்பயல அவரு யாரோடயும் பேசாதவர்.... இப்பவாவது பேசட்டும்..."

"ஒரே வார்த்ததான் பேசப் போறேன்... துளசிங்கம் கடை பொதுக் கடை... சாமியை நம்பாதவன் கற்பூரம் விற்கதுமாதிரி இவன் பிடிக்காத... திருமலைக்கும் சிமெண்ட் மூட்டைய கொடுத்தாகணும்... இல்லன்னா கடையை உடைச்சாகணும்..."

காத்துக் கருப்பன்கள் 'பைத்தியார தர்மரு' ராமய்யாண்ணன் பின்னால் கச்சைக் கட்டி, அவரின் இச்சையை நிறைவேற்றத் துடித்தார்கள். ஆனானப்பட்ட அதிகாரிகளையே கெஞ்சியும், மிஞ்சியும் மடக்கிப் போடும் ஒத்தை வீடு காண்டிராக்டர் தாமோதரன் விவகாரியானார்.

"டேய் துளசிங்கம் போனால் போவட்டும்... திருமலைக்கு ஒரு மூட்டை சிமெண்டையாவது கொடு...."

"இதைவிட என் உயிரக் கேளும் தாரேன்..."

"உயிரும் இப்போ போகத்தான் போகுது..."

ரஞ்சிதம் அடிமேலடியாய் நடந்து, கூட்டதுக்கு முன்னால் வந்து தீர்ப்பளிப்பவள்போல் பேசினாள்.

“நான் எல்லாருக்கும் பொதுப்பிள்ள. அடுத்த சாதி அற்பம்... நான் சொல்லுறதக் கேளுங்க.... நம்ம யூனியன் காண்டிராக்டர் அய்யா தாமோதரன், முருகன் கோயில் முகப்பு கட்டுறதுக்கு உபயமாய் பத்து மூட்டை சிமெண்ட் வாங்கி துளசிங்கம் கடையிலேயே போட்டிருக்கார்.... அதுல எத்தன மூட்டை சிமெண்ட வேணுமுன்னாலும் திருமலை அவருகிட்டயே பணத்தக் கொடுத்துட்டு, எடுத்துக்கட்டும்.... தாமோதரய்யா தன்னோட சிமெண்ட் மூட்டைய எடுத்துக் கொடுப்பாரு.... இதனால துளசிங்கம் மானமும் போகல... திருமலை மானமும் போகல... சிமெண்ட் மூட்டதான் போவுது...”

“ரஞ்சிதம் ஒன்னை கொழும்புக்கு அனுப்பி வைக்கணும்...”

அந்தத் தீர்ப்பால் எல்லோருக்கும் திருப்தி... ஒரு சில கர்நாடக விவகாரிகள்தான் மனதுக்குள் முனங்கிக் கொண்டார்கள்... “போயும் போயும் ஒரு ஒத்தை வீட்டுப் பொண்ணு அடுத்த சாதிக்காரி... சொக்காரப் பலம் இல்லாத ரஞ்சிதமா இந்த வழக்க தீர்த்து வைக்கணும்... நாங்க எதுக்கு இருக்கோம்..?.”

விவகாரம் தீர்ந்து கொண்டிருந்த போது, அக்கினி ராசாவின் அப்பா ராமய்யாதான் தனது சுபாவத்திற்கு மாறாக விடாப்பிடியாகப் பேசினார்....

“அதுல்லாம் முடியாது.... தாமோதரன் சிமெண்ட் விற்றுப் போன சிமெண்ட்... துளசிங்கந்தான் அவன் கையால வேற சிமெண்ட்ட கொடுக்கணும்...”

தாமோதரன், ராமைய்யாவின் மோவாயைத் தூக்கி, தன் உள்ளங்கையில் தாங்கிக் கொண்டே மன்றாடினார்.

“போவட்டும் மச்சான்... போவட்டும் ரெண்டு தரப்புமே சம்மதிச் சுட்டாங்க... நமக்கென்ன வம்பு.... டேய் துளசிங்கம்.... என் சிமெண்ட் மூட்டையை தனியா... ஒதுக்கு... இந்தாடா திருமலை... நூற்றி எண்பத்து

நாலு ரூபாயும் முப்பது பைசாவையும் எடு.... என்கிட்டயே கொடு. சிமெண்ட்டோட விலை.... வயசுப் பொண்ணு வளத்தி மாதிரி கூடிக்கிட்டே போவுது... இன்னைய ரேட்டுப்படி... மீதிக் கணக்கு அப்புறம் பார்த்துக்கலாம்..."

"ஆமா தெரியாமத்தான் கேக்கேன்... நீரு விவகாரியா.... இல்ல வியாபாரியா... மாப்பிள்ளே..."

திருமலை சட்டைப் பையைத் துழாவினான்... வேட்டியைத் தூக்கி, டவுசர் பைக்குள் கைவிட்டான்.... அப்போதுதான்.... அவனுக்கு உறைத்தது.... வெறும் கையில் முழம் போட்டிருக்கான். இந்தச் சமயத்தில் யாரிடமாவது பணம் கேட்டால், தான் துளசிங்கத்திடம் வம்புச் சண்டைக்குப் போனதாக அர்த்தமாகிவிடும்... திருமலை என்ன செய்வது என்று புரியாமல் விழித்தபோது, துளசிங்கம் புரிந்து கொண்டான்... திருமலை வம்புச் சண்டைக்கே வந்தவன் என்பதை நிரூபிப்பதற்காக, அவன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு 'சபையிடம்' முறையிடப் போனபோது _

திருமலை அண்ணாவின் தடுமாற்றத்தைப் புரிந்துகொண்ட கோலவடிவு, அண்ணனின் அருகே வந்து, முந்தானையில் மடித்து வைத்திருந்த இரண்டு நூறு ரூபாய் நோட்டுக்களை திருமலையின் கையில் லாவகமாகத் திணித்தாள்... உடனே அவன், அந்த நோட்டுக்களை பத்து ரூபாய் நோட்டாக பயந்து பார்த்து, பிறகு சந்தோஷப்பட்டு தாமோதரனிடம் நீட்டினான்...

துளசிங்கம், கோலவடிவை, பற்களைக் கடித்துப் பார்த்தான்.

# 10

கோலவடிவு, மீண்டும் அதே அந்த குளத்தடி வயல், பம்ப் செட்டில் குளித்துக் கொண்டிருந்தாள்... ஏதோ குளிக்க வேண்டுமே என்பதற்காக குளிப்பதுபோல், தண்ணீருக்குள் தலையைக் கொடுக்காமல், 'காக்கா' குளியலாகக் குளித்துக் கொண்டிருந்தாள். சோப்புத் தேய்க்க வேண்டும் என்ற எண்ணமில்லாமல் எழுந்தாள்.... கண்கள் குளத்துக் கரையைப் பார்த்தன. அவளுக்கே தெரியும், அலங்காரி வரமாட்டாள் என்று..... ஆனாலும் ஒரு சபலம்... அலங்காரி அத்தை வந்தாலும் வருவாள்... அவளைத் தேடி துளசிங்கமும் வந்தாலும் வருவார். அத்தையைத் தேடியா.... இல்லை தன்னைத் தேடியா.... கோலம், பம்ப் செட் அறைக்குள் துணி மாற்றியபடியே., தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

"பாவம் துளசிங்கம்... அண்ணா அவரு கைய திருகிப் போட்டானே... இப்போ கையி எப்படி இருக்கோ....? அவரு மட்டும் என்னவாம்... அண்ணா காதக் கடிக்க.... ஊசி போட்டோமே... வேண்டாத சண்டை... எனக்காவ இவரு விட்டுக் கொடுத்திருக்கலாம்... நான் ரெண்டு கையை பிசைந்தது ரெண்டு பேருக்காவன்னு அவருக்குத் தெரியுமோ... என்னவோ. என்னையும் சண்டைக்காரியாய் நினைக்கப் போறாரு... அப்படி நெனக்கப் படாதுன்னு அலங்காரி அத்தேகிட்ட சொல்லணும்... முடியுமானால் அவரு கிட்டயே... அதெப்படி முடியும்... ஏன்.... வாயாலதான் பேச முடியுமா.... கண்ணால பேச முடியாதா.... இந்தச் சண்டையால அவர நெனக்கக்கூட எனக்கு தகுதியில்லாம போயிட்டே.... நல்ல வேளை அப்பா அண்ணாவைத்தான் திட்டுனாரு.... அடிக்கக்கூட போயிட்டாரு... துளசிங்கம் நல்ல பையன்னு வேற சர்ட்டிபிகேட் கொடுத்தாரு.... அலங்காரி அத்தைகிட்ட சொல்லணும்... அந்த அத்தைக்கு மூள இல்ல... நான் இங்க இருப்பேன்னு தெரிஞ்சு வரவேண்டாம்... அத்தைக்குத் தான் மூள இல்ல.... அவருக்குமா... சீச்சி... இதுக்குமேல நினைக்கறது இன்னும் கோபம் ஆறாத எங்கண்ணாவ அவமானப் படுத்தறது மாதிரி..."

கோலவடிவு, மத்தாப்பு மனதைக் கல்லாக்கிக் கொண்டாள்... ஈரப் புடவையைப் பிழிந்து, மூன்றாக மடித்துத் தோளில் போட்டுக் கொண்டு, புறப்பட்டாள்... அடடே என்ன சத்தம்... ராமையா மாமா சத்தம்... துளசிங்கம் மச்சான் சத்தம்...

கோலம் முதலில் ஆனந்தக் கோலமானாள். பின்னர், அப்படியே சோகக் கோலமானாள்.

ராமையா வயல், துளசிங்கம் வயலுக்கும் பக்கத்து வயல்... இங்கிருந்தபடியே பேசினால் அங்கே கேட்கும். அந்த வயல் நெற்பயிரைத் துளசிங்கமும், ராமையாவும் கூடவே அக்கினி ராசாவும் சுற்றிச் சுற்றிப் பாக்காவ... கைகளை ஆட்டி ஆட்டி பேசுதாவ... இது என்ன? ராமய்யா மாமா துளசிங்கத்தை அடிக்கப்போறது மாதிரி துள்ளுறாரே.... மாமா..... அவர திட்டாதயும்.... திட்டப்படாது....

இப்போது அவர்கள், அந்த வயலின் கிணத்து மேட்டுக்கு வந்து, கோபங் கோபமாய் பேசிக் கொண்டிருப்பது போல் தெரிந்தது... துளசிங்கம் மச்சான் இடது கையில், பிளாஸ்திரி போடப்பட்டு, அது ஒரு துணிக்கட்டில் தொங்கியது. 'அடக்கடவுளே.... ஆனாலும் எங்கண்ணா மோசம்.... அடிச்சாலும் இப்படியா.... பாவம்.... எப்டி துடிக்காரோ....? எப்படி வலிக்குதோ...?'

கோலவடிவுக்கு அந்தப் பக்கம் போக வேண்டும் போலிருந்தது... .அவர்கள் பேசுவதைக் கேட்க வேண்டும் போலிருந்தது... எல்லாவற்றிற்கும் மேலாக, துளசிங்கம் மச்சான் கை பிசகியிருக்கா.... இல்ல ஒடிஞ்சிருக்கான்னு தெரிஞ்சுக்கணும்.... கடவுளே.... கடவுளே பிசகி இருக்கணும்... ஒடிஞ்சிருக்கப்படாது... இந்தப் பாவி நெத்தியில எந்த நேரம் குங்குமம் வச்சாரோ... கை ஒடஞ்சிட்டே...... ஒடச்சிட்டானே.... நாசமாப் போறவன்... கடவுளே... கடவுளே.... ஒடிச்சவன் எங்கண்ணான்னு தெரியாம திட்டிட்டேன் பாரு.... சரி... இப்போ அந்தப் பக்கம் போகணும்... எப்டி போறது... போறதுல தப்பில்ல.... பழைய சண்டை விஷயமாயும் ரெண்டு பேரும் பேசலாமுல்லா...

கோலவடிவு யோசித்தாள்.... அங்கிருந்தபடியே அந்த வயலுக்குத் தாவிக் குதிக்கப் போகிறவள்போல்.... முன் பாதங்களை அழுத்தினாள்...

அடடே... ராமய்யா மாமா... கிணத்து மேட்டுல ஒரு ரோசாச் செடி இருக்கே... நாலைஞ்சு பூ இருக்கே... தலையில வச்சால் எப்டி இருக்கும்.... யாரும் எப்படியும் போவட்டும்... நாம் பூப்பறிக்கத்தானே போறோம்..."

கோலவடிவு நடக்க முடியாதவள் போல் நடந்தாள்.... தன்னை நம்ப முடியாதவள் போல் நடை போட்டாள்.. ஒத்தைப் பரப்பில், கைகளை அங்குமிங்குமாய் ஆட்டி, சர்க்கஸ்காரி போல் நிதானமாய் நடந்து, ராமையா மாமாவின் வயலுக்கு வந்துவிட்டாள். அக்கினி ராசா பராக்குப் பார்த்துட்டு இருந்தான்... துளசிங்கமும், ராமையாவும், காரசாரமாகப் பேசினார்கள்... அக்கினி ராசா, அவளைப் பார்த்தான்... என்னம்மான்னு கேட்க திராணி இல்லை.... அப்பா முகத்தையும் அவள் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தான்.

கோலவடிவே அவர்கள் கவனத்தைக் கலைத்தாள்.

"மாமா... இந்த ரோசாப் பூவை நான் பறிச்சுக்கட்டுமா...? நல்ல பூவு...."

துளசிங்கத்திடம் வாயெல்லாம் பல்லாகக் கடித்துக் குத்திப் பேசிய ராமையாவுக்குக் கோலவடிவைக் கண்டதும், பல்லெல்லாம் வாயாகிவிட்டது.... பய மவளுக்கும் அக்கினி ராசாவக் கட்டிக்க ஆசதான்... இவள் சம்மதிக்காம கல்யாணம் நடக்காதேன்னு இனுமப் பயப்படவேண்டாம்...

ராமையா, அவளை மகளைப் பாாப்பதுபோல் பார்த்துத் தந்தை போல் பேசினார்.

"ஒனக்குல்லாத பூவாம்மா... நீ பறிக்காத.... முள்ளு குத்தும்.... ஏல அக்கினி ராசா... வேட்டிய எடுத்து கால் வரைக்கும் இழுத்துப் போடுல... மூதேவி... மாமா மவளுக்கு பூப்பறிச்சுக் கொடுடா.... எல்லாப் பூவையும் பறிச்சுக் கொடுடா..."

அக்கினி ராசாவுக்குச் சொல்ல முடியாத மகிழ்ச்சி... அவனுக்கும் இந்தக் கல்யாணப் பேச்சு தெரிந்திருக்க வேண்டும்..... அவளை ஆவலோடு பார்த்தான்... அனுமான் சஞ்சீவி மலையத் தூக்கியது

மாதிரி... பூக்கள் மொய்த்த அந்த ரோசாச் செடியையே வேருடன் பிடுங்குவது போல் பூக்களைப் பறித்தான்.... மூன்று பூக்கள்... ஒரு மொட்டு... நான்கையும் அவளிடம் நீட்டிவிட்டு, ஏதோ பேசப்போனான்... பிறகு அவனுக்கு வெட்கம் வந்தது... ஓடிப்போய் துளசிங்கம் பக்கத்தில் நின்று கொண்டான்.

கோலவடிவு, அக்கினி ராசாவைப் பாவமாகப் பார்த்தாள்... துளசிங்கத்தையும் 'பாவமாகப்' பார்த்தாள்.... அவனோ, அவள் பக்கம் சட்டென்று திரும்பிவிட்டு, அதே வேகத்தில் முகத்தை ராமையாவின் முன்னால் நிறுத்தினான்... கோலவடிவு, தலையில் பூ வைக்கும் சாக்கில் அங்கேயே நின்றாள்... அவள் போகட்டும் என்று பேச்சை நிறுத்திய துளசிங்கம், பிறகு அவள் ஒரு பொருட்டல்ல என்பதாய்ப் பேச்சை விட்ட இடத்தில் இருந்து துவங்கினான்.

"ஒமக்கு எப்டி சின்னய்யா நஷ்ட ஈடு கொடுக்க முடியும்...."

"என்னடா பேச்சுப் பேசற... ஒன் உரத்த வாங்கி, இந்த ஆறு மரக்கால் விதப்பாடு அவ்வளத்துலயும் போட்டேன்... மற்ற வயலுல நெல்லுப் பயிருவ.... குட்டையாய் நிக்கும்போது என் வயலுல பயிரு நெட்டையா சிலுசிலுன்னு வளர்ந்ததுல சந்தோஷப்பட்டேன்.... இப்போ பயிருல்லாம் சாவியாய் போயிட்டேடா... இவ்வளவுக்கும் மத்த வயலுக்காரங்க மாதிரிதான் தண்ணி பாய்ச்சுனேன்... பூச்சி மருந்து அடிச்சேன்... எல்லா பயிரும் நெல்லுக் கதிரச் சுமக்கும் போது, என் நெற்பயிரு மலடி மாதிரி சாவியாயிட்டடா.... ஒன் உரத்துலதான் ஏதோ மிஸ்டேக்கு...."

"சரி... கத்தாதேயும்.... எனக்கு மறந்து போச்சு... என்ன உரம் வாங்கினீரு...."

"பொட்டாசியம்... சீம உரம்...."

"ஓ.... அதுவா... இப்போ நல்லா ஞாபகம் வருது.... அந்த உரத்தோட யூரியா உரத்த கலந்து போடணுமுன்னு அக்கினி ராசா கிட்டே முருகன் கோவில் முன்னால் சொன்னேன்.... இல்லியா அக்கினி..."

அக்கினி, ஆமாம் என்பதுபோல் தலையாட்டினான்.... உடனே, துளசிங்கம், "ஒம்ம மகன் கிட்டயே விசாரியும்" என்றபோது, அப்பா கேட்டால் மட்டுமே பேசும் அக்கினி பேசாமல் இருந்தான்.

"துளசிங்கம் சொல்லுறது நிசமாடா...."

"ஆமா.... பொட்டாசியம் உரத்த, யூரியா உரத்தோட போடாட்டா பயிரு பொண்ணு மாதிரி வளரும்..... ஆனால் சமையாது... அதாவது வயசுக்கு வராதுன்னு துளசி சொன்னது வாஸ்தவந்தான்.... நான் ஒம்ம கிட்ட சொல்லல... செலவாகுமேன்னு...."

"போயும் போயும் எனக்கு வந்து மகனா வாய்ச்சே பாரு.... நீயுல்லாம் ஒரு சம்சாரியா... செலவாகுமுன்னா நெனச்சே? வயல நட்டால் செலவாகும்... நடாமல் இருப்பமோ... பம்பு செட் போட்டா கரெண்ட் செலவாகும்... போடாம வைப்பமா... பூச்சி மருந்தடிச்சா செலவாவும்... அடிக்காம இருப்பமா... நீயுல்லாம் ஒரு விவசாயியாக்கும்... ஏடே துளசிங்கம்..... ஒன்ன நான் திட்டுவது தப்புத்தான் முட்டாத் தனந்தான்... தப்பா எடுத்துக்காதடே...."

"தலையை வெட்டிட்டு தப்புன்னு சொல்லும்... எனக்குத் தெரியும்... நீங்க எல்லாரும் என்னை இப்டி கரிச்சுச் கொட்டுவியங்கன்னு..... பண்டாரம் பரதேசியாய் போனவன்... அதுவும் உப்புக்கும் உதவாத எலி டாக்டர் மகன்... நல்லா சம்பாதிக்கானேன்னு பொறாம... ஆனால் ஒண்ணு சொல்லுறேன்.., இந்த ஊரே சேர்ந்தாலும் என்னை துரத்த முடியாது.... ஒங்களால மிரட்ட முடியும்.... ஆனால் விரட்ட முடியாது...."

துளசிங்கம், போகப் போகிறவன்போல், செருப்பு போடப் போனான். அதைப் பார்த்த கோலவடிவு, ராமையா மாமா வயல் வழியாகச் சின்ன வாய்க்கால் வரப்பில் நடந்தாள்... ராமையா, அக்கினி ராசாவை அடித்திருப்பார்... பிறகு மருமகள் கோலவடிவுக்கும் அந்தப் பழக்கம் வந்துவிடக்கூடாதே என்று பல்லை மட்டும் கடித்தார். துளசிங்கத்திடம், "வைக்கோலாவது வருமா..... அதை மாட்டுக்குப் போடலாமா" என்று கேட்கப் போனவர், மருமகளுக்குக் கேட்கும்படியாய் அவன் இன்னும் ஏடா கோடமாய் பேசிவிடப் படாதே என்று பயந்து போனார்.

அந்த வயலைவிட்டு அடுத்த வயல் சென்ற கோலவடிவு திரும்பிப் பார்த்தாள். துளசிங்கம் வந்து கொண்டிருந்தான்....வேட்டி சட்டையோடு அல்ல.... பொம்மைச் சட்டையோடும், பாவாடை மாதிரி அகலமான பேண்ட்டோடும்.... கோலவடிவு அவனுக்குப் பயந்து நடப்பவள் போல் நடந்தாள்... பிறகு இன்னொரு வாய்க்காலுக்கு வந்ததும் பதுங்கி நின்றாள்... சே... காலெல்லாம் ஒரே சகதி... வாய்க்காலுல காலக் கழுவணும்... எப்படிஅப்புது.... எம்மாடி...

கோலவடிவு, கால்களைக் கழுவிக் கொண்டிருக்கும்போது, துளசிங்கம் வந்துவிட்டான். அவளை ஒரு கணம் உற்றுப் பார்த்துவிட்டு, திரும்பிப் பார்க்காமலே நடந்தான்... கோலவடிவு கழுவிய ஒரு காலோடும், கழுவாத இன்னொரு காலோடும் ஓடினாள்.... அவன் முகத்தைப் பின்னோக்கிச் செலுத்துவதற்காக இருமினாள்... செருமினாள்... அவன் திரும்பியதும் நாணத்தோடு நின்றாள்... அவன் மீண்டும் நடக்கப் போனான்... அவள், வார்த்தைகளால் இடைமறித்தாள்.

"அலங்காரி அத்தையக் காணோம..."

"கூட்டிட்டு வா காட்டுறேன்... பாசம் ரொம்பத்தான் பொங்குதோ..."

"ஒம்ம கையி..."

"ஏன் முழுசா உடையலன்னு கேட்கியா...? கையில பணமில்லாமலே சிமெண்ட் கேட்டு வம்புக்கு வந்த அண்ணன் கையில ரூபாய் திணிச்சத நான் மறக்கல.... எம்மாளு... ஒனக்குக் கோடி கும்பிடு.... இந்த வம்பு தும்புக்கு மூலமே நீதான்... எங்க அலங்காரி சித்தி வியைாட்டுக்குச் சொன்னத... நீ பெரிசு படுத்தாம இருந்திருந்தால் எனக்கு கையும் ஒடிஞ்சிருக்காது... ஒங்கண்ணாவுக்கு காதும் கிழிஞ்சிருக்காது... இன்னும் என்னெல்லாம் நடக்கப் போகுதோ.... ஒன்ன நல்ல பொண்ணுன்னு நெனச்சேன் பாரு.... என்னை.."

துளசிங்கம், அவள் இதயத்தை இட்டு நிரப்பாதது போல், சொல்ல வந்ததையும் சொல்லி முடிக்காமலே வேறு பக்கமாக நடந்தான்.

அவனையே பார்த்து நின்ற கோலவடிவிற்கு விக்கல் வந்தது... அது விம்மலாகியது... வெடிச் சத்தமாகியது.... கசிவாகியது.... கண்ணீராகியது.

'கை ஒடிஞ்சுட்டாமே... ஒடிஞ்சுட்டாமே... என் மனசு அவருக்குப் புரியலியே... நான் எப்பவும் நல்ல பொண்ணுதான்... அவருகிட்ட யார் சொல்லுறது.... நாம் சொல்ல முடியாது... அப்படியே சொல்லத் தயாராய் இருக்கதுக்கு அவரு கேட்கத் தயாராய் இல்ல.... அத்தே... அலங்காரி அத்தை.... எங்கத்தே போயிட்டே.... எப்பத்தே வருவே....'

கோலவடிவு குளத்துக்கரை வழியாக நடந்தாள்... போனவாரம் அவன் வைத்த குங்குமம் கலையப்படாமல் ஆனந்த அதிர்ச்சியுடன் போன அதே கரையில், தள்ளாடித் தள்ளாடி தானாய் நடக்காமல் யாரோ நடத்துவதுபோல் நடந்தாள்.

எப்படித்தான் வீட்டுக்கு வந்தாளோ... வழியறியாமலே, பழக்கப் பட்ட காரணத்தால் வந்துவிட்டாள்... தெரு வாசல் கதவை திறந்துவிட்டு, நுழையப் போனாள்... அப்பா ஏன் சித்தப்பா கிட்டே இப்படிக் கத்துறார்..

"அதெப்படிடா.... அக்கினி ராசாவோட கோலவடிவு.... நெனச்சுக் கூடப் பாக்க முடியாதுப்பா...."

"ஏன் முடியாது... திருமலைக்கும் துளசிங்கம் செறுக்கி மவனுக்கும் நடந்த சண்டையில, ராமையா மச்சான் நம்ம பக்கம் நின்னாரு... இதனாலதான் துளசிங்கம் பயலும் இறங்கி வந்தான்.... அதோட காத்துக் கருப்பன் குடும்பம் நம்ம அம்மா பிறந்த குடும்பம்.... ஆள்பலம் உள்ள குடும்பம்..."

"சரி யோசிக்கேன்... யோசிக்கேன்..."

"யோசிக்க யோசிக்க கோலவடிவுதான் கொடுத்து வச்சவள்னு வரும்..."

அப்பாவின் முதலாவது பதிலில் முழு வெற்றி கண்டவள்போல் நிமிர்ந்த கோலவடிவு, அவரது இரண்டாவது பதிலில் துவண்டாள்....

தோளில் கிடந்த அந்த சேலை போல் கண்ணீரால் ஈரம்பட்டு நிலைப்படியில் சாய்ந்தாள்... அப்பா சம்மதிக்க மாட்டார்... ஒருவேளை அப்படி சம்மதிச்சுட்டால் வருமுன் காக்கணுமே.

"அலங்காரி அத்தே... நீதான் என்னைக் காப்பாத்தணும்..."

# 11

கோலவடிவு குமுறியபடியே நின்றாள்.

அக்னி ராசாவுக்கு, தான் மனைவியாகும் சந்தர்ப்பம் இருக்கிறது என்பதை அவளால் நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை... அந்த ஆத்திரத்திலும், ஆவேசத்திலும் தனது இடது தோளை வலக்கரத்தால் பிடித்து அழுத்தினாள். அந்தத் தோளில் தொங்கிய ஈரப்புடவை, கசங்கிப் போய் அவளுக்காகக் கண்ணீர் சிந்துவது போல் தண்ணீர் சொட்டுச் சொட்டாக அவள் கை வழியாக உருண்டோடியது.... அவளுக்கு, இப்போதே அலங்காரி அத்தையின் வீட்டுக்குப் போய் அவள் தோளில் கை பின்னி, மார்பிலே தலைபோட்டு, அழவேண்டும் போல் இருந்தது. அதற்காகத் திரும்பக்கூடப் போனாள். அது எப்டி முடியும்? அலங்காரி அத்தை வீட்டுக்கு ஆம்புளைங்க போனால் சந்தேகம் வராது... அத்தனையும் இடக்கு மடக்குங்க..... ஆனால் ஒரு பொம்பிளை போனால் சந்தேகம் வரும்... அந்த அளவுக்குக் கொடிகட்டிப் பறக்கும் அத்தை வீட்டுக்கு, இப்போ மட்டுமல்ல எப்போதும் போக முடியாது.. ஆனால் அத்தைய பார்த்துத்தான் ஆகணும்...

கோலவடிவு வீட்டு வாசல் படியைத் தாண்டப் போனாள். அதற்குள் சிறிது மௌனப்பட்ட வீட்டில் அம்மாவின் சத்தம் கேட்டது.

"ஊர்ல எவளப் பார்த்தாலும், எவனப் பார்த்தாலும் அக்னி ராசாவுக்கும், கோலவடிவுக்கும் கல்யாணமாமே கல்யாணமாமேன்னு கேள்விமேல் கேள்வியாய் கேக்காங்க.... எனக்கு பதில் சொல்லமுடியல... இந்தப் பேச்சு எப்படி வந்தது...."

"இதுவே ஒரு நல்ல சகுனமுன்னு நெனச்சுக்கணும்.... மயினி...."

"சகுனம்.... நல்ல சகுனம்.... பூனய மடில வச்சுப் பார்த்த சகுனம்... அதுவும் நாம தீர்மானம் செய்யுறதுக்கு முன்னாலயே ஊர் தீர்மானம் பண்ணுது... ஒம்மத்தான்... திருமலை ஏதோ ஒங்க கிட்ட பேசணுமாம்... நீயே சொல்லேண்டா....."

கோலவடிவுக்கு, போய்ப் போய் வந்த உயிர், இப்போது போகாமலேயே அவள் உடலில் முழுமையாக நின்றது. அண்ணா.... நமக்காக அப்பாகிட்ட சண்டை போடப் போறான்... அவன் போடுற சத்தத்துல... இந்த செத்த பேச்சு இன்னயோட முடியணும்...

கோலவடிவு வீட்டுக்குள் நுழைந்தாள்... இருபது எட்டுக்கள் போட்டு நடக்க வேண்டிய தூரத்தைப் பத்தே எட்டாகத் தாவி, தனக்கு எதுவுமே தெரியாததுபோல, குறுக்காகக் கட்டிய கொடியில் சேலையைப் பரப்பிப் போட்டபடியே, அண்ணா திருமலையைப் பட்டும், படாமலும் பார்த்தாள். 'சீக்கிரம் பேசு அண்ணா... அப்பாகிட்ட பேச பயந்தான் வரும்.... அதுக்காவ இப்படியா யோசிக்கது... பேசுண்ணா... பேசு... அக்னிராசா, அருமத் தங்கைக்கு ஆவாதுன்னு அடிச்சுப் பேசு..... நீ முடிக்குமுன்ன கல்யாணமே நடந்துரும் போலுக்கே...'

அப்பாவை நேருக்கு நேராய்ப் பார்க்கப் பயந்தது போல, அம்மாவைப் பார்த்து அவள் வழியாகத் தன்னைப் பார்த்த மகன் திருமலையை நோட்டம் விட்டார்.... பிறகு, இருவரும் 'அம்மா' வழியாகவே மகனைப் பார்த்துவிட்டு, மனைவியிடம் கேட்பதுபோல் மகனிடம் கேட்டார்.... அவன் காதில் கடுக்கன் மாதிரி போடப்பட்ட பிளாஸ்டரைப் பார்த்ததும் கோபம் வந்தது.

"என்ன சொல்லப் போறானாம்..... அம்மன் கொடை விஷயத்துல சினிமாப்படம் போடணும்னு சொல்லப் போறானா.... இல்ல காத கடிக்க கொடுத்தது மாதிரி மூக்கையும் கொடுக்கப் போறானாமா..."

"அவன் ரெண்டையும் சொல்ல வர்ல..."

"பிறகு சொல்லறதுக்கு எதுவுமே இல்லியே...."

"கோபப்படாம கேளுங்க... அவன் சொல்ல நினைக்கதைத்தான் நான் சொல்லுறேன்.... நானாச் சொல்லல..."

"நீ எப்பதான் இப்டி நீட்டி முழக்கிப் பேசுறதை விடப் போறியோ...?"

"திருமலைக்கு விவசாயம் பார்த்து அலுத்துப் போச்சாம். அழுக்கு வேட்டியோட அலையுறது பிடிக்கலையாம்.... அதனாலதான் துளசிங்கத்துக்கு இவனைப் பார்த்தா இளக்காரமாம்... அதனால இவனும் ஒரு கடை வைக்கணுமாம்... கோணச் சத்திரத்துல இல்லன்னா... நம்ம ஊரு கார் ரோட்ல கமிஷன் கடை வைக்கணுமாம்... துளசிங்கம் மாதிரி ஆயிரக் கணக்குல சம்பாதிக்கணுமாம்..."

"இதை சொல்லப்படாதுன்னு நீயே சொல்லப்படாதா..... பாக்கியம்..."

"நான் இவன்கிட்டே எவ்வளவோ சொல்லிட்டேன்... துளசிங்கப் பயல், அர்த்த ராத்திரில குடை பிடிக்கிறவன்... ஆயிரக் கணக்குல சம்பாதிச்சாலும் கடைசில அரியப்புரம் தங்கமுத்து மாதிரி சினிமா எடுக்கேன்னு மெட்ராஸ் போயி.... சம்பாதிச்ச பணத்தை எல்லாம் நாசமாக்கப் போறான்னு சொல்லியாச்சு...."

"துளசிங்கமும், நல்லா இருக்கணுமுன்னு நீ நினைக்கணும்... நாடெல்லாம் வாழ கேடு ஒன்னும் இல்லை.... அதோட துளசிங்கம், நீ நெனக்கது மாதிரி ஏமாளி இல்ல... கெட்டிக்கார பய... வேணுமுன்னால் பாரு... பணத்த மேலும் மேலும் சேப்பானே தவிர.... சிதைக்க மாட்டான்..."

"அப்போ..... அவன் உசத்தி... நம்ம பிள்ள மட்டமா...?"

"ஒருத்தன உசத்தியாய்ப் பேசுறதாலேயே, இன்னொருத்தன் தாழ்த்தின்னு அர்த்தமில்ல.... இவன் அவனவிட ஒருபடி அதிகமுன்னு எனக்குத் தெரியும... நான்... வயல் வேலைய கவனிச்சு எவ்வளவோ நாளாச்சு.... இவன்தானே கட்டிக் காத்து வாரான்... இவனுக்கு என்ன குற.... மோட்டார் பைக் வச்சுருக்கான்... எங்கே வேணுமுன்னாலும் போகலாம்..."

“ஆனாலும் அவன் கொஞ்சம் மரியாதையோட...”

“நீயே அவனுக்கு சொல்லிக் கொடுப்பே போலுக்கே... பாக்கியம்... வியாபாரிக்கு மரியாதன்னா நெனக்கே... அதான் இல்ல... இந்தப் பயலுவ அறைக்குள்ள கண்டவன் காலுல்லாம் விழுந்துட்டு, வெளில மேனா மினுக்கியாய் அலையுற பயலுவ.... இவனுக்கு கமிஷன் கடை வைக்கேன்னு வச்சுக்க.... வைக்கது ஒன்னும் பெரிசில்ல நமக்கு..... ஆனால் அப்டி வச்சுட்டா-போலீஸ்காரன் திருட்டு நெல்ல வாங்கிட்டோமுன்னு சும்மா சும்மா வந்து தொல்லை பண்ணிக்கிட்டு, மாமுலுக்கு வருவான்... வரி ஆபீஸர் வருவான்... லைசென்ஸ் பாக்க வாறேன்னு யூனியன்காரன் வருவான்... இவன் ஒவ்வொருத்தன் கையில இல்ல... காலுல பணத்த வைக்கணும்... அவனுவ அதட்டுற அதட்டலுக்கு காது கொடுத்து கேட்டு, கொடுக்கிற லஞ்சத்தையும் பிச்சக்காரன் மாதிரி கொடுக்கணும்... ஒருத்தனுக்கு பணம் கொடுக்கிறது தப்புல்ல.... அதையே கும்பிட்டுக் கும்பிட்டு லஞ்சமா கொடுத்தா அது அடிமைத்தனம்... அந்தக் காலத்து குட்டி ராசாக்க பெரிய ராசாவுக்கு கப்பம் கட்டுறது மாதிரி.... விவசாயிக்கு அப்டி இல்ல... எந்தப் பயலுக்கும் பதில் சொல்லத் தேவையில்ல... இந்தக் கவுரவம் எவனுக்கும் வராதுன்னு இவனுக்குச் சொல்லு...”

‘‘விவசாயத்தையும், வியாபாரத்தையும் ஒண்ணா கவனிச்சுக்கிட்டு...”

“இந்தா பாரு.... நீ இப்டிப் பேசுனால், இவன் ஒரு நாளைக்கு வீட்ல இருக்கிற பணத்தை எடுத்துக்கிட்டு மெட்ராஸுக்கோ, மதுரைக்கோ ஓடி சீரழியப் போறான்.... அதுதான் நடக்கணுமுன்னு நீ நெனச்சால் அப்புறம் ஒன் இஷ்டம்... என்னைப் பொறுத்த அளவுல இந்தப் பிலாக்கணம் இதோட முடியுது... சரி சீக்கிரமா காபிக்கு ஏற்பாடு பண்ணு... ‘வரி’ போடுறதுக்கு ஆளுங்க வர்ற சமயம்...”

பழனிச்சாமி, தனது காதுகளைத் திருகினார்..... ஒரு முடிவுக்கு வந்துவிட்டால் அவர் அப்படித்தான். திருமலை, உம்மென்று இருந்தான்... பாக்கியம் தனக்குள்ளே முனங்கினாள்... கோலவடிவு அந்தக் கயிற்றுக் கொடியைக் கீழே இழுத்துப் போட்டபடியே அண்ணாவை ஏமாற்றத்தோடு பார்த்தாள்... அம்மாவை, கோபமாகப்

பார்த்தாள்... அவனுக்காவ எப்டி பேசுறாள்... எனக்காவ ஒரு வார்த்த பேசுதாளா.... பொண்ணுன்னு வந்துட்டா அம்மாவக்குக்கூட இளக்காரந்தான்... அக்னி ராசாவாம் அக்னி ராசா... எரிஞ்சு எரிஞ்சே அணைஞ்சு போற அக்னி....

பாக்கியம் மகள் பக்கத்திற்கு வந்து தனது கோபத்தைக் காட்டினாள்.

"இவ்வளவு தண்டில இருக்கியே....? ஒனக்கு மூள இருக்கா....? தடிமாடு... கொடிய இப்டி பிடிச்சா இழுக்கது...? இன்னா பாரு... அறுந்துட்டு...."

கோலவடிவு பற்றிய கயிற்றுக்கொடி இரண்டாக அறுந்து, அவள் ஒரு பக்கத்து முனையைத் தன்னையறியாமலேயே பிடித்துக் கொண்டு இழுத்திருக்கிறாள். அவளுக்கே தெரியவில்லை... கீழே விழுந்த ஈரச்சேலையையும், காய்ந்த பாவாடையையும் எடுக்கப் போனபோது, அம்மா விரட்டினாள்.

"குளிச்சுட்டு வாரதுக்கு இவ்வளவு நேரமாழா.... இனிமேல் பம்ப்செட் பக்கம் போ... ஒன் கால ஒடிச்சுப் புடுறேன்... டேய் திருமலை... சாப்புடு ராசா.... ஏமுழா இவ்வளவு நேரம்..."

கோலவடிவு அம்மாவின் திட்டிற்கு வருத்தப்படவில்லை.... வழக்கத்திற்கு மாறாக சந்தோஷப்பட்டாள். ஒரு 'விஷயத்த' சொல்லப் போறாளே...

"ராமய்யா மாமா வயலுல ஒரு சண்டம்மா... துளசிங்கத்துக்கும், அவருக்கும் அடிதடி வராத குறை... அப்புறம் ரெண்டு பேரும் இணைஞ்சி போயிட்டாங்க இந்த அக்னிராசாவுக்கு ஒண்ணுமே தெரியலம்மா, துளசிங்கம், வயலுல வாங்குன உரத்தோட இன்னொரு உரத்த கலந்து போடச் சொன்னாராம்... இந்த அக்னி ர்ாசா... சரியான அசமந்தமா... பொட்டாசியம் உரத்த, யூரியா உரத்தோட கலந்து, போடாம வயலயே சாவியாக்கிட்டாராம்... ராமய்யா மாமா துளசிங்கம் சண்டையில, தனக்கு சம்பந்தம் இல்லாதது மாதிரி நிக்காரு... அக்னிராசா."

"அக்னி ராசா, உத்தமன். யோக்கியன்.... அப்படித்தான் நிப்பான்.... துளசிங்கம் மாதிரி அவன் என்ன காவாலிப் பயலா....? பரம்பர பணக்காரன்..."

கோலவடிவு குன்றிப் போனாள்.... அறுந்த கொடியைக் கட்டாமல், விழுந்த சேலையை எடுக்காமல், இயக்கமின்றி நின்றாள்.... இந்தச் சமயத்தில், இருபது இருபத்தைந்து சொக்காரக் கரும்பட்டையான்கள்... அவர்களில் ஒருவர் திருமலையைப் பார்த்துக் கேட்டார்...

"ஒங்க வயலுல பம்ப் செட் ஓடிக்கிட்டு இருக்குது... நீ இங்கே இருக்கே...."

கோலவடிவு கைகளை உதறியபோது பாக்கியம் கூப்பாடு போட்டாள்.

"பம்ப் செட்ட ஆப்பு செய்யாம வந்துட்டியா...? எரும மாடு மாதிரி தலை ஆட்டுறாள் பாரு... போழா... சீக்கிரமா வயலுக்குப் போய் ஆப் பண்ணிட்டு வா.... இந்நேரம் வயலே மூழ்கியிருக்கும்... ஓடுழா.... வரவர ஏன்தான் இப்டி பித்துப் பிடிச்சுப் போறியோ....? ஓடுழா.... இல்லன்னா வயலு குளமாயிடும்...."

உள்ளே இருந்தவர்கள் பழனிச்சாமி இருந்த தார்சாவுக்குள் போய், பெஞ்சுகளையும் நாற்காலிகளையும் தரையையும் இடமில்லாதபடி நிரப்பினார்கள்... பழனிச்சாமி சுவரில் சாய்ந்த தலையை நிமிர்த்தியபடியே கேட்டார்.

"எந்தப் பய மவனுகளோ..... நம்ம அம்மனுக்கு முன்னால வீடியோ படம் போடணுமுன்னு சொல்லுதாங்களாமே... எந்தப் பயன்னாலும் இப்பவே சொல்லட்டும்...."

"ஒங்க பேச்சுக்கு எதிர்ப்பேச்சு உண்டா... வில்லுல தான் கொஞ்சம்..."

"வில்லுலயும் பொம்புள வில்லு கிடையாது... நம்ம அரியப்புரம் வெற்றிக்குமார் வில்லுதான்... அவங்க கிடைக்காட்டாதான் அடுத்த வில்லு...."

"அப்புறம் மேலும்..."

"செட்டு மேளம் வைப்போம்... நம்ம ஊரு கணேசன் ரெண்டு தட்டு தட்டட்டும்... இந்தத் தடவ குற்றாலத்துல மட்டும் தண்ணி

கொண்டு வந்தால் போதாது, தோரணமலை முருகன் கோயில் சுனையில் இருந்தும் நீரெடுக்கணும்..."

"அப்புறம் வரி எவ்வளவு.... அண்ணாச்சி....."

"ஐம்பது ரூபாய் வரி போதும்..."

"எப்டி போதும்.... இந்த வருஷம் சப்பரம் விடணும்... ரிப்பேர் பாக்கவே ஆயிரம் ரூபாய்க்கு மேல ஆவும்..."

"ஒனக்கு மூள இருக்காடா... கொத்துகுறைக்கு அண்ணாச்சி கொடுத்துட்டுப் போறார்.... அம்பது ரூபாய் வரியே அதிகம்..."

"சரி... சரி ஐம்பது ரூபாய். சப்பரத்த பழுது பார்த்து அலங்காரம் செய்யுற செலவு என் பொறுப்பு... இன்னும் ஏதும் பாக்கி இருக்கா.... பேசுறதுக்கு...? பாக்கியம் காபி கொண்டு வா... திங்கறதுக்கு மொச்சக்கொட்டை பாசிப் பருப்பு எது இருந்தாலும் சீக்கிரம்... சிக்கிரம்..."

வீட்டுக்குள் தட்டுமுட்டுச் சத்தங்கள் கேட்டன.... அப்போது பற்குணம் ஓடி வந்தார். மேலத்தெரு ராமய்யாவின் தம்பி... வம்புச் சண்டைக்கு பழக்கப்பட்டதால் 'வாலன்' என்று வக்கணை பெற்றவர் முற்றத்தில் நின்றபடியே ஊளையிடுவது போல் பேசினார்.

"ஒங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா... செம்பட்டையான் குடும்பத்துலயும் சுடலைமாடனுக்கு இப்போ 'வரி' போடுதாங்க.... செறுக்கி மவனுவளுக்கு திமிரப் பாருங்க.... நீங்க விசேஷம் வச்சிருக்கிற நாளையிலேயே அவங்களும் வைக்கப் போறாங்களாம்..."

"வாங்கடா.... புறப்படலாம்.... நம்ம வைக்கிற வெள்ளில வைக்காண்டாமுன்னு கெஞ்சிப் பார்ப்போம்... மிஞ்சுனாங்கன்னா சுடலைமாடன் கோயிலயே தரமட்டமாக்கிடணும்.... கரும்பட்டை யானுவளப் பத்தி என்னதான் நினைச்சுக்கிட்டாங்க தெத்துவாளிப் பயலுவ..."

எல்லோரும் எழுந்தார்கள்... திருமலையும் திமிறியபடியே எழுந்தான்.

# 12

கோலவடிவுக்கு, அந்த திண்டாட்டத்திலும், ஒரு கொண்டாட்டம்.

சொக்காரன்மார், உட்காருவதற்கு முன்பே கோலவடிவு வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டாள். அந்தக் குழப்பத்திலும் சிறிது தெளிவு ஏற்பட்டது. வழியில் அலங்காரியைப் பார்க்கலாம், அல்லது அவள் மச்சான் மகனைப் பார்க்கலாம் என்ற மனவோட்டத்தோடு உடலோட்டமாய் ஓடினாள். ஆனாலும் அவர்களை கடைகள் பக்கம் காணோம்.... பீடிக்கடைப் பக்கம் பேச்சில்லை. குளத்துக்கரையில் அலங்காரி இல்லாத பெண்கள் கூட்டமும், துளசிங்கம் இல்லாத ஆண் கூட்டமுமாகப் போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருந்தன.

வயலுக்குள் வந்த கோலம், பம்ப்செட்டை நிறுத்தாமல் வெள்ளப்பெருக்காகிக் கரையுடைந்த வாய்க்காலையும், எல்லைபோய் இரண்டறக் கலந்த சின்னச் சின்ன மிளகாய் பாத்திகளையும் வாயகலப் பார்த்தாள். பின்னர் பம்ப்செட் வெள்ளத்தை உற்றுப் பார்த்தாள்..... இதோ இந்த பம்ப் செட் மேளதாளத்தோடு, அலங்காரி அத்தையின் குலவையோடு, அதோ அந்த குருவிகள் ‘கெட்டி மேளம், கெட்டி மேளம்’ என்று கூறுவது போல் கூவிய காச்சா மூச்சா சத்தத்தோடு இவற்றின் சகல சாட்சியங்களுடனும் துளசிங்கம் மச்சான் குங்குமம் வைத்தார். சைபர் மாதிரியான பெயிலு குங்குமம் அல்ல... தடிச்ச குங்குமம்...

கோலவடிவு, சுயநினைவுக்கு வந்து, பம்ப் செட்டை ‘ஆப்’ செய்துவிட்டு, எதிர்த்திசையை எதோ ஒரு திசையாக நினைத்து நோக்கினாள்.... அங்கே உத்தமன் அக்னி ராசா. தான் சரியாகக் கிரகிக்காததாலோ, அல்லது துளசிங்கம் சொல்ல வேண்டிய அளவுக்குச் சொல்லாததாலோ, சாவியாகிப்போன நெற்பயிர்களை வட்டமடித்த காகங்களை விரட்டியடித்து காவல் காத்தான். அவன் ஒரு பொருட்டல்ல என்பதுபோல் அந்தப் பறவைகளோ பயப்படவில்லை. அக்னிராசா கோலவடிவின் கவனத்தைக் கவர “ஏய் காக்கா...”

என்றான். அதைப் பார்த்த கோலவடிவுக்கு அங்கு நிற்கப் பிடிக்கவில்லை. வரப்பென்று நினைத்து வயல் வழியாக நடந்தாள். குளத்தின் மதகுப் பக்கம் வந்த பிறகு, மீண்டும் கைகளை உதறினாள்.... பம்ப் செட் அறையை பூட்ட மறந்துட்டேனே....

கோலவடிவு, மீண்டும் நடந்த வழியிலேயே நடந்து, வயல் மேட்டிற்கு வந்து பம்ப் செட் அறையைப் பூட்டினாள். சிறிது தூரம் நடந்தபின், மீண்டும் கைகளை உதறி திரும்பி வந்து சாவியை எடுத்துக் கொண்டாள்.... அக்னிராசா அவளை சந்தோஷமாகப் பார்த்தான். லேசாய் பாட்டுக்கூட பாடினான்.... அப்படி பாட்டாக நினைத்து அவன் எதையோ இழு இழு என்று இழுத்தான். இப்படி...... அவளைப் பார்ப்பதையும், பாடியதையும் பார்த்த கோலவடிவிற்குக் கோபமும் வந்தது. கூடவே அனுதாபமும் வந்தது. "ஒம்ம எனக்குப் பிடிச்சிருக்கு... ஆனால் புருஷனாய் பிடிக்கலன்னு, நேரா போய் நாகரிகமாய் சொல்லிடலாமா... எம்மாடி.... அப்பாவுக்குத் தெரிஞ்சா வெட்டிப் புதச்சிடுவார்... அப்புறம் துளசிங்கம் மச்சான் குங்குமம் வச்சதுக்கு அர்த்தமில்லாமப் போயிடும்... அவரு கை ராசியில்லாத கையா இருக்காது... இருந்தா கடை இப்படி செழிச்சிருக்காதே...."

கோலவடிவு கரை வழியாய் நடந்து, கண்மாய் வழியாய் இறங்கி ஊருக்குள் நுழைந்தபோது, தேவைப்படாதவர்கள் அனைவரும் தென்பட்டார்கள். தேவைப்பட்ட இரண்டே இரண்டு ஜீவன்களைக் காணாததால், அவள் ஜீவனற்றவள் போல் நடந்தாள். எதிர் பார்ப்புடன் வயலுக்குள் ஓடியவள், ஏமாற்றமாக நடந்தாள்... அக்கினிராசாவின் ஆக்கிரமிப்புக்கு நடத்தப்பட்ட பேச்சு... அவள் மூச்சை இப்போது தடை செய்தது... அண்ணாவுக்கு என் பொருந்தாத கல்யாணத்தைவிட, கடை வைப்பது பெரிசாப் போயிட்டு.... அப்பா என்னடான்னா பட்டும் படாமலும் பதிலளிக்கார்... அம்மாவுக்கோ, அக்கினிராசா உத்தமனாம்... நான் யார்கிட்ட சொல்ல, எப்படிச் சொல்ல... சும்மா ஆறுதலுக்குன்னாவது சொல்லியாகணும்.... இல்லாட்டா தலையே வெடிச்சுப் போயிடும்... அத்தே.... அலங்காரி அத்தே...

ஊரில் பள்ளிக்கூடத்திற்கு அருகே வந்த கோலவடிவு, அங்கு மிங்குமாகப் பார்த்தாள். அலங்காரி அத்தை வீடு அங்கேதான்

இருக்குது... போய்ப் பார்த்தா என்ன.... அஞ்சு வருஷத்துக்கு முன்னால.... அத்தை வீட்டுக்குப் போயிருக்கேனே... புதுசாவா போகப் போறேன்.... அதெப்படி.... அப்போ நான் வயசுக்கு வரல... அத்தை வீட்டுக்கு வயசுப் பொண்ணுவ போனால்தானே, ஊருக்கு சந்தேகம் வரும்.... சந்தேகம்... பொல்லாத சந்தேகம்... தாயக் கழிச்சாலும், தண்ணியக் கழிக்கப்படாதாம்.... அதாவது தண்ணி வராத ஏதோ ஒரு இடமோ, அந்த தண்ணியோ அசிங்கமாய் இருக்குன்னு அதுக்கு அடுத்த இடத்தையோ, தண்ணியையோ கழிக்கப்படாது.... அப்படியே.... அந்த தண்ணியக் கழிச்சாலும் இந்த அத்தையைக் கழிக்கப்படாது... அவளுக்கு ஆயிரம் வில்லங்கம் இருக்கும்... ஆனால் அந்த அத்தைதான் என்னைக் காப்பாத்துவாள்.... படிதாண்டா பத்தினிமாரு.... அக்னி ராசாவுக்கு என்ன முடிக்கணுமுன்னுதான் பேசுவாளுவ.... ஒரு பொண்ணு தன்னோட கல்யாணத்தைப் பத்தி பேசுறதான்னு சிரிப்பாளுவ...

கோலவடிவு அங்குமிங்குமாய்ச் சுற்றிப் பார்த்துவிட்டு, அலங்காரி வீட்டின் வெளிச்சுவரில் குப்புறச் சாய்ந்து நின்றபடி, முகத்தை மறைத்துக் கொண்டு கதவைத் தட்டினாள். அதிக நேரம் தட்ட வேண்டிய அவசியமில்லை.... அலங்காரியின் 'பாவி மனுஷன்' கதவைத் திறந்துவிட்டு, ஆச்சரியப்பட்டார். பிறகு 'இங்கே பாரேன்' என்பது மாதிரி, 'பெரிய வீட்டு'த் திண்ணையில ஒரு சேலையைத் தைத்துக் கொண்டிருந்த மனைவியைப் பார்த்தார். உள்ளே ஓடிவந்த கோலவடிவு, காஞ்சான், எலி டாக்டர் காட்டும் அவசரத்தைவிட அதிக அவசரம் காட்டித் கதவைத் தாழிட்டாள்.

அலங்காரி ஊசி நூலோடு எழுந்தாள்... சேலை ஒரு பொருட்டல்ல என்பதுபோல் அதை விசிறியடித்துவிட்டு, பாதி வழி நடந்து, கோலவடிவை, தனது மறுபாதி போலாக்கி, அணைத்துக் கொண்டே பேசினாள்.

"என்னடா... இப்டி தும்மல் வருதேன்னு நெனச்சேன்... நமக்கு பிடிச்சவங்க வருவாங்கன்னு எதிர் பார்த்தேன்... நீ வந்துட்டே.... ஆயுசு நூறு.... இந்த வீட்டுக்கு அஞ்சு வருஷத்துக்கு முன்னாலதான் வந்திருக்கே.... இல்லியா.....?"

கோலவடிவு பதில் சொல்லப்போனாள்... அலங்காரி மகள் விமலா கல்லூரி படித்து முடித்துவிட்டு, விடுமுறையில் வரும் போதெல்லாம் இவள் வந்திருக்கிறாள். அந்த அண்ணிய இவளுக்கு ரொம்ப பிடிக்கும்... விமலாண்ணி மதுரையில் கல்யாணம் ஆனபிறகு அம்மாவ எட்டிப் பாக்கதே கிடையாது... பக்கத்து ஊருக்கு புருஷனோட வாராள்... இந்தப் பக்கம் வர்ரதே இல்ல... அம்மா நடத்தை சரியில்லன்னு இப்பதான் அம்மாளுக்கு தெரியும் போலுக்கு... அவள ஞாபகப்படுத்தி இவள அழ வக்கப்படாது..."

அலங்காரி மௌனமாக நின்ற கோலவடிவை தோளில் கை போட்டு, திண்ணையை அடுத்த அறைக்குக் கூட்டிப் போனாள்... பிறகு கணவனுக்கு ஆணையிட்டாள்...

"என் மருமவளுக்குக் போண்டா வாங்கிட்டு வாரும்... இல்லாட்டா மசால்வடை... ஒன்னத்தான் கேணய்யா... ஏன் இப்படி பராக்கு பாக்கே... எனக்குன்னு வந்தே பாரு.... சரியான அக்னி ராசா..... பீரோவுல காசு இருக்கு.... எடுத்துட்டு ஓடுய்யா...."

"எனக்கு எதுவும் வேண்டாத்தே.... சாப்புடுற நிலையிலயும், நான் இல்லத்தே..."

கோலவடிவு, அலங்காரியின் மார்பில் விழுந்தாள்... அவளின் இரு தோள்களையும் பிடித்துக் கொண்டு அங்குமிங்குமாகத் தலையாட்டினாள்... விம்மியடிபயே பேசினாள்.

"அத்தே நீங்க சொன்னது சரியாப் போச்சு... அத்தே... என்னை அக்னி ராசாவுக்கு எரிச்டுவாவ போலுக்கு..... ஆமாத்தே... அக்னி ராசாவுக்கு அநேகமா என்னை முடிச்சுடுவாவ போலுக்கே... நீங்கதான் என்னக் காப்பாத்தணும்..."

"அய்யோ... எனக்கு கையும் ஓடமாட்டக்கு... காலும் ஓடமாட்டக்கே... ஒன்னையா... அக்கினி ராசாவுக்கா... அடக் கடவுளே... யோவ் ஒம்மத்தான்... துளசிங்கத்தை நான் சொன்னேன்னு கையோட கூட்டி வாரும்... இங்க வாருமுய்யா.... சொல்லப் பொறுக்காம ஓடுவியரே... எது கேட்டாலும் முழுசாக் கேக்கணும்... துளசிங்கத்தைத் தனியாக்

கூப்பிட்டு, நான் உடனே வரச் சொன்னேன்னு சொல்லும்... கோலவடிவு இருக்கான்னு சொல்லாதயும்... சொல்லிட்டா வெட்கப்பட்டுட்டு வரமாட்டான்... இந்தாரும் ஐம்பது பைசா... ஒரு டீயும், மசால்வடையும் சாப்புட்டுட்டு அப்பிடியே ஆட்டுக்கு புல்லு வெட்டிட்டு வாரும்..."

அலங்காரி, கணவனை வாசலில் வழியனுப்பி வைத்த கையோடு கதவைத் தாழ்ப்பாளிட்டு விட்டு அந்த இடைவெளி நேரத்தில் கோலவடிவின் பிரிவை பொறுக்க முடியாதவள் போல் ஓடிவந்தாள்... கோலவடிவு மருவி மருவிக் கேட்டாள்.

"அவரு... அவரு... எதுக்கத்தே..."

"நானும் யோசிச்சேன். ஆனால் அவனாலதான் யோசனையே சொல்ல முடியும்.... பாரு ஒன் நிலமயப் பார்த்து, இந்த அத்தைக்கே கைகால் ஆடுதுபாரு.... ஒன்னை காப்பாத்தியாகணும்.... இதுல அத்த பிறழப் போறதுல்ல.... ஆனால் எப்டிக் காப்பாத்தறது... இதுக்கு துளசிங்கம்தான் சரியா யோசித்து சொல்லுவான்... சரி... என்ன நடந்தது... ஏது நடந்ததுன்னு இந்த அத்த கிட்ட ஒருவரி விடாம ஒப்பிப்பியாம்... நான் இருக்கேன் சொல்லுடி என் ராசாத்தி..."

கோலவடிவு, வயலில் துளசிங்கம் குங்குமம் வைத்த அந்த நாளில் இருந்து, அந்த பம்ப் செட்டில் குளித்தாலும், குங்குமம் வைக்கப்படாத இந்த நாள்வரை வரிவரியாய் வார்த்தை வார்த்தையாய் ஒலி ஒலியாய் ஒப்பித்தாள்... சொல்லி முடித்துவிட்டு, மாங்கு மாங்கு என்று அழுதாள்... அழுது முடித்துவிட்டு, அத்தையை சோகமாகப் பார்த்தபோது-தெருக்கதவு தட்டப்பட்டது. அதைத் திறப்பதற்காக துள்ளிக் குதித்தவளை, அங்கேயே இருக்கும்படி சொல்லிவிட்டு, அலங்காரி வெளியே வந்தாள்... கதவைத் திறந்ததும், துளசிங்கம் வாசற்படியில் நின்றபடியே 'என்ன சித்தி' என்றான். 'உள்ளே... வாப்பா...' என்று அவன் கரத்தைப் பிடித்து உள்ளே இழுத்துவிட்டு, அலங்காரி கதவை மீண்டும் தாளிட்டாள்... அவன், கதவை ஒரு கையால் திறக்க முயற்சி செய்தபடியே கேட்டான்.

"ஒனக்கு ஏன் சித்தி காலம் நேரம் தெரியல... இன்னிக்கு நம்ம சுடலை மாடனுக்கு வரிபோட நம்ம சொக்காரங்க கூடியிருக்காங்க...."

கரும்பட்டையான் குடும்பத்து காளியம்மன் கொடையோடயே நம்ம கோவிலுக்கும் கொடைன்னு நானே முடிவு எடுத்தாச்சு... ஆனாலும் கூட்டத்துல முடிவு எடுக்கதா பாவலா செய்யணும்... எவனும் கரும்பட்டையானுவளுக்குப் பயந்து முடிவ மாற்றிடப்படாது பாரு..."

"அப்படி மாத்திட்டால் நாம உயிரோட இருக்கதுல அர்த்தமில்ல... உள்ள யாரு இருக்கான்னு பாரு..."

"அடடே... கோலவடிவு... இவள் எதுக்கு வந்தாள்...?"

"காரணமாத்தான் வந்திருக்காள்.... அக்கினி ராசாவுக்கு அவளக் கட்டப் போறாங்களாம்... அவளுக்கு இஷ்டமில்ல... நாம் அந்தக் கல்யாணத்தை தடுக்கணுமாம்..."

"இருக்கிற உபத்திரம் போதாதுன்னு இவள் வேறயா....? அதோட இவளும் லேசுபட்டவ இல்ல... அன்னைக்கு... திருமலைக்கு... ரகசியமாய் கையோட கையாய் பணத்தை எடுத்து......"

"பழைய கதை வேண்டாண்டா. சித்தி சொன்னால், அதுல காரண காரியம் ஏதாவது இருக்கும். ஆறுதலா அவள் கிட்ட ரெண்டு வார்த்த பேசிட்டு போ...."

"என்ன சித்தி இது... அவள்கிட்ட என்ன பேச்சு... அதுவும் ஒன் வீட்ல... கதவ மூடிக்கிட்டு... இதுல்லாம் கொலையில போய் முடியுற சமாச்சாரம்..."

"இப்போ நீ அவள்கிட்ட பேசுனால் கோயில் விவகாரத்துல நாம் ஜெயிப்போம்... எப்படின்னு கேளாத... பேசாம அவள் கிட்ட பேசுடா... ஆறுதலா பேசு... விளையாட்டா...."

"போ சித்தி...."

"நீ அவள்கிட்ட பேசும்போது சித்தி போயிடுவேன்..."

அலங்காரி கண்சிமிட்டியபடியே சிரித்தாள்... துளசிங்கத்திற்கும் கிறக்கம் வந்தது... இருவரும் கோலவடிவைப் பார்த்தபடியே போனார்கள்... உள்ளறையில் கட்டிலில் உட்கார்ந்திருந்த கோலம்

எழுந்தாள்... கண்ணீர் சொட்டுக்கள் கழுத்தில் பெருக்கெடுத்தன... அலங்காரி அவள் கண்களை முந்தானையால் துடைத்து விட்டுப் பெருமூச்சோடு பேசினாள்.

"ஒன் கதயத்தான் இவன் கிட்ட சொல்லிட்டு.... இருந்தேன்... துடிச்சுட்டான்... துடிச்சுட்டான்... அப்படித் துடிச்சுட்டான்... ஏய் துளசிங்கம்.... என் மவனே... கோலம் நம்ம பொண்ணுடா... அலங் கோலமாய் ஆயிடப்படாதுடா.... அவள எப்படியும் காப்பாத்தி ஆகணும்... எம்மாடி எனக்கு தலைக்கு மேலே வேல... நம்ம சுடலமாடன் ஆட்டுக்கு தவிடு வச்சுட்டு வாறேன்..."

சுடலை மாடனுக்கு வரிபோடும் நாளிலேயே கோலவடிவை தன்னிடம் வரவழைத்த மாடனின் திருவிளையாடலில் மெய் சிலிர்த்து அலங்காரி போய்விட்டாள்... துளசிங்கம், இடுப்புப் பெல்ட்டைத் தடவியபடியே கோலவடிவைப் பார்த்தான்... இருவரும் சிறிது நேரம் பேசாமல் ஒருவரை ஒருவர் பார்த்தார்கள். நேரமில்லாத துளசிங்கம் நேரடியாகவே உறுதி சொன்னான். சித்தி பூடகமாகப் பேசுவதில் ஏதாவது அர்த்தம் இருக்கும் என்ற அர்த்தத்தில் பேசினான்.

"கவலைப்படாதே கோலம்... அந்த அக்னிப் பயல் ஒன்னை எரிக்காம நான் பாத்துக்கிறேன்... அழாதேம்மா... வேற எந்த வழியும் இல்லாட்டா நானே ஒன் கழுத்துல தாலி போடுறேன்... பயப்படாதே... ஒங்கப்பா சம்மதத்தோடுதான்..."

கோலவடிவு புல்லரித்தாள்... அவன் சொன்ன காட்சியை நினைக்க நினைக்கக் கன்னம் சிவந்தது... அண்ணாவோட ஏற்பட்ட அமளி துளியில், இவனால் அப்டி செய்ய முடியுமா என்று அவனை ஏக்கமாய்ப் பார்த்தாள்... பிறகு, அவனால் முடியும் என்றும், அதற்குரிய சாதுரியமும், சமர்த்தும் அவனிடம் இருப்பதைக் கண்டு கொண்டவள் போலவும் அவனைச் சிரிப்பும் சிணுங்கலுமாய்ப் பார்த்தாள்.. அப்பா அவனுக்கு நல்ல சர்டிபிகேட் கொடுத்தது அவள் முகத்தில் நல்ல சிவப்பாக மலர்ந்தது.

துளசிங்கம் அவள் மோவாயை, ஒரு கையாலேயே நிமிர்த்தினான் எந்த நெற்றிப் பொட்டில் குங்குமம் வைத்தானோ., அதை எச்சிலாக்கியபடியே உறுதியளித்தான்.

"இந்த முத்த சாட்சியாய் சொல்லுறேன்.... இந்த துளசிங்கம் ஒன்னைக் கைவிடமாட்டான்."

அந்த அறைக்கு வெளியே, அலங்காரி சுடலைமாடன் கிடாவோடு விளையாடி விளையாடிப் பாடினாள்.

"துள்ளாத துள்ளாத ஆட்டுக்குட்டி
என்கிட்ட இருக்குது... சூரிக்குத்தி."

# 13

கரும்பட்டையான் கூட்டத்தின் காளியம்மன் 'வரி விதிப்பு' சட்டுப்புன்னு முடிந்துவிட்டது. ஆனால், செம்பட்டையான் கூட்டத்தின் வரி விதிப்பு ரப்பர் மாதிரி இழுத்தது. முதலில் கூட்டத்தை எங்கே நடத்துவது என்று பிரச்சினை மேலாவாரியாக எழுந்தது. 'காஞ்சான்' வழக்கம்போல் தன் வீட்டில்தான் நடத்தவேண்டும் என்றார். ஆனால், துளசிங்கம் தலையெடுத்து விட்டதால் அவன் தந்தை 'எலி டாக்டர்' தனது வீட்டில் வைக்க வேண்டும் என்றார். இறுதியில் இவர்கள் வசிக்கும் இடத்திற்கு அருகே உள்ள பள்ளிக்கூட மைதானத்தில் கூடிவிட்டார்கள். சொல்லி வைத்தது போல், கிழவர்கள் ஒருபக்கமாகவும், வாலிபர்கள் ஒரு பக்கமாகவும் உட்கார்ந்தார்கள். இந்தத் தடவை கரும்பட்டையான் காளியம்மனுக்கு, இந்தச் செம்பட்டையான் சுடலை மாடனைப் போட்டியாக்குவது என்று தீர்மானமாகிவிட்டதால், அந்தக் குடும்பத்துப் பெண்கள் கூட்டத்திற்கு

வெளியே காதுகேட்கும் தொலைவில் கூடிக்கூடி நின்றார்கள். அவர்களுக்கும் ஒரு...... எரிச்சல்... ஒரு ஆசை.... அதென்ன... எல்லா வருஷமும்.... முதல் கொடை.... கரும்பட்டையான்... கொடை.....

'குடிமவன்' குத்தாலிங்கம் பிரித்துக் கொடுத்த நான்கு வெற்றிலைகளைக் குதப்பிக் கொண்டிருந்த கூட்டத்தின் முகப்பில் இருந்த எலி டாக்டர், 'பால் குடிக்கத் தெரியாத' அப்பாவி பூனை மாதிரி கேட்டார்....

"சரிப்பா எப்போ கொடையை வச்சுக்கலாம்..."

"இது என்ன பெரியய்யா புதுக்கேள்வி... இந்த வெள்ளில வரின்னா அடுத்த வெள்ளிலதான... கொடை... இதுல ஏன் சந்தேகம் வருது....."

காஞ்சான் விளக்கமளித்தார்... "சந்தேகம் ஒனக்கு வர்ல... ஆனால் சில பயலுவளுக்கு இருக்கு..... அதனால தான் எலி டாக்டர் அண்ணாச்சி கேக்காவ..."

"ஏய்... யாரும் சபையில் வக்கணப்பேர பேசப்படாது.... நெசப்பேரத்தான் சொல்லணும்.."

"ஆமா... எலி டாக்டர் தாத்தாவோட நெசப்பேரு என்ன..."

"சின்னப்பய மவனுகளா... சும்மா இருங்கடா... சரி... அடுத்த வெள்ளில கொடை.... அப்படித்தானே...."

"கரும்பட்டையான் கூட்டம் நமக்கு வேற யாருமுல்ல... கொண்டான் கொடுத்தாக... அதோடு காளியம்மா மாடனுக்குத் தாயி... தாய்க்குப் பிறகுதான் மகன்..."

"காளியம்மனுக்கு சுடல மவனோ இல்லியோ..... ஒங்கம்மா பொறந்தது கரும்பட்டையான் குடும்பம்... ஒனக்கு தாய்மாமன் குடும்பம்.... உசத்தியாப் போச்சா.....?"

"ஏல உட்காருல.... ஒன் மாமன் மச்சான் உறவ வீட்ல வச்சுக்க..... இது சபை.."

"என் தாய் மாமனுக்கும் எனக்கும் எழவு எட்டு கிடையாதுன்னு ஒங்களுக்குத் தெரியாதா....?"

"ஒரு வேள இந்தச் சாக்குல... சேரப் பாக்கியோ என்னவோ....?"

"பரம்பரையாய் அவங்கதான் முதல் வெள்ளில கொடுக்காங்க... நாம் அந்தக் கோவிலுல போயி மாலை எடுத்துப் போடுறவங்க... அவங்க நம்ம கோயிலுல வந்து உத்தரவு கேட்கிறவங்க.... வேண்டாங்கல.... ஆனால் ஒரு வார்த்த அவங்ககிட்ட கேட்டுக்கிட்டு..."

"நீ வேணுமுன்னா அவங்க காலுல போயி முட்டு... நாங்க போகப் போறதுல்ல..."

காஞ்சானைத் தொலைவில் நின்ற அலங்காரி, முகத்தைச் சுண்டிச் சுண்டிக் கைகளை மேலே மேலே தூக்கி தூக்கித் தூண்டிவிட்டாள்... அவர் விடுவாரா...

"பரம்பரையாய் பழக்கம் என்கிற கரும்பட்டையான் பருப்பு, செம்பட்டையான் அடுப்புல, இனிமேல் வேகாது.... அவங்கள இப்டி விட்டதாலதான் நம்பள இளப்பமாய் நினைக்காங்க... அவங்க கண்ணுக்கு பழனிச்சாமிதான் ஒரே ஒரு பெரிய மனுஷன்... நானோ.... துளசிங்கம் அப்பாவோ வெறும் மனுஷனாக்கூடத் தெரியல... எவ்வளவு திமுரு இருந்தா நம்ம துளசிங்கம் பய கடைக்குள்ள வந்து அந்தத் திருமலைப் பயல்... அடிப்பான்... எவ்வளவு திமுரு இருந்தால் நம்ம அலங்காரிய...."

"ஏய் யார் பேச்ச பேசுனாலும் அலங்காரி பெரியம்மா பேச்சு எடுக்கப்படாது..."

எல்லாரும் எதிர்பாராத வகையில், அலங்காரி அங்கே ஓடிவந்தாள்.. சில பெண்கள், அவள் சேலையைப் பிடித்து இழுத்தும், அவள் அதை விட்டுவிட்டு வரத் தயாரானவள் போல் முண்டியடித்தாள்... கடைசியில், அந்தப் பெண்கள் தான் கூச்சப்பட்டு, பிடித்த சேலையை ஓடிப்போய் அவள் தோளில் தொங்கப் போட்டார்கள்.

அலங்காரி, சபைக்கு முன்னால் வந்து கத்தினாள்.

"என்ன அலங்காரி பேச்சு பேசப்படாதா... பெறவு எதுக்குல பெரியம்மான்னு சொல்லுத...? அதுக்குப் பதிலா... வேற வார்த்தய போட்டா என்னடா... பேசிதியளோ... பேச்சு செத்த பேச்சு... இது கௌரவ சபையா.... இல்ல செம்பட்டையான் சபையா... எனக்கு இப்போ தெரியணும்..."

"என்ன அலங்காரி... இந்தச் சமயத்தில..."

"பின்ன என்ன மச்சான்... கௌரவ சபையில திரௌபதிய துச்சாதனப்பய துகிலுரிஞ்சது மாதிரி... பழனிச்சாமி வீட்ல என்னை அருணாசலம் அப்டி மான அவமானமாப் பேசிட்டான்.. காஞ்சான் மச்சான பயல்னு வேற திட்டுனாள். அந்த பேச்சி... துளசிங்கம் கடையில வந்து அடிச்சுட்டுப் போறான் திருமல...."

"எம்மா..... இது ஆம்புள விவகாரம்... நீ போ... பொம்புளக்கி வேல இல்ல..."

"ஆம்புளைவ பொம்பளையா மாறிட்டா... பொம்புளயவ ஆம்புளயா மாறித்தானே ஆவணும்......? எங்களுக்கு அதான் ஒங்க குடும்பத்து பொம்புளயளுக்கு..... இங்க கூடியிருக்கிற செம்பட்டையான்.... ஆம்புள மார்ல எத்தனை பேரு கரும்பட்டையான் பயலுவ காலக் கழுவப் போறியள்னு தெரியும்....."

எலி டாக்டர், கண்ணைச் சிமிட்டியபடியே எச்சரித்தார்.

"அலங்காரி.... ஒனக்கு அபராதம் போட வேண்டியது வரும்..."

"அப்படின்னா.... அதையும் நீருதான் கட்டவேண்டியதிருக்கும்... எங்க வீட்டு மம்மத ராசாவோட கூடப் பிறந்த அண்ணாச்சியாச்சே.... நீரு....."

"போம்மா... போம்மா... ஏல.... பேய்ப் பய மவனுளா... லேசா சிரிங்கல.... குடலு அறுந்துடப் போவுது...."

துளசிங்கம் எழுந்தான்... அப்பாவை ஒரு முறைப்பு முறைத்து, அவரை கப்சிப்பாக்கி விட்டுப் பேசினான்.

"அலங்காரி சித்தி சொன்னதுல தப்பில்ல... சித்தி நீ ஏன் போறே... இங்கேயே நில்லு... அடுத்த வெள்ளில கொடை கொடுக்கோம்.... சரிதானே..."

"ஒரு வார்த்த அவங்க கிட்டயும்..."

"நாம என்ன வேலைக்காரனுவளா... எசமான்க கிட்ட உத்தரவு கேட்க..."

"ஒரே நாள்ல ரெண்டு கொடைக்கு கூட்டம் சிதறும்... அடிதடி கூட வரும்...."

"அதை நான் பார்த்துக்கிடுறேன்... நம்ம மேல ஒரு தூசி துரும்பு விழாது... அப்புறம்..."

"அப்படின்னா சரிதான்..."

துளசிங்கம் மீண்டும் உட்கார்ந்து அப்பாவைப் பேசவிட்டான்... துளசிங்கத்திடம் பலருக்குப் பயம்... இவன் கிட்டதான் உரத்த வாங்கியாகணும்... இவனோ, ராமய்யா வயலப் பண்ணுவது மாதிரி பண்ணிடப்படாது... அதோட இவன்கிட்டே கடனேன்னு வாங்குனாலும் கடனிலயே வாங்கலாம்... எல்லாத்துக்கும் மேல... நம்ம பயல்... இளவட்டப் பயலுவல்லாம் இவன் பக்கம்... இந்தக் குடும்பத்துல..... முதல் தடவையா... நாகரீகம் தெரிஞ்ச நம்ம பயல்...

"சரிப்பா.... வரி எவ்வளவு போடலாம்...?"

"அறுபது ரூபாய்..."

"போதுமா...?"

"போதாட்டா என் மகன் துளசிங்கம் இருக்கான்..."

"சபையிலயாவது நான் இருக்கேன்னு சொல்லேன் டாக்டர் அண்ணாச்சி... தலை இருக்கும்போது வால் ஆடலாமோ..."

"வால்தான் ஆடும் என்பது போல், துளசிங்கம் மீண்டும் எழுந்தான்... இலைதழை உடையோடு இதுதான் தீர்ப்பு என்பது மாதிரி பேசினான்...

"இப்பவே சொல்லிட்டேன்... வீடியோ சினிமாப்படம் போடப் போறோம்..."

"திருவிளையாடலா.... சம்பூர்ண ராமாயணமா... ரெண்டுல எதுன்னாலும் சரிதான்...."

"ரெண்டும் இல்ல... ஒரு இங்லீஸ் சண்டைப்படம்..... ஒரு தமிழ் காதல் படம்..."

"கட்டணம் வசூலிக்காட்டா சரிதான்..."

"அப்புறம் வில்லு, பொம்பள வில்லுதான்.... சர்க்கரைப் பட்டி சடையம்மாவோட வில்லு...."

"எல்லாத்தையும் நீயே தீர்மானம் பண்ணிட்டே..... நீயும் யாரு..... நம்ம பயதானே... சம்மதிக்கோம்... சம்மதிக்கோம்..."

"நீங்க சம்மதிப்பிங்கன்னு எனக்குத் தெரியும்.... எதுக்கு சொல்ல வந்தேன்னா.... நம்ம சுடலைமாடன் கோவிலுல இருபத்தோரு சாமிங்க... எக்ஸ்டிராவா ஒருத்தர சேர்த்து இருபத்திரண்டு பேரு சாமியாடுறாங்க..... இவங்கெல்லாம் அளவோட ஆடணும்..."

"என்னப்பா.... நீ குடும்பக் கட்டுப்பாடு கூட்டத்துல பேசுறது மாதிரி பேசுற... சாமிகள பழிக்கப்படாது....."

"நான் சாமிகளப் பேசல.... சாமியாடிகளத்தான் பேசுறேன்.... சாமியாடுற எங்கப்பாவையும் இந்த சின்னய்யாவயும் சேர்த்துத்தான்... சொல்லுறேன்... தண்ணி போட்டுட்டு யாரும் சாமியாடப்படாது.... அப்படி ஆடுனா இளவட்டங்க கோயில் பந்தலுலயே கட்டி வச்சுடுவோம்..."

"பட்டை தீட்டும்" சாமியாடி ரத்தினம் உரிமைக்குரல் எழுப்பினார்...

"ஒன் வயசுக்குத் தக்கபடி பேசு துளசிங்கம்..."

"துளசிங்கம் சொன்னதுல என்னப்பா தப்பு.... சாமியாடுற நாளுலயாவது குடிக்காம இரேன்..... போன வருஷம் குடிச்சுப்புட்டு.... மகளேன்னு சொல்லுறதுக்குப் பதிலா மயினின்னு பேசுற.... மாடனுக்கு ராமாக்கா எப்படி மயினி ஆனாள்....."

"சரி.... சபை முடியலாமா...? ரெண்டு நாளையில் வரிப் பணத்த எல்லாரும் கொடுத்துடணும்...."

எல்லோரும் எழப்போனபோது, பத்துப் பதினைந்து பேர் சுற்றி வந்து நின்றார்கள். அத்தனைபேரும் கரும்பட்டையான் குடும்பத்தினர்.... இவர்கள் வரவை எதிர்பாராத காஞ்சான் கத்தினார்....

"என்னப்பா இது.... அடிக்க வாரது மாதிரி வந்திருக்கிய....."

வுந்தவர்களில் முக்கியமான, ஒருவர் மரியாதையுடன் பேசலானார்.

"நாம எதுக்கு மச்சான் அடுச்சுக்கணும்.... நீங்களும் வரி போடுறதா கேள்விப்பட்டோம்..."

"ஆமா.... அதுக்கென்ன இப்போ....?"

"வருஷா வருஷம் நாங்கதான்..."

"ஒங்களுக்கு இந்த 'நான்' என்கிற அகங்காரம் வரப்படாதுன்னுதான் அடுத்த வெள்ளில கொடை கொடுக்கப் போறோம்..."

"அடுத்த வருஷம் நீங்க மொதல்ல கொடுங்க... நாங்களே விட்டுக் கொடுக்கோம்... இந்த வருஷம் வரி போட்டுட்டோம்...."

"நாங்களுந்தான் போட்டுட்டோம்...."

"இப்படி விதண்டாவாதமா பேசுனா எப்படி....?"

"கரும்பட்டையான் பேசுனால் வாதம்.... அதையே நாங்க பேசுனா.... விதண்டாவாதம்..... அடுத்த வருஷம் நாங்க விட்டுக் கொடுக்கோம்.... இந்த வருஷம் நாங்கதான் நடத்தப் போறோம்..."

கரும்பட்டையான் குடும்பத்தைச் சேர்ந்த 'நாட்டு வக்கீல்' நாராயணன், கெஞ்சாமலும் அதேசமயம் மிஞ்சாமலும் பேசினான். நாட்டு வக்கீல் என்று பெயர் எடுத்தவன்...

"கோயில் முறைன்னு ஒண்ணு இருக்கே... காளி, மாடனோட தாய்... வருஷா வருஷம் ஒங்க மாடன் எங்க காளிகிட்ட வந்து விபூதி பூசிட்டுப் போய்த்தான் ஆடுறது வழக்கம்....."

"இந்த வருஷம் எங்க மாடன் ஒங்க காளிகிட்ட விபூதி வாங்க மாட்டான்..."

"சரி வாங்கட்டும்..... வாங்காமப் போகட்டும்.... இனிமேல் வருஷா வருஷம் மாறி மாறி காளிக்கும், மாடனுக்கும் கொடை கொடுத்துடுவோம்.... இந்த வருஷம் காளிக்கே முதல் கொடையா இருக்கட்டுமுன்னு எங்க பழனிச்சாமி அண்ணாச்சி ஒங்ககிட்டே சொல்லச் சொன்னாரு....."

கோலவடிவின் சிநேகிதத்தால், அடுத்தவர்கள் பதிலளிக்கட்டும் என்று தன்பாட்டுக்கு இருந்த துளசிங்கம், அந்தப் பக்கமாக வந்த திருமலையைப் பார்த்துவிட்டான்..... அவ்வளவுதான்.... புதிய உறவு பழைய பகையானது..... அழுத்தம் திருத்தமாகக் கேட்டான்..

"ஏன் பழனிச்சாமி எங்ககிட்ட வந்து கேட்க மாட்டாரோ....? அவரு பெரிய மனுஷனா இருந்தால் அவரு வீட்டு வரைக்குந்தான்...."

திருமலைக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை.

"ஏல...... செறுக்கிமவனே..... யார்ல பழனிச்சாமி.... பேர் சொல்லிக் கூப்புடுற அளவுக்கு வந்துட்டியா.....?"

"பழனிச்சாமி.... பழனிச்சாமி... என்னல செய்வே....?"

"இப்போ ஒன்னையும் ஒன் சொக்காரனையும்..... என்ன செய்யப் போறேமுன்னு பாரு...."

"வீடு விட்டு வீடா அடிக்க வந்திருக்கிய..... ஏல.... நீங்கல்லாம் நிசமான செம்பட்டையான்னா எடுங்கல.... அரிவாள... கையில்... அது இல்லாட்டா.... கல்ல எடுங்கல....."

கரும்பட்டையான்களும், செம்பட்டையான்களும் வீரத் தனத்திலும், பேடித்தனத்திலும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள்

இல்லை.... இருதரப்பும், புறநானூற்று வீரர்கள் போல் மோதப் போனாலும், அந்தப் பள்ளிக்கூட மைதானத்தில் அப்போதைக்கு செம்பட்டையான் வகையறாக்களே அதிகம்... போதாக்குறைக்குத் துளசிங்கம், அந்தக் குடும்பத்தின் இளைஞர்களுக்குக் குஸ்தி என்ற பெயரில் எதையோ சொல்லிக் கொடுத்திருந்தான்.... அவர்கள் அந்த 'குருவையே' ஒரு மாதிரி ஏடாகோடமாய்ப் பார்த்தபோதுதான், அவன் அந்த வித்தைப் பயிற்சியை இடையிலே நிறுத்திவிட்டான்... என்றாலும், இந்த வாலிபர்கள் இந்தக் கரும்பட்டையான்களைச் சமாளிக்க கற்றதோர் கைம்மண்ணளவு குஸ்தி; போதும் என்பதுபோல் கைகளைச் சுருக்கி வைத்து நீட்டப் போனார்கள். குஸ்தியாம்.

சுற்றி வளைக்காமல் சொல்வதாக இருந்தால், இருபது பேர் கொண்ட கரும்பட்டையான் கூட்டத்தை நூறு பேர் கொண்ட செம்பட்டையான் கூட்டம் சுற்றி வளைத்தது... அந்தக் கூட்டத்திற்குள் மாட்டிய நாராயணன், பழனிச்சாமியின் தம்பி அருணாசலம், மகன் திருமலை, குள்ளக் கத்தரிக்காய் ராமசாமி, ஆகிய ஒரு சிலர் மட்டும், 'கிட்ட வாங்கடா' என்று பேசினார்கள்..... ஆனால் அந்தக் குரல்களோ கெஞ்சுவது போல் தான் ஒலித்தன.... எதிரிகளால் ஒன்றும் செய்ய முடியாது என்று தெரிந்ததும், எகிறி எகிறிப் பேசுவது எந்தப் பட்டியில் உண்டோ இல்லையோ இந்தச் சட்டாம்பட்டியின் வழக்கம். கரும்பட்டையான்களைப் பார்த்து செம்பட்டையான்கள் சீறினார்கள்.

"இப்போ கூட லேட்டுல்ல.... தெருவிட்டு தெருவுல அடிக்க வந்ததுக்கு மன்னிப்புக் கேட்டுட்டு ஓடிப் போங்க.... வழி விடுறோம்... இல்லன்னா ஒங்கள ஒரு வழி பண்ணாம விடமாட்டோம்...."

துளசிங்கம், மனித வளைக்குள் மாட்டிக் கொண்ட திருமலையை ஏளனமாகப் பார்த்தபடியே பேசினான்...

"ஏய்.... திருமல.... இப்ப துள்ளேண்டா...?"

"நீ வேணுமுன்னா ஒத்தைக்கு ஒத்தையா வாறியாடா....? பதினைஞ்சு பேர நூறு பேரு மடக்குறது பெரிய வீரமா....?"

"இது தெரியாம சவுடால் பேசுறது மட்டும் வீரமா...?"

"சரி.... தெரியாம வந்தோமுன்னு மன்னிப்புக் கேட்டுட்டு மரியாதியா போங்க...."

"ஒத்தைக்கு ஒத்த வாடா..."

"வருவேன்... ஆனால் நான் எட்டுபேர ஒரே சமயத்துல சமாளிக்கிறவன்... ஒன்ன மட்டும் கவனிச்சுட்டு ஏழுபேர விடுறதுக்கு தயாராய் இல்லல..."

செம்பட்டையான்களும், கரும்பட்டையான்களும் இந்த மாதிரியான சந்தர்ப்பத்தில் கைகலப்பு இல்லாமல் வாயாடுவார்களா என்று ஒரு சந்தேகம் வருவது இயற்கைதான். அது அந்த ஊர், மண்வாகு என்பது மட்டுமல்ல, துளசிங்கம் திருமலை தவிர, எவனும் எவனுடனும் தனிப்பட்ட முறையில் மோதவில்லை.... ஒருவேளை இந்தச் சூழலே இன்னும் கொஞ்சம் நேரம் நீடித்து இருதரப்பில் யாராவது ஒருவர்மீது ஒருவர் கையோ, காலோ தற்செயலாகப் பட்டால், அது கொலைகளில் கொண்டு போய் விடலாம்..... அத்தகைய சந்தப்பங்களில் கூட்டம் கும்பலாகிவிடும்.... ஒரு கூட்டம் ஒரே மனிதன்போல் உணர்ச்சி வசப்படும்போது அதற்குப் பெயர் கும்பல்.... அப்படிப்பட்ட சூழ்நிலையில், மாமன் மச்சானை வெட்டுவான்... மச்சான் மயினியைத் துகிலுரிவான்....

செம்பட்டையான், இளக்காரமாய்ப் பேசப் பேச, கரும்பட்டையான் வம்சத்துக் கூட்டம் கும்பலாகிக் கொண்டிருந்தது... தற்காப்பிற்காவது தாக்கியாக வேண்டும் என்று திருமலையும், அவன் சிற்றப்பாவும், வேட்டிகளைத் தார்ப்பாய்ந்தபோது-

அலங்காரி ஓடி வந்தாள்... கைகளைத் தலைக்கு மேல் தூக்கி கும்பிட்டபடியே கூக்குரலிட்டாள்...

"ஏய்யா.... நாம் இன்னையோட இருந்து இன்னையோட போற அந்நியம் இல்ல. அன்னியோன்னியமா இருக்கவங்க... நாளைக்கு ஒருத்தர் முகத்துல ஒருத்தர் விழிச்சாகணும்.... சுடலைக்கும்... காளிக்கும்... பலி கொடுக்க ஆடு இருக்கு.... கோழி இருக்கு..... மனுஷங்க வேண்டாய்யா..."

அலங்காரி, செம்பட்டையான் வட்டத்தை உடைத்து, உள்ளே போய் ஒவ்வொரு செம்பட்டையானையும் பின்னால் தள்ளிக் கொண்டிருந்தாள்.... பலர் அதுதான் சாக்கு என்று அவள் தொடுமுன்னாலயே பின்னால் போனார்கள்.... சிலர், அவள் மீதுள்ள பழைய கோபத்தை மனதுக்குக் கொண்டு வந்து, தள்ளியவளையே தள்ளினார்கள்....

இந்தச் சமயத்தில், ஐம்பது பேர் மேற்குப் பக்கத்தில் இருந்து ஓடி வந்தார்கள்... காத்துக்கருப்பன்கள்.... அக்கினி ராசாவின் சித்தப்பா பற்குணம், அந்த கூட்டத்திற்குத் தலைமை வகிப்பவர் போல, முன்னால் நின்றார். அதற்குள் அந்த, 'காத்துக்கருப்பன்' கூட்டம் வட்டம் போட்ட செம்பட்டையான் கூட்டத்திற்கு வெளியே ஒரு வட்டம் போட்டது. இந்தக் காத்துக்கருப்பன்கள் அடிதடி திலகங்கள்.... அடித்துவிட்டுத் தான் பேசுவார்களே தவிர, பேசிவிட்டு அடிக்க மாட்டார்கள்.... ஊர்விட்டு ஊர் போய் அடித்துவிட்டு, 'செறு வென்று' திரும்புவதிலும் முரடர்கள்... பற்குணம் தலைப்பாவைக் கட்டிக் கொண்டே கத்தினார்.

"தனியா மாட்டிக்கிட்டா இப்படியா.... அவங்கள கோடுபோட்டு வைக்கது மாதிரி வைக்கது, ஏய் துளசிங்கம்.... அவங்கள விடுடா... விடுறியா... இல்ல விட வைக்கணுமா...."

துளசிங்கம் சும்மா இருந்தபோது, காஞ்சான் பதிலளித்தார்...

"என்ன பற்குணம்... விவகாரம் தெரியாமப் பேசுற.... மெனக்கெட்டு எங்கள அடிக்கிறதுக்குன்னே இங்க வந்து வம்பு செய்தானுவ.... இவனுவள அடிச்சு கிடத்திட்டது மாதிரி பேசுதியே.... இந்த இருபது பேரையும் மலத்திப்போட எவ்வளவு நேரமாவும்? செய்தோமா...."

"அப்டிச் செய்தால் பின்னால என்ன நடக்குமுன்னும் யோசிக்கணுமுல்லா."

"தெருவிட்டு தெரு வந்த பிறவு அந்த திமுருக்கு அடங்க முடியுமா..... அப்படிப்பட்ட உயிருதான் எதுக்கு...."

"துளசிங்கம்! பெரியவிய பேசும்போது... நீ சும்மா இரு. சரி... இப்போ அவங்கள விடப்போறியளா..? இல்லியா....?"

"நீ பொதுப்பிள்ள... நீ சொன்ன பிறவும் கேட்காம இருப்பமா? ஏல துளசிங்கம்... இங்க வாடா.... மாரியப்பா தள்ளிப் போ.... ஏல கவுகண்ணா... ஒனக்கு தனியா வெத்துல பாக்கு வச்சு சொல்லணுமா...? சரி... பற்குணம்... உட்காரு... விஷயத்த இப்பவே பேசித் தீர்த்துடலாம்.... பழனிச்சாமி... மச்சான கூப்பிடுவோமா...."

"எங்கப்பா கூப்பிட்டாலும் வரமாட்டாரு...."

"எங்க துளசிங்கத்தையும் ஒங்க திருமலையையும் ஊரவிட்டே துரத்திட்டா ஊர்ல பேசுறதுக்கு எந்த விவகாரமும் இருக்காது..."

காஞ்சான் பேசப் பேச, எலி டாக்டர் அவரை விலாவில் இடித்தார்... 'ஒருவேளை, அந்தக் குடும்பத்தில் தனக்கு உள்ள இரண்டாவது பெரிய மனுஷத்தனத்தை என் மகன் துளசிங்கம் பறிச்சுடுவான்னு பயப்படுதானா.... கழுத களவாணிப் பயல்... தீப்பிடிச்ச பங்காளி வீட்டை அணைக்காம அவன் காலையே கட்டிப் பிடிச்சு அழுத பயல் மாதுரில்லா அழுவுறான்.' இந்த எலியன்... எலி டாக்டர், காஞ்சான் வாயை, தனது கையாலேயே பொத்திக்கொண்டு பேசினார்....

"நீயே சொல்லு பற்குணம்... எங்க கோவிலுக்கு எப்போ கொடை கொடுத்தா இவங்களுக்கு என்ன... இவங்கதான், மொதல்ல கொடை கொடுக்கணுமுன்னு சட்டமா... இல்ல சர்க்கார் உத்தரவா... சொல்லு பற்குணம்..."

பற்குணம் பதில் சொல்வதற்கு முன்பு, அவரின் சின்னய்யா மகன் பீடி ஏசெண்ட் பால்பாண்டி பதிலளித்தான்.

"சட்டம் வேண்டாம்... உத்திரவு வேண்டாம்... சம்பிரதாயமுன்னு ஒண்ணு இருக்குல்லா.. இந்த ஊர்லயே பெரிய குடும்பம் எங்க குடும்பம்... எங்க வீரபத்திர சாமிக்கே.... ஒங்க ரெண்டு குடும்பமும் காளிக்கும், மாடனுக்கும் கொடுத்து முடிச்ச பிறவுதான் கொடுக்கோம்... கடைசி வெள்ளில நடத்துற எங்களால முதல் வெள்ளில நடத்த முடியாதா என்ன..."

"சரிப்பா... நாங்க ரெண்டு குடும்பமும் நடத்தல..... ஒங்க காத்துக் கருப்பன் வீரபத்திரனுக்கே முதல் வெள்ளில கொடுங்க.... ஒங்களுக்கு

விட்டுக் கொடுக்கோம்.... ஆனால் கரும்பட்டையான் கூட்டத்துக்கு எந்த வருஷம் விட்டுக் கொடுத்தாலும் இந்த வருஷம் விட்டுக் கொடுக்கப் போறது இல்ல... இப்பவே சொல்லு... ஒங்க குடும்பத்துல ராமய்யா தம்பிதான் பெரியவன்னாலும், நீதான் தலை.... சொல்லு...."

எலிடாக்டர் போட்ட கொக்கிப் பிடியில் மாட்டியபடி, பற்குணமும், பீடி ஏசெண்டும், உடம்பை நெளித்தார்கள்..... ஐம்பது வயதுக்கார பற்குணத்தின் வைரப்பட்ட கருப்புடம்பு களிமண்போல் குழைந்தது.... எலி டாக்டரின் இந்த யோசனைக்குக் காத்துக் கருப்பன்களில் பலர் ஒத்துப் பாடினார்கள்...

"ஆமாண்ணாச்சி... ஆமா... தம்பி... ஊரிலயே பெரிய குடும்பம் நம்ம குடும்பம்... நாமளே முதல் வெள்ளில கொடை கொடுப்போம்..."

பற்குணம் அரசியலில் கொஞ்சம் அனுபவப்பட்டவர்... அதனால், உடம்பைக் குழைத்தும், குரலை உயர்த்தியும் பேசினார்.

"மூள இருக்காடா... பொதுக்கூட்டத்துல கடைசில பேசுறவரு யாரு.... தலைவர் தானே.... இது மாதிரி... கடைசி வெள்ளில கொடை கொடுக்கதுதான் நம்ம குடும்பத்து பெரும.... சரிவே.... எலிமச்சான்... என்ன சொல்லுதியரு..."

"ஒங்களுக்கு எப்டி கடைசி வெள்ளி முக்கியமோ... அப்டி எங்களுக்கு முதல் வெள்ளி, இதுல பேசுறதுக்கு ஒண்ணுமே இல்ல..."

"ஊர் வழக்கத்தை மாத்தப்படாது... இதனால ஊரே குட்டப் புழுதியாய் ஆயிடும் ஒங்களால... அம்மன் கொடையை அடுத்த வெள்ளிக்கு தள்ளிப் போட முடியுமா... முடியாதா... கடைசியாய் கேட்கேன்..."

"கடைசியாய் கேட்டாலும் சரி.... மொதல்ல கேட்டாலும் சரி... வச்சது வச்சதுதான்... இதுல பேச்சுக்கே இடமில்ல... மாப்பிள்ள..."

"அப்போ இந்தக் காத்துக் கருப்பன் குடும்பத்துக்காரங்க சொல்லுறத கேட்க மாட்டிய... அப்படித்தானே மச்சான்..."

"நீ அப்டி எடுத்துக்கிட்டால் நாங்க எப்டி பதில் சொல்லுறது மாப்பிள்ள...? ஆனால் எங்க மாடனுக்கு அடுத்த வெள்ளில கொடை நடந்தே தீரும்..."

"அதை நடத்த விடாமல் செய்ய எங்களுக்கு எவ்வளவு நேரம் ஆகுமுன்னு நினைக்கிய...."

அலங்காரி ஒதுக்குப்புறமாய் நின்ற பெண்கள் கூட்டத்தில் இருந்து ஓடோடி வந்தாள்.

"நீ பேசுறதுல... ஒரு வகையும் இல்லல.. தொகையும் இல்ல... எங்க சுடலை மாடனுக்கு நடத்துற விசேஷத்த யாராவது தடுத்தால்.... அவங்கள எங்க மாடனே கேட்பான்... சொம்மா பழனிச்சாமி அண்ணாச்சி வீட்டுக்கும் ஒங்க வீட்டுக்கும் கொடுக்கல் வாங்கல் பேச்சு நடக்குதுன்னு தாம் தூமுன்னு குதிக்கப்படாது..."

"எங்க குடும்பத்துல பொம்புளைவ இப்டி அம்பலத்துல வந்து பேசுற பழக்கம் இல்ல... அப்டிப் பேசுனா... ஒரே வெட்டா வெட்டிப் பிடுவோம்..... வருஷக்கணக்குல... இப்பிடி...... விட்டு வைக்கமாட்டோம்."

"எங்க கரும்பட்டையான் குடும்பத்துலயும் அப்படித்தான்... எங்க பொம்புளைக எவளும் எங்கள மீறிப் போக மாட்டாளுவ.... எங்க பொம்புளயால.... எங்க தல, எப்பவும் குனிஞ்சது கிடையாது...."

கடைசியாகப் பேசிய திருமலையை உற்றுப் பார்த்தபடியே, துளசிங்கம் 'ஓகோ அப்படியா...' என்று சொல்லி ஏளனமாய்ச் சிரித்தான்.

பற்குணம் எழுந்தபடியே கர்ஜித்தார்.

"எந்தப் பொம்புளயப் பத்தியும்..... எந்தப் பயலும் பேசப்படாது... ஆனால் ஒண்ணு.... செம்பட்டையான் கூட்டம் சுடலமாடனுக்கு இரண்டாவது வெள்ளியிலயோ.... மூன்றாவது வெள்ளியிலயோதான்..... கொடை கொடுக்கணும்.... இதையும் மீறி கொடுத்தால் சுடலைமாடன் ஆடமாட்டான்... ஊருதான் சுடலையாவும்..."

"நீரு இப்டி மிரட்டுறது நல்லதாப் படல..."

"நல்லதாப் படுதோ.... கெட்டதாப் படுதோ.... நாலு நாளு கெடு கொடுக்கேன்.... நல்லா யோசிச்சு ஊரோட ஒத்துவாங்க..."

"நீரு மட்டும் ஊராயிடாதே...."

"ஆகுதா ஆகலியான்னு அப்புறம் தெரியும்... ஒங்க கோயிலுல மேளச் சத்தம் கேட்டால், அப்புறம் இன்னொரு மேளச் சத்தமும் கேட்கும்... அதுக்கு இடந்தராதிய... எழுந்திருங்கல.... இவனுவ கிட்ட நமக்கு வேலயில்ல..."

பற்குணம் எழுந்தார்.... அவருடன் வந்த சொக்காரர்களும் கரும் பட்டையான்களும் எழுந்தார்கள். இந்த காத்துக்கருப்பன் கூட்டத்தில் பலர் செம்பட்டையான், கரும்பட்டையான் குடும்பங்களில் பெண் எடுத்தவர்கள்..... கொடுத்தவர்கள்... ஆனால் செம்பட்டையான் குடும்பத்தில் இப்படி உறவு வைத்திருப்பவர்கள் ஏழைகள். அவர்கள் பற்குணம் பேசியதை மனதுக்குள் ஆட்சேபித்துக் கொண்டே தத்தம் உடல்களை பின்னால் நடக்க விட்டார்கள்.

செம்பட்டையான்கள் ஆடிப்போய் விட்டார்கள்.... காஞ்சான், எலி டாக்டரை குற்றஞ்சாட்டுவது போல் பேசினார்.

"ஆழந்தெரியாமல் இறங்கிட்டோமே..... காத்துக்கருப்பங்க கரும்பட்டையான் பயலுவகூட சேர்ந்துட்டாங்க... நாம எந்த மூலைக்கு.... ஏய்... துளசிங்கம் என்னடா இது...."

துளசிங்கம், அழுத்தமாகப் பேசினான்.

"கவலைப்படாதிய சித்தப்பா.... மெட்ராஸ்ல இருந்து லாரில ரெளடிகள கொண்டு வாறேன்.... சினிமா ஸ்டண்ட் ஆட்களையும் கொண்டு வாறேன்..... அதுக்குள்ள என் கையும் சுகமாயிடும்....."

அலங்காரிக்கு வழக்கம்போல் நெஞ்சு கனத்தது. முன் நெற்றிக்குள், உள்ளிருந்து ஏதோ ஒன்று உருண்டு வந்து மோதியது. காதுகள் இரைந்து, வெளிச்சத்தை விரட்டின. அந்தக் கூட்டமே ஒரு காடாகவும், தான் மட்டும் தனியாகவும் தோன்றியது.... எப்பிடில்லாம்.... குத்திக் குத்திப் பேசுறாங்க..... ஏல... காத்துக் கருப்பன்களா.....

கரும்பட்டையான் மூஞ்சுகளா..... என் நிலையில.... ஒங்க அம்மாரும், பொண்டாட்டிமாரும் இருந்தா..... அவளுவளும்..... என்னை மாதிரிதான் இருப்பாளுவடா.... எனக்கு காலமே.... காலனா வந்தது.... ஒங்களுக்குத் தெரியுமாடா....

துளசிங்கம், பேசுவதை, ஆற்றுப்படையாக கேட்டுக் கொள்வதற்காக, சிந்தனையோ.... நிபந்தனையோ.... எதையோ ஒன்றை தடைசெய்துவிட்டு, உன்னிப்பாய்க் கேட்ட அலங்காரி, இப்போது எக்காளமாகப் பேசினாள். குறுஞ்சிரிப்பும்-கொள்கை முழக்கமுமாய்.

"எதுவும் வேண்டாம்.... சுடல மாடன்.... எனக்கு சொல்லிக் கொடுத்ததை, நான் ஒங்ககிட்ட சொல்லுவேன்... நீங்க.... நான் சொன்னத செய்தாப் போதும்.... காத்துக்கருப்பன்களையும், அந்த கரும்பட்டையான்களையும், ஒரே கத்திரியால் மொட்டை அடிச்சுடலாம்.."

ஆண்கள், அலங்காரியை அதிசயமாகப் பார்த்தார்கள்.. இதுவரை அவளை இளக்காரமாகப் பார்க்கும் செம்பட்டையான் தாய்க்குலம், அவளைத் தலைவியாக ஏற்றுக் கொண்டதுபோல் அண்ணாந்துப் பார்த்தது.

## 14

கட்டிலில் கால்போட்டு உட்கார்ந்திருந்த பழனிச்சாமி, பங்காளிகள் சொல்வதை வழக்காளியாய் இருக்கும்போது எப்படிக் கேட்பாரோ, அப்படி எந்தவித உணர்வையும் முகத்தில் காட்டிக் கொள்ளாமல் கேட்டார். காத்துக் கருப்பன்கள் தலையிட்டதைச் சொல்லும்போது மட்டும், மோவாயில் ஊன்றிய கையை எடுத்து விட்டு நிமிர்ந்து உட்கார்ந்தார். எல்லோரும் சொல்லி முடித்ததும், இன்னும் ஏதாவது இருக்கிறதா என்பதுபோல் அவர்களைப் பார்த்து விட்டுச் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். அவர் வாயையே எல்லோருடைய கண்களும் மொய்த்தன. அவரும் நிதானமாகக் கேட்டார்.

“ஒருவேள நான் நேருல போயி கேட்கலன்னு அவங்க நெனக்கலாம். நானே, எலி டாக்டர் வீட்ல போயி, கேட்கனே..... என்ன சொல்றிய....”

“அது மட்டும் கூடாது.... அண்ணாச்சி.... அந்த துளசிங்கம் செறுக்கி மவன்... ஒங்கள பேர் சொல்லிக் கூப்புடுறான்....”

“கோபத்துல சில வார்த்தை வாரத பெரிசா எடுக்கப்படாது.... நம்ம திருமலைகிட்ட சண்டை போட்ட பிறகுகூட இந்த துளசிங்கம் ஒரு நாளு என்னைப் பார்த்துட்டு வாயில இருந்த சிகரெட்ட தூக்கி எறிஞ்சுட்டு மரியாதையா போனான்.... நானும் போனேன்னு அவங்களுக்கும் ஒரு திருப்தி இருக்கட்டுமே....”

“அது மட்டும் கூடாது.... அண்ணாச்சி... ஒங்க மரியாதிக்காவ நாங்க சண்டைக்குப் போனோம்.... இனிமேல் எங்க மரியாதிக்காவ நீங்க போவப்படாது.... அப்புறம் உங்க இஷ்டம்...”

இஷ்டம் என்ற வார்த்தையை இஷ்டமில்லாமல் உச்சரித்த பங்காளிகளை, திடுக்கிட்டுப் பார்த்தார் பழனிச்சாமி. எல்லாம் இவனால என்று திருமலையைப் பார்த்துப் பேசப்போன வாயை அடக்கிக் கொண்டார்... அப்போது, அவர் தம்பி அருணாசலம் “இந்த துளசிங்கம் பயதான் ரொம்ப குதிக்கான்... அந்த அடாவடிப் பயலோட இன்னொரு கையயும் ஒடிக்கணும்” என்றார்.

பழனிச்சாமி திட்டவட்டமாகச் சொல்லாமல், யோசனை கேட்பது போல் கேட்டார். “சரி.... நாம் விட்டுக் கொடுப்போமா... அவனுவ வேணுமுன்னா வெள்ளில கொடுத்துட்டுப் போறான்...”

“அண்ணாச்சி.... இந்த விஷயத்துல மட்டும் எங்கள விட்டுக் கொடுத்திடாதிய... எப்டி அப்படிக் கொடுக்கது, தர்மராசா. தம்பிமாருகள திரியோதனனுக்கு அடிமையாக்குனது மாதிரி. ஒங்க பெருந்தன்மய புரிஞ்சுக்க முடியாத தற்குறிப் பயலுவ அவனுவ....”

பழனிச்சாமி, காபி ரெடியா என்பது மாதிரி... கதவில் சாய்ந்து நின்ற மனைவி பாக்கியத்தைப் பார்த்தார்.... அவள் அப்போதுதான் ஞாபகம் வந்ததுபோல், சமையலறைக்குப் போனாள்... பழனிச்சாமி திட்டவட்டமாகப் பேசினார்.

"சரி, ரெண்டு கோயிலுக்கும் நடக்கட்டும்..."

"அவங்க சுடலைக்கு எப்படி..."

"இப்போ அவங்க பேச்சு தேவையில்ல.... நாம நம்ம அம்மனுக்கு அடுத்த வெள்ளில கொடை கொடுக்கோம்.... அவ்வளவுதான்.... அதுதான் பேச்சு...."

"எப்பா... இப்பதான் மனசு குளுந்தது... அண்ணாச்சின்னா அண்ணாச்சிதான்..."

திருமலைக்கு ஒரு வயது குறைந்த ராமசுப்பு பக்குவமாய் பேசினான்.

"நம்ம கோவிலுக்கும் அவங்க கோவிலுக்கும் இடையே இருக்கிற தூரம் கூப்புடு தூரம்... இங்க இருந்து அங்க பாக்கலாம்.... அங்க இருந்து இங்க பாக்கலாம்..."

"இதுக்குத்தான் ஊரில ஒன்ன தோல்வாயன்னு சொல்லுதாங்க.... சட்டுப்புட்டுனுன்னு சொல்லேண்டா..."

"நான் பெரியப்பா கிட்டதான் பேசுறேன்.... ஒம்மகிட்ட இல்ல... கோவிலுக்கு களையே கூட்டந்தான்..... அந்தக் கோவிலுல.... இருபத்திரண்டு பேர் சாமியாடுறான் நம்ம கோவிலுக்கு ஒரே ஒரு சாமியாடி. அதுவும் நெத்தில திருநீர் பூசுறேன்னு நம்ம வாய்க் குள்ளேயே கைய விடுற சின்னச்சாமித் தாத்தா.... இவரு ஆடுறதவிட இவரு கைகாலு ஆடுறதுதான் ஜாஸ்தி....."

"சின்னப்பய மவனுக்கு பேச்ச பாரு.... இப்ப என்னல செய்யணும்... வேணுமுன்னா நீ சாமியாடு.... நான் ஒதுங்கிக்கிறேன்... பாருடா பழனிச்சாமி...."

"அப்போ... சாமி ஆடுறதும்... ஆடாததும் மனுஷன் இஷ்டத்த பொறுத்தது.... அம்மன் இஷ்டத்த பொறுத்தது இல்லங்கிறியளா"

"ஏல நாட்டு வக்கீலு நாராயணா... குதர்க்கமாய் பேசாம.... இந்தச் சிக்கலுக்கு ஒரு வழி சொல்லேண்டா...."

"சொல்ல மாட்டேன்.... செய்து காட்டுவேன்..."

"அவங்க வீடியோ படத்துக்கு அதிகமாய் ஒண்ணு செய்யணும்... செய்யப் போறேன்..."

"என்ன செய்யப் போறே..."

"இப்ப சொல்ல மாட்டேன்.... ஆனால் செய்வேன்..."

"செறுக்கி மவனுக்கு திமுரப் பாரு.... நம்ம மனச அந்தரத்துல விடுறான் பாரு.... பொம்புள நாடகமாடா....?"

"இல்ல..."

"ரிக்காட் டான்ஸா...?"

"இல்லவே இல்ல..."

"பிறகு என்னதான் செய்யப்போற...."

"வேணுமுன்னா.... பெரியப்பாகிட்ட தனியா சொல்லுறேன்... அவருக்கு சம்மதமுன்னா அந்தக் காரியத்த செய்து... செம்பட்டையான் கோவிலுல சாமியாடுற பயலுவகூட நம்ம கோவிலுக்கு வரும்படியாய் செய்யப் போறேன்... பெரிசா...."

"ஏல நாட்டு வக்கீலு... நீ செம்பட்டையானுவளவிட திமுருபிடிச்ச பயல்... என்னதான்னு சொல்லேண்டா...."

"நீரு ஆயிரம் கேள்வி கேட்டாலும் இப்ப சொல்லமாட்டேன்... ஆனால் ஒண்ணு... செம்பட்டையான் கோவிலுல காக்கா குருவிகூட இருக்காது...... பெரியப்பா மட்டும் கொஞ்சம் கண்ணை மூடிக்கணும்...."

பழனிச்சாமி, நாட்டு வக்கீலை எடைபோட்டுப் பார்ப்பதுபோல் பார்த்தார். கட்டில் சட்டத்தில் வைக்கப்பட்டிருந்த ஒரு புராணப் புத்தகத்தை பிரித்தார். பிறகு பெருமூச்சோடு பேசினார்.

"எப்டி வேணுமுன்னாலும் செய்யுங்க... ஆனால் ரெண்டு கண்டிஷன்.... என்னை கோயிலுக்கு வான்னு வற்புறுத்தப்படாது... செம்பட்டையானை கண்டால் ஒதுங்கிப் போகணும்... வம்பு தும்பு வச்சுக்கப்படாது...."

எல்லோரும் ஒருமித்துப் பேசப் போனார்கள்..... அதற்குள் காபி டம்ளர்கள் ஆவி பறக்க வந்துவிட்டன.

# 15

கோலவடிவு தெருப்பாதை தெரியும்படியான இடத்தில் உட்கார்ந்திருந்தாள்.... தெருவில், துளசிங்கம் போவதைப் பார்க்கப் பார்க்க, அவளுக்கு ஏன் பார்த்தோம் என்பது மாதிரி கோபம் ஏற்பட்டது.... கடைசில போயும் போயும் இந்தக் கழிச்சுப் போட்ட துளசிங்கத்த பெரிசா நெனைக்கிறேன் பாரு.... மனுஷனா இவன்... இல்ல... இவரு... ஊரே கும்பிடுற மாதிரி பாக்கிற எங்கப்பாவை நேத்துப் பிறந்த இந்த மனுஷன் பழனிச்சாமின்னு நாக்குமேல பல்லுப் போட்டு பேசியிருக்கார். எனக்கு, குங்குமம் வச்சது நெனப்பிருந்தா, முத்தம் தந்தது மறக்காட்டா.... இப்டி துள்ளுவாரா... கடைசில, இவரு அந்த காத்துக்கருப்பன் கூட்டத்துல உதைபட்டாதான் புத்தி வரும்...

அய்யய்யோ அக்கினி ராசா அந்த வகையறாவாச்சே.... துளசிங்கத்த உதைச்சால் நாமுல்லா விழுவேன்... அதுவும் அக்கினி ராசா முன்னால... அது அப்புறம்... இப்போ நானும் கரும்பட்டையான்.... எங்க குடும்பத்த இளக்காரமா பேசுற யாரும் எனக்குப் பெரிசில்ல... ஆமா எனக்கு குங்குமம் வச்சதை அந்த மனுஷன் தமுக்கடிப்பாரோ... முத்தம் கொடுத்ததை அம்பலப்படுத்துவாரோ.... எதுக்கும் அவரு கிட்ட போயி சொல்லிட்டு வந்துடணும்... நீருதான் குங்குமம் வச்சீரு.... நான் நெத்தியக் காட்டலன்னு சொல்லணும்.... முத்தத்த எடுத்துக்கீட்டீரே தவிர... நான் தர்லன்னு சொல்லணும். தெரிஞ்சு தெரியாம நடந்தத மறந்துடும்.... நீ யாரோ.... நான் யாரோன்னு சொல்லணும்.... இனிமேல் அவருக்கும் எனக்கும் கல்யாணம் நடக்காது... எம்மாடி இவ்வளவு நடந்த பிறகும் அவரு... எங்க குடும்பத்த இவ்வளவு இளப்பா நெனச்ச பிறகு அவர கட்டிக்க அப்பா சம்மதிச்சாலும்... நான் சம்மதிக்க மாட்டேனாக்கும்...மூஞ்சில அடிச்சாப்ல.... அவர்கிட்ட பழைய குப்பையை கிளறப்படாதுன்னு சொல்லிட்டு வந்துடலாம்....

கோலவடிவு, பயப்படாமல் எழுந்தாள்... கம்பீரமாக நடந்தாள்... அதே அந்த ஒற்றையடிப் பாதையில் ஓட்டமும் நடையுமாக நடந்தாள்...

மாலை வேளை என்பதால், கண்ணுக்குச் சிலரே தென்பட்டார்கள்.. அதுவும் தொலைவில், அவள் அந்தப் பள்ளமான பருத்திக் காட்டிற்குக் குறுக்கு வழியாய் வரவும், துளசிங்கமும், நேர் வழியாய் வரவும் சரியாய் இருந்தது... கோலவடிவைப் பார்த்து, துளசிங்கம் சிரித்தான்... அந்தச் சிரிப்பில் பாதிக்கோபம் பறந்து போவதை உணர்ந்த கோலவடிவு, எஞ்சிய கோபத்தை விடப் போவதில்லை என்பதுபோல் 'தம்' பிடித்து நின்றாள்... துளசிங்கம், அவள் அருகே வந்தபோது அவள், அவன் கை எட்டாத தொலைவில் நின்று கொண்டாள்..... மனதிற்குள் பேசியதை ஒப்பித்தாள்...

"நான் ஒன்னும் ஒம்மகிட்ட கொஞ்ச வரல.... நம்மளுக்குள்ள நடந்ததை சொல்லப் படாதுன்னுதான் சொல்ல வந்தேன்..."

"எங்க சுடலை மாடன் சத்தியமாய்ச் சொல்லுதேன்... என் தலையே போனாலும் நமக்குள்ள நடந்ததை சொல்லவே மாட்டேன்... அதோட ரெண்டு சமயத்துலயும் தப்பு செய்தது நான்தான்... நீயில்ல..."

"அப்போ எங்கப்பாவ... சபையில... பேர் சொல்லி..... மொட்டய்யா..."

"நானும் ஒண்ணன்மாதிரி ஒரு முட்டாளு.... எப்டிச் சொன்னேன்னு எனக்கே தெரியல.... எங்கப்பா முன்னால சிகரெட்ட பிடிக்கிற நான், மாமா முன்னால... பிடிச்சதுல்ல... இன்னும் ஆயிரம் சண்டை வந்தாலும், ஒரு சிகரெட்டக்கூட பிடிக்க மாட்டேன்..."

"அது அவரோர் இஷ்டம்... அனாவசியமாய் சபையில என்னையும் அக்கினி ராசாவையும் அலங்காரி அத்தை எதுக்கு சம்பந்தப்படுத்தணும்..."

"சரியான பைத்தியக்காரி நீ. சித்தி அப்படிச் சொன்னதாலதான், இனிமேல் பொண்ணு கேட்க அவங்க யோசிப்பாங்க.... இல்லாட்டா சித்தி சொன்னதை நீரூபிக்கதாய் ஆயிடும்... பாரு... எங்க சித்தி லேசுப்பட்ட சித்தியில்ல..."

"என் நெத்தில குங்குமம் வச்ச நெனப்பிருந்தால், அது தந்த ஞாபகம் இருந்தால், நீரு விட்டுக் கொடுக்கலாமுல்லா... ஒரு வெள்ளிக்குப் பதிலா... இன்னொரு வெள்ளில வைக்கலாமுல்லா...."

"இதோ பாரு கோலம்.... ஒன் மேல எனக்கு 'இது' வாரதுக்கு முன்னால போட்ட திட்டம் அது.... இப்போ அத மாத்தறது கஷ்டம்... ஆனாலும் எங்க ஆட்கள் கிட்ட சொல்லிப் பாக்கேன்... கெஞ்சிப் பாக்கேன்.... போதுமா.... அநேகமாய் எங்க கொடைய தள்ளி வச்சுடலாமுன்னு நினைக்கேன். அப்டி முடியலன்னா... நீ என்னை தள்ளி வச்சுடப்படாது..."

"ரெண்டு குடும்பத்துக்குள்ள இவ்வளவும் நடந்த பிறகு நமக்குள்ள... நமக்குள்ள..."

"கண் கலங்காத கோலம்... நீ சொல்றது மாதிரி.. இவ்வளவு நடந்த பிறகும் ஒங்க அண்ணன் நம்மை ஒண்ணாச் சேர விடமாட்டான்.. இந்த இடைவெளில காத்துக்கருப்பன் பயல்வ குறுக்கே வாரான்... அவங்களுக்கு ஒன்னைக் கட்டணும் என்கிறதைவிட பழனிச்சாமி மாமா வீட்ல பெண்ணெடுத்தோமுன்னு பேர் வாங்கணும். அந்தப் பேராசையிலதான் நம்ம 'கிழ ஊரு' விவகாரத்துல தலையிட்டு சண்டய பெரிசாக்கிட்டாங்க.... ஆனால் சத்தியமா சொல்லுதேன்... அவங்க திட்டம் பலிக்காது.... என்னால ஒன்னைக் கட்ட முடியுதோ இல்லியோ..... அக்கினி ராசா கட்ட விடமாட்டேன்.... எங்க அம்மன் குடையை தள்ளிவச்சுட்டா என்ன செய்வாங்க... முயற்சி செய்யப் போறேன்.... முடிஞ்சாலும் முடியலாம்... அப்டி முடியாமப் போனாலும் ஒங்க கரும்பட்டையான் கூட்டம் என்னை அடிச்சாலும் பட்டுக்குவேன்... திருப்பி அடிக்கமாட்டேன்...."

"கை எப்டி இருக்கு...?"

"இப்போ பரவாயில்ல... நாளைக்கு கட்ட எடுக்கப் போறேன்..."

"எங்கண்ணாகிட்ட ரூபாய் கொடுத்ததை தப்பா நினைக்கப் படாது... புளியம்பழம் வித்த பணம்.... அப்பா என்கிட்ட வீட்டுக்குள்ள வைக்க கொடுத்தாரு.... நான்தான் சண்டைச் சத்தம் கேட்டு மறந்து போயி ரூபாவோட வந்துட்டேன்.... தப்பா நினைக்கப் படாது..."

“சரி... பழையத விடு... ஒன்னப் பார்த்தால் எனக்குத்தான் தப்பு செய்யப்படாதுன்னு ஒரு எண்ணம்... அப்படிப்பட்ட முகராசி ஒனக்கு...”

“இனுமே நாம சந்திக்கப்படாது... வழில பாத்தாலும் பேசப்படாது... கிட்டாதாயின் வெட்டென மறன்னு பள்ளிக்கூடத்துல படிச்ச பாடம்...”

கோலவடிவு திக்கினாள்... விக்கினாள்... முந்தானையை எடுத்துக் கண்களை ஒற்றிக் கொண்டாள். பிறகு சத்தம் வராமல் இருக்க வாயில் ஒற்றிக் கொண்டாள். துளசிங்கம், அவள் தோளில் கை போட்டான். இரண்டு கைகளாலும் அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தபோது, அவள் அவன் மார்பில் முகம் போட்டாள். கழுத்தில் கை போட்டாள்... பிறகு அவனிடமிருந்து விடுபட்டு, அவனை ஏறிட்டுப் பார்த்தவள், இன்னொருத்தியைப் பார்த்துவிட்டாள்...

“அய்யய்யோ... ரஞ்சிதம்... ரஞ்சிதம்...”

கோலவடிவு, தன் மார்பில் சாய்ந்ததை, திருமலை தன் காலில் விழுந்ததாகப் பாவித்துக் கொண்ட துளசிங்கம் சந்தோஷமாகச் சொன்னான்.

“அவள் பாக்கல.... வேற பக்கமா நிக்காள்...”

“அய்யோ... நம்மள பாத்துட்டுதான் அப்படி திரும்பி நிக்காள்... அதோ வாராள் பாருங்க... எம்மோ... அவள் ஊர்ல சொன்னா எனக்கு மட்டுமில்ல... எங்க குடும்பத்துக்கே கேவலமாச்சே...”

கோலவடிவு பயந்தபடியே ஓடினாள்... துளசிங்கம் சிரித்தபடியே நின்றான்... அலங்காரி சித்தி சொன்னபடியே உயிருக்கு உயிராய் பேசியாச்சு.... அவள்கிட்ட போய் சொல்லணும்... சிரிப்பாள்... சிரிப்பாள்... அப்படிச் சிரிப்பாள்...

# 16

காலை வேளை... கதிரவன் தங்கப் பிரவேசம் செய்த நேரம்...

ஆலமரத்தடிக்கு அருகே அம்மன் கோவில், களை கட்டியது என்றால், சுடலை மாடன் கோவிலும் சும்மா இருக்கவில்லை... இங்கே கரும்பட்டையான்கள் பத்துப் பதினைந்து பேர், அங்கே செம்பட்டையான்கள் பதினைந்து இருபதுபேர், இருதரப்பும் தத்தம் கோவில்களை உற்றுப் பார்த்தார்கள்.... அம்மன் கோவிலில் சிலர் பலருக்கும், சுடலை கோவிலில் பலர் சிலருக்கும் உத்திரவுகள் பிறப்பிப்பது போல், கோவில்களின் பல்வேறு இடங்களைச் சுட்டிக் காட்டினார்கள்... உடனே இரண்டிலும் ஏணிகள் சாத்தப்பட்டன... யார் ஏணியில் முதலில் ஏறுவது என்பதுபோல், இருதரப்பும் ஏணிக் கட்டத்திலேயே போட்டி போடுவதுபோல் தோன்றின. ஏறியவர்களிடம் சுண்ணாம்புக் கலசமும் தூரிகையும் ஒரே சமயத்தில் கொடுக்கப் பட்டன... அம்மன் வீட்டில் தெளிந்த சுண்ணாம்பு வெள்ளை சுடலை வீட்டில் மங்கலாகவும், சுடலை வீட்டு வெள்ளைச் சுண்ணாம்பு அம்மன் வீட்டில் மங்கலாகவும் தெரிந்ததை, செம்பட்டையான்களும், கரும்பட்டையான்களும் தத்தம் கோவில் சுவர்கள் அதிகமாய் பிரகாசிப்பதாக அனுமானித்துக் கொண்டார்கள்.

காளியம்மன் கோவில், சட்டாம்பட்டியின் மேல ஊருக்கும் கீழ ஊருக்கும் எல்லைக் கோடாக உள்ள கோவில்.... இதற்கு தென் கிழக்கே துளசிங்கம் வீடு திருமலை நடக்க ஏழு நிமிடமும், அக்னி ராசா நடக்கப் பன்னிரண்டு நிமிடமும் ஆகும் தூரத்தில் இருந்தது.... சுடலைமாடன் வைத்திருக்கும் குறுக்குத்தடி, காளி கோவில் பக்கமும், காளியின் திரிசூலம் சுடலை கோவில் பக்கமும் நன்றாகத் தெரிந்தன...

தேநீர் கடையில் இருந்து பெரிய கூஜாவில் வாங்கி வரப்பட்ட காபியை, கையோடு கொண்டு வந்த டம்ளர்களில் குடித்துக் கொண்டிருந்த பீடிப் பெண்களைக் 'குள்ளக் கத்தரிக்காய்' ராமசாமி விரட்டினார்.... அவருக்குக் கொடுக்காமல் குடித்தால் எப்படி....?

"கொஞ்சம் தள்ளி உட்காருங்க.... இன்னும் தள்ளி... தள்ளி..."

"இப்பபடியே தள்ளித் தள்ளிப் போனால்... சுடலை மாடன் இருக்காரே, அந்த கோவிலுல போய்தான் இடிப்போம்...."

'நாட்டு வக்கீல்' நாராயணன் குறுக்கு விசாரணைக்கு போய் விட்டான்.

"அம்மனுக்கு நாளைக்குப் பந்தக்கால் நடுறோம்... அப்புறம் கண் திறப்போம்... எவளாவது சுத்தபத்தம் இல்லாதவள் இருந்தால், இப்பவே எழுந்து போயிடணும்..."

சில பெண்கள் சிரித்துக் கொண்டார்கள்... சிலர் முகத்தைச் சுழித்துக் கொண்டார்கள். பலர், ஆங்காங்கே கூடிக்கூடி நின்ற வண்ணம் இரண்டு கோயில்களையும் கண்ணால் அளந்தபடியே வாயளந்த ஆட்களை வாயகலப் பார்த்தார்கள்....

செம்பட்டையான் ரோசாப்பூ சிரிக்கவில்லை... சுழிக்கவில்லை... சினந்தபடியே பேசினாள்...

"இந்த நாட்டு வக்கீல் நாராயணன் நம்ம எல்லோரையும் தன் பொண்டாட்டி மாதிரி சுத்தபத்தம் இல்லாதவள்னு நெனச்சிட்டான் பாரேன்..."

"எங்க அண்ணாச்சி... பெண்டாட்டி எந்த வகையிலழா.... சுத்த பத்தமில்ல...? அம்மனுக்கு சுத்தம் இல்லாட்டா கோபம் வருமுன்னு உலக நடப்பச் சொன்னா ஒனக்கு ஏன் வலிக்குது... ஒங்க. சுடல மாதிரி எங்கம்மன் புண்ணாக்கு தின்கிறவள் இல்ல..."

கரும்பட்டையான் வாடாப்பூ, ரோசாப்பூவைத் திட்ட, 'காத்துக் கருப்பி' தங்கம்மா தனது கருத்தைப் பொதுக் கருத்தாகச் சொன்னாள்...

"செம்பட்டையான் கூட்ட ஆம்புளைகளுக்குத்தான் திமிருன்னு பார்த்தோம்... பொம்புளைகளுக்கும் அப்பிடித்தான் போலுக்கு..."

"ஏய் தங்கம்மா... நீ மேல ஊருக்காரி... ஒனக்கென்னடி வந்திருக்கு..... நாங்க ரெண்டு குடும்பமும் கீழே ஊர்காரிவ.... அடிப்போம்... பிடிப்போம்... அணைப்போம்... நீ பாட்டுக்கு சும்மா இரேன்..."

"இனிமேல.... நல்லா ஞாபகம் வச்சுக்க... ஊரு ஒண்ணுதான்... அதுக்குத்தான் எல்லை உண்டே தவிர, அதுக்குள்ள எல்லை கிடையாது... இனிமேல் கருப்பனும் கரும்பட்டையானும் ஒண்ணு... செம்பட்டையான் வாயில மண்ணு.... அம்மன் கொடையில பாக்கத்தான் போறோம்..."

"ஏழா வார்த்தய அளந்து பேசுழா... இல்லன்னா ஒன் தலையில் மண்ணு விழும்... இப்பவே..."

"எங்கழா... மண்ணள்ளி போடு பார்க்கலாம்..."

"இன்னொரு தடவ சொல்லு பார்க்கலாம்..."

கரும்பட்டையான்களை சும்மா சொல்லக்கூடாது... எல்லாப் பெண்களையும் ஒரே மாதிரி பாவித்து விரட்டினார்கள்.

"நாங்கதான் நாயிமாதிரி ஒருத்தர ஒருத்தர் குதறுறோம்... ஒங்களுக்கு என்னழா வந்துட்டு...? எழுந்திருங்கழா... இந்த சண்டைக்கு வினையே ஒங்க மூலந்தான் வந்துது... ஓடிப்போங்க... இந்தப் பக்கம் எவளும் வரப்படாது... ஏல... பக்கிரிசாமி.... வெள்ளையால அடிக்கே... வெள்ளை சும்மா கண்ணப் பறிக்காண்டமா... போங்கழா..."

பீடிப்பெண்கள் எழுந்தார்கள்.... தட்டும் பீடியுமாய் நடந்தார்கள். நாட்டு வக்கீல் நாராயணன் விரட்டினான்... என்று எழவில்லை பீடியோட நேரம் வந்தாச்சு... அதோட இன்னைக்கு கணக்குப் பார்த்து காசு வாங்குற நாள்... எடைபோட்டு இலை வாங்குற நாள்...

சிநேகிதத்தின் அடிப்படையில் ஒவ்வொருத்தரும், இன்னொருத்தியை இடித்தபடியே கலகலவென்று சிரித்தபடி போவாள்... ஆனால், இன்றைக்கோ, காத்துக் கருப்பியும் கரும்பட்டையாள்களும் கலந்து போக, செம்பட்டையாள்கள் தங்களுக்குள் மட்டுமே சேர்ந்து போனாள்கள்.... திருமலை திட்டுவானே என்ற பயத்தில், துளசிங்கம் ஒதப்பானே என்ற அச்சத்தில்...

அந்தப் பெண்கள் தங்களுக்குள்ளேயே ஒரு வரையப்படாத சண்டைக்கோட்டைப் போட்டுக் கொண்டு, பீடிக்கடை படியேறினார்கள்... நான்கு படியில் முடிகிற கல்தூண் திண்ணையில் சில சிறுவர்கள் பீடிக்கு லேபிள் ஒட்டிக் கொண்டிருந்தார்கள்... உள்ளறையில் பீடி இலைகள், அடுக்கடுக்காய் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன... பக்கத்துலயே தூள்கள் குவியலாக இருந்தன... இரண்டுக்கும் மத்தியில் உள்ள மேஜையில் தராசு.

ஒவ்வொருத்தியும் ஒரு பயலிடம் பீடிகளை எண்ணிக் கொடுத்து விட்டு, கணக்குப் பிள்ளையிடம் கையளவில் உள்ள பேரேட்டை நீட்டினாள்... அப்போது, ஒரு 'அண்டா குண்டா' அறையில் இருந்து ஏசெண்டு வந்தான்... 'இர்' என்றோ 'இன்' என்றோ சொல்ல முடியாத வயசு... முப்பது முப்பத்தைந்து இருக்கும்... அவன் முகத்தைவிட, முடி நன்றாக இருந்தது... உடம்பைவிட உடுப்பு நன்றாக இருந்தது... கண்ணுக்குக் கீழே கரும் வட்டங்கள்... கைகளில் தேமல்... ஆனாலும் அவன் அதட்டிச் சொன்னான்...

"செம்பட்டையான்... குடும்பத்துப் பொண்ணுவளுக்கு இன்னையில இருந்து இல கிடையாது... நாளைக்கு வந்து கணக்க முடிச்சுக்கட்டும்... இனிமேல் இந்தக் கடைப்பக்கம் திரும்பிக்கூட பார்க்கப்படாது... ஏல தேசிங்கு... மூணுல ஒரு பங்கு பீடி இலய கரும்பட்டையான், காத்துக் கருப்பன் பொண்களுக்கு நிரந்து போடுடா... செம்பட்டையான் பொண்ணுவளா திரும்பிப் பாராம போங்க..."

செம்பட்டையான் ரோசாப்பூ நேரடியாகக் கேட்டாள்.

"எங்கள எதுக்காவ போகச் சொல்லுதியரு..."

"இது காத்துக் கருப்பன் பால்பாண்டி நடத்துற கடை... செம்பட்டையான் பொண்ணுவளுக்கு இங்க இடம் கிடையாது"

"நீரு ஒண்ணும் முதலாளி இல்ல... கம்பெனி ஏசெண்டு.."

"சரி கம்பெனிக்கே கம்ளைண்ட் கொடுங்க... இனிமேல் இந்தப் பக்கம் வரப்படாது..."

"செம்பட்டையான் ஆம்புளகூட சண்டைபோட வக்கில்ல... வந்துட்டாரு... பொண்ணுவகூட சண்ட போட..."

"நான் சண்டை போட்டா... ஒங்களால தாங்க முடியாது... மரியாதியா போறியளா.... இல்ல. பீடி ஒட்டுற பயலுவள வச்சு கழுத்தப் பிடிச்சுத் தள்ளணுமா..."

ஏசெண்டு, அப்படிச் சொல்லிவிட்டு, திடுக்கிட்டான்... காரணம் பீடி ஒட்டும் பயல்களிலும் செம்பட்டையான்கள் இருக்கிறார்கள்.... அவர்களை நாளைக்கு வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று திட்டம் போடுவது போல், மோவாயை அவர்களைப் பார்த்தே மேலும் கீழுமாய் ஆட்டினான்... செம்பட்டையான் பெண்களில் பலர் ஏழைகள்.... சொத்துப்பத்து இல்லாத சூன்யங்கள்... பீடி சுற்றியே பிழைப்பவர்கள்... வேறு பிழைப்புத் தெரியாதவர்கள்... அவர்கள் அழப்போவது போல நிற்பதைப் பார்த்துவிட்டு அவர்களிடம் ஆலமரத்தடியில் சண்டை போட்ட கரும்பட்டையான் வாடாப்பூ கோபத்தை நிதானத்தோடு காட்டிப் பேசினாள்.

"இவளுவள விரட்டுறது நியாயமில்ல... கோயில் சண்டைய கோயிலுலதான் பாக்கணும்... மேளத்துல பாக்கணும்... தாளத்துல பாக்கணும்... பீடில பாக்கப்படாது... இவளுவளும் எங்கள மாதிரி தொழிலாளி பொண்ணுவ...."

பீடி ஏசெண்ட் துள்ளி எழுந்தான்...

"அம்மாமாருக்கு அவ்வளவு திமுரு உண்டாயிட்டோ... ஊர்க்காரனுவளயே உண்டு இல்லன்னு பார்க்கிற குடும்பத்துல ஆம்புளையாய் இருந்தாலும் சரி, பொம்புளையாய் இருந்தாலும் சரி.... இங்க இடமில்ல... எவளாவது செம்பட்டையானுக்கு பிறந்தவதான் இப்டிப் பேசுவா... அப்படி பிறந்தவளுவ வராண்டாம்... மத்தவளுவ வரட்டும்... ஏய் தங்கம்மா... நம்ம குடும்பத்துக்காரிகள வரச் சொல்லுவாறியா...? இல்ல.... அவங்கவங்க அப்பா அம்மா கிட்ட சொல்லி பீடி சுத்துறதை நிறுத்திட்டு வயல் வேலையில போடச் சொல்லணுமா....?"

காத்துக் கருப்பன்களும், கரும்பட்டையான் பெண்களும், கைவிரல்களைக் கடித்தபடியே யோசித்தார்கள்... எம்மாடி வயல் வேல பாக்கதைவிட தூக்குப் போட்டுச் சாகலாம். பீடி சுத்துனாதான் கையில ரெண்டு காசு புரளுது... வீட்லயும் மதிக்காக... வயலுக்கு போனால் வரப்பு மாதிரி மிதிப்பாவ... இந்த அம்மன்கொடை முடியுறது வரைக்குந்தான் செம்பட்டையான் பொண்ணுவளத் தடுப்பான்... அப்புறம் ஆறுனசோறு பழைய சோறு மாதிரிதான்...

செம்பட்டையான் பெண்களும், இதர பெண்களைப் போல், சும்மா ஒரு பேச்சுக்காக அப்படிப் பேசியிருக்கணும் என்று அனுமானித்து, இலை வாங்க நுழைந்தபோது, ஏசெண்டு அதட்டினான்.

"நீங்களெல்லாம் எதுக்காவ சேல கட்டணும்... நல்ல மாட்டுக்கு ஒரு அடி... நல்ல பொண்ணுக்கு ஒரு சொல்லு... மானம் மரியாதி வேண்டாம்.... எந்த செம்பட்டையாளும் இன்னும், இங்கே நிக்காள்னா அவளுக்கு மானம் ரெண்டாம் பட்சமுன்னு அர்த்தம். காசுன்னு வந்துட்டா என்ன வேணுமுன்னாலும் செய்வாளுவ போலுக்கு..."

ரோசாப்பூ, வாடாப்பூவையே பார்த்தபடி செம்பட்டையான் பெண்கள் கண்ணீர் சிந்தினார்கள். கரும்பட்டை வாடாப்பூ, பதிலுக்கு கண்ணீர் சிந்தியபடியே அவளோடு நின்றாள்... பிறகு அந்தப் பெண்களோடு வெளியே வந்தாள். இந்தப் பெண்கள் அவளை உள்ளே தள்ளிவிட்டாலும் அவள் அவர்களுடனேயே வெளியே வந்தாள்... "ஒண்ணாச் சிரிச்சோமே, அதுபோல் ஒண்ணாவே அழுவோம்..." என்று சொன்னபடியே வெளியேறினர்.

செம்பட்டைப் பெண்கள், வாடாப்பூவோடு, கடைக்கு வெளியே வந்து, வீதியில் நின்றார்கள்... நடந்ததை நம்ப முடியாமல், மேற்கொண்டும் நடக்க முடியாமல் ஸ்தம்பித்து நின்றார்கள்... அப்போது, ரஞ்சிதம் எதிர்ப்பட்டாள்... அவளைப் பார்த்ததும், இவள்களில் ஒருத்தி சத்தம் போடாமலே அழுதாள்... பிறகு ரஞ்சிதத்தின் கைகளைப் பிடித்துக் கொண்டு ஒப்பித்தாள்.

"அன்னிக்கு ஒன்னை அடுத்த சாதிப் பொண்ணுன்னு பீடிப் பய அவமானமா திட்டும்போது சும்மா இருந்தோமே, அதுக்கு இப்போ

நல்லா அனுபவிக்கோம்... ரஞ்சிதம். கரும்பட்டையான் ஆம்புளயும், செம்பட்டையான் ஆம்புளையும் போட்டி போட்டால் காத்துக் கருப்பனுக்கு என்ன... வந்துட்டு... நாங்க இப்போ பீடி சுத்தப் படாதாம்... அஞ்சாறு வருஷமா செய்யுற வேலையை எப்பிடி நிறுத்திட்டான் பாரு..."

"ரஞ்சிதம் நீயாவது பூவு வித்துப் பிழைக்கே... நாங்க என்ன பண்ணுவோம்...? பீடிய பிடிச்ச கையால மம்பெட்டிய பிடிக்க முடியாது... இலைய சுருட்டின கையால புல்லு வெட்ட முடியாது... இதவிட அந்த கரிமுடிவான் எங்கள ஒரே வெட்டா வெட்டியிருக்கலாம்..."

ரஞ்சிதம், அந்தப் பெண்களை இரண்டு பக்கமும் கை நீட்டி இரு முனைகளிலும் நின்றவர்களின் கரங்களைப் பற்றியபடியே சாதாரணமாகப் பேசினாள்.

"மனுஷனையும், மனுஷியையும் பிரிச்சுப் பார்த்தால், அப்புறம் கையி காலுன்னும் பிரிக்க வேண்டியது வரும்... அன்னிக்கு என்னை சாதியச் சொல்லி விரட்டுனான்.... இன்னைக்கு ஒங்கள குடும்பத்த சொல்லி விரட்டுறான்... நாளைக்கு கரும்பட்டையான் பொண்ணுவள விரட்டுவான்... அப்புறம் காத்துக் கருப்பன் குடும்பத்துல முதல் சொக்காரன சேர்த்துட்டு, ரெண்டாவது சொக்காரன விரட்டுவான். அப்புறம் முதல் சொக்காரனுவனுள்ல அண்ணன் தம்பின்னு ஏத்துக்கிட்டு சித்தப்பா, பெரியப்பா பிள்ளைகளை விரட்டுவான். பிறகு தன்னைத்தானே மட்டும் வச்சுக்குவான்... இப்படிப் பட்டவனுவள முதலில் விரட்டுனாத்தான் நம்மள மாதிரி தொழிலாளிங்க ஒன்றாய் சேரமுடியும்."

"இப்போ வேல இல்லாம வீதியில நிக்கோமே... ரஞ்சிதம்."

"கவலைப்படாதிய... குட்டாம்பட்டில கண்ணாடிக்காரன்னு ஒருத்தர் ஏற்பாட்டுல பீடி சுற்றும் கூட்டுறவு சங்கம் வந்திருக்கு... அதுல பீடி சுத்தி பிழைக்கலாம்... இப்போவாவது நமக்கு சங்கம் தேவைன்னு தோணுதா..."

"அதுல என்ன சந்தேகம்... இவன விடப்படாது..."

"கண்ணாடிக்காரர் கிட்டே சொல்லுவோம்... அவர் லேபர் கோர்ட்டுல ஏற்பாடு செய்வார்... பேரேடு புத்தகத்த பத்திரமா வையுங்க... சரி நாம இப்பவே குட்டாம்பட்டி போய் கூட்டுறவு சங்கத்துல பதிவு செய்யலாம்.. கோர்ட்ல இல்லன்னா... அரசாங்கத்துல... புகார் கொடுக்கது பத்தி முடிவெடுப்போம். இவனை நீங்க விட்டாலும், நான் விடமாட்டேன்..."

ஏசெண்டு பால்பாண்டி, அந்தப் பெண்களின் பின்பக்கமாக ஓடிவந்து, முன்பக்கமாக நின்று கத்தினான்.

"என்னடி சொன்ன ரஞ்சிதம்.. என்னை நீ விடமாட்டியா.. இப்பவே ஒன் சேலயப் பிடிச்சு இழுக்கேன்... ஒன் கள்ளப் புருஷன்ல எந்தப் பய வந்து காப்பாத்துறான்னு பாக்கலாம்..."

ரஞ்சிதம் எந்தவித உணர்வையும் காட்டாமல், அப்படியே நின்றாள். அதுமட்டுமில்லாமல், பீடி ஏசெண்டை நேருக்கு நேராய்ப் பார்த்தாள். அவன், ஏதோ தன்னிடம் குசலம் விசாரிக்கப் போவது போலவும், அதற்குப் பதிலளிக்க வேண்டியது தனது கடமை என்பது போலவும் சினமடையாமலே அவனைப் பார்த்தாள். "அய்யோ சாமி நான் அப்படி ஒன்னும் பேசல" என்று ரஞ்சிதம் சல்ஜாப்பு சொல்வாள் என்று எதிர்பார்த்த ஏசெண்டு சிறிது அதிர்ச்சியுற்றான். ஆனாலும் செம்பட்டையான் பெண்களைப் பயமுறுத்துவதற்காவது ரஞ்சிதத்தை ஏதாவது செய்ய வேண்டும். ஒப்புக்காவது, அவள் தோளில் கிடக்கும் முந்தானையைக் கீழே இழுத்துப் போடவேண்டும்... செறுக்கி மவள்...

ஏசெண்டு, ரஞ்சிதத்தை, அடிமேல் அடிவைத்து நெருங்கினான். என்ன செய்யப்போகிறோம் என்பது தெரியாமலே-அதேசமயம், ஏதாவது செய்யவேண்டும் என்ற வீறாப்புடன் நெருங்கினான். இதற்குள் செம்பட்டையான் பெண்கள், ரஞ்சிதத்தைச் சுற்றி வியூகம் போட்டார்கள். அந்த வியூகத்திற்கு முன்னால் கரும்பட்டையான் வாடாப்பூ, தன்னைத்தானே முன்னால் நிறுத்திக் கொண்டு, ஏசெண்டைப் பார்த்துச் சவாலிட்டாள்.

"ஏய்.... பால்பாண்டி... நீ நெசமாவே... மனுஷன்னா... ரஞ்சிதத்த தொடு பாக்கலாம்..."

“என்னடா நெனச்சே.... பண்ணிப் பயலே...”

“ஒருத்தி இரண்டாவது கணையைத் தொடுத்தாள்... இதையடுத்து எல்லாப் பெண்களும் முந்தியடித்து பேசினார்கள்.

“ஒரு பொம்புளய, அதுவும் ஒத்த வீட்டு பொண்ண, அடிக்கவாறியே.... நீயுல்லாம் ஆம்புளையாடா...”

“பீடிக் கம்பெனில நீ பெரிய வேலைக்காரன்... நாங்க சின்ன வேலைக்காரிவ... எங்கள வராதன்னு நீ எப்டிடா சொல்லலாம்...”

“ஊருன்னா ஆயிரம் நடக்கும்... ஐயாயிரம் இருக்கும்... கரும் பட்டையான் குடும்பத்துல பொண்ணு எடுக்கணுமுன்னா... முறப்படி கேட்கறத விட்டுப்புட்டு, இப்டியாடா ஆடுறது...? ஆம்புளத் திமுர்ல அலையுறவனுவ... சண்டைக்கு நாங்க பொட்டப் பிள்ளியல என்னல செய்வோம்.”

“அம்மன் கொடைக்கும் பீடி சுத்தறதுக்கும் என்னல சம்பந்தம்... எரும மாடே...”

“ஏமுல... பித்துப் பிடிச்சு நிக்கே... ரஞ்சிதத்த தொடுல பாக்கலாம்...”

“பெண்கள கொடுமப் படுத்தினா ஆறு வருஷம் செயிலுக்கு போகணுமுன்னு தெரியுமாடா...”

“பீடி சுத்துறத ஒன்னால தற்செயலாய் நிறுத்தலாம்... நிரந்தரமா முடியாதுன்னு கண்ணாடிக்காரரை வச்சு ஒனக்கு சொல்லிக் கொடுக்கோம் பார்...”

“இந்த ரஞ்சிதம் முகத்த ஏறிட்டு பாருல... அனாதையா, அம்மாவ.... இழந்துட்டு இருக்க இவளயால சேலய உறிவே....”

“ஏழுழா அவன்கிட்ட பேசிக்கிட்டு... சாணியக் கரைச்சு அவன் தலையில் ஊத்துங்க. அந்த சாணிய எடுழா....”

ஒருத்தி ஆவேசப்பட்டு சற்றுத் தொலைவில் கிடந்த எருமைமாட்டுச் சாணியை எடுத்தாள்.... இன்னொருத்தி, அவளைத் தடுத்து, அவள் கையை அங்குமிங்கும் ஆட்டி, சாணத்தைக் கீழே

தட்டிவிட்டாள்.... இதற்குள் அக்கம் பக்கத்தில் போட்டி கொடைகளைப் பற்றிக் கூடிக் கூடிப் பேசி நின்றவர்கள், அங்கே ஒடி வந்தார்கள்... அந்தப் பெண்களைச் சத்தம் போட வந்த எல்லோரும், அவர்களின் ஆவேசத்தைக் கண்டு சற்று பயந்து, அது தணிவது வரைக்கும் காத்திருப்பது போல், அவர்களையே பார்த்தார்கள்... ஏசெண்டு, வெலவெலத்துப் போனான்... ஒருத்திக்குப் பதில் சொல்லப்போனால், இன்னொருத்தி கேள்வி கேட்டாள்.... அவன், அந்தப் பக்கம் நின்றவர்களில் பெரும்பான்மையினரான சொக்காரர்களைப் பார்த்து இப்போது முறையிட்டான்.

"இவளுவ பேசுற பேச்சப் பாத்தியளா... பொம்புளன்னு பாக்கேன்..."

"நாங்களும் ஒங்க ஆட்கள் மொவத்துக்காவ ஒன்ன விட்டுட்டுப் போறோமுல.... சாக்கிரத... அடுத்த வாரம் நீயே ஒன்கையால எங்களுக்கு பீடி இலைய கொடுக்கியா.... இல்லியான்னு பாரு... பொண்ண மானபங்கப் படுத்துனால்.... தூக்குத் தண்டனையாம்... அடிச்சா ஆயுள் தண்டனையாம்... பீடி இலைய மட்டும் பார்க்காம, பேப்பரையும் படிச்சுப் பாரு. வா... ரஞ்சிதம்...."

"இவன்... எங்க.... பீடி இலைய பாக்கான்..? அதைச் சுத்துற விரலத்தான பாக்கான்...."

எல்லாப் பெண்களும், ரஞ்சிதத்தை முதுகைப் பிடித்தும், கையைப் பிடித்தும் இழுத்தும் தள்ளிக் கொண்டு போனார்கள்... அவள் என்னமோ இந்த ஏசெண்டை திட்டியதுபோலவும், இவள்கள் என்னவோ சமரசம் செய்து வைப்பது போலவும்; இவள்கள் நடக்க, நடக்க, பீடி ஏசெண்ட்டின் பக்கம் நின்றவர்களின் பேச்சு கேட்டது... மூளை இருக்கா... மண்டையில மசாலா இருக்கா....? இதுக்குப் பேருதான் திமிரு... கொளுப்பு.... அந்தக் கூட்டம் இவள்களைச் சொன்னதா அல்லது அவனைச் சொன்னதா என்று அந்த களேபரச் சத்தத்தில் சரியாகப் புரியவில்லை...

ரஞ்சிதம் புல்லரித்துப் போனாள்... சென்னையில், அண்ணி செண்பகம், 'வேணுமுன்னா அவன்கிட்ட போய் இருந்துக்க... நீ

பார்க்காம அவன் எப்படிப் பார்ப்பான்' என்று ஆண்பார்வைக்கே புது இலக்கணம் வகுத்தபோது, அவள் அழவில்லை.... வயதான, அம்மா, மகளுக்கு கல்யாணமாகாதோ என்ற ஏக்கத்தில் இறந்த போதுகூட, அவள் அந்த துக்கத்தை, ஒரு 'ஜீவனாவது கவலையற்ற இடத்துக்குப் போயிட்டே' என்று ஆறுதலில் மறந்தாள்... இந்த பீடி ஏசெண்ட்டும், அப்போது பேசும்போதும், இப்போது பேசும்போதும் அவளுக்கு அழுகை வந்தது..... ஆனால் அழவில்லை.... ஆனால் இப்போதோ, அந்தப் பெண்கள் தனக்காக ஒருமுகமாய் நிற்பதை நினைத்துப் பார்க்கும்போதே அழுதுவிட்டாள். இரண்டு பெண்களின் தோள்களில் கைகளை போட்டபடியே, தலையை அங்குமிங்குமாய் ஆட்டி ஆட்டி அழுதாள்... கண்ணில் பெருக்கெடுத்த நீரும், முகத்தில் துளிர்த்த வேர்வையும் வாயென்ற கடலில் வடித்து கொண்டிருந்தன.... அந்தப் பெண்கள் துடித்துப் போனார்கள்.

"அழாதே ரஞ்சிதம்... அழாத.... அவன் அறிவில்லா பயல்... நாங்களும்தான் அவனுக்கு நல்லா கொடுத்தமா.... அவன் தலையில் சாணிய ஒரு துண்டாவது எடுத்துப் போட்டிருக்கணும்... அது செய்யாதது தப்புதான். அழாத ரஞ்சிதம்..."

ரஞ்சிதம் கண்ணீரைத் துடைத்த ஒருத்தியின் கரங்களைத் தன் கரங்களுடன் இணைத்துக் கொண்டே விம்மலுக்கிடையே பேசினாள்.

"நான் அவர் திட்டுனார்னு..."

"'அவரு பெரிய இவரு... எரப்பாளிப் பயல மரியாதியா பேசாத... சரி ஏதோ பேச வந்தே... சொல்லு ரஞ்சிதம்..."

"நான் அவனுக்காவ அழல. ஒங்க அன்ப நெனச்சால் அழுகு வருது. ஒங்க அன்புக்கு நான் தகுதியா இருக்க மாட்டேனோன்னு பயம் வருது..."

"சரி... சரி... சொம்மா கொஞ்ச நேரம் எதையும் யோசிக்காத சரியாயிடும்... நீ இப்போ எதுவும் பேசப்படாது... ஆமா... அந்தப் பக்கம் தற்செயலா வந்தியா? இல்ல இப்படி நடக்குமுன்னு எதிர்பார்த்து வந்தியா?"

"எழா... தொட்டிலயும் ஆட்டி, பிள்ளையுமா கிள்ளுற..."

"அவளும் வீட்ல நடக்க கல்யாணப் பேச்சு நம்பி... தொட்டுலயும் வச்சுட்டா... தாலாட்டும் தெரிஞ்சுக்கிட்டா... கிள்ளுறதுக்கு மாப்பிள்ளதான் வர்ல... பிள்ளைக்கு எங்கே போறது."

"எந்த சமயத்துல தமாஷ் செய்யணுமுன்னு தெரியாண்டாம்...? ஒரு வாரத்துக்கு பீடி சுத்துறனால... எழுபத்தைஞ்சு ரூபாய் வரும்... இப்போ அதவிட்டுவிட்டு அனாதையா நிக்கோம்... எவளுக்காவது உடம்புல சூடு சொரணை இருக்குதா...?"

சிரித்த பெண்கள் அழுகையை அடக்குவதுபோல் சிரிப்பை அடக்கினார்கள். ஒருத்தியை ஒருத்தி ஆறுதலாகப் பிடித்துக் கொண்டார்கள்... கூட்டத்திற்குள், இருந்தாலும், தனிமைப் பய உணர்வு காசில்லாமல் குடும்பத்தில் இருக்கப் போகிறோமே என்ற அச்சம்...

எல்லோரும் முருகன் கோவிலுக்கு வந்தார்கள்... சோர்ந்து போய் .கார்ந்தார்கள். ரஞ்சிதம் அவர்கள் முன்னால் அவர்களுக்கு முகம் 'டுத்து அமர்ந்தாள்... இப்போது பழைய நிலைக்கு வந்து விட்டாள்... ச ,தற்கே வாழ்க்கை என்பது மாதிரியான சிரிப்பு... கூடி வாழ்வதே சே பெறும் என்பது போன்ற பார்வை....

ரகளை அகல வைத்துப் பேசினாள்.

" எல்லாரும் குட்டாம்பட்டிக்கு மொத்தமாகவும் போவோம்... இல்லன் ர நான், ராசகிளி, வாடாப்பூ வேணுமுன்னால் இன்னும் ரெண்டு ,ரு... அஞ்சாறு பேராய் போவோம். குட்டாம்பட்டில கண்ணா. ாரர் நம்மள பாத்ததுமே இலை தூள் தருவாரு.... ன்னத்து ச்ச கைய விடுங்க. குட்டாம்பட்டில பீடித் தொழிலாளி ங்கத்தை க்க அந்த கண்ணாடிக்காரர் படாதபாடு பட்டாரு... டிபடியும் வி பிடியாய் சங்கம் வச்சு அதையே கூட்டுறவு சங்கமா த்திக்கிட்டா அதுக்கு முன்னால அவரை அடிச்சாங்க. ஊர்ல து தள்ளி ாங்க... அவரு மசியல... அவரு நமக்கும் சேர்த்து டப்பட்டதால அதிகமா கஷ்டப்பட வேண்டியதில்ல... சரி.... ,வே போவோ

"இன்னும் வயித்துக்குள்ள எதுவும் போகல... காபியக்கூட சரியா குடிக்கவிடாம அந்த நாசமாப்போற நாட்டு வக்கீலு வந்து விரட்டிட்டான்... வீட்ல போயி கொஞ்சம் கஞ்சி குடிச்சுட்டு வாறேன்.... எங்க வரணும் ரஞ்சிதம்..."

"இங்கேயே வாங்க..."

"முன்னப்பின்ன யோசிக்காம ஏமுழா எழுந்திருக்கிய.... பீடிப்பய, ரஞ்சிதத்த இங்க வந்து மிரட்டப் போறான்..."

ரஞ்சிதம், பொதுப்படையாய் பேசினாள்.

"நீங்க போங்க... ஒரு பொண்ண.... அவமானப் படுத்துனால ஆயுள் தண்டனைன்னு சொல்லிட்டிங்கல்லா.... அந்த ஆளுக்கு இது பொய்யுன்னு தெரியாது. ஒரு பொண்ண என்னபாடு படுத்திட்டும் ஜாமீன்ல வந்துட... சட்டம் இடம் கொடுக்கது அவனுக்குத் தெரியாது... அவன மாதிரி ஆட்கள் முட்டாளா இருக்கதும், ஒரு வகையில நல்லதுக்குத்தான். சரி சீக்கிரமா போயிட்டு வாங்க...."

அனைத்துப் பெண்களும் ரஞ்சிதத்தை வியப்போடு பார்த்துவிட்டு நடந்தபோது, ரஞ்சிதம் வாடாப்பூவையே வியந்தபடி பார்த்தாள்... அவளுக்கு இப்போது முதுகு காட்டி நடக்கும் இந்த வாடாப்பூ கரும்பட்டையான் குடும்ப முழு உணர்வையும் மீறி வந்தவள்... அவள் பெரிய மனுஷி... பாதிக்கப்படும் வாய்ப்பு வராதபோதே.... பாதிக்கப்பட்டு விட்டவர்களோடு சேர்ந்த அவள் முன்னால் போய் நின்று கும்பிட வேண்டும்....முருகனைக் கும்புடுவதும் கும்பிடாததும் அப்புறம்...

ரஞ்சிதம், முருகன் சிலையையே உற்றுப் பார்த்தாள்... அந்த கோவணாண்டியை பார்த்துப் பார்த்துப் பேசிக் கொண்டாள்... முருகா... ஒன்னைப் பார்க்கப் பார்க்க என் மனம் நெகிழுதுடா... ஒன்ன இந்தக் கோலத்துல பார்க்கும் போதெல்லாம் நீ சிவன் மகன் மாதிரி எனக்குத் தெரியல.... சிவகாசில தீப்பெட்டித் தொழிலுல ஈடுபட்டிருக்கிற சின்னப் பையன் மாதிரி தெரியுதுடா... இந்த ஏசெண்ட் கிட்ட பீடி ஒட்டுற பிஞ்சுகள் மாதிரி தோணுது.... நீ கைலாசத்த விட்டது மாதிரி.... நீ படிக்க வசதியில்லாம பள்ளிக்கூடத்த விட்டுட்டு மரம் வெட்டுற,

கிணறு தோண்டுற விவசாய கூலிப் பையன்கள கண்ணு முன்னால பாக்கது மாதிரி இருக்குடா... மெக்கானிக்குகளிடம் திட்டும் உதையும் வாங்கிட்டு, வெறுமையாய் பாக்குற பிஞ்சுப் பயல்க... ஞாபகம் வருதுடா...

ரஞ்சிதம், அங்கே வைத்துவிட்டுப் போயிருந்த பூத்தட்டைப் பார்த்தாள்... நாளை முதல் இது பீடித்தட்டாகப் போகிறது.... அவள் எழுந்தாள்... கையில் இருந்த உதிரிப் பூக்களை முருகன் பாதத்தில் போட்டாள்... கதம்பப் பூவை மாலை போல் மடித்து, முருகன் சிலையின் கழுத்தில் போட்டாள்... அவள் தனக்கென்று ஒரு பூத் துண்டை எடுக்கப் போனாள்.... நீட்டிய கரத்தைச் சுருட்டிக் கொண்டாள்... பெண்களை நகைபோட்டு நகை போட்டே நகைப்புக்கு இடமாக்கிட்டாங்க... பூ வைத்துப் பூ வைத்தே பூவாய் வாட வச்சுட்டாங்க....

ரஞ்சிதம் கோவிலுக்கு வெளியே வந்தாள்... மேற்குப் பக்கமாக, ரயில்வே பாலத்தைப் பார்த்தவள், கிழக்குப் பக்கம் உறுமல் சத்தம் கேட்டு, திரும்பினாள்... திருமலை, மோட்டார் பைக்கில் கம்பீரமாக வந்து கொண்டிருந்தான்.

ரஞ்சிதத்திற்கு, கோலவடிவை பருத்திக் காட்டில் பார்த்த கோலம் நினைவுக்கு வந்தது.... இது வெறும் காதல் பிரச்சினை மட்டுமல்ல... ஊர்ப் பிரச்சினை... துளசிங்கத்திற்கு, ஒருவேளை இந்தக் கோலவடிவு எத்தனையோ பேர்களில் ஒருத்தியோ என்னவோ... அவள் மேல் துளசிங்கத்திற்கு, நிசமாவே காதல் இருந்திருந்தால்.... நேற்று என்கிட்டே அப்படி வம்பா பேசியிருக்கமாட்டான்... தமாஷ்தான்... ஆனால் அந்த தமாஷ், நிசமானால் சந்தோஷப்பட்டிருப்பான்... அப்படிப் பட்டவனிடம் இருந்து கோலவடிவைக் காப்பாற்றியாகணும்.... ஒருவேளை... அவளை, அவன் நிசமாவே காதலிச்சால்.... காதலிக் கட்டும்... கல்யாணத்துக்குப் பிறகு காதலிக்கட்டும்... விஷயத்தை, இந்த திருமலையிடம் எப்படிச் சொல்வது.... எப்படியாவது சொல்லியாகணும்... முருகனுக்கு இவரும் பக்தர்... முருகன் கோவில் முன்னால்

"ஆவேசப்படமாட்டேன்... அரிவாளை எடுக்கமாட்டேன்"னு சத்தியம் வாங்கிட்டு, பக்குவமாச் சொல்லணும்... ஒரு பொண்ணையும் காப்பாத்தியாகணும்... ஊரையும் காப்பாத்தியாகணும்...

ரஞ்சிதம் திருமலையைப் பார்த்து போலீஸ்காரன் கையாட்டுவது போல், வலது கையை நிமிர்த்தி, உள்ளங்கையை வெறுங்கை ஆக்கினாள்.

# 17

காளியம்மனுக்கு 'கால் நாட்டு பூஜை' - அதாவது பெரிய கோயில்களில் கொடியேற்றுவது மாதிரியான முதல் கட்ட விழா... பழனிச்சாமி, ராமசுப்பு, குள்ளக் கத்தரிக்காய், நாட்டு வக்கீல் போன்ற முக்கியப் பிரமுகர்கள் அம்மனையே பார்த்தபடி நிற்க, கால் நடுவதற்குத் தோண்டப்பட்ட குழிகளில் இருந்து சிலர் மண்ணை வெளியில் எடுத்துப் போட்டார்கள். இரும்புக் கம்பியால் குத்தக் குத்த, மண், மண்வெட்டியால் அகற்றப்பட்து. இங்கே என்ன நடக்கிறது என்பதை அங்கே சுடலைமாடன்வாசிகள் முகங்களைச் சுண்டிப் சுண்டிப் பார்த்தார்கள்... "சீக்கிரம் சீக்கிரம்" என்றார் குள்ளக் கத்தரிக்காய்.

மாடக்கண்ணு வெட்டிய குழியில், ராமசுப்பு ஒரு பூவரசு மரக்கம்பை நட்டார். சாமியாடி தாத்தா, ஒரு கொப்பு அரச இலைகளிலும் அதன் காம்புகளிலும் சந்தனமிட்டு, குங்குமம் வைத்தார். பின்னர், அதைப் பழனிச்சாமியிடம் நீட்டினார். பழனிச்சாமி, அதைப் பயபக்தியுடன் வாங்கி, அம்மனிடம் அந்தப் பணிவோடு காட்டிவிட்டுப் பூவரசுக் கம்பில் எக்கி நின்று, அந்த அரச இலைகளை கட்டப் போனார்.... பிறகு, "கம்புக்கும் சந்தனம் வைங்கடா... குங்குமம்

பூசுங்கடா" என்றார். கம்பு, மஞ்சள் குங்குமமாய் மங்களமானபோது, பழனிச்சாமி, அரச இலைகளை அதில் கட்டினார். உடனே மேளச்சத்தம் பலமாய் ஒலித்தது.... நாதஸ்வரம் உச்சிக் குரலுக்குப் போனது.... சாமியாடி தாத்தா, வெட்டு வந்தவர் போல் தரையில் அங்குமிங்கும் புரண்டு எழுந்தார்.... எழுந்தவர் அப்படியே ஆடாமல் நின்றார். இப்படி கால்நடும்போது மேளம் கெட்டியாக ஒலிக்க வேண்டும்... ஒலித்தது.... ஆனால் அப்படி ஒலித்தது அருகே நின்ற 'சுடரொளிவு' மேளமல்ல.... சுடலைமாடன் கோவிலில் உள்ள 'கணேச மேளம்' அங்கேயும் கால் நடப்பட்டது.... பழனிச்சாமியின் தம்பி அருணாசலம் கத்தினார்...

"யோவ் சாமியாடி பெரிய்யா.... இந்த மேளத்துக்கும் அந்த மேளத்துக்கும் வித்தியாசம் தெரியாட்டா நீரு என்னய்யா சாமியாடி....? ஏல சுடரொளிவு, கால் நட்டாச்சுல்ல.... ஏமுல சும்மா இருக்க.... தட்டேமுல....."

"எவ்வளவு ரூபாய் தரப் போறாகளோ.... ஈரங்கிப் பய மவனுவ" என்று யோசித்துக் கொண்டிருந்து சுடரொளிவு, பீப்பி ஊத, அவன் தம்பி, தலை தவிடு பொடியாக்கப் போவது போல் அடித்தான்.... மேளம் அடிப்பதற்கு முன்பே ஊத வேண்டிய 'ஊமைக் குழலை' சுடரொளியின் மச்சான் இப்போது தான் சாவகாசமாகத் துடைத்தான்.... சாமியாடி தாத்தா, திடீரென்று நின்ற இடத்தில் நின்றபடியே குதித்தார்... பிறகு மேளச் சத்தத்திற்கு ஏற்ப 'டங்டங்' என்று ஆடினார்... அந்த ஆலமரத்திற்கு அப்பால், அதனால் மறைபட முடியாதபடி உள்ள அம்மன் கட்டிடத்திற்கும் கால்நாட்டப்பட்ட இடத்திற்கும் இடையே, தாத்தா ஆடினார்... தள்ளாமையில் பாதியாட்டம்... தானாக பாதியாட்டம்.

அம்மன் கோவில், ஒரு சின்ன அரண்மனை மாதிரி இருந்தது... கல் கட்டிடம் பன்னிரண்டு படிகளேறினால் அம்மனின் முகப்பு அறைக்குப் போகலாம்... அம்மன் அதற்கும் உள்ளே, மூன்றடி உயரப் பீடத்தில் இருந்தாள்... மண்சிலைதான். ஆனால் வெண்கலத்தை விடக் கெட்டியான சிலை. சிலைக்கு கீழே அறுகோணத் தகடு.... சட்டமிட்டுக் கண்ணாடிக்குள் வைக்கப்பட்டது... அம்மனுக்கு ஆறு கைகள்... ஒன்றில்

அரிவாள்... இன்னொன்றில் திரிசூலம், மற்றொன்றில் சுதர்சன சக்கரம்... நான்காவது கையில் பாராங்குசம்... இதர இரண்டு கரங்களும் பின்பக்கமாய் இருப்பதால் அவற்றில் என்ன உள்ளன என்பது தெரியவில்லை... இந்த ஆயுதங்கள் அனைத்தும் அசல் மண்ணாலானவைதான்.... ஆனால், அம்மனை கொத்திதிரி, சூலத்தி, கோணத்தி பயங்கரியாகக் காட்டுபவை.... அம்மன் காலடியில் அசல் வெட்டரிவாள்... இரும்புத் திரிசூலம்... ஒரு மூலையில் கம்பீரம் காட்டியது... ஆகாயத்தில் இருந்து தொங்குவதுபோல் இரும்புக் கம்பியில் தொங்கிய இரண்டு விளக்குகள் எரி நட்சத்திரங்களாய் ஜொலித்தன.

சாமியாடி தாத்தா இன்னும் ஆடுவதை நிறுத்தவில்லை.... திருமலை அவர் முன்னால் போய் நின்று ஆடினான்.

"நம்ம கால்தூசிக்குப் பொறாதவன்... இந்த செம்பட்டையான் பயலுவ... துள்ளோ துள்ளுன்னு துள்ளுதான்... அவங்க அம்மன் கொடைய தடுக்க துப்புல்ல... காளியாத்தாவுக்கு ஆட்டமாம் பெரிய ஆட்டம்..."

சாமியாடி ஆடியபடியே உத்திரவு சொன்னார்...

"கவலைப்படாதே.... என் மவனே.... அவன் கொடை நடக்காது.... என் மவன் சுடலைகிட்ட சொல்லிட்டேன்... தாய்க்குப் பின்தான் தனயன்..."

"அதோ பாரு காளி... அங்கே நாலுபேரு எப்படி ஆடுறாங்கன்னு... அரச இலய எவ்வளவு உயரமா கட்டியிருக்காங்கன்னு... டேய் மாயாண்டி... நம்ம இலயயும் அவங்க கட்டுன உயரத்திற்கு கட்டுடா..."

"அச்சப்படாதடா மகனே... அவனுவ பரிதவிச்சு நிக்கப் போறானுவ பாரு... அவனுவள பாதாள சிறையில அடைக்கப் போறேன் பாரு..."

"சரி... சரி... நீரு அடைச்சது போதும்... இப்போ நிறைய வேல இருக்கு... ஆடுறத நிறுத்தும்... நீரு இப்போ ஆடுறதோட சரி கொடையில ஒம்ம பேரன்தான் ஆடணும்..."

சாமியாடி, கற்பூரத்தட்டில் உள்ள திருநீறையும், குங்குமத்தையும் எல்லோருக்கும் வெறுப்போடு இட்டுக் கொண்டிருந்தார்.... நெற்றியென்று திருநீறை உதட்டில் தேய்த்தார்.. நெற்றிப் பொட்டென்று குங்குமத்தைக் கண்ணில் தேய்த்தார்... ஒரே கத்தல். பீடி ஏசெண்ட், பயபக்தியுடன் விபூதி வாங்கினான்...

பழனிச்சாமி, அரச இலைகளை அவிழ்த்து மேலே கட்டப்போன மாயாண்டியைக் கையாட்டி நிறுத்தினார்... பிறகு, கோவிலைச் சுற்றி நடைபெறும் வேலைகளில் கண்களைச் சுழல வைத்துப் பார்த்தார்.... அம்மன் சிலைக்கு, 'வர்ணம்' தீட்டுவதற்காக ஒரு குயவர் கோயிலுக்குள் போய் ஒரு கும்புடு போட்டுவிட்டு, திரைச்சீலையை இழுத்துப் போட்டார். கோவிலுக்கு எதிரே ஆலமரத்தைத் தாண்டி, ஒரு செவ்வகக் கட்டிடம்... முப்பதடி உயர தகரக் கதவு போடப்பட்ட படாதி கட்டிடம்... அங்கிருந்து சப்பரம்... இழுத்து வெளியே கொண்டு வரப்பட்டது... நான்கு பக்கமும் வண்டிப் பைதாக்கள் அவற்றுக்கு மேல் சதுரமான தேக்குப் பரப்பு... அதிலே ஒரு மூன்றடி உயரப்பீடம்.... பீடத்தின் மேல் அம்மனின் வெண்கல அவதாரம்... அதற்கு மேலே விதவிதமான புராணப் பொம்மைகள்.. சப்பரத்தின் முன்பக்கம் இரண்டு மண்குதிரைகள்... அவற்றை நிசக் குதிரைகளாய் நம்ப வைப்பதுபோல் இருபுறமும் கட்டப்பட்டு முக்கோணம் போல் ஒன்று பட்ட குறுக்குச் சங்கிலி வடம்.. அதைப் பிடித்துத்தான் சப்பரத்தை இழுக்கவேண்டும்... இந்தச் சப்பர, சக்கரக் கம்புகளைத் தச்சர்களும் இரும்பு பட்டைகளைக் கொல்லர்களும் தட்டிக் கொண்டிருந்தார்கள்.

ஒருவர் இதற்குள் டிராலி மாதிரி ஒரு வண்டியைக் கொண்டு வந்தார். அதன்மேல் நெருக்கமாக நான்கு இரும்புக் குழாய்கள்... அவற்றில் கருமருந்தை இட்டு நிரப்பினார்... பிறகு ஒரு கயிற்றில் பிடித்த நெருப்பை ஒரு குழாயில் பற்றவைத்துவிட்டு ஓடினார்... அவர் ஓடுவதற்குள் பயங்கர சத்தம்... டப்டப்பு என்று சத்தம்... நாட்டு வக்கீல் நாராயணன் அங்கலாய்த்தார்.

"இது பழைய வேட்டு... பழைய சத்தம்... தொலவுல கேட்கிறவர் களுக்கு நம்ம கோவில் வேட்டா, அந்தப் பயலுவ கோயில் வேட்டான்னு தெரியாது... அங்க பாருங்க..."

எல்லோரும் பார்த்தார்கள்... சுடலைமாடன் கோவிலுக்கு மேல் வாணங்கள் ஆகாயச் சுடர்களாய்ப் பறந்தன... சத்தம் போட்டபடியே ஒளியிட்டன... ஒளியிட்டபடியே வளைந்தன... விதவிதமான நிறங்களில் கலர்கலரான வாணங்கள்... சுடலைக்கு பூ மாலை சொறிவதுபோல் நட்சத்திரப் பொறிகளாக கீழே விழுந்தன... ஒன்று விழும்போது, இன்னொன்று எழுந்து வானமே வாணமாகியது.

கரும்பட்டையான்கள் சோர்ந்து போனார்கள்... 'கால் நாட்டு' விசேஷத்தில் தோற்றாலும் கதாநாயக நாளில் கெலிச்சாகணும்... ஏதாவது பெரிசா செய்தாகணும் என்று அருணாசலம் நாட்டு வக்கீலைப் பார்த்துக் கேட்டார்.

"அம்மன் கொடையோட அவங்க வீடியோ படத்த ஏதோ செய்யப் போறதாய் சொன்னியே.... என்னடா அது?...."

"இப்போ சொல்லமாட்டேன்.... ஆனால் செய்வேன்..."

"சொல்லேமில பேய்ப்பயலே... இன்னும் மூணு நாள் தான் இருக்கு. அந்தத் தட்டிப்பயலுவ வாணவேடிக்கை காட்டி நம்மள சிறிசாக்கிட்டானுவ.... நாமும் பெரிசா செய்யணும் பாரு.... சொல்லு... இதுக்கு மேலயும் பவுசு செய்தா நீ எதையுமே செய்யாண்டாம்..."

"சொல்லுதேன்... ஆனால் இது வெளியில போயிட்டா வீணாயிடும்... நான் தென்காசில கொஞ்ச நாளு சினிமா ஆப்பரேட்டரா இருந்தனா..."

"ஆமா... அப்புறம்... ஏதோ திருடிட்டேன்னு துரத்திட்டாங்கல்லா?"

"நாக்குக்கு எலும்பு இல்லன்னு அதுக்காவ அது எப்படின்னாலும் புரளப்படாது..."

"சரி.... தப்புதான்... சொல்லுடா..."

"சொல்லுதேன்... சொல்லுதேன்... அந்தப் பயலுவ டி.வி. பெட்டில சின்னதா சினிமாப்படம் போடுதான்... நான் பதினாறு எம்.எம். அதுதான் பாவாடையை பிரிச்சி விரிச்சால் எவ்வளவு பெரிசா இருக்குமோ அவ்வளவு பெரிய திரையில சினிமா காட்டப்போறேன்... ஒண்ணுல்ல... ரெண்டு... படம்... ரொம்ப பெரிசா தெரியும்..."

"நல்ல யோசனைதான்... படம் பெரிசா தெரிஞ்சா இந்த முட்டாப் பய மவனுவ கூட்டம் சுடலைமாடன் சாமி ஆட்டத்த அந்த கோவிலுல இருந்தபடியே ஒரு கண்ணால பார்த்துக்கிட்டே மறுகண்ணால நம்ம படத்தையும் பார்த்துடப்படாது பாரு.... படம் ரொம்ப பெரிசுன்னா அங்க இருந்தே பாக்கலாம் பாரு..."

"நீயே ஊர்க்காரனுக்கு சொல்லிக் கொடுப்பே போலிருக்கே.."

பழனிச்சாமி எதுவும் பேசாமல், அவர்கள் பேசுவதைக் கேட்காதது மாதிரி கேட்டு ரசித்துக் கொண்டிருந்தார்... அந்தச் சமயத்தில், வெயிலை மறைப்பதுபோல் பீடித்தட்டை தலைக்கு மேல் பிடித்துக் கொண்டு வாடாப்பூ நடந்தாள்... அதைப் பார்த்த பீடி ஏசெண்டு, அவள் அப்பா மாயாண்டியை உசுப்பினார்.

"பாரும் மாமா... ஒங்களுக்காவ நான் செம்பட்டையான் பொண்ணுவள நிறுத்தினேன்... கையில காசு நடமாடாட்டால் சுடலை மாடனுக்கு மாலை எடுத்துப் போட முடியாது... ஒரு கோழி வெட்ட முடியாம அவஸ்தப்படட்டுமுன்னு. ஒம்ம மகள் என்னடான்னா, அந்த ரஞ்சிதம் பேச்சக் கேட்டு செம்பட்டையான் பொண்ணுவகூட சேந்துக்கிட்டு முருகன் கோவில் பக்கத்துல குட்டாம்பட்டி பீடிய சுத்துறாள்... எனக்கு ஏன் கெட்ட பேரு... இவளே செம்பட்டையான் பொம்புளைகளோட சேர்ந்ததால் நானும் பழையபடி செம்பட்டையான் பொண்ணுவள என் கடைக்குப் கூப்பிடப் போறேன்.... பாரும் ஒம்ம மகள் எப்படி தரை குலுங்க நடக்கான்னு... அன்னைக்கு என்னடான்னா... அப்படிப் பேசினாள்.... அதோ பாரும்.."

மாயாண்டி பார்த்தார். வேக வேகமாய் நடந்தார். வாடாப்பூவுக்கு பின்னால் போய் அவள் சடையைப் பிடித்து இழுத்தார்... மல்லாக்க தன் மார்பில் சாய்ந்தவளைத் தோளில் போட்டபடியே அவள் கையில் இருந்த பீடித்தட்டை இரண்டாக வளைத்து, சிதைத்துச் சின்னா பின்னப்படுத்தினார். பீடித் தூள்களை எடுத்து ஆகாயத்தை நோக்கி எறிந்தார். அந்தத் தூள்கள் தன் தலையிலேயே விழ, மகளை, தலையிலும் இடுப்பிலுமாகக் காலால் இடறினார்... இதற்குள் பழனிச்சாமி ஓடிவந்து மாயாண்டியின் முதுகில் பலமாக அடித்தார்...

"முட்டாப்பயல... அவள் நம்ம பொண்ணா இருக்கலாம்.. அதுக்காவ நடுத்தெருவுல அடிக்க நமக்கு உரிமை இல்ல... ஒனக்கும் இது ஆகாதுழா... நம்ம கரும்பட்டையான் குடும்பத்த தலை குனிய வைக்க நீ ஒருத்தியே போதும் போலுக்கே..."

மாயாண்டி, மகளை இழுத்துக் கொண்டே வீட்டைப் பார்த்து நடந்தார். "இனிமேல் நீ பீடி சுத்துனது போதும்.... வீட்லயே கிட" என்று சொன்னபடியே மாட்டை இழுப்பதுபோல் இழுத்துக் கொண்டு போனார்.... இதைப் பார்த்த ஏசெண்டு சிரித்தபோது, அத்தனை அடியிலும் இழுவையில் கத்தினாள் வாடாப்பூ.

"ஏல பொந்துப் பயலே.... கோள் சொல்லி.. லேசா சிரில. இல்லன்னா அப்புறம் பலமா அழப்போறே...."

மகளை இழுத்துப்போன மாயாண்டி, மீண்டும் அவளை அடித்தார்... அடித்தபடியே இழுத்துக் கொண்டு போனார்...

பீடி ஏசெண்டுக்கு அதற்குமேல் அங்கிருக்கப் பிடிக்கவில்லை. இந்த வாடாப்பூ இப்படிப் பேசுறதுக்கு அவள் அப்பாதான் அடிக்காரே தவிர, இந்த கரும்பட்டையான்கள் அவளைப் போய் அடிக்கல... அவள் இப்டி திட்டிட்டுப் போனாலும்... அவள அதட்டல... நம்ம சொல்லு விழலுக்கு இரச்ச நீர்... காட்ல பெய்த மழை... தூள் இல்லாத பீடி...

ஏசெண்டு வெறுப்போடு நடந்தான். சுடலைமாடன் கோயிலை ஓரங்கட்டிப் பார்த்தபடியே நடந்தான்... ஒருவேளை, அந்தக் கோயிலில் கூடி நிற்கும் செம்பட்டையான்கள் அவர்கள் பெண்களை கடையில் இருந்து விலக்கியதற்காக அடிக்க வருவார்களோ என்று பயந்தான்... அவர்களோ அவனைப் பார்த்தாலும் பார்க்காதது மாதிரி தங்களுக்குள்ளே சிரித்தார்கள்... அதுதான் அவனுக்குச் சங்கடமாக இருந்தது.

ஏசெண்டு புளியந்தோப்பு வழியாக நடந்தான்... ரஞ்சிதம் போட்டி பீடிக்கடையைக் கொண்டு வருவாள் போலுக்கு... அப்டி வந்துட்டால் காத்துக் கருப்பிகளை குடும்பத்துக்காரன் என்ற முறையில்கூட விரட்ட முடியாது... ஒவ்வொருத்தியும் ஒரு வாடாப்பூவாய் ஆயிடுவாளுவ...

"அடடே... அலங்காரி மயினியா... என்ன இந்தப் பக்கம்?"

"நீ வாரன்னுதான் போக்குக் காட்டி வாறேன்... நீ புதுச் சினேகத்துல பழைய சினேகிதத்த மறந்துட்டே... என்னாலதான் மறக்க முடியல..."

"நம்ம சினேகிதத்த மறந்தா... ஒங்களக் கூப்புடுவனா... சோளத் தோட்டம் பக்கமா போகலாம் மயினி... போயி ரொம்ப நாளாச்சு...."

"நீ ஒருத்தன் எதுக்குவே எங்க குடும்பத்து பொம்புள பிள்ளியள துரத்திட்டே..."

"ஏதோ புத்திகெட்ட தனமாப் பண்ணிட்டேன்..."

"என் பொழப்புல வேற மண்ணள்ளிப் போட்டுட்டே..."

"நீங்க பீடி சுத்திதான் என்கிட்ட காசு வாங்கணுமா... ஒங்களுக்கு இல்லாத பணம் எனக்கு இருந்தென்ன... இல்லாட்டா என்ன..."

"போவட்டும்... அம்மன் கொடைக்கு நாங்க வீடியோ... அவங்க என்னவாம்..."

"என்கிட்டே அதெல்லாம் கேட்கப்படாது..."

அலங்காரி, ஏசெண்டின் விரல்களைப் பிடித்து, சொடக்குப் போட்டாள். பெருவிரலை அழுத்தினாள்... ஏசெண்டு, அலங்காரியின் ஏசெண்டாக சுருண்டான்.

"பதினாறு எம்மம்மாம்.... பெரிய துணி கட்டுவாங்களாம்... நீங்க வெறும் வீடியோ... அவங்க பதினாறு எம்.எம். படுதா..."

"அப்படியா... பதினாறுக்கு மேலயும் ஏதாவது இல்லாமலா இருக்கும்? நல்ல சமயத்துல சொல்லிட்ட... ஆமாம் கொழுந்தா... ஒங்க குடும்பத்துக்காரன்களை ஊர்ல என்ன சொல்லுதாங்க தெரியுமா.... கோலவடிவுக்காக கரும்பட்டையான் கூட்டத்துல நாயி மாதிரி காத்துக் கிடக்கியளாம்..."

"அப்படித்தான் ஆயிப்போச்சு..."

"அப்படி ஆகப்படாது.. கரும்பட்டையான் கூட்டம் அம்மன் கொடை முடிஞ்சதும், கோலவடிவ மெட்ராஸ்ல கொடுக்கப் போறாங்க.... அப்படி கொடுத்துட்டா ஒங்க காத்துக் கருப்பன் குடும்பத்தை பொண்ணுக்கு வீங்கின்னு சொல்லப் போறனுவ... தேங்காய உருட்டிக்கிட்டு ஓடுன நாயின்னு ஆகிடாதிய..."

"நீங்க சொல்றதும் சரிதான்.... எல்லாம், பற்குணத்தால வந்த வினை... இப்போ என்ன செய்யலாம்..."

"இப்பவும் லேட்டுடல்ல... அம்மன் கொடைக்கு முன்னயே கோலவடிவுதான் பொண்ணு.. அக்கினிராசாதான் மாப்பிள்ளன்னு ஒரு ஏற்பாடு செய்துடுங்க... இல்லாட்டா ஊரு ஒங்கள இளப்பமாய் நெனைக்கும்..."

"வேணுமுன்னால் பாருங்க மயினி... ஒரு நாள் மட்டும் பொறுங்க.... நாளைக்கே தெரியும்.... கோலவடிவு பொண்ணு... அக்கினிராசா மாப்பிள்ள.... இந்த ஆடில ஏற்பாடு... வார ஆவணில கல்யாணம்... இப்பவே போயி... பற்குணத்தையும், ராமய்யாவையும் உலுக்குறேன் பாருங்க..."

"நல்ல காரியம் நடந்தா சரிதான்..."

அலங்காரி, குலவையிட்டாள்-கொக்கரக்கோ என்பது மாதிரி.

# 18

உச்சி வெயில் உச்சத்த பிடித்த வேளை...

பழனிச்சாமி அசந்து கிடந்தார். பாக்கியம், அவரையே பார்த்தாள். வயிறு கொலுக்காய் கிடந்தது... சொன்னாலும் கேட்க மாட்டார்... சோறுதான் சாப்பிடாண்டாம்... காபியாவது குடிக்கலாம்... பசியை அடக்கும். கேட்டால்தானே...

இந்தச் சமயத்தில், ராமசுப்பு, நாட்டு வக்கீல், குள்ளக் கத்தரிக்காய் வகையறாக்கள் உள்ளே வந்து, பழக்கப்பட்ட இடங்களில் உட்கார்ந்தபடியே கோயில் காரியங்களைப் பேசத் துவங்கி விட்டார்கள்.... அவரும் அந்த பசிக்கிறக்கத்திலேயே பதிலளித்தார்...."காலையில இருந்தே இவரு ஒரு டம்ளர் தண்ணிகூட குடிக்கலன்னு' சொக்கார மச்சான்களிடமும், கொழுந்தன்களிடமும் சொல்வதற்காக, பாக்கியம் வாயைத் திறந்தாள். ஆனால் பேச்சோ, மூச்சு மாதிரி மேலும் கீழும் போய்க் கொண்டிருந்தது.

"எண்ணாச்சி மேளக்காரங்களுக்கு எங்க ஊட்ல சோறு பொங்குறோம்... வில்லுப் பாட்டாளிகளுக்கு ஒங்க வீட்ல சோறு... சரிதானே..."

பழனிச்சாமி, சரியில்லை என்பதுபோல் பேசினார்.

"மேளம்... வில்லு... பொய்க்கால் குதிரைக்காரன் எல்லாருக்கும் இங்கேயே பொங்கிடலாம்... தொழிலாளிவள பிரிச்சு சோறு போடப்படாது... எல்லாருமே மனுஷங்கதான்... ஏய் பாக்கியம்... நம்ம கொப்பரையை புளிய வச்சு தேச்சு கழுவுங்க... உருளைக்கிழங்கும் முட்டக்கோஸும் தனித்தனியாய் வையுங்க... போன வருஷம் மாதிரி என் சொல்ல தட்டுனது மாதிரியும் தட்டாதது மாதிரியும் ரெண்டையும் ஒரே பொறியலா போடாதிய... வயிறுன்னு வரும்போது காச பாக்கப்படாது... மானமுன்னு வரும்போது உயிரப் பாக்கப்படாது..."

"எண்ணாச்சி நம்ம நாட்டு வக்கீல்... பெரிய துணில போடுற சினிமா சங்கதி கரும்பட்டையான் பயலுவளுக்கு தெரிஞ்சு போச்சி... அவங்க அதவிட ரெண்டு மடங்கு துணில போடப் போறாங்கன்னு ஒரு பேச்சு அடிபடுதே..."

"இதுக்குத்தான் நான் சொல்ல மாட்டேன்... சொல்ல மாட்டேன்னு சொன்னேன்... இவரு கேட்டாத்தானே..."

"இப்ப என்னடா குடி கெட்டுப் போச்சு... எதுக்கும் ஒரு ரெக்கார்ட் டான்ஸ் போட்டுட்டாப் போச்சு... எங்கண்ணாச்சி மொகத்த சுழிக்காவ... வேண்டாம்.."

"அம்மன் கொடை சமயத்துல... அந்தப் பயலுவ வம்பு பண்ணப் போறது மாதிரியும் ஒரு பேச்சு அடிபடுது..."

"கவலைப்படாதிய... அம்மன் கொடையில நீங்க அக்கறை செலுத்துங்க... நாங்க கரும்பட்டையான் பயலுவள கவனிச்சிக் கிடுறோமுன்னு காத்துக் கருப்பங்க கைமேல் அடிச்சு சத்தியம் செய்யாத குறையா சொல்லிட்டாங்க..."

"சொந்தக் காலுல நிக்கணுண்டா..."

பழனிச்சாமி, கடைசியாய் இப்படிப் பேசியபோது, கோலவடிவு உள்ளே வந்தாள். அப்பாவிடம் ஏதோ பேசப்போவது போல் முகத்தை நிமிர்த்தினாள்...

"இப்போ எப்டி இருக்காள்..."

"பெரியப்பா... சாப்பிடச் சொன்னாருன்னு... சொன்னேன்... நீ சாப்பிடாட்டா அவரு சாப்புட மாட்டாராமுன்னும் சொன்னேன்... உடனே அலறியடிச்சு சாப்புட்டுட்டா... நீங்க காலையில இருந்தே சாப்புடலன்னேன்.... அழுதுட்டாள்..."

"யாரு கோலம்..."

"வாடாப்பூ..."

"அவளுக்கு என்ன கேடு..."

பழனிச்சாமி விளக்கினார்.

"எனக்கு இப்பதான் வயிறு குளிருது... பாக்கியம் சோறு போடு... எப்பா ஒங்ககிட்டே சாப்புட்டுக்கிட்டே பேசலாமா..."

"இதுல என்னண்ணாச்சி இருக்கு.... ஏன் சாப்புடல..."

"நம்ம வாடாப்பூ... பீடிக்கடை தகராறுல செம்பட்டையான் பொண்ணுவ பக்கம் சேர்ந்து முருகன் கோயில் பக்கத்துல ரஞ்சிதம் ஏற்பாட்ல இன்னொரு கம்பெனி பீடி சுத்தியிருக்காள்... இது தெரிஞ்சதும் இந்தப் பய மாயாண்டி, பெத்த மகளை நாலு பேரு முன்னால வாங்கு வாங்குன்னு வாங்கிட்டான்... நானும் அப்போ

இருந்தேன்... ஆனால் புத்தியக் கடன் கொடுத்துட்டேன்... அந்தப் பய மவள் என்னடான்னா இந்த ரெண்டு நாளா குப்புறப் படுத்துக்கிட்டு அன்னம் தண்ணி இல்லாம கிடந்திருக்காள்... இன்னைக்கு காலையிலதான் எனக்கு விஷயம் தெரியும்... கேள்விப்பட்டதுல இருந்து மனசு கேக்கல... நானும் சாப்புடல... அதிகநேரம் கழிச்சுதான்... பாக்கியத்துக்கிட்ட சொன்னேன்... இப்போ கோலவடிவு அவளோட உண்ணாவிரதத்தை முடிச்சு வச்சுட்டு வந்திருக்காள்...”

“பய மவள் சரியான அமுக்கடி கள்ளி...”

“கள்ளித்தனம் இல்ல... இதுக்குப் பேருதான் வீரம்... வாடாப்பூ தனிப் பீடி சுத்தறது எனக்குப் பிடிக்கல... அதேசமயம் அவள் தனிப்பிறவின்னு பெருமைப்படாமலும் இருக்க முடியல...”

“காலச் சுத்துன பாம்பு மாதிரி... இந்த செம்பட்டையான் பயலுவ பிடிவாதத்துல ஊரே குட்டிச் சுவராப் போயிட்டு... இதுக்குல்லாம் இந்தப் பய துளசிங்கம்தான் காரணம்... செறுக்கி மவனோட ஒத்தக் காலையோ, கையையோ எடுத்துட்டா சரியாப் போயிடும்...”

கோலவடிவு, நாட்டு வக்கீல் நாராயணனிடம் ஏதோ சொல்லப் போவதுபோல் உதடுகளைக் குவித்தாள்... “நீங்க நெனக்கது மாதிரி அவரு இல்லியாக்கும்... அப்பா முன்னால சிகரெட் பிடிக்காதவராக்கும்... அம்மன் கொடையை தள்ளி வச்சுக்கிட சம்மதிச்சுட்டார். கொடைக்கு இன்னும் முழுசா ரெண்டு நாளுதான் இருக்குது.... இன்னும் தேதி வரலியே... வரும்... வரும்... அவரு எல்லா முரடனுவளையும் சமாதானப் படுத்தனுமுல்லா.... இதோ சித்தப்பாவும் பீடி ஏசெண்டும் சிரிச்சுட்டு வாராவ... அநேகமா... துளசிங்கம் மச்சான் சுடலை மாடன் விசேஷத்தை தள்ளி வச்சிருப்பாரு... இவங்க அதைச் சொல்ல வாராங்க... அப்பாடா.... ஊர்த்தகராறு ஒழிஞ்சது... இனுமே... எல்லாமே நல்லபடியாய் நடக்கும். பழச மறக்கணுமுன்னா புதுச நெனைக்கணும்... புதுச நெனக்கணுமுன்னா பழச மறக்கணும்.... எம்மாடி நான் கூட கூட்டத்துல பேசலாம் போலுக்கே... யார் கை தட்டலன்னாலும் துளசிங்கம் மச்சானும், அலங்காரி அத்தையும் தட்டுவாவ...”

பீடி ஏசெண்டும், பழனிச்சாமியின் சொந்தத் தம்பி அருணாசலமும் உள்ளே வந்து உட்கார்ந்தார்கள். தம்பிக்காரர், சொக்காரர்களை நோட்டமிட்டபடியே பழனிச்சாமியிடம் பேசினார்.

“எண்ணாச்சி.... ஒன்கிட்டே.... நாங்க ரெண்டு பேரும்... தனியா பேசணும்... கோலவடிவு கல்யாண விஷயமாய்...”

குள்ளக்கத்திரிக்காய் ராமசாமி, மற்றவர்கள் சார்பில் பேசினார்.

“அப்போ... நாங்க வர்றோம்...”

பழனிச்சாமி பதறியடித்துப் பேசினார்.

“உட்காருங்கப்பா... அருணாசலம்... நீ ஏன் இப்படி புத்திய அடிக்கடி கடன் கொடுக்கே...? இவங்கெல்லாம் என்கிட்ட அவங்க குடும்ப விஷயத்தைச் சொல்லும்போது நம்ம குடும்ப விஷயத்த அவங்கள துரத்திட்டா பேசணும்...? இவங்களுக்குத் தெரியாத குடும்ப விஷயம் அப்படி என்ன இருக்கு... எதுன்னாலும் இங்கேயே சொல்லு...”

“சொல்லுதேன், சொல்லுதேன்... ஏழா கோலவடிவு நீ உள்ள போ...”

அருணாசலம், அண்ணன் மகள் உள்ளே போகிறாளா என்று உற்றுப் பார்த்தபோது, அவள் கதவுக்குள் ‘அஞ்ஞான வாசம்’ செய்து காதுகளை உஷாராக்கிக் கொண்டாள். அருணாசலம் பீடிகை போடாமலே பேசினார்.

“நம்ம ராமய்யா மச்சான் மவனுக்கு-அக்கினி ராசாவுக்கு கோலவடிவக் கேட்டு ஆளு மேல ஆளாய் சொல்லி அனுப்பி அலுத்துட்டாராம்... இப்ப இவர கையோட கேட்டுட்டு வரும்படியாய் சொல்லி அனுப்பி இருக்கார் ராமய்யா மச்சான்...”

“ஆவணிலதான் யோசிக்கலாமுன்னு சொல்லியாச்சே...”

ஏசெண்டு பதிலளித்தான்.

“அப்படில்ல மச்சான்... நாங்க அந்த கோவில் விவகாரத்துல.... ரத்த சம்பந்தத்துல ஒங்கள சப்போட்டு செய்யுறோம்... ஆனால் ஊர்ல... கோலவடிவ பெண்ணெடுக்க அப்டிச் செய்யுதா ஒரு பேச்சு.... இந்தப் பேச்ச ஒரு முடிவுக்கு கொண்டு வரணும்...”

“ஊர் வாய மூட உலமூடியா... இருக்குது மாப்பிள்ள...”

“தயவு செஞ்சி குறையும் கேளுங்க மச்சான்... கோலவடிவுக்கும் அக்கினி ராசாவுக்கும் கல்யாணமுன்னு இப்பவே ஒரு முடிவெடுக்கணும்... இல்லன்னா.... இல்லன்னு தெரியப்படுத்தணும்... முடிவு எப்டின்னாலும் நாங்க ஒங்க பக்கந்தான்... செம்பட்டையான் குடும்பத்துக் காசிராஜன் மகள சொல்லி அனுப்புனாக... காசிராஜன் மகள முடிவு பண்ணிட்ட பிறகும் ஒங்களையே சப்போட்டு செய்தால் ஒங்களுக்கு பெரும.... எங்களுக்கும் பெரும... ஆனால் ராமய்யா அண்ணாச்சிக்கு மனசு கேக்கல... பழனிச்சாமி மச்சான் வாயால முடியாதுன்னு வந்தால்... காசிராஜனுக்கு முடியுமுன்னு சொல்லி அனுப்பலாமுன்னு நெனைக்கார். ஏன்னா அனாவசியமாய் ஒரு பொண்ணு பெயரும், பையன் பெயரும் இதுக்கு மேல அடிபடப்படாது பாரும்...”

“ஒங்க கூடப் பிறந்த தம்பி நான்... ஒங்க மதிப்பு... ஒரு இம்மியளவு குறைஞ்சாக்கூட உயிர விடுறவன் நான்... அப்படிப்பட்ட நான் சொல்லுதேன்... ஏசெண்டு மாப்பிள்ள இப்போ ஆயிரம் சல்ஜாப்பு சொன்னாலும்... எந்தப் பக்கம் பொண்ணு எடுக்கமோ அந்தப் பக்கம் தானா சாயுறோம்... நம்ம குடும்பத்துல பாதிப்பேரு மெட்ராஸ் போயிட்டதால இப்போ நமக்கு ஆள் பலம் இல்ல... யானை சகதில மாட்டிக்கிட்டா தவளைகூட கிண்டல் பண்ணுமாம்... நாம நாட்டாமையாய் இருக்கையில நமக்கு கப்பம் கட்டுன இந்த செம்பட்டையான் பயலுவ... நம்மளயே.... எதுக்குறாமுன்னு நம்ம குடும்பத்து பயலுவ மெட்ராஸ்லயே இருந்துட்டதுதான் காரணம்... நம்ம பாட்டி பிறந்த குடும்பம் காத்துக் கருப்பன் குடும்பம்.... நம்ம அத்தைய கட்டிக்கிட்ட குடும்பம்... பழைய உறவு போயிடப்படாது. அதனால...”

அருணாசலம் விட்டதை ராமசுப்பு தொடர்ந்தார்...

“அக்கினி ராசாவும்.... நல்ல பையன்... நல்ல குடும்பம்... திரண்ட சொத்து இருக்கு... அவங்க குடும்பம் இந்த உறவால... அடுத்த தலைமுறையில கூட நம் பக்கம் நிற்கும்... இந்த சங்கதிய கேள்விப்பட்டாலே செம்பட்டையான் செத்துப் போவான்...”

"தப்பா நினைக்காதிய மச்சான்... இப்பவே ஒரு முடிவு சொல்லிட்டா நல்லது..."

பழனிச்சாமிக்கு அவர்கள் சொல்வதன் தாத்பரியம் புரிந்தது... ஆனாலும் அக்கம் பக்கம் பார்த்தார்.... எவரும் முனங்கவில்லை... பாக்கியத்தைப் பார்த்தார்... அவள் முகத்தில் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை... பழனிச்சாமி, சிறிது பதட்டப்பட்டே முடிவளித்தார்.

"சரி மாப்புள்ள.... என் மகள், கோலவடிவுதான்... பொண்ணு... ராமய்யா மச்சான் மகன் அக்கினி ராசாதான் மாப்பிள்ள. ஆவணில கைமாத்திக்கலாம்."

"நீங்க பொண்ணு கொடுத்தா போதும்... நகைநட்டு ரெண்டாம் பட்சம்..."

"அவளுக்கு நகைபோட்டு பாக்கது எங்களுக்கும் பெருமதான்... சரி என்னை கொஞ்சம் கண்மூட விடுதியளா..."

# 19

கோலவடிவு, சுவரில் போட்ட கரங்களை எடுத்துவிட்டு, அப்படியே கீழே சரிந்தாள். சரிந்தவள் கோபமாக எழுந்தாள்... என்னப்பத்தி... என்னைக் கேட்காமலே எப்படி முடிவெடுக்கலாம்... என்று அங்கேபோய் கேட்கலாம் போல் எட்டிப் பார்த்தாள்... என்னைக் கேளாமலே எப்படிப் பெத்தாளோ.... அதுபோல கேளாமலே காவு கொடுக்காவ... எல்லாரும் ஊமையாயிட்டாவளே.... அம்மாகூட பேசலியே... சித்தப்பா சந்திராவுக்கு இப்படி ஒரு மாப்பிள்ள பாப்பாரா... நான் தொக்கா... மாடா.... ஆடா...? மனுஷி.... வோட்டுப் போட்ட பொண்ணு....

கோலவடிவின் கைகால்கள் ஆடின... தலையே பராமானது.... கண்களே எரிச்சலாயின... அக்னிராசா... அவளை, அங்கம் அங்கமாக, அங்குலம் அங்குலமாக எரித்தான். 'காளியம்மனுக்கு ஆடு... சுடலைக்குக் கோழி.... இந்த ரெண்டு பேருக்குமா சேத்து நான்... நானே... அப்பா வழக்காளி அப்பா.... தகராறு சங்கதில மட்டும் ரெண்டு தரப்பையும் விசாரிக்கணுமுன்னு எப்படிப் பேசுறியளோ அப்படி... சுபகாரியத்திலயும் விசாரிக்கணும்... இல்லாட்டா ஒரு சுகம் இன்னொரு சோகத்தோட சேரும்.... இதனால சொகந்தான் சோகமாகுமே தவிர சோகம் சுகமாயிடாது. ஒங்க கிட்டே எப்படிச் சொல்ல... யார் மூலம் சொல்ல.... அண்ணனுக்கு கடை வைக்கது முக்கியம்.... அம்மாவுக்கு நீங்க முக்கியம்... நான்தான் - இந்தப் பாவிப்பொண்ணுதான் யாருக்கும் முக்கியமில்லாமப் போயிட்டேன்... போயிட்டேனே....'

கோலவடிவின் புலம்பிய நெஞ்சம் இறுகியது. மழையால் குழையும் கணிமண் தரை அப்புறம் இறுகுமே... அப்படி இறுகியது... பயம், வீரப்பிறப்பெடுத்தது... இந்த திடீர் மனமாற்றம் அவளுக்கே ஆச்சர்யத்தைக் கொடுத்தது... எதிர்பார்க்காத வைராக்கியம்... எதிர் கொள்ளக்கூடிய துணிச்சல்... கோயில் பேரேட்டு நோட்டில தன்னப்போல் ஒரு தாளை தனியாக்கினாள்... பேனாவைத் தேடிப்பிடித்து நாலு வரிகளை கிறுக்குவதுபோல எழுதினாள். அலங்காரி அத்தையிடம் பேச முடியாமல் போனால் இதையாவது சேர்த்துடணும்...

"எம்மா... அம்மன் கோவிலுக்கு போயிட்டு வாறேம்மா..."

பாக்கியத்துக்கு சந்தோஷம்... மகளுக்கு அக்னி ராசாவ பிடிக்காதோ... என்ற சந்தேகம் இப்போது அம்மாக்காரிக்கு, அணுவளவும்கூட இல்லை... பிடிச்சுட்டு... இல்லாட்டா கோவிலுக்குப் போகமாட்டாள்.. அம்மனுக்கு நன்றி சொல்லப் போறாள்... அவளுக்கு பிடிச்சா எனக்கு பிடிச்ச மாதிரிதான். ஆனாலும் ஏதோ...

கோலவடிவு, அடிமேலடியாய் நடந்தும், அடியற்று நடந்தும், அடியோடு நடந்தும் குலதெய்வமான காளியம்மன் கோவிலுக்கு வந்தாள்... அவள் எந்த நேரம் வந்தாளோ, அந்த நேரம் பார்த்து

கோவிலில் திரை விழுந்தது... அம்மனுக்கு கண் திறக்கப் போறாங்களாம்... அம்மனின் இரண்டு கண்களிலும் மஞ்சளைப் பூசுவார்கள்... பிறகு சந்தனத்தை அப்புவார்கள்... அப்புறம் கோலவிழியில் வர்ணம் போடுவார்கள்... உள்ளே கறுப்பு வட்டம் போடுவார்கள்... ஒரு மையைக் கொட்டுவார்கள்... இதுமேல் தான் கண்திறப்பு.... அம்மா கண்திறக்க, ஒரு மணி நேரமாவது ஆகும்... அதுக்குள்ள என் கண்ணே மூடிடும்... மூடிடும்...

கோலவடிவு, கோயில்முன்பு போடப்பட்ட குவிந்த பந்தலைப் பார்த்தாள்... மேல்தளத்தில் போடப்பட்ட பட்டாடைகளை நோக்கினாள்... விதவிதமான ஜிகினா காகிதங்களைக் கண்ணுற்றாள்... சப்பரம் பல்வேறு தெய்வப் பொம்மைகளால் அலங்காரமாக நின்றது. வில்லுப்பாட்டாளிகள் உட்காரப் போகும் பெஞ்சு மேட்டைப் பார்த்தாள்... அம்மனுக்காக எல்லாம் இருக்கு... ஆனால் அம்மன்தான் இல்லை... எனக்கு வழக்காளி அப்பா இருப்பதுபோல், எனக்காக அரிவாளை எடுத்த அண்ணன் இருப்பதுபோல், அம்மனுக்கு சப்பரம் இருக்கு.... பந்தல் இருக்கு... ஆனால் அம்மன் இல்ல... எனக்கு நானே இல்லாமப் போனது மாதிரி... அம்மா... காளியம்மா... இது அடுக்குமாடி... உனக்கு மட்டும் சர்வ வல்லைமையுள்ள ஈஸ்வரன், எனக்கு மட்டும் ஒரு இடிச்சபுளி. என்னதாயி நியாயம்....

கோலவடிவு, அம்மனுக்குப் புறமுதுகு காட்டியபோது, அலங்காரி அத்தை எதிர்ப்பட்டாள். இவளைப் பார்த்து அவள், காலில் குத்திய முள்ளை எடுப்பது போல, ஒத்தக் காலில் நின்றாள். கோலம் அங்கே ஓடிப் போனாள்... அத்தையிடம் பேசினால் அழுகை வரும். அதோ அந்த வெடி வண்டி சத்தம் போல... அப்பாவுக்கு கேட்கும்படியாய் சத்தம் வரும்...

கோலவடிவு, அத்தையின் முன்னால், கோலிபோல் சுருட்டப்பட்ட அந்த காகிதத்தை எறிந்துவிட்டுத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே நடந்தாள். அத்தையோடு இணைந்து நடக்க முடியவில்லை. ஊர் இருக்கும் இருப்பில், அது முடியாத காரியம்... ஆனாலும், அலங்காரி அத்தை பின்னால் நடந்தபடியே முன்னால் போனவளுக்கு அபயமளித்தாள்.

“அடக் கடவுளே... என்னதான் ஆனாலும்... என் நிலைமை உனக்கு வர விடமாட்டேன்... கருக்கலுல பருத்திக் காட்டுப் பக்கமா வா... அக்கினி ராசா ஒனக்கு மாப்பிள்ளையா வரமாட்டான்.. கலங்காமப் போ... என் ராசாத்தி... நான் எதுக்கு இருக்கேண்டி...?”

# 20

செம்பட்டையான் சுடலைமாடன் கோவில், நான்கு பக்கமும் மதில் சுவர்களால் மடக்கப்பட்டு நடுப்பக்கம் பெரிய வாசலைக் கொண்டது... ஆனாலும் இந்தக் கோட்டைச் சுவர்களையைம் மீறி, கோவிலுக்குள் உள்ளே சாமி பிம்பங்கள் வெளியே நன்றாகவே தெரிந்தன. குள்ளமான மதில் சுவரின் உள்ளேயும், வெளியேயும் வெள்ளையடிக்கப்பட்டு, அந்த சுவர் முழுக்க வெள்ளை சிவப்புக் கோலப்பட்டைகள் செங்குத்தாக மாறி மாறித் தொங்குவது போல் தெரிந்தன. இந்த செவ்வகக் கோவிலுக்குள் மேற்குப் பக்கம் மூன்றடி உயரமான பீடத்தில் சுடலைமாடன் கூம்பு வடிவச் சுவராகக் காட்சி தந்தான்... நான்கு பக்கமும் முக்கோணமாய், உச்சியில் சதுரமாக முடிந்த மண் பிம்பம். அந்த மண் வடிவிற்கு வெள்ளையடிக்கப்பட்டு, அந்த வெள்ளையிலேயே விபூதி பூசப்பட்டதால், அது சரியாகத் தெரியவில்லை... ஆனால் சந்தனமும் குங்குமமும் பளிச்சிட்டன... சாமியின் பாதத்தில் பயங்கரமான வெட்டரிவாள்... மாடனின் ஆறடி பிம்பத்தின் இரண்டு பக்கமும் வில் மாதிரியாக கம்பு. அதில் சர விளக்குகள் இணைக்கப்பட்டிருந்தன. மாடனுக்கு அக்கம் பக்கம் நான்கைந்து பிம்பங்கள்.... வடக்கு மதில் சுவரை ஒட்டினாற்போல் இரண்டு சிறிய கட்டிடங்கள்... அவற்றில் ஒன்றில் மாடத்தி... இன்னொன்றில் பத்திரகாளி... இருவரும் சிலைவடிவங்களில் இருக்கிறார்கள். தெற்குப் பக்க மதில் சுவரை ஒட்டி ஏழெட்டுத்

தனித்தனியான மண் பிம்பங்கள்... சுடலைமாடன் முன்னால் மாடனைச் சித்தரிக்கும் ஒரு படம் இருந்தது... முந்தா நாள் துளசிங்கம் மாடனை நவீனப் படுத்துவதற்காக, தென்காசியில் வாங்கிய படம்... இன்றைக்குச் சென்னையில் இருந்து வரும் சினிமா மாஸ்டர்களை வரவேற்கத் தென்காசிக்குப் போயிருக்கும் துளசிங்கம், காளிக்கும் மாடத்திக்கும் போட்டோ படங்கள் வாங்கி வரப்போவதாகச் சொல்லி இருந்தானாம்...

அந்தக் கோவிலுக்குள் இருபத்தோறு தேவதைகள்... சிவபெருமான் தக்கனை அழிப்பதற்காக ஏவிய பூதகணங்கள் என்று வில்லுப்பாட்டாளி வெற்றிக்குமார் ஆடி ஆடிப் பாடுவதைப் பார்க்க அழகாக இருக்கும்... இப்போது, சுடலை மாடனின் பங்காளிகளான கோட்டை மாடன், உதிரமாடன், அக்னி மாடன், முத்தாரம்மன், அக்னிபுத்திரன், மயானபுத்திரன், பத்திரகாளி, மாடத்தி, கைக்கொண்டான், பேச்சி முதலிய தேவதைகளின் பிம்பங்களில் தூசி தட்டாமலே வெள்ளையடிக்கப்பட்டிருந்தது... கோவிலின் இடைவெளியை இட்டு நிரப்புவதுபோல் பெரிய பந்தல் போடப் பட்டிருந்தது... வளைவு வளைவான அலங்காரப் பந்தல்... கோவிலுக்கு வெளியேயும் பந்தல்... அந்தக் கோவில் மதில் சுவருக்கு வெளியே ஒரு சின்ன பிம்பம்... ஏதோ ஒரு சாமிப் பெயர்... சாமிகளிலும் ஆதிதிராவிட பாகுபாடு உண்டு என்பது மாதிரியான கூரையில்லாத சாமி... மழையில் கரையும் மண்சாமி... அதுக்கு இப்போது தான் பட்டும் படாமலும் வெள்ளையடிக்கப்பட்டிருந்தது...

அந்தக் கோவிலுக்கு வெளியே, செம்பட்டையான்கள் கூட்டம் கூட்டமாகக் கூடி நின்றார்கள். இடையிடையே வாண வேடிக்கைகள் ஆகாயத்தில் உலாவின... அந்தச் சத்தம் நிற்கும் போதெல்லாம் செம்பட்டையான்கள் பேசிக் கொண்டார்கள்.

“ஏல... சாமியாடி... பயலுவளுக்குச் சொல்லு... கரும்பட்டையான் சாமியாடிக் கிழவனால தோரண மலையில ஏறி சுனையிலே தண்ணி எடுக்க முடியாதுன்னு... அவரு பேரனை ஏற்பாடு பண்ணுறாங்களாம்... அதனால நாம உஷாரா இருந்து, அவங்களுக்கு முன்னால மலையிலே ஏறி தண்ணி எடுக்கணும்...”

"ஆமா... சினிமாப் படத்த கோவிலுக்குள்ள வைக்கதா... வெளிலயா..."

"துளசிங்கம் பார்த்துக்குவான்..."

"எல்லாத்தையும் துளசிங்கம் பாத்துக்குவான்னா நாம எதுக்கு..."

"நன்றியில்லாமப் பேசாதல... நம்ம துளசிங்கம் ஊருக்கு வந்த பிறகுதான் நமக்கு பேரு..."

"நம்ம பலத்துலதான் அவனுக்கும் பேரு..."

"ஒன்கிட்ட மனுஷன் பேசுவானா..."

"நீ பேசாண்டாம். ஆனால் அங்க சாராயம் காய்ச்சுற பயல்களை அம்மன் கொடை முடியுறது வரைக்குமாவது கொஞ்சம் தள்ளிப்போய் காய்ச்சச் சொல்லுப்பா..."

"நீ ஒருத்தன்... அம்மன் கொடைக்காகவே ஸ்பெஷலா காய்ச்சுதான்... அவன அப்புறப்படுத்துனா நம்ம ஆளுவ ஒன்ன அப்புறப்படுத்திடுவானுவ..."

வெளிப் பந்தலுக்குள் நடந்த இந்தப் பேச்சுக்கள் கேட்கும் தூரத்திலேயே விழுந்தாலும், எலி டாக்டர் காதுகளில் அவை விழவில்லை... மனிதர் குட்டி போட்ட பூனை மாதிரி பந்தலுக்கு வெளியே அங்குமிங்குமாகச் சுற்றினார்... வட்ட வட்டமாகவும், சதுரம் சதுரமாகவும் நீள நீளமாகவும் நடந்தார்... யாரிடமாவது புலம்பியாக வேண்டும்.

எலி டாக்டர் சத்தம் போட்டுக் கத்தினார்.

"ஏய் அலங்காரி... ஒன்னத்தான் பிள்ள.. ஒரு நொடி வந்துட்டுப்போ..."

சுடலைமாடன் கோவிலுக்குச் சற்றுத் தொலைவில் வண்டிப்பாதை ஓரமாக ஆட்டுக் கிடாவுடன் போன அலங்காரி, அவரைப் பார்க்காதது போலவும், கேட்காதது போலவும் போனாள். அவர் இரண்டாவது தடவையாகக் கத்தும்போது, முகத்தைச் சுழித்தபடி நின்றாள்... நான் பொம்புள... அங்கென்ன வேலை...

எலி டாக்டர், கத்திக் களைத்துவிட்டு, அவளை நோக்கி நடந்தபோது, அலங்காரி அவரைப் பார்த்து நடந்தாள்... ஆட்டை ஒரு வாதமடக்கி மரத்தில் கட்டிப்போட்டுவிட்டு, ஆடியசைந்து நடந்தாள்... பின்னர் இருவரும் இணைந்து நடந்தார்கள்... அலங்காரி, வெட்கப்பட்டு "சீ முன்னால நடயும் இல்லன்னா... பின்னால நடயும்" என்றாள். எப்படியோ இருவரும் முன்னாலும் பின்னாலுமாகக் கோவில் பக்கம் வந்தார்கள்... எலி டாக்டர், பந்தலுக்குள் நின்றவர்களைச் சாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டே ஒப்பாரி வைக்காத குறையாக ஊளையிட்டார்....

"பாரு... அலங்காரி... இந்த துளசிங்கம் பயல், செய்யுற அட்டூழியத்த... அம்மன் கொடைக்கு தடிப்பய உரக்கடையில சம்பாதிச்சத விட்டுடுவான் போலுக்கு... வெளிப் பந்தலும் இவன் பொறுப்பாம்... சினிமாவும் இவன் பொறுப்பாம்... டான்சும் இவன் பொறுப்பாம்... இந்த கழிசடைகள பாக்கிறது மட்டும் சொக்காரப் பயலுவ பொறுப்பாம்... இதுக்கு மேல செலவளிக்காண்டாமுன்னு நீ கொஞ்சம் அவன் கிட்ட சொல்லு பிள்ள..."

"துளசிங்கம் எதுலயாவது பணத்த விட்டா அத வட்டியும் முதலுமா எடுக்குறவன்... நாமதான் அவன்கிட்ட யோசனை கேட்கணும்... அவனுக்கு சொல்ல வேண்டியதில்ல... சரி போவட்டம்... கோலவடிவுக்கும் அக்னி ராசாவுக்கும் முடிவாயிட்டாமே..."

"கேள்விப்பட்டேன்... ஆயிரந்தான் நடந்தாலும் எனக்கு மனசு கேட்க மாட்டேங்கு... கிளியை வளத்து பூனைகிட்ட..."

"பூனைகிட்ட கிளி போகல... நாயி கிட்ட தேங்காய கொடுக்காவ அது தானும் தின்னாது... யாரையும் தின்னவும் விடாது..."

"இதுல இன்னொரு விஷயமும் சம்பந்தப்பட்டிருக்கு... அலங்காரி. காத்துக் கருப்பன் பயலுவ எப்போ நம்ம கோயிலுல மேளச் சத்தம் கேக்குதோ அப்போ நம்ம கோயிலையே ஒடைக்கப் போறதா பேசிக்கிறானுவளாம்... எனக்கு கையும் ஓடமாட்டங்கு... காலும் ஓடமாட்டங்கு... அவங்களுக்கு என் மவன் துளசிங்கம் மேலதான்

குறி... கரும்பட்டையான்களே சரிக்குச் சரியான ஜோடி. இப்ப அந்தப் பயலுவோட காத்துக் கருப்பனுவளும் ஒண்ணாச் சேர்ந்தா நம்ம கதி... அதோ கதிதான்... ஆமா... இப்டிச் செய்தா என்ன..."

"எப்படி..."

"நம்ம சுடலைமாடன் வழக்கமா... கரும்பட்டையான் காளிகிட்ட உத்திரவு வாங்கப் போவாரு... இந்த வருஷம் பேசாம காத்துக் கருப்பன் மாரியம்மன் கிட்ட உத்தரவு வாங்கச் சொல்லலாமே... இதனால் காத்துக்கருப்பன்கள வளைச்சுப் போட்டுடலாம் பாரு..."

"மாடன் மாரிகிட்ட உத்திரவு கேட்க சம்மதிப்பாரா..."

"நாம சொல்லுறதைத்தான் மாடன் கேட்கணும்... மாடன் சொல்லுறதை நாம கேட்கணுமுன்னு இல்ல... அப்டிக் கேட்டா ஊர்ல ஒரு கிடா ஒரு கோழி உயிரோட இருக்காது.... சரி... என் திட்டத்தைப் பற்றி என்ன சொல்லுதே..."

"நல்ல திட்டந்தான்... அதுக்காவ... அவனுவ காலுல போயி விழணுமான்னு யோசிக்கேன்..."

"யோசிச்சு சொல்லு... அதோ பாரு வேனு... துளசிங்கம் பயல் கொடைக்கு சினிமாப் பயலுவள கூட்டிட்டு வாரான்... கோணச்சத்திரத்துல ரூம் போட்டு குடிக்கதுக்கு... பிராண்டி போட்டு செறுக்கி மவன்... உரக்கடைய ஒரு வழி பண்ணிடுவான்... அலங்காரி... அலங்காரி... நீ சொல்லு.... இதோட, அவன நிறுத்திக்கிடச் சொல்லு பிள்ள..."

"நம்மளால முடியாது சாமி... அவன் கேட்காட்டா எனக்குத்தான் மதிப்புக்குறவு... பிறவு எதையுமே அவன் கிட்டே பேச முடியாது..."

"என்ன அலங்காரி... என்கிட்டயே பசப்பற... நீ சொல்லி அவன் கேட்கமாட்டானாக்கும்... நீங்க ஒருத்தருக்கு ஒருத்தரா..."

எலி டாக்டர் சும்மா இருந்திருக்கலாம்... அப்படி இருக்காமல் ஒரு நமுட்டுச் சிரிப்புச் சிரித்தார்... கண்ணடித்தபடியே சொல்லடித்தார்... அதைப் புரிந்து கொள்ள அலங்காரிக்குச் சிறிது நேரமானது... புரியப்

புரியப் புலியானாள். அவரிடம் இருந்து பின் வாங்கி நின்று, கத்தினாள்.

"ஏய் எலி டாக்டர்... நீயுல்லாம் ஒரு மனுஷனா..."

"என்ன பிள்ள நீ நான்னு..."

"நீ சிரிச்ச சிரிப்புக்கும் பேசுன பேச்சுக்கும் ஒன் மூஞ்சில காறித்துப்பணும்... இப்படிப் பேசற நீ ஒம்மாவ அம்மான்னு கூட கூப்புடப்படாது... பேச்சுக்கும் ஒரு அளவு வேண்டாமய்யா... நான் பலபேர தொட்டவதான்... கெட்டவதான்... இல்லங்கல... ஒன் தம்பிய கட்டுன பிறவு ஒழுங்கா இருக்க நெனச்சவதான்... அவன் தெம்மாடின்னு தெரிஞ்சதும் ஒரு சிநேகிதம் ஏற்பட்டதும் வாஸ்தவந்தான்... இது தெரிஞ்சு நீ குதியாய் குதிச்சே... அப்போ நீ நியாயமா பேசியிருந்தா நானும் அடங்கியிருப்பேன்... ஆனால் நீயோ... அவன்கிட்ட போறவள் என்கிட்ட வரப்படாதான்னுதான் ஆடுனே... அந்த ஆட்டத்துல நானும் ஆடிட்டேன்... ஆடுறேன்... நான் இப்படி ஆனதுக்கு நீயும் ஒரு காரணம்... அதுக்காவ இப்டியா பேசுறது... காக்கா காக்காவக் கொத்தி தின்னாது... இப்பவே துளசிங்கத்துக்கிட்ட சொல்லுதேன் பாரு..."

"அய்யோ... அலங்காரி.. நான் ஒன்ன அப்படிச் சொல்லுவனா... இந்த சுடல சத்தியமாச் சொல்லுதேன்... நான் அப்டி நினைச்சிருந்தாக் கூட என் கையி விளங்காமப் போவும்... காலு நடக்காமப் போவும்.. சொன்னவன் பழனிச்சாமி தம்பி அருணாசலம்... தேவடியா மவன... நானே மிதிக்கப் போறேன். துளசிங்கம் பயல்கிட்ட சொல்லிடாத தாயி... இப்பவே அடிக்காத குறையா நாயப் பேசுறது மாதிரி பேசுறான்... ஒரு நல்ல வாக்குக் கொடுத்துட்டுப் போ... அலங்காரி...."

அலங்காரி, எதுவும் பேசவில்லை... வேனில் இறங்கியவர்களைப் ஊமைச் சோகமாய்ப் பார்த்தாள்... பத்து பதினைந்து தடியன்கள் இறங்கினார்கள்.... ஒருவன் கையில் எட்டுக்கால் பூச்சி மாதிரியான வீடியோ காமிரா... ஒருத்தன் தோளில் மிருதங்கம் மாதிரியான சதுரப்பெட்டி...

துளசிங்கம் அவர்களைச் சித்திக்கு அறிமுகம் செய்து வைத்தான்...

"இவங்கெல்லாம் என்னோட சினிமா பிரண்டுங்க... ஏய் தர்மராசா... இங்க வாடா டேய் மவராசா... நீயும் வா... இவங்க கூடவே நீங்க ரெண்டு பேரும் இருக்கணும்... என்ன மாஸ்டர் அப்படிப் பார்க்கிய..."

"ஒங்க கோவிலுல ரொம்பப் பெரிசா விசேஷம் இருக்கும்... வீடியோவில எடுத்து வெளிநாட்டுக்கு அனுப்பலாமுன்னு சொன்னே... நானும் ஐயாயிரம் ரூபாய் அட்வான்ஸ் கொடுத்துட்டேன்... இங்கே ஒண்ணு மில்லியப்பா... மெட்ராஸே மேலப்பா..."

"நாளைக்கு பாத்துட்டு சொல்லுங்க... மாஸ்டர்... அதுக்கு மறுநாள் கிளைமாக்ஸ்... ரெண்டையும் பாருங்க... படமாய் எடுங்க... ஒங்களுக்கு பிடிக்காட்டா அட்வான்ஸ அப்படியே தந்துடுறேன்... அதோட ஒங்கள பிஸுனசுக்காக மட்டும் கூப்பிடல... எங்க விசேஷத்த நீங்களும் பார்க்கணுமுன்னுதான் கூப்பிட்டேன்..."

மாஸ்டர் எதுவும் பேசாமல் தோளில் இருந்த காமிராவை எடுத்துத் தர்மராசாவின் தலையில் வைத்தான்... தாடிக்காரன் ஒருத்தன்... கண்ணும் வாயும் மட்டுமே வெளியே தெரியும்... இரண்டு பேர் மொட்டையன்கள்... எஞ்சிய பேர் நெட்டையன்கள்... ஒருவன் லுங்கி... ஒருத்தன் பைஜாமா... இன்னொருத்தன் டவுசர்காரன்... மற்றவர்கள் டைட் பேண்ட்... பொம்மைச் சொக்காக்கள்...

சினிமாக்காரர்களில் ஒருத்தன் விசிலடித்தபடியே பேசினான்...

"டேய்... அதோட பாருடா... ஒரு கிராமத்துக்குட்டி... அருமையான லொக்கேஷன்ல எப்படி அழகாய் நடக்காள் பாரு... பாரதிராஜா பார்த்தா விடமாட்டாரு... அடடே... குட்டி எப்படி பார்க்குது பாரு... மாஸ்டர்... காமிராவ ரெடி பண்ணு... மாஸ்டர் இந்த போஸ் பியூட்டிபுல் ஒண்டர்புல்... அது பாதர்கிட்ட இப்பவே அட்வான்ஸ் கொடுத்துடலாம்... ஷாட்... ரெடியா...?"

எல்லோரும் தொலைவில் போன கோலவடிவையே பார்த்தார்கள். துளசிங்கம் மாஸ்டரிடம் கெஞ்சிக் கூத்தாடி காமிராவை விலக்கினான். 'இருக்கிற தொல்லை போதாதா.. இந்தச் சமயத்துல... ஏன் அந்தப் பக்கமாய் போறாள்... இவளுக்கும் அக்னி ராசாவுக்கும் கல்யாணமாமே...?'

கோலவடிவையே பார்த்த துளசிங்கத்தை அலங்காரி ரசித்துப் பார்த்தாள். இதுவரை தான் செய்யப்போவது நியாயமா என்று நெஞ்சுக்குள் பாதிக்குப் பாதியாய் சிந்தித்த அலங்காரி, அருணாசலந்தான் அப்படிப் பேசினான் என்பதை எலி டாக்டர் மூலம் கேள்விப்பட்ட உடனேயே மனதை கல்லாக்கினாள்... இல்லை... அதுவே கல்லானது...

"துளசிங்கம் ஒன்கிட்ட தனியா பேசணும்... அவசரம்.. அவசியம்.... நம்ம பருத்தித் தோட்டம் வரைக்கும் பேசிக்கிட்டே நடப்போம்..."

"என் பிரண்டுங்கள விட்டுட்டு..."

"ஓ.கே.. துளசி... போயிட்டு வா... நாங்க கோவிலுல லொகேஷன் பாக்கோம்..."

எலி டாக்டர் நடுங்கிப் பார்த்தபோது-

அலங்காரி அவருக்கு முருகனைப் போல் அடைக்கலக் கையைக் காட்டிவிட்டு, துளசிங்கத்துடன் நடந்தாள்... கோலவடிவோ, சோளத் தோட்டத்திற்குள் ஒவ்வொரு சோளச் செடியையும் விலக்கி விலக்கி பார்த்துப் பார்த்து உள்ளே போனாள்...

# 21

பொதுவாக, சமய சந்தர்ப்பங்கள் சம்பந்தப்பட்டவர்களைக் காலால் இடறுவதுதான் பெரும்பாலான வழக்கம்... ஆனால் அலங்காரிக்கோ, அது இப்போது கை கொடுத்தது... கோலவடிவைக் கடத்திக் கொண்டு போக வேண்டும் என்பதை எப்படித் துளசிங்கத்திடம் எடுத்துரைப்பது என்று அவள் யோசித்தபோது அவர்களுக்குப் பின்னால் நடந்த அக்னிராசாவின் சித்தப்பா பற்குணமும், கரும்பட்டையான் ராமசுப்பும் அவர்களுக்கு முன்னால் நடந்து ஒரு ஓரமாக நின்றார்கள். பற்குணம்,

ராமசுப்புவுக்குச் சொல்வதுபோல், துளசிங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்தார்.

"நீ ஏண்டா கவலைப்படுறே... ஊரையே அடிக்கப்போறது மாதிரி... மெட்ராஸ்ல இருந்து அம்போக்குப் பயலுவள இறக்கிட்டான்னு யோசிக்காதடா... ஒவ்வொரு பய செம்பலும்பையும் இறக்கிக் காட்டுறேன்... ஊரைப் பகைக்கின் வேரோடு கெடும் என்கிறது பழமொழி... பாத்துப்புடலாம்... குஸ்திப் பயலுவளாம்... குஸ்திப் பயலுவ... செறுக்கி மவனுவ என் ஒத்தக் கைக்கு பொருவானுவளா... ஒரே வெட்டுத்தான், மேளச்சத்தம் மட்டும் கேக்கட்டும்... அதுவரைக்கும் பொறுத்துக்க..."

துளசிங்கம் ஏதாவது பதில் சொன்னால், அங்கேயே அவனை இரண்டில் ஒன்றைப் பார்க்கப் போவதுபோல், அந்த இருவரும் அவனையே பார்த்தபடி மெள்ள நடந்தார்கள்... துளசிங்கம் வேறுபக்கம் முகத்தைத் திருப்பியதால், அதுவே ஆரம்ப வெற்றி என்று அனுமானித்து, ஒரு கிளை வழியில் நடந்து பனங் காட்டிற்குள் மறைந்து போனார்கள்... அலங்காரி குத்திக் காட்டினாள்...

"பாத்தியாய்யா... அவங்க பேசுறத... நம்ம செம்பட்டையான் ஆளுவ போதாதாக்கும்... நீ எதுக்காவ அப்பு மெட்ராஸ்ல இருந்து சின்னப் பயலுவள இறக்குமதி செய்யணும்..."

"அய்யோ சித்தி... நான் சுடலைமாடன் விசேஷத்த வீடியோ படம் எடுக்கதுக்காவ கொண்டு வந்திருக்கேன்... கோயில் கொடைக்காவ போட்ட பணம் மாதிரி பத்து மடங்கு சம்பாதிக்கப் போறேன்... எங்கப்பன்... இது தெரியாம முனங்குறாரு. இவனுவ வேற புதுக்கதை கட்டி விடுறானுவ..."

"அப்போ காத்துக் கருப்பன் அடிச்சா... இவங்க கையை கட்டிக்கிட்டு நிப்பாங்களா..."

"அதெப்படி.... நம்ம கோயிலுக்குள்ளேயே வந்து எவனும் வாலாட்டுனா... பின்னிட்டிடுவாங்க பின்னி... வேல தெரிஞ்சவங்க... ஒரே டிக்கட்டுல வீடியோ படத்துக்கு வீடியோ படம்.... அடிக்கு அடி..."

“இந்த பற்குணம் வெறும் வாய்ச்சவடால்காரன்தான்... ஆனால் மெட்ராஸ்ல இருந்து ஊர்காரன அடிக்கதுக்கு ஆள் வந்திருக்குன்னு சட்டாம்பட்டி முழுதும் தண்டோரா போடப் போறான்... இந்தத் தகராறுல கலந்துக்காத காரை வீட்டுக்காரங்களும், நமக்கு எதிரா திரளப் போறாங்க... நம்ம கோயில இழுத்து மூடப் போறாங்க...”

“நான் மெட்ராஸ்காரங்கள அனுப்பி வைக்கவும் முடியாது... ஊர்க்காரன் கிட்ட சொல்லவும் முடியாது... ஏன்னா இந்தச் சமயத்துல எவனும் எவன் பேச்சையும் கேட்க மாட்டான்... ஒரே குழப்பமாய் இருக்கு சித்தி... ஊர்க்காரனுவ ஒண்ணா திரண்டா நம்ம பயலுவளே ஓட்டம் பிடிப்பானுவ.... என்ன செய்யலாம்... ஒரு வழியும் தெரியலே....”

“ஒனக்கு சுடலைமாட சாமி கொடையும் நடக்கணும்... கரும்பட்டையானும் தல குனியணும்... ஊர்க்காரனும் பேசப்படாது... இந்த மூணும் ஒரே சமயத்துல நடக்கணுமுன்னா நடக்கும்... நடத்திக் காட்டுறதுக்கு நானாச்சு...”

“எப்டி சித்தி.....? எப்டி...?”

“ஆனால் சித்தி சொல்லுறதை மட்டும் நீ கேக்கணும்”

“நீ எது சொன்னாலும் கேக்கேன் சித்தி...”

“அதோ... சோளத் தட்டைக்குள்ள மறஞ்சுட்டாளே... கோலவடிவு, அவள... நீ கூட்டிட்டு ஓடணும்....”

நடந்து கொண்டிருந்த துளசிங்கம் அப்படியே நின்றான்... அதைக் கவனிக்காது நடந்த அலங்காரி சித்தியின் கையைப் பிடித்து, அவளையும் நிறுத்தினான்.... அவளையே சிறிது நேரம் ஆச்சரியமாய் பார்த்துவிட்டு சந்தேகம் கேட்டான்.

“உனக்குப் பைத்தியமா சித்தி...? குத்துலயும் கொலையுலயும் விடப் போற விவகாரத்தை எப்படி சிரிச்சுக்கிட்டே பேசுறே...?”

“ஒன்ன அந்த மாதிரி சந்தர்ப்பத்துக்கு சித்தி விடுவனா...?”

"விடப் போறியே... அப்பவே... நீ... இப்படிச் செய்யச் சொல்வேன்னு ஒரு சந்தேகம்... ஆனால்... இதுக்குமேல... என்னால முடியாது... சித்தி... சுடலை குடைதான் முக்கியம்..."

"சுடலைக்கு கொடை மட்டும் ஒன்னால நடத்த முடியுமோ...? ஊர்க்காரன் தான் விடுவானா...? அப்போ மட்டும் குத்து வெட்டு கொலை நடக்காதோ...?"

"சண்டையில சாகிறது வேற... சாகிறதுக்காவ சாகிறது வேற...."

"ஒன்னைவிட சித்தி பத்து பதினஞ்சு வயது பெரியவள்... ஆயிரம் சண்டையைப் பார்த்தவள்... ஊர்ல ஒவ்வொருத்தனைப் பற்றியும் தெரிஞ்சவள்... இவ்வளவு கஷ்டப்பட்டு நம்ம கௌரவத்த காப்பாத்த வேண்டியதில்ல... அதுக்கு லேசான வழி இருக்கு... கோலவடிவை கூட்டிக்கிட்டு ஓடு... கரும்பட்டையான் கன்னத்துல கை வச்சுடுவான்... காத்துக் கருப்பன் பொண்ண சரியா வைக்கத் தெரியலன்னு பழனிச்சாமியத் திட்டுவான்... ஆக நம்ம கொடை பிரமாதமா நடக்கும்..."

"நீ சொல்றது மாதிரி கரும்பட்டையான் பயலுவள, அதுவும் இந்த திருமலைப் பயல... அவமானப் படுத்துறதுக்கு இதைவிட நல்லவழி எதுவும் இல்ல... ஆனால் கோபத்துல அவங்க... அதாவது அந்தச் சமயத்துல ஏற்படுற கோபத்துல அரிவாள கிரிவாள எடுத்து...."

"அதை அப்போ பார்த்துக்கலாம்... ஊர்க்காரன் அந்த அளவுக்கு விடமாட்டான்... பழனிச்சாமிக்கு துளசிங்கம் மருமகனாயிட்டான். ஊரு உலகத்துல நடக்கது மாதிரி ஒரு நாள் இல்லாட்டாலும் ஒரு நாளாவது ஒண்ணா சேருவாங்க.... நாம ஏன் கெட்ட பேர் வாங்கணுமுன்னு ஒதுங்கிக்குவான்..."

"சரி சித்தி... இவள் சம்மதிப்பாளா..."

"சம்மதிக்க வைக்கது... என் பொறுப்பு.."

"சரி.... இவளக் கூட்டிட்டுப் போய் அப்புறம் எங்க விடுறது..."

"ஒன் சினிமாப் புத்திய காட்டிட்ட பாரு... நான் என்ன அவ்வளவு கல் நெஞ்சுக்காரியாடா... நானும் மனுஷிதாண்டா... கோலவடிவை நீ

கூட்டிக்கிட்டு ஓடிப்போற... ரிஜிஸ்தர் ஆபீஸ்ல அவளை கல்யாணம் செய்யுற... அப்புறம் நம்ம சுடலைமாடசாமி கொடைக்கு ரெண்டு பேருமா புருஷன் பொண்டாட்டியா வாரீய....."

"கொடை நாளைக்கு ராத்திரி துவங்குதே..."

"நாளைக்கு மறுநாள் வெள்ளிக்கிழமைதான் உச்சம்... அதுக்கு வந்தா போதும்..."

"இவள் சரியான நாட்டுப்புறம்... இவளப்போய் கல்யாணம் செய்யுறதை நினைக்கவே....'

"கரும்பு தின்னக் கூலியாடா கேக்கே... கூலி.... அவள் மாதிரி ஒரு குடும்பப் பெண் கிடைக்க நீ கொடுத்து வைச்சிருக்கணும்... ஆனால் இப்பவே சொல்லிட்டேம்பா... அவள கல்யாணம் செய்யுறதா இருந்தா கூட்டிட்டுப் போ... இல்லாட்டா இப்பவ சொல்லிடு... அப்புறம் ஒன் பாடு... ஊர்க்காரன் பாடு... சுடல கோயில் மூடட்டும்... செம்பட்டையான் தலை குனிஞ்சு நடக்கட்டும்... எனக்கென்ன... நேருக்கு நேராய் நெஞ்சை நிமுத்துறவளுக... எத்தனையோ பேர் இருக்காளுவ... ஆனால் கோலவடிவு கிடைச்சதுக்கு நீ கொடுத்து வச்சிருக்கணும்..."

துளசிங்கம், மீண்டும் நின்றபடியே யோசித்தான்... சித்தி சொல்வது ஒருவகையில் சரிதான். கோலவடிவு குடும்பப் பாங்கான பெண்.... நிசமான பெண்... அவனுக்கு ஏத்த ஜோடி இல்லதான்... ஆனால் எதையும் சோடிச்சுப் பேசத் தெரியாத அப்பாவி... வீட்ல பொண்டாட்டியா இருந்துட்டுப் போவட்டும்... திருமலைப் பயலுக்கும் செருப்படி கொடுத்தது மர்திரி இருக்கும்...

அலங்காரி, துளசிங்கத்தின் நடைவேகத்தை வர்ணித்தாள்.

"எப்பாடா... நீ வேகமாய் நடக்கதைப் பாக்க சித்திக்கு எவ்வளவு தெம்பா இருக்கு தெரியுமா... அதோ பாரு... பனங்காட்டுக்குள்ள போன பற்குணம் திரும்பி நடக்கதை... நம்ம கிட்ட வம்பு பண்ணுறதுக்குன்னே வந்திருக்கானுவ... பாதியிலயே... பேதில போற... பயலுவ... சரி... மெதுவா நடப்பா... சித்தியும் கூட நடக்கணுமுல்லா...."

"நீயும் எங்ககூட வாயேன் சித்தி..."

"நீங்க ஓடிப்போறதால ஆடிப்போற ஊரை சமாளிக்க நான் இருக்கணுமே...."

அலங்காரியும் துளசிங்கமும் பள்ளப் பகுதியான பருத்திக் காட்டைத் தாண்டி, மேட்டுப் பகுதியான சோளத் தோட்டத்தின் பக்கமாக வந்தார்கள். அலங்காரி, ஊருக்குள் மறைந்து கொண்டிருந்த பற்குணத்தையும், அவரோடு சென்ற ராமசுப்புவையும் பார்த்துக் கொண்டே நின்றாள்... சோளப் பயிருக்குள் போகப் போன துளசிங்கத்தை இழுத்துப் பிடித்து நிறுத்தினாள்... பிறகு மெல்லக் கூவினாள்...

"கோலவடிவு... ஒனக்கு நல்லகாலம் வந்துட்டுடி... என் ராசாத்தி... எந்தப் பக்கமா நிக்கே...?"

அந்தப் பெரிய சோளத் தோட்டத்தில் நடுப்பக்கத்தில் நான்கைந்து சோளத் தட்டைகள் வளைந்து வளைந்து ஆடின... வா... வா... என்று வளைந்தன...

துளசிங்கத்தைப் பார்த்த கோலவடிவால், தாங்கமுடியவில்லை... தாளமுடியவில்லை... விக்கலும் வெடிப்புமாய் அழுதாள். முகத்தைக் கரங்களால் மூடியபடியே அழுதாள். அவனைப் பார்த்து முகம் படர்ந்த கர விரல்களை விலக்கி, வெட்கத்தோடு சிரித்து சிணுங்கியவள் இப்போது வெட்கமற்றவள் போல் அழுதாள்... அவளைப் பார்க்க துளசிங்கத்திற்கே என்னவோ போலிருந்தது.

கோலவடிவின் பக்கம் அலங்காரி வந்து நின்று கொண்டாள்... அவள் தலையைச் சாய்த்து, தன் தோளிலே போட்டுக் கொண்டாள்... பிறகு, அவளைத் தனக்கு எதிராகத் திருப்பி வைத்துக் கொண்டு, எந்தவித பீடிகையும் போடாமலே வெட்டொன்று துண்டு ரெண்டாகப் பேசினாள்.

"எனக்கு நீட்டி முழக்கிப் பேச நேரமில்ல கோலம்... ஒனக்காவ உயிரைக் கொடுக்கவும் இவன் தயாராயிட்டான்... ஒன்னை அக்னி ராசாவோட சேர்த்து பாக்கவே இவனால முடியல.... அதனால

நாளைக்கு ராத்திரிக்கு ஒன்னை கூட்டிட்டுப் போய் மறுநாள் காலையில ரிஜிஸ்தர் ஆபீஸ்ல தாலி கட்டுதான். அப்புறம் மாலையும் கழுத்துமாய்... ஒங்கப்பா பழனிச்சாமி காலுல வந்து விழுவான். துளசிங்கம், பழனிச்சாமி அண்ணாச்சிக்கு மருமகனா ஆயிடுவான். நீ எலி டாக்டரு மருமகளா ஆயிடுவே... கோயில் கொடை தகராறும் தீந்துடும்... ஒன்னைப் பிடிச்ச அக்னிராசா சனியனும் விலகிடும்... என்ன சொல்லுதே... ரெண்டுல ஒன்னை இப்பவே சொல்லு.... ஒனக்காவ நாங்க ரெண்டு பேரும் இங்க வந்துட்டோம்.... ஒங்க ஆட்கள் எங்களப் பார்த்துட்டா ரெண்டு கொல விழும்.... அதுக்கு முன்னால சொல்ல வேண்டியத சொல்லிடு... அத்த சொன்னதுக்கு சம்மதமா..."

கோலவடிவு திகைத்துப் போனாள். திக்குமுக்காடினாள்... இப்படிப்பட்ட யோசனையை அவள் எதிர்பார்க்கவில்லை.... அதேசமயம் அவனை விட்டுவிட்டு, அக்னியை வலம் வரவும் மனம் இல்லை... ஆனாலும் இப்படியா... எம்மாடி நெனச்சுச் பார்க்கவே முடியலியே.... இவருகூட நான் ஓடணுமா... இதைவிட செத்துடலாம்... அப்பா துடிச்சிடுவாரு.... அம்மா செத்திடுவாள்... அண்ணாச்சி குதிப்பான்.... அவங்க கிடக்கட்டும்... எனக்கே இது சரியா தெரியலியே... எம்மாடி... அலங்காரி அத்தையோட யோசனைப் பாரு.... யோசனை...

கோலவடிவு, பூணிக்குருவி மாதிரி தோன்றிய ஒரு சோளக் கதிரைக் கையில் பிடித்து வைத்துக் கொண்டு அதையே பார்த்தபடி நின்றாள்.... துளசிங்கம் உப்புக் குத்திக் கால்களில் நின்றபடி சோளத் தோட்டத்திற்கு வெளியே நோட்டம் விட்டான்... அலங்காரி அடுக்கிக் கொண்டே போனாள்...

"ஒன் நிலம எனக்குப் புரியுது கோலம்... ஆனால் ஒரு பொண்ணு... எதிர்காலத்துக்காவ இந்தக் காலத்துலயே ஒரு முடிவு எடுத்தாகணும்... ஊர்ல கொண்டான் கொடுத்தாங்க வருஷம் முழுசும் சண்ட போடுவான்... அதுல நம்ம வாழ்க்கைய தொலச்சிடப்படாது... ஊர்ல நடக்க பாரதப் போருக்கு நீ அரவானாய் ஆயிடப்படாது... என்ன சொல்லுதே... ஆள் அரவம் கேட்குது... சரிடா... துளசி.... வாடா

போகலாம்... கோலத்துக்கு அலங்கோல மாகணுமுன்னு தலைவிதி இருந்தால்... நான்தான் என்ன செய்ய முடியும்... நீதான் என்ன செய்ய முடியும்... புறப்படுடா..."

அலங்காரி துளசிங்கம் கையைப் பிடித்து இழுத்தபடியே நடக்கப் போனாள்.... கோலவடிவு கையில் இருந்த கதிரை விட்டுவிட்டு, அலங்காரியின் தோளைப் பற்றினாள்... துவண்ட முகத்தோடு பேசினாள்...

"அம்மன் கொடைக்குப் பிறவு ஆற அமர..."

"என்னம்மாளு... நீ... நாங்க என்னமோ ஒனக்கு உதவுறதாய் நெனச்சால், நீ எங்களுக்கு உதவுறதாய் நெனைக்கே... அம்மன் கொடையில என்ன நடக்கப் போவுதோ... எது நடக்கப் போவுதோ.. விவகாரம் கோர்ட்டுக்குக்கூட போவும்... அப்போ கல்யாண மேடைக்கு போக முடியுமா... அதுவரைக்கும் இவனை ஒங்க ஆட்கள் உயிரோட விட்டு வைக்கப் போறாங்களோ... இல்லியோ... எது சொன்னாலும் இப்பவே சொல்லு..."

கோலவடிவு, துளசிங்கத்தையே பார்த்தாள்... அய்யய்யோ... இவர வெட்டிக் கொன்னாலும் கொன்னுடுவாங்களோ... எனக்காவ இத்தன அமளியிலயும் உயிருக்கு ஆபத்தக்கூட நினைக்காம... இங்க வந்திருக்கிற இவர அம்மன் கொடைக்குப் பிறகு அடியோட பார்க்க முடியாமக் கூட போவுமோ... அதுக்காவ இவரு பின்னால நான் ஓட முடியுமா... இதுக்கா அப்பா என்ன வளத்தாரு... இதுக்கா அம்மா என்னப் பெத்தாள்... ஆனால் இப்பவே இவர பிரிய எனக்கு மனம் வரமாட்டாக்கே... இந்தக் காட்டுலயே இவரோடயே இந்த கணத்துல இருந்தே இருக்கலாம் போல மனம் துடிக்குது... இவர விட்டுட்டு என்னால...

"கோலம், அத்தைய நீ தப்பா நெனச்சாலும் சரி... நீ எப்பவோ எடுக்கப் போற முடிவு இப்பவே எடுத்துடு... இல்லன்னா... ஒனக்கே ஒரு முடிவு கட்டிடுவாவ... அக்னிராசாவ கட்டிட்டு... அப்புறம் அத்தைகிட்ட... வரப்படாது..."

கோலவடிவு இருதலைக் கொள்ளி எறும்பானாள்... தலையைப் பிடித்துக் கொண்டாள்... முகத்தை ஆட்டிக் கொண்டாள்... தலையைப் பின்னால் வளைத்து, கண்ணீரைப் பின்புறமாகத் தெறிக்க விட்டாள்... துளசிங்கம் நகர்வது போல் தெரிந்தது. அலங்காரி அத்தை அவனைப் பிடித்து இழுப்பது போல் தெரிந்தது... அய்யோ... போறாரே.... என்னைவிட்டு போறாரே...

அலங்காரி நிற்பதையும் பொருட்படுத்தாமல், கோலவடிவு துளசிங்கம்மேல் விழுந்தாள்... அவன் இரண்டு தோள்களிலும் கைகளைப் போட்டபடி தேம்பினாள்... அந்தத் தோள்களைப் பற்றிய படியே ஏங்கி ஏங்கி அழுதாள்... 'உன்னை விடமாட்டேன்' என்பதுபோல் அவன் கழுத்தைத் தன் கரங்களால் பின்னிக் கொண்டு அலை மோதினாள்.

அலங்காரி அவசர அவசரமாகப் புறப்பட்டாள்...

"அய்யய்யோ என் ஆட்ட கோவில் பக்கம் மரத்துல கட்டிப் போட்டத மறந்துட்டேன், பாருங்க... நிதானமாக வாங்க... நான் போறேன்."

## 22

ஊருக்கு வெளியே உள்ள முருகன் கோவில் முன்பக்கம்.... தங்கரளி மரங்கள், அந்தக் காலத்துப் பெண்கள் காதில் போடும் 'பாம்படங்களாக' அவற்றில் காய்கள் தொங்கின. பூவரசமரம், பழுத்த இலையோடும், பச்சை இலையோடும் ஒலிபெருக்கி மாதிரியான பூக்களோடும் மின்னின... இவற்றிற்கு மத்தியில் உள்ள வாகை மரத்தின் அடிவாரத்தைச் சுற்றி, இரண்டடி உயரத்தில் சிமெண்ட் தளம் கட்டப்பட்டிருந்தது.... வழிப்போக்கர்களும், வழியைத் தொலைத்தவர்களும் உட்காருவதற்காகச் சட்டாம்பட்டி ஊராட்சி மன்றம் தனது அக்கிரமங்களுக்கு பிராயச் சித்தமாக கட்டிய

சிமெண்ட் திண்ணை... அதில், ரஞ்சிதம் உட்படப் பல பெண்கள் உட்கார்ந்து பீடி வேலையில் மும்முரமாய் ஈடுபட்டிருந்தார்கள்... சில பெண்கள் மரங்களில் அடிவாரங்களில் சாய்ந்தபடி கைகளை இயக்கினார்கள்... இந்தக் கூட்டத்தில், ஊர் வம்பில் தலையிடாத 'காரை வீட்டுக்கார' பெண்களும் இருந்தார்கள். அந்தக் காலத்தில் ஓலை போடாமல் ஓடு போட்டு வீடுகள் கட்டிய குடும்பம். எண்ணிக்கையோ இருபது. இருப்பதோ லட்சங்கள். இப்போது மாடி மேல் மாடி கட்டிடங்கள் உருவாகி விட்டாலும், காரை வீட்டுக்காரன் பட்டம் என்று இவர்களைத்தான் சேரும் என்று இவர்களே சொல்லிக் கொண்டார்கள். ஊரும் சும்மா ஒரு பேச்சுக்குப் பேசும்...

ஒருத்தி அலுப்புத் தீர முதுகை வளைத்தபடியே பேசினாள்.

"எப்பாடா... நம்ம ரஞ்சிதம் புண்ணியத்துல... நம்ம பொழப்பு நல்லாவே ஓடுது... குட்டாம்பட்டில இப்படி ஒரு கூட்டுறவு சங்கம் இருக்க தெரியாமப் போச்சு... பாரு... பழைய இலைய தரல... எடையில குளோறுபிகேஷன் செய்யல... பீடியக் கழிக்கல... வாரத்துக்கு முப்பது ரூபா அதிகமா வரும்..."

"ஏழா... இதுதான் சாக்குன்னு இலைய மோசமா வெட்டாத... தூளை கொறவா வைக்காத..."

"அது ஒன் புத்தி. ஆமா ரஞ்சிதம் நாம எப்போ கூட்டுறவு சங்கத்தை வைக்கிறது..."

ரஞ்சிதம் பீடிகளைக் கையில் சுழலவிட்டபடியே, பேசியவளைப் பார்க்காமலே பதிலளித்தாள்.

"மொதல்ல... இந்த ஊருக்கு ரத்தக் கொதிப்பு மாதிரி வந்திருக்கிற கோவில் கொடை முடியட்டும்... நம்ம கண்ணாடிக்காரர் ஏற்கனவே பல அதிகாரிங்ககிட்ட பேசிட்டு வாரார்... ஒரு மாதத்துல முடிஞ்சுடும்..."

"இந்த பால்பாண்டி பீடிக்கடை போண்டியாகணும்... அவன் பழையபடியும் மாட்டுத் தரகுக்குப் போகணும்..."

"இப்போவாவது ஒற்றுமையோட அவசியத்தை புரிஞ்சுக் கிட்டிங்களா... சில பழமொழிகளோட அர்த்தம் அதன்படி நடக்கும்போதுதான் விஸ்வரூபமாய் தெரியும்... கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்கிறது கோடான கோடி பேருக்குத் தெரியும்... ஆனால் நமக்கு புரிஞ்சது மாதிரி எத்தன பேருக்குப் புரியும்... நாம எல்லாரும் ஒருவர்னும், ஒருவரே எல்லாரும்னும் நினைக்கும்போது மனசுல ஒரு தெம்புவருது பாருங்க... அது எந்த விலைக்கும் கிடைக்காது... இயற்கையான காத்து மாதிரி வெளிச்சம் மாதிரி... இந்த ஒற்றுமை உணர்வு இயற்கையா இருக்கது... மனுஷன்தான் இதை செயற்கையாக் கிட்டான்...."

"பேசு ரஞ்சிதம், ஏன் பேச்ச நிறுத்திட்ட... நீ பேசிக்கிட்டே இரு.... ஒனக்கும் சேர்த்து நாங்க பீடி சுத்துறோம்... சினிமாக் காரனுவளப் பத்திப் பேசிப் பேசியே எவ்வளவு நாளா வீணாக்கிட்டோம் பாரு... ஏன் பேசமாட்டக்க..."

பேசியவள் பேசாதவளைப் பார்த்தாள். பிறகு எல்லாப் பெண்களும் ரஞ்சிதத்தைப் பார்க்க அவள் தொலை தூரத்தைப் பார்த்தாள்... அங்கே வாடாப்பூ வந்து கொண்டிருந்தாள்... தலையிலே கஞ்சிக் கலயம்... தோளிலே மண்வெட்டி... கையிலே கதிரறுவாள்... அழுக்கடைந்த புடவை... புழுதிபட்ட தலைமுடி...

வாடாப்பூ, அவர்கள் பக்கம் வந்து நின்று, உதடுகளைக் கடித்தாள்.... முகத்தைத் துடைப்பது போல் கண்ணீரைத் துடைத்துக் கன்னங்களைக் கழுவிக் கொண்டாள். ரஞ்சிதம் எழுந்த போய் அவள் கையைப் பிடித்துக் கொண்டாள். இதர பெண்களும் அவளைச் சுற்றி நின்று கொள்ள, ரஞ்சிதம் தழுதழுத்த குரலில் பேசினாள்.

"நீ நெசமாவே புரட்சிக்காரி வாடாப்பூ... எங்களுக்காவ அப்பாவி அப்பாவே பாவியாயிடும்படியாய் அவர்கிட்டே அடிபட்டிருக்கே.... எங்களுக்காவ சிலுவ சுமந்திருக்கே... ஏசெண்டு எவ்வளவோ கெஞ்சியும் என் தோழிகள் இல்லாம சுத்தமாட்டேன்னு சொல்லிருக்கே... இதுக்காவ கத்தரிக்குப் பதிலா மண்வெட்டிய தூக்கிட்டே... ஒன் தோளுல தொங்குற மண்வெட்டியும், கையில இருக்கிற கதிரறுவாளும்

ஒரு நாளைக்குக் கேள்வி கேட்கத்தான் போகுது... அப்போ கேள்விக்கான பதிலும் தானா வரும்... ஒனக்காக ஒரு இடம் எப்பவும் தயாராய் இருக்கு வாடாப்பூ... நான் அமைக்கப் போற சங்கத்துல முதல் பேரே ஒன் பேர்தான்... வாடாப்பூ...."

வாடாப்பூ, அந்தப் பேருக்கு உரியவளாய்ச் சிரித்தாள்... பிறகு ஏதோ பேசப் போனாள்... அன்பிற்கு அடைக்கும் தாழில்லை என்று யார் சொன்னது? அவள் அன்புப் பிரவாகத்தில் வெளிப்பட்டு வார்த்தைகளுக்கு அழுகை தாழிட்டது, கண்ணீர் போட்டியிட்டது... அவர்களைப் பார்த்துச் சோகச் சிரிப்போடு, சுந்தரப் பார்வையோடு அவர்கள் கண்களுக்கு சின்னச் சின்ன உருவமாகி நடந்தபோது-

ரஞ்சிதம், அவள் பின்னால் நடந்தாள்... "ஒரு நொடி நில்லு" என்று கூவியபடியே வாடாப்பூவைப் பின் தொடர்ந்தாள்... கோல்வடிவு விவகாரத்தை இவள் மூலமாக, தெரிய வேண்டியவர்களுக்குத் தெரியப்படுத்தியாக வேண்டும்... திருமலையிடம் பட்ட அவமானத்தைக் காரணமாக்கி, கோலவடிவின் மானம் போவதற்கு மௌன சம்மதம் கொடுக்கலாகாது.

ஆனாலும் இந்தத் திருமலை என்ன பேச்சு பேசிவிட்டான்... உரிமையோடு மோட்டார் பைக் முன்னால் போய் நின்றால், அதாலயே மோதுவது மாதிரி வண்டியை உறும வைத்தான்... கோலவடிவு விஷயமாய் கோவிலுக்குள்ள போய் பேசணுமுன்னு எப்டி பேசிட்டான்.... கோலவடிவப் பத்தி பேச எனக்கு தகுதி இல்லியாம்... அவள், என்ன மாதிரி கண்டவன்கிட்ட பல்லைக் காட்ட மாட்டாளாம்... நான் அவன்கிட்ட, "என்னை கட்டிக்க சம்மதமான்னு" வெட்கம், மானம், சூடு, சுரணை இல்லாமல் கேட்டது மாதிரி எவன் கிட்டயும் கேட்க மாட்டாளாம்... நான் செம்பட்டையான் குடும்பத்து ஏசெண்டாம்... துளசிங்கத்துக்கும் எனக்கும் ஏதோ இருக்கணுமாம்... இல்லாட்டா செம்பட்டையான் பொண்ணுவளுக்காவ ஏசெண்டுகிட்ட சண்டைக்குப் போயிருக்க மாட்டேனாம்... அடேயப்பா...

இவ்வளவு பேச்சுக் கேட்ட பிறகும், இவன் தங்கச்சிக்காவ யோசிக்கணுமா? இது தேவையா? யோசிக்கணுந்தான்... தேவைதான். 'நான் சொன்னது மாதிரி நடந்துட்டு பாருன்னு' நம்மையே நாம

பெருமைப்படுத்தி ஒரு பொண்ணு சீரழியுறத பார்க்கதவிட, நம்மையே சிறுமப்படுத்தி, ஒருத்தியக் காப்பாத்தறது நல்லது... சரி... அக்னி ராசாவுக்கு அவளத்தான் முடிவு கட்டியாச்சே... இனிமேல் கோலவடிவு மாறிடுவாள்... எப்டிச் சொல்ல முடியும்? நேத்து பகலுல அலங்காரி கிட்ட பேசிட்டுப் போனாள்.... இந்த வ்டாப்பூ மூலம் அவளுக்கு புத்தி சொல்லணும்... எங்கிட்டயாவது கொஞ்சம் பேசச் சொல்லணும்... அவளுக்கு எது நல்லதோ அது கிடைக்க ஒத்தாசை செய்யத் தயார்னு உறுதி சொல்லி அனுப்பணும்.. துளசிங்கம்... நல்லவன் இல்லன்னு நயமாச் சொல்லணும்.'

ரஞ்சிதம், வேகமாக நடந்தாள்... எதிரே அவளை மோதுவது போல் பாய்ந்த வேனில் இருந்து தப்பிப் பிழைக்க துள்ளிக் குதித்தாள். அந்த வாகனத்தை கோபமாகத் திரும்பிப் பார்த்துவிட்டு, பின்னர் கொண்ட குறிக்கோளைக் கருதி, வாடாப்பூவை நோக்கி எட்டி நடந்தபோது —

பீடி சுற்றும் பெண்கள் கூக்குரல் கேட்டது... மெள்ளப் போய்க் கொண்டிருந்த வேன் மீது, அந்தப் பெண்கள் கற்களையும், கட்டிகளையும் எடுத்து எறிந்தார்கள்... சில பெண்கள், அந்த வேனுக்குப் பின்னால் ஓடினார்கள். சத்தம் கேட்டுத் திரும்பிய ரஞ்சிதம், அந்தப் பிரச்சினை அவசரப் பிரச்சினை என்பதால், வாடாப்பூவைக் கையாட்டி போகச் சொல்லிவிட்டு, முருகன் கோவில் முன்னால் ஓடி வந்தாள். அந்த வேனோ, ஒரு மூலையில் திரும்பியது... அதன் பின்னால் ஓடிய பெண்கள் மூச்சிறைக்க ஓடி வந்தார்கள்...

"பாரு ரஞ்சிதம்... இந்த மெட்ராஸ் பயலுவள... கிணத்துல குளிச்சிட்டு வேனுல போற பயலுவ சும்மா போக வேண்டியதுதான... எங்களப் பார்த்து கையாட்டிட்டுப் போறாங்க..."

"ஒருவேளை சிநேகிதமாய்..."

"அப்படி என்ன சினேகிதம் இவனுவ கூட... அப்டி இருந்தால் அதோ கதிரறுக்கப் போவுதே சேரி சனங்க... ஆம்புளைங்க அவங்களப் பார்த்தும் கையாட்டி இருக்கணுமுல்லா...?"

"இதுல்லாம் திமுறு ரஞ்சிதம்.. நாம என்னவோ அவங்களைப் பார்த்து மயங்குறதா தூம பயலுவளுக்கு ஒரு நெனப்பு..."

"நீ சொல்றதும் சரிதான்... இப்போ வார சினிமாப்படங்கள்லயும் எவனாவது ஒரு பயல் கண்ணுல கண்ணாடி மாட்டி கழுத்துல காமிராவ தொங்கப்போட்டு ஜீப்புலயோ, மோட்டார் பைக்குலயோ வந்தா... எந்த கிராமத்துப் பொண்ணயும் இழுத்துட்டுப் போயிடலாமுன்னு ஒரு எண்ணத்தை ஏற்படுத்துறாங்க... இவனுவளும் சினிமாக்காரங்களாம்... நிழல நிசமா நினைக்கிற பயல்க....."

"எங்க துளசிங்கத்துக்கு இந்தப் புத்தி ஆகாது... இந்தக் காவாலி பயலுவள எதுக்காவ கொண்டு வரணும்..."

"சரி... பொறுத்திருந்து பார்ப்போம்... இப்போ குட்டம்பட்டில பீடியைப் போட்டுட்டு வருவோம்..."

"ரஞ்சிதம் சொல்லிட்டாள்லா... இன்னுமா கையில கல்ல தூக்கிட்டு நிக்கிய... பைத்தியமுன்னு நெனப்பாவ..."

"மொதல்ல ஒன் கையில இருக்க கல்ல கீழ போடு பைத்தியம்..."

எல்லாப் பெண்களும் பீடித்தட்டுக்களை எடுத்து கொண்டார்கள். அவற்றில் பீடிகள் வண்டல் வண்டலாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தது... அந்தத் தட்டுகள் அந்த அடுக்கால் ஆயிரம் கண்ணுடைய அதிசயத் தட்டுக்களாகத் தோன்றின.... குட்டாம் பட்டிக்குப் போகும் வழியில் தார்ரோடு பக்கமாக நடந்து வந்தார்கள்.... அதற்குக் கிழக்குப் பக்கம் என்ன தகராறு? என்ன கூட்டம்? எலி டாக்டர் எதுக்காவ இங்க வந்தார்... "ஏடி கொஞ்சம் நில்லுங்க... ரஞ்சிதம் நீயும் நில்லு... என்னான்னு பார்ப்போம்..."

காத்துக் கருப்பன்களில் அக்னி ராசாவின் தந்தை ராமய்யாவுக்கு அடுத்தபடியான வசதியுள்ளவர் முத்துப்பாண்டி. ஆகையால் அண்ணாச்சி ராமய்யாவுக்குப் போட்டியாக ராமய்யாவின் தம்பி பற்குணத்தைப் பார்த்துக் கையாட்டிப் பேசினார்.

"எலி டாக்டர் மச்சான் மெனக்கெட்டு நம்ம வீட்டு வாசலுல வந்து கெஞ்சுகிறார்... நம்ம மாரியம்மன் கோயில் சுடலைமாடன் உத்தரவு கேட்கும்படியாய்... உத்தரவு போடப் போறதாய் சொல்லுதார்... இது நமக்குப் பெருமைதான?"

"புராணத்தை தலைகீழாய் மாத்தப்படாது பாரு... எலி டாக்டர் மச்சான் சூதோட சொல்லுறதை புரிஞ்சுக்கணும்..."

"அப்டிப் பார்த்தால் யாரு சூதில்லாதவிய...? நீ மட்டும் ஒங்க அண்ணாச்சி மவனுக்கு கோலவடிவ காதும் காதும் வச்சாப் போல நிச்சயம் செய்யணும்... அதுக்காவ எங்களை பயித்தியக்காரனா ஆக்கணுமோ...?"

"முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போடாத..."

"ஒனக்கு வேணும்போது சொக்காரன்... வேண்டாத போது பங்காளி. கோலவடிவு அக்னி ராசாவுக்கு முடிக்கலாமான்னு சொக்காரன் கிட்ட கேட்டியா...'

"சரி... இப்போ கேட்கேன்... ஒன் சொல்லுக்கு கட்டுப்படுறேன்..."

"இப்ப முக்கியம் கோலவடிவு இல்ல... மாரியம்மன் தான்.... சுடலைமாடன்.... இங்க வரப் போறார்...."

"வந்தா காலை ஒடிப்பேன்..."

"ஒடிக்கிற கைய வெட்டுவேன்..."

எலி டாக்டர் ரசிக்கும்படியாய் காத்துக் கருப்பன்கள் கட்சி பிரிந்து சண்டை போடப் போனார்கள். அப்போது பீடிப் பெண்களிடம் ஒரு கூச்சல். எல்லோரும் சண்டையை விட்டுவிட்டு அங்கே ஓடினார்கள். 'காரை வீட்டுக்காரி' பீடிப்பெண் ஒருத்தி கத்த, மற்றப் பெண்கள் 'மாஸ்டர்கள்' வந்த வேனை, கைகோத்து, மறித்து நிறுத்தினார்கள்.

"இந்தப் பயலுவ அப்பவும் எங்களப் பார்த்து கையாட்டுறானுவ... இப்பவும் கையாட்டுறானுவ... எச்சிக்கல பயலுவ... என்ன நெனச்சு கிட்டாங்கன்னு கேளுங்க.... சட்டாம்பட்டி பொண்ணுங்கன்னா இளக்காரமா... அவங்கள என்னன்னு கேளுங்கய்யா..."

இதற்குள் வேனைச் சுற்றி கூட்டம் மொய்த்தது. திருமலையும் கூட்டத்தில் ஒருத்தன். அதுதான் சாக்கு என்று வேனின் முன் சக்கரங்களில் காற்றைப் பிடுங்கி விட்டான். ஒருத்தர், வேனுக்கு

உள்ளே ஒடுங்கி இருந்தவன்களைப் பார்த்து அதட்டினார். காரைவீட்டுக் குடும்பத்தின் அண்ணாவி...

"இறங்குங்கல... எங்க பொண்ணுங்களப் பத்தி என்னல நெனச்சிய..."

"இவங்க ஊரையே அடிக்க வந்த பயலுவப்பா... நம்ம பொண்ணுவள கையாட்டி நம்மள வம்புச் சண்டைக்கு கூப்புடுறாவனுவ... ஏல செறுக்கி மவனனுவள... இறங்குறியளா... இறக்கணுமா..."

"இதுக்குல்லாம் காரணம்... இந்த துளசிங்கப் பயல்... அவன இழுத்துக் கிடத்தணும்... மல்லாக்கப் போட்டு வயித்துல மிதிக்கணும்... டேய்.... ஒரு அஞ்சாறு பேரு போயி... அந்தப் பயல எங்க இருந்தாலும் இழுத்துட்டு வாங்கடா. நம்ம ஊரு பொண்ணுங்க கையப் பிடிச்சு இழுக்கலாமுன்னு அந்தப் பயலே இந்தப் பயலுவளுக்கு சொல்லிக் கொடுத்திருப்பான்... ஏய்... சீக்கிரமாய் போய் இழுத்துட்டு வாங்கல..."

# 23

வியாழக்கிழமை; இரவு ஒன்பது மணி என்பதை உறுதிப்படுத்துவது போல் தொலைக்காட்சிப் பெட்டியில், தமிழ்ப் பெண் ஒருத்தி மறைந்து, ஒரு இந்திப் பெண் தோன்றினாள்.

பழனிச்சாமி வீட்டில் கல்யாணம் நடப்பதுபோல் பந்தி நடந்தது. வில்லுப் பாட்டாளிகள், மேளக்காரர்கள், (பதினாறு எம்.எம். காரர்கள் ஏனோ வரவில்லை) பந்தல்காரர்கள், ஒலிபெருக்கிக் காரர்கள், இவர்களுக்கு அட்வான்ஸ் கொடுத்தவர்கள், அட்வான்ஸ் நிச்சயித்தவர்கள், பண்ணையாட்கள் என்று பல்வேறு தரப்பினர், பல்கிப் பரவி, பாய்களில் உட்கார்ந்து வாழை இலைகளை வழித்துக்

கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு ராமசுப்பு, திருமலை, அருணாசலம் போன்றவர்கள் பறிமாறி முடித்துவிட்டு, தாங்களும் சாப்பிடுவதற்காக உட்கார்ந்தார்கள். பந்தியைக் கண்குளிரப் பார்த்து விட்டு, பழனிச்சாமி, தமது தேக்குக் கட்டிலில் உட்கார்ந்தார். எதிரே முற்றத்தில் குவியல் குவியலாய் கிடந்த வாழைக் குலைகளையும், வெற்றிலைக் கட்டுக்களையும், பூமாலைகளையும் மேலெழுந்த வாரியாகப் பார்த்துவிட்டு, லேசாகக் கண்மூடப் போனார்.

சுடலைக்குக் கொடை வெள்ளிக்கிழமை என்பது ஒப்புக் கொள்ளப்பட்டாலும், அது உச்ச நாள்... இன்று, பதினொரு மணியளவில் மேளம் தட்டப்படும்... ஒலிபெருக்கி பாட்டுப் பாடும்... அதற்குள் எழுந்துவிடலாம் என்றுதான், பழனிச்சாமி படுக்கப் போனார். அதற்குள் வந்துட்டானுவ... ராமசாமி, நாட்டு வக்கீல், மாடக்கண்ணு, கருப்பசாமி....

பழனிச்சாமியின் மனைவி பாக்கியம், கணவரின் காலடிப்பக்கம் உட்கார்ந்திருந்தாள். கோலவடிவு சாப்பிட்டாளோ, சாப்பிடலியோ, அம்மாவின் பக்கத்தில் அவளை ஒட்டியபடியே உட்கார்ந்து அம்மாவின் கால் பாதங்கள்மேல் தன் கால்களைப் பரப்பினாள். அப்பாவையே, அவர் பார்க்காத சமயமாகப் பார்த்தாள். எதிரே பனை நார் கட்டிலில் 'உஷ்' என்ற 'அப்பாடா மூச்சோடு' உட்கார்ந்த அண்ணன் திருமலையைக் குற்ற உணர்வோடு பார்த்தாள்... அம்மாவின் பாதங்களை அழுத்தமாகப் பற்றினாள்... தாய்க்காரி பாக்கியம், தற்செயலாகத்தான் சொன்னாள்.

"என்னழா வந்துட்டு ஒனக்கு...? ஏன் இப்டி ஒட்டுப் புல்லு மாதிரி ஒட்டுறே... ஒரே புழுக்கமா இருக்குல்ல... தள்ளி உட்காரேன்..."

கோலவடிவு தள்ளி உட்காரவில்லை. அம்மாவைத் தள்ள போகிறவள்போல் நெருக்கியடித்தாள்... பங்காளிகளின் பேச்சு சுவாரஸ்யத்தில், பாக்கியமும் அந்த 'பாச நெருக்கடியை' மறந்து விட்டாள்... கோலவடிவுதான், அங்கே நடக்கும் பேச்சைக் கேட்பதுபோல் பாசாங்கு செய்தபடி எங்கோ நினைத்தாள்... இவங்கள விட்டுட்டு எப்டிப் போவேன்... என் அம்மாவ விட்டுட்டு ஒரு மணி நேரத்துக்கு

மேல பிரிஞ்சதில்ல... எங்கப்பா முகத்த ஒரு நாளைக்கு முப்பது தடவையாவது பாக்காட்டா அது எனக்கு நாளே கிடையாது.... எனக்காவ அரிவாளைத் தூக்குன அண்ணா... இவனுக்கு நானே அரிவாளாயிடப்படாதே... போக மாட்டேன்... எங்கேயும் போகமாட்டேன்... யார்கூடவும் போகமாட்டேன்... போகவே மாட்டேன்...

கோலவடிவு, மூச்சைப் பிடித்திழுத்து, முன்னெற்றிச் சுருக்கங்கள் கலைய, பதட்டம் லேசாய் அடங்க, அம்மாவின் பாதத்தைப் பிடித்த கைகளைத் தூக்கி, மடியில் போட்டபடியே மனதை வைராக்கியப் படுத்தினாள். அங்கே நடந்த பேச்சுக்களின் ஒலியை மட்டும் உள்வாங்கி, அதன் உட்பொருள் புரியாமல் இருந்தவள், திடீரென்று காதுகளைக் கூர்மைப்படுத்தினாள்... மத்தியானமே காற்றில் வந்த செய்திக்கு, நாட்டு வக்கீல் நாராயணன் வர்ணனை கொடுத்தான்.

“காத்துக்கருப்பன் குடும்பத்த கலுகமூட்டி பிரிச்சுட்ட பெருமையில எலி டாக்டர் நின்னாரா.... அப்போ பார்த்து அந்த வேன் டயர நம்ம திருமலை காற்றப் பிடுங்கி விட்டானா... வேனுக்குள்ள இருந்த பயலுவ பித்துப் பிடித்துப் போய் இருந்தாங்களா... அப்புறம் கையெடுத்து கும்பிட்டபடியே இறங்குனாங்க... கூட்டம் அவங்கள அடிக்கப் போச்சுதா.... உடனே எலி டாக்டர் என்ன பண்ணுனாரு தெரியுமா...”

“தெரியுமான்னு தெரிஞ்சவன் கேட்டா.... என்னடா அர்த்தம்... சொல்லு...”

“எலி டாக்டர் தரையில அப்படியே நெடுஞ்சாண் கிடையா விழுந்துட்டாரு... கூட்டத்துக்கு முன்னால நல்ல பாம்பு படமெடுத்து காட்டுறது மாதிரி... படுத்தபடியே ஜனங்கள கையெடுத்துக் கும்பிட்டாரு....”

“மானங்கெட்ட பய...”

“நீ வேற, அப்டி மட்டும் அவரு கும்பிடாட்டா... மெட்ராஸ்காரனுவள ஊர்க்காரங்க உண்டு... இல்லன்னு பிச்சி எடுத்திருப்பாங்க.... ஒரு எலும்புகூட மிச்சம் இருந்திருக்காது....”

"அப்புறம்..."

"துளசிங்கம் சேக்காளிவ, கோணச்சத்திரத்துக்கு ஓடிப் போயிட்டாங்களாம்... இதுல ஒண்ணு தெரியுமா...? இதுக்குல்லாம் காரணம் துளசிங்கமுன்னு அவனைப் பிடிச்சு வாரதுக்கு காத்துக் கருப்பன் பற்குணம், காரை வீட்டுக்காரன் 'வாலன்', இன்னும் சிலருமா ஓடுறாங்க... எலி டாக்டர் இவங்க பின்னால ஓடினாரு... துளசிங்கம் கிடைக்கல... எப்படியும் ரயில்வே பாலம் பக்கம் வருவான்னு நாலைஞ்சு பேரு... அவனுக்குன்னே அரிவாள வச்சுட்டு காத்து இருக்காங்க... துளசிங்கத்துக்கு அநேகமாக ஒத்தக் கையாவது, காலாவது போயிடும்.... நாம செய்ய வேண்டியத காளியாத்தா வேற ஆள்மூலம் செய்ய வைக்கிறாள்... துளசிங்கம் பய தொலைஞ்சிட்டாமுன்னு தோணுது..."

"இதனாலதான்... பெரிய சினிமாவ மறந்துட்டியா?"

"ஊர்ல இதவிடப் பெரிய சினிமா நடக்கப்போவுது.... துளசிங்கம் பய வசமா மாட்டிக்கிட்டான்... இந்நேரம் முடிச்சிருப்பாங்க..."

பழனிச்சாமி, ராமசுப்புவையும், நாட்டு வக்கீலையும் செம்பட்டை யான்களைப் பார்ப்பது போல் பார்த்தார். சுடச்சுட, சூடுபோட்டுப் பேசினார்.

"ஒருவன அடிக்கிறதும்... பிடிக்கிறதும்... மனுஷத் தன்மையில்லடா... கல்ல எறியுறவனுக்கு ஒரு நிமிஷம், அதனால கஷ்டப்படுறவனுக்கு ஒரு யுகம்.... இதுல உடம்புக் கஷ்டத்தைவிட மனக்கஷ்டம் இருக்கே... அது சொல்லி மாளாது.... துளசிங்கத்த ஒரு காலை எடுத்துட்டாங்கன்னே வச்சுக்க. அவன் ஒத்தக் காலுல நொண்டியடிச்சு நம்ம வீட்டுப் பக்கமா நடந்து போறான்னு வச்சுக்க... நம்மள... 'நீங்களும் ஒரு காரணம்' என்கிறது மாதிரி பரிதாபமா பாக்கான்னு வச்சுக்க... ஒன்னால தாங்க முடியுமோ என்னமோ... என்னால தாங்க முடியாது... சில பேச்சு பேச்சுக்குன்னே இருக்கு... காரியத்துக்காவ இல்ல... பாக்கியம் எழுந்திருக்காத... எனக்கு பசிக்கல...."

"பாத்தியாப்பா.... ஒங்க அண்ணாச்சிய..... அவர இனும சாப்புட வைக்கது ஒங்க பொறுப்பு..."

'என்ன அண்ணாச்சி.... வாலன், துளசிங்கத்தோட மோதப் போனால் நாம் என்ன செய்ய முடியும்...”

“ஒரு குற்றம் நடக்குமுன்னு தெரிஞ்சும் அதை தடுக்காம இருக்கது பெரிய குற்றம். சரி... சரி... ஓடுங்க... வாலனையும், பற்குணத்தையும் எங்க இருந்தாலும் தேடிப்பிடிச்சு இங்க கூட்டி வாங்க... நீங்க போறியளா... நான்.... போவட்டுமா...”

“எப்பா... சீக்கிரமா கூட்டிவாங்க... இல்லாட்டா ஒங்கண்ணாச்சி புறப்பட்டு போவாரு...”

“ஊர்சனமே கொதிச்சு நிக்குது... அதுக்கு நாம என்ன பண்ண முடியும்... எப்படியோ போயிட்டு வாறோம்... அண்ணாச்சிக்காவ... போறோம்... அதுக்குள்ள முடிஞ்சுட்டுன்னா நாங்க ஜவாப் இல்ல...”

“ஒங்க பேச்ச தட்டாமப் போயிட்டாங்கல்ல...? அவங்க அடாபிடி பண்ணுமுன்னால தடுத்துடுவாங்க... நீங்க சாப்புடுங்க...”

“அப்டி இல்ல பாக்கியம்... என்னப் பத்தி தெரிஞ்சிருந்தும்... என் முன்னால இதையெல்லாம் பேசலாமுன்னு அவங்களுக்கு ஒரு எண்ணம் வந்துட்டுப் பாரு...”

“சரி... மனச கலங்கவிடாதீங்க. நல்ல வேள நமக்கு வார மருமவனாவது அப்பிராணி... வம்புதும்பு பேசாதவன்...”

பழனிச்சாமி பதில் சொல்லாமல் இருந்தார். எஞ்சியிருந்த பங்காளிகள் கோவில் காரியங்களைப் பார்க்கப் போய்விட்டார்கள்...

அப்பாவையே அதிசயித்து பார்த்த கோலவடிவு, அவருக்கு மகளாகப் பிறந்த பெருமிதத்தில் நெகிழ்ந்து போனாள்.... அதே சமயம், சட்டென்று ஒரு எண்ணம் அவள் மனதில் முள்ளாகியது. துளசிங்கம் மச்சானை ஒண்ணு கிடக்க ஒண்ணு செய்துடுவாங்களோ. மெட்ராஸ் பயலுவ அப்டி நடந்துக்கிட்டா... அவரு என்ன பண்ணுவாரு... அய்யய்யோ அவரு ஒத்தக் காலுல நடக்க வேண்டியது வருமோ... அதை இந்தப் பாவி கண்ணால பாக்க வேண்டியது வருமோ... எப்பா... எப்பா... நீங்களும் எழுந்திரிச்சு போங்கப்பா... அவர காப்பாத்துங்கப்பா...

அப்பாவிடம் நினைத்ததைச் சொல்ல முடியாத கோலவடிவு, மொட்டை மாடிக்கு வந்தாள். அங்கே நின்றபடி நான்கு பக்கமும் கண்களைச் சுழலவிட்டாள்... எங்கேயும் விபரீதமான சத்தம் கேட்கவில்லை... சுடலைமாடன் கோவில் முன்னால் மின்சார வெளிச்சத்தில் சின்னக் கூட்டம்... காளியம்மன் கோயிலில் பெரிய கூட்டம்.... எல்லோரும் சர்வ சாதாரணமாகப் பேசிக் கொண்டுதான் இருக்காங்க... இந்த துளசிங்கம் எங்கதான் போயிருப்பாரு...? போய்ப் பார்ப்போமா.... எம்மாடி காதும் காதும் வச்சது மாதிரி போமாட்டேன். எங்கம்மாவ விட்டுட்டு போவமாட்டேன்... அம்மாவ விட்டுட்டுப் போனாலும் போவேனே தவிர, அப்பாவை விட்டுட்டுப் போவமாட்டேன். துளசிங்கம் மச்சான் என்னைக் கல்யாணம் பண்ணான்டாம்.... அவரு காலு கையி கதியா இருந்தால் போதும்... ஒத்தக் காலுல நடக்காம இருந்தா அதுவே போதும்...

கோலவடிவு, அந்த மொட்டை மாடியில் எத்தனை சுற்றுச் சுற்றினாளோ, எத்தனை கிலோ மீட்டர் நடந்தாளோ... கிழக்குப் பக்கமாய் திரும்பினாள். 'அது என்ன லைட்டு... சிவப்பு லைட்டு... பருத்திக் காட்டுல... துளசிங்கம் மச்சானா... சொன்னபடி நிக்காரே... நேத்து சோளத்தட்டைக்குள்ள சொன்னாருல்லா... சரியா பதினொரு மணிக்கு என் விக்கி வண்டியோட நிப்பேன்... சிவப்பு லைட்டக் காட்டுவேன்.... வாரதும் வராததும் ஒன் இஷ்டமுன்னு சொன்னாரே.... போமாட்டேன்... தூங்கப் போறேன்.... இப்டி செய்தா என்ன... வாலனும், பற்குணமும், அவரை வெட்டிடப்படாதே... எதுவும் செய்துடப்படாதே பழி எங்க குடும்பத்து மேல வந்துடப்படாதே... பழி வருதோ இல்லியோ... அவருக்கு எதுவும் வரப்படாது.... அவர உஷார் படுத்திட்டு வந்திருவோம்... எம்மா எப்பிடி போறதாம்... போனால் என்ன? ஒடியா போறோம்... பழகுன தோசத்துக்கு அவருகிட்ட சொல்லிட்டுத்தான வரப் போறோம்... ஒருவருக்காவ காத்திருக்கவும் படாது.... காக்க வைக்கவும் படாது... இதோ... நாலு எட்டுல போய்... சொல்லிட்டு ரெண்டு எட்டுல திரும்பப் போறேன்... சீக்கிரமா போவணும்... இல்லாட்டா... அங்கே போயி... அவரக் கொன்னுடப் போறானுவ...'

கோலவடிவு படியிறங்கினாள். “எம்மா... கோவிலுக்குப் போறேன்” என்று அம்மாவிடம் சொல்லி விட்டு அவள் பதில் சொல்லுமுன்பே படி தாண்டினாள். காளியம்மன் முன்னால் நடந்தாள். அடையாளம் தெரியாமல் இருப்பதற்குத் தலையிலே முக்காடு போட்டபடி பாய்ந்தாள். சுடலைமாடன் கோவிலுக்குப் போவது போல், போய், புளியந்தோப்பில் ஒதுங்குவதுபோல் ஒதுங்கி, பருத்தித் தோட்டத்தின் கரைக்கு வந்தபோது, துளசிங்கம் விக்கி வண்டியை உருட்டிக் கொண்டு வண்டிப் பாதைக்கு வந்தான்.... அலங்காரியும் முக்காடு போட்டபடியே அவன் பின்னால் நின்றாள்...

# 24

கோலவடிவு, அவர்களைப் பார்த்து, அவசர அவசரமாய் பேசினாள்... வீட்டிற்குப் போகத் தயாராய் இருப்பவள் போல், ஒரு காலை மேற்குத் திசைநோக்கி வைத்தபடியே கிழக்குப் பக்கம் நின்றவர்களைப் பார்த்து பேசினாள்.

“எனக்கு ஓடிப்போறதுல சம்மதம் இல்ல... அதுக்காக நான் வர்ல.. துளசிங்கம் மச்சான வெட்டுறதுக்கு ஊருக்காரனுவ சுத்திக்கிட்டு இருக்கானுவ... பழைய பகைய மனசுல வச்சுட்டு அரிவாளோட அலையுறானுவ... எங்கேயாவது போயி... அவரு தப்பிச்சா நல்லது... நான் வாறேன் அத்தே...”

அலங்காரி, அவளை நின்று நிதானித்துப் பார்த்துவிட்டு, அழுகைக் குரலோடு பேசினாள்...

“சரிம்மா... நீ போ... நீ சொன்ன சேதி கோடி பெறும்... இவன் எப்படியாவது போறான்... நீ போம்மா... கூட வேணுமுன்னா துணைக்கு வரட்டுமா... போம்மா... அக்னி ராசாவுட்டயோ... எந்த ராசாவுட்டயோ..

ஒரு தடவ மாட்டிக்கிட்டா ஒரேயடியா மாட்டுனது மாதிரி... என்கிற எண்ணத்தோட போம்மா..."

கோலவடிவு, அந்தக் கும்மிருட்டில் அலங்காரி அத்தையைப் பரிதாபமாகப் பார்த்துவிட்டு வீட்டை நோக்கி உடம்பின் ஒத்துழைப்பு இல்லாமல் நடந்தாள்... பிறகு நின்றாள். நின்றபடியே பேசினாள்...

"எத்தே... இவர சாக்கிரத்தையா இருக்கச் சொல்லுங்க... இவருக்கு ஏதாவது ஆயிட்டுன்னா நான் உயிர விட்டுடுவேன்னு சொல்லுங்க அத்தே..."

சினிமா தோஷம் பிடித்த துளசிங்கம் பேசினான்.

"அப்படியே எனக்கு ஏதாவது ஆனாலும் கோலத்த சத்தம் போட்டு அழப்படாதுன்னு சொல்லுங்க சித்தி... ஏன்னா, அவள் அழுகைக்கான காரணம் ஊருக்கு தெரிஞ்சு அவளுக்கும் எனக்கும் இருந்த பாசம் வெளில வந்துடப்படாது, இன்னொருத்தன் வீட்ல வாழப் போறவள் பாரு..."

அலங்காரி, வாயை வாழைப்பழமாக்கி, நாக்கை ஊசியாக்கினாள்.

"கோலம்... நீ பேசுற முறையும், ஒரு வகையில சரிதான்... ஆனாலும் மன்சு கேட்க மாட்டக்கு... எங்க மச்சான் மவன் வெட்டுப்படப் போறது நிச்சயம்... அதனால, இவனும் வெட்டுப் படுறதே வெட்டுப்படுறோம்... வெட்டிட்டு படுவோமுன்னு இரும்புல பிச்சுவாக் கத்தியோட நிக்கான்... இவன் ஒண்ணு கொலையில் சாவான்... இல்லாட்டா கொலை செய்துட்டு செயிலுல சாவான்... ஏதோ ஒன்கூட ஓடிப் போனால் தப்பிப் பிழைப்பான்னு நெனச்சேன்... அப்புறம் பழனிச்சாமி அண்ணாச்சிக்கு மருமவனாயிட்டா ஊரில் எந்தப் பயலும் இவன எதுவும் செய்ய முடியாதுன்னு இந்த அத்த ஆறுதல்பட்டேன்... கடைசில, நீ அக்னிராசா கிட்ட அவஸ்தப்படணு முன்னும், இவன் அரிவாளால வெட்டுப் படணுமுன்னும் தலைவிதி இருந்தால், அதை யாரு மாத்த முடியும்... நீ மனசு வச்சால் இவனையும் காப்பாத்தலாம்... ஒன்னையும் காப்பாத்தலாம்... ஊரையும் காப்பாத்தலாம்..."

கால்மணி நேரம் பதில் இல்லை. யாரும், யாருடனும் பேசவில்லை.

அலங்காரிக்கும், துளசிங்கத்திற்கும், முதுகைக் காட்டி நின்ற கோலவடிவு, சிறிது நேரம் அப்படியே நின்றாள். பிறகு வீடு இருந்த திசையை நோக்கிக் கையெடுத்துக் கும்பிட்டாள். கும்பிட்டு முடித்ததும், அவர்களுக்கு முகத்தைக் கர்ட்டினாள். முந்தானையை இறுக்கி முடிந்துகிட்டு, ராட்சதப் பூச்சி மாதிரி நின்ற அந்த விக்கி வண்டியின் பின்னிருக்கையில், ஏறிக் கொள்வதற்காக செங்குத்தான உடம்பை, "உப்புக் குத்திக் காலில்" நின்றபடி, சாய்ந்தாள்...

# 25

கண்மூடித்தனமான இரவு...

அந்தக் குருட்டுத்தனமான இருட்டுப் பயங்கரப் பின்னணியில், பனங்காட்டை அடுத்த மாந்தோப்பிற்குள், ஏதோ ஒரு பூனை அசல் பச்சைக் குழந்தைபோல் அழுதது. விட்டுவிட்டும், விடாப்பிடியாகவும் அழுது புலம்பியது. இந்த அழுகைச்சத்தம் அரவம் கேட்டு, பனங்காட்டு நரி ஒன்று, ஊளையிட்டது. அதற்கு அருகிலேயே நாகப் பாம்போ, அல்லது சாரைப் பாம்போ எலிவளை ஒன்றிற்குள் பசியேக்கப் பார்வையுடன் ஊர்ந்து கொண்டிருந்தது... காதைப் பிய்க்கும்படி அடித்த காற்று, பேயிரைச்சலாய்க் கத்தி, அங்குள்ள அனைத்தையும் ஆட்டுவித்ததில், பனங்காய்கள் விழுந்தன... புளியம் பழங்கள் சிதறின... தென்னை ஓலைகள் சாய்ந்தன.... காட்டுப் பூனை "விறுவு" நாட்டுக் கோழி ஒன்றைக் கெளவிக் கொண்டு நர்த்தனமாடுவதுபோல் தாவியது.

அந்த இருட்டுக்குப் பழக்கப்பட்ட துளசிங்கம், விக்கி வண்டியை வேகமாகத்தான் ஓட்டினான்... பழக்கப்பட்ட பாதை என்பதுடன், எவரும்

பார்த்துவிடக்கூடாது என்ற எச்சரிக்கையாலும், அவன் வண்டி வேகத்தை முடுக்கி விட்டான். பின்னால் உட்கார்ந்திருந்த கோலவடிவு படபடப்பாகப் பதறிப்பதறிக் கேட்டாள்.

"எனக்கு பயமாய் இருக்கு மச்சான்.... பயமாய் இருக்கு மச்சான் வண்டியை நிறுத்தும் மச்சான்.... ஒமக்குப் புண்ணியம் மச்சான்... இது தப்பு மச்சான்... வீட்டுக்குப் போறேன் மச்சான்.... அய்யோ பயமா இருக்கு... பயமா..."

மரணமுற்ற கர்ப்பிணிப் பெண்-பேய்களுக்காக அமைக்கப்பட்ட சுமைதாங்கிக் கல்லைப் பிடித்தபடியே, வண்டியை நிறுத்திவிட்டு, அவள் முகத்திற்கு எதிராய் முகம் போட்டுக் கேட்டான் துளசிங்கம்...

"சரி... வண்டிய திருப்பட்டுமா..."

"திருப்பும் மச்சான்... திருப்பும் மச்சான்... பயமா இருக்கு மச்சான்..."

"எதையும் பயப்பட்டு செய்யப்படாது... அப்படிச் செய்தால் அது உருப்படாது... சரி... இறங்கு வண்டிய திருப்புறேன்..."

"ஆனால் நீரு ஊருக்குள்ள இருக்கப்படாது... எங்க ஆட்கள் ஒம்ம கண்டதுண்டமா வெட்டுப்பிடுவாங்க."

"நீயே என்னைவிட்டு... வெட்டிக்கிட்டு போகும்போது அவங்களே என்னை வெட்டிக் கொல்லட்டும்..."

"அப்போ நான் வீட்டுக்குத் திரும்புனால், நீரு ஊர்ல இருந்துக்கிட்டு கோயில் விவகாரத்துல வம்பு பண்ணுவீரோ..."

"வம்புக்கு போவ மாட்டேன்... வர்ர வம்பை விடமாட்டேன்... சரி இறங்கு, வண்டியைத் திருப்புறேன்... ஆமா ஏன் இறங்க மாட்டக்கே..."

"பயமா இருக்கு மச்சான்..."

"ஒனக்குப் பயம்... எனக்கு கோபம்... ரெண்டும் தீரணுமுன்னா ஊருக்குப் போறதுதான் ஒரே வழி... இறங்கு கோலம்..."

"சரி... சரி... வண்டிய விடும்..."

"எந்தப் பக்கமா..."

"என்ன குழப்பாதயும்... எந்தப் பக்கமாய் வேணுமுன்னாலும் விடும். ஒம்ம இஷ்டம்..."

"அப்போ ஒனக்கு இஷ்டமில்லியா..."

"ஒம்ம இஷ்டந்தான்... என் இஷ்டமுன்னு இதுக்கு மேல எப்படிச் சொல்லுறதாம்... ஆனாலும் பயமா இருக்கு மச்சான்... ஏதோ செய்யத் தகாததை..."

"அவனுவ ஒன்னை அக்னிராசாவுக்கு கொடுக்கது மட்டும் செய்யத் தக்கதா...? என்னை கொலை பண்ணுறதுக்காவ அரிவாள் கம்போட அலையுறது மட்டும் செய்யத்தகுமா..."

"சீக்கிரமா விடும்... ஊர்ல ஆளுவ தேடி வர்றதுக்கு முன்னால போயிடலாம்... எனக்கு பயமா இருக்கு மச்சான்... சீக்கிரமா விடும்..."

விக்கி வண்டி விரைந்து ஓடியது; ஒடுங்கிப் போய் உட்கார்ந்த கோலவடிவின் உடம்பெல்லாம் ஆடியது... அவள் உடம்பில் பெருக் கெடுத்த வேர்வை வெள்ளத்தை, அந்தப் பேய்க் காற்றாலும், துடைக்க முடியவில்லை... மோவாய், மார்பெலும்பில் முட்டும்படி கீழே விழப் போவதுபோல், இருந்த கோலத்தின் தோளில், இடது கையை அணைத்துப் போட்டபடியே துளசிங்கம் அவளுக்கு ஒரு யோசனை சொன்னான்...

"கீழ விழுந்துடப்போற கோலம்... என்னைச் சேர்த்துப் பிடிச்சுக்க... இப்டி பிடிச்சுக்க... ஆமாம். இப்படித்தான்.... அப்புறம் இந்த மாதிரி சமயத்தில், எந்த கண்ணுலயும் ஒன் முகம் தெரியப்படாது... அதனால.... ஒன் முகத்த என் முதுகுல போட்டு மறச்சுக்க... அப்டி இல்ல... இப்டி..."

துளசிங்கம் அவளிடம் பேசியபடியே, அவளின் வலது கரத்தைப் பிடித்து, தனது வயிற்றோடு சேர்த்து வைத்தான். ஒரு கரத்தை வளைத்துப் போட்டான்.... அவன் ஓரிரு தடவை அந்தக் கையை எடுக்கப் போனபோது, அவள் தனது இடக்கையால் அவன் விரல் நுனிகளைப் பிடித்துக் கொண்டாள்.... பிறகு, தனது கையை, வண்டி

சாயாமல் இருப்பதற்காக, அவன் எடுத்த போது, கோலம் தனது கையை அவன் வயிற்றில் இருந்து எடுக்கவில்லை... மாறாக, அந்தக் கைப்பிடியை வலுவாக்கினாள்... பயத்திலே போட்ட பிடி, பாசப் பிடியானது... அவன், அவளைப் பார்க்காமலே வண்டியை ஓட்டியபடியே, ஒரு கையைப் பின்புறமாக வளைத்து, அவள் முகமென்று பிடறியைத் தடவி, பிடறி என்று முகத்தைப் பிடித்து, தன் முதுகிலே சாத்திக் கொண்டான்... வண்டிப் போகப் போக, கோலவடிவின் குரலும் போயிற்று.... பிடித்த பிடியைத் தளர்த்தாமல், போட்ட முகத்தை நிமிர்த்தாமல், கிடந்தாள். இன்னும் சொல்லப் போனால், அவள் பிடி இறுகியது; கிடுக்கிப்பிடி... துளசிங்கம் வண்டியைத் தென்மேற்குப் பக்கமாய்த் திருப்பியபடியே, அவளிடம் சந்தேகம் கேட்டான்.

"ஒனக்கு இப்போ பயம் போயிட்டுன்னு நினைக்கேன்.... பேசு கோலம்... ஏன் பேசமாட்டக்கே... நீ பேசாட்டா என்னை ஒனக்கு பிடிக்கலன்னு அர்த்தம்... ஏன் பேசமாட்டக்கே... ஏய்... பேசுப்பா..."

"மாட்டேன்... பேசுனா என் வாய் ஒம்ம கழுத்துல படும்..."

"சரி.... அப்போ முகத்தை தூக்கி வச்சுட்டுப் பேசு... இப்போ பயமா இல்லியா... வீட்டுக்குப் போகணுமேன்னு எண்ணம் வரலியா.... தப்பு செய்துட்டோமுன்னு தோணலியா... சொல்லு கோலம்... ஒனக்கு கூச்சமா இருந்தால் முகத்த எடுத்துட்டுப் பேசு..."

கோலவடிவு முகத்தை அவன் முதுகில் இருந்து எடுத்தாள்... அதுவும் அவன் சொன்னதற்காக அப்படிச் செய்பவள்போல், முகத்தைப் பட்டும் படாமலும் எடுத்துவிட்டு, பட்டுப்பட்டென்று பதிலளித்தாள்.

"எனக்கே என்னைப் பத்தி நினைக்க ஆச்சரியமா... இருக்கு மச்சான். இப்போ பயம் இருந்த இடத்துல... படபடப்புத்தான் இருக்குது... சரியோ... தப்போ... வந்தாச்சு... தப்புல்ல... சரிதான்... நீரு என்கூட... இப்டி வராமல்.... ஊர்ல... லாந்துனால்.... நிச்சயம்... ஒம்ம கொல பண்ணிப் புடுவானுவ... ஒம்ம காப்பாத்தறதுக்கு ஒரே வழி... இப்படி..... ஓடி வாரதுதான்... ஊரு உலகத்தில செய்யாததையா... செய்யுறோம். எத்தனபேரு... இப்டி... ஓடிப் போயிட்டு... அப்புறம் குடும்பத்துல....

சேர்ந்துட்டாங்க.... கல்யாணம் ஆனதும்.... மாலையும் கழுத்துமாய் எங்கப்பாம்மா காலுல விழணும்... ஒங்கப்பாம்மா காலுலவுந்தான். வெட்டுப் புடுவாவளா... என்ன.... இப்போ... ஒம்ம பிளானு என்ன..."

கோலவடிவு, பயம் தெளிந்து, பலம் புரிந்து பேசுவதைப் பார்த்து, துளசிங்கமே அசந்து விட்டான்... மீண்டும் தனது கையைச் சுற்றி வளைத்து, அவள் பிடரியைச் செல்லமாகத் தட்டித்தட்டி, அவள் முகம் தன் முதுகில் மோதும்படி செய்துகொண்டே பேசினான்.

"இப்போ... நேராய் நாம வெட்டாம்பட்டிக்குப் போறோம்.... எங்கம்மா பிறந்த ஊரு..."

''அய்யய்யோ.... எங்க சொந்தக்காரங்களும் அங்க இருக்காங்களே..."

"இருக்கட்டுமே.. கல்யாணத்துக்கு சாட்சிக் கையெழுத்துப் போட அவங்களையும் கூப்புடலாம்..."

"சரி... சொல்லப் போறத முழுசாப் சொல்லும்..."

"வெட்டாம்பட்டில எங்க பாட்டி வீடு இருக்குது.... மாமன் மாருங்க... அவனவனுவ பெண்டாட்டிகள் ஊர்ல, வீடுகள கட்டிக்கிட்டு இருக்காங்க... பாட்டி மட்டும் தான் தனியா அந்த வீட்ல இருக்காள்... இன்னைக்கு ராத்திரிக்கு... அங்கேதான் தங்கப் போறோம்..."

"அப்புறம்..."

"இதைக் கூடவா சொல்லிக் கொடுக்கணும்..."

"என்ன மச்சான் நீரு... அதுக்காவத்தானா... நான் ஓடிவாறேன்? சத்தியமாச் சொல்லுதேன்... எனக்கு அந்த நெனப்பே இல்ல... ஒம்ம இப்டி கட்டிப் பிடிச்சிருக்கதுகூட நீருதான் தஞ்சமுன்னு சொல்லுறது மாதிரிதான். சரி... விஷயத்துக்கு வருவோம்... ராத்திரி தங்குறோம்... ராத்திரி போனதும்..."

"காலையில நேரா கோணச் சத்திரம் போறோம்... ரிஜிஸ்டர் கல்யாணம் செய்துக்கிறோம். அங்கே இருந்து மாலையும் கழுத்துமா..

காளியம்மாவ கும்புடுறோம்... சுடல மாடன தரிசிக்கோம்... நம்மள பெத்தவங்க காலுல விழுறோம்..."

"நாம இங்க ஓடிவாரது தெரிஞ்சு... சட்டாம்பட்டில இருந்து எங்க ஆளுவ வந்து ஏறுக்குமாறா எதுவும் செய்துப்படாதே மச்சான்..."

"நீ சின்ன பொண்ணு... அதனால ஒனக்குத் தெரியல... யாரும் யாரையும் பொதுவா ஊர்விட்டு ஊர் வந்து அடிக்க மாட்டாங்க... அடிக்க முடியாது... இந்த வெட்டாம்பட்டிக்குள்ள எந்த ஊர்க்காரனும் வந்து நம்மை அடிச்சா... இந்த ஊர்க்காரன் தன்னையே அடிச்சதா நெனைப்பான்..."

"சரி... இந்த ஊர்க்காரனே நம்மள அடிச்சா..."

"வெட்டாம்பட்டிக்காரன் அந்தப் பேருக்கு... ஏத்தபடி அடாவடிக்காரன்தான்... ஆனால் காலுல விழுந்துட்டா ஒருத்தர் உயிரை எடுக்கப் போறவனும் தன்னோட உயிரையே கொடுப்பான். சரி... என்னை நல்லா பிடிச்சுக்க... கீழே விழுந்துடப் போற..."

"இதோ பிடிச்சுக்கிட்டேன்... இனிமேல் நான் விழுந்தா நீரும் விழுந்துதான் ஆகணும். தெரியுமா..."

அந்த விக்கி வெட்டாம்பட்டிக்குள் வந்தபோது, நாய்கள் கூடக் குலைக்கவில்லை... அவ்வளவு பெரிய தூக்கம்... ஆனாலும், துளசிங்கம் வண்டியை நிறுத்திவிட்டு, தானும் இறங்கி, கோலவடிவையும் இறக்கிவிட்டு, வண்டியை உருட்டினான். ஏன் என்பது மாதிரி கேட்கப்போன கோலவடிவின் வாயை ஆள்காட்டி விரலால் தாளிட்டான். வெட்டாம்பட்டி என்ற பெயர் விளங்கும்படி, கருவேல மரங்களான உடைக்காடும், கல்லும் பாறையுமான அகழியும் கொண்ட அந்த ஊருக்குள் ஒரு ஓரத்தில் இருந்த, ஒரு பாடாதி வீட்டைத் துளசிங்கம் தட்டினான். அந்த இருட்டில், கதவைத் தட்டுவதாக நினைத்து, துளசிங்கம் சுவரைத் தட்டியபோது, கோலவடிவு அவன் கையைப் பிடித்து, கதவில் வைத்தாள்.... அவன் என்ன தான் தட்டினாலும், உள்ளே இருந்து எந்தக் குரலும் கேட்கவில்லை. இப்போது கோலவடிவும் சேர்ந்து தட்டினாள். கால் மணி நேரத்திற்குப்

பிறகு கதவு இடுக்கில் பார்த்தால், லாந்தர் வெளிச்சம் தெரிந்தது. ஐந்து நிமிடத்திற்குப் பிறகு கதவு திறக்கப்பட்டது. திறந்தவளுக்கு, எழுபது வயது இருக்கும்... ஆனாலும், பல் விழாத பாட்டி... வெள்ளைச் சேலைக்காரி... காயப்போட்ட மொச்சை கொட்டை மாதிரி சுருங்கிப் போன முகம்... அந்த மெல்லிய லாந்தர் விளக்கில், பேரனை அடையாளம் கண்டு கொண்டாள்.

“அய்யய்யோ... இது யாருடாப்பா... யாருடா...”

“பாத்தாத் தெரியல... பொண்ணு... ஏன் பாட்டி இப்டி எதிர் பாக்காதது மாதிரி முழிக்கே... நேத்து சாயங்காலம் இங்க மெனக்கிட்டு வந்து, ஒரு பொண்ணோட வருவேன்னு ஒன்கிட்ட சொல்லிட்டுத் தானே போனேன்...”

“சொல்லத்தான் செஞ்சே... ஆனால் அதுக்கு நான் சம்மதிக்கு முன்னாலயே ஓடிட்டியே... அய்யய்யோ... இது அடாத காரியண்டா... பொண்ணு யாருப்பா...”

“நம்ம பழனிச்சாமி மாமா மகள்...”

“அந்தப் ‘பையன்’ ஒருத்தன்தான் ஊரிலேயே யோக்கியன்... நீ நேராய் அவன் கிட்டயே பொண்ணு கேட்டிருக்கலாமேடா... நீயும் என்ன குறைஞ்சவனா...? இந்த பகவதியோட பேரனாச்சே...”

“குறைஞ்சவனோ கூடுனவனோ... இப்போ எங்கள வீட்டுக்குள்ள விடு”

இற்றுப்போன அந்தக் கதவை மூடிவிட்டு, மூவரும் வீட்டுக்குள் வந்தார்கள். சமையலறை குடிசை ஒன்று... அதற்கு எதித்தாற்போல, முற்றத்தைத் தாண்டிய காரைக் கட்டிடம்... துளசிங்கம் திண்ணையில் ஏறியபடியே கேட்டான்...

“பெரிய வீட்டத் திற...”

“ஏண்டா நீ செய்யறது ஒனக்கே நல்லா இருக்கா...? எம்மா... அவனுக்குத்தான் புத்தியில்ல... ஒனக்குமா... பழனிச்சாமி குடும்பம்... எப்பேர்ப்பட்ட குடும்பம்... கரும்பட்டையான் குடும்பமுன்னு...”

“சும்மா தொணதொணக்காத பாட்டி... நான் இவள கொல செய்யவா கூட்டி வந்தேன்... நாளைக்கே ரிஜிஸ்டர் கல்யாணம் செய்யப் போறேன்... நாங்க விழுற முதல் காலு ஒன் காலுதான்...”

“போலீஸ்காரன் என்ன தூக்கிட்டுப் போக மாட்டானே...?”

“ஒரு காதல் ஜோடியை சேர்த்த வச்சதுக்காவ போலீஸ்காரன் ஒன் கையைக் குலுக்குவான்... சரி பெரிய வீட்ட திறந்துவிடு..”

பாட்டியின் இரண்டு கரங்களையும், ஒத்தைக் கைக்குள் வைத்துக் கொண்டே, துளசிங்கம், ஊரில் பலர் அரிவாள் கம்புகளோடு, தன்னைத் தேடி அலைவதைச் சொன்னான்... கோலவடிவை திருமணம் செய்வதன் மூலந்தான், தான், ஊர்க் கொலையில் இருந்து தப்பிக்க முடியும் என்றும் விளக்கினான்...

இதைக் கேட்டுக் கொண்டிருந்த கோலவடிவும் தெளிவான குரலில் திடமாகப் பேசினாள்...

“ஆமாம் பாட்டி... இவரு... என்னைக் கூட்டி வரல... நான்தான் இவரைக் கூட்டி வாரேன்... இல்லாட்டா... இவரு ஊர்ல... உயிரோட இருக்க முடியாது... எனக்கு எங்க குடும்ப மானம் பெரிசுதான்... ஆனால்... அதைவிட பெரிசு இவரோட உயிரு... இவருக்கு மட்டும் உயிர்போற நெலம வராட்டால்.... இவரு... தலைகீழ நின்னாலும்.... இப்டி வரமாட்டேன்... எங்கப்பாவ மாதிரி நானும்.... நியாயக்காரிதான் பாட்டி...”

“எம்மாடி... இந்த வயசுல.... என்ன பேச்சு பேசுற...”

கிழவி பேசிவிட்டு, அவர்கள் இருவரையும் ஏற இறங்கப் பார்த்தாள்... பிறகு, முணுமுணுத்தபடியே, வீட்டைத் திறந்துவிட்டாள்... இருவரும் உள்ளே வந்தார்கள்... துளசிங்கம், கதவை மூடப் போனான்... கோலவடிவு மூடப்போன கதவை, இடையிலேயே கை கொடுத்து நிறுத்தியபடியே கேட்டாள்...

“எதுக்கு மச்சான் கதவ மூடுறியரு...?”

“இதுக்கு மேல சொல்லணுமோ... எனக்கு சொல்லத் தெரியல...”

“நான் சொல்லுறதையும் கேளும்... ஒம்மை நம்பி வந்தவள் நான். என் உடம்பு மட்டுமில்ல, இந்த நெஞ்சுக்குள்ள துடிக்கிற ஒவ்வொரு துடிப்பும் ஒமக்கு சொந்தம்... என் நெனப்பே ஒமக்குத்தான்... என் நடமாட்டமே இனும ஒம்மாலதான்... ஆனால் எல்லாம் கழுத்துல தாலி விழுந்த பிறகுதான். சரி... வெளில போயி படும்... நீரு போறீரா... நான் போகட்டுமா...?”

துளசிங்கம் கதவை மறித்த அவளை, எதேச்சையாகவோ கோபத்தாலோ தள்ளியதில் கோலவடிவு கீழே விழுந்தாள். அவள் யோசித்தபடியே எழுந்தபோது, பாட்டி உள்ளே வந்தாள்.

“அந்த குலமானு சொல்லுறதைக் கேளுடா... இனிமேல் அவள் கழுத்துல நீ மஞ்சள் கயிற கட்டும்போது தான் ஒன் கையி அவள் மேல படணும். இதுக்கு முன்னால் படப்படாது. அதுக்கு முன்னால... அவள் சம்மதிச்சாலும் நான் சம்மதிக்க மாட்டேன்...”

துளசிங்கம் பாட்டியைக் கோபமாகப் பார்த்தபடியே, வெளியே வந்து, முற்றத்தில் முன்னும் பின்னுமாக நடந்தான்... செக்கு மாடு மாதிரி, சுற்றிச் சுற்றி வந்தான்.

கோலவடிவு யோசித்தாள்... ஏன் இப்டி முரட்டுத்தனமாத் தள்ளினாரு? கீழே விழுந்தவளைக்கூட தூக்கி விடல?

# 26

ஆடிவெள்ளியைப் பிரசவித்துக் கொண்டிருந்த வியாழனின் நடுநிசி...

இருளே ஆகாயமாக இருந்தபோதிலும், சட்டாம்பட்டி காளியம்மன் கரும்பட்டையான்களும், சுடலைமாடச் செம்பட்டையான்களும், ஏவிவிட்ட வாணங்கள், அந்த ஆகாயத்தின் எரி நட்சத்திரங்களாய்

ஜொலித்தன... காளியம்மன் கோவில் கொண்டையில் தஞ்சை பெரிய கோவில் லிங்கம் அளவிற்கான லிங்க வடிவு மின்சார பல்புகள், சுடர்விட்டன.... சுடலைமாடன் கோயிலில் கோபுர வடிவிலான மின்விளக்குகள், எதிர்ச்சுடரை வெளியிட்டன... இரண்டு கோவில் களிலும், பந்தல்களிலும், பந்தல்களுக்கு அப்பால் கம்புகளில் கட்டப்பட்ட "வாழைத்தண்டு" விளக்குகள் நிலா வெளிச்ச இழப்பை ஈடுகட்டின... இத்தகைய இருட்டில் 'கள்ள நொங்கு' வெட்டுபவர்களும், கள்ளத் தேங்காய்ப் பறிப்பவர்களுமான சின்னச் சின்னச் திருடர்கள்... இந்த வெளிச்சத்தைப் பார்த்து "திரு திரு" என்று விழித்தார்களே தவிர திருட முடியவில்லை...

சுடலைமாடன் கோவிலில் "மணமகளே மணமகளே வா" என்ற ரிக்கார்ட் பத்தாவது தடவையாக ஒலித்து, அங்கேயே கீறல் விழுந்த கிராம போனாகியது. காளியம்மன் கோயிலில், வெற்றிக்குமார் வில்லுப் பாட்டாளிக் குழுவினர், காளியம்மன் வரலாற்றை கையாட்டி, காலாட்டி குடந்தட்டி, சிங்கிதட்டி பாடினார்கள். அந்தக் குழுவின் குரல் ஒலி பெருக்கியில் ஏவி விடப்பட்டது... சுடலை மாடன் கோயிலில் ஒலி பெருக்கி பாட்டுச் சத்தத்துடன் "ஏய்... ஆய்... ஊய்..." என்ற இடைச் செருகல் சத்தங்களும் ஒலித்தன.... அங்கே சுமார் பத்துப் பதினைந்து சாமியாடிகள் தார்பாய்ந்த வேட்டியோடு, சந்தனம் அப்பிய மேனியோடு தீப்பந்தங்களுடனும், வெட்டரிவாள்களுடனும், 'தங்தங்' என்று குதித்தார்கள்... அவர்களின் சிம்மக் கர்ஜனைகள், காளியம்மன் கோவிலில் எதிரொலித்தன. காளியம்மன் சாமியாடித் தாத்தா, வாயைத் திறந்து திறந்து மூடி சுடலை கோவிலில் பீறிட்ட பதினைந்து சிம்ம கர்ஜனைகளையும், தானே, ஒருவராய்த் தக்காரும் மிக்காரும் இன்றி உருமுவதாக அனுமானித்துக் கொண்டு ஆடினார்.

சட்டாம்பட்டி 'மண்டல சார்பற்ற மக்கள்' சுடலை கோயிலில் இருந்து காளி கோயிலுக்கும், காளி கோயிலில் இருந்து சுடலை கோயிலுக்குமாய், நடமாடினார்கள்... என்றாலும் காளியம்மன் கோவிலி ல்தான் அதிகக் கூட்டம்... காத்துக் கருப்பன்களில் முக்கால்வாசி பேரும், காரைவீட்டான்களில் பாதிப்பேரும், கரும்பட்டையான்களுடன் கலந்து இருந்தார்கள்... திடீரென்று சுடலை கோயிலில் ஆறு முழ

வேட்டி அளவிலான வெள்ளைப் படுதா தெரிந்தது....” “பெரியோர்களே... தாய்மார்களே... எல்லாம் வல்ல சுடலை மாடன் திருவிளையாடலை முன்னிட்டு ‘லைலாவும் அவள் காதலர்களும்’ என்ற படம் காண்பிக்கப்படும்” என்று ஒரு முழக்கம் கேட்டது... இதனால், காளியாத்தா கோயிலில் கூடிய கூட்டத்தில், பாதிக்கு மேலானோர் சொக்கார, சொந்தக்கார பேதங்களைத் தாண்டி, லைலாவைப் பார்ப்பதற்காக, விழுந்தடித்து ஓடினார்கள். உடனே, கரும்பட்டையான் நாட்டு வக்கீல் நாராயணன், வயதான வில்லுப்பாட்டாளியைத் தெரியாத்தனமாக மல்லாக்கத் தள்ளிவிட்டு, “அண்ணன்மாரே, தம்பிமாரே... அக்காமாரே, தங்கைமாரே” என்று மாரடிப்பது போல் கூவிவிட்டு, ‘சினிமாப்புகழ் சிவராமன், நடிகர்கள் போலவும், நமது தலைவர்கள் போலவும் நடித்துக் காண்பிப்பார்’ என்றான்.

ஆனாலும், ‘லைலாவுக்கே’ மவுசு... புறநானூற்று வீரர்களாய் வீராங்கனைகளாய்ப் புறப்பட்ட கூட்டம், முன் வைத்த காலைப் பின் வைக்கவில்லை... குறிப்பிடத்தக்க எல்லாக் கரும்பட்டையான்களும், முனங்கிக் கொண்டிருந்த போது, பாவம் இந்தக் காளியம்மன் சாமியாடி தாத்தா, ‘நைட்டி’ மாதிரியான சிவப்பு கவுனைத் தோள் வழியாகக் கால்வரைக்கும் தொங்கப் போட்டுக் கொண்டு, இரண்டு கரங்களிலும் ரப்பர் வளையல்களை மாட்டிக் கொண்டு முட்கம்பி செருப்பைச் செருகிக் கொண்டு, நிற்கவும் முடியாமல், நடக்கவும் முடியாமல் மீதிக்கூட்டத்தில் பாதிக் கூட்டத்தை துரத்தினார்... திருமலையால் பொறுக்க முடியவில்லை...

“இன்னைக்கு நீரு.... ஆடுறதோட சரி... நாளைக்கு ஒம்ம பேரன்தான் ஆடுவான்... சாவப் போற காலத்துல, ஒமக்கெல்லாம் எதுக்குய்யா... சாமியாட்டம்... வாலிபனுக்கு வழிவிடும்...”

நாட்டு வக்கீல், குள்ளக் கத்தரிக்காய், பீடி ஏசெண்ட் வகையறாக்களுக்கு மத்தியில், ஒரு நாற்காலியில் கம்பீரமாக உட்கார்ந்திருந்த பழனிச்சாமி திருமலையைக் கைகாட்டி அமர்த்தினார். தொண்டையைக் கனைத்தார்... அவர் ஏதோ பேசப் போகிறார் என்று கைப் பையன் விகடத்துக்காக ஆயத்தம் செய்த ‘சினிமாப் புகழ்’

சிவராமன் முன்னால் இருந்த மைக்கை வெடுக்கென பிடுங்கி, பழனிச்சாமி முன்னால் வைத்தான்...

"பேசுங்க அய்யா..."

"ஏய் மைக்க எடுப்பா... எல்லாத்துக்கும் சொல்லுதேன்... நமக்கு கூட்டம் முக்கியமில்ல... கொள்கைதான் முக்கியம்... கோவில் கொடை... வெறும் பொழுது போக்கில்ல... நம்மோட மூதாதையர் நமக்கு விட்டுட்டுப் போன பழக்க வழக்கம். அதை மாற்ற முடியாது... இஷ்டப்பட்டவங்க இருங்க... இல்லாட்டா... போங்க யோவ் அடிப்பா... விகடம் கொஞ்சம் இரும்..."

காசு வாங்கியே தீருவது என்று கங்கணம் கட்டியது போல், மேளக்காரர்கள் 'டங்கு டங்கு' என்று அடித்தார்கள்... நாதஸ்வரக்காரர்கள் ஓசை உச்சக்குரலில் ஓங்கின.... ஊமைக்குழல் உறுமியது... தவுல் மேளம் இழுப்புப் போட்டது... பம்மை மேளம் பரபரத்தது... மேளம் அடித்தவர்கள், தத்தம் கழுத்தில் கிடக்கும் தங்கச் செயின்கள் துள்ளித் துள்ளி விழ, சதுராடினார்கள். ஆகாயத்திற்கும் பூமிக்குமாய் குதித்தபடியே, ஆடாமல் நின்ற சாமியாடித்தாத்தா முன்னால் வந்து, அடிஅடி என்று அடித்தார்கள்... தாத்தாவும் ஆடினார் லேசாய்.... மெதுவாய்... மேளக்காரர்களுக்கு ஈடுகொடுத்து, அவரால் ஆடமுடியவில்லை. 'நாளைக்கு ஆடணும்... இப்படி ஆடினால் சின்னப்பய மவனுவ ஆடவிடமாட்டானுவ... திருமலைப்பயல் அடிக்கவே வருவான்... ஆனாலும் ஆடணும்... மூச்ச இளைக்காம, உடம்பு நோகாம ஆடணும்... எப்படி...?'

சாமியாடி தாத்தா திடீரென்று, கையை ஆட்டி, மேளத்தை நிறுத்திவிட்டு உத்திரவு சொல்லப் போனார்... மைக் இல்லாமல் அவரால் உத்தரவு சொல்ல வராது... ஆகையால் 'மைக் மைக்' என்றார்கள். அது ஏதோ மந்திரச் சொல் என்று மைக்காரன் சும்மா தலையைச் சொறிந்தபோது, தாத்தாவே மைக் முன்னால் ஓடிப்போய் உத்தரவு சொன்னார்.

"கவலைப்படாதிங்கடா என் மவனுவளா... கவலப்படாதிங்கடா... என் மவனுவளா... நம்ம குடும்பத்துல நாலு கல்யாணத்த இந்த

ஆவணில முடிச்சு வைக்கப் போறேண்டா... ஏற்கனவே ஒரு மவளுக்கு, அக்கினி ராசாவோட முடிச்சு போட்டுட்டேண்டா... ஆமாடா... நான்தாண்டா என் மகள் கோலவடிவுக்கு மாங்கல்ய பாக்கியம் தந்தது... எங்கேடா இருக்கா என் மகள் கோலவடிவு... என் மகளே மகளே... வா மகளே... இந்தத் தாய் ஒன் நெத்தியில குங்குமம் வைக்கணும்... என் மகள் கோலம் வரது வரைக்கும் அடிடா மேளம்.... அடிடா மேளம்..."

மேளச்சத்தம் மீண்டும் ஒலித்தது... சாமியாடித் தாத்தா பழனிச்சாமியைப் பார்த்து அருள்பாலிப்பவர் போல் ஓரக்கண்ணால் நோட்டம் போட்டார். எந்தப்பய இனிமேல் என்னை சாமியாடப்படாதுன்னு சொல்லுதான்னு பாத்துப்புடலாம்...

லைலாவையும், அவள் காதலர்களையும் இங்கிருந்தபடியே பார்த்துவிட்டு, இப்போது இருப்புக் கொள்ள முடியாமல், சுடலை கோவிலுக்கு போவதற்காகத் தற்செயலாக எழப்போவதுபோல் எழுந்த கரும்பட்டையான் வயதுப் பெண்கள், எழுந்த வேகத்திலேயே உட்கார்ந்தார்கள்.... கிழட்டுப் பய... கோலவடிவு பேரச் சொல்லிக் கூப்பிட்டது மாதிரி... நம்மளையும் கூப்புடப் போவுது... நாம சபையில இல்லாட்டா வேற எவன் கூடவோ பேசிக்கிட்டு இருக்கதா நெனைப்பாவ... ஆமா... கோலவடிவ எங்க காணோம்... விளங்காதவா... வீட்டுக்குள்ள படுத்துக் கிடப்பாள்...

சாமியாடித் தாத்தா உத்தரவு போட்டு, பதினைந்து நிமிடமாயிற்று... கோலவடிவு அவர் முன்னால் தோன்றவில்லை. பாக்கியம் கூட்டத்தில் இருந்த ஒவ்வொரு பெண்ணாக உற்றுப் பார்த்தாள்... பழனிச்சாமி லேசாக முகத்தைச் சுழித்தார். பிறகு ராமசுப்புவிடம் எதையோ சொன்னார்... அவன், அவர் வீட்டைப் பார்த்து நடந்தான்... பாக்கியமும் நடந்தாள்... சாமியாடித் தாத்தா, மீண்டும் மேளத்தைக் கையாட்டி நிறுத்திவிட்டு 'மவளே கோல வடிவு... இந்தத் தாயி துடிக்கிற துடிப்பு தெரியலியா... ஒனக்கு குங்குமம் வச்சு அழகு பாக்க ஆசைப்படுகிறாள் இந்த தாயி... வாம்மா... என் மவளே... வா... அடிடா மேளத்த' என்றார்.

மேளம் மீண்டும் முழங்கியது... தாத்தா, தலையை விரித்துப் போட்டு ஆடினார். 'குலவ குலவ' என்றார். இந்த மாதிரி வேண்டுதலின்போது குலவையிடும் பெண்களில் பாதிப்பேரே ஒப்புக்குக் குலவையிட்டார்கள்... எப்போ கோலவடிவு வந்து உத்தரவு வாங்கி எப்போ நம்மள கூப்பிட்டு உத்தரவு வாங்கி... அதுக்குள்ள லைலாவும் அவள் காதலர்களும் மறஞ்சுடுவாங்க... இந்த கோலவடிவு இன்னுமா... தூங்குறாள்...

இதற்குள் பாக்கியமும், ராமசுப்புவும் வெறுங்கையோடு திரும்பி வந்தார்கள். பழனிச்சாமியை பட்டும் படாமலும் கையாட்டி பக்கத்தில் வரும்படி கூப்பிட்டார்கள்... அவரும் அதைக் கவனியாததுபோல் கவனித்துவிட்டு அந்தப் பக்கமாக வந்தார்... பாக்கியம் சொல்வதற்கு முன்பே பழனிச்சாமி கேட்டார்.

"அவள கையோட கூட்டிட்டி வரவேண்டியதுதானே... சாமியாடி சின்னய்யா அறிவில்லாம கூப்புட்டுட்டாரு... இன்னும் என்ன செய்யுறாள்..."

"அவளைக் காணல... கண்டுபிடிக்க முடியல.."

"என்ன உளறுற..."

"வீட்ல எல்லா இடத்துலயும் பாத்துட்டேன்... கட்டிலுக்கு அடில... பாத்துட்டேன்... முற்றத்துல பாத்துட்டேன்... மாட்டுத் தொழுவத்துல பாத்துட்டேன்... இந்தத் தெரு முழுசும் பாத்துட்டேன்..."

"ஒரு வேள ஒதுங்க கிதுங்க..."

"அரைமணி நேரமாவா..."

"எனக்கு என்னமோ பயமா இருக்கு... பெத்த மனசு துடிக்குது...."

"என்ன பாக்கியம் சின்னப் பிள்ள மாதிரி... ஏணிப் படிக்கட்டு கீழ பாத்தியா...'

"பாத்துட்டேன்... குவியலாய் கிடந்த போர்வையைக்கூட உதறி பார்த்துட்டேன்... மாடியக்கூட பார்த்துட்டேன்... எங்க போயிருப்பா..."

“சரி... கத்தாத... இந்தாப்பா ராமசுப்பு... சாமியாடி சின்னய்யாவ அவளையோ எவளையோ கூப்புடாம சும்மா ஆடச் சொல்லு... சரி வா... வீட்டுக்கு போவோம்...”

பழனிச்சாமி, மனைவி கையைப் பிடித்தபடி நடந்தார். பொதுவாக இரண்டடி இடைவெளியில் நடக்கும் இருவரும் அப்படி நடப்பதில் ஏதோ ஒன்று ஒளிந்திருப்பதைப் புரிந்து கொண்ட நாட்டு வக்கீல் நாராயணனும் எழுந்தான். உடனே, இதரக் கரும்பட்டையான் பிரமுகர்களும் எழுந்து பழனிச்சாமியின் பின்னால் நடந்தார்கள். திருமலை, தாவிக் குதித்து, கூட்டத்தின் கவனத்தைக் கவர்ந்தான்.

வீட்டுக்கு வந்த பழனிச்சாமி, தேக்குக் கட்டிலில் உட்காராமல், திண்ணைப் படிக்கட்டில் உட்கார்ந்தார்... அங்கே வந்த சொக்காரப் பிரமுகர்களிடம் சாதாரணமாகச் சொல்லுவது போல் சொன்னார்.

“நம்ம கோலவடிவக் காணல...”

“ஒருவேளை செம்பட்டையான் போடுற சினிமாவுல...”

“சீ... செத்தாலும் சாவாளே தவிர அங்க போகமாட்டாள். கரும்பட்டையான் வைராக்கியம் நம்ம பொட்டப் பிள்ளியளுக்கும் உண்டுப்பா... ஆளுக்கு ஒரு பக்கமா தேடுங்க... எங்கேயாவது செடி செத்த கடிச்சு மயங்கி கியங்கி... அழாத பாக்கியம்... நாம் யாருக்கும் எந்த கெடுதியும் செய்யல... நம்ம மவளுக்கு எதுவும் வராது... சரி... தேடப் போயிருக்காங்கல்லா.... பொறும்மா... பொறு....”

“எப்படிப் பொறுப்பேன். எப்படித்தான் பொறுக்க முடியும்... நான் பாவியிலும் மோசமான பாவி... என் காலப் பிடிச்சு தடவி விட்ட என் ராசாத்திய விரட்டிட்டேனே... விரட்...”

பாக்கியம் விசும்பினாள்... விம்மினாள். பருத்த உடலைத் துடிக்க வைத்தாள். முந்தானையை எடுத்து முகத்தில் படிந்த வேர்வையைத் துடைத்துக் கொண்டாள்... வீசிக் கொண்டாள்... கணவனை ஆறுதலாகப் பார்த்துக் கொண்டாள்... மகளைத் தேடிப் போய்த் திரும்பி வந்த ஒவ்வொருவர் பின்னாலும் கோலவடிவு திரும்பி வருவது போல்

முகந்தூக்கிப் பார்த்து, பின்னர் அவள் இல்லாத, ஏமாற்றத்தில் தலைதாழ்த்தி அழுதாள்... மாந்தோப்பு, புளியந்தோப்பு, பஸ்நிலையம் என்று பல்வேறு இடங்களுக்கு சென்ற ராமசுப்பு, திருமலை, மாயாண்டி போன்றவர்கள், உதடுகளைப் பிதுக்கியபடியே வந்தார்கள்... பாக்கியத்தின் அழுகை கூடிக் கொண்டே இருந்தது. பேச்சியம்மா ஓடிவந்து வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கூட்டத்தை வரவழைக்கப் போனாள்... நல்ல வேளையாக சந்திரா அவளைப் பிடித்துக் கொண்டாள்... அப்படியும் அந்த அடிச் சத்தம் கேட்டு, வாடாப்பூ உட்பட பல பெண்கள் வந்துவிட்டார்கள்.

திடீரென்று ஒருவர் தோளில் துண்டில்லாமல் வந்தார். அங்கிருந்த சூழலைப் புரிந்து கொண்டு ரகசியமாகக் கேட்க நினைத்ததை, பகிரங்கமாகவே கேட்டார்... வெட்டாம்பட்டிக்காரர்... பழனிச்சாமியின் அம்மா கூடப் பிறந்த சித்தி மகன்... சிவனுப் பாண்டியன்.

“கோலவடிவு இங்க இருக்காளா...?”

“என்னப்பா சொல்லுதே... சத்தமா சொல்லுதே...”

“கோலவடிவு இருக்காளா....?”

“இல்ல.. இல்ல... சொல்ல வேண்டியதச் சொல்லு...”

“என் வீடு பகவதி வீட்டுக்குப் பக்கத்து வீடா... அதான் எலி டாக்டர் மாமியாரு வீடு. செம்பாதி வேளையில தூக்கம் கலைஞ்சது.... தெரிஞ்ச குரல் மாதிரி சத்தம் கேட்டுது... அந்த வீட்டுப் பக்கமா எட்டிப் பார்த்தால் கோலவடிவு... மாதிரி... மாதிரிதான்... அவள்கூட ஒங்க ஊரு உரக்கடப் பயல்...”

“என்ன மனுசம்பா நீ... அப்பவே அங்கே போயி...”

“வேற பொண்ணு மாதிரி தெரிஞ்சிருந்தா போயிருப்பேன்... கோலவடிவு மேல யாருக்காவது சந்தேகம் வருமா...? அதோட... இந்த மாதிரி விவகாரத்துல நாலுபேரக் கலக்காமல் செய்யப்படாதே...”

“ஊமை ஊரைக் கெடுக்குமாம்... பெருச்சாளி வீட்டக் கெடுக்குமாம்... ஏய் பாவி மொட்ட கெடுத்துட்டாளே...”

"பேச்சி மயினி சும்மாக் கெட ஏல அரிவாள எடுங்கடா.... துளசிங்கம் பய... நம்ம பிள்ளய கடத்திக்கிட்டு போயிருக்கான்... அவளா போயிருக்க மாட்டாள்... வேல்கம்ப எடுங்கல ஒண்ணு துளசிங்கம் பிணமா விழணும்... இல்லன்னா நாம..."

பழனிச்சாமி அங்கீகாரத்துடன், கரும்பட்டையான் இளைஞர்கள் கத்தி கம்புகளை எடுத்துக்கொண்டு நடக்கப் போனபோது-

வாடாப்பூ, பழனிச்சாமியின் கால் மாட்டில் நெடுஞ்சாண் கிடையாய் விழுந்தாள்... அவர் காலை, கண்ணீரால் அலம்பியபடியே கதறினாள்...

"இப்டி வருமுன்னு தெரிஞ்சிருந்தா நான் அப்பவே சொல்லியிருப்பேன் பெரியப்பா. மோசம் போயிட்டோமே பெரியப்பா... மோசம் போயிட்டோமே... நம்ம கோலவடிவும், துளசிங்கமும் அலங்காரி ஒத்தாசையில் பருத்திக் காட்டுல சந்திச்சுப் பேசுனதா ரஞ்சிதம் சொன்னாள்... ஒரு தடவ கோலம் அலங்காரி வீட்டுக்குப் போனாளாம்... இன்னைக்குத்தான் என்கிட்ட சொன்னாள்... காலையிலதான்..."

மாயாண்டி, பழனிச்சாமியின் கால்மாட்டில் கிடந்த தன் மகளின் தலைமுடியைப் பிடித்திழுத்து தூக்கி நிறுத்தினார்... வாயிலும் வயிற்றிலும் குத்தினார்.

"செறுக்கி மவளே... நீ எனக்குப் பிறந்திருக்க மாட்டே.... அப்படி இருந்தால், காலையில தெரிஞ்சத பெரியப்பா கிட்டயாவது, பெரியம்மா கிட்டயாவது உடனேயே சொல்லியிருப்பே..."

"கோலவடிவ நானே திருத்திடலாமுன்னு நெனச்சேன்... பெரியப்பா மனசு, தெரிஞ்சா என்ன பாடுபடுமுன்னு எனக்குத் தெரியும்... கோலவடிவுகிட்ட கேட்டுட்டு... அவள் திருந்தாட்டால் அப்புறம் பெரியப்பாகிட்ட சொல்லணுமுன்னு நெனச்சேன்... அய்யோ நானே அவள் ஓடிப் போவக் காரணமாயிட்டேனே..."

"நீயும் ஓடிப் போழா..."

மாயாண்டி மகளை மீண்டும் அடிக்கப் போனார். பழனிச்சாமி பிடித்துக் கொண்டார். அவளை தன் பக்கமாக இழுத்து வைத்துக் கொண்டு தழுதழுத்த குரலில் கேட்டார்.

"அப்போ அவள் இஷ்டப்பட்டுத்தான் போயிருப்பா என்கிறியா...?"

வாடாப்பூ பதிலளிக்கப் போனபோது, வெட்டாம்பட்டி சிவனுப்பாண்டி பதிலளித்தார்...

"கோலவடிவும் உரக்கடைப் பயலும் நின்ன தோரணையை பார்த்தால் அப்படித் தான் தெரிஞ்சுது..."

பழனிச்சாமி, வேல் கம்புகளோடும், வெட்டரிவாள்களோடும் தயாராய் நின்றவர்களைக் கையாட்டி உட்காரச் சொன்னார். பிறகு, அங்கே எழுந்த ஒவ்வொருவரையும் தோளைத் தொட்டு உட்கார வைத்தார். அப்போது வெளியே அலங்காரி, துளசிங்கம் தங்கை புஷ்பத்துடன் பேசிக் கொண்டு போவது கேட்டது. சுடலைமாடன் கோயிலில் இருந்து வீட்டுக்குப் போய்க் கொண்டு இருந்தார்கள். பொழுது விடிந்தது தெரியாமல் விடிந்து, பகல் வருவது தெரியாமல் வந்துவிட்டது.

"ஏய் புஷ்பம்... மணமகளே மணமகளே பாட்டு நல்லா இருந்ததுல்லா.. இன்னைக்கு இப்படிப்பட்ட பாட்டாத்தான் போடணுமுன்னு ஸ்பீக்கர்காரன் கிட்ட நானே சொல்லிட்டேன்... துள்ளாத துள்ளாத ஆட்டுக்குட்டி... என்கிட்ட இருக்குது சூரிக்குத்தி... நல்ல பாட்டுல்லா புஷ்பம்..."

பழனிச்சாமியின் வீட்டில் இருந்தவர்கள் அனைவரும், அலங்காரியின் பேச்சின் தாத்பரியத்தை உள்வாங்கியபோது, திருமலை யாரும் எதிர்பாராத வகையில் வெறிபிடித்தவன் போல் வெளியே ஓடினான்... அவன் காலடிச் சத்தம் நின்றபோது அலங்காரியும், புஷ்பமும் "எம்மோ... எய்யோ..." என்று ஊரே அதிரும்படி அலறினார்கள்...

# 27

அலங்காரி கீழே கிடந்தாள்...

அவள் வாயிலிருந்து பல்வேறு ஒலிகள் பீறிட்டன... அந்தச் சத்தங்கள் ஒய்ந்து கொண்டே போய், இறுதியில் ஈன முனங்கலாய் முடிவு பெற்றன.... மல்லாக்கக் கிடந்தவள் ஒருச்சாய்த்து படுத்தபடியே "எய்யோ என் காலு போச்சே.... எய்யோ என் காலு காலு" என்று கத்தியபடியே வலது காலை, வளைக்க முடியாமல் வளைத்து, இடது கைக்குள் திணித்தபடியே கத்தினாள்... அப்படியும் ஆத்திரம் அடங்காத திருமலை, அவள் இடுப்பைக் குறி வைத்து காலைத் தூக்கினான். உடனே அவள், "எய்யோ... எய்யோ..." என்று அங்குமிங்குமாய் புரண்டாள்... இதற்குள், துளசிங்கத்தின் தங்கை புஷ்பம் ஒரு காலில் நின்ற திருமலையை, சித்தியை விட்டு அப்புறப்படுத்துவதற்காக, லேசாகத் தள்ளினாள்... அவன் அப்படியே கீழே விழுந்ததில், அவன் முட்டிக்கை அலங்காரியின் வாயில் ஊன்றியது. இப்போது அலங்காரி, "அய்யோ என் பல்லுப் போச்சே" என்று அலறியபடியே ரத்தத்தைக் கொப்பளித்தாள். அவள் கழுத்தை ஆதாரமாக, பிடித்தபடியே எழுந்த திருமலை, அலங்காரியை விட்டு விட்டு, புஷ்பத்தின் கையைப் பிடித்து இழுத்தான். அவளோ, "எய்யோ... எய்யோ..." என்று கத்தியபடியே, அவன் இழுப்புக்கு எதிர் இழுப்பாய் இழுத்தாள்... ஒரு காலை, வேப்பமர வேரில், கொக்கிபோல் மாட்டிக் கொண்டே, கூப்பாடு போட்டாள்... இதனால் அவளை ஒரு கையால் இழுக்க முடியாமல் போன திருமலை, இப்போது இரண்டு கைகளாலும் அவளைப் பிடித்திழுத்தான். கால் செத்தவள் போல் கிடந்த அவளை, தரதரவென்று இழுத்துக் கொண்டே வாயே தெறிக்கும்படி வைதான்.

"என் தங்கச்சிய ஒண்ணன் தேவடியா மவன்... இழுத்துட்டுப் போன பிறவு நான் மட்டும் எதுக்கு சும்மா இருக்கணும்...? நீ எப்படிக் கத்தினாலும் நான் விடப் போறதுல்ல.. என்கூட வந்து இருழா..."

திருமலை, புஷ்பத்தை இழுத்துக்கொண்டே போனான்... கீழே கிடந்த அலங்காரி எழுந்திருக்க முயன்றும் முடியாமல், "அய்யய்யோ.. அய்யய்யோ... இந்த அநியாயத்தைக் கேக்க ஆளில்லையா" என்று அந்த இழுவையை ஆள்காட்டி விரலால் சுட்டிக்காட்டிக் கத்தினாள்... திடீரென்று புஷ்பத்தைப் பிடித்த திருமலையின் கை, துண்டித்து விழுந்ததுபோல், அவளிடம் இருந்து விடுபட்டு கீழே தொங்கியது. அவன் கன்னங்களில் மாறி மாறி அறை விழுந்தன.... அவன் தன்னைத் தாக்கிய தந்தையை அதிர்ச்சியோடு பார்த்தபோது, இன்னும் ஆத்திரம் போகாத பழனிச்சாமி மகனின் பிடறியிலும் போட்டார். இதற்குள் இரண்டு பேர் அவரைப் பிடித்துக் கொண்டார்கள்... இன்னும் நான்கு பேர் திருமலையைத் தூக்கிக் கொண்டு பக்கத்து வீட்டிற்குள் போனார்கள்.... அவனை வீட்டுக்குள் போட்டு, கதவை அடைக்கும் சத்தம் கேட்டது.

அக்கம் பக்கத்தில் இருந்து ஆட்கள் ஓடி வந்தார்கள். தெற்குப் பக்கம் வைக்கப்படப்பு வேலையில் ஈடுபட்ட நான்கைந்து பேர், அருவி போல் கீழே குதித்து, ஆறுபோல் ஓடி வந்தார்கள். மாடு மேய்க்கப் போன சிறுவர்கள் மாடுகள் போல் பாய்ந்து வந்தார்கள். புளியந்தோப்பு பக்கம் போன பெண்கள், தோட்டம் தொறவுக்குப் போய் கொண்டிருந்த விவசாயத் கூலித் தொழிலாளர்கள், அப்படி இப்படியாய் கூட்டம் குவிந்தது. கால்மணி நேரத்தில் ஊரே அங்குக் கூடிற்று... புதிதாக வந்தவர்கள் ஏற்கனவே வந்தவர்களிடம் என்ன விஷயம் என்று கண்களாலும், வாயாலும் கேட்டதுதான் மிச்சம். எவருக்கும் என்ன நடந்தது என்று சொல்லத் தெரியவில்லை... அப்படிச் சொல்லத் தெரிந்தவர்களுக்கு, அந்த சொற்களில் தாங்கள் இரு பக்கத்தில் எந்தப் பக்கம் நிற்கிறோம் என்பது தெரிந்துவிடாமல் இருக்க, வாய்களைப் பூட்டிக் கொண்டார்கள்.

புஷ்பம் உடைந்த வளையல்களை, ஒவ்வொன்றாய் எடுத்துப் போட்டபடியே விம்மினாள். அவள் முன்னங்கைகள் ரத்தச் சிவப்பாய் தோன்றின. ஜாக்கெட்டில் ஒரு கைப்பகுதி இரண்டாகத் தொங்கி, அவள் தோள்பட்டையைத் தனியாகக் காட்டியது.

பழனிச்சாமி, புஷ்பத்தின் அழுகைச் சத்தம் கேட்டுத் திரும்பினார். அவளை நோக்கி நடந்து, அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தார். கழுத்தில் கயிறுபோல் முறுக்கிக் கிடந்த அவள் முந்தானையை எதேச்சையாய் விசாலப்படுத்தி, வெறுமனே கிடந்த தோள்பகுதியை மூடியபடியே, அவள் தலையைத் தடவிக் கொடுத்தார். இன்னும் எழுந்திருக்காத அலங்காரியோ, “ஏழா... தோள்ல கிடந்த முந்தானைய தூரத் தூக்குழா... என்ன நடந்ததுன்னு எல்லோருக்கும் தெரியட்டும்” என்று கத்தினாள்... பிறகு தானே அந்தத் துணியை அவள் தோளில் இருந்து எடுக்கப் போவதுபோல் எழுந்தாள்.

இதற்குள் எங்கிருந்தோ ஓடிவந்த பேச்சியம்மா, கீழே குனிந்து, இரண்டு கை நிறைய மண்ணையள்ளியபடியே, எழுந்தாள். அலங்காரியின் தலைக்கு மேல், தன் கையைத் தூக்கி, அதை வெறுங்கையாக்கினாள்... அலங்காரியின் தலையில் மண்ணும், மண் கட்டிகளும் சரளமாக விழுந்தன. அலங்காரி, பேச்சியம்மாளின் கையைத் தட்டி விடாமலே ஒப்பாரியிட்டாள்.

“என் தலையில விழுந்த ஒவ்வொரு மண்ணுக்கும் நீ பதில் சொல்லித் தீரணுண்டி..... மண்ணாந்த...”

“தன்னை மெச்சிக்கிடாம் தவுடுக் கொளுக்கட்டை... சாபமா போடுற... சண்டாளி... முண்ட... வீட்டுக்கு வெளில தெரியாம இருந்த என் மச்சான் மவள மயக்கிப் பிட்டியளா பாவி... நீ விளங்குவியாழா பாவி... ஏழா... சந்திரா... நீயும் ரெண்டு கையி மண்ண அள்ளி இந்த மூளியலங்காரி மூதேவி சண்டாளி தலையில தட்டுழா...”

சந்திரா, கீழே குனிந்து மண்ணை அள்ளாமல், மேலே நிமிர்ந்து அம்மா மேல் அப்பிக் கொண்டாள்... தாயின் கையில் இருந்த மண்ணை தரையில் கொட்ட வைத்தாள்... இதற்குள் காளியம்மன் கோயில் பக்கமாய் படுத்துக் கிடந்த மேளக்காரர்களும், வில்லுப் பாட்டாளிகளும் ஓடி வந்தார்கள்... ஒரே கூட்டம். எல்லோரும் ஒரே சமயத்தில் பேசியதால் சந்தை சத்தமாகக் கேட்டது.

இதற்குள் சுடலைமாடன் கோவிலும் விழித்துக் கொண்டது. கோவிலுக்கு முன்னால், தென்னந்தட்டி விரிப்புகளில் தூங்கிக்

கொண்டிருந்த செம்பட்டையான்களும் லைலாவையும், அவள் காதலர்களையும் கொண்டு வந்தவர்களும் எழுந்தார்கள். ஆரம்பத்தில் கரும்பட்டையான்களும் ஏதா தங்களுக்குள் விவகாரம் நடத்துவதாகத்தான், செம்பட்டையான்கள் நினைத்தார்கள். ஆனால், பேச்சியம்மா, அலங்காரி மேல் மண்ணைப் போட்டபோது, செம்பட்டையான்கள் உஷாரானார்கள்... போதாக் குறைக்கு, அலங்காரி, செம்மண் கோலத்தோடு, வாயிலும் வயிற்றிலும் அடிப்பதை நன்றாக கேட்க முடியவில்லையானாலும், பார்க்க முடிந்தது... செம்பட்டையான்களுக்கும், ஆக்ரோஷம் ஏற்பட்டது. அந்தக் கோவிலில் இருந்து, கரும்பட்டையான்களை நோக்கி ஓடி வந்தார்கள்... பாதி வழி வந்த பிறகுதான், துரோணர் மாதிரி ஆயுத மேந்தாமல் போவது தெரிந்தது. உடனே கோவிலுக்குள் இருக்கும் சூலாயுதம், வேலாயுதம் ஆகியவற்றை எடுப்பதற்காக அவர்கள் திரும்பியபோது, கரும்பட்டையான்கள் வீசிய கற்கள் அவர்களின் முன் பக்கமும், பின்பக்கமும் விழுந்தன.

அவ்வளவுதான்... கற்காலம் துவங்கிற்று...

இருபக்கங்களில் இருந்தும், கற்கள் ஏவுகணைகளாயின... சின்னச் சின்னக் கற்கள் வேகவேகமாகவும், பெரிய பெரிய கற்கள் பயங்கர பயங்கரமாகவும் விழுந்தன... அலங்காரியை நோக்கி கல் வந்தபோது, அவள் "அய்யோ... போனனே" என்று அங்குமிங்குமாய் ஓடினாள். சில கற்கள் மரங்களில் பட்டு பின்வாங்கின. பல கற்கள் மரங்கள் வழியாக முன்வாங்கின. இருபக்கமும் மேலோங்கிய கற்கள், வில் வளைவாய் வளைந்து கீழோங்கின... "வேண்டாம்பா... வேண்டாம்பா..." என்ற ஊர்ச்சத்தங்கள்... "எறில.. வேகமா எறில" என்ற ஊக்குவிப்புச் சத்தங்கள்... சம்பந்தமில்லாதவர்கள் அங்குமிங்குமாய் ஓடிப்போய் மரங்களின் பின்னாலும், சுவர்களின் பின்னாலும் பதுங்கிக் கொண்டார்கள். சம்பந்தப்பட்டவர்களோ, சடுகுடு ஆடுவதுபோல் முன்னாலும் பின்னாலும் நகர்ந்து எதிரிகள் குறிபோடும் கற்களுக்கு அப்பால் நகர்ந்து நகர்ந்து கற்களை எடுத்து வீசினார்கள். சில சின்னப் பயல்களும், கல்வீச்சில் கலந்து கொண்டார்கள். பெண்கள் தத்தம் ஆட்களுக்கு கற்களை எடுத்துக்

கொடுத்தார்கள்... அலங்காரி, ஓடிப்போய், ஒரு சுவரின் பக்கம் நின்று கொண்டாள். கரும்பட்டையான்களான நாட்டு வக்கீல், மாயாண்டி, ராமசுப்பு, அருணாசலம் முதலியோர் கைவீசுவது போல் கல் வீசினார்கள்... செம்பட்டையான்களான தர்மராசா, தனராசா, ஐவராசா முதலியோர் செம்பட்டையான்களுக்கு தலைமை வகித்தார்கள். அதாவது கல்லெறியும் சொக்காரர்களுக்கு பின்னால் நின்றபடியே, 'விடாதே... பிடி" என்று ஊளையிட்டார்கள். "எறிங்கடா... எறிங்கடா" என்று எரிந்து விழுந்து பேசினார்கள்.

விச்விச் என்ற கல்லெறிச் சத்தம்... 'ஏய்... ஏய்' என்ற எக்காளச் சத்தம்... 'எம்மோ எய்யோ' என்ற பெண்களின் ஒப்பாரிச் சத்தம்.... தத்தம் பெண்டு பிள்ளைகள் கல்லெறியில் மாட்டிவிடக் கூடாதே என்று அவர்களை இழுத்துப் பிடிக்க அங்குமிங்குமாக ஓடும் பெரியவர்களின் காலடிச் சத்தம்... இருதரப்பிலும் கல்லெறியில் விழுந்து கொண்டிருந்தவர்களின் அவலச் சத்தம்... எங்கெல்லாமோ ஓடிக் கொண்டிருந்த நாய்களின் ஊளைச் சத்தம்... அங்குமிங்கும் அலைந்த பூனைகளின் மியாவ் மியாவ் சத்தம்... எங்குமே ஓட முடியாமல் தவித்த கட்டிப்போட்ட ஆடுகளின் 'மே... மே' சத்தம்... இங்கே நாட்டு வக்கீல் குப்புற விழுந்தான். அங்கே காஞ்சான் மல்லாந்து கிடந்தார். விழுந்தவர்களைச் சுற்றி 'எம்மாடி.... எம்மாடி' என்ற அவசரச் சத்தம்.

இறுதியில் ஆட்கள் அற்றுப்போய், கற்கள் சுயமாக எழுந்து ஒன்றுடன் ஒன்று மோதுவது போன்ற நிலைமை. கல்லெறிக்காரர்கள் குழிகளில் பதுங்கி, சுவர்களில் மறைந்து, மரங்களில் சாய்ந்து கற்களை மட்டுமே வீசிக் கொண்டிருந்தார்கள். ஒரு கல், பித்துப் பிடித்துப் போய் நின்ற பழனிச்சாமியின் தலைக்கு மேல் ஒரு அங்குல இடைவெளியில் பறந்தது. இன்னொரு கல், சொக்காரன்களை சமாதானப்படுத்திய எலி டாக்டர் முதுகைப் பிய்த்து அவரை வீழ்த்தியது. காத்துக் கருப்பன்களில் முக்கால்வாசிப் பேர் கரும் பட்டையான்களுக்கு கைகொடுப்பது போல் கல் தொடுத்தார்கள்.

இதற்குள் ஊர் கூட்டம் கும்பலாகியது. கல்லெறிந்த கரும்பட்டையான் செம்பட்டையான் கைகளை வளைத்துப் பிடித்து,

கற்களைக் கீழே போடச் செய்தது. இன்னும் கல் வீசிக் கொண்டிருந்த செம்பட்டையான்களை நோக்கி படையெடுத்தது. 'பிடிங்கடா... தேவடியா மவனுவள' என்று சொன்னபடியே அவர்களை நோக்கி ஓடியது.

கீழே கிடந்தபடியே இந்த விபரீதத்தைக் கண்ட எலி டாக்டர், பாம்புபோல் சுருட்டி வைத்த உடம்பை நெடுஞ்சாண் கிடையில் நீட்டி, ஓடிவந்த கூட்டத்திற்கு முன்னால் படுத்தார். இரு கைகளையும் தலைக்கு செங்குத்தாய் நீட்டி கும்பிட்டார். இதுதான் சாக்கு என்று, அக்கினி ராசா குடும்பத்தைப் பிடிக்காத அதே காத்துக்கருப்பன் வகையறாக்களில் சிலர், முன்னால் ஓடியவர்களைப் பின்னால் பிடித்து இழுத்தார்கள்.

எப்படியோ கல்லெறி ஓய்ந்தது. ஆங்காங்கே விழுந்து கிடந்தவர்களை அவர்களின் பங்காளிகள் சுடலை கோவிலுக்குள்ளும், பழனிச்சாமி வீட்டுக்குள்ளும் தூக்கிப் போனார்கள். எஞ்சியவர்கள், இப்போது சொல்லெறியில் ஈடுபட்டார்கள்.

"ஒங்க பொண்ணு கிடக்க முடியாமல் போனால், நாங்க என்னல பண்ணுவோம்..."

"நாங்களும் ஒங்க பொண்ணுல ஒருத்தியக்கூட விட்டு வைக்கப் போறதில்ல..."

"நீங்க இங்க வந்து பேசுங்க பார்க்கோம்..."

"நீங்க ஆம்புளைன்னா இங்க வாங்கல..."

"நாங்க ஆம்புளதான்... இல்லாட்டா ஒங்க குடும்பத்து பெண்ண எங்க குடும்பத்து பய கூட்டிட்டுப் போவானா..."

"தேவடியா மவனை.... சில்லி சில்லியாய் வெட்டுறோம் பாரு..."

இந்த அமளியில் ஊர்க்காரர்கள் அனைவரும், கூட்டங் கூட்டமாய் நின்று, ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பிறகு, பழனிச்சாமி வீட்டையும், மௌனமாகப் பார்த்தார்கள்... கோலவடிவா... பழனிச்சாமி மகள் கோலவடிவா இப்டிப் பண்ணிட்டாள்? இந்தத்

திருமல, புஷ்பத்த என்ன பண்ணுனானாம்... ஏதோ பண்ணிபுட்டானாம்... ஏடாகோடமாய்... வெளில சொல்ல முடியாதபடி... கோலவடிவு, தானா போயிருக்க மாட்டாள்.... இந்த அலங்காரி பய மவள் மருந்து மாத்திரை போட்டு அந்தச் சின்னஞ்சிறிச, மயக்கி அனுப்பி இருப்பாள். இல்லாட்டா கோலவடிவா போறவள். சும்மாகிட ஊமை ஊரைக் கெடுக்கும்... பெருச்சாளி வீட்டைக் கெடுக்கும்.

பழனிச்சாமி, இன்னும் பித்தம் தெளியாமலே நின்றார். அவரருகே, அவரது கையைப் பிடித்தபடி நின்ற பாக்கியம், கண்கள் சுருங்க கொஞ்சம் கொஞ்சமாய் மயங்கி, அவர் மார்பு வழியாக தலையைக் கீழே இறக்கி, அப்படியே குப்புற விழுந்தாள். பழனிச்சாமியோ, அப்படிப் பார்த்தும், பார்த்தது புரியாத மனோநிலையில் ஆகாயத்தை வெறித்துப் பார்த்தபடியே நின்றார். மாயாண்டியும், காத்துக் கருப்பன் பற்குணமும், பீடி ஏசெண்ட்டும், பாக்கியத்தைச் சுற்றிய கூட்டத்தை விலக்கியபடியே "காத்து வரட்டும்... காத்து வரட்டும்...." என்றார்கள். பேச்சியம்மா, நாலு பேரைக் கீழே தள்ளிப் போட்டுவிட்டு முந்தானையால் பாக்கியத்திற்கு விசிறினாள். பிறகு, 'இவ்வளவுக்கும் காரணமான அந்த அலங்காரி, பலபட்ரயை... சும்மா விட்டுட்டு நிக்கியளே... நிக்கியளே'ன்னு புலம்பி, அலங்காரி பதுங்கி, பதுங்கி நின்ற திசையைக் காட்டிக் கொடுப்பதுபோல் பார்த்தாள். உடனே, ஒரு சுவரில் உடம்பைப் போட்டு, அங்குமிங்குமாய் தலையை உருட்டிய அலங்காரியை நோக்கி, மாயாண்டியும், குள்ளக் கத்தரிக்காய் ராமசாமியும் ஓடினார்கள். அதற்குள், பீடி ஏசெண்டு பால்பாண்டி சிற்சில சமயங்களில் அலங்காரியின் சேலையைப் பிடிப்பதுபோல், இவர்களின் வேட்டிகளைப் பற்றிக் கொண்டான்... இனிமேல், அவர்கள் ஓடுவதாக இருந்தால், அம்மணமாகத்தான் ஓடவேண்டும்...

பாக்கியத்தின் கைகால்கள் வெட்டின. கண்கள் நிலை குத்தின. வாயில் நுரை வருவது மாதிரி இருந்தது. பழனிச்சாமி கீழே குனிந்து, அவள் தோளைத் தொட்டுத் தூக்கப் போனார். தூக்கப் போனவரும், கீழே விழுந்தார். அவள் தோளில் ஏதேச்சையாய் கைபோட்டபடியே விழுந்தார். ராமசாமி, அவரைத் தூக்கி நிறுத்தினார்.... மாயாண்டியும், இன்னும் சிலரும் பாக்கியத்தைக் கைத்தாங்கலாக வீட்டுக்குள்

கொண்டு போனார்கள். "சுக்கு வச்சு ஊதுங்கடா... சுக்கு வச்சு ஊதுங்கடா..." என்று சாமியாடித் தாத்தா தனக்கே கேட்காத குரலில் பேசிவிட்டு, பிறகு பழனிச்சாமியின் வீட்டுக்குள் ஓடினார். ஏதோ ஒரு அசரீரி போல முடிவில்லாக் குரல் ஒன்று கர்ஜித்தது.

"இதுக்குல்லாம் காரணம் அலங்காரிதான்... செறுக்கி மவள கொண்டையை சிறச்சி கரும்புள்ளி செம்புள்ளி குத்தி, தலையில மண் மூட்டய ஏத்தி உண்டு இல்லன்னு பாக்கணும்..."

இந்தப் பேச்சு ஊர்க்காதுக்கு கேட்டதோ இல்லையோ, அலங்காரிக்குக் கேட்டது. திடீரென்று, அவள் இன்னும் குன்றிப்போய் நின்ற புஷ்பத்தை நோக்கி ஓடினாள். அவள் கையைப் பிடித்து, திருமலையை விட வேகமாக இழுத்தாள்... வடமேற்குப் பக்கமாக இழுத்துக் கொண்டே ஓடினாள்.

"என் பின்னால வாழா... ஒன்னை 'கற்பழிச்ச' திருமலை கையில விலங்கு மாட்டி அவன நாயி மாதிரி இழுக்க வைக்கன்னா இல்லியான்னு பாரு...."

# 28

கோலவடிவு அந்தப் பெரிய வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தாள். துளசிங்கத்துடன் விக்கியில் வந்த பாதி வழியிலேயே மனதை திடப்படுத்தி வைத்திருந்த அவளை, துளசிங்கம் கீழே தள்ளிப்போட்டதன் மூலம் அவள் மனதும் திரவமாக்கி விட்டது உண்மைதான். ஆனாலும் அவ்வப்போது ஜன்னல் வழியாக அவன் எட்டிப் பார்த்தது அவளுக்கு ஆறுதலாக இருந்தது. வீட்டு நினைப்பும் அடிக்கடி வந்தது. அப்போதெல்லாம் பற்களைக் கடித்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்டாள். மனதைக் குழப்பிக் குழப்பி, குழம்பிப்

போய், இறுதியில் நம்மால் ஆகக்கூடியது ஏதுமில்லை என்ற ஒரு இயலாமை எண்ணம் வரும்போது, கூடவே வருமே ஒரு பெருந்தூக்கம்-அது அவளையும் ஆக்கிரமித்தது. நீண்ட நெடுந்தூக்கம்.

கோலவடிவைச் சூரியக் கதிர்கள் இப்போது எரிப்பதுபோல் சுட்டன. அப்போது அவள் ஒரு இன்பக் கனவில் ஈடுபட்டிருந்தாள். அம்மா, அவள் தலையை வாரி விடுகிறாள். "சனியனுக்கு எவ்வளவு நீள முடி பாரு...." என்ற திருமலையை "டேய் யார வேணுமுன்னாலும் பேசு... என் கோலத்த மட்டும் பேசாதே" என்கிறார் அப்பா. அவள் அப்பாவைப் பாசத்தோடு பார்த்துவிட்டு, அண்ணனை பொய் முறைப்பாய் முறைத்துவிட்டு அம்மாவின் மார்பில் அப்படியே சாய்கிறாள். இதுக்குப் பேர்தான் சொர்க்கமோ...

கோலவடிவு வீறிட்டு எழுந்தாள்... "அம்மா... அம்மா..." என்று கூவியபடியே தூக்கம் கலைந்து எழுந்தாள். பிறகு அந்த சூன்ய அறையை விட்டு சூன்யமாகப் பார்த்தாள்... இது வெட்டாம்பட்டி வீடு... அம்மா - அப்பாவிடம் இருந்து வெட்டிக் கொண்டு வந்து தங்கியிருக்கும் வீடு.

விரிந்த தலைமுடியை உசுப்பி வைத்துக் கொண்டு, இரண்டு கைகளால் இரண்டு காதுகளையும் மூடி, முன்னங் கைகளை முன்புறமாக மடக்கி வைத்து, செய்வதறியாது பிரமையோடும், பிரமிப்போடும் இருந்த கோலவடிவு, ஒரு சத்தங்கேட்டு திடுக்கிட்டாள். லேசாய் சந்தோஷப்பட்டாள். அலங்காரி அத்தையின் சத்தம்.

கோலவடிவு கதவை உடைப்பதுபோல் திறந்து கொண்டு வெளியே வந்தபோது, அலங்காரி அத்தை முற்றத்தில் நின்றாள்... அவளருகே புஷ்பம்... பாட்டிக்காரி இருவரையும் ஆச்சரியமாகப் பார்த்தாள். செம்மண் கோலத்தில் அலங்காரி அத்தை ஏன் அப்படி நிற்கிறாள் என்பதோ, புஷ்பம், ஜாக்கெட் பிய்ந்துபோய் ஏன் வந்தாள் என்பதோ கோலத்திற்கு அனுமானமாகவில்லை. ஏதோ இயல்பாக நிற்பது போலவே நினைத்தாள். ஆனால் துளசிங்கமோ சித்தியையும், தங்கையையும் வாயகலப் பார்த்தான். பார்த்தபடியே எழுந்தான். பிறகு அவர்கள் முன்னால் போய் நின்றான்.

"என்ன சித்தி இதுல்லாம்...? இவள் ஏன் இப்டி வந்திருக்காள்... சொல்லு சித்தி... சொல்லு சித்தி..."

"சொல்லத்தானே வந்திருக்கேன்... ஆதியோட அந்தமாச் சொல்லுறேன்... சொன்னாலும் ஆறாது... சொல்லியும் மாளாது..."

"என்ன நடந்தது சித்தி... சொல்லித் தொலை சித்தி..."

அலங்காரி சொல்லத் தொடங்கவில்லை... சேலை மடிப்பில் ஒன்றை விலக்கியபடியே திண்ணையில் உட்கார்ந்தாள்... கலங்கி நின்ற புஷ்பத்தை, கையைப் பிடித்து உட்கார வைத்தாள். திண்ணைத் தூணைப் பிடித்தபடி நின்ற கோலவடிவை ஏறிட்டுப் பார்த்தாள். பிறகு, அவள் யாரோ எவளோ என்பதுபோல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். கோலவடிவால் பொறுக்க முடியவில்லை.

"அத்தே.... அத்தே..."

"அத்த... இன்னும் சாகாம இருக்கத்தான் செய்யுதேன்..."

அலங்காரி, கோலவடிவைப் பார்க்காமலே பதிலளித்தாள்... ஆனால் உட்கார்ந்திருந்த புஷ்பம் எழுந்தாள்... கோலவடிவை நேருக்கு நேர் பார்த்தபடி பேசினாள்...

"ஒனக்கென்ன...? நீ எடாத எடுப்பு எடுத்து எங்கண்ணன கடத்திட்டு வந்துட்டே.... ஒனக்கு கொளுப்புப் பிடிச்சா... நான் என்ன பண்ண முடியும்... இந்த ஜாக்கெட்டப் பாரு... ஒங்கண்ணன் என்னை என்ன பாடு படுத்தியிருக்கான்னு..."

புஷ்பம், பாதி அலங்காரியாலும், பாதி திருமலையாலும், பிய்க்கப் பட்ட ஜாக்கெட்டைக் கோலவடிவிற்குக் காட்டியபோது, துளசிங்கம் துள்ளி எழுந்தான்.

"குட்டாம்பட்டிக்கு இப்பவே போயி, செறுக்கி மவன என்ன பாடு படுத்துறேன் பாரு... என் தங்கச்சிய அவன் தங்கச்சி மாதிரி நெனச்சிட்டான் பாரு... ஏய் புஷ்பம் நீயாவது சொல்லுழா..."

"நானே சொல்லுதேண்டா... நானே சொல்லுதேன்... கோழி கூவுறதுக்கு முன்னாலயே நானும் இவளும் சுடலைமாட சாமி

கோவிலில் இருந்து நாங்கபாட்டுக்கு பேசிக்கிட்டு வந்தோம்... கோலவடிவு, இங்க ஓடி வந்தது பழனிச்சாமி வீட்டுக்கு தெரிஞ்சுட்டு... போலுக்கு... திருமலைப் பயல் ஓடிவந்து என்னை மிதிமிதின்னு மிதிச்சு கீழே தள்ளுனான். இந்த முழுத்த பொம்புளய் பிள்ளய ஜாக்கட்ட பிடிச்சு... அய்யோ எப்டிச் சொல்லுறதுடா... எப்டிச் சொல்லுறது.... அழாதழா புஷ்பம்..."

துளசிங்கம் பொறுமை இன்றி முந்தினான்.

"இதுக்கு மேல நீ எதுவும் சொல்லாண்டாம்... இன்னைக்கு ஒண்ணு அவன் சாகணும்... இல்லன்னா நான் சாகணும்..."

"குறயும் கேளுடா... ஊர்க்கூட்டம் திரண்டுது... அதுக்குள்ள நம்ம ஆளுவளுக்கும் அவங்களுக்கும் ஒரே கல்லெறி... காஞ்சான் மச்சான் முதுக நிமுத்த முடியாம கிடக்காரு. ஒங்கப்பாவுக்கும் நெத்தில காயம்... துடிச்சிட்டு கிடக்காரு. இதோ பாரு... என் வாய திருமலைப் பய என்ன பாடு படுத்தியிருக்கான்னு..."

"பாட்டி! ஒன் கையால ஒரு அரிவாளை எடுத்துத்தா..."

"முழுசா கேளு துளசிங்கம்... நீ எப்பவுமே அவசரந்தான்."

"நீ என்ன செய்யணுமுன்னு நினைக்கியோ, அதை வட்டியும் முதலுமா நடத்துறதுக்கு சித்தி ஏற்பாடு பண்ணிட்டேன். இவளக் கூட்டிக்கிட்டு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனேன். சுடலை மாடன சும்மா சொல்லப்படாது... சப்-இன்ஸ்பெக்டர் அய்யா இருந்தாரு. நடந்ததைச் சொன்னேன்... மொதல்ல விரட்டுனாரு... அப்புறம் நான் துளசிங்கத்தோட சித்தின்னேன்... அவ்வளவுதான்... கடிச்ச பல்ல திறந்தாரு... இதுக்குள்ள நம்ம சினிமாக்காரங்களும் வேன்ல வந்தாங்க... திருமல வேனை பஞ்சராக்குனதைப் பத்தி புகார் கொடுத்திருக்காங்களாம். அது சம்பந்தமா... வந்திருக்காங்க... அதுவும் நல்லதாப் போச்சு. ஏற்கனவே போன வருஷம் இந்த சப்-இன்ஸ்பெக்டரும், நம்ம ஊர் தகராறுல கார்ல இருந்துக்கிட்டே யாரையோ விசாரிச்சாராம்.... அப்போ இந்த திருமலை 'கார்ல இருந்து இறங்கி விசாரிச்சா என்னன்னு' கேட்டானாம்... அப்போவே அவனை

இவரு நோட்டோ பூட்டோ செய்து வச்சிருக்காராம்... ஏட்டய்யாவ, நான் தனியா 'கவனிக்கும்போது,' தனியா சொன்னாரு..."

"அப்புறம்"

"திருமலையை விலங்குபோட்டு இழுத்துட்டு வாரதுக்கு, சப்-இன்ஸ்பெக்டரு போலீஸை அனுப்பி இருக்காரு... அவசரத்தில இந்த பேச்சியம்மாவை போலீஸ்ல சொல்ல மறந்துட்டேன்... அவள்தான் தலையில மண்ணள்ளிப் போட்டாள்... இந்நேரம் திருமலை கையிலயும் காலுலயும் விலங்கு ஏறி இருக்கும்."

"செறுக்கி மவனுக்கு நல்லா வேணும்."

கோலவடிவு குமுறிப் போய் நின்றாள். அவர்களிடம் பேசுவதாய் நினைத்து தனக்குத் தானே பேசிக் கொண்டாள்.

"அத்தே... எங்கண்ணாவ ஒண்ணும் பண்ணாதிய... அவசரத்துல ஏதோ பண்ணியிருப்பான்... அதுக்கு என் மேல இருக்கிற பாசம்தான் காரணம்... ஒங்க மேலே இருக்க கோபமுல்ல... துளசிங்கம் மச்சான், எங்கண்ணாவ அப்டி திட்டாதேயும்... இனுமே அவன் ஒமக்கு மச்சினன்... மச்சினன் கையில் விலங்கு போட்டா ஒமக்கு கால் விலங்கு போட்டதா அர்த்தம்... அய்யோ அண்ணா... எத்தே... எங்கப்பா... எப்டி இருக்கார்...? எம்மா எப்டி இருக்கா...? மச்சான்... அவன் 'தங்கச்சி மாதிரி... என் தங்கச்சிய நெனச்சிட்டான்னு... சொல்லிட்டீரே... சொல்லிட்டீரே... இதுக்கு மேலயும் நான் உயிரோட இருக்கணுமா....?'

கோலவடிவு, பேசப்போனதை பேசமுடியாமல், உள்வாங்கினாள்... தலை, தனியாய் பிய்ந்து பம்பரமாய் சுழன்றது போல் இருந்தது... ஆகக்கூடியது ஏதுமில்லை என்பதுபோல், கைகளை விரித்தாள்... இதற்குள் புஷ்பம் மனதுக்குள் குமுறிக் கொண்டிருந்ததை ஒப்பித்தாள்.

"பாரு அண்ணா சித்திய... திருமலை என்னைக் கற்பழிச்சுட்டான்னு போலீஸ்ல சொல்லிட்டாள்... அந்தப் பன்னாடைப் பயலுவளும் எதையோ சோடிச்சு எழுதி... என்கிட்ட கையெழுத்து வாங்கிட்டாங்க.... அவரு என் கையைத்தான் பிடிச்சு இழுத்தாரு... அதுவும் கோபத்துலதான்... வேற அர்த்தத்துல அவரு பிடிக்கல..."

அலங்காரி கற்பழிப்புக்கு விளக்கமளித்தாள்.

"இவ்வளவு நடந்த பிறவும் அவராம்... அவரு... ஒனக்கு மூள இருக்குதா... புஷ்பம்! கையைப் பிடிக்கது கற்பழிச்சது மாதிரிதான். நாம... தமிழ்நாட்டுல இருக்கவங்க... மறந்துடாத"

"ஆனாலும் சித்தி நீ நடக்காததை நடந்ததாச் சொல்லியிருக்கக் கூடாது... கடைசியில புஷ்பத்திற்குத்தான் அசிங்கம்..."

"நான் என்ன இழவப்பா கண்டேன்...? அப்பிடிச் சொன்னாத்தான் திருமலையை விலங்கு போட்டு கொண்டு வர முடியுமுன்னு ஏட்டய்யா சொன்னாரு... சரி... நான்தான் சொன்னேன்... இவள் ஏன் கையெழுத்துப் போடணும்..."

"நான் என்னத்தைக் கண்டேன்.... கிறுக்கல் கிறுக்கலாய் எழுதியிருந்தாங்க... படிக்கதுக்கு முன்னாலயே அவங்களும் அவசரப்படுத்தினாங்க... சித்தியும் அவசரப்படுத்துனாள். கையெழுத்துப் போட்ட பிறகு கற்பழிப்புன்னு சொல்லுதாங்க..."

"என்ன சித்தி இப்படிச் செய்துட்டே...."

"என்ன இழவோ செய்துட்டேன்... இனும என்ன செய்யச் சொல்லுற... அப்புறம் சப்-இன்ஸ்பெக்டரு ஒன்னை கையோட கூட்டிட்டு வரச் சொன்னாரு... புஷ்பமும் வரணுமாம்."

"அவங்க பார்வையே சரியில்ல... நான் போக மாட்டேன்..."

"அண்ணாச்சி இருக்கும்போது எதுக்கும்மா கவலப்படுற...? எல்லாப் போலீசும் இவன் கைக்குள்ள அடக்கம்... இல்லியாடா துளசிங்கம்..."

துளசிங்கம் எதுவும் பேசவில்லை. வீட்டுக்குள் போய் டைட் பேண்ட்டை அவசர அவசரமாகப் போட்டான். அதுவரைக்கும் வெளியே காத்திருந்த கோலவடிவு உள்ளே போனாள். அந்தக் குழப்பத்திலும், அவளுள் ஒரு தெளிவு ஏற்பட்டது... 'போலீஸில் நடந்ததைச் சொல்லி அண்ணனை, மச்சானே மீட்டினால் அண்ணாவுக்குக் கோபம் தணியும்... அப்புறம் அவனைச் சாட்சியாய் வச்சே ரிஜிஸ்டர் கல்யாணம் செய்துக்கிட்டு ஊருக்குப் போகலாம். அம்மாவப் பாக்கணும்... இப்பவே பாக்கணும்..."

கோலவடிவு, துளசிங்கத்தை நெருங்கினாள். அவ்வளவு பேசிய அவனிடம் பேசவே தோன்றவில்லை. ஆனால் பேசித்தானே ஆகவேண்டும்...

"நானும் வாரேன் மச்சான்..."

"எங்க வார?"

"ஒங்க கூடத்தான், நானும் வரப்போறேன் மச்சான். நடந்த விஷயத்த போலீஸ்ல சொல்லுவோம். அப்புறம்.... அண்ணாவோடயே ரிஜிஸ்டர் ஆபிசுக்குப் போவோம். புஷ்பம் அண்ணிய எங்கண்ணாவுக்கு கட்டி வச்சுடலாம்... மொதல்ல போலீஸ்... ரெண்டாவது ரிஜிஸ்டர் ஆபீஸ்.... மூணாவது ஊர்... திருமலை-புஷ்பம் கல்யாணம்... எல்லாத்தையும் நல்லவிதமா முடிச்சுடலாம்... சரிதானே மச்சான்..."

"அப்பன் கோவணத்தோட கிடந்தானாம்... மகன் 'இழுத்து மூடப்பான்'னு சொன்னானாம்... என் தங்கையை ஒண்ணன் தேவடியா மவன்... சீரழிச்சிருக்கான்... அப்பா கல்லெறிக் காயத்தோட துடிக்காராம்... ஒனக்கு இந்தச் சமயத்துல கல்யாணம் கேட்காக்கும்... கல்யாணம்... பேசாம இங்கேயே கிட... இல்லன்னா எங்கேயாவது போய்த்தொலை..."

துளசிங்கம் அவளைப் பாராமலே வெளியே வந்தான். எதுவுமே பிடிபடாமல் நின்ற பகவதி பாட்டி "ஏய் ஒருத்திய தொடப்படாது... தொட்டா விடப்படாதுடா" என்றாள் - பேரனின் சட்டைக் காலரை பிடித்தபடி... துளசிங்கம், கோலவடிவைப் பார்த்தபடி பாட்டிக்குப் பதிலளித்தான்...

"நீயே அவள கட்டிக்கிட்டு அழு... இப்போ எனக்கு அதைவிட வேற வேல இருக்கு... எழுந்திரு சித்தி... எழுந்திரு புஷ்பம்... இன்னையோட அவங்க குளோஸ்."

துளசிங்கம், புஷ்பத்தோடும் அலங்காரியோடும் வெளியேறினான். புஷ்பமாவது கோலவடிவை பாசமாகப் பார்த்து விட்டு, பிறகு தானே பாவப்பட்டவள்போல் போனாள். அலங்காரியோ அவளைத் திரும்பியே பார்க்கவில்லை.

கோலவடிவு, குற்றுயிரும் குறையுயிருமாய் துடித்தாள்.

# 29

சட்டாம், வெட்டாம், குட்டாம்பட்டிகள் போன்ற பல பட்டிகளுக்கு ஆதிபத்திய உரிமை கொண்ட அந்தக் காவல் நிலைய லாக்கப்பிற்குள் ஏழெட்டுப் பேர்கள் நின்றார்கள். கால்மணி நேரத்திற்கு முன்பு வரை கலகலப்பாகப் பேசிக்கொண்டிருந்தவர்கள் இப்போது எதிரே சுவரோடு சுவராக நின்றவனை சுதாரித்துப் பார்த்தார்கள். எத்தன கொலை செய்தானோ.... இல்லன்னா இப்டியா...

காவல் நிலைய வாசல் முகப்பில் துப்பாக்கி பிடித்து நின்ற இரண்டு காவலர்களில் ஒருவர் லைட்டரைத் தூக்கி, துப்பாக்கி சுடுவது போல் சுட்டு, சிகரெட்டைக் கொளுத்த, இன்னொருத்தர் அதே வளாகத்தில் கூடிக்கூடி நின்ற கூட்டங்களில் ஒன்றை நோக்கி 'டா' போட்டும் 'டி' போட்டும் கூப்பிட்டார். லாக்கப் அறைக்கு அடுத்த அறையில் நகரங்களில் இருப்பதுபோல், போக்குவரத்து, சட்டம், ஒழுங்கு, குற்றம், புலனாய்வு என்று தனித்தனி சப்-இன்ஸ் பெக்டர்கள் இல்லாமல், எல்லாமே சர்வமயமான சப்-இன்ஸ்பெக்டர் நடுத்தரம். கல்லூரியில் 'ரேக்கிங்' செய்த அனுபவம் அவருக்குக் கை கொடுத்தது. டெலிபோனில் அரசினர் சுற்றுலா மாளிகை அலுவலரை விரட்டிக் கொண்டிருந்தார். "எத்தனை தடவப்பா சொல்றது.... எஸ்.பி. கேம்ப் வாரார்... வாரார்னு.... நோ.... நோ... நாலு ரூமையும் பூட்டி வை... புள்ளி விவகார அதிகாரிக்கு ரிசர்வ் செய்திருக்கா....? இடமில்லன்னு சொல்லிடு... ஆமா... நாலு ரூம்ல ஒண்ணக்கூட திறக்கப்படாது... அப்புறம் பின்னாடி என் மேல வருத்தப்பட்டு பிரயோசனமில்ல... சுற்றுலா மாளிகையில என்னெல்லாம் நடக்குன்னு எனக்குத் தெரியும். ஒன்னால... முடியுமா... முடியாதா... ஆங்.... அப்படி வழிக்கு வா..."

ஆகமொத்தத்தில், அந்த நிலையம் காவல் நிலையமாகத் தெரியவில்லை. காவலர் நிலையமாகவே தெரிந்தது... சப்-இன்ஸ்பெக்டர் சுவரில் சாய்ந்து கிடந்த திருமலையை, எஸ்.பி. வருகையின் அவசரத்தையும் மீறி, நிதானமாக, இளக்காரமாக

ஏடாகூடமாக, ஏளனமாகப் பார்த்தார். அவன் அருகே போய் நின்றபடியே போர்ப்பரணி பாடினார்.

“சப்-இன்ஸ்பெக்டர் எப்படிப்பட்டவர்னு இப்பவாது புரியுதுதாடா...? தேவடியா மவனே... பாஸ்டர்ட்... என்ன சொன்னே சப்-இன்ஸ் பெக்டர்னா காரை விட்டு இறங்கப்படாதோ... இன்னொரு தடவ சொல்லுடா... பார்க்கலாம்... போலீஸ ஒன் மாமன் மச்சான் மாதிரி நெனச்சிட்டே.... இல்லே...’

சப்-இன்ஸ்பெக்டர் பூட்ஸ் காலால் திருமலையின் பாதத்தைத் தட்டிவிட்டார். அவனோ செத்துப் போனவன் போல் சுவரில் கிடந்தான். அந்த நிலையத்திற்கு உள்ளே, இரண்டு சுவர்களுக்கு இடையே உள்ள ஒடுகலான வழியில், முதல் சுவரில் அமைக்கப்பட்ட கொக்கிகளில் அவன் கைவிலங்குகள் பொருத்தப்பட்டிருந்தன.

குப்புறச் சாய்ந்து கிடந்த திருமலை முகத்தை மட்டும் அங்குமிங்குமாக அசைத்தான்.... உடம்பை அசைக்க இயலாது... சுவருக்குச் சுவராகி விட்டான். அந்தச் சுவர் விழாமல் இருப்பதற்கான அணைப்புக்கல் மாதிரி நிறுத்தி வைக்கப்பட்டான். பயங்கரக் குற்றவாளிகளுக்காக விசேஷமான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப் படவேண்டிய அந்தச் சுவர் கொக்கிகள், அவன் கைகளை விலங்கோடு சேர்த்து இழுத்துப் பிடித்தன. அவனுக்குக் கை வலித்தது. நீட்டிய கையைச் சுருக்கப் போனால், சுவர்க் கொக்கிகள் சுண்டி இழுத்தன. சுவரிலே முகம் போட்டுப் போட்டு மூச்சு முட்டியது. முகத்தைத் திருப்பலாம் என்றால், சுவர் மோவாயை இடித்தது. அவன் முட்டிக்கால்களின் பின்பகுதிகளில் லத்திக் குத்துகள் முத்திரை போட்டிருந்தன. அவற்றில் பூட்ஸ் காலின் அடையாளங்கள் செம்மண் நிறத்தில் தெரிந்தன.

சப்-இன்ஸ்பெக்டர் வெளியே ஒரு வேன் வந்து நிற்பதைப் பார்த்துவிட்டு, தனது அறையில் கம்பீரமாக உட்கார்ந்தார்... இன்னும் வேன்காரர்கள் ஏன் தன்னிடம் வரவில்லை என்பது மாதிரி முகத்தைச் சுழித்தார்... ‘வாரவன் நேரா வரக்கூடாது...? ரைட்டர்கிட்ட என்ன பேச்சு... நானிருக்கையில்...’

ஏழெட்டுப் பேர், சப்-இன்ஸ்பெக்டர் முன்னால் வந்து நின்றார்கள்... துளசிங்கம், தனது சகாக்களையும் அலங்காரி சித்தியையும் பிரமிக்கச் செய்வதற்காக, "ஆளே இளச்சீட்டிங்களே ஸார்" என்றான்- சர்வசாதாரணமாக. இதைப் புரிந்துகொண்ட சப்-இன்ஸ்பெக்டர் சுள்ளென்று விழுந்தார்.

"யோவ் துளசிங்கம்... நீயும் போலீஸ.... மாமா மச்சானா நெனச்சிட்டே... இல்ல... ஒன் சிஸ்டர் கற்பழிக்கப்பட்டிருக்காள்... அவளை மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பணும். எங்கேயா போயிட்டாள்? இந்தாம்மா... ஒன் பேரு என்ன?"

"அலங்காரி... எசமான்."

"ஏய் அலங்காரி... ஒன் மனசுல என்ன நெனச்சுக்கிட்டே... கற்பழிக்கப்பட்ட பொண்ண எங்கே கடத்திட்டுப் போனே. அவள் வந்த பிறகுதான்... நீ போக முடியும்."

"வருவாள் சாமி... வருவாள்... கற்பழிச்சவனையே நீங்க இன்னும் பிடிக்கல."

"யோவ்.... இந்த பொம்புளைக்கு கண்ணு குருடா..."

துளசிங்கம், தனக்கும் கண் குருடு என்பதுபோல் புரியாமல் விழித்தான். சப்-இன்ஸ்பெக்டர் திருமலையைப் பார்த்துக் கண்ணடித்துக் காண்பித்தார். பிறகு அவர்களிடம் அப்படி நடந்து கொள்வது கௌரவக் குறைச்சலாக்கும் என்று ஒரு எண்ணம் திடீரென்னு ஏற்பட, அவர் உடம்பை விறைத்து, முகத்தை முறைப்பாக்கினார்.

எல்லோரும் சுவரில் கட்டப்பட்ட திருமலையையே பார்த்தார்கள். வேன்கார சினிமாக்காரர்களுக்கு அது கொஞ்சம் அதிகமாகத் தெரிந்தாலும், அதிகமாக அலட்டிக் கொள்ளவில்லை. 'வேன் டயர்களை பஞ்சராக்கி, மூணு கிலோமீட்டர் தூரத்துக்கு வேனைத் தள்ள வைத்த கிராமத்து எக்ஸ்டிராப் பயல்... ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் ஒரு நாள் வீதம் கிடக்கட்டும். சினிமாக் காமிரா கொண்டு வராமப் போயிட்டோமே... இதையே ஒரு குளோஷப்பாய் ஷாட் எடுத்தால் எந்த தயாரிப்பாளர் கிட்டேயும் வித்துடலாம்...'

துளசிங்கம் முகத்தில் எந்தவிதச் சலனமும் காட்டாமல் திருமலையை யந்திர ரீதியில் பார்த்தான். லேசாகத் தலையை மட்டும் அங்கும் இங்குமிங்குமாய் ஆட்டிக் கொண்டான். அப்புறம் சப்-இன்ஸ்பெக்டரை நன்றியோடு பார்த்தான். அலங்காரிதான், அவன் முன்னால் போய் நின்று பார்த்தாள். பிறகு, "இந்தக் காலுதானே உதச்சது" என்று திருமலைக்கு மட்டும் கேட்கும்படி சொல்லிவிட்டு, சப்-இன்ஸ்பெக்டர் அறைக்கு வந்தாள். அவர் அனைவரையும் அறையப் போவதுபோல் அதட்டினார்.

"கடுமையான குற்றம் செய்கிறவங்களத்தான்... அதாவது- சீரியஸ் அபென்ஸ் செய்கிறவங்களத்தான்... இப்டி சுவர்ல போடுவோம்... ஒங்களுக்குத் தெரியுமோ என்னமோ... ஒங்க கம்ப்ளயிண்ட் சீரியஸ்.... ரேப் சார்ஜ்... டெட்லி சீரியஸ்... ஒன் சிஸ்டர மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பணும்... சீக்கிரமா கூட்டிவா..."

"ஸார் வந்து"

"யோவ் கூட்டி வாரியா இல்ல...? நானே கூட்டிட்டு வரணுமா... கூடக் கூடப் பேசுனே... எனக்குக் கோபம் வரும்..."

"சும்மா இருடா துளசிங்கம்... நான் போயி என் மவள கூட்டிட்டு வாறேன்..."

அலங்காரி, திருமலையை அடிக்காத குறையாகக் கடந்து வெளியே போனாள். போலீஸ் கட்டிடத்திற்கு வெளியே, ஒரு ஓரமாக நின்ற புஷ்பத்தை இழுத்தாள். அவள் அங்கிழுக்க, இவள் இங்கிழுக்க, இறுதியில் வாயில் காவலர் அதட்ட, புஷ்பம் சுயமாகவே உள்ளே வந்தாள். திடீரென்று பழக்கப்பட்ட ஒரு குரல் கேட்டு நிமிர்ந்தாள். திருமலை குலுங்கிக் குலுங்கி அழுதான்... சுவரிலே இருந்து கையைப் பிய்ப்பது போல், முன்னாலும் பின்னாலும் தலையை ஆட்டி ஆட்டி சுவரில் முட்டினான்... ஒவ்வொரு சொல்லாகச் சொல்லி அந்த ஒவ்வொரு சொல்லுக்கும் இடையே அழுதழுது சொல்லி முடித்தான்...

"புஷ்பம்... நானா ஒன்னைக் கற்பழிச்சேன்... புஷ்பம்... எனக்கு காப்பு மாட்டுனதுகூட பெரிசில்ல புஷ்பம்... ஒன்னை கற்பழிச்சேன்னு பழி போடுதாங்க பாரு... அதை நெனச்சாத்தான்..."

புஷ்பம், அவன் நின்ற கோலத்தைப் பார்த்து நிலையிழந்து நின்றாள். மனதுக்குள் யாரோ சூடு போடுவது போலிருந்தது... குலுங்கிக் குலுங்கி அழும் திருமலையைப் பரிதாபமாகப் பார்த்தபடியே விம்மிவிம்மி அழுதாள். உடனே அலங்காரி, அவளைக் கைத் தாங்கலாய் அணைத்தபடி, சப்-இன்ஸ்பெக்டர் முன்னால் ஆஜர் படுத்தினாள். இன்னும் அந்த சப்பைப் பார்க்காமல் திருமலையையே பார்த்த புஷ்பத்தின் முகத்தை, அலங்காரி சப்-இன்ஸ்பெக்டர் பக்கமாக திருப்பிவிட்டாள். புஷ்பம் மீண்டும் மாங்கு மாங்கென்று அழுதாள்... வழியில் பார்க்கும் போதெல்லாம் "என்ன பிள்ள இப்டி வெட்கப்படுறே" என்று எந்த சூதும் இல்லாமல் பேசுன மனுஷன்... ஏதோ கோபத்துல அப்டி நடந்திட்டாரு. அதுக்காவ இப்டியா... இப்டியா... மாட்டக்கூட இப்டி கட்டமாட்டாவளே... கூண்டுல கிளியக்கூட இப்டி அடைக்க மாட்டாவளே..."

கட்டுப்படுத்த முடியாமல் அழுத புஷ்பம் ஏதோ பேசப் போனாள். அலங்காரி அவள் வாயைப் பொத்தியபடியே முறையிட்டாள்.

"பாருங்க எசமான்... என் மச்சான் மவள அந்தப் பய என்ன பாடுபடுத்தி இருக்கான்னு... எப்டி அழுவுறாள் பாருங்க...."

சப்-இன்ஸ்பெக்டர், புஷ்பத்தைப் பார்த்தார். அவள் பிய்ந்த ஜாக்கெட்டைப் பார்த்தார். பார்த்தபடியே சிகரெட்டைப் பற்ற வைத்தார். அந்த பார்வையைப் பார்த்த துளசிங்கம் பயந்துவிட்டான்... பம்மியபடியே பயபக்தியோடு பேசினான்...

"ஸார் தப்பா நெனக்கப்படாது. நாம கொஞ்சம் வெளில போய்..."

"சரி நீங்க மொதல்ல போங்க... நான் வாறேன்..."

துளசிங்கம், புஷ்பம், அலங்காரி முன்நடக்க, சினிமாப் பயல்கள் பின் நடக்க, திருமலையைக் கடந்து போனபோது, அந்தச் சுவர்க் கைதி வீமனைப் போல் சபதமிட்டான்.

"ஜெயிச்சுட்டோம்னு நெனக்காதடா... துளசிங்கம்... ஒன் மார்பப் பிளந்து ரத்தம் குடிக்காட்டா என் பேரு திருமலை இல்ல... போலீஸ் அடிச்ச ஒவ்வொரு அடிக்கும் ஒன்னை ஒவ்வொரு வெட்டா

வெட்டாட்டா நான் பழனிச்சாமி மகன் இல்ல... இது எனக்குப் பெரிசில்லடா... என் தங்கச்சிய இழுத்துட்டுப் போனியே... அதுக்கு நீ ரத்தத்தால பதில் சொல்லித்தான் ஆகணும்... ஏய்... அலங்காரி செறுக்கி..."

சப்-இன்ஸ்பெக்டர் ஓடிவந்து அவன் விலாவில் குத்தினார். பிடறித் தலையைக் கையில் பிடித்து வைத்துக் கொண்டே, அவன் முன் தலையை சுவரிலே மோதவிட்டார். அவருக்கு அடித்த களைப்பு ஏற்பட்டு விடக்கூடாதே என்று இரண்டு காவலர்கள் ஒத்தாசைக்கு வந்தார்கள். திருமலையைக் கவனிக்கும்படி அவர்களுக்கு கண்காட்டிவிட்டு சப்-இன்ஸ்பெக்டர் வெளியே வந்து, துளசிங்கக் கூட்டத்தின் மையம் போல் நடுவில் வந்து நின்றார்.

"இந்தாம்மா... புஷ்பம்... வேன்ல ஏறு... மருத்துவ பரிசோதனை செய்துட்டு வர்லாம்.."

"ஸார்.. கோபப்படாம கேட்கணும்... எங்க சித்தி புத்தியில்லாதவள்... தெரியாத்தனமாக சொல்லிட்டாள்... அவன் ஒண்ணும் என் சிஸ்டர கற்பழிக்கல ஸார்..."

"சும்மா கிட துளசிங்கம்... கற்பழிக்க முயற்சி செய்தால் அதுவும் குற்றந்தான்."

சப்-இன்ஸ்பெக்டர் தன் தவறை உணர்ந்தவர்போல் வாயில் இருந்த சிகரெட்டை வீசிவிட்டு எச்சரித்தார்.

"பால்ஸ் கம்ளெயிண்ட் கொடுத்ததுக்கு ஒங்களையும் இப்போ உள்ளே போடலாம் தெரியுமா?"

"தெரியாம இருப்பனா ஸார்... இவனையும் விடப்படாது... என் தங்கச்சி... பேரும் சந்திக்கு வரப்படாது... ஏதாவது வழி சொல்லுங்க ஸார்..."

சினிமா மாஸ்டர் குறுக்கே புகுந்தான்.

"இந்தாப்பா துளசிங்கம்.... ஸார் மச்சினிக்கு வளைகாப்பாம்... வீடியோ எடுக்கணுமாம்... ஒங்கிட்டே தானே டேப் இருக்கு... கொடு

கொடு... படம் எடுத்துட்டு சீக்கிரமா மெட்ராஸ் போகணும்... ஷூட்டிங் இருக்குது...."

"வீட்ல இருக்கு... அதனால் என்ன... இங்கேயே வாங்கித் தாறேன். என் செலவிலேயே எடுங்க மாஸ்டர்.... ஸார்... சீக்கிரமா சொல்லுங்க ஸார்... சிமெண்ட் பாக்கி வசூலுக்கு போகணும்... இப்போ கையில ஐயாயிரம் ரூபாய் வசூல் பணம் இருக்குது... இன்னும் ஐயாயிரம் வசூலாகணும். ஆனாலும் இப்ப ஐயாயிரம் புது நோட்டா இருக்குது. சீக்கிரமா சொல்லுங்க... ஸார்... ஏதோ முன்ன பின்ன பழகாதவன்கிட்டே பேசுறது மாதிரி பேசாதீங்க ஸார்... நீங்க... எந்த ஸ்டேஷன் போனாலும் நான் உங்க ஆளு ஸார்."

"சரி... ரேப் கம்ளெயிண்ட் இருந்தால்தான் திருமலைப் பயல அப்படி வைக்க முடியும். எஸ்.பி. வந்துட்டுப்போறது வரைக்கும் கம்ளெயிண்ட் லெட்டர் இருக்கட்டும். இருக்கணும்... அப்புறம் பார்த்துக்கலாம்... பரவாயில்லியே... காலையிலேயே ஐயாயிரம் ரூபாய் வசூலிச்சிட்டியே..."

அலங்காரி, சப்-இன்ஸ்பெக்டர் முன்னால் வந்து நின்றாள். பின்னால் கிடந்த தலைமுடியை முன்னால் போட்டுக் கொண்டே, முத்தம் கொடுக்கப் போவதுபோல் உதடுகளைக் குவித்தாள்... மயக்கப் போவதுபோல் அவரைச் சாய்த்துப் பார்த்தாள். பிறகு, பின்னலை எடுத்து மார்பில் செல்லமாய் அடித்தபடியே கொஞ்சுவது போல் பேசினாள்...

"வசூலிக்காட்டாலும் என் மகன் வீட்ல இருந்து எடுத்துட்டு வந்திருப்பான். மாதச் சம்பளக்காரங்க கஷ்டம் அவனுக்கு நல்லாவே தெரியும்... அப்புறம் எசமான்... இந்த திருமலைப் பயல் எப்படி மிரட்டுறான் பார்த்தியளா... இவன வெளில விட்டால் எங்களால ஊர்ல உயிரோட லாந்த முடியாது... இவன்கிட்டயும் இவன் அப்பன் பழனிச்சாமி, சித்தப்பன், மாயாண்டி, பேச்சியம்மா இவங்ககிட்டவும் எழுதி வாங்கணும்... நீங்க கூப்புட்டாவது விசாரிக்கணும்..."

"விசாரிக்கேன்... விசாரிக்கேன்... யோவ் துளசி... சிமெண்ட் பணம் மீதி ஐயாயிரமும் வசூலாயிடுமா... இன்னைக்குள்ளேயே...."

"அந்தக் கவல வேண்டாம் ஸார்... நான் எது சொன்னாலும் யோசிச்சு சொல்லுறவன்... அப்புறம் ஸார்... எங்க சுடலமாடன் கோவில் கொடைய கரும்பட்டையான் கூட்டம் தடுக்காம இருக்கணும்... எதுவும் ஏடாகூடமாய் செய்துடுவாங்களோன்னு பயமாய் இருக்குது..."

"கவலப்படாத... டி.எஸ்.பி. கிட்ட பேசிட்டு, ஆயுதப் போலீஸயே அனுப்பி வைக்கேன்... குரூப் கிளாஸ் ஏற்படாம தடுக்கணுமுன்னு நான் சொல்றதை அவரு தடுக்கமாட்டாரு... தட்ட முடியாது.... இந்த மாதிரி சித்தி கிடச்சது ஒன்னோட லக்குய்யா..."

"இல்ல நீங்க எங்களுக்கு கிடச்சதுதான் லக்கு... அப்புறம் எசமான்... ஊர்ல நாங்க உயிரோட லாந்தணுமுன்னா..."

"யோவ் முனுசாமி... உடனடியாய் போய், பழனிச்சாமி... மாயாண்டி...."

"பேச்சியம்மாவும் எசமான்..."

"ஆமா, பேச்சியம்மாவையும் கையோட கூட்டிவா... எதுக்கும் விலங்கு எடுத்துட்டுப் போ..."

# 30

சட்டாம்பட்டி சந்து பொந்துகள் கூடச் சத்தமிட்டன.

ஊர்ப் பொதுக் கிணறுகளில் தோண்டிப் பட்டைகள் மூலம் தண்ணீர் பிடித்த பெண்கள் மத்தியில், கோலவடிவுப் பேச்சு.... ஒரு சிலரின் தோண்டிப் பட்டைகள் பேச்சுக் கவனத்தில் தொழில் வேகம் போய் மூலப்படியில் மோதிக் கிடந்தன. அவற்றைப் பார்க்காமலே அவர்கள் புஷ்பத்தின் கற்பழிப்பு விவகாரத்தை மனதுக்குள் படம் போட்டுப் பார்த்து வர்ணனை கொடுத்தார்கள்... ஊராட்சி போட்ட உருப்படாத குழாயடிகளிலும் இதே பேச்சு... ஆயிரம் சண்டை

நடந்தாலும் கரும்பட்டையான் பகுதியில் உள்ள தேநீர் கடைக்கு வழக்கமாக வரும் செம்பட்டையான்களை இப்போது காணவில்லை... கொஞ்ச நஞ்சமிருந்த கரும்பட்டையான்கள் துளசிங்கத்தையும் அலங்காரியையும் துண்டு போட்டு ஏசினார்கள். செம்பட்டையான் மளிகைக் கடைக்கு வழக்கமாய் வரும் கரும்பட்டையான் பெண்கள் இப்போது தலை கவிழ்ந்தபடியே வேறு கடையை நோக்கி நகர்ந்தார்கள். பள்ளிக்கூடத்தில் மாணவ மாணவியருக்குக் கல்லெறிச் சம்பவம் பேச்சானது... ஆசிரிய ஆசிரியைகளுக்கு அது ஒரு பொருட்டல்ல. கோலவடிவே சிலபஸ்.... துளசிங்கமே பாடம். புஷ்பமே பரீட்சை.

இந்தப் பள்ளிக்கூடத்தை விட்டு, பஸ்ரோடு பக்கமாக வந்தால் அந்தச் சாலைக்கு மேற்கே உள்ள ஆசாரிமார் குடியில், பெண்கள் எந்தவிதப் பாதிப்பும் இல்லாமல் அலசினார்கள். கல்வீச்சு இந்தப் பக்கம் வரவில்லை. வரவும் முடியாது... ஆனாலும் மாட்டுக்கு லாடம் கட்டிய கொல்லாசாரி கலப்பையைத் தண்டிப்பது போலவும் தட்டிக் கொடுப்பது போலவும் அல்லாடிய தச்சாசாரியிடம் பேச்சுக் கொடுத்தார்... திருமலை புஷ்பத்த ஒண்ணு கிடக்க ஒண்ணு பண்ணிட்டானாமே... இதைத் தாண்டினால் காரைவீட்டார் பகுதி... இங்கே 'நம்ம குடும்பந்தான் நல்ல குடும்பம்...' என்பது மாதிரியான பேச்சுக்கள்.

இப்படி ஊர் எல்லாப் பக்கமும் ஏதோ ஒருவகையில் ஒரு விவகாரத்தையே பல்நோக்காய் பேசினாலும் துளசிங்கம் கடை இருக்கும் பகுதியில்தான் சத்தம், பலத்த கத்தலாகியது... இதற்கு அருகே உள்ள காத்துக்கருப்பன் குடியிருப்புப் பகுதியில் ரோட்டுப் பக்கமான மைதானத்தில், ஒரே கூட்டம். பற்குணமும், பீடி ஏசெண்டும் துள்ளிக் குதித்தார்கள். சொக்காரர்கள்... ஆங்காங்கே இடைச் செறுகல் போட்டார்கள்.

"கடைசில... காத்திருந்தவன் பெண்டாட்டிய நேற்று வந்தவன் கொண்டு போனவன் கதையாப் போயிட்டே..."

"அப்படிப் பாத்தா காத்து இருந்தவன் துளசிங்கம்டா. நேத்து வந்தவன்தான் அக்னிராசா... பழமொழி தலைகீழாயிட்டு..."

"என்னல ராகம் போட்டு பேசுற...? நம்ம குடும்பத்துக்கு நிச்சயித்த பொண்ண செறுக்கி மவன் கூட்டிட்டுப் போயிட்டான்... அப்படியும் ஒனக்கு கோபம் வராட்டா நீ மனுஷனா?"

"எனக்கும் கோபம் வரத்தான் செய்யுது... துளசிங்கம் மேல மட்டுமில்ல... ரெண்டு பேருக்கும் இஸ்கு... தொஸ்கு இருக்கது தெரிஞ்சும் அவசர அவசரமாக அந்த கூறு கெட்டவள நம்ம தலையில் போட நெனச்சாரே பழனிச்சாமி... அவரு மேலயும் கோபம் கோபமா வருது..."

"வெந்த புண்ணுல வேல பாய்ச்சாதப்பா... பாவப்பட்ட மனுஷன்..., மகள அந்த ஓநாய்ப் பயலுக்கும் மகன போலீஸ் பயல்வ கிட்டயும் பறிகொடுத்துட்டு பரிதவிச்சு நிக்கார்... இரக்கம் இல்லாட்டாலும் இறக்கிப் பேசப்படாது..."

"திருமலய எப்போ பிடிச்சுட்டுப் போனாவளாம் பற்குணம்..."

"அவன வீட்டுக்குள்ள பூட்டிப் போட்டிருக்காவ.... அப்புறமா அவன் வெளில போகணுமுன்னு கத்துனான்னு கதவ திறந்து விட்டிருக்காவ... திருமலை புளியந்தோப்பு பக்கமா போயிருக்கான்... அவன் எப்படியும் வருவான்னு கள்ளச் சாராயப் புதருப் பக்கமா நின்ன போலீஸ்காரங்க அப்படியே தூக்கிட்டுப் போயிட்டாங்க... ஊருக்கு வராம பரும்புக் காட்டு வழியா கொண்டு போயிட்டாங்களாம்..."

"ஊர் வழியா ஏன் வர்லியாம்..."

"நீ முன்ன பின்ன போலீஸ் ஸ்டேஷன் போயிருந்தால தெரியும்... ஆள்பலம் இருக்குற குடும்பத்துல எப்பவும் நேருக்கு நேரா வந்து பிடிக்க மாட்டாங்க... அப்படியே வந்துட்டாலும், சும்மா ஸ்டேஷனுக்கு வாங்கன்னு பூனை மாதிரி பதுங்கிட்டு ஸ்டேஷன்ல போய் புலி மாதிரி பாய்வாங்க... பாவம் அவன என்னபாடு படுத்துறாங்களோ... போய் பார்த்துட்டு வருவோமா..."

"அவன் எந்த ஸ்டேஷன்ல இருக்கானோ... போலீஸ்காரங்க... ஒருத்தன் பிடிக்கலன்னா... அவனப் பிடிச்ச எந்த ரிக்கார்டும் இல்லாம ஸ்டேஷன் விட்டு ஸ்டேஷனுக்கு மாத்துவாங்களாம்..."

"சரி... எந்த ஸ்டேஷன்னுதான் பார்ப்போமே..."

"பழனிச்சாமியே சும்மா இருக்காரு... நமக்கென்ன..."

"ஒருவேள திருமல ஊர்ல இருந்தா, கொலகில பண்ணிப்புடுவான். ரெண்டு நாளைக்கு ஸ்டேஷன்லயே இருக்கட்டுன்னு நெனக்காரோ... என்னவோ... என்ன சொல்ற பற்குணம்..."

"அவரு, பாவம் மெல்லவும் முடியாம விழுங்கவும் முடியாம துடிப்பாரு... நாமதான் ஏதாவது செய்யணும்... வாங்கப்பா ஊரத் திரட்டிக்கிட்டுப் போயி போலீஸ்ல கேட்போம்... திருமல ஆத்திரத்துல செய்ததை பெரிசா எடுக்கப்படாதுன்னு சொல்லிப் பார்ப்போம்... இல்லன்னா வக்கீலப் பிடிச்சு ஜாமீன்ல எடுப்போம்..."

"இப்போ போலீசுக்குப் போயிட்டா அப்புறம் சுடலைமாடன் கொடைய நிறுத்த முடியாது. அதோ பாருங்க... நம்ம குடும்பமும் கரும்பட்டையான் குடும்பமும் தல தாழ்ந்து நிக்கோம்... செறுக்கி மவனுவ திமிரப் பாருங்களேன்...."

ஒருத்தர் காட்டிய திசையை எல்லோரும் பார்த்தார்கள்... முதலில் ரசித்தும் பிறகு வெறுத்தும் நோக்கினார்கள்.

ஆசாரிமார்குடி அருகே அறுபது செம்பட்டையான்கள் மேளதாளத்தோடு வந்தார்கள். கெட்டுமேளச் சத்தம் காதைத் துளைத்தது. நாதஸ்வரக்காரர்களும், மேளக்காரர்களும் பின்புறமாய்த் திரும்பித் திரும்பி ஊதிக்கொண்டும் அடித்துக் கொண்டும் நடந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் ஒரு சாமியாடி உடம்பு முழுக்க சந்தனம் அப்பியிருந்தார். தலையில் ஒரு குடம் - சின்னச் செப்புக் குடம். அதன் வாய் மாதிரியான தலையில் ஒரு தேங்காய். இடையிடையே சாய்த்துச் செருகப்பட்ட மாவிலைகள். அவர் குடம் விழாதபடி உடலைக் குறுக்கிய போது ஐந்தாறு செம்பட்டையான்கள் கழுத்துக்களில் மாலைகளைப் போட்டுக் கொண்டு கையில் பிரம்புகளை வைத்துக்கொண்டு சாமியாட்டம் போட்டார்கள்... துள்ளித் துள்ளி... தாவித்தாவி... தொலைவில் இருந்து இதைப் பார்த்த காத்துக் கருப்பன்களால் பொறுக்க முடியவில்லை. பற்குணம் குரல் கொடுத்தார்.

"செறுக்கி மவனுவ... குதிக்கிற குதியைப் பாரு... ரெண்டு குடும்பத்தையும் அவமானப்படுத்திட்டோம் என்கிற திமுறுல குதிக்கானுவ பாரு.... இவனுவள ஆட விடாப்படாதுடா... சுடலமாடன் கோவிலுல பந்தல் இருக்கப்படாதுடா..."

"இவனுவ எங்க போயிடுவானுவ... மொதல்ல திருமலய மீட்டுட்டு வருவோம்..."

"திருமல கிடக்கான். அவன கடிச்சா தின்னுப்புடுவாங்க... இப்போ அவன் முக்கியம் இல்ல... நம்மள அவமானப்படுத்துறது மாதிரி ஈவு இரக்கம் இல்லாம ஆடுற இந்தப் பயலுவ இன்னையோட சரியாகணும்... இந்த வருஷம் எந்தக் கோவிலுக்கும் விசேஷம் வேண்டாம்... வாங்கடா... ஏலே செறுக்கி மவனுவளா.... வாரோண்டா... வாரோம்..."

காத்துக் கருப்பன்களில் ஒரு சிலர் தவிர ஒவ்வொருவருக்கும் செம்பட்டையான் சாமியாட்டம் சற்று அதிகமாகவே தெரிந்தது. பற்குணம் போட்ட கூச்சலில், ஒவ்வொருத்தரும் தனக்கு வருவதாக இருந்த ஒருத்தியை யாரோ ஒரு எதிரி கடத்திக்கொண்டு போய்விட்டது போலவும், அந்த எதிரியே இப்போது வீட்டுக்கு வந்து மீண்டும் பெண் கேட்டுக் கதவைத் தட்டுவது போலவும் தோன்றியது... ஒரே கூட்டமாய், சாலை மேட்டுக்கு வந்தார்கள்... அங்கே இருந்த துளசிங்கம் கடைகளை ஒருசிலர் அடித்து நொறுக்கப் போனார்கள்... அப்போது பலரும் அவர்களைத் தடுத்து விட்டு கூட்டத்தை சாமியாட்ட செம்பட்டையான் பக்கம் ஏவிவிடப் போனபோது _

வடதிசையில் இருந்து சத்தம் கேட்டது... அந்த சத்தத்திற்கு உருவகமாய் பூமியதிர வேன்கள் வந்தன... முன்னாலும் பின்னாலும் இரண்டு வெள்ளை வேன்கள்... மேக்கப் செய்யப்பட்ட லாரிகள் மாதிரி... இவற்றிற்கு மத்தியில் ஒரு பச்சை நிற வேன்... கடைசியில் ஒரு ஜீப்... காத்துக் கருப்பன்கள், எங்கேயோ போகிற அந்த வண்டிகள் போகட்டும் என்பதுபோல் வழிவிட்டு நின்றபோது, அந்த நான்கு வண்டிகளும் துளசிங்கம் கடை முன்னால் நின்றன... வேனில் இருந்து துளசிங்கமும், சினிமாக்காரர்களும் வெள்ளைக் கூண்டு லாரிகளில் இருந்து போலீஸ்காரர்களும் சொல்லி வைத்ததுபோல் ஒரே சமயத்தில்

குதித்தார்கள்... பாராசூட்டிலிருந்து குதிப்பதுபோல் குதித்த போலீஸ்காரர்களிடம் சட்டையில் அசோக முத்திரை போட்ட ஒருவர் ஏதோ சொல்ல அவர்கள் தாவிப் பாய்ந்தார்கள்... கூட்டமாக நின்ற கரும்பட்டையான்களிடையே லத்தியும் கம்புமாய் பாய்ந்து போனார்கள்... ஒருவர் ஜீப்பில் இருந்தபடி கத்தக் கத்த போலீஸ் லத்தி வீச்சில் நான்கைந்து காத்துக் கருப்பன்களுக்கு நல்ல அடி.

"என்னய்யா மொட்டக் கூட்டம் போடுறீங்க... அவனவன் வீட்டப் பாத்துப் போங்க... இல்லாட்டி முதுகு பிஞ்சிடும்... ஏ மேன் வாயால சொன்னா போக மாட்டீங்களா?"

காத்துக்கருப்பன் கூட்டம் சிதறியது... தனித்தனியாகப் பிரிந்து வைக்கோல் குவியல்களில் பதுங்கி, வண்டிகளுக்கு பின்னால் மறைந்து நின்று, போலீஸ் மர்மங்களை மர்மமாகப் பார்த்தார்கள்... பற்குணம் பற்களைக் கடித்தபடியே காண்டிராக்டர் தாமோதரன் வீட்டை நோக்கிப் போனார். அவருக்குப் பிடறியில் அடி... அவர் போலீஸையும் எதிர்க்கக்கூடியவர்தான். ஆனால் இப்போது எதிர்த்தால் முதுகு பிய்யும் என்பது தெரிந்த மனிதர்.

இதற்குள் போலீஸ்காரர்கள் பெட்டிக் கடைகளில் பீடி பற்ற வைத்தவர்களை விரட்டினார்கள்-அவர்கள் ஏதோ ஊருக்கு தீ வைக்கப் போவதுபோல்; இந்த பாக்கு எத்தன பைசா என்று கேட்ட ஒருவனை, "என்னடா ஊர் விவகாரத்த பேசுற" என்று சொல்லி அவன் கழுத்தைப் பிடித்துத் தள்ளினார்கள்... இரண்டு போலீஸ் காரர்கள். துளசிங்கம் கடைக்கு முன்னால் பாரா போட்டார்கள்... நான்கைந்து பேர் சாலையோரமாய் இடைவெளி விட்டபடி நின்றார்கள்.

சற்று தொலைவில் வாலிபால் விளையாடிய வாலிபர்கள் பக்கம் பாய்ந்த போலீஸ் கும்பல் ஒன்று வலையை இழுத்துப் போட்டது... பந்தைத் தூக்கி ஒருவர் மேல் வீசியது... விளையாட்டுக்காரர்கள் திகைத்து நின்றபோது, 'வீட்டப் பாத்து போங்கடா.." என்ற லத்தி சாட்சியான அதட்டல்கள்... அந்த வாலிபக் கூட்டம் லேசான எதிர்ப்பைக்கூட காட்டாமல் கொத்தடிமைகளாய் கலைந்து போனது. ஒரு போலீஸ் பிரிவை அங்கேயே விட்டுவிட்டு, போலீஸ் ஜீப்

தலைமையில் காவலர் வேன்களும், சினிமா வேனும் மீண்டும் ஓடின... அப்படி ஓடி, செம்பட்டையான் சாமியாடி கூட்டத்தின் முன்னால் போய் நின்றது... அங்கே ஏழெட்டு போலீஸ்காரர்கள் இறங்கி சாமியாடிகளுக்குப் பாதுகாப்பு கொடுப்பதுபோல் மேளத்திற்கு முன்னாலும் கூட்டத்திற்கு பின்னாலும் பக்கவாட்டிலும் போய் கூட்டத்தோடு கலக்காமல், சிறிது இடைவெளிவிட்டு நடந்தார்கள்... ஒரு போலீஸ்காரர், தனித்துவத்தைக் காட்டி தனியாக ஆடிய சாமியாடி ரத்தினத்தை சண்டை போட வந்த சதிகாரனாய் நினைத்து காலில் ஒரு போடு போட்டார்.

போலீஸ் பயத்தில் ஓடப்போன மேளக்காரர்களை இரும்புக்கரம் தடுத்து நிறுத்தின. வாசிக்கப் பயந்து நின்ற நாதஸ்வரக்காரர்களின் வாய்களில் நாதஸ்வர முனைகள் திணிக்கப்பட்டன... தாறுமாறாக ஆடிய சாமியாடிகள் வரிசைப்படுத்தப்பட்டு லெப்ட் ரைட் போல் ஆடும்படி சொல்லப்பட்டனர்.

மீண்டும் போலீஸ் வண்டிகள் சினிமா வேனின் சிநேகிதத்துடன் ஓடியது... பள்ளிக்கூட மைதானம், ஊர்க்கிணறு, குழாயடிகள், காளியம்மன் கோவில், பழனிச்சாமி வீட்டின் பாதை, சுடலைமாடன் கோவில் முதலிய பல இடங்களில் லத்திக் கம்புக்காரர்கள் குதித்துக் குதித்து இறங்கினார்கள்... ஆங்காங்கே மண்வெட்டிகளை வைத்துக் கொண்டு வயல் வரப்புகளுக்குப் போகப் போனவர்களைக் கூட 'ஆயுதத்தை எடுத்துக்கிட்டா நிற்கீங்க' என்று அதட்டினார்கள்... போலீஸ் என்றால் பயம் வரவேண்டும் என்ற தத்துவார்த்த நோக்கத்துடன் வழியில் சிக்கியவர்களை அடித்தார்கள்... வயதானவர் களை அதட்டினார்கள்... வழக்கம்போல் தேநீர் கடைகளில் உட்கார்ந்தவர்களை அதட்டி அப்புறப் படுத்தினார்கள். அந்த இடங்களில் உட்கார்ந்து கொண்டார்கள்... கிணறுகளில் தண்ணீர் எடுத்த பெண்கள் பாதிக் குடங்களோடு ஓடினார்கள்.

அரை மணி நேரத்திற்குள் எதிர்பாராதது நடந்து விட்டது. ஊரே போலீஸ்மயமாகிவிட்டது... அந்த ஊருக்கு முன்பும் போலீஸ் வந்திருக்கிறது... மாமூலாக வந்து மாமூலாகப் போயிருக்கிறது. ஆனால்

இப்படிப் பெரிய எடுப்பில் வந்ததில்லை... இப்படி கண்ணில் பட்டவர்களை எல்லாம் அடித்ததில்லை. தராதரம் தெரியாமல் நடந்ததில்லை. இன்றோ லத்திக் கம்பு இருக்கு என்பதற்காகவே அடிக்கிறார்கள்.

ஊர் மக்கள் அனைவரும் இப்போது தனிப்படுத்தப்பட்டு தனித்தனி மனிதர்கள் போல் தவித்தார்கள். போலீஸ் வரக் காரணம் என்ன என்றுகூட பேச முடியவில்லை. ஒருத்தர் நின்றால் திட்டு... இருவர் நின்றால் மிரட்டல்... மூவர் நின்றால் அடி...

அந்த ஊர் பகுதி பகுதியாக, தெருத் தெருவாக விடுபடாத பயத்தில் மூழ்கியது. ஒவ்வொரு தெருவிலும் நான்கைந்து போலீஸ் காரர்கள். வேட்டியை மடித்துக் கொண்டுகூட நடக்க முடியவில்லை. குழந்தைகள் அழுதால்கூட போலீஸ்காரர்கள் 'என்ன சத்தம்' என்று உள்ளே வந்து அதட்டினார்கள்.... மாட்டுக்கு வைக்கோல் எடுக்க வெளியே வந்த ஒருவர் போலீஸ் முறைத்த முறைப்பில் உள்ளே ஓடிவிட்டார்... பள்ளிக்கூடத்திலிருந்து வரும் நான்கைந்து பயல்கள், போலீஸ்காரர் இருவர் பார்த்த பார்வையில் திரும்பித் திரும்பி பார்த்தபடியே எங்கிருந்து விடுதலை உணர்வோடு வந்தார்களோ அங்கேயே ஓடினார்கள்... ஆக மொத்தத்தில் அந்த ஊரே போலீஸ் வலைக்குள் சுருட்டி வைக்கப்பட்டது போன்ற காட்சி.

போலீஸ் வண்டிகள் ஊர் முழுக்க சர்க்கஸ் அடித்தபோது, சினிமா வேன் எலி டாக்டர் வீட்டுக்கு வந்தது.... அதற்குள்ளும் நான்கைந்து போலீஸ்காரர்கள்... தொப்பி தெரியாமல் இருந்தார்கள்... அந்த வேனில் இருந்து துளசிங்கம் இறங்கியபோது, அலங்காரி, 'என் ராசா... நீதாண்டா சமர்த்தன்' என்று அவன் கன்னத்தில் முத்தமிட்டாள்... துளசிங்கம் சினிமாக்காரர்களை இறங்கும்படி சைகை செய்தான்... ஆனால் அவர்கள் இறங்கவில்லை டிரைவரை வண்டியை எடுக்கும்படி அவர் முதுகைப் பிடித்து முன்பக்கமாகத் தள்ளினார்கள்.

சினிமா வேன் பறந்தது ரஞ்சிதம் தலைமையில் பீடி சுற்றும் பெண்கள் உள்ள முருகன் கோவிலை நோக்கி...

# 31

அந்த முருகன் கோவில் முகப்பில் எல்லாப் பெண்களும் கொட்டாவி விட்டபடியே பீடி சுற்றிக் கொண்டிருக்கிறார்கள்... மத்தியான வெயில்... மண்டைக்குள் ஊடுறுவியது. ரஞ்சிதம் எதையோ யோசித்தபடி, கைகளை மட்டும் யந்திர ரீதியில் இயக்கிக் கொண்டிருந்தாள்... கோலவடிவு சமாச்சாரத்தைப் பழனிச்சாமியிடமே சொல்லியிருந்தால், இந்த நிலமை வந்திருக்காதே என்ற மனத்தாங்கல் அவளுக்கு... ஒருத்தர் வீணாகப் போகும் அபாயம் ஏற்படும்போது, அதனைத் தடுப்பதற்கு கௌரவப் பிரச்சினையோ, இழிவுபடுவோம் என்ற எண்ணமோ, இடையில் வரப்படாது என்று நினைப்பவள். இப்படிப்பட்ட கௌரவப் பிரச்சினைகள் பலருடைய கௌரவங்களை சந்திக்குக் கொண்டு வந்து வாழ்க்கையே பாழாக இருப்பதைக் கண்கூடாகப் பார்த்தவள். இப்போது இனிமேல் என்ன செய்யலாம் என்பதுபோல் பீடி இலை ஒன்றைக் குறி வைத்துக் கத்தரியை நீட்டி அந்த இலையை வெட்டாமலே வெறித்துப் பார்த்தாள்.

இந்தச் சமயத்தில் வாடாப்பூ, தலைவிரி கோலமாக ஓடி வந்தாள். ரஞ்சிதத்தின் முன்னால் மூச்சிறைக்க நின்றபடியே கோவிலை அங்குமிங்குமாய் பார்த்தபடியே கேட்டாள். இவள் இரவு தூங்கவில்லை என்பதைக் கண்கள் காட்டின.

"ரஞ்சிதம்... எங்க பேச்சியம்மா சித்தி இங்க வந்தாளா?"

"வரல்லியே... என்ன விஷயம்..."

"ஒனக்கு விஷயமே தெரியாதா?"

"கோலவடிவு விஷயமாத்தானே... ரெண்டுபேருமே பெரிய தப்பு பண்ணிட்டோம்..."

"நாம நினைச்சுப் பாக்காத அளவுக்கு ஊர்ல என்னெல்லாமோ நடக்குது... ரஞ்சிதம்."

"விவரமாத்தான் சொல்லேன்..."

"அலங்காரி போலீஸ்ல என்ன சொன்னாளோ.... திருமலை அண்ணாவ போலீஸ்ல அடச்சிட்டாங்க... இப்போ என்னடான்னா... ரெண்டு லோடு போலீஸ் வந்திருக்கு... மூலைக்கு மூலை... போலீஸா நிக்குது... யாரு வீட்டுக்கு வெளியேயும் ஒரு காக்கா குருவிகூட இல்ல... எங்க வீட்டுப் பக்கம்கூட போலீஸ் துப்பாக்கியோட நிக்குது."

"அதான பாத்தேன்... எங்க துளசிங்கம் அண்ணா வீட்ல ஒரு மணி நேரத்திற்கு முன்னாலே ஒரு அண்டாவுல சோறு வெந்தது... நாலஞ்சு கோழிவ பிடிபட்ட சத்தம் கேட்டுது..."

"வினையே உங்க அண்ணான்தான்..."

"இந்தா பாரு... இந்தப் பேச்ச இங்க வச்சக்காத... ஒங்க கோலவடிவு மட்டும் யோக்கியமா...? ஊசி இடம் கொடுக்காம நூலு நுழையுமா...?"

"எம்மா... ஒனக்கு கோடி கும்பிடு... ஏற்கனவே நொந்து போயிருக்கேன்... ஆள விடு..."

"அதெப்டி ஒங்க இஷ்டத்துக்கு எங்க அண்ணாவ பேசணும்... நாங்க சும்மா கேட்டுக்கிட்டு இருக்கணுமா...?"

"என்ன ரோசாப்பூ... நமக்காவ பீடி சுத்துறதையே விட்டுக் கொடுத்தவள்... நம்ம வாடாப்பூ.... அவள்கிட்ட போய்... சண்டைக்குப் போகலாமா...? அப்புறம் ஒன் பேச்சியம்மாவுக்கு என்ன ஆச்சாம்...?"

"எங்க குடும்பத்த கெடுக்கிறதுக்குனே வந்தவள் அவள்.... காலையில அலங்காரி தலையில மண்ணள்ளிப் போட்டாளா... இப்போ ஊரு முழுக்க போலீஸா... பயந்து போய் எங்கேயோ ஓடிட்டாள். 'அய்போ போலீஸ்... அய்யோ போலீஸ்'ன்னு சத்தம் கேட்டுது... அப்புறம் பார்த்தா ஆளக் காணும். அருணாசலம் சின்னய்யா... அழுதுட்டு கிடக்காரு... அவருக்கும் வெளில வர பயம்... சந்திரா குய்யோ முறையோன்னு கூப்பாடு போட்டுக்கிட்டு கிழக்குப் பக்கமா போனாள்... நான் மேற்குப் பக்கமா வாரேன்..."

"அட கடவுளே... ஊரு முழுக்க போலீஸா... நம்ம ஊருக்கா... இந்த நெலம..."

"இதோட போனாக்கூட பரவாயில்லியே... இன்னும் என்னெல்லாம் நடக்கப் போகுதோ..."

"ஊருக்குள்ள வந்து பாரு ரஞ்சிதம்... நாம பொட்டப் பிள்ளியாவது ஏதாவது சேர்ந்து செய்யணும்... ஆமை போற வீடும், போலீஸ் போற ஊரும் உருப்படாது... துளசிங்கம் ரெண்டுலயுமே அவசரப்பட்டுட்டான்..."

"வாரேன் ரஞ்சிதம்... எங்க சித்தி.... வயலுல... பம்பு செட்டுக்குள்ள பதுங்கிக் கிடக்காளான்னு பாத்துட்டு வாறேன்."

வாடாப்பூ, வயலைப் பார்த்துப் போவதற்காக திரும்பப் போனாள்... அப்போது தந்தை மாயாண்டி ஓட்டமும் நடையுமாக ஓடி வருவதைப் பார்த்துவிட்டு நின்றாள். ஒருவேளை பேச்சியம்மா கிடைத்துவிட்டதைச் சொல்ல வருகிறாரோ... என்னமோ...

மகள் வாடாப்பூவையே பார்த்தபடி ஓடி வந்த மாயாண்டி, அவள் மேல் பாய்ந்தார். அவள் தலையைப் பிடித்து தன் கையில் சிக்க வைத்துக் கொண்டு, அவள் முதுகில் சரமாரியாக குத்தினார். பிறகு அவளை மல்லாக்கத் தள்ளினார். மீண்டும் அவள் தலை முடியைப் பிடித்துத் தூக்கினார். தூக்கியபடியே களைப்புத் தெரியாமல் இருக்க ஏலேலோ பாடுவது போல் மகளின் கனத்தை உணராமல் இருக்கக் கத்துவது போல், கத்தினார்.

"செறுக்கி மவளே... ஊரே இழவெடுத்து நிக்குது... நம்ம குடும்பமே செத்துப் போயிக் கிடக்குது... திருமல ஜெயிலுல இருக்கான்.. கோலவடிவு குரங்கு கையில அகப்பட்ட பூமாலையாயிட்டாள்... பாக்கியம் மயினி மயங்கிக் கிடக்காள்... நீ இங்க வந்து சந்தோஷமா பேசிக்கிட்டு இருக்கியாக்கும்... அதுவும் இவளுவகிட்ட... இன்னைக்கு ஒன்ன சாவடிக்கனா இல்லியான்னு பாரு..."

மாயாண்டி, மகளின் விலாவைக் காலால் இடறினார்... திடீரென்று ரஞ்சிதம் எழுந்தாள்... அவளோடு நான்கைந்த பெண்களும் எழுந்தார்கள்... ரஞ்சிதம் மாயாண்டியை ஒப்புக்குத் தொட்டபோது,

அந்தப் பெண்கள் அவரை ஆளுக்கு ஒரு பக்கமாக இழுத்து, ஒரு மரத்துப் பக்கம் கொண்டு போனார்கள். ஒவ்வொருத்தியும் அவர் உடம்பை ஊமைக்கீறலாக நகங்களால் பிராண்டினர் மாயாண்டி சத்தம் போட்டார்.

“என் மவள... நான் என்ன வேணுமுன்னாலும் செய்வேன்... ஒங்களுக்கு என்னழா...?”

ரஞ்சிதம் அவரருகே போனாள். பொட்டப் பிள்ளைகளிடம் கைதிபோல் நின்ற அவரைப் பார்த்து ஆத்திரம் ஆத்திரமாகக் கேட்டாள்.

“தலைக்கு மேல... வளந்த பொண்ண இப்டி அடிக்கியே... நீ மனுஷனா?”

“ஏய்... அவன் இவன்னு பேசினே...”

“இதுக்கு மேல பேசினா... ஒனக்கு மரியாதி போயிடும். இவள் வயசுல ஒரு மகன் இருந்தா இப்டி அடிப்பியாய்யா? மகள்னா ஒனக்கு இளக்காரம்... அதுவும் வயசுக்கு வந்த மகள்... நாலு பேருக்கு முன்னால நாய அடிக்கது மாதிரி அடிக்கே... நாம துணி உடுக்கது எதுக்குய்யா. மரியாதைக்குத்தானே... சொத்து இல்லாம ஒருத்தர் வாழலாம். சுகம் இல்லாமலும் வாழலாம்... ஆனால் மரியாதை இல்லாம வாழுறது ஒரு வாழ்க்கையா... வாழப்போற ஒரு பொண்ணோட மரியாதய கெடுக்கது மாதிரி அடிக்கவன் ஒரு அப்பனாயா... அப்படியே அவன் அப்பன்னாலும் அவன் ஒரு மனுஷனாய்யா. பழனிச்சாமி எப்பவாவது கோலவடிவ அடிச்சிருக்காராய்யா...? கருப்பசாமி எப்பவாவது சந்திராவை அடிச்சிருக்காரா...? ஒன் பொண்ணோட மரியாதய நீயே கெடுத்த அப்புறம் யார்தான் கெடுக்க மாட்டாக...?”

“என் மவள எப்படின்னாலும் நடத்துவேன்... நீ யாருழா...?”

“நானா... அவள மாதிரி ஒரு பொண்ணு. எப்போ பெத்த மகளை மாட்டை அடிக்கது மாதிரி அடிச்சியோ... அப்பவே நீ அப்பன் இல்ல.. அவள் ஒனக்கு மகளும் இல்ல... இந்தப் பாவிப் பொண்ணு... ஒன்கிட்ட அடிபட்டே ஆடிப் போயிட்டாள். மகள மறந்துட்டு பேசாம போய்யா...

திரும்பிப் பாராம ஓடுய்யா... இனிமேல் வாடாப்பூ என் வீட்லயே இருந்துக்குவாள்... நீ யாரோ அவள் யாரோ.... எங்க கூட பீடி சுத்தி பிழச்சுக்குவாள். நீரு மவராசனா போயி பழனிச்சாமிக்கு சேவகம் செய்யும். உட்காரு... வாடாப்பூ... இந்த மனுஷன் இனிமேல் ஒனக்கு அப்பன் இல்ல... நீ என்னோடயே இருந்துக்கலாம்..."

எல்லாப் பெண்களும் வாடாப்பூவைச் சூழ்ந்து கொண்டார்கள். அவளை, புதுப்பெண்ணை உட்கார வைப்பது போல் உட்கார வைத்தார்கள். சற்று நேரத்திற்கு முன்பு சண்டை போட்ட ரோசாப்பூ அவள் கன்னங்களை முந்தானையால் துடைத்துவிட்டாள். மாயாண்டி பரபரக்க பார்த்தபடியே நின்றார். பிறகு துள்ளினார்...

"ஏழா எழுந்திருக்கியா... இல்ல... ஒரே மிதியாய் மிதிக்கட்டுமா?"

"எங்க அவளத் தொடு பாக்கலாம்..."

"நீயாழா.... எனக்குப் பிறந்தே... அவளே சொல்லட்டும். ஏழா வாடாப்பூ... எழுந்திருக்கியா இல்லியா..."

வாடாப்பூ, ரஞ்சிதத்தின் கையைப் பிடித்துக் கொண்டாள்... இப்போது அவள் நினைத்துப் பார்க்கும் போது இதுவரை வாழ்ந்தது வாழ்க்கை இல்லை என்பது புரிந்தது. 'இந்தக் காலத்தில் எந்த பெண்ணுமே, அதுவும் விவகாரம் உள்ள பெண்கூட, அடிபடாத காலத்தில், எத்தனை வருஷமா அடிபட்டிருக்கேன்... எந்த மாட்டுக்கு புல்லு வெட்டுறேனோ... அந்த மண்வெட்டிக் கணையால்... எந்த மாட்ட விரட்டுறதுக்கு இருக்கோ... அந்த சாட்டைக் கம்பால அடிபட்டேன்... எந்தக் கால பிடிச்சு விடுவனோ அந்தக் காலால உதைபட்டேன். இவரு அப்பனாய் இருந்தாலும் சரி... கடவுளாய் இருந்தாலும் சரி. வேண்டாய்யா.... இந்த வேதனை வாழ்க்கை...'

"ஏழா... வாரியா... இல்லியா...?"

"இனிமேல் ஒம்ம வாடையே வேண்டாம்... நீருமாச்சு... நானுமாச்சு... என்னால தனியா பிழச்சுக்க முடியும்... ஒம்ம சோலியப் பார்த்துக்கிட்டு போவும்..."

"வரமாட்டியா?"

"மாட்டேன்... மாட்டேன்... மாட்டவே மாட்டேன்... போதுமா..."

மாயாண்டி மகள் மேல் பாயவில்லை... அவளையே உற்றுப் பார்த்தார். பிறகு கண்களை மூடிக்கொண்டே யோசித்தார்... யோசிக்க யோசிக்க எதுவோ தென்பட்டது... பேசாமல் அங்கேயே நின்றார். கால்களை ஒன்றுடன் ஒன்றாய் தேய்த்தபடியே நின்றார்... அவர் தலை குனிந்திருந்தது... ரஞ்சிதம் சத்தம் போட்டாள்.

"இந்தாரும்... ஒம்மத்தான்... நீரு... ஊசிமுனையில ஒத்தக் காலுல தவம் இருந்தாலும் வாடாப்பூ.... இப்போ ஒம்மகூட வரமாட்டா.... இப்பதான் முதல் தடவயா ஒம்ம வாழ்க்கையில யோசிக்கியரு. நல்லா யோசியும்... சாயங்காலமா வாரும்... நாங்களும் யோசிக்கோம்."

வாடாப்பூ, அப்பனைப் பார்க்காமல், குத்துக் கல்லாய் இருந்தாள். பிறகு தனது சுதந்திரத்தைப் பிரகடனப் படுத்துவதுபோல், ஒரு பீடி இலையை எடுத்து, பழுத்த பகுதியை வெட்டிவிட்டு அதை ஒரு புதுமை இலையாகக் கத்தரித்தாள். மாயாண்டி எங்கேயும் போகாமல் அங்கேயே கால்களைத் தேய்த்தபடி நின்றார்.

அப்போது அந்த சினிமா வேன் நான்கு பாய்ச்சலில் வந்தது. அதன் ஜன்னல் ஓட்டைகளில் தலைதலையாகத் தெரிந்தன. தொப்பித் தலை, மொட்டைத் தலை... டோப்பாத் தலை... சாதாரணத் தலை... பந்தயத்தில் ஓடுவதுபோல் பாய்ந்த அந்த வேன், முருகன் கோவில் பக்கம் நடைபோட்டது. முன் வரிசையில் நான்கு போலீஸ்காரர்கள் அந்தப் பெண்களைப் பற்றி தங்களுக்குத் தெரியும் என்பது போல் தலையாட்டினார்கள்.

அப்போது பின்வரிசைகளில் இருந்த சினிமாப் பையன்கள், அந்தப் பெண்களுக்கு முகம் காட்டாமல் வெளியே கைகளை நீட்டி ஆட்டினார்கள்... 'ஹலோ... ஹலோ.... சுகமா' என்று பாடினார்கள்.... 'வாரீயா... வாரீயா...' என்பது மாதிரி கைகளை ஆட்டினார்கள். அந்தப் பெண்கள் கோபத்தோடு எழுந்தபோது, அந்த வேன் பறந்தது. சிறிது நேர இடைவெளிக்குப் பிறகு மாயாண்டி 'எழுந்திரும்மா..." என்று

மகளை அம்மாவாக அனுமானித்து கூப்பிடப் போனபோது, அந்த வேன் மீண்டும் பாய்ந்து வந்தது... அந்தப் பெண்களுக்கு மீண்டும் கையாட்டிவிட்டு ஊரைப் பார்த்து ஓடியது... ரோசாப்பூ கத்தினாள்...

"எங்க துளசிங்கம் சரியான அயோக்கியனா இருப்பான் போலுக்கே... அவனுக்கு நாங்கள்லாம் தங்கச்சிமாரு. எங்கள பார்த்துதான் இந்தபயலுவ அப்படி கையாட்டுதாங்கன்னு துளசிங்கத்திற்குத் தெரியும். அப்படி இருந்தும், அந்தப் பயலுவளையே போலீஸ் பாதுகாப்புல அனுப்பி நம்மள கூப்பிடும்படியா செய்துட்டான்பாரு... இன்னும் காரியம் ஆகணுமுன்னா எங்கள அந்தப் பயலுலகிட்ட கூட்டிக்கூட கொடுப்பான் போலுக்கே... என்ன ரஞ்சிதம் பேசாம இருக்கே...."

"நான் நினைக்கறத நல்லாவே சொல்லிட்டே ரோசாப்பூ... பொதுவா வசதியுள்ளவன் தான் மட்டும் வாழறதுக்காகவே சாதி பேசுவான்... உறவு பேசுவான்... மற்றபடி சாதிக்காரனையோ... உறவுக் காரனையோ. வளர்க்கணுமுன்னு நெனைக்கவே மாட்டான்... ஏழை உறவுக்காரன் இவங்களுக்கு அடுப்புக்கு விறகு மாதிரி. சாதிக்காரன் அடிதடிக் கத்தி மாதிரி. அதுலயும் இந்த துளசிங்கம் இருக்கானே... அவன் காரியம் ஆகணுமுன்னா நீ சொன்னதை செய்யக்கூட தயங்க மாட்டான்... பாவம்... கோலவடிவு..."

"புஷ்பம் மட்டும் என்ன... கோலவடிவ துளசிங்கம் சீரழிச்சான். புஷ்பத்த அலங்காரி சீரழிச்சிட்டாள்... கன்னி கழியாமலே அது கழிஞ்சது மாதிரி ஆயிட்டாள். சோறு தண்ணி இறங்காம படுத்த படுக்கையா கிடக்காள்..."

"இவ்வளவுக்கும் காரணம் இந்த துளசிங்கம், இந்த அலங்காரி, இந்த போலீஸ்."

"திருமலையையும் இந்த மாயாண்டி மனுஷனையும் சேர்த்துக்க."

"சரி... இப்போ... ஆட்கள் முக்கியமில்ல... அவங்க அட்டூழியந்தான் முக்கியம்... நாம ஏதாவது செஞ்சாகணும்..."

ரஞ்சிதம் முகத்தில் கையமர்த்தி, யோசித்தாள்.

# 32

கோலவடிவு முடங்கிக் கிடந்தாள்.

அந்தப் பழைய காலத்துத் தேக்குக் கட்டிலில் புதிய கால சகுந்தலையாக குப்புறக் கிடந்தாள்... முகத்தைப் பக்கவாட்டில் வைத்தால் எதையும் பார்க்க வேண்டியதிருக்கும் என்பதுபோல், நெற்றி, கட்டில் மேட்டில் படும்படி கிடந்தாள்... பச்சைக் கீரை போல் முதுகில் படர்ந்த அவள் முடி, அந்த ஆடிக்காற்றில் அவள் உணர்வுகளைப் போல் தனித்தனியாக அல்லாடியது. பிடரியிலும் தோளிலும் தாறுமாறாகச் சிதறிக் கிடந்தது. கண்களை மூடி அவற்றையும் கைகளால் மறைத்துச் செத்தவள் போல் கிடந்தாள்.

அவளை ஒரு பொருட்டாகக் கருதாமல் அலங்காரியும் துளசிங்கமும் போனபோது, தன்னை ஒரேடியடியாக விட்டு விட்டுப் போகிறார்களோ என்ற பயத்தில் அவர்கள் பின்னால் ஓடப்போனாள்.. பிறகு சொந்த ஊரில் பட்ட அசிங்கத்தை இந்த ஊர் தெருவிலும் பட வேண்டாம் என்று நினைத்து அந்த வீட்டுக்குள்ளேயே சுற்றி வந்தாள். திண்ணைப் படிக்கட்டில் உட்கார்ந்து முன் கைகளில் முகம் ஊன்றி, கைகள் வழியாக கண்ணீர் விட்டாள். அவளையே பகவதி பாட்டி பார்த்துக் கொண்டு நின்றாள். இமைகளுக்குள் சிறைப்பட்ட கண்கள் கொட்ட கொட்டப் பார்த்தாள். அந்த பார்வை தாளமாட்டாது கோலவடிவு புறக்கடைக்குப் போனாள்... அங்கே நின்ற முருங்கை மரத்தில் சாய்ந்தாள்... ரயில் பெட்டிகள் மாதிரியான கம்பளிப் பூச்சிகள் அவள் உடம்பில் ஊர்ந்தன.... அவளுக்கு உணர்வேதும் இல்லை... முகத்தை மரத்திலே இடித்து இடித்து நெற்றிப் பொட்டில் தனக்குத்தானே குங்குமம் வைத்துக் கொண்டாள். உடம்புக்குள் நெருப்புப் பற்றி எரிந்தது. முதுகுப் பகுதி அனலாய்க் கொதித்தது. இருதயம் சுடலைமாடன் கோயில் மேளம் போல் அடித்துக் கொண்டது. கண்கள் நெருப்பாய் எரிந்தன. காதுக்குள் பயங்கர இரைச்சல்... கண்ணைத் திறக்க முடியவில்லை. தலையைச் சுமக்க முடியவில்லை.

நெஞ்சுக்குள் நினைக்க முடியவில்லை... வாயைத் திறக்காமல் மூச்சுவிட முடியவில்லை... இந்த உலகில் தானாய்ப் பிறந்து தானாய் வளர்ந்து தான்தோன்றியாய் போனது போன்ற பீதி... துளசிங்கம் கோரப் பற்களோடு சிரிப்பது போன்ற பிரமை. அலங்காரி, மனிதத் தலைகளை கழுத்திலும் இடுப்பிலும் தொங்கப் போட்ட நீலியாய் நிற்பது போன்ற கற்பனை.

கோலவடிவு தன்பாட்டுக்குப் பேசிக்கொண்டாள். தனது பேச்சை, தானே காதில் வாங்காததுபோல் அந்த அறைக்குள் சுற்றிச் சுற்றி வந்து பேசிக் கொண்டாள். "மாட்டிக்கிட்டேனே... வசமா மாட்டிக்கிட்டேனே... அலங்காரி என்னை ஏமாத்திட்டாளே. 'என் தங்கச்சி இந்த கோலவடிவு மாதிரியான்'னு சொல்லிட்டாரே... சொல்லிட்டாரே... எனக்கு வேணுந்தான்... இன்னும் வேணுந்தான்..."

இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் ஒருத்தியை அவள் போக்கிலே விடவேண்டும் என்று தெரிந்திருந்த பகவதி பாட்டி, சும்மாவே இருந்தாள். மஞ்சள் வெயில் மங்கலாக அடித்தபோது, பாட்டி தட்டுத் தடுமாறி ஒரு தட்டோடு பெரிய வீட்டுக்குள் வந்தாள். கைகளால் தடவித் தடவிக் கட்டிலுக்கு வந்தாள்... தட்டைத் தரையில் வைத்து விட்டு முடங்கிக் கிடந்தவளை தூக்கப் போனாள்... முடியவில்லை... கோலவடிவின் உடம்பைத் தடவித் தடவிக் கைகளை முகத்தருகே கொண்டுபோய் தலையை வருடிவிட்டாள்... 'அம்மா' என்று கன்றுக்குட்டி கத்துவதுபோல் கோலவடிவு வீறிட்டு எழுந்தாள். அந்த பாட்டியை அம்மாவாக அனுமானித்து அப்படியே கட்டிக் கொண்டாள். அவள் அம்மா அல்ல என்று உணர்ந்ததும் பாட்டியை விட்டாள். ஆனால் பாட்டியோ அவளை விடவில்லை. பட்டரைச் சட்டம் போன்ற அந்த இளம் உடம்பைத் தன் பூஞ்சை உடம்பில் போட்டுத் தாங்கிக் கொண்டாள். அந்த அனுசரணையில் கோலவடிவு விம்மி வெடித்தாள்... ஏதோ ஒரு சத்தம் வந்ததே தவிர, அது அழுகையா கூக்குரலா அல்லது அவலமா என்று அடையாளம் காண முடியவில்லை. பாட்டி தனக்குப் பாதியாகவும், கோலவடிவுக்குப் பாதியாகவும் சேர்த்து அழுதபடியே சொன்னாள்.

"மோசம் போயிட்டியேம்மா... மோசம் போயிட்டியே... நாடு நகரமெல்லாம் வழக்காளின்னு பேரு வாங்குன மவராசனுக்கு மவளா

பிறந்துட்டு, இப்படி பண்ணிட்டியே. அவள் அலங்காரி, பெத்த மவளேயே கூட்டிக் கொடுக்கப்போனவள். இவன் துளசிங்கம் - என் பேரன், பொண்ணுவள ஆடுமாடா நினைக்கவன்."

பாட்டி பேச்சை நிறுத்திவிட்டு கோலவடிவின் மோவாயை நிமிர்த்தினாள்.

"ஏதாவது சாப்புடும்மா... உடம்பு தாங்காதும்மா... இஷ்டம் இருக்கோ இல்லியோ எப்படியும் உயிர் போவது வரைக்கும் வாழ்ந்துதானே ஆகணும்...? இந்த ஒடம்ப வச்சுதான ஆகணும்...? ஒன் நிலம தெரிஞ்சே சாதத்தை குழைய சமைச்சேன்.... இந்தாம்மா சாப்புடு கொஞ்சம்... கொழஞ்ச சோறுதான்..."

பாட்டி, தாலாத் தட்டைத் தேடிக் கண்டுபிடித்து, ஒரு கவளத்தை எடுத்துக் கோலவடிவின் வாயருகே கொண்டு போனாள். அவளோ பாட்டி கையைப் பிடித்துக் கொண்டாள்.

"எனக்கு நஞ்சு இருந்தா கொடு பாட்டி.... நஞ்சு இருந்தா கொடு... இனிமே நான் வாழப்படாது..."

"எத்தனையோ பொம்புளயளுக்கு யோசன சொன்னவள் நான். ஒனக்கு என்ன சொல்லன்னே தெரியலியே... வேணுமுன்னால ஒங்க அய்யாவோட சித்தி மவன் வீடு பக்கத்து வீடு, அங்க கொண்டு ஒன்ன விடட்டுமா?"

"நான் ஒனக்குப் பாரமா போயிட்டனா பாட்டி...."

"அப்டி சொல்லாதடி என் செல்லக்குட்டி, இந்த துளசிங்கம் பய பிறந்தது இதே வீட்லதான். ஒன்னை இப்பிடி பண்ணாத கோலமுல்லாம் பண்ணுவான்னு தெரிஞ்சிருந்தா அவன் பிறந்த உடனேயே வாய்க்குள்ள நெல்ல போட்டு கொன்னுருப்பேன்."

"இப்போ என்னையாவது கொல்லு பாட்டி... நான் உலகத்துல இருக்கப்படாது...."

"ஏன் இருக்கப்படாது...? அலங்காரி மாதிரி பொம்புளயளே இருக்கும்போது, நீ ஏன் இருக்கப்படாது... இப்ப எதுவுமே நடந்துடல...

எழுந்திரு... ஒன்ன நானே பழனிச்சாமிகிட்ட கொண்டு விடுறேன்... அவன் என்ன சின்னம்மான்னு கூப்பிடும்போது அம்மான்னு இவன் கூப்புடப்படாதான்னு நினைச்சவள் நான்... அப்பேர்ப்பட்ட உத்தமன் அவன். நீயும் உத்தமி... பரசுராமன் அம்மா மாதிரி... லேசா தடுமாறிட்ட அவ்வளவுதான்... எழுந்திரு... ஒன்னை வீட்டோட சேத்துடுறேன்... முகத்த துடைழா..."

"என் தலைவிதிப்படி நடக்கட்டும் பாட்டி... வந்ததே வந்துட்டேன்... நானாவது விசுவாசமா இருக்கேன்... அதோட எந்த முகத்தோட பாட்டி போவேன். எனக்கு முகமே இல்லாமச் போச்சே பாட்டி... இல்லாமப் போச்சே..."

கோலவடிவு, மீண்டும் கட்டிலில் முடங்கினாள். மல்லாந்து படுத்தாள். மஞ்சள் சூரியன் எட்டிப் பார்த்தது... அவளுக்கு இந்த வெளிச்சம் மட்டும் அல்ல, எந்த வெளிச்சமும் பிடிக்கவில்லை. கொடியில் தொங்கிய கம்பளியை எடுத்து உச்சி முதல் உள்ளங்கால் வரை மூடிக்கொண்டாள். உடம்பு முழுவதையும் தலையோடு சேர்த்து மறைத்துக் கொண்டாள்.... அவளுக்குத் தேவை வெளிச்சமல்ல. இருட்டு... கும்மிருட்டு... மையிருட்டு... எவரையும் பார்க்க முடியாத எவரும் பார்க்காத இருட்டு...

பகவதி பாட்டிக்கும் என்ன செய்வதென்று புரியவில்லை. துளசிங்கத்தை உருட்டி மிரட்டி இவளை ஒப்படைக்க வேண்டிய முறையில் ஒப்படைத்து விடலாம் என்ற எண்ணம்.

பாட்டி வெளியே வந்தாள்... அந்த அறைக் கதவைச் சாத்தினாள். திண்ணையில் தூணில் சாய்ந்தாள். வயதான உணர்வுகள்... சக்திக்கு மீறித் துடித்ததாலோ என்னவோ... அவள் அப்படியே சாய்ந்தாள்.... எவ்வளவு நேரமோ... அந்த இருட்டு வீட்டுக்குள் நேரத்தை அளக்க முடியவில்லை. திடீரென்று சத்தம் கேட்டது. கரும்பட்டையான் தர்மராசா சத்தம்... சாமியாடி ரத்தினத்தின் குரல். எல்லாவற்றிற்கும் மேலாக அலங்காரியின் சத்தம்.

"பெரியம்மா எழுந்திரு சாப்பிட்டியா... சாப்புடாமலே படுத்துட்டியா...?"

பகவதி பாட்டி முக்கி முனங்கி எழுந்தபோது, அலங்காரி எரியாமல் கிடந்த லாந்தர் விளக்கு சிம்னியைத் துடைத்தபடியே பேசினாள்.

“ஏன் பெரியம்மா வீட்ட இருட்டுல வச்சிருக்கே... வெளிச்சம் மகாலட்சுமி... அவளை அணைய வைக்கப்படாது...”

“நீ இருக்கியே... பேச்சுல... வெளிச்சத்தையும், செய்கையில... இருட்டையும் வச்சிருக்கவளாச்சே....”

தர்மராசா, பாட்டிக்கு உபதேசித்தான்.

“பாட்டி யாரப் பேசுனாலும் பேசு. எங்க அலங்காரி சித்திய மட்டும் அப்படிப் பேசாத... ஆனானப்பட்ட கரும்பட்டையானையும் காத்துக்கருப்பனையும் ஒரே சமயத்துல தலகுனிய வச்சவள். கோலவடிவ திட்டம் போட்டே துளசிங்கத்துக்கிட்ட பிடிச்சுக் கொடுத்துக் கரும்பட்டையான் மானத்த கப்பலுல ஏத்துனவள். அடாவடித் திருமலப் பயலை இப்போ போலீஸ் ஸ்டேஷன்ல... சுவர்ல... கொக்கி போட்டு, அதுல... விலங்கும் கையுமாய் பூட்டி வச்சிருக்கு.... பழனிச்சாமிய... விசாரிக்க... ஊருக்கு போலீஸ் போயிருக்கு... பாக்கியம் படுத்த படுக்கையா கிடக்காள்... துளசிங்கம் செல்வாக்கில ஊரு முழுக்க போலீஸ் காவலு... கரும்பட்டையானுவளுக்கும், காத்துக் கருப்பனுவளுக்கும் நல்ல அடி... இப்டி... நாங்க ஊருல தலை நிமிர்ந்து நிக்கறதுக்கு எங்க அலங்காரி சித்திதான் கார்ணம்.”

“நான் என்னப்பா செய்தேன். எல்லாம் சுடலைமாடன் அருள். இப்போ அவங்க குடுமியே நம்ம கைக்குள்ள என்கிறது மாதிரி ஆயிட்டு...”

‘‘இந்த தள்ளாத வயசுல என்னத்தயெல்லாம் கேட்க வேண்டியதாயிப் போச்சு. மெள்ளப் பேசு பய மவளே.... பாவம் கோலவடிவு கேட்டா துடிச்சுப் போவாள்..”

“சும்மா கிட பாட்டி...”

“ஏய் அலங்காரி! தள்ளாத வயதுக்காரி நான். இருக்க முடியல... வந்த விஷயத்தை சட்டுப்புட்டுன்னு சொல்லிட்டுப் போங்க...”

"பின்ன ஒன் வீட்ல குலாவுறதுக்கா வந்தோம்...? என்ன பேச்சு பேசிட்டே... பெரியம்மா... இந்த ரஞ்சிதம் பய மவள், ஒரு போலீஸ் அதிகாரிகிட்ட கோலவடிவைக் காணல... கடத்திட்டுப் போன துளசிங்கம் மட்டும் திரியுறான். அவள் எங்க இருக்கான்னு தெரியணு முன்னு ஒரு மனு எழுதி கொடுத்துட்டாளாம். போலீஸ் பாடு கொஞ்சம் திண்டாட்டம்... அவங்க நம்ம கோழியத்தான் சாப்புடுறாக... ஆனாலும் கொஞ்சம் பயப்படுறானுவ. அதனால கோலவடிவ கூட்டிட்டுப் போயி சுடலமாடன் கோவிலுலயே துளசிங்கத்திற்குக் கட்டி வைக்கப் போறோம். தாலிகூட வாங்கியாச்சு..."

"எங்க சித்தி லேசுப்பட்டவள் இல்ல பாட்டி... பகையாளி மகள் கோலவடிவு... எங்க கோவிலுல துளசிங்கம் தாலிகட்ட, தலை குனிஞ்சு இருக்கும்போது, கரும்பட்டையான் கூட்டம் எப்படித் துடிப்பாங்கன்னு கண்ணால பார்க்கப் போறோம்..."

"கோலவடிவு கழுத்துல தாலி ஏறுறது, பெரிய மனுஷன்னு தன்னை நினைச்சுட்டு இருக்கிற பழனிச்சாமிய... செருப்பால அடிக்கறது மாதிரி. சரி.... சரி.... கோலவடிவக் கூப்பிடு பாட்டி..."

"உடமஸ்த்தன எங்கேடா?"

"துளசிங்கத்தைக் கேட்கியா...? இந்த ஊருக்குள்ள போலீஸோட வராண்டாமுன்னு... இந்த வெட்டாம்பட்டி எல்லையில போலீஸோட நிக்கான்... கார் காத்து நிற்குது... கோலவடிவும் அவனும் கார்ல பருத்திக்காடு பக்கம் போவாங்க.... அங்க மேளதாளம் தயாராய் இருக்கும்... அப்புறம் கரும்பட்டையான் பயலுவ தூக்குப் போடும்படி மேளதாளத்தோட சுடலைமாடனை சந்திப்பாங்க... கோலத்த கூப்பிடு பாட்டி.."

"கூப்புடவும் மாட்டேன்... அவள அனுப்பவும் மாட்டேன்... துளசிங்கம் அவன் அய்யா... பழனிச்சாமி வீட்ல இருந்து யாராவது ஒருத்தன்... எல்லாருமா இங்க வரணும். இந்த வீட்லயே தாலி கட்டணும். அது வரைக்கும் அவள் இங்கதான் இருப்பாள்."

"பெரியம்மா கிட்ட என்னடா பேச்சு... நாம உள்ள போயி கோலவடிப் பார்த்து ஒரு சொடக்கு விட்டால் அவள் வந்துட்டுப் போறாள்."

அலங்காரி, பகவதி பாட்டியைப் பற்றி கவலைப்படாமல், மச்சான் மகன் தர்மராசாவுடனும், கொழுந்தன் ரத்தினத்துடனும் பெரிய வீட்டுக்குள் போனாள். லாந்தர் விளக்கைத் தூக்கிப் பிடித்துப் பார்த்தாள். கோலவடிவைக் காணோம். பின்கதவு திறந்திருந்தது. அதன் வழியாக கொல்லைப்புறம் போனால் அங்கேயும் காணோம்.

அந்த வீட்டின் கோட்டைச்சுவர் பக்கம் உள்ள பப்பாளி மரம் பாதி ஒடிந்து தொங்கிக் கொண்டிருந்தது.

# 33

அலங்காரி, துடித்துப் போனாள்.

புறக்கடை வழியாக அலறியடித்து முன் பக்கம் வந்தாள்... மச்சான் மகன் தர்மராசா கையையும், மச்சினன் ரத்தினத்தின் கையையும் கைக்கு ஒன்றாகப் பிடித்தபடியே பதறியடித்துப் புலம்பினாள்.

"கோலவடிவ காணுமே... காணுமே..."

உடனே, அந்த செம்பட்டையான்கள் இருவரும், வீட்டுக்குள் போய், அலங்காரி பார்த்த இடத்தையெல்லாம் பார்த்தார்கள்.... அலங்காரி குரல் கொடுத்தாள்.

"பப்பாளி மரம் பாதில... ஒடிஞ்சிருக்கதப் பார்த்தா... கோலவடிவு அந்த மரத்தைப் பிடிச்சு சுவரில ஏறி அந்த பக்கமா குதிச்சிருப்பான்னு

நெனக்கேன்... நல்லாப் பாருங்க... பாவி.... மொட்ட... கெடுத்துட்டாளே.... ரஞ்சிதம் பாவி விடமாட்டாளே..."

அவர்கள் இருவரும் சுவரில் ஏறி, பேட்டரி விளக்குப் போட்டு, அதை அங்குமிங்குமாய் ஆட்டிப் பார்த்தார்கள். பிறகு உதடுகளைப் பிதுக்கியபடியே வந்தார்கள்... பகவதி பாட்டி புலம்பினாள்.

"ஏய் அலங்காரி! குடி கெடுப்பா... ஒனக்கு வர வேண்டிய நிலம அவளுக்கு வந்துட்டே... இந்நேரம் நீ விழவேண்டிய கிணத்துல அவள் விழுந்திருப்பாளே... ஒரு சின்னஞ்சிறிச... கொன்னுட்டியடி பாவி... அவள ஒரு பொண்ணு மாதிரி நெனச்சா பேசுன... நாயப் பேசுறது மாதிரி பேசுன.... அப்போ துளசிங்கம் பய பேசுனதையும் இப்போ நீங்க பேசுனதையும் கேட்டுட்டு அவள் சாவுறதுக்காக ஓடிட்டாள். ஆத்துலயோ, கிணத்துலயோ உயிரவிட ஓடிட்டாள்... நான் என்ன செய்வேன்... கையும் ஓட மாட்டங்கு... காலும் ஓட மாட்டேங்கே... எப்பாவு.... சிவனுபாண்டி.... எப்பாவு."

வீட்டில் கிழக்குச் சுவர் பக்கமாக போய் நின்று பகவதி பாட்டி கத்தினாள்... பழனிச்சாமியின் சித்தி மகன் சிவனுப்பாண்டி பெண்டு பிள்ளைகளோடு சுவர்ப் பக்கமாக வந்து தலையை நீட்டினான்.

"எப்பாவு... கோலவடிவு அங்க வந்தாளா? எங்கேயோ போயிட்டாளே...."

"வந்தபோது சொல்லணுமுன்னு தோணல... போன பிறவா சொல்லுதே... கோலவடிவ வெட்டிக் கொன்னியளா? எரிச்சுச் கொன்னியளா? அவளுக்கு மட்டும் ஏதாவது ஆகட்டும்.... ஒன்னையும் சேர்த்து போலீஸ்ல ஒப்படைக்கேன் பாரு..."

"நான் என்னப்பாவு செய்வேன்... இந்த மூளி அலங்காரி செய்த வேல... பாதகத்தி... நானாழா... ஒனக்கு கிடச்சேன்.. வாழப்போற பெண்ணை நாசமாக்கி மிதிச்சிட்டியளா.... பாவி... மொட்டுப்பூவ... பறிச்சி... எறிஞ்சிட்டியேழா... சண்டாளி..."

"ஒனக்கும் எனக்கும் பேச்சில்ல... பெரியம்மா..."

"அப்படின்னா... என் வீட்டுக்குள்ள ஏமுழா வந்த...? மரியாதி கெட்டவளே.... மேனாமினுக்கி... கையேயி... நீலி.... என் கடைசி காலத்த நிம்மதி இல்லாம பண்ணிட்டியே...."

"இனிமே ஒன் வீட்டுப் படி ஏறுனால் சொல்லு..."

பகவதி பாட்டி, அங்குமிங்குமாய், அலைபாய்ந்து புலம்பினாள். சிவனுப் பாண்டியனை, அவன் மனைவி சட்டையைப் பிடித்து வீட்டுக்குள் இழுத்தாள். இந்தச் சமயத்தில் பகவதிப் பாட்டி சொன்னதுதான் சாக்கு என்று அலங்காரி முகத்தை உப்பிக் கொண்டு செம்பட்டையான்களுடன் வெளியேறினாள். அவளால் பேச முடியவில்லை... 'ஒரு வேளை கோலவடிவு தற்கொலை செய்திருப்பாளோ... எனக்கென்ன... இதுக்குல்லாம் காரணம் துளசிங்கந்தான்... எலி டாக்டர் மவன்... அந்த இரப்பாளிப் பயல்தான்.'

அலங்காரியின் மெய்க்காப்பாளர்கள் போல் இருவரும் இருபக்கமும் நடக்க, அவள் இந்த இருட்டு வழியில் நடந்தாள். பேட்டரியை அடிக்கப் போன தர்மராசாவின் கையைப் பிடித்துத் தடுத்தபடியே இருட்டாகி நடந்தாள். சற்றுத் தொலைவில் தெரிந்த கார் வெளிச்சத்தை இலக்காக்கி, நடக்கும் தரையைப் பாதையாக அனுமானித்து அந்த மூவரும் நடந்தார்கள்.

அந்தக் காரை அவர்கள் நெருங்கியதும் துளசிங்கம்கூட கேட்க வில்லை. கான்ஸ்டபிள்கள் சகிதமாக நின்ற சப்-இன்ஸ்பெக்டர்தான் கேட்டார்.

"கோலவடிவு வரலியா...? ஒங்களத்தான் அலங்காரியம்மா... ஏன் வரல?"

"ஓடிட்டா ஸாரே.... ஓடிட்டா.... ஓடுகாலி... அந்த வீட்ட விட்டு எவனோடயோ ஓடிட்டா.."

"என்ன சித்தி நல்லா பாத்தியா..."

"நல்லாவே பார்த்துட்டேன்... ஓடியே போயிட்டாள்... கடைசில அவள் கரும்பட்டையான் புத்தியக் காட்டிட்டா... இப்போ என்ன செய்யலாம் ஸாரே..."

சப்-இன்ஸ்பெக்டர், அலங்காரியின் கையைப் பிடித்தபடியே பதிலளிக்கப் போனார். அதைத் துளசிங்கம் பார்ப்பதைப் பார்த்த அலங்காரி, அவர் பிடியிலிருந்து லாவகமாக விடுபட்டு விலகி நின்றாள். 'சப்புக்கு' தாபம்-கோபம். மணமகளைப் பாதுகாப்பாகக் கொண்டு வர இரண்டு கான்ஸ்டபிள்களே போதும், அவரும் வந்ததே இந்த அலங்காரிக்காகத்தான்... ரொம்பத்தான் பிகு பண்ணுறாள்....

"அலங்காரி! நீ சாதாரணமா சொல்றது மாதிரி விஷயம் சின்னதுல்ல... கோலவடிவு ஒங்க பாதுகாப்புல இருந்தவள். அவள் ஓடிட்டான்னு நீங்க சொல்லலாம். ஆனால், எதிரிங்க நீங்க கொலை செய்ததா புகார் செய்யலாம்.. அப்போ நானும் சும்மா இருக்க முடியாது.... ஒங்க ரெண்டு பேரையுமே ஒரே விலங்குல.. பூட்டி ஸ்டேஷனுக்கு கொண்டு போகவேண்டியது வரும்... இப்பவே கூட அரெஸ்ட் செய்யலாம்... கோலவடிவ காட்டவேண்டியது ஒங்க பொறுப்பு.... அண்டர்ஸ்டாண்ட்... துளசி..."

துளசிங்கம், எதுவும் புரியாமல் அலங்காரியைப் பார்த்தபோது, அவள், சப்-இன்ஸ்பெக்டரின் அருகே வந்தாள். அவர் இடுப்பில் தன் கரத்தைத் தற்செயலாக உரச வைப்பது போல் உரசியபடியே கெஞ்சினாள்...

"எசமான்... நீங்களே எங்கள கைவிட்டா... எப்படி எசமான்? அப்படியே அந்த கரிமுடிவாள் உயிரை மாய்ச்சிருந்தாலும், எங்கள நீங்கதான் கரைசேர்க்கணும். ஒங்களத்தான் மலைபோல நம்பியிருக்கோம். நாங்க செய்த தப்பை எல்லாம் காலால உதறி கையால அணைக்கணும்..."

சப்-இன்ஸ்பெக்டர், அலங்காரி சொன்னதைச் செய்தார். அவள் கால்களில் தனது கால்களை மோதவிட்டபடியே அலங்காரியின் தோளில் கூசாமல் கையைப் போட்டார். துளசிங்கம், வேறுபக்கமாகத் திரும்பிக் கொண்டான். சப்-இன்ஸ்பெக்டர் குழைந்து குழைந்து பேசினார்.

"நான் சொல்றத தப்பா... நெனக்காதீங்க... அலங்காரியம்மா. நாளைக்கே பழனிச்சாமி கோர்ட்ல மனுப்போட்டு, கோலவடிவ... ஆஜர்

செய்யணுமுன்னு கேட்டால் நம் எல்லோரும் மாட்டிக்குவோம்... ஏற்கெனவே ரஞ்சிதம் நான் ரயில்வே பாலத்துல செக்குரிட்டி ஏற்பாட்டைப் பார்க்கப் போனப்போ 'துளசிங்கம் இருக்கான்.... கோலவடிவு எங்கேன்னு'... நான்... என்னமோ கோலவடிவ கூட்டிட்டுப் போனது மாதிரி கேட்டாள்... சரி ஊருக்குப் போயிட்டாளோ... என்னமோ... அங்க போய் பார்க்கலாம்... காரில் ஏறுங்க... என்ன ஆனாலும் சமாளிச்சுத்தானே... ஆகணும்..."

துளசிங்கம், காரின் முன்னிருக்கையில் ஒதுங்கிக் கொண்டு, தர்மராசாவையும், ரத்தினத்தையும் இழுத்துப் போட்டுக் கொண்டான்... அவனுக்குப் பயம் பிறந்தது. கோலவடிவு செத்துப் போயிருப்பாளோ என்று உயிரோடு செத்துக் கொண்டிருந்தான். பின்னிருக்கையில் சப்-இன்ஸ்பெக்டரும், அவரைத் தடுக்காத அலங்காரியும் உட்கார, கார் பறந்தது. அரை மணி நேரத்தில் தார் ரோட்டில் பாய்ந்து மண்பாதையில் ஓடி பருத்திக் காட்டுப் பக்கம் வந்தபோது, வெளிச்சத்தைப் பார்த்த மேளக்காரர்கள், அடி அடி என்று அடித்து ஊது ஊதென்று ஊதித் தள்ளினார்கள். அவர்களை நெருங்கியதும், சப்-இன்ஸ்பெக்டர் அதட்டலில் மேளதாளம் நின்றதால், கோவில் மைக் போட்ட சத்தம் நன்றாகக் கேட்டது.

"ஆண் பிள்ளை என்று நிரூபித்த அண்ணன் துளசிங்கமே வருக!"

"அதற்கு ஒத்துழைத்த அண்ணி கோலவடிவே வருக!"

சப்-இன்ஸ்பெக்டர் அலங்காரியின் தோளைத் தட்டியபடியே கேட்டார்.

"என்ன உளறுறாங்க?"

"அதுவா ஸாரே... மெட்ராஸ்ல ஒரு சினிமாக்காரன் குழந்தை பெறாத முதல் பெண்டாட்டிய தள்ளி வச்சிட்டு ரெண்டாவதா ஒருத்திய கட்டி பிள்ள பெத்தானாம். அவன் ரசிகர் மன்றம் அப்போ போட்ட போஸ்டர இந்தப் பயலுவ பாராம படிச்சு ஒப்பிக்காங்க... ஒரு காலத்துல ஊர்க்காரனைப் பார்த்து சினிமாக்காரன் காப்பியடிச்சான்... இப்போ

சினிமாக்காரனப் பார்த்து ஊர்ப்பயலுவ காப்பியடிக்காங்க... நல்ல கூத்து...”

அந்த கார் சுடலைமாடன் கோவிலுக்கு வந்தபோது, சாமியாடிகள் ஆடியபடியே காரை மொய்த்தார்கள். செம்பட்டையான்கள் வாணவேடிக்கை போட்டார்கள்... சப்-இன்ஸ்பெக்டர் கார் கதவை உடைப்பது போல சாத்திவிட்டு இறங்கினார். லத்திக் கம்பைக் காட்டி எல்லோரையும் விரட்டினார். அப்படியும் ஆண்களும் பெண்களுமாய் கும்பல் கும்பலாய்க் கூடி கிசுகிசுத்தார்கள். இவர்களின் கவனத்தைக் கலைப்பதற்காக சப்-இன்ஸ்பெக்டர் “விசேஷம் அதுபாட்டுக்கு நடக்கட்டும், மைக்குல பேசுற பயல் வாயை மட்டும் மண்ணவச்சு அடைங்கப்பா” என்றபோது-

வில்லுப்பாட்டாளி, “பார்வதியானவள் ஊசி முனையில் நின்று தவம் செய்து, அதனால் கிடைத்த சிவனார் வரத்தின்படி, கைலாயத்தில் வடக்குமணி வாசலில் முப்பத்திரண்டாவது தூணில் தூண்டாமணி விளக்கு சுடர் விளக்கைத் தூண்ட, சுடலை பிறந்தான்” என்று பாடியபோது, கார்ப்பக்கம் நின்ற ரத்தினம் ஊளை யிட்டுக்கொண்டே கோயிலுக்குள் ஓடினான். அவன்தான் சுடலைமாட சாமியாடி... அந்தக் கதாநாயக சாமிக்குக் குல்லாய் போட்டார்கள். இரும்பு முள் செருப்பை மாட்டினார்கள். ரத்தினம் தங்குதங்கென்று ஆடி வடக்கே இருந்த பகவதியம்மனை ஆடும் பெண்சாமி ஒருத்தியிடம் உத்தரவு வாங்கிட்டு, மீண்டும் ஆட, உடனே எல்லாச் சாமியாடிகளும் குதித்தார்கள்.

மேளம் பீறிட்டது... நாதஸ்வரம் வீறிட்டது... பெண்களின் குலவைச் சத்தம் பந்தலை முட்டியது. கால்களைத் தூக்கி, கைகளை ஆட்டி வாய்களால் ஊளையிட்டபடி ஆடினார்கள். மேளக்காரர்களுக்கும் சாமி வந்தது.... எவர் சாமியாடி, எவர் மேளக்காரர் என்று கண்டுபிடிக்க முடியாத ஆட்டம். எல்லாச் சாமியாடிகளையும் கும்பிட்டு திருநீர் வாங்கிய ஒரு செம்பட்டை, பகவதியம்மனிடம் போகவில்லை. போகக்கூடாது. பகவதியம்மா, மனைவியைப் பிடித்து ஆட்டினாலும், மனைவி மனைவிதான். கும்பிடப்படாது... எலிடாக்டர் ஒரே இடத்தில் நின்றபடி தோளை மட்டும் முறுக்கினார். மயானபுத்திரன் இவர்- நேற்று மண்டையில் பட்ட கல்லெறியால் அதுக்கு மேல் ஆட முடியவில்லை.

ஒரு சாமியாடி தோளில் வெட்டரிவாள்... இன்னொருத்தர் கையில் பிரம்புத்தடி. ஒருவர் புண்ணாக்கு தின்ன, இன்னொருத்தர் வாழைப்பழத்தை உரிக்காமலே உள்ளே போட்டார். இவர்களுக்கு மத்தியில் சுடலைமாட ரத்தினம் சுற்றிச் சுற்றி வந்தான்... கையிலே அரிவாளோடு குதித்தான்.... "டேய் என் புத்திரர்களா... பாத்தியளாடா... சுடலை மாடனோட லீலையை... எதிரி கோயில எப்படி மூடிட்டேன் பார்... சப்-இன்ஸ்பெக்டர் மவனே... கவலப்படாத.... கோலவடிவ கண்டுபிடிச்சுத் தாரது என் பொறுப்பு... இவளை நான்தான் சில காரணத்துக்காவ மறச்சு வச்சிருக்கேன்..."

சப்-இன்ஸ்பெக்டர், கோவிலை விட்டுக் கோபமாக வெளியே வந்தார். கோவிலுக்குள் சாமியாட்டத்தை ஆடியோச் சத்தத்துடன் வீடியோ எடுத்துக் கொண்டிருந்த சினிமாக்காரர்களின் கும்பிடுகளுக்கு பதில் கும்புடு போடாமலே வெளியேறினார்.

ஆங்காங்கே பாராபோட்டிருந்த போலீஸாரைக் கண்காணிப்பது போல் பார்த்துவிட்டு ஒரு வேப்பமரத்தின் பக்கமாக வந்தபோது காலடிச் சத்தம் கேட்டு திரும்பினார். அலங்காரி.... அவளே, இப்போது அவரது கையை எடுத்துத் தோளிலே போட்டுக் கொண்டு கேட்டாள்...

"ஸாரே என்ன யோசிக்கியே...?"

"ரத்தினம் பயல அரெஸ்ட் பண்ணப் போறேன்... இப்பவே கையுல விலங்கு மாட்டப் போறேன்..."

"ஐய்யய்யோ... அப்டில்லாம் செய்யாதிய ஸாரே... என்ன விஷயம்...?"

"ஆழம் தெரியாமல் காலைவிட்டுட்டு அவஸ்தப்படுறவன் மாதிரி கோலவடிவு என்ன ஆனாளோன்னு நான் அவஸ்தப்படுறேன். சாமியாடிப்பய சும்மா ஆட வேண்டியது தானே... சுடலைமாடன் மறச்சு வச்சிருக்கதா சொன்னான்... கிட்நாப்பிங்கா... அவன விடமாட்டேன்..."

"என் மொகத்துக்காவ அவன விடுங்க சாமி. அவன் சரியான நெருப்புக்கோழிப் பய..."

"அலங்காரி, எனக்கென்னமோ... கோலவடிவு அவளோட வீட்டுக்கோ... சொந்தக்காரங்க... வீட்டுக்கோ வந்திருக்கலாமுன்னு ஒரு சந்தேகம்... யாரையாவது ஆட்கள அனுப்பி பார்க்கச் சொல்லேன்."

"எல்லா அதிகாரத்தையும் கையில வச்சுக்கிட்டா இப்டிச் பேசுறது...? போலீஸ அனுப்பி பழனிச்சாமி வீட்ட சோதனை போடுங்க... இல்லன்னா... எந்த வீட்டுக்குப் போனாலும் பெரிய மனுஷத்தனம் இல்லன்னு நினைக்கிற பழனிச்சாமிய போலீஸ அனுப்பி கையோட கூட்டி வரச்சொல்லி கோலவடிவ எங்கேடா கடத்திட்டு போனேன்னு ரெண்டு தட்டுத் தட்டுங்க..."

"அலங்காரி... நீ நெசமாகவே ஒரு ஐ.பி.எஸ். அதிகாரியாய் ஆயிருக்கணும்."

"அப்படின்னா ஸாரே...?"

"ஒண்ணுமில்ல... விடியட்டும்... பழனிச்சாமிய இங்க கூட்டிவந்து ஒன் கண்ணு முன்னாலயே... விசாரிக்கேன் பாரு...."

# 34

கோலவடிவு, அலங்கோல வடிவாய் நடந்தாள்.

இரவோடு இரவாக, பகவதிப் பாட்டி வீட்டின் தெற்குச் சுவரில் ஏறி, கீழே குதித்தாள்; ஒரு எருக்குழியில் விழுந்தாள்.... சண்டும், சருகும், சாணமுமாக அந்த இடத்தின் குமிழி போன்ற குழியில் பொத்தென்று விழுந்தாள். அங்கிருந்து விடுபடவேண்டும் என்ற உணர்வு அற்றுப் போனவளாய், கால்மணியோ–அரைமணி நேரமோ அங்கேயே குப்புற ஒரு பள்ளத்தில் உருண்டு கிடந்தாள். ஏதோ பெரிய இரை கிடைத்த சாக்கில், அங்கே வந்த தெரு நாய்கள், அவள்

காலையும், கழுத்தையும் மூக்கால் நுகர்ந்து, வாயால் கௌவப் போனபோது, கோலவடிவு நிமிர்ந்து உட்கார்ந்தாள். உடனே அந்த நாய்கள் குலைத்தன... அவளைச் சமாளிக்க இன்னும் சில தேவை என்பதுபோல், இதர நாய்களைக் கூப்பிடும் குரலில் கத்தின... காதல் வயப்பட்டு, ஒப்பாரி போடுவெதுபோல், ஊளையிட்ட நாய்களும், இப்போது போர்ப்பரணி பாடின... அவள் எழுந்தபோது, லேசாய் பயந்து, அவளைச் சுற்றி வியூகம் போட்டு நோட்டம் பார்த்தன.

கோலவடிவு, அதைப் பொருட்படுத்தாததுபோல் நின்றாள். அங்கே உள்ள, சின்னப் பாட்டி மகன் சிவனுப்பாண்டி சித்தப்பா வீட்டிற்குப் போகலாம் என்று யோசிப்பதுபோல், பிடறியில் கை கோர்த்தபடி, அந்த வீட்டையே பார்த்தாள். பிறகு ஓடிப் போனவளுக்கு, உறவும் ஓடிப்போகும் என்று நினைப்பதுபோல், நடக்கத் துவங்கினாள்.... அந்த நாய் வட்டம், அவள் நடை வேகத்திற்குப் பயந்து, விட்டுக் கொடுத்தது. பெரும்பாலான நாய்கள், அவளுக்குப் பயந்தது போல்,' வால்களை பின்னங் கால்களில் நுழைத்துக் கொண்டு, வட்டத்தை வழிகளாய்க் காட்டின.

கோலவடிவோ, அந்த மையிருட்டில் தாறுமாறாய் நடந்தாள். எருக்குழியைத் தாண்டி, ஊரின் கொல்லைப் புறமாக பனங்காட்டு வழியாக பாய்ந்தாள். அது வெட்டாம்பட்டிக்கும் சட்டாம்பட்டிக்கும் இடையே உள்ள குறுக்குவழி... சைக்கிள்கூட செல்ல முடியாத பாதை... பனைமரத்து ஓலைகள், பேய்க்காற்றில், ஒன்றுடன் ஒன்று உரசி ஊளையிட்டன.... எங்கோ ஓடிய முயல், அவளைப் பார்த்து பம்மியது... ஏதோ ஒரு.... பாம்புக்கு குறி வைத்த கீரி, அதை விட்டுவிட்டு, அவளை எதிர்த்து நின்றது... அவள், அது புரியாமல், அதன்மேல் கால் வைக்கப் போனபோது, அந்தக் கீரி, எந்த பிராணியோ இளைப்பாறும் குழிக்குள் பாய்ந்தது...

மரணம் என்ற உருவமற்ற ஒன்று, பனங்காடே தலையாக, சவுக்குத் தோப்பே உடலாக, பாழுங் கிணறுகளே பாதங்களாக உருவம் பெற்றதுபோல் பேய்ச்சத்தமாக காற்று மூச்சை வேக வேகமாய் விட்டுக் கொண்டிருந்தது... காற்றில் விழுந்த பனங்காய்கள், ஏற்கெனவே விழுந்த புளியங்காய்களை நசுக்கின... எங்கோ ஒரு அவலச் சத்தம்... எதிலோ ஒரு ஊளைச்சத்தம்... அனைத்திலும்... ஒரு ஆவேசச் சத்தம்...

கோலவடிவு பனங்காட்டைத் தாண்டி சவுக்குத் தோப்புக்குள் நடந்தாள். நடக்கும் இடமெல்லாம் இடறல்கள்... நோக்கும் திசையெல்லாம் பேயிருட்டு... சப்... சப்... என்று வளைவிலும், நெளிவிலும் நர்த்தனம் ஆடும் சவுக்கு மரங்கள்... அவளை சில நரிகள் வழி மறிக்கப் பார்த்தன.... அவளும், அவை தன்னை அடித்துத் திங்கட்டும் என்பதுபோல் நின்ற இடத்திலேயே நின்றாள்... ஆனால் அந்த நரிகளோ, அவள் தங்களை அடித்துத் தின்னாமல் இருந்தால் போதும் என்பதுபோல் திரும்பி பாராமல் ஓடின...

கோலவடிவு, சவுக்குத் தோப்பைத் தாண்டி, வயல்வெளிப் பக்கம் வந்தாள். பகலில் பொன் நிறத்தில் மின்னும் நெற்பயிர்கள், இருட்டுக் கற்றைகளாய் அவள் மேல் பட்டுத் தொட்டன... தென்னைகள், இருளின் கோடுகளாய் தென்பட்டன. அவள் நடை போட்டாள்.... தாண்டவமாடுபவள் போல், தாவிக் குதித்தாள்.... தொலைவில், சுடலைமாடன் கோவில் பக்கம், வாணங்கள், ஆகாயத்தில் பாளம் பாளமாய் பாய்ந்து அந்தக் கோவிலை அடையாளப்படுத்தின. இருள் கிழிந்த வாணங்கள், இறுதியில் இருளில் கிழிபட்டு, அற்றுப் போயின... அவளை போகாதே போகாதே என்பதுபோல், பூசணிக் கொடிகள் அவள் கால்களைப் பின்னின... ஆமணக்குச் செடிகள் வழிமறித்தன... வெட்டப்பட்ட சோளக் கட்டைகள் தட்டின... அவளோ கொடியைக் கிழித்து, செடியை ஒடித்து, கட்டைகளை கட்டையாக்கி நடந்தாள்... கடந்த காலம், நிகழ்கால களங்கமாக, எதிர்காலம், எதிரிக் காலமாக... அவள், காலங் கடந்தவளாய், காலத்தால் கடத்தப்பட்டவளாய் நடந்தாள்...

ஏதோ ஒரு விரக்தியோ அல்லது சக்தியோ அவளை நடத்திக் கொண்டிருந்தது. துணிந்தவளுக்கு துக்கமில்லை... வெட்கமில்லை என்பது மாதிரியான அசட்டு நடை.... துளசிங்கத்தால் கீழே விழுந்தபோது வருத்தப்பட்டு, தனது தங்கையை தன்னுடன் ஒப்பிட்டு பேசியபோது கோபப்பட்டு, அவன் போலீஸ் நிலையம் நோக்கி போனபோது பாவப்பட்டு, கட்டிலோடு கட்டிலாய் கிடந்தவள், இப்படி நடக்கிறாள்.

எந்த அர்த்த ராத்திரியில் ஐவராசாவும், அலங்காரியும், தனது அண்ணன் திருமலை, காவல் நிலையத்தில் கட்டுண்டு கிடப்பதைச் சொன்னார்களோ - அப்போது எழுந்தாள். எப்போது பழனிச்சாமியை இளக்காரமாய் பேசினார்களோ - அப்போது 'என்னடா நெனச்சே என்னடா நெனச்சே' என்று பாயப் போனாள்... எப்போது தன்னைக் காட்சிப் பொருளாக்கி, தான் பிறந்த கரும்பட்டையான் குடும்பத்தை சிறுமைப்படுத்த திட்டமிட்டு வந்திருக்கிறார்கள் என்பதை அறிந்தாளோ - அப்போதே குமைந்தாள்... கல்யாணம் என்ற பெயரில்... தனது உற்றார்க்கும், பெற்றார்க்கும் கருமாந்திரம் வைக்கப் போகிறார்கள் என்பதை எப்போது தெரிந்தாளோ... அப்போது தெளிந்தாள்... அப்பா விவகாரி.... ஓடிப்போன பல பெண்களைக்கூட, குடும்பப் பெண்களாக்கியவர்... நடந்த விவரத்தை... அப்படியே அவரிடம் சொன்னால்... அவர் நிச்சயம் அனுதாபப்படுவார்... ஒருத்தனுடன் ஓடியது சாதாரண துணிவு என்றால், அவனை, தாய் தந்தையருக்காக உதறிவிட்டு திரும்புவது அசாதாரண துணிவு என்று தந்தை நினைப்பார் என்று அவள் நினைத்தாள்... துளசிங்கம், ஐவராசா, அலங்காரி வகையறாக்கள், தன் குடும்பத்தை படுத்திய பாட்டில் பெருமிதப் பட்டபோது, அவள் தனது மனதுக்குள்ளேயே, அவர்களுக்கு எதிராக போர் தொடுத்தாள்.

அவர்கள் எந்தக் கையில் தன்னை ஒரு கருவியாக வைத்திருக்கிறார்களோ- அந்தக் கையையே உடைக்கும் கருவியாக தான் மாறியே ஆகவேண்டும் என்று கருவிக்கொண்டாள்... சட்டாம்பட்டிக்கும், வெட்டாம்பட்டிக்கும் இடைப்பட்ட வழியில் மட்டும் சிறிது தடுமாறி, பகவதி பாட்டி வீட்டுக்கு வந்ததும் பழைய கோலவடிவாய் தான் ஆகிவிட்டது, தனது பெற்றோருக்கு புரியும் என்று நினைத்தாள். ஒருவர் மீது அன்பு செலுத்தும்போது, அவரும் தம்மீது அந்த அளவு அன்பு செலுத்துவதாக நினைப்பதுபோல், பெற்றோருக்காக அவள் அனுதாபப்பட்டதால், பெற்றோரும் அனுதாபப் படுவார்கள் என்று நினைத்தாள். பெற்றோரின் கௌரவத்தை தூக்கிப் பிடித்து இப்போது நடக்கும் இந்த நடை ஒரு வீர நடை என்று வீம்புடன் நடந்தாள். வேண்டப்பட்டவர்களைப் பற்றி தீவிரமாக

நினைக்கும்போது, அந்த நினைப்பின் ஒவ்வொரு அசைவும், நினைக்கப் படுகிறவர்கள் இதயத்திலும் ஒரு அசைவை உருவாக்கி, அந்த அசைவே நினைத்தவரின் சிந்தனையாய் மாறும் என்று நினைப்போமே, அந்த நினைப்பில் நடந்தாள்.

என்றாலும், ஊரை நெருங்க நெருங்க, ஓடிப்போன கேவலம், அவள் உடம்பில் களைப்பாகவும், உள்ளத்தில் உளைச்சலாகவும் ரூபமெடுத்தன... இருண்டிருந்த காளியம்மன் கோவில், அவள் முகத்தை இருளடையச் செய்தது. சுடலைமாடசாமி கோவிலின் விளக்குப் பிரகாசம் அவள் கண்களைப் பறித்து குருடாக்கியது...

ஊருக்குள் வட்டமடித்து, வேறு வேறு பாதைகளில் நடந்து நடந்து, இறுதியில் வீட்டுப் பக்கம் வந்தாள்... உள்ளே எல்லாமே தலைவிரி கோலமாய்... தலைகீழாய் கிடப்பதைத் தொலைவிலேயே பார்த்துவிட்டாள்... அம்மாவின் விசும்பல் கேட்டு, உள்ளே ஓடப் போனாள்... அப்பாவின் பொருமல் கேட்டு தாவப் போனாள்... ஆனாலும் கால்கள் நடந்தால், முதுகு நின்றது... முதுகு வளைந்தால், கால்கள் நின்றன.

சொந்த வீடே, அன்னிய வீடானதுபோல் தோன்ற, அவள், அந்த வீட்டின் வடக்குச் சுவர்ப்பக்கம், வேற்றுப் பெண்ணாய் போனாள்... லேசாய் வியாபித்த பொட்டல்வெளி... அதில் கட்டை வண்டி நிறுத்தப்பட்டிருந்தது. அதற்குள் தவழ்ந்து தவழ்ந்து போனாள்... அதன் பைதாக்களுக்குள் *(சக்கரங்கள்)* உடம்பைக் குறுக்கிக் கொண்டாள்...

வெளியே நடப்பதைப் பார்க்கும் போதெல்லாம், உள்ளே ஓடிப்போய் விஸ்வரூபம் எடுக்க வேண்டும் என்ற வேகம்... அதே சமயம் வீட்டில் நடப்பதைப் பார்க்கும்போது, வெளியே ஓடி, பாழுங் கிணறு ஒன்றின் பாறைப் பற்களுக்கு தீனியாக வேண்டும் என்ற உந்தல்.

கோலவடிவு _ அந்த பெயருக்கு எதிர்மாறாய் கிடந்தாள். வீட்டையும் தொலைவில் உள்ள ஒரு ஆழக் கிணறையும் மாறி மாறிப் பார்த்தாள்...

# 35

சுடலைமாடன் கோவில் சுறுசுறுப்பாய் இயங்கியபோது, காளியம்மா 'கோவில் மூடிக்கிடந்தது... அரைகுறை பந்தலுடன், மொட்டையான சப்பரத்துடன் அந்தக் கோயில் இருளில் மூழ்கிப் போனது... இவ்வளவு பெரிய அவமானத்தைத் தந்த காளியாத்தாவிற்கு இந்த வருஷம் இல்லை, எந்த வருஷமும் கொடை தேவையில்லை என்று கரும்பட்டையான்கள் தீர்மானித்தார்கள்... திறந்து கிடந்த அம்மன் கோவிலை மூடப்போனால் அம்மனைப் பார்க்க வேண்டியதிருக்கும் என்று நினைத்து, அவள் முகத்தில் விழிக்க விரும்பாதவர்கள் போல் அப்படியே விட்டுவிட்டார்கள்... சிலர் காளியம்மாவை வாய்க்கு வந்தபடி திட்டினார்கள்...

கோலவடிவின் தந்தை பழனிச்சாமி வீட்டிலே...

எல்லாமே தலைகீழாகக் கிடந்தன. தொழுவத்தில் கட்டப்பட்ட மாடுகளுக்கு யாரும் 'தண்ணி' காட்டவில்லை... அவை "ம்மா... ம்மா" என்று கத்தின. தொட்டியில் போட வேண்டிய புண்ணாக்கு திண்ணையில் திட்டாகக் கிடந்தது... வீடு பெருக்கப்படாமல் குப்பையும் கூளமுமாகக் கிடந்தது... சேலை துணிமணிகள், அங்கொன்றும் இங்கொர்ன்றுமாகக் கிடந்தன... அடுப்பிலே தூசித் திட்டுக்கள். அம்மியிலோ பல்லிகள் பாச்சானைப் பிடித்துக் கொண்டிருந்தன.

இதேபோல், அந்த வீட்டு ஆட்களும் அப்படித்தான். பழனிச்சாமி, கட்டிலில் சோர்ந்து போய்க் கிடந்தார். அவர் முன்னால் சிதறிக் கிடந்த கரும்பட்டையான் பங்காளிகளைப் பரக்கப் பரக்கப் பார்த்தார். அவர் கண்கள், அவர்களைப் பார்ப்பது போல் எங்கேயோ பார்த்தன... அடிக்கடி தன்னையறியாமலேயே வயிற்றைத் தடவி விட்டார்... மாயாண்டி ஒரு அரிவாளைக் கூர் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் ஏதாவது செய்துவிடக் கூடாது என்பதற்காக நாட்டு வக்கீல் "அரிவாளைக் கீழே போடும்... போடும்..." என்று நச்சரித்துக்

கொண்டிருந்தான். கோலவடிவின் அம்மா பாக்கியம், திண்ணையில் கிடந்து தலையைச் சுவரில் தேய்த்து தேய்த்து "பாவி மொட்டை கெடுத்துட்டாளே... பாவி மொட்ட தலகுனிய வச்சுட்டாளே... யாருக்கும் தல வணங்காத என் மவராசன் அதோ அடியத்து கிடக்காரே.... கப்பல் போல இருந்த என் ராசா கவிந்து போய் கிடக்காரே..." என்று புலம்பினாள். அழுதழுது, அவள் முகம் வீங்கியிருந்தது... வாடாப்பூ, அவள் வாயில் நீராகாரத்தை டம்ளர் விளிம்பால் உதடுகளைப் பிரித்து உட்புகுத்திக் கொண்டிருந்தாள். அந்தத் தாயைச் "சாப்பிடு... பெரியம்மா... என்... கண்ணுல்ல..." என்று சொல்லிச் சொல்லிக் குழந்தைக்கு ஊட்டுவது போல் ஊட்டிக் கொண்டிருந்தாள். ஆனாலும், வலுக்கட்டாயமாக வாய்க்குள் போன நீராகாரத்தை பாக்கியம் துப்பினாள்... பிறகு அப்படியே பேச்சற்று மூச்சற்றுச் சாய்ந்தாள்... திக்கற்றுக் கிடந்த பழனிச்சாமியையும் பாக்கியத்தையும் பார்த்துவிட்டு பலர் அழுது விட்டார்கள்.

நள்ளிரவில், சுடலைமாடசாமி பருத்திக் காட்டிற்குத் தீப்பந்தத்துடன் 'வேட்டை'க்குப் போய்விட்டு வந்து விட்டார். மேளத்திற்குப் பிறகு ஆடிய ரிக்கார்ட் டான்ஸம்மா மேடையிலேயே மேக்கப்பை கலைத்துக் கொண்டிருந்தாள். கூட்டம் சிறிது சிறிதாகச் சிறுத்துக் கொண்டிருந்தது... கதிரவனும் கண் விழித்தான்.

திடீரென்று பழனிச்சாமி வீட்டு முகப்பில் பழைய காலத்துத் துப்பாக்கியோடு ஒரு கான்ஸ்டபிள் தோன்றினார்.

"யாரும்மா... பாக்கியம்..."

நாட்டு வக்கீல் நாராயணன் பதிலளித்தான்.

"அதோ புலம்பிக்கிட்டு இருக்காவளே.... அந்தம்மா..."

"யாருவே பழனிச்சாமி..."

"அதோ யானை சேத்துல சிக்குனமாதிரி கட்டிலிலே கிடக்காரே, அவருதான். என்ன விஷயம்?"

"யாருவே பேச்சியம்மா..."

"எங்க வகையறாதான்... ஒங்களுக்குப் பயந்து எங்கேயோ போயிட்டாள்... என்ன விஷயம்?"

"இவங்க மூணுபேரையும் எங்கய்யா கையோட கூட்டிட்டு வரச்சொன்னாரு..."

"ஒங்கையான்னா..."

"விளையாடுறியளா... சப்-இன்ஸ்பெக்டர்தான்... சுடலமாடன் கோவிலுல பந்தோபஸ்த பார்த்துட்டு இருக்கார்... அங்க வரச் சொன்னார்..."

"என்ன விஷயமாம்?"

"எது பேசணுமுன்னாலும் அவருகிட்ட வந்து பேசுங்க..."

"வரமுடியாதுன்னு சொல்லுங்க..."

"விஷயம் லேசுல்ல... இப்பவே பாத்துடுங்க... இல்லன்னா எங்கய்யாவுக்கு கண்மண் தெரியாம கோபம் வரும்."

"அட போய்யா... எங்களால வரமுடியாதுன்னா வரமுடியாது... என்ன செய்யணுமுன்னாலும் செய்யலாமுன்னு ஒங்கய்யாகிட்ட சொல்லிபுடு."

அந்த கான்ஸ்டபிள் சிறிது யோசித்தார்... அந்த வீட்டில் நிலவிய அவல நிலை அவரையும் ஆட்டுவித்தது... சப்-இன்ஸ்பெக்டர் செய்வது அதிகப்படி என்று புரிந்தது. அவர் நாம் சொன்னால் கேட்பாரா... துளசிங்கம் - அலங்காரி தானே இப்போ அவருக்கு ஆண் கான்ஸ்டபிள், பெண் கான்ஸ்டபிள்...

அந்த போலீஸ்காரர் போய்க் கொண்டிருக்கும் போதே, அருணாசலம் கத்தினார்...

"கொடுமைக்கு ஒரு அளவு வேண்டாம்...? நம்மளப் போய் சுடல மாடன் கோவிலுக்கு கூப்புடணுமுன்னா எவ்வளவு திமுறு இருக்கணும்? அவமானப் படுத்துறதுக்கும் அளவு இல்லாமப் போயிட்டுப் பாரு... இந்த பேச்சியம்மாவ வேற காணல... ஏடா... நாராயணா... திருமலை எப்டிடா இருக்கான்..."

"மூணு மணிநேரம் சுவர்லயே மாட்ட வச்சிருந்தாங்களாம்... என்னப் பார்த்துட்டு அழுதான்... அழுதான்... அப்டி அழுதான்..."

பாக்கியம்மா, திடீரென்று எழுந்தாள்... பெற்ற வயிற்றில் மாறி மாறி அடித்தாள். நாட்டு வக்கீல் நாராயணன் ஆற்றுவித்தான்...

"பொறுத்துக்க சித்தி, பொறுத்துக்க... நாளைக்கு அவன ஜாமீன்ல கொண்டு வாரது என் பொறுப்பு... இந்த புஷ்பத்த கூண்டுல ஏத்தி, வக்கீல வச்சு, அசிங்கம் அசிங்கமாய்க் குறுக்குக் கேள்வி கேட்க வைக்கேன் பாரு... நாளை மத்தியானத்துள்ள திருமலய ஒன் கண்ணுல காட்ட வேண்டியது என் பொறுப்பு. அதுவரைக்கும் பொறுத்துக்க சித்தி... நம்ம வீட்டு முன்னாலயே போலீஸ போட்டிருக்கான் பாரு."

சிறிது நேரத்தில், பழனிச்சாமி வீட்டுப் பக்கம் பாரா பார்த்த போலீஸ்காரர்களுடன் சப்-இன்ஸ்பெக்டர் உள்ளே வந்தார். இடுப்பில் துப்பாக்கியுடனும் கையில் லத்திக் கம்போடும் வெளிப்பட்டுப் பேசினார்.

"எவண்டா அவன் பழனிச்சாமி... அவன் பெண்டாட்டி எங்க இருக்காள்?"

"சார் கொஞ்சம் மரியாதியாய்..."

"லத்தி பிஞ்சுடும்... கடத்தல் பயல்வளுக்கு என்னடா மரியாதை... கோலவடிவ கடத்தி எங்கடா வச்சிருக்கான், அந்த பழனிச்சாமி..."

எல்லோரும் திகைத்து திக்பிரமை பிடித்து நின்றபோது கட்டிலில் குப்புறக் கிடந்த பழனிச்சாமி தலையை ஒரு குலுக்கு குலுக்கினார். அங்கிருந்து முற்றத்தில் குதித்து முன்நோக்கி நடந்தார். சப்-இன்ஸ்பெக்டர் முன்னால் இரண்டு கைகளையும் நீட்டியபடியே கத்தினார்.

"இந்தாப்பா... கையி... விலங்கை மாட்டய்யா... ஏய் பாக்கியம்... இங்க வாடி... ஒன் கையிலயும் விலங்க மாட்டட்டும்..."

"எங்கண்ணாச்சி கையில மட்டும் விலங்கு போச்சுது... அப்புறம் தலையில் தொப்பி இருக்காது."

பழனிச்சாமி பதறாமலே சீறினார்.

"ஏய்யா யோசிக்கே... நீ கூப்பிட்டதுக்கு வராதது குற்றம். ஒரு மகளப் பெத்தது குற்றம். அவள அருமையா வளத்தது குற்றம்... அவள் ஓடிப்போனதும் என்னோட குற்றம்... அவள துளசிங்கம் கூட்டிட்டுப் போனதும் என் குற்றம்... அலங்காரி என்றவள் ரெண்டு பேரையும் செட்டப் பண்ணுனதும் என் குற்றம். இதோ வெளில மெல்லவும் முடியாம விழுங்கவும் முடியாம தவிக்காளே... பாக்கியம் இவளும் குற்றவாளிதான்... எல்லா குற்றத்துக்கும் சேர்த்து ரெண்டு பேருக்கும் விலங்கு மாட்டு. பாக்கியம் வாடி... ஒனக்கும் கோடி புண்ணியம்... எங்க ரெண்டு கையையும் ஒண்ணா சேர்த்து விலங்கு போடு. இப்போ படற அவமானத்தைவிட ஒன்னால் படப்போற அவமானம் பெரிசாயிடாது."

சப்-இன்ஸ்பெக்டர் யோசித்தார். இந்த ஆசாமி இப்படிக் கத்துறார் என்றால் ஏதாவது பேக்ரவுண்ட் இருக்கும். இவன் மாமனோ மகனோ தாலுகா ஆபீஸ்ல இருப்பான். விஷயத்த இதோட விடமாட்டான்... ஆர்.டி.ஓ. என்குயரி வரும். ஆனால், புகார் கொடுத்தவன் துளசிங்கமாச்சே... ஒப்புக்காவது ஏதாவது செய்யணுமே...

"நான் எதுக்கு சொல்ல வந்தேன்னா... பெரியவரே..."

"நீ எங்கய்யா என்னை பெரியவன்னு நெனச்சே... என் வயசுல முக்கால் வயசுகூட ஒனக்கு இல்ல. எடுத்த எடுப்புலயே ஏடா ஓடான்னு பேசுறே... ஒன்னை மாதிரி நானும் விவகாரிதாய்யா... நாலு ஊர்ல வழக்குப் பேசி முடிச்சு வச்சவன்தாய்யா நான். இந்த ஊருல இந்தத் தெருவுல ரெண்டு வம்சங்க. ரெண்டுக்கும் ஏடாகோடமான போட்டி. இந்த ஊருக்குப் பொறுப்பு வகிக்கிற ஒனக்கு மொதல்ல இது தெரிஞ்சிருக்கணும். இப்படிப்பட்ட நிலையில ஒரு குடும்பத்து பொண்ணு எதிரிக் குடும்பத்துப் பயலோட ஓடிப்போறது வெறும் காதல் விவகாரமா மட்டும் ஆகாது. அதுல பெண்ணப் பெத்தவன் குடும்பத்தோட மானமும், ஆணப் பெத்தவன் குடும்பத்தோட ஆணவமும் அடங்கியிருக்கு...

நீ சப்-இன்ஸ்பெக்டர்... என்ன செய்திருக்கணும்... இப்போ வந்து நிக்கியே... இந்த இடத்துக்கு வரணும்... ரெண்டு குடும்பத்துக் காரனுவளயும் ஊர்ப் பெரியவங்களையும் கூட்டணும்... அப்புறம் உருட்டு மிரட்டு... இது ஒன் வேலை... ஒருத்தன் எதையோ சொன்னான்னு

நிரபராதிகள உருட்டி... மிரட்டி எதிரி கோவிலுக்கே கூப்பிடறதும்.... சொன்னபடி போகாட்டா விரட்டுறதும்... நல்லா இருக்கா? சும்மா ஒரு புகார் கிடச்சுட்டு என்கிறதாலே... கண்மண் தெரியாம ஆடுறதா... ஏற்கெனவே படுற அவமானம் போதாதுன்னு, நீயும் அவமானப் படுத்துனா என்னய்யா அர்த்தம்? எங்களுக்கு மட்டும் ஆளில்லையா என்ன? விலங்கு போட்டு கூட்டிட்டுப் போய்யா... அப்படியாவது என் திருமலையை நான் பார்க்கலாம்..."

பழனிச்சாமி போட்ட கூச்சலில் ஊரில் பாதி கூடி விட்டது. காத்துக் கருப்பன்கள், காரை வீட்டுக்காரர்கள், ஒத்தை வீட்டுக்காரர்கள், ஆசாரிக் கூட்டம், கோனார் சாதியினர், சேரிக்காரர்கள்... கடந்த ஒரு நாளில் போலீஸ்காரர்கள், பந்தோபஸ்து என்ற பெயரில் கண்டவர்களை எல்லாம் கழுத்தைப் பிடித்துத் தள்ளியதும், எலி டாக்டர் வீட்டில் என்னெல்லாமோ சாப்பிட்டதும், ஊர் மக்களிடம் ஒரு உக்கிரத்தை ஏற்படுத்தியது. ரஞ்சிதம் பீடிப் பெண்களோடு வந்தாள்... சப்-இன்ஸ்பெக்டர் முன்னால் போய் சவாலிட்டாள். "சாதாரண மனுஷன் பட்டை போட்டுட்டு ஆடுறான். நீங்க சர்க்கார் யூனிபார்ம் போட்டுட்டு ஆடுறிங்க. சினிமாப்பயல்க எங்கள்கிட்ட முறைகேடா நடந்ததா புகார் கொடுத்தேனே... அதுக்கு ஆக்ஷன் எடுத்தியா? இதோ புஷ்பம், இவள் கற்பு திருமலையால போயிட்டுதான்னு தீர விசாரிச்சியா? புஷ்பா நீயே சொல்லு..."

புஷ்பம் விம்மினாள்.

"இல்ல இல்ல, சண்டாளி முண்ட.... அலங்காரி சோடிச்சா... இந்த சப்-இன்ஸ்பெக்டரும் நம்புறமாதிரி நடிச்சார். என்ன பேசவே விடலே..."

"இப்ப என்ன ஸார் சொல்றீங்க... பொய்ப் புகார் கொடுத்த துளசிங்கத்தையும் அலங்காரியையும் கைது செய்ங்க பார்க்கலாம்... அப்போதான் நீங்க நிசமான போலீஸ்.... இல்லன்னா போலி... இந்த ஊர்ல... தடிமாடு மாதிரி திரிய வச்சிருக்கியே துளசிங்கம்... அவன்கிட்ட அந்த கோலவடிவ எங்கேடான்னு கேட்டியா?"

இடுப்பில் உள்ள துப்பாக்கியில் கை வைக்கப் போன சப்-இன்ஸ்பெக்டரை, அருணாசலம் இழுத்துப் பிடித்தார். கல்லைத் தூக்கப் போன பற்குணத்தை, நாட்டு வக்கீல் மடக்கிப் பிடித்தான். எவரோ இரண்டு பேர் முகங்களைக் காட்டாமல், சப்-இன்ஸ்பெக்டர்

இடுப்பைக் கிள்ளினார்கள். சப்-இன்ஸ்பெக்டர் முன்னால் வந்து நின்ற ரஞ்சிதம் கோபாவேசப்பட்ட பீடி பெண்களைத் தடுத்து நிறுத்தினாள். அதற்குள் எதுவும் தெரியாத அப்பாவி போலவும் சற்றுத் தள்ளி நின்ற ஆயுதப்போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் சப்-இன்ஸ்பெக்டருக்கு கேடயமாக நின்றபடியே கெஞ்சினார்.

"நான் சொல்லுறதை தயவுசெய்து கேளுங்க... இந்த சப்-இன்ஸ்பெக்டர் நடந்துகிட்ட முறை தப்புத்தான்... இந்த ஒரு நாளிலேயே ஊர் நிலையை புரிஞ்சிக்கிட்டேன். ஏதோ நடந்தது நடந்து போச்சு... அதை இனிமேல் மாத்த முடியாது... திருமலையை உடனே விடுதலை செய்ய ஏற்பாடு செய்யுறேன்... நாங்களும் ஊரை விட்டு ஓடிப் போயிடுறோம். ஆனால் அதுக்கு நீங்க அமைதி காக்கணும். ஒங்க விவகாரத்தை நீங்களே தீர்ப்பதாய் உறுதி சொல்லணும்."

காண்டிராக்டர் தாமோதரன் உறுதி சொன்னார்.

"எங்க விவகாரத்த நாங்களே தீர்த்துக்கிடுறோம் ஸார். அதுக்குன்னு ஒரு பிளான் வச்சிருக்கேன் ஸார். நீங்க எல்லாரும் பொறுமையா என் வீட்ல சாப்பிட்டுட்டு போங்க ஸார்... அதுக்குள்ள கோலவடிவையும் கண்டு பிடிச்சுடுங்க ஸார்."

போலீஸ் கூட்டமும், ஊர்க் கூட்டமும் சிறுகச் சிறுகக் கலைந்தது. வீறாப்பாய் நிற்பது போல் நின்ற சாதாரண சப்-இன்ஸ்பெக்டரை, ஆயுத சப்-இன்ஸ்பெக்டர் இழுத்துக் கொண்டு போனார்.

## 36

திடீரென்று, கட்டை வண்டிப் பக்கம் போன சந்திரா, கூக் குரலிட்டாள்...

"இங்கே யார் இருக்கான்னு பாருங்க... எக்கா... எக்கா... எப்பக்கா வந்தே? இப்டி பண்ணிட்டியே... அக்கா..."

சந்திரா, கோலவடிவை இழுத்துக்கொண்டு உள்ளே வந்தாள். அவள் முதுகின் ஆதரவோடு வந்த கோலவடிவு, சட்டென்று முற்றத்தில் நிலைகுலைந்து விழுந்தாள்... முகத்தை கைகளால் மறைத்துக் கொண்டு, குப்புறக் கிடந்தாள்.... எவரும் கண்டு கொள்ளாத ஏணிப் படிக்கட்டுக்குள் கிடந்த பேச்சியம்மா, கோலவடிவின் முன்னால் வந்து மாரடித்தாள்.

"பாவி கெடுத்திட்டியே... பாவி... கெடுத்தியேடி... ஒன்னால நாங்க சின்னாபின்னப்பட்டு நிக்கோமே... இதுக்குல்லாம் காரணம் இந்த பாவி மொட்ட... வாடாப்பூதான்... இவள் மட்டும் சொல்லியிருந்தால்..."

மாயாண்டி, பேச்சியம்மாவை மடக்கப் போனார். வாடாப்பூவை எப்படியோ கெஞ்சிக் கூத்தாடி, கூட்டி வந்தாச்சு... பழையபடியும் அவள் ரஞ்சிதம் கிட்ட போயிடப்படாதே...

"இந்தா பாரு... பேச்சி... என்ன பேச்சு பேசுறே... என் மகளாவது சொன்னாள்... ஒன் மகள் சொல்லியிருக்கக்கூட மாட்டாள்... ஏழா... கோலவடிவு... எங்கள பண்ணாத கோலமெல்லாம் பண்ணிட்டியளா... பாவி..."

மாயாண்டியையும் பேச்சியம்மாவையும் யாரோ அதட்டினார்கள்... பிறகு பழனிச்சாமியையும், கோலவடிவையும் மாறி மாறிப் பார்த்தார்கள்... கோலவடிவோ தன்னைப் பார்த்த சொக்காரர்களைப் பார்க்காமல், எதுவும் நடக்காதது போலவும், அவள் அங்கே செல்லாதது போலவும், சாய்வு நாற்காலியில் கிடந்த தந்தையை, கீழே கிடந்தபடியே ஏறிட்டுப் பார்த்தாள்... உதடுகள் திறந்தன... பற்கள் விலகின...

'அப்பா... அப்பா... என்னை செல்லமா... வளத்து சீராட்டுன அப்பாவே... எப்போ அந்த துளசிங்கம் ஒம்ம அவமானப் படுத்துறதுக்காவத்தான் என்னை கூட்டிட்டுப் போனான்னு தெரிஞ்சுதோ... அப்பவே நான் பழையபடியும் ஒம்ம மகளாயிட்டேம்பா... எப்போ அண்ணனை போலீஸ் அடச்சு, சித்தரவதை செய்யுறதுக்கு ஏற்பாடு செய்தானோ, அப்பவே நான் அண்ணனுக்கு தங்கச்சியாயிட்டேன். அப்பா... எந்த உடம்போட போனனோ அந்த உடம்புல எந்த வில்லங்கமும் இல்லாமத் திரும்பி வந்துட்டேம்பா... நடந்ததை எல்லாம் போலீஸ்ல சொல்லி இந்த துளசிங்கத்துக்கும், அலங்காரிக்கும் பத்து வருஷமாவது ஜெயில் வாங்கிக் கொடுக்கணும்...

அப்பா. விட்டில்பூச்சியான என்னை வீட்டுக்குள்ள சேரும்பா. அம்மா... என் அம்மா... நீ இப்படி ஆவேன்னு தெரியமுன்னா... நான் ஏழெழு ஜென்மத்துக்கும் இப்டிப் பண்ண மாட்டேம்மா... அண்ணன இரும்பால பூட்டிட்டு... நான் கழுத்துல தாலிய... பூட்டிக்கதுக்கு... நான்... அரக்கி இல்லம்மா...'

கோலவடிவு பேசுவதாகத்தான் நினைத்தாள். எல்லோரும் சும்மா நிற்கிறாவளே... கேட்டதுக்கு அடையாளக் கோபம்கூட வர்லயே... ஒகோ எனக்கு நானேதான் பேசிக்கிட்டேனோ? என்னால பேச முடியலியோ... பேச முடியலியோ? நாக்கு சுத்தமாட்டங்கே... குரல் வரமாட்டங்கே..."

தாய்க்காரி பாக்கியம் லேசாகக் கண் விழித்தாள்... ஏதோ பேசப் போன வாயில், கண்ணில் உற்பத்தியான நீர் சங்கமமானது... அவளின் இரண்டு கைகளும், ஆகாயத்தைப் பார்த்துக் கும்பிட்டன... பின்னர், காலாடாமல் கையாடாமல் வாய் மட்டும் துடிக்க அப்படியே கிடந்தாள்... தாயம்மா அவள் முகத்தில் தண்ணீர் தெளித்தாள்... வாடாப்பூ முந்தானையால் விசிறி விட்டாள்... சந்திரா, கோலவடிவைத் திட்டினாள்.

எல்லோரும் பழனிச்சாமியை ஏறிட்டுப் பார்த்தார்கள்.

பழனிச்சாமி, அந்த சாய்வு நாற்காலியை சாய்ப்பவர் போல் எழுந்தார். சிறிது தொலைவில், முடங்கிக் கிடந்த கோலவடிவைப் பார்த்து, தலையை 'இரு... இரு...' என்பது போல் ஆட்டியபடியே, வீட்டுக்குள் போனார். அவர் போனதும், வீட்டுக்குள் 'டமார்' என்று சத்தம் கேட்டது. எல்லோரும் என்னமோ ஏதோ என்று உள்ளே பார்த்தபோது, பழனிச்சாமி கையில் ஒரு டிரங்க் பெட்டியோடு வெளியே வந்தார்.... பாசிபூத்த பழைய பெட்டி. பூட்டோடு கூடிய - நாட்டுப் பெட்டி.

பழனிச்சாமி, அந்தப் பெட்டியுடன் மகளை நோக்கிப் போனார். கோலவடிவு, இப்போது தரையில் கிடந்தபடியே தவழ்ந்து தவழ்ந்து, அவர் காலைத் தொடப் போனாள். லேசாகத் தொட்டு விட்டாள். உடனே அவர், அந்தக் கைவிரல்களை ஐந்து தலை நல்ல பாம்பாக நினைத்தவர் போல், தனது கால்கள் அவள் கையில் சிக்காமல்

இருக்க, துள்ளிக் குதித்தார். பிறகு அவளைப் பார்த்து, வழக்கில் தீர்ப்புக்குக் கட்டுப்படாதவளைப் பார்த்து, எப்படிப் பேசுவாரோ-அதே ஆணித்தரமான குரலில், விருப்புவெறுப்பற்ற வேதாந்த முறையில் பேசினார்.

"எழுந்திரு... இந்த பெட்டியில் ஒன் துணிகள் நகைகள் நட்டு எல்லாம் இருக்குது... இதை... நான் ஒனக்கு ஆசையோடு தரல... ஒன் ஞாபகம் வரப்படாதுன்னுதான் எல்லாத் துணியையும் அள்ளிப் போட்டுத் தாறேன். எழுந்திரு... நான் ஒன்னை பெத்தவன் பாரு... அதனால நானே... ஒன்னை அந்தப் பயல் வீட்ல கொண்டு விடுறேன்... வா..."

கோலவடிவு, எல்லாவற்றையும் அங்கே வருவதற்கான அவசியம் உட்பட அனைத்தையும் அவரிடம் சொல்லப் போனாள். வார்த்தைகள் கிடைக்கவில்லை... ஏதோ அரைகுறையாகப் பேசப் போனவளை, பழனிச்சாமி, மடக்கிப் பேசினார்.

"நீ எதுவும் பேச வேண்டியதில்ல... பேசி ஆக வேண்டியதுமில்ல... மரியாதியா எழுந்திரு... டேய் நாராயணா... நீயும் இவளுக்கு அண்ணாச்சேடா, செல்லாம வளர்த்த செல்லத் தங்கச்சிய... புருஷன் வீட்ல கொண்டு விடவேண்டாமா? ரகசியமா ஓடுனவளை பகிரங்கமாய் கொண்டுவிட வேண்டியது நம்மோட கடமையாச்சேடா... எந்திரிங்கடா... நமக்கு நல்ல பேர் வாங்கித் தந்தவளை கொண்டு விட்டுட்டு வரலாம். ஒருத்தி... புருஷன் வீட்டுக்குப் போகும்போது தலை குனியணும்... பெத்தவங்களும் கூடப் பிறந்தவங்களும் தலை நிமிரணும்... இது இந்த வீட்ல தலைகீழா போயிட்டேன்னு பாக்கியாடா... பரவாயில்ல... எழுந்திருடா... ஏய்... என் செல்ல மகளே... என்ன அலங்கோலமாக்குன கோலம்வளே... எழுந்திரும்மா... எழுந்திருழா. எழுந்திரு நாயே..."

நாராயணன் இருந்த இடத்திலேயே ஏறெடுத்துப் பாராமல் கிடந்தான். திண்ணையில் இப்போது மல்லாந்து கிடந்த அம்மா பாக்கியம், கைகளைத் தூக்கி தூக்கி ஆட்டினாள். என்ன சொல்ல நினைத்தாளோ... ஏது செய்யத் துடித்தாளோ...

கோலவடிவு, அப்பா நின்ற திசை நோக்கிக் கையெடுத்துக் கும்பிட்டாள்... ஆனால் பழனிச்சாமி கும்பிட்ட அவள் கைகளை ஒரு சேரப் பிடித்து, அவளைச் செந்தூக்காகத் தூக்கினார். அவள் கீழே உட்காரப் போனாள். அவர், அவளை அப்படியே மேலே இழுத்துப் பிடிக்க, அவள் சிறிது நேரம் அந்தரத்தில் தொங்கினாள். தந்தை, அவளை அப்படியே தூக்கிக் கொண்டு சிறிது நடந்தார். அவள் 'எப்பா... எப்பா..." என்று பரிதாபமாய் குரலிட்டதும் அவர் கத்தினார்...

"நான் ஒனக்கு அப்பனும் இல்ல. நீ எனக்கு மகளும் இல்ல... ஏதோ பெத்த கடமைக்கு பொண்ணுக்குத் 'தோழியா' வாரேன்... இந்த வீட்ல நீ இனிமேல் இருக்க முடியாது. இது மானஸ்தனுக்குப் பிறந்த மானஸ்தன் வீடு. உம்... நட... நட..."

கோலவடிவு நடக்க மறுத்தாள். பழனிச்சாமி விடவில்லை. சண்டித்தனம் செய்யும் மாட்டை இழுப்பது போல், அவள் கையை, விட்டுவிட்டுக் கழுத்தைப் பிடித்து இழுத்தார். அவள் கால்கள், தரையில் சாய்ந்த கோபுரம் போல் கோடுகள் போட, அவள் உடம்பு அவர் இழுத்த இழுப்பிற்கு நகர்ந்தது. அங்கே இருந்த எல்லோருக்கும், பழனிச்சாமியிடம் ஏதோ சொல்லவேண்டும் என்ற எண்ணம்... என்ன சொல்ல முடியும்... போனால் போகுது... இங்கே அவள் இருக்கட்டும் என்று சொல்ல முடியுமா... என்னத்தைச் சொல்ல...

கரும்பட்டையான்கள் கைகளை நெறித்தபோது, பழனிச்சாமி, மகள் கழுத்தை நெறிக்காத குறையாக, இழுத்துக் கொண்டு போனார். இருவரும் அந்த வீட்டை விட்டு மறையப் போகும்போது, திண்ணையில் கிடந்த அம்மாவின் கைகால்கள் வெட்டின. "ஊ... ஊ..." என்ற அலறல் சத்தம் ஒலித்தது.

பழனிச்சாமி, மகளை இழுத்துக் கொண்டு, பாதி வழி வந்துவிட்டார். வீட்டு வாசல்களில் இருந்தும், மாடிகளிலிருந்தும், ஊரார் உன்னிப்பாகப் பார்த்தார்கள். செம்பட்டையான் குடும்பத்தினரிடம் கூட, இப்போது அனுதாபம், அகங்காரத்தை விரட்டியது... பழனிச்சாமிக்கும் இளைத்தது... அதற்குமேல், மாடாகப் போன அந்த மகளை அவரால் இழுக்க முடியவில்லை. கை

வலித்தது. மனம் கனத்தது... கால்கள் இளைத்தன... இதைவிட எல்லாக் கண்களும் அவரை மொய்த்தன... நடக்க மாட்டேன் என்பது போல் கால்களை, தரையில் மடித்துப் போட்டபடி அப்பாவின், கைக்குள் கழுத்தைக் கொடுத்துவிட்டு, பைசா நகரக் கோபுரம் போல் சரிந்து கிடந்த கோலவடிவை அவர் நிமிர்த்தினார்... 'அங்க ஓடத் தெரிஞ்சுது... இங்க நடக்கத் தெரியலியோ...' என்று கத்தியபடியே, அவள் தலைமுடியைப் பிடித்து சுற்றி வளைத்து, அவளைப் பம்பரமாகச் சுற்றினார்... கோலவடிவு பேசுவதுபோல் முனங்கினாள். பழனிச்சாமி கத்தினார்...

"நீ என்னத்தழா பெரிசா சொல்லப் போறே... நீ என்ன பண்டமா... பாத்திரமா... தவலையா... தட்டா... கிண்ணமா... செம்பா... எச்சுபாத்திருமுன்னு சாம்பல வச்சு விளக்கி, வைக்கதுக்கு. நடழா... எச்சிக்கல நாயே... நட..."

கோலவடிவு இப்போது சுரணையற்றுப் போனாள்... நடப்பது நடக்கட்டும் என்பதுபோல் நடக்காமல் நின்றாள்... ஆகாயத்தைத் துழாவிப் பார்த்து, அந்த வேகத்தில் பூமியைக் குடைந்து பார்த்து, கூன்பட்டு நின்றாள்... பழனிச்சாமி விடவில்லை... அவளுக்குப் பின்னால் வந்து, அவள் தோளில் தன் கரங்கள் இரண்டையும் அணை கொடுத்துத் தள்ளினார். அப்படியும், அவள் உடல்தான் சாயப் போனதே தவிர, கால்கள் நகரவில்லை... நகராத மாட்டையும் நடக்க வைத்துப் பழக்கப்பட்ட பழனிச்சாமி, தனது கால்களால் அவளது கால்களை முன்னால் தள்ளித் தள்ளி விட்டார். வலது கையில் இருந்து டிரங்க் பெட்டியை தோளில் போட்டு, கழுத்தால் அதை கொக்கிபோட்டுத் தக்க வைத்துக் கொண்டு அவளைத் தள்ளினார். அவளோ கூந்தல் கலைய, சேலை விலக, கண்ணாடி வளையல்கள் சிதறல்களாக, தந்தையின் தள்ளிய வேகத்திற்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருந்தாள். துளசிங்கம் வீட்டருக்கே போனபோது, அந்த வீட்டுக்குப் போக விரும்பாதவள் போல், அவள் வேறு பக்கமாக உடம்பைச் சாய்த்தபோது, பழனிச்சாமி, தன் தலையால், அவள் உடம்பிற்கு அணை கொடுத்து, அவளைத் திருப்பினார்... துளசிங்கம் வீட்டை நோக்கி நகர்த்தினார்... அவள் பின்னால் சாயப்போனபோது, அவளை முன்னுக்குத் தள்ளி, தாளம் போட்டுப் பேசினார்.

"நான் ஒங்கள அடிக்கப் படாதும்மா... இப்போ நீங்க இன்னொருத்தன் பொருளும்மா... மரியாதையா நடங்கம்மா... வந்தாச்சு... எட்டே எட்டுத்தான்... எனக்கு எட்டாத எட்டு... நடங்கம்மா..."

# 37

பழனிச்சாமி, கோலவடிவைத் தன் மார்போடு சேர்த்து துளசிங்கம் வீட்டிற்குள் நுழைந்தபோது, அங்கே கூடியிருந்தவர்கள் திகைத்து போனார்கள். ஒருவர் 'என்னய்யா நெனச்சே' என்று ஆவேசப்பட்ட எலி டாக்டரை பிடித்துக் கொண்டார். சுத்தப்படுத்தப்பட்ட மாட்டுத் தொழுவில் நான்கைந்து கோவில் ஆடுகள் அங்கே தலைகளும், முண்டங்களுமாகக் கிடந்தன. கால்படி பொங்கல் சோறு, ரெண்டு வாழைப்பழம், கால் தேங்காய், ஆகியவற்றுடன், ஆட்டிறைச்சி சம அளவில் வைக்கப்பட்டன. மொத்தம் அறுபது பங்குகள். இனிமேல் ஆட்டுத் தலைகளை ஏலம் போடுவார்கள். அதுவரைக்கும் அங்கிருந்த பெண்களும், பிள்ளைகளும் அங்கேயே கிடப்பார்கள். பங்குகள் குறைந்திடப்படாதே... அழுகுன வாழைப்பழத்தை நொறுக்குன தேங்காயோட வச்சுடப்படாதே...

கோலவடிவின் கோலத்தைப் பார்த்து பதைத்தவர்கள் பலர்; பகைத்தவர்கள் சிலர்... என்ன பேசுவது என்று தெரியாமல், திகைத்தவர்கள் ஒருசிலர். பழனிச்சாமி மகளை ஒரு கிடாத்தலை இருந்த இடத்திற்கு முன்னால் நிறுத்தியபடியே வாயுருக பேசினார்...

"தர்மப் பிரபுக்களே... இனிமேல் இவள் உங்களோட சொத்து. நா யார் சொத்துக்கும் ஆசப்படுறவன் இல்லை என்கிறது ஒங்களுக்கே தெரியும். துளசிங்கத்தோட இந்த சொத்த நீங்க விப்பியளோ... வைப்பியளோ... விறகா எரிப்பியளோ... ஒங்க இஷ்டம்... நான் தலையிடமாட்டேன்... நான் யார் தலையிட? போயிட்டு வாறேன்... தப்புத் தப்பு போறேன்... ஒரே வழியாய் போறேன்... புண்ணியவான்களே..."

பழனிச்சாமி மகளை ஏறிட்டுப் பார்க்காமலே, குனிந்த தலை நிமிராமல், பேசிய வாய் மூடாமல் பேய்ப் பாய்ச்சலில் நடந்தார். கோலவடிவு, எங்கு நிற்கோம் என்ற உணர்வு இல்லாமல் அப்படியே நின்றாள். ஏதோ ஒரு பொம்மைக்கு கலர் அடிக்கப்பட்டு அங்கே நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதுபோல் நின்றாள். கண்கள் வெளுத்துப் பார்த்தன. எதையோ கேட்ட வெறுமையில் காதுகள் சிலிர்த்து நின்றன. தலையோ தாழ்ந்து போனது... அதோ வெட்டப்பட்டுக் கிடக்குதே ஆடு... அதன் தலையை பொருத்தி, செங்குத்தாய் நிறுத்திப் பிடித்தால் எப்படியோ அப்படி நின்றாள்... எவரும் பிடிக்காமல், அவளும் கீழே விழாமல், அப்படி நின்றது ஆச்சரியந்தான்... அதிசயந்தான்.

செம்பட்டையான் கூட்டத்தினருக்கு, இப்போது அங்கே நடந்த சம்பவத்தின் முழுத் தாத்பரியம் மெள்ள மெள்ளப் புரிந்தது. மாமிசப் பங்குகளை சரிபார்த்த, அந்தக் கண்கள், அந்த நரமாமிச உணவை நைந்து பார்த்தன... நையாண்டியாப் பார்த்தன. நமக்கும் பெண்ணிருக்கே என்று பயந்து பார்த்தன. நமக்கென்ன என்று பட்டும் படாமலும் பார்த்தன... 'என் வீட்டு ஆடுகளை அறுக்கிறதுனால் ஒரு ஆட்டுத்தல எனக்கு இனாம் வேணும்' என்று கேட்பதற்கு, கால நேரம் பார்த்துக் கொண்டிருந்த துளசிங்கத்தின் அப்பா, எலி டாக்டர் கோலவடிவின் அருகே வந்தார்.

"ஒப்பன்தான்... அறிவில்லாமல் கூட்டி வந்தான்... நீ எப்படி இங்கே வரலாம்? அந்தப் பயல கூட்டிட்டு ஓடும்போது என்கிட்ட சொல்லிட்டா ஓடின... அந்த பயலே எனக்கு சம்பந்தம் இல்ல... நீ எப்படி சம்பந்தமாவும்? திரும்பி நட... திரும்பி பாராமல் நட...."

கோலவடிவு, பேசாமல் அங்கேயே நின்றாள்... எங்கே நிற்கிறோம் என்பது தெரியாமல் எங்கேயோ நிற்பதுபோல் நின்றாள். இதை எதிர்ப்பாகக் கருதிய எலி டாக்டர், அந்த எதிர்ப்பை முறியடிக்கும் குறி, அவள் முதுகில் இருப்பதுபோல், அவளை உற்றுப் பார்த்துவிட்டு, பிறகு அவள் முதுகைப் பிடித்து தள்ளினார். கீழே விழப் போனவளை, முடியைப் பிடித்து நிறுத்தினார். அவள் அசையாமல் நிற்பதைப் பார்த்துவிட்டு, அவள் கையைப் பிடித்து இழுத்தார். இழுத்துக் கொண்டே நடந்தார். இவரது கையைவிட, அவளது கை மிக வலுவாக இருந்ததால், அவர், கைகளை விட்டுவிட்டு, பின்னால் கிடந்த

தலைமுடியை தேடிப் பிடித்து, முன்னால் கொண்டு வந்து, பச்சை கீரைப்போல், படர்ந்திருந்த அந்த தலை முடியைக் கயிறு மாதிரி திருகிவிட்டு, அதன் முனையை பிடித்தபடியே இழுத்தார். இழுத்தபடியே நடந்தார். நடந்தபடியே கத்தினார்.

“எத்தனைபேர் கிட்ட போனியோ... இவன் எத்தனாவது ஆளோ... இங்க எப்படிழா வரலாம்?”

செம்பட்டையான்கள் சிலருக்கு மனம் கேட்கவில்லை.

“ஏப்பா... பெண்பாவம் பொல்லாதுப்பா... ஒன் மவன நம்பி வந்த ஜீவன்... அவன் விட்டாலும் நாம விடப் படாதுப்பா... ஒன் மவளுக்கும் இப்படி ஒரு நெலம வந்தால், என்னப்பா செய்வே... பாவம் இருந்துட்டுப் போட்டும்...”

எலி டாக்டர் யோசிப்பதுபோல் நின்றபோது, அவரது புலிப் பொண்டாட்டி உறுமல் குரலோடு ‘பெரிய’ வீட்டிற்குள் இருந்து வந்து, சொன்னவர்களைப் பார்த்து சூடாகக் கேட்டாள்...

“ஒங்க மவளுவ இவள மாதிரி பண்ணுவாளுவ. ஆனால், என் மகள் பண்ணமாட்டாள்... அப்படிப் பண்ணுனால் அவளை எருக்குழிலே நானே வெட்டிப் புதைப்பேன்... இவளை எப்படிச் சேக்க முடியும்? எந்தப் பொண்ணையும் ஏறெடுத்துப் பாராத என் மவன மயக்குனாள்... அவனும் நியாயத்துக்குக் கட்டுப்பட்டு அவளைக் கூட்டிட்டுப் போனான்... கோயில் கொடைக்கு கூட்டிவரப் போனான்... இவதான், அங்க இருந்து எங்கேயோ ஓடிப்போயிட்டு, இப்போ வந்து நிக்காள்... என் மகனை விட்டுட்டுப் போனவளை சேத்தால், பழையபடியும் போகமாட்டாள்னு என்ன நிச்சயம்...? விளையும் பயிரு முளையிலே தெரியும்.... இது, மூணு இல விடுமுன்னாலேயே நாலு முந்தானை விரிச்ச வம்சம்... இதோ பாரும்... இன்னுமா பார்த்துக்கிட்டு நிக்கியரு... பாவி மனுஷா ஒம்மத்தான்...”

புருஷன்கார எலி டாக்டர், கோலவடிவின் பிடித்த முடியை, இறுக்கினார். சுருட்டுச் சுருட்டாய் சுருட்டி, அதன் இடைவெளியைக் குறைத்தார்... அவளை, வெட்டுப்படப் போகும் ஆட்டை இழுப்பதுபோல, இழுத்துக் கொண்டு போனார். கல்லெல்லாம் அவள் காலில் மோதின...

மண்ணெல்லாம் அவள் விரல்களில் அப்பின... அவள் நடக்கவில்லையானால், தலைமுடி பிய்ந்து, அவர் கையில் வந்திருக்கும். கோலவடிவு, வலிதாங்க முடியாமல் நடந்தாள்... மன வலியை உடல் வலி சிறிதாக்க, உடல் வலியை மனவலி சிறிதாக்க, அவள் கால்களைத் தாவிப் போட்டு, எலி டாக்டரின் இழுப்பு வேகத்தைவிட அதிக வேகத்தில் நடந்தாள். அந்த வீட்டிற்கு வெளியே உள்ள முச்சந்திக்கு வந்ததும், எலி டாக்டர், கோலவடிவை விட்டு விட்டு, "வீட்டுக்குள்ள வந்தே. வெளில வராமத்தான் போவே" என்று எச்சரித்து விட்டுப் போய்விட்டார்-ஆட்டுத் தலையை, அதிகாரப் பிச்சையில் கேட்பதற்கு.

கோலவடிவு குன்றிப்போய் நின்றாள்.

அவளுக்கு அருகே, முச்சந்தியின் ஒரு மூழிக்கல்லில், தன்னந்தனியாய்ச் சிக்கிக் கொண்ட ஒரு பூணிக் குருவியை இரண்டு காகங்கள் சுற்றி வளைத்துக் கொத்திக் கொண்டிருந்தன.... இந்த குருவிகள் கூட்டமாக... குடும்பமாக தத்திக் கொண்டிருக்கும் போது, அவற்றை சிநேகித முறையில் பார்த்த காகங்கள்தான் இவை. இப்போதோ, குடும்பத்திலிருந்து தனிப்பட்ட அந்த சின்னக் குருவியை, மேலும் தனிப்படுத்தி, வியூகம் போட்டு, அதன் உடம்பை சுரண்டிச் சுரண்டி ரத்தப் பிழம்பாக்கிக் கொண்டிருந்தன... இவற்றிற்கு எதிர்த் திசையில், நான்கு நாய்களுக்கு இடையேயான இடைவெளிக்குள் தாவி தப்பிக்கலாமா அல்லது தாக்கித் தப்பிக்கலாமா என்பதுபோல், ஒரு பூனை பதுங்கிப் பார்த்தது.

எலி டாக்டர் பிடித்த தடயத்துடன், தலைமுடி கூம்பி நிற்க, அவள் சிலிர்த்தாள். கண் மூடியபடியே கதியற்று நின்றாள். பழக்கப்பட்டச் சத்தம் கேட்டு லேசாய், அரை இருளாய்க் கண் விழித்தாள். துளசிங்கம், ஒரு சினிமாப் பாட்டைப் பாடாய் படுத்திக் கொண்டு வந்தான். அவளைப் பார்த்து திடுக்கிட்டவன்போல் சிறிது நின்றான். பிறகு அவள் முதுகைப் பிடித்துத் தள்ளியபடியே கத்தினான்...

"வெட்டாம்பட்டியில்... எவன் கூட்டி படுத்தே...? படுத்த பயல கூட்டிக்கிட்டு இப்பவும் போ... இங்கே ஒனக்கு என்ன வேல..."

துளசிங்கம், அவளைத் தள்ளிய வேகத்தில் அவள் கீழே விழுந்தாள். விழுந்த வேகத்தில் தரைக்குச் சிவப்புச் சாயம் போட்டாள். துளசிங்கம் சிறிது நேரம் அவளை முறைத்துப் பார்த்துவிட்டு, வேகவேகமாய் வீட்டிற்குள் நுழைந்தபோது, அவள் மெள்ள மெள்ள எழுந்தாள். அவள் நெற்றியில் பெருக்கெடுத்த ரத்த ஊற்றைப் பார்த்த பெண்கள் 'அச்சச்சோ' போட்டார்கள். ஆளுக்கு ஆள் நினைத்ததைப் பேசினார்கள்... இன்னிக்கு... ஊர்ல... கூட்டம் போட்டு ஏதாவது பண்ணணும்.... பாவமா... இருக்கு... இவளுக்கு இதுதான் சரி... இதைப் பாத்துட்டாவது... மத்தவளுவ திருந்தணும்.... இது பொண்ண பெத்தவங்களுக்கும், அவளப் பிடிச்சவங்களுக்கும் நடக்கிற விவகாரம்... நாளைக்கே ஒண்ணாயிடு வாங்க... நாம இன்னிக்கு தலையிட்டு... நாளைக்கு ஏன் பொல்லாப்பாகணும்...? ஆனாலும் ஒருத்திய... இப்படி... முச்சந்தியில.... அனாதரவா விடுறது அநியாயம்...

கோலவடிவுக்கு ஊரார் பேச்சு காதில் விழவில்லை... அடிமேல் அடியாய் நடந்தாள். கூன்பட்டு, கண் குருடுபட்டவள் போல், நடந்தாள்... வலித்த நெற்றியை மட்டும் அவ்வப்போது வலது கை பெருவிரலால் அழுத்திவிட்டு, அழுத்திவிட்டு, அழுத்தமின்றி நடந்தாள். நடந்து கொண்டே போனாள்...

எலி டாக்டர் வீட்டுக்குள், செம்பட்டையான் பீடிப் பெண்கள் கோபங் கோபமாய் கத்துவது லேசாய் கேட்டது. புஷ்பம் ஒப்பாரிபோட்டு அழுவதும், ஏதோ ஒரு அழுகைச் சத்தம் போல மட்டுமே அவளுக்குக் கேட்டது.

குழந்தை நடப்பது போலவும், கிழவி நடப்பது போலவும், இலக்கு இல்லாமல் நடந்தாள்... இடந்தெரியாமல் நடந்தாள்... செம்பட்டையான் பகுதிக்கும் கரும்பட்டையான் பகுதிக்கும் எல்லை போலான பழைய காலத்து இளவட்டக் கல்லருகே கண்களை மூடியபடி உதடுகளைப் பிரித்தபடி நின்றாள்... தொலைவில் நின்ற வாடாப்பூவும், சந்திராவும், கூப்பாடு போட்டபடியே அவளைப் பார்த்து ஓடி வரப் போனார்கள். கரும்பட்டையான்கள், அவர்களை, கைகளைப் பற்றி வீட்டுக்குள் கொண்டு போனார்கள்.

அந்தப் பக்கமாக ஒரு போலீஸ்காரருடன் அலங்காரி வந்தாள். கோலவடிவு என்ன செய்கிறாள் என்பதைப் பார்ப்பதற்காக.

துளசிங்கமும் தற்செயலாக வருவதுபோல், வந்து கொண்டிருந்தான்... கோலவடிவையே, உதடுகள் துடிக்க உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த அலங்காரி, எதுவும் நடக்காததுபோல் நடக்கப் போன துளசிங்கத்தின் கையைப் பிடித்து இழுத்தபடியே மன்றாடினாள்.

"ஏய் ராசா... சித்தி சொல்லுறதக் கேளுடா... பெண்பாவம் பொல்லாதுப்பா... நம்பள தஞ்சமுன்னு வந்தவள சேத்துக்கப்பா..."

"என்ன சித்தி... ஒன் பேச்சு ஒரு மாதிரி இருக்குது...."

"ஆமாம்பா... யோசிச்சு பார்த்தா நல்லதா தெரிஞ்சுது, இப்போ நடத்தி பார்க்கும்போது மனசுக்கு கஷ்டமா இருக்குதுடா... சித்தியோட முகத்துக்காகவாவது..."

"ஏய் அலங்காரி... ஒன்னை மாதிரி கண்டவன் கூடல்லாம் ஓடிப்போறவள் எனக்கு பெண்டாட்டியா வரணுமா?"

"எப்பா... என் மவனே..."

"யாருழா... ஒனக்கு மகன்? ஒன் மகளே எவனுக்குப் பிறந்தான்னு ஒனக்குத் தெரியுமாழா..."

"எப்பா இதுக்குமேல பேசாதப்பா..."

"ஒனக்கு வயசாயிட்டு... இவள என் தலையில போட்டால்... ஒன் வியாபாரத்த நல்லா நடத்தலாமுன்னு பாக்கியா..."

துளசிங்கம் காறித் துப்பிவிட்டு, தன்பாட்டுக்கு நடந்தான்.

அலங்காரி போகிற துளசிங்கத்தையே வெறித்துப் பார்த்தாள். 'இவனை பயன்படுத்த நெனச்சேன்.... இவனோ... என்னையே பயன்படுத்தி இருக்கான்... மோசம் போயிட்டேனே... நான் பெத்த மவள்- கல்யாணத்துக்குப் பிறகு என்னை ஏறிட்டுப் பார்க்காம போன நாளுல இருந்து என் மனசு... என்ன பாடு படுதோ, அப்படித்தானே... இந்த பழனிச்சாமியும்... பாக்கியமும் படுவாவ...'

இதற்குள், எலி டாக்டரின் மனைவியும், ஏழெட்டு செம்பட்டையான்களும் சத்தம் கேட்டு ஓடி வந்தார்கள்... எலி மனைவியின் கையில் துடப்பம்.... அவன்கள் கையில் சாட்டைக் கம்பு... கருங்கல்லு... வாதமடக்கிக் கம்புகள்... ஒருத்தன் கத்தினான்...

"எல்லாம் இந்த தாசி முண்ட அலங்காரியால வந்த வினை... இவள விடப்படாது... பிடிங்கடா... பிடிங்கடா... ஏழா... நில்லுழா..."

அலங்காரி நிற்கவில்லை.... உயிர்பிழைக்க அவள் ஓடிக் கொண்டிருந்தாள்... "ஒரு காலத்துல சொக்காரன் எல்லாரும் ஒன்னை நாயத் துரத்துறது மாதிரி துரத்தப் போராங்க பாரு" என்று பெத்த மவள் போட்ட சூடு... இப்போதுதான் வலிப்பதுபோல் ஓடினாள்... இதற்குள் எலி டாக்டரும், காஞ்சானும் கூட, கூட்டத்தோடு கூட்டமாய் அவளை விரட்டினார்கள். அவள் எலி டாக்டருடன் கொஞ்சியதை காஞ்சான் நினைத்துக் கொண்டும், காஞ்சானிடம் கொஞ்சியதை எலி டாக்டர் நினைத்துக் கொண்டும் கோபாவேசமாய் விரட்டினார்கள். அவளிடம் கொஞ்சக் கொடுத்து வைக்காத கிழடு கெட்டைகள், அவளை விரட்டுவதில் காஞ்சானை மிஞ்சினார்கள். எலி டாக்டரை விட வேகமாகப் பாய்ந்தார்கள்.

அலங்காரியோ ஒரு குட்டிச்சுவரை, குதிரை போல் தாண்டி, கழுதைபோல் கத்தியபடி ஓடிக் கொண்டிருந்தாள்...

இதற்குள், அவளைத் துரத்திய செம்பட்டை வம்சம் வழியில் துளசிங்கத்தைப் பார்த்து நின்றது. பிறகு அவனை இழுத்துக் கொண்டு, 'பங்கு போடும்' இடத்தை நோக்கி நடந்தது.

கோலவடிவு நின்ற இடத்திலேயே நின்றாள்... அவளைச் சுற்றிய வீடுகளின் ஜன்னல்களில் கண்கள்தான் பதிந்திருந்தன... கால்களோ வெளிவரவில்லை... வாசலோரங்களில் கூடிக்கூடி நின்றார்கள்... எவரும், எவளும் அவளை "வா" என்று அழைக்கவில்லை... அவளைப் பொறுத்த அளவில், திறந்திருந்த வாசல்களும், மூடப்பட்டவையே... அன்னி யோன்யமாகப் பழகிய உறவினர்களும் அந்நியர்களே.

கோலமிழந்து நின்ற கோலவடிவு, யாரோ தனது கையைப் பற்றியது கண்டு திடுக்கிடாமலே பார்த்தாள் ரஞ்சிதம்...

"ஏன் கோலம் மிரளுறே...? நான் இருக்கேன் கோலம்... வாய் செத்த இந்த ஊரில் நாம ரெண்டுபேருந்தான் உயிரோட இருக்கோம்... என் வீட்டுக்கு வா... நான் ஒன்னைக் காப்பாத்துறேன்... ஒன்னை இந்த நிலைக்கு கொண்டுவந்த எல்லோரையும் விடப்போறதாய் இல்ல..."

ரஞ்சிதம் கோலவடிவின் கையைப் பிடித்து லேசாய் இழுத்தாள். தன்னிடம் எதிர்ப்புக் காட்டாமலே இணைந்து கொண்ட கோலவடிவை, முதுகில் தட்டியபடியே, ரஞ்சிதம் வீட்டைப் பார்த்து நடந்தாள். கோலவடிவையும் நடத்திக் கொண்டே போனாள்.

வீட்டுக்கு வெளியே, அம்மாவின் 'பாராவோடு' வந்து துளசிங்கம் அவர்கள் இருவரும் இணைந்து நடப்பதைப் பார்த்துவிட்டு, பல்லைக் கடித்தான். இந்த ரஞ்சிதம் ஊர்ல இருந்தால்தானே இந்தக் கோலவடிவும் இருக்க முடியும்...

# 38

வீட்டிற்குள் இருத்தி வைக்கப்பட்ட இடத்தில் அப்படியே பித்துப் பிடித்தவள்போல் விழித்த கோலவடிவின் தலைமுடியைச் சரிசெய்தபடியே ரஞ்சிதம் ஆறுதல் சொன்னாள்.

"கண் கலங்காத கோலம்... ஒரு ஆம்புளத்துணை இல்லாமலும் ஒரு பொண்ணால வாழமுடியுமுன்னு காட்டு... பெத்தவங்க மத்த வங்களா ஆயிட்டால், மத்தவங்களே நமக்கு பெத்தவங்கன்னு மனச தேத்திக்கணும்... நீ ஒன் ஆயுள்வரைக்கும் என் வீட்லயே இருக்கலாம்... நம்மள எப்போ வேண்டான்னு சொல்லுதாங்களோ அப்பவே நாமும் அவங்கள வேண்டாங்கணும்... இப்போ எதுவும் குடிமுழுகிடல... பேசாம கொஞ்ச நேரம் தூங்கு... நான் அதுக்குள்ள சோறு பொங்கிடுறேன்..."

ரஞ்சிதம், ஒரு பாயை விரித்து, கோலவடிவைக் குழந்தையை சாய்ப்பதுபோல் சாய்த்து, பிறகு அவள் தலையைத் தூக்கி, ஒரு தலையணையை வைத்தாள்... பாவம் எப்போ சாப்பிட்டாளோ... இவள் சாப்பிட்டவள் இல்ல... சாப்பிடப்பட்டவள்...

ரஞ்சிதம் அடுப்படி வேலையில் இறங்கி அரைமணி நேரமாகியிருக்கும்... கோலவடிவு, மல்லாந்து படுத்தபடி, அந்த வீட்டின் ஓலைக்கூரையை, பரக்கப் பரக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள்...

திடீரென்று ஒரு விக்கி வண்டிச் சத்தத்தின் பின்னணிக் கூச்சலில் துளசிங்கத்தின் போர்ச்சத்தம் கேட்டது... "ஏடி... ரஞ்சிதம்... வாடி வெளில..."

ரஞ்சிதம் வெளியே வந்தாள்... விக்கியின் இரண்டு பக்கமும் இரண்டு கால்களை போட்டபடி துளசிங்கம் கர்ஜித்தான்...

"மரியாதியா... அந்த ஓடுகாலி நாய... வெளில துரத்தப் போறியா இல்லியா? ஆற அமர இவள என் தலையில கட்டலாமுன்னு பாக்கியா? ஒன்னாதாமுழா... ஏய் ரஞ்சிதம்... ஒத்த வீட்டு நாயே... ஒனக்கு... என் தலதானா கிடச்சது? அதுதான் நடக்காது... பேசாம, அவள் அப்பன் வீட்டப் பார்த்து அடிச்சு விரட்டல, மரியாதி போயிடும்... எவன் கூடவோ ஓடிப் போயிட்டு என்கிட்ட வரப் பாக்கிற எச்சிக்கல நாயி இவள்... என் விஷயத்துல ஏமுழா தலையிடுறே...?"

"வயசுப் பொண்ண காதலிக்கது மாதிரி காதலிச்சுட்டு... அப்புறம் அடிச்சு விரட்டுறது சொந்த விஷயமுல்ல துளசிங்கம்...."

"அவள மயக்குனது மாதிரி ஒன்னயும் மயக்கணுமா...?"

"நீ அனாவசியமாய் பயப்படுற துளசிங்கம்... இவள் ஒங்க வம்புக்கே வரமாட்டாள்... நீ சம்மதிச்சாலும் ஒன்னைக் கட்டிக்க இவள் சம்மதிக்கமாட்டாள். தயவு செய்து இனுமயாவது அவள விட்டு வை..."

"ஒன் சாலக்கு எனக்குத் தெரியாதா... இந்த ஊருக்கு எமனே நீதான்... இன்னைக்குள்ள இவளை நீ வீட்ட விட்டுத் துரத்தல... அப்புறம்... ஒனக்கு வீடே இருக்காது... ராத்திரியோட ராத்திரியா ஒன்னையும்... கொன்னு வீட்டையும் எரிச்சுப்புடுவேன் எரிச்சு...."

இதற்குள் சத்தம் கேட்டு பிள்ளைமார்குடி பெண்களும், ஆண்களும் கூடி விட்டார்கள். ஏற்கெனவே ரஞ்சிதத்தைப் பிடிக்காதவர்கள். அதோடு சொன்னபடி செய்யும் துளசிங்கம் வைக்கும் நெருப்பு... ரஞ்சிதத்தின் வீட்டோடு மட்டும் நிற்காது... ஆகையால் ரஞ்சிதத்தை ஆளுக்கு ஆள் திட்டினார்கள். துளசிங்கத்திற்குத் தாங்கள் வேண்டப்பட்டவர்கள் என்று காட்டினார்கள்.

"ஏய் ரஞ்சிதம்... வேலில போற ஒணான... எடுத்து ஏன் தாழில போடுறே...? ஒன்னால எங்களுக்கெல்லாம் கெட்ட பேரு... நீ இருக்கதுவரைக்கும் நாங்க நிம்மதியாய் இருக்க முடியாது...

இன்னைக்கே இந்த ஊரை விட்டு... நீ போயிடணும்... இல்லன்னா நாங்களே விரட்டுவோம்..."

ரஞ்சிதம் இடுப்பில் கை வைத்தபடி திருப்பிக் கத்தினாள்...

"இது எங்க அம்மா அப்பா நடமாடுன வீடு. மூதாதையர் கால்பட்ட இடம்... நான் பிறந்த பூமி... ஆயிரம் துளசிங்கம் வந்தாலும், என்னை அப்புறப்படுத்த முடியாது... வேணுமுன்னால் நீங்க இந்த ஊரைவிட்டுப் போங்க... நான் போகப் போவதாய் இல்ல..."

கோலவடிவு, வளைகோடாய் எழுந்தாள்... ரஞ்சிதம் கத்துவதையும், அவளின் உறவினர்கள் திருப்பிக் கத்துவதையும் அதனால் ஏற்பட்ட கூச்சலையும், குழப்பத்தையும் குழப்பத்தோடு பார்த்தாள். "நானே அவள வெளில இழுத்துப் போடுறேன் பாரு" என்று துளசிங்கம் கத்தியது ஊருக்கே கேட்டாலும், அவளுக்கு லேசாகத்தான் கேட்டது. அவள் எழுந்தாள். கொல்லைப்புறத்தை நோக்கி மெல்ல நடந்தாள்.

# 39

ரஞ்சிதத்தின் வீட்டுக்குப் பின்னால் வந்த கோலவடிவு, மேற்குப் பக்கமாக நடந்தாள்... பின்னர் தெற்குப் பக்கமாக நடந்து குளத்துக் கரைக்குப் போனாள். அங்கிருந்து கரையிலே நடந்தாள்... தரையிலே இறங்கினாள்... வயல்களில் கால் சிக்க வரப்புக்களில் கால் முட்ட, நடந்து நடந்து, அந்த ஊரையே வலம் வந்து, நஞ்சை வயல்களைத் தாண்டி, புஞ்சை வயல்களில் பாய்ந்து, புளியந்தோப்புக்கு வந்து, மூச்சு விட்டாள்... பிறகு சோளத் தோட்டம் வழியாக ஊடுறுவி, பருத்திக் காட்டிலே பதுங்கி, அந்த ஆலமரத்தடி காளியம்மனின் பின்புறமாக நடந்து, முன்புறமாய் வந்தாள். ஆலமரம் வெறிச்சோடிக் கிடந்தது... அம்மன் கோவில், அனாதைகள் இல்லாத இல்லமாய் வெறுமையுடன் தோன்றியது... அந்தக் கோவிலின் இரண்டு நிலைக் கதவுகளும் பூட்டில்லாமல் ஒதுங்கிக் கிடந்தன...

கோலவடிவு என்ன நினைத்தாளோ, ஏது நினைத்தாளோ, அம்மன் கோவில் படிக்கட்டுக்களில் ஏறினாள்... உள்ளே போய், அம்மனுக்கு எதிரே சரிக்குச் சமமாய் உட்கார்ந்து கொண்டாள்... சுவரோரம் உள்ள கொடியில் சிவப்புச் சேலைகள் தொங்கின... அம்மனின் ஊதாப் பாவாடை... அந்தச் சேலைகளுக்குள் சிக்கியிருந்தது... அம்மனின் கால்மாட்டில் ஒரு வெட்டரிவாள்... வாடிக்கிடந்த வாழை இலையில் அழுகிப் போன வாழைப்பழங்கள்... உலர்ந்துபோன வெற்றிலைகள்... கோலவடிவு, சப்பாணி போல் நகர்ந்து, அம்மன் சிலையை., மிக நெருக்கமாக உற்றுப் பார்த்தாள். பிறகு இரண்டு கரங்களை பின்புறமாகக் கொண்டுபோய், அம்மனின் முதுகைத் கோர்த்துப் பிடித்தபடியே, அம்மாவின் மார்பிலே தலை சாய்த்தாள்... திக்கற்றவளுக்கு தெய்வமே துணை என்று பிடித்தாளோ... தெய்வமே திக்கற்றும் போய் விட்டதாக நினைத்து, அந்த சிலைக்கு ஆதரவு காட்டுவதாக எண்ணி பிடித்தாளோ... அவளுக்கே பிடிபடவில்லை.

உச்சி வெயில் சுட்டது.

சுடலை மாடன் உபயத்தில் இரண்டு நாட்கள் இரவும், பகலும், லைலாவையும் ரிக்கார்ட் டான்ஸையும், முப்பது எம்.எம். கராத்தே படத்தையும் பார்த்த ஊரார், அந்தப் பட்டப் பகலில் தூங்கிக் கொண்டிருந்தார்கள்... கரும்பட்டையான்களும், காத்துக் கருப்பன்களும், பழனிச்சாமிக்காக விட்டுக் கொடுத்த ராத்தூக்கத்தை, அந்தப் பகலில் கரைத்துக் கொண்டிருந்தார்கள்... எவரும் கோலவடிவை, அந்த கோவிலுக்குள் பார்க்கவில்லை. சில சின்னக் குழந்தைகள் மட்டும் அவளைப் பார்த்துவிட்டு, பயந்துபோய் அப்பாம்மாக்களிடம் சொல்வதற்காக ஓடிக் கொண்டிருந்தபோது_

கோலவடிவு, சத்தம் கேட்டு, அம்மன் மார்பில் குப்புறப் போட்ட முகத்தைத் திருப்பினாள்... ரஞ்சிதம் வீட்டில் பலமாகக் கத்தியபோது லேசாகக் கேட்ட துளசிங்கத்தின் சத்தம், இப்போது லேசாய் ஒலித்தாலும் அவளுக்குப் பலமாய்க் கேட்டது... அதோ போய்க் கொண்டிருக்கிறான்... இவள் இருப்பது தெரியாமலே யூனிபாரம் போட்ட இரண்டு போலீஸ்காரர்கள் பாதுகாப்பாய் பக்கத்துக்கு ஒருவராய் நடக்க, அவன் அட்டகாசமாகப் பேசியபடி, அனாவசியமாக கைகால்களை ஆட்டியபடி நடந்து நடந்து பேசினான்...

"ரஞ்சிதம் மட்டும் நான் சொன்னதைக் கேட்காட்டால்... அவள ராத்திரியோட ராத்திரியா... ஏதாவது செய்யப் போறேன்... நீங்கதான் கண்ணை மூடிக்கணும்..."

"அதுக்கென்ன... சாப்பாடுல்லாம் ஆயிட்டு... இனும என்ன வேல... நாங்க சாயங்காலமா ஸ்டேஷனுக்குப் போயிடுறோம்... எது செய்தாலும்... சாட்சி இல்லாம செய்யணும்..."

கோலவடிவு, கோரவடிவாய் எழுந்தாள்.

ஆயிரமாயிரம் ஆடு கோழிகளை வெட்டிய அம்மனின் வெட்டரிவாளை எடுத்துக் கொண்டாள்... எப்படிக் கழுவினாலும் ரத்தத்துரு போகாத வெட்டரிவாள். விரிந்த குழல்... துடிக்கின்ற உதடுகள்... கடிக்கின்ற பற்கள்... ஊழி நடனம் ஆடுவது போன்ற உடலாட்டம்... கோழைத்தனம் கலைந்தது போன்ற ஆவேசம்... இலக்கு தேடும் வெட்டரிவாள்... இலக்கு கண்ட பெண்சக்தி...

கோலவடிவு தாவிக் குதித்தாள். ஓங்காரமாய் கூக்குரலிட்டாள்... ஆங்காரமாய் கத்தினாள்... ஊரே அதிரும்படி ஓசையிட்டு ஓடினாள்...

"ஏய்... டேய்..."

மேனி வில்லாய் வளைய, முப்பது பற்கள் இப்போது கோரமாய் காட்சி காட்ட, கோலவடிவு ஆகாயமும், பூமியுமாக ஆனவள் போல், துளசிங்கத்தை நோக்கி ஓடினாள்... திரும்பிப் பார்த்த துளசிங்கம், எதுவும் பிடிபடாமல், அப்படியே நின்றான்.

அவனுக்கு, மெய்க்காவல் போட்ட காவலர்கள், வெட்டரிவாட்காரியைப் பார்த்துவிட்டு, திருடர்கள் போல் ஓடினார்கள்... 'வேண்டாம்மா... வேண்டாம்மா...' என்று கூச்சலிட்டபடியே அங்கு மிங்குமாய் ஓடி, ஆளுக்கு ஒரு இடமாகத் தேடிப் பிடித்து ஒளிந்தார்கள். இப்போது திகைத்து நின்ற துளசிங்கமும் ஓடினான். கோலவடிவை விட்டு, அவள் குறியில் இருந்து விலகி ஓடுவதாக நினைத்து, அவள் அருகிலேயே ஓடினான்... குறுக்கும் நெடுக்குமாய் ஓடினான்... அய்யய்யோ என்று அலறியபடியே அங்குமிங்குமாய் ஓடினான். அவளையே சுற்றிச் சுற்றி ஓடினான்... கற்ற குஸ்தி கைகொடுக்கவில்லை... கண்ட பெண்களோ இவளைப் போல் இல்லை...

கோலவடிவின் தலைமுடி, அந்த ஆடிக்காற்றில் பின்னாலும், முன்னாலுமாய் கோரதாண்டவம் ஆடியது... அவள், அழுத்தமாய் நின்றாள்... அர்ச்சுனன், இலக்கை மட்டுமே பார்த்ததுபோல், துளசிங்கத்தின் கழுத்தை மட்டுமே பார்த்தாள். இவன் இலக்கோ அங்குமிங்குமாய் ஆடி அப்படியே நிலைகுலைந்து, நின்றும், நடந்தும், ஓடியும் அலைக்கழிந்தபோது-

ஒரு வீச்சு... ஒரே வீச்சு... கோலவடிவின் வலது கரத்தில் இருந்து விடுபட்ட வெட்டரிவாள், துளசிங்கத்தின் கழுத்தில் விழுந்தது... கழுத்துச் சதையின் பாதி இடத்திற்குள் ஊடுருவிப் பாய்ந்து கௌவிப் பிடித்தது. அவன் ரத்தமும், சதையுமாய் தரையில் சாய்ந்தான்... வெட்டுப்படும் கிடா போல் அலறி விழுந்தான்... கோலவடிவு விடவில்லை... அவனிடம் அடிமேலடியாய் நடந்து போனாள்... அவன் முதுகில் வலது காலை வைத்து அழுத்தியபடியே, தொங்கிக் கொண்டிருந்த தலையை கீழே கிடந்த அரிவாளை எடுத்து அறுத்தாள்... வாழைக்காயை சீவுவது போல் சீவினாள்... ஒரே பாகம்... கொத்துக் குறை, மிச்சம் மீதி பேச்சுக்கே இடமில்லை...

கோலவடிவு, துளசிங்கத்தின் துண்டுபட்ட தலையை, அதன் முடியைப் பிடித்துத் தூக்கினாள்... தூக்கியபடியே நடந்தாள்... காளியம்மன் கோவிலுக்குள் துள்ளிக் குதித்துத் தாவினாள்... அம்மனுக்கு முன்னால் அந்தத் தலையை வைத்தாள்... வெட்டரிவாளையும், விடாமலே பிடித்துக் கொண்டாள்... அந்த தலைக்கும் அம்மன் சிலைக்கும் இடையேயான இடத்தில் ரத்தாசனம் போட்டாள்... அவள் நெற்றிப் பொட்டில் துளசிங்கத்தின் ரத்தத் துளிகள்... சிவப்பான தலை... குங்குமமான கண்கள்... ரத்தம் உறைந்த கழுத்து...

# 40

எல்லாம் ஏழு நிமிடங்களில் முடிந்துவிட்டன... அரைகுறை இல்லாமல், முழுமையாக முடிந்து போனது. கோலவடிவு அந்த சிலைமேல் சிலையாகக் கிடந்தாள்... அம்மன் மார்பில், பின் தலையைச் சாய்த்துப் போட்டாள்... கண்கள் மேல்பட்டு, அம்மனின் கண்களையே உற்று நோக்குவது போல், அடங்கிக் கிடந்தாள்.

இதற்குள் போலீஸ்காரர்களின் கூக்குரலால், கண் விழித்த ஊரார், துளசிங்கம் போட்ட ஓலத்தால், ஓடி வந்தார்கள்... என்னமோ ஏதோ என்று முதலில் ஓடி வந்தவர்கள், அவர்கள் எதிர்பார்த்ததை விடப் பெரிதாக நடந்ததைப் பார்த்த பயத்தில் திரும்பி ஓடினார்கள். பின்னால் வந்தவர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்காமல் ஊமை போல் குரலிட்டார்கள்... அம்மன் கோவிலை நோக்கி, கைகளை மட்டும் நீட்டி நீட்டிக் காட்டினார்கள்... கிட்டே வந்த பெண்கள் எட்ட ஓடினார்கள்... சிலர் கண்களை மூடிக் கொண்டே நின்றார்கள்... சிலர் ஊரைவிட்டே ஓடினார்கள்... கூட்டம் கூட்டமாகக் கூட்டம் சேர்ந்தது... காத்துக்கருப்பன்கள், காரை வீட்டார்கள், செம்பட்டையான்கள், கரும்பட்டையான்கள், பள்ளிக்கூடப் பிள்ளைகள்... எலி டாக்டர் மயங்கி, ஒருவர் தோளில் சாய்ந்தார்... காஞ்சான் பற்குணத்தை ஆதரவாகப் பிடித்துக் கொண்டார். நாட்டு வக்கீல், பழனிச்சாமி வீட்டைப் பார்த்து ஓடினான். இரண்டு கைகளிலும் விலங்குத் தடங்களை விழுப்புண்கள் போல் கொண்ட திருமலை நொண்டியடித்து வந்தான். தங்கையைப் பார்த்து, கையெடுத்துக் கும்பிட்டான். தனக்குத்தானே முனங்கிக் கொண்டான். "நான் செய்து மாட்டிக்கப்படாதுன்னு நீ செய்திட்டியாம்மா..."

கூட்ட நெருக்கம்... கூக்குரல் தாக்கம்... யாராலும் பேச முடியவில்லை... கோலவடிவை நேருக்கு நேராய் பார்க்கவும் முடியவில்லை. உச்சிமுடியைப் பிடித்திழுக்கும் போது ஏற்படும் முகச்சுழிப்புடன் துளசிங்கத் துண்டுத்தலை, ரத்தக் கட்டியில் ஒட்டிப்போய் கிடந்தது. சிவ சிவ என்றார்கள். அய்யய்யோ என்றார்கள். ஆனால் எவருக்கும்

கோவிலுக்குள் போகும் தைரியமில்லை. எப்படியோ நான்கைந்து போலீஸ்காரர்கள் தைரியப்பட்டு வந்தார்கள். கோலவடிவைப் பார்க்காமல் கூட்டத்தைப் பார்த்து அதட்டினார்கள்... பிறகு, கோலவடிவின் அருகே கிடந்த அரிவாளைப் பயத்தோடு பார்த்தபடியே, கோவிலுக்குள் போகப் போனார்கள்... ஆனாலும் போனபாடில்லை...

ரஞ்சிதம் ஓடி வந்தாள்... கூட்டத்திற்குள் ஊடுறுவி, கோலவடிவின் பார்வை படும் இடத்தில் நின்றபடியே வெறித்துப் பார்த்தாள். விரக்தி யோடு பார்த்தாள். திருமலையைப் போல் தனக்குத்தானே முனங்கிக் கொண்டாள்... "என்னை துளசிங்கம் எதுவும் செய்துடப் படாதுன்னு அவனை அப்படிச் செய்திட்டியா கோலம்? அவசரப்பட்டுட்டியே கோலம்... இல்ல.... நீ அவசரப்படல... ஒன்னை அவசரப்படுத்திட்டாங்க..."

கோலவடிவு, ரஞ்சிதத்தைப் பார்ப்பதுபோல் தெரிந்தது. சிலையில் போட்ட தலையைத் தூக்கினாள்... அவளை நோக்கி லேசாக கையை உயர்த்தினாள்... வெறி பிடித்தவள் போல் சிரித்துக் காட்டினாள்... பிறகு பழையபடியே தலையை அம்மன் சிலையில் போட்டாள்... அப்புறம் தன் பாட்டுக்குக் கிடந்தாள்...

சிறிது நேரத்தில் பழனிச்சாமி அந்தப் பக்கம் வந்தார். வாடாப்பூ அலற-சந்திரா புலம்ப-நாட்டு வக்கீல் நாராயணன் அவரை ஆதரவாய் பிடித்துக்கொள்ள, அருணாசலத்தின் தோளை ஆதரவாய், ஊன்றுகோல்போல் பிடித்தபடி வந்தார்... பெற்றெடுத்த மகளை-அதிர்ந்து பேசாத செல்வத்தை, இப்போது பேயாகிப் போனவளை, நேருக்கு நேராய்ப் பார்த்தார். அவளின் குற்றங்களையும், குணங் களையும் மறந்து, மகளென்று மட்டுமே பார்த்தார்... தந்தை என்று மட்டுமே பார்த்தார். பெற்ற பாசம், கண்ணீராய் கவிழப் பார்த்தார்.

அந்த பரிச்சயப்பட்ட பார்வையில் நெகிழ்ந்தவள் போல்-காய்ந்த இரும்பை தண்ணீருக்குள் திணிக்கும் போது அது எப்படி ஒலி எழுப்புமோ, அப்படி ஓசையிட்டபடியே கோலவடிவு நேர் கோடாய் எழுந்தாள்... பிறகு கீழே குனிந்து துளசிங்கத்தின் தலையைத் தூக்கிப் பிடித்தபடி மீண்டும் எழுந்தாள். சிறிது நேரம் அப்படியே நின்றாள்... பிறகு தந்தையை நோக்கி, அந்தத் தலையைத் தூக்கி காட்டினாள்... காட்டிக் கொண்டே நின்றாள்...

(முற்றும்)

திருவரசு புத்தக நிலையம்

மலர் பிரிண்டர்ஸ் 044-8224803